# COMMENTARY AND REVIEW QUESTIONS ON THE HEIDELBERG CATECHISM

# ஹைடெல்பெர்க் கேட்டகிசத்திற்கான விளக்கவுரை மற்றும் மறு ஆய்வுக் கேள்விகள்

**1. வாழ்விலும் மரணத்திலும் உனக்குரிய ஒரே ஆறுதல் என்ன?**

நான், என்னுடைய சரீரம் மற்றும் ஆத்துமாவுடன், வாழ்விலும் மரணத்திலும் எனக்கு சொந்தமானவன் அல்ல; மாறாக, என்னுடைய எல்லா பாவத்திற்காகவும் தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை பூரணமான பலியாக சிந்தி என்னை சாத்தானின் சகல வல்லமையிலிருந்தும் விடுவித்த இரட்சகராகிய இயேசுவுக்கே நான் சொந்தம்; அவர் என்னை பாதுகாக்கிறார் ஆகவே என்னுடைய தலையிலிருந்து ஒரு முடியாகிலும் என்னுடைய பிதாவின் சித்தம் இல்லாமல் கீழே விழுவது கிடையாது; ஆம், சகலமும் என்னுடைய மீட்பிற்கேதுவாக மட்டும் நடைபெறும். ஆகவே, தமது பரிசுத்த ஆவியானவர் மூலம் எனக்கு நித்திய ஜீவனை உறுதிப் படுத்தி முழு விருப்பத்துடன் அவருக்காக வாழ என்னை ஆயத்துப்படுத்துகிறார்.

கேட்டகிசத்தின் இந்த முதல் கேள்வி பதிலானது பின்வரும் எல்லா கேள்வி பதில்கள் கூறும் செய்தியின் கருத்துச் சுருக்கமாகும். இது பின்வரும் அடுத்த 128 கேள்வி பதில்களில் முழுமையாக விளக்கப்பட்டுள்ள உன்னதமான சத்தியங்களை நமக்கு அறிமுகப் படுத்துகிறது எனலாம். இந்த கேள்வி பதில் கிறிஸ்தவ சுவிசேஷத்தைக் குறித்த மிகவும் அழகான கூற்றாகும், ஆகவே இதை மறக்காதபடிக்கு மனப்பாடம் செய்ய வேண்டும்.

சுவிசேஷமானது (நற்செய்தி) வேதனை, மீட்பு மற்றும் நன்றியுடைமை ஆகிய மூன்று முக்கியமானவைகளைக் குறித்து மிகவும் கருத்துடையதாக இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். நம்முடைய வேதனை என்பது சரீரப்பிரகாரமான வலியைக் குறித்து அல்ல மாறாக பாவத்தின் வேதனையாகும்: நாம் நமது பாவத்தினிமித்தம் குற்ற உணர்வுடையவர்களாக, கறைப்பட்டவர்களாக, பாவம் செய்யும் தன்மையுடையவர்களாக தேவனுடைய சாபத்திற்கு கீழானவர்களாக இருக்கிறோம்.

ஆனால் கர்த்தரோ நம்மை பாவத்தினால் வரும் வேதனையில் அழிந்து போகும்படி கைவிடவில்லை, அவர் கிருபையாக நமக்கு மீட்பை (இரட்சிப்பை) கொடுத்துள்ளார் என்பது நமக்கு ஆறுதல். ஆறுதல் என்பது உபத்திரவத்தின் நடுவில் பெலத்தோடும், நம்பிக்கையோடும், நன்றி உடையவர்களாகவும் இருப்பதாகும். இப்படி நமக்கு அதிக ஆறுதலைக் கொடுக்கும் இந்த இரட்சிப்பு என்றால் என்ன?

இரட்சிப்பு என்பது நாம் தேவனுக்கு சொந்தமாக்கப் படுவதாகும், ஆகவே நாம் சாத்தானுக்கு ஒருபோதும் சொந்தமானவர்கள் அல்ல. திரியேக தெய்வத்தின் ஒவ்வொரு நபரும் நம்மை இரட்சிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, பிதா நம்முடைய இரட்சிப்பைக் குறித்த அனைத்தையும் திட்டமிட்டார்; குமாரன் தமது சொந்த ஜீவனை நமக்காக கொடுத்து நம்முடைய இரட்சிப்பை சம்பாதிக்கிறார்; பரிசுத்த ஆவியானவரோ குமாரனுடைய செயலின் பிரதிபலனை நமக்கு வாய்க்கச் செய்து, இரட்சிப்பைக் குறித்த சொந்த நம்பிக்கையை நமக்கு கொடுத்து, நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரை நேசிக்க நமக்கு விருப்பத்தையும் ஆயத்தத்தையும் தருகிறார்.

இந்த கேட்டகிசமானது மிகவும் சொந்த அனுபவம் சார்ந்த நிலையில் எழுதப்பட்டுள்ள உண்மையை அறியும்படி நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். இது அடிக்கடி என்னை, என்னுடைய, நான் மற்றும் நம்முடைய என்ற பல பதங்களைக் கூறுகிறது. அதே வேளையில், இந்த பதில்களை வாசித்து, மனப்பாடம் செய்து கூறும் எவரும் உண்மையாக இரட்சிக்கப்பட்டு இரட்சிப்பின் ஆறுதலைப் பெற்றவர் என்று ஒருபோதும் கூறமுடியாது என்பதை மீண்டும் அறிவிக்கிறோம். இந்த புத்தகம் விசுவாசிகளுக்கான வேதாகம போதனைகளைக் குறித்த ஒரு பாடப்புத்தகம் மட்டுமே. சிறு பிள்ளைகளை விசுவாசிகள் எனலாமா? ஆபிரகாமுக்கும், எல்லா உண்மையான கிறிஸ்தவ பெற்றோர்களுக்கும் ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி, விசுவாசிகளின் பிள்ளைகளும் இரட்சிப்பின் திட்டத்துக்குச் சொந்தமானவர்களே (கேள்வி 74): ஆகவே நீங்கள் தேவனை விட்டுப் பின் வாங்கிப்போகாத நிலையில் உங்களுடைய பிள்ளைகளும் உடன்படிக்கையின்படி விசுவாசிகள் ஆவர். குழந்தை ஞானஸ்நானம் பெற்ற பிள்ளைகளில் சிலர் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிப் போகவும் செய்கின்றனர், திருவசனத்தின்படி இது வழக்கத்திற்கு மாறான ஒரு சில சம்பவங்களே தவிர எப்போதும் நடைபெறும் ஒன்று அல்லவே. கர்த்தர்தாமே தமது திருவசனத்தையும் இந்த கேட்டகிசத்தையும் பயன்படுத்தி உங்களுக்கு விசுவாசத்தைக் கொடுத்தும், அந்த விசுவாசத்தை பெலப்படுத்தவும் உதவி செய்வாராக!

**1-க்கான கேள்விகள்:**

1. கேட்டகிசத்தின் இந்த முதல் கேள்வி பதிலானது பின்வரும் எல்லா கேள்வி பதில்கள் கூறும் செய்தியின் ................................................ ஆகும்.
2. கிறிஸ்தவ (நற்செய்தி) சுவிசேஷமானது .......................................... , ............................................ மற்றும்.................................... ஆகிய மூன்று முக்கியமானவைகளைக் குறித்து மிகவும் கருத்துடையதாக இருக்கின்றது.
3. பாவம் வேதனையைக் கொண்டு வருகிறது, இரட்சிப்பு.......................................... தருகிறது. இரட்சிப்பு என்றால் என்ன?
4. கிறிஸ்தவனுடைய, "சரீரம்" மற்றும் .......................................... , ........................................... மற்றும் .......................................... ஆகிய இரண்டிலும் இரட்சகராகிய இயேசுவுக்கே சொந்தம்.
5. திரியேக தேவனின் ஒவ்வொரு நபரும் நம்மை இரட்சிக்கின்றனர். பிதா நம்முடைய இரட்சிப்பைத் ......................................................; குமாரன் தமதுசொந்த ஜீவனை நமக்காக கொடுத்து இரட்சிப்பை ..............................................பரிசுத்த ஆவியானவரோ குமாரனுடைய செயலின் பிரதிபலனை நமக்கு ............................................
6. இயேசுவின் இரத்தம் மூன்று முக்கிய காரியங்களை நமக்காகச் செய்கிறது பூரணமான பலியாக ................................., என்னை சாத்தானின் ............................................................ விடுவித்து, முடிவு மட்டும் என்னைப் ............................................
7. "மீட்பு" என்றால் என்ன? (பின்பு உள்ள Glossary - சொற்களஞ்சியம் பகுதியை பார்க்கவும்).
8. நீ இரட்சகருக்கு சொந்தம் என்றும், உனக்கு நித்திய ஜீவன் உண்டு என்ற உறுதியை உனக்கு கொடுப்பது யார்? ...........................................அவருக்காக வாழ விருப்பம் உனக்கு இல்லாத நிலையில் நீ இயேசுவுக்கு சொந்தம் என்று உண்மையாக உன்னால் சொல்லமுடியுமா? ...................
9. ஞானஸ்நானம் பெற்ற சிறுவர்கள், மனம் மாறாமலும், கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியாமலும், அவரை விசுவாசிக்காமலும் இருக்கும்போது, "நான் எனக்கு சொந்தம் அல்ல; மாறாக, என் உண்மையுள்ள இரட்சகருக்கே சொந்தம்" என்று சொல்லமுடியும். சரியா? தவறா? ...........................விளக்கம் தரவும்: .........................................................................................................................................

10. 1.கொரிந்தியர் 6:20-ஐ எழுதவும்:

**2. தேவன் தரும் ஆறுதலில் நீங்கள் வாழ்ந்து மகிழ்வுடன் மரிக்க, நீங்கள் அவசியம் அறிய வேண்டிய முக்கியமான காரியங்கள் எத்தனை?**

**மூன்று காரியங்கள்:** முதலாவது, என்னுடைய பாவம் மற்றும் என்னுடைய நிர்ப்பந்தமான நிலையும் எவ்வளவு பெரியது; இரண்டாவது, என்னுடைய எல்லா பாவம் மற்றும் நிர்ப்பந்தத்திலிருந்து நான் எப்படி விடுவிக்கப்பட்டேன்; மூன்றாவது, இத்தனை பெரிதான மீட்பிற்காக நான் எப்படி தேவனுக்கு நன்றியுடன் இருப்பது என்பவைகளே.

⁂

குறிப்பிட்ட சில காரியங்களை அறிவதினாலேயே கிறிஸ்தவ ஆறுதலைப் பெறமுடியும். ஒருவன் கிறிஸ்தவனாவதற்கு அநேக விசயங்களை அறிந்திருக்க வேண்டும் என்று அல்ல, ஆனால் கிறிஸ்தவ வாழ்வில் வளர்ச்சியும் மகிழ்ச்சியும் அடைய வேதத்தைக் குறித்து அதிக அறிவைப் பெறுவதினால் மட்டுமே முடியும். வேதத்தை அதிகமாக படிக்காத கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் மிகவும் பெலவீனமானவர்களாகவும், ஆவிக்குரிய வாழ்வில் "குழந்தைகளாகவே" இருப்பார்கள். நாம் உண்மையான கிறிஸ்தவ ஆறுதலைப் பெற்றவர்களாகவும், பெலமுள்ள, சந்தோசஷமான மற்றும் பிரயோஜனமான கிறிஸ்தவர்களாக இருக்கும்படி வளர்வது எப்படி? நாம் கிறிஸ்தவர்களாக இருந்து, வேதத்தை கற்று அதில் வளர்ந்து, அதை நம்முடைய வாழ்வில் அப்பியாசிக்க வேண்டிய முப்பரிமான அறிவைக் குறித்து கேட்டகிசம் பேசுகின்றது.

முதலாவது, நாம் நம்முடைய பாவம் மற்றும் நிர்ப்பந்தமான நிலையை அறிய வேண்டும். இது ஒரு இன்பமான அனுபவமாக இருக்காது; இருப்பினும், நாம் "பாவம்" என்னும் மரண வியாதியை உடையவர்களாக இருக்கிறோம் அல்லது அதற்கான மாற்று மருந்தை நாம் தேடாமல் இருக்கிறோம் என்பதை நாம் அறிய வேண்டும். பாவம் நம்மை தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளவர்களாக்கி தேவனுடைய கோபத்தை நமக்கு எதிராக எழுப்புகிறது. இரண்டாவது, நாம் எப்படி நம்முடைய பாவத்திலிருந்து மீட்கப்பட்டோம் என்பதை அறியவேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற நம்பிக்கையானது கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும், நம்மில், நமக்கான அவர்களின் கிரியைகளைக் குறித்தும் அறிவதிலே அடங்கியுள்ளது. மூன்றாவது, தேவன் நம்மை மீட்டதற்காக நம்முடைய நன்றியுடைமையை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். தீப்பற்றி எரியும் கட்டடத்திலிருந்து நீங்கள் ஒருவரின் உதவியால் மீட்கப்படுவீர்களானால், உடனே அவருக்கு உங்கள் நன்றியைத் தெரிவிப்பீர்கள் அல்லவா, அதுபோலவே, நாமும் அவரின் விருப்பம்போல் வாழ்வதினால் நம்முடைய நன்றியை தேவனுக்குத் தெரிவிக்க வேண்டும்.

நாம் இந்தக் காரியங்களை ஒருதரம் படித்துவிட்டபின், அவ்வளவுதான் எல்லாம் முடிந்து விட்டது என்று நினைக்கக் கூடாது. பூமியிலே நம்முடைய முழு வாழ்க்கையையும் நம்முடைய பாவத்தின் பயங்கரத்தைக் குறித்தும், அதிலிருந்து நாம் மீட்கப்பட்டதைக் குறித்தும், அதனால் தேவனுக்கு நன்றியுடையவர்களாக இருப்பது என்றால் என்ன என்பதைக் குறித்தும் அறிவதற்காக அர்ப்பணிக்க வேண்டும். அனுதினமும் கர்த்தருடைய வேதத்தை வாசித்து, அது தவறாமல் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்டு, தேவன் அவற்றை நமது இருதயத்திலே வைக்கும்படி கேட்டு அதனால் இந்த முப்பரிமான அறிவிலும், தேவனுடைய ஆறுதலிலும் வளருகிறவர்களாக இருக்க வேண்டும்.

இந்த பதிலானது ஹடெல்பெர்க் கேட்டஹிசத்தின் சுருக்கப் பொருளடக்கத்தைத் தருகிறது.

1) என்னுடைய பாவம் : கேள்விகள் 3-11
2) என்னுடைய மீட்பு (இரட்சிப்பு): கேள்விகள் 12-85
3) என்னுடைய நன்றியுடைமை (Service - பணி): கேள்விகள் 86-129

**2-க்கான கேள்விகள்**

1. வேதத்தைக் குறித்து எதையுமே அறியாத ஒருவர் கிறிஸ்தவராக இருக்க முடியும். சரியா? தவறா?
2. விசுவாசத்தில் வளர்ந்து ஆழமான கிறிஸ்தவ சந்தோசஷத்தையும், ஆறுதலையும் அனுபவிக்க..................................பெறுவதினால் மட்டுமே முடியும்.
3. கிறிஸ்தவ அறிவைக் குறித்த மூன்று முக்கியமான வார்த்தைகள் என்ன?
   ...........................................................................................................................................................
4. நம்முடைய பாவத்தைக் குறித்து அறிய வேண்டடியதின் அவசியம் என்ன?
   ...........................................................................................................................................................
5. கேட்டஹிசத்தின் எத்தனை கேள்விகள், "என்னுடைய பாவம்" என்ற பொருளைக் குறித்து பேசுகிறது?
   ...........................................................................................................................................................
6. கிறிஸ்துவில் நம்மை ஆறுதல் படுத்துகின்ற இந்த முப்பரிமான அறிவானது ...
   அ) வேதத்தை வாசிப்பது மற்றும் பிரசங்கம் கேட்பதால்;
   ஆ) பிற மதங்களைக் குறித்து படிப்பதால்;
   இ) பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தை நமது இதயத்தில் வைப்பதால்...பெறப்படுகிறது. எது சரி?............
7. இந்தக் கேள்வி நீண்ட காலத்திற்கு நாம் நம்முடைய நிர்ப்பந்தமான நிலையை அறிவதையும், அப்புறம் சில காலம் கழித்து மீட்பை அனுபவிப்பதையும், அடுத்து சில காலம் கழித்து நன்றியடையவர்களாக இருப்பதைக் குறித்து போதிக்கிறது. சரியா? தவறா? ......................
8. பாவிகள் தாங்கள் நிர்ப்பந்தமான நிலையில் இருப்பதாக உணராதபோதும் அவர்கள் நிர்ப்பந்தமான நிலையில் இருக்கின்றார்களா? ஆம் / இல்லை. ................................
9. தன்னுடைய பாவம் மற்றும் இயேசு கிறிஸ்துவின் மூலமான மீட்பைக் குறித்து அறிந்தும், நன்றியுடைய வாழ்க்கை வாழ மறுக்கும் ஒருவன் கிறிஸ்தவனாகலாம். சரியா/தவறா? .......................
10. எபேசியர் 5:8-ஐ எழுதவும்:

## பகுதி I: என்னுடைய பாவத்தன்மை (கேள்விகள் 3-11)

**3. எதிலிருந்து நீங்கள் உங்களுடைய நிர்ப்பந்தத்தைக் குறித்து அறிகிறீர்கள்?**
தேவனுடைய நியாயப்பிரமாணத்திலிருந்து.

***

பாவத்தைக் குறித்து அறிகிற அறிவின் ஆரம்பத்தை இங்கே நாம் படிக்கலாம். கேள்வி 2 நம்முடைய பாவம் மற்றும் நிர்ப்பந்தத்தைக் குறித்து நமக்கு போதித்தது. இங்கே அவைகளை எப்படி படிக்கிறோம் என்பதைக் காணலாம். தேவனுடைய நியாயப்பிரமாணம் நம்மைக் குறித்த உண்மையை கூறுகிறது; இது நம்முடைய இருதயத்தின் அழுக்குத் தன்மையை நமக்கு வெளிப்படுத்தி நாம் தேவனுடைய பார்வையில் நல்லவர்கள் அல்லாமல் தீயவர்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்ளும்படி செய்துகிறது. தேவனோடும், சக மனிதனோடும் நமக்குள்ள உறவிலே நம்முடைய சிந்தனை, வார்த்தைகள் மற்றும் செயல்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதை நியாயப்பிரமாணம் நமக்கு போதிக்கிறது. நியாயப்பிரமாணமானது முதலாவது நம்முடைய இருதயத்தோடு பேசி அன்பில் பரிசுத்தத்தையும், கீழ்ப்படிதலையும் வலியுறுத்துகிறது; காரணம், தேவனுடைய மகிமையை மட்டுமே தேடுகிற சுத்தமான இருதயம் இல்லாமல் நம்முடைய வார்த்தைகளும், செயல்களும் சுத்தமாக இருப்பதில்லை. "உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதினின்று ஜீவ ஊற்று (பாவம் அல்லது நற்கிரியை) புறப்படும்" (நீதிமொழி 4:23)

தேவனுடைய நியாயப்பிரமாணம் என்றால் என்ன? வேதத்தில், "நியாயப்பிரமாணம்" என்னும் வார்த்தை பல வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சில நேரங்களில் பழைய ஏற்பாட்டு காலத்தின் ஆராதனை

ஒழுங்கு (ஆசரிப்புக் கூடார சடங்குகள், ஆசாரிய முறைகள்,...) போன்றவைகளைக் குறிப்பிடுகிறது. அந்த பிரமாணங்கள் இன்றைய நமக்கானவைகள் அல்ல. சில நேரங்களில், இது மோசேயினால் எழுதப்பட்ட ஆகமங்களையும், முழு பழைய ஏற்பாட்டையும் குறிக்கிறது. நாம் முழு வேதத்தையும் தேவனுடைய நியாயப்பிரமாணம் என்றும் கூறலாம். பல நேரங்களில், "நியாயப்பிரமாணம்" என்பது தேவன் எல்லா மனிதருக்கும் எல்லா நேரங்களிலும் பின்பற்றும்படி கொடுத்த ஒழுக்க நெறிமுறைகளான (MORAL LAW) பத்துக் கற்பனைகளைக் குறிக்கும். இந்த ஒழுக்கமுறை சட்டங்கள் என்றும் மாறாத சரியா தவறா என்பதைக் குறித்த தேவனுடைய வெளிப்பாடாகும். கேள்வி 3-ஆனது முக்கியமாக பத்துக் கற்பனைகளைக் குறிக்கும், இது தேவனுக்கு கொடுக்கப்படவேண்டிய பரிபூரணமான அன்பை வேண்டுகிறது. அந்த பரிபூரண அன்பைக் குறித்து கேள்வி 4 போதிக்கிறது.

நாம் ஒருபோதும் இந்த பத்துக் கற்பனைகளை நமது இருதயத்தில் பூரணமாக பின்பற்றவில்லை என்பதை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்துகிறார், ஆகவே நாம் பாவிகள் என்று உணர்த்தப்பட்டு, தண்டனை பெறுகிறவர்களாக இருக்கிறோம். இப்படியாக நியாயப்பிரமாணம் நம்முடைய பாவம் மற்றும் தண்டிக்கபட வேண்டிய நிர்ப்பந்தத்தையும் நமக்கு காட்டுகிறது.

கர்த்தர், நம்மை படைத்தவர் என்ற நிலையில், நமக்கு தமது கட்டளைகளைக் கொடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நமக்கு சொல்வதற்கு, அவருக்கு பூரணமான உரிமை உண்டு என்பதை நாம் அறிகிறோம். கர்த்தர் சர்வவல்ல சட்டம் கொடுப்பாளர் என்பதால், நாம் முறுமுறுப்பில்லாமலும், அவருடைய அதிகாரத்தை கேள்வி கேட்காமலும் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும்.

**3-க்கான கேள்விகள்:**

1. பாவத்தை குறித்து அறிகிற அறிவின்.................................இங்கே நாம் பார்க்கலாம்
2. நாம் நம்முடைய பாவத்தைக் குறித்த அறிவை முதலாவது ...
   அ) ஜனங்கள் செய்கிற தீய காரியங்களைப் பார்ப்பதினால்;
   ஆ) நம்முடைய சொந்த சிந்தனைகளை நாம் சோதித்துப் பார்ப்பதினால்;
   இ) தேவனுடைய நியாயப்பிரமாணங்களை கற்பதினால் ... பெறுகிறோம். எது? ...................
3. நியாயப்பிரமாணமானது முதலாவது நம்முடைய ................................ பேசுகிறது. காரணம் .................................... ஜீவ ஊற்று புறப்படுகிறது.
4. "தேவனுடைய நியாயப்பிரமாணம்", கீழ்வரும் வழிகளில் அறியப்படுகிறது.
   அ.
   ஆ.
   இ.
5. வேதத்தில் உள்ள எல்லா நியாயப்பிரமாணங்களுக்கும் நாம் இன்றும் கீழ்ப்படிய வேண்டும். சரியா? தவறா? ..............................
6. (Moral Law) ஒழுக்க நெறிமுறைகள் ...................................... என்றும் அறியப்படுகிறது. அவைகள் ...
   அ) பழைய ஏற்பாட்டு யூதர்களுக்கு மட்டும்;
   ஆ) இன்றைய கிறிஸ்தவர்களுக்கு மட்டும்;
   இ) இன்றும் எல்லா மனிதருக்கும்;
   ஈ) இன்றைக்குள்ள அவிசுவாசிகளுக்கு மட்டும் ... பொருந்தும். எது சரி? .....................
7. ஆலய ஆராதனையில் ஊழியர் இந்த பத்துக் கற்பனைகளை வாசிக்க வேண்டுமா? ஆம் / இல்லை? ................. விளக்கம் தருக: ....................................................................................................
8. நாம் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை நமது இருதயத்திலே பூரணமாக கடைப்பிடிக்கவில்லை ஆகவே நாம் தண்டனைக்குரியவர்கள் என்று யார் நமக்கு போதிக்க வேண்டும்?............................
9. தேவனுடைய நியாயப்பிரமாணங்களை கற்றிடாத ஒருவர் ஒருபோதும் தனது பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு மற்றும் நிர்ப்பந்தத்தை உணர முடியாது. சரியா? தவறா? ..........................................
10. ரோமர் 3:19-ஐ எழுதவும்:

**4. நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவனுடைய நியாயப்பிரமாணம் வேண்டுகிறது?**

கிறிஸ்து இதை சுருக்கமாக போதிக்கிறார், மத்தேயு 22:37-40: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும், உன் முழு பெலத்தோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாவது கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்."

***

தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி தேவனிடமும், மனிதனிடமும் நாம் காண்பிக்க வேண்டிய பூரணமான அன்பின் அவசியத்தைக் குறித்து நாம் இங்கே காண்கிறோம். பூரண அன்பு மட்டுமே

தேவனால் அங்கீகரிக்கப்படும் என்று நமது ஆண்டவரே விளக்கியிருக்கிறார். பூரண அன்பு என்பது, நம்முடைய இருதயம், மனது, ஆத்துமா மற்றும் பெலன் - அதாவது, நம்முடைய முழுமையும் முற்றிலும் தேவனுக்கு அர்பணிக்கப்படுதலைக் குறிக்கும். நம்முடைய சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் யாவும் எப்போதும் தேவனுக்கு அன்பினால் பூரணமானதாக இருக்க வேண்டும், அப்படி இல்லை எனில் நாம் பாவிகளாக கருதப்படுவோம். அன்பில் பூரணமற்ற நிலையானது நியாயப்பிரமாணத்தை உடைத்துப்போடுதலுக்கும், மீறுதலுக்கும் சமமாகும். பத்துக் கற்பனைகளையும் நமது ஆண்டவர் இரு பகுதிகளாக பிரிக்கின்றார்: முதல் பகுதி (1-4 கற்பனைகள்) தேவனை நேசிக்க வேண்டியதற்கான அன்பின் "முதலாம் பிரதான கற்பனை" என்றும், இரண்டாம் பகுதி (5-10 கற்பனைகள்) தேவனுடைய அன்பினிமித்தம் மனிதர்களை நேசிக்க வேண்டியதற்கான அன்பின் கட்டளைகள் ஆகும். தேவனுடைய இந்த அன்பின் நியாயப்பிரமாணம் மட்டுமே பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் காலங்களுக்கான எல்லா ஒழுங்கு நெறிமுறைகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது மேலும் இதுவே உண்மையான மார்க்கமாகவும், வேதாகம மற்றும் உடன்படிக்கையின் விசுவாசத்தின் அத்தாட்சியாகவும் இருக்கிறது.

**4-க்கான கேள்விகள்:**

1. தேவனுடைய நியாயப்பிரமாணம் நம்மை என்ன செய்ய வேண்டுகிறது என்று மத்தேயுவில் இயேசு கூறும் வசனக் குறிப்பை எழுதவும்: ..........................................................................................................................
2. தேவனை நேசிக்காமல் பத்துக் கற்பனைகளில் ஏதாகிலும் ஒன்றை கடைப்பிடிக்க முடியுமா? ...................
3. ஒவ்வொரு சிந்தனை, வார்த்தை மற்றும் செயல்களில் எப்போதுமே தேவனை பூரணமாக நேசித்திருக்கிறீர்களா? ..........................................................................................................................
4. நீங்கள் ஏதாகிலும் ஒருவகையில் தேவனை பூரணமாக நேசிக்க தவறும்போது, தேவன் உங்களை ... அ) புகழ்கிறார்; ஆ) கோபிக்கிறார்; இ) இரக்கம் பாராட்டுகிறார்; ஈ) தண்டிக்கிறார்... எது? .........................
5. சிலர் தேவனை நேசிக்காவிட்டாலும் தங்களின் நண்பர்களை உண்மையாக நேசிக்கிறவர்களாக இருக்கின்றனர். சரியா? தவறா? விளக்கம்: ..........................................................................................................
6. நாம் எப்படி தேவனை நேசிக்க வேண்டும் என்று நான்கு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, அவைகள் முழு..........................................................................................
7. இயேசு எந்த பழைய ஏற்பாட்டு வசனங்களை குறிப்பிட்டுருக்கின்றார்............................................................
8. பத்துக் கற்பனையின் இரண்டாம் பிரிவில் எத்தனை கட்டளைகள் உண்டு? ..............................................
9. தேவனை உண்மையாக நேசிக்கும் ஒருவருக்கு பத்துக் கற்பனைகள் என்பது அவ்வளவு முக்கியமான ஒன்று அல்ல. சரியா? தவறா? ...........................
10. ரோமர் 13:10-ஐ எழுதவும்:

## 5. எல்லா கற்பனைகளையும் உன்னால் பூரணமாக கடைப்பிடிக்க முடியுமா?

முடியாது, காரணம் சுபாவத்தின்படி நான் தேவனையும், பிற மனிதர்களையும் வெறுக்கிறவனாகவே இருக்கிறேன்.

***

தேவனுடைய நியாயப்பிரமாணம் என்ன செய்ய நம்மை ஏவுகிறது என்பதை நாம் அறிந்த நிலையில், நாம் உண்மையிலேயே என்ன செய்கிறவர்களாக இருக்கிறோம் என்பதை இங்கே காண்போம். கேள்வி 5 நாம் முற்றிலும் பாவிகள் என்பதை நமக்குப் போதிக்கிறது. தேவனை நேசிக்கின்றவர்களாக நாம் இருப்பதற்கு பதிலாக நாம் அவரை வெறுக்கிறவர்களாக இருக்கிறோம். நம்முடைய இருதயம் முழுவதும் பாவத்தால் நிறைந்து இருப்பதால் நாம் அன்பின் பிரமாணத்தை கடைப்பிடிக்க முடியாமல் இருக்கிறோம்.

சுபாவத்தின்படி நம்மால் தேவனைப் பிரியப்படுத்த முடியாது என்று வேதம் போதிக்கிறது, பரிசுத்த ஆவியானவரும் நமக்கு உணர்த்துகிறார். இந்த நிலையை நாம் (Total Depravity) முழுச் சீர்குலைவு என்று அழைக்கிறோம். நம்முடைய இருதயம் எப்போதும் தேவனை விட்டு தூரமாகவும், நம்முடைய சுயத்திற்கும், உலகத்திற்கும், சாத்தானுக்கும் ஊழியம் செய்யும்படியாகவே உள்ளது. நம்முடைய அயலகத்தாரை நாம் நேசிப்பதாக இல்லை, காரணம் ஒருவரை நேசிப்பது என்பது கர்த்தர் நிமித்தம் அவர்களை நேசித்து அவர்களின் இரட்சிப்பை தேடுகிறவர்களாக இருக்க வேண்டும். ஆனால் தேவனை வெறுக்கும் பாவிகளால் இதை செய்ய முடியாது.

இந்த உண்மையானது மனிதன் (Natural Man) சுபாவத்தின்படி (தேவனுடைய கிருபை இல்லாத பட்சத்தில்) எந்த நன்மையான செயலையும் செய்ய முடியாது என்றும், அவனால் நியாயப்பிரமாணத்தை எந்த வழியிலும் கடைப்பிடிக்க முடியாது என்றா கூறுகிறது? மனிதன் சுபாவத்தின்படி வெளிப்படையான நிலையில் நியாயப்பிரமாணத்தை சற்று கைக்கொள்கிறவனாகவே இருக்கிறான். ஆகவேதான், பொதுவாக மனிதன் வெளிப்படையாக கொலை செய்வதோ, திருடுவதோ, விபச்சாரம் செய்வதோ கிடையாது. ஆனால் இந்த வெளிப்படையான கீழ்ப்படிதல் உண்மையான கீழ்ப்படிதல் கிடையாது. காரணம் இது தவறான நோக்கங்களிலிருந்து செய்யப்படுவதாகும். இதுபோன்ற "கீழ்ப்படிதல்" சுயநல காரணங்களுக்காக செய்யப்படுவதாயும், ஆகவே தேவனால் அங்கீகரிக்கப் படாததாகவும் இருக்கிறது.

ஆகவே, சுபாவத்தின்படி, மனிதனுடைய பாவ இருதயத்தால் ஆவிக்குரிய நன்மை செய்யவோ, தேவனைப் பிரியப்படுத்துவதோ (ரோம 8:8), நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்கவோ (ரோம 8:7) முடியாது. நீங்கள் பிறக்கும்போதே பாவம் மற்றும் தேவனை வெறுக்கும் இதயத்துடன் பிறந்தீர்கள் என்றும், தேவனுடைய சமூகத்தில் உங்களுடைய மிகச்சிறந்த செயல்களும் அழுக்கான கந்தையாகும் (ஏசா 64:6) என்றும் பரிசுத்த ஆவியானவர் உங்களுடன் போதிக்கின்றாரா?

**5-க்கான கேள்விகள்:**

1. சுபாவம் என்றால் என்ன?......................................................................................................................
   ..........................................................................................................................................
2. நாம் பிறக்கும்போதே சுபாவத்தின்படி நம்முடைய இருதயமானது தேவனை நேசிப்பதற்கு பதிலாக அவரை வெறுக்கும் வெறுப்பினால் நிறைந்திருக்கிறது. சரியா? தவறா? ........................................
3. மனமாற்றம் அடையாத பலர் கடவுளை நேசிப்பதாக நினைக்கிறார்கள், ஆனால் அவர்கள் நேசிக்கும் கடவுள் பரிசுத்த வேதாகமம் கூறும் கர்த்தர் அல்ல. சரியா? தவறா? ............................................
4. சுபாவத்தின்படி நம்மால் தேவனைப் பிரியப்படுத்த முடியாத நிலையை ............................ என்றும் நாம் அழைக்கிறோம்.
5. கர்த்தருடைய நியாயப்பிரமாணம் நம்மிடம் வெளிப்படையான கீழ்ப்படிதலை மட்டுமல்ல, சரியான.................................................. கீழ்ப்படிதலையும் எதிர்பார்க்கிறது.
6. நாம் பாவியாக பிறந்ததினால், தேவனுக்கும், மனிதனுக்குமான அன்பின் பிரமாணங்களை நாம் கடைப்பிடிக்க முடிவதில்லை, அதனால் தேவனும் இதை நம்மிடம் ஒருபோதும் எதிர்பார்ப்பது கிடையாது. சரியா? தவறா? ...........................
7. கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒருவர் ரூபாய் ஐம்பதாயிரத்தை ஒரு இலவச சேவை செய்யும் மருத்துவமனைக்கு நன்கொடையாக கொடுப்பது கடவுளின் பார்வையில் மிகச் சிறந்த செயலாகக் கருதப்படும். சரியா? தவறா? .................................
8. மனம்மாறாதவர்கள் எந்த நன்மையான செயலையும் செய்ய முடியாது என்பதால், அவர்கள் பத்துக் கற்பனையில் எந்தவொன்றையும் வெளிப்படையாகவும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. சரியா? தவறா? ...................................
9. மனம்மாற்றம் பெற்ற கிறிஸ்தவர்கள் அன்பின் பிரமாணத்தை பூரணமாகக் கடைப்பிடிக்கிறார்களா? (கேள்வி 62-ஐப் பார்க்கவும்). ஆம், இல்லை? ..............................
10. ரோமர் 3:10-12-ஐ எழுதவும்:

**6. தேவன் மனிதனை துன்மார்க்கனாகவும், மாறுபாடானவனாகவும் படைத்தாரா?**

இல்லை; ஆனால் தேவன் மனிதனை நல்லவனாகவும், தன்னுடைய சாயலாக, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும், சிருஷ்டிகராகிய தம்மை சரியாக அறிந்து, இதயப்பூர்வமாக நேசித்து, நித்திய ஆசீர்வாதத்தில் அவரோடு வாழ்ந்து, அவரை துதிக்கவும், மகிமைப்படுத்தும்படியாகப் படைத்தார்.

கேள்விகள் 6&7-ல், நம்முடைய பாவ சுபாவத்தின் ஆரம்பத்தைக் குறித்து படிக்கிறோம். முதலாவது, இதற்கு யாரைக் குற்றம் கூறக்கூடாது என்பதை படிக்கிறோம் - குற்றப் படுத்தப்பட வேண்டியவர் தேவன் அல்ல! எவராகிலும் தனது சொந்த பாவத்திற்காக தேவனை குற்றப்படுத்த முடியுமா? ஆம், பாவியான மனிதன் தனது சொந்த பாவத்திற்காக தேவனை குற்றப்படுத்துகிறவனாக இருக்கிறான். ஆதாம் பாவம் செய்தபோது, “என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நான் புசித்தேன்” (ஆதி 3:12) என்று தேவனிடத்தில் சாக்குபோக்கு கூறியதை நினைவிற் கொள்ளலாம். அதாவது, ஆதாம் தனக்கு ஏவாளைக் கொடுத்ததற்காக தேவனையே குற்றப்படுத்தினான். ஜனங்கள் தவறு செய்கிறவர்களாக பிடிக்கப்படும்போது, பொதுவாகவே தாங்கள் செய்த தீய செயலுக்காக தங்களைக் குற்றப்படுத்தாமல், “என்னால் ஒன்றும் செய்யமுடியாது, நானாக இந்தக் காரியத்தைச் செய்யவில்லை”, என்று சாக்குபோக்கு கூறுவர்.

தேவன் மனிதனை பாவியாகப் படைப்பதற்குப் பதிலாக, அவனை நல்லவனாகவே படைத்தார் என்று கேட்டகிசம் போதிக்கிறது. உண்மையாகவே, நாம் தேவனுடைய பரிசுத்த சாயலில் சிருஷ்டிக்கப் பட்டோம். ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்டபோது பெற்றிருந்த அந்த தேவனுடைய “சாயல்” என்றால் என்ன? தேவனுடைய சாயல் என்பது, மனிதனை தேவனைப் போலவும், அவனை மிருகங்களிலிருந்து வேறுபிரித்து காட்டுகின்ற அவனுடைய பண்பு ஆகும். தேவனுடைய சாயலானது நித்தியமான ஆவிக்குரிய தன்மையுடைய ஆளுமை (personality) ஆகும். இந்த ஆளுமையானது ஒரு சிந்திக்கும் திறன் (mind), பாச உணர்வு (affections) மற்றும் விருப்பம் (will) ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். ஆதாம் இந்த சிறப்புகளுடன் படைக்கப்பட்டதால், அவனுடைய சிந்திக்கும் திறனால் அவனைப் படைத்த தேவனை அறியவும், அவனுடைய பாச உணர்வுகளால் அவரை இதயப்பூர்வமாக நேசிக்கவும், அவனுடைய விருப்பம் கொள்ளும் ஆற்றலால் அவன் நீதியையும், பரிசுத்தத்தையும் தெரிந்து கொள்ள முடிந்தது. படைப்பில் ஆதாம் இந்த தேவனுடைய சாயலைப் பெற்றதால், “அவன் தேவனோடு நித்தியமாய் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் அவரை துதித்து மகிமைப்படுத்த முடிந்தது”.

சுபாவத்தின்படி மனிதன் துன்மார்க்கமாகவும், மாறுபாடாகவும் இருப்பதற்கு எந்த வகையிலும் தேவனைக் குற்றப்படுத்த முடியாது.

**6-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 6-ல், மனிதனுடைய பாவத்திற்கு யாரை யார் குற்றப்படுத்தக் கூடாது என்பதைப் படிக்கிறோம்: ..................................
2. ஜனங்கள் தவறு செய்கிறவர்களாக பிடிக்கப்படும்போது, பொதுவாகவே தாங்கள் செய்த தீய செயலை ஒப்புக்கொள்ளாமல் பிறரை குற்றப்படுத்துவார்கள். சரியா? தவறா? ..................................
3. தேவன் நம்மை துன்மார்க்கமாகவும், மாறுபாடானவர்களாகவும் படைக்காததால், நாம் பாவிகளாக பிறந்தோம் என்பது உண்மையில்லை. சரியா? தவறா? .....................................
4. மனிதனை மிருகத்தினிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும், "தேவனுடைய சாயல்" என்றால் என்ன? ..............................................................................................................................................
5. தேவனுடைய சாயலினிமித்தம் மனிதனின் (personality) ஆளுமையில் அங்கமாக இருக்கும் மூன்றுவகையான சிறப்பம்சங்கள் என்ன? அ. ...................................., ஆ. ...................................., இ. .....................................
6. மனிதன் மாறுபாடுள்ள பாவியாக இருப்பதால், தேவனுடைய சாயல் எதையும் உடையவனாக இல்லை. சாரியா? தவறா? ...................................
7. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்யும் வேளைவரைக்கும், அவர்களால் "சரியாக ... ..............................................................................................................................................
8. எபேசியர் 4:24-ன்படி, இப்போது மனிதனால் நீதியையும் பரிசுத்தத்தையும் தெரிந்து கொண்டு, தேவனுடைய சித்தத்தின்படி அவருக்காக வாழமுடியும். சரியா? தவறா? .................................
9. ஆதாமின் பாவத்திற்காகவோ அல்லது நம்முடைய பாவத்திற்காகவோ தேவனை குற்றப்படுத்த முடியாது சரியா? தவறா? ..............................
10. ஆதியாகமம் 1:27, 31-ஐ எழுதவும்:

**7. அப்படியானால், எங்கிருந்து மனிதனுடைய இந்த சீர்குலைந்த சுபாவம் வருகிறது?**

பரதேசு போன்ற ஏதேன் தோட்டத்தில் நம்முடைய ஆதிப்பெற்றோர் ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமை மற்றும் வீழ்ச்சியினிமித்தம், நம்முடைய சுபாவம் கெட்டுப்போனதாகவும், நாம் பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்டு பிறக்கிறோம்.

***

நம்முடைய சீர்குலைந்த கெட்ட சுபாவத்திற்காக தேவனை குற்றப்படுத்தக் கூடாது என்பதை கேள்வி 6-ல் பார்த்த நாம், இங்கே நாம் பார்ப்பது, குற்றப்படுத்தப்பட வேண்டியது யார் - ஆதாம், ஏவாள். நம்முடைய முதல் பெற்றோர், பரதேசாகிய ஏதேன் தோட்டத்தில், கீழ்ப்படியாமையினாலே மனப்பூர்வமாக பாவத்தில் விழுந்தார்கள். ஆதாமின் இருதயத்தின் பாவத்தன்மை அவனுடைய சொந்த செயலினால் வந்தது. ஆதாமின் பாவ சம்பவத்தை ஆதியாகமம் 3-ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம்.

ஆதாமின் சுபாவம் முற்றிலும் பாவத்திற்குள்ளானதோடு, அவனுடைய பாவசுபாவம் எல்லா மனுக்குலத்திற்கும் பரவிற்று. நாமும், "நம்முடைய சுபாவமும்", நம்முடைய பிறப்பிலிருந்தே கெட்டுப் போய் உள்ளது என்பதை அறிக்கை செய்ய வேண்டும். ஆம், நாம் நமது தாயின் கருவில் உருவாகும்போதே பாவத்தாலான சுபாவத்தைப் பெறுகிறோம். தாவீது, "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். என்று கூறினார்" (சங்கீ 51:5). ரோமர் 5:12-ல், "ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." இந்த வசனத்தின் படி, ஆதாம் என்ற ஒருமனிதன் செய்த பாவத்தினிமித்தம் முழு மனுக்குலமும் பாவத்தால் சீர்கெட்டு குற்றமுடையதாக மாறிற்று. ஆதாமின் இந்தப் பாவத்தை நாம் முதல் / ஆதிப் பாவம் (Original Sin) என்று அழைக்கிறோம்.

ஆம்! மனுக்குலம் வீழ்ச்சியடைந்துள்ளது!! ஆனால், அவிசுவாசிகளைப் பொறுத்தவரையில்: மனிதனுடைய சுபாவம் சிறந்ததாகவும், நாளுக்குநாள் சிறப்பை நோக்கி செல்கிறது என்றும், படிப்பு, பணம், மகிழ்ச்சியான சூழ்நிலைகள் தன்னைச் சுற்றிலும் அமையும் போது அவனுடைய நிலைமை மேன்மையடையும் என்று நம்புகின்றனர். ஆனால், வேதாகமம் இந்தக் கருத்துக்கு நேர் எதிரானவற்றையே போதிக்கிறது. ஆதாம் முற்றிலும் பரிசுத்தமாகவும், சந்தோசஷமாகவும் படைக்கப்பட்டு, உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டடிருந்தான்; அவன் பரிசுத்தமற்றவனாகவும், சந்தோசஷமற்றவனாகவும் மாறினான். இப்போது நாம் அழுகிய ஆப்பிளைப் போல இருக்கிறோம். ஆகவேதான் நம்முடைய சிந்தனையும் செயல்களும், நம்முடைய முழு வாழ்வும், இயற்கையாகவே துன்மார்க்கமாகவும், தீமையானதாகவும் இருக்கிறது.

பூரணமாகப் படைக்கப்பட்ட ஆதாம் எப்படி முதலாவது பாவம் செய்ய முடிந்தது? என்னும் இந்தக் கேள்விக்கு நம்மால் பதில்காண முடியாது. நாம் அறிவதெல்லாம், இந்த வீழ்ச்சி நடந்தது; ஆகவே நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்படுவது என்பது கர்த்தருடைய மீட்பின்

திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். அதேவேளையில் மனுக்குலத்தின் பாவத்திற்கு முழுப் பொறுப்பும் ஆதாம் மற்றும் நம்மை மட்டுமே சாரும் -- தேவனை அல்ல!

**7-க்கான கேள்விகள்:**

1. நமக்குள்ளான பாவத்தால் சீர்கெட்ட தன்மை எங்கிருந்து வந்தது என்னும் கேள்விக்கு பதில் கூறமுடியாது. சரியா? தவறா? .........................................
2. தோட்டத்தில் ஆதாம் செய்த பாவத்தை நாம் ... அ) கடவுளின் தவறு; ஆ) ஏவாளின் தவறு; இ) ஆதிப்பாவம்; ஈ) வீழ்ச்சி ... என்று அழைக்கிறோம். எது சரி?.....................
3. கடவுள் ஆதாமையும் ஏவாளையும் பரிசுத்தமாகவும், பாவமற்றவர்களாகவும் படைக்காத காரணத்தால் ஆதாம் கீழ்ப்படியாமற் போனான். சரியா? தவறா? .......................................
4. ஒரு குழந்தை பிறக்கும் போது இன்று அது ... அ) இயற்கையாகவே அருமையானதாகவும், பாவமற்றதாக; ஆ) கொஞ்சம் மட்டும் பாவத்தால் சீர்கெட்டதாக; இ) முழுவதும் சீர்கெட்தாகவே ... இருக்கிறது. எது சரி? ...................
5. மனிதனைக் குறித்து வேதம் போதிப்பதை மறுக்கும் அவிசுவாசிகளைப் பொறுத்தவரையில்: மனிதனுடைய சுபாவம்.......................................................................................................................................
   .......................................................................................................................................................
   அவனுடைய நிலைமை மேன்மையடையும் என்று நம்புகின்றனர்.
6. ஆதாம் தடைசெய்யப்பட்ட கனியைப் புசித்தபோது, அவனுடைய செயல் அ) அவனை மட்டும்; ஆ) ஆதாம், ஏவாள் இருவரை மட்டும்; இ) தன்னையும், முழு மானிடத்தையும் ... சார்ந்ததாகும். இவைகளில் எது சரி? ....................
7. ஆதாமின் பாவங்களில் எத்தனை மானிடவர்க்கத்திற்கு எதிரானதாகும்? .................................................
8. ஆதாமின் பாவத்தினால் தனக்கும், நமக்கும் வந்த இரண்டு முடிவுகளை கோடிட்டு காட்டுக:
   அ) மனிதன் தேவனுக்கு முன்பாக குற்றமுடையவனாக மாறினான்.
   ஆ) மனிதனுக்கு பாம்புகளைக் குறித்தும், புதுவிதமான பழங்களைக் குறித்தும் பயம் வந்தது.
   இ) மனிதன் சந்தோசஷமாக இருப்பதற்கு படிப்பு அவசியப்பட்டது.
   ஈ) மனிதனின் இருதயம் சீர்கெட்டுப்போனது.
9. முதலாவது மனிதன் செய்த பாவத்தினிமித்தம் முழு மனுக்குலமும் குற்றப்படுத்தப்படுவது சரியானது அல்ல. சரியா? தவறா?....................................... விளக்கம் தருக: .....................................................................................
   .......................................................................................................................................................
10. ரோமர் 5:19 எழுதவும்:

**8. நாம் எந்த நன்மையும் செய்யமுடியாமல், எல்லாத் தீமையையும் செய்யும்படி தூண்டப்படுகிற அளவிற்கு நாம் சீர்கெட்டுப்போனவர்களா?**

ஆம்., தேவனுடைய ஆவியினாலே நாம் மறுபடியும் பிறவாத நிலையில்.

கேள்வி 7-ல், நம்முடைய பாவத்திற்கான ஆரம்பம் மனிதனிடம் மட்டுமே, தேவனிடம் அல்ல என்றும், பாவத்தால் எப்படி நமது இருதயமும் கறைப்பட்டுள்ளது என்பதை அறிந்தோம். இந்தக் கேள்வி 8, நாம் "முற்றிலும் எந்த நன்மையும் செய்யமுடியாது, எல்லாத் தீமையையும் செய்யும்படி தூண்டப்படுகிறவர்கள்", என்பதை நமக்கு கூறுகிறது. ஆம், நாம் அந்த அளவிற்கு துன்மார்க்கமாக இருக்கிறோம்.

***

இப்படி நம்முடைய பெற்றோர்களிடமிருந்து பெறப்பட்ட நம்முடைய குறைவுள்ள ஆத்தும நிலையானது, (Total Depravity) "முழுச்சீர்குலைவு" என்று அழைக்கப்படுகிறது. "Depravity", "டிப்ரவிட்டி" (சீர்குலைவு), என்னும் பெயர்ச்சொல், "depravare"- டிப்ரவேர் என்னும் லத்தீன் வார்த்தையிலிருந்து வந்து, "to be crooked, perverse"- "தாறுமாறு மற்றும் மாறுபாடுள்ள" என்னும் அர்த்தத்தைக் குறிக்கிறது. சீர்குலைந்த நிலை என்பது தாறுமாறாக இருப்பது, அதாவது சீரான நிலைக்கு நேர் எதிர்மறையாக இருப்பது.

நம்முடைய இருதயம் முழுவதும் சீரான நிலையில் இல்லாமல் இருக்கிறது. அவைகளால் தேவனுடைய கற்பனைகளுக்கு முழுமையாக கீழ்ப்படிய முடிவதில்லை. நம்முடைய இருதயம் பாவத்தின் பிடியில் இருப்பதால் தேவனை வெறுக்கவும், அவரையே எதிர்க்கவும் நாம் தூண்டப்படுகிறோம். நாம் மறுபடியும் பிறக்கின்ற (மனமாற்றம்) அனுபவத்தைப் பெறும்வரையில் நம்முடைய இருதயங்கள் தேவனைவிட்டு தூரமாகவும், இந்த உலகத்தின் பக்கமாக திரும்புகிறதாகவும் இருக்கிறது. மாம்சத்தின்படி, நாம் துன்மார்க்கராகவும், "இந்த உலகத்தில் தேவனற்றவர்களுமாக" (எபேசி 2:12) இருந்தோம். நாம் மறுபடியும் பிறக்காதவரையில், நமக்குள் ஒரு பரிசுத்த சிந்தனையும், தேவனை நேசித்து அவருடைய அன்பு மற்றும் கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் வருவதில்லை. நாம் முற்றிலும் சீர்குலைந்தவர்கள், நம்முடைய சித்தம் அல்லது விருப்பம் மற்றும் மனசாட்சியும்கூட பாவத்தின் பிடியிலிருந்து விடுபட்டதாக இல்லை.

இந்த முழுச்சீர்குலைவு என்பது அவிசுவாசிகள் செய்வதெல்லாம் தீமையான காரியங்கள் மட்டுமே என்று அர்த்தமல்ல, மாறாக எல்லாத் தீமைகளையும் செய்ய இலகுவாகத் தூண்டப்படுபவர்களாக இருக்கின்றனர். சொல்லப் போனால் பல அவிசுவாசிகள் செய்கின்ற பல செயல்கள் மனிதனின் கண்களுக்கு நன்மையானவைகளாக தோன்றுகின்றன. உதாரணமாக, சிலர் மருத்துவர்களாகவும், ஏழைகளுக்கு பணம் கொடுத்து உதவுகின்றவர்களாகவும், சிறந்த குடிமகன்களாகவும் இருக்கின்றனர். ஆனால் மனிதனுடைய "நல்ல கிரியைகள்" என்பவைகள் யாவும் அவனுடைய தீமை நிறைந்த இருதயத்திலிருந்து வருவதால் பரிசுத்த கர்த்தரின் கண்களுக்கு முன்பு அவைகள் குறைவுள்ளவைகளாகவே இருக்கிறது. ஜென்ம சுபாவமுள்ள (natural man) மனிதனின் "தயவுபாராட்டல்" மற்றும் "இரக்கம்பாராட்டல்" போன்ற செயல்கள் எப்போதும் தேவனைச் சாராமல் மனிதனை நோக்கியதாகவே இருக்கின்றது.

நன்மையான காரியங்களை செய்ய முடியாத இந்த இயலாமை, நம்மை எந்த தீமையையும் செய்ய அனுமதிக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் கடவுளை எப்போதும் பூரணமாக நேசிக்க வேண்டும், கடவுளும் நம்முடைய முழுச்சீர்குலைவினிமித்தம் நாம் செய்யும் தீமையான செயல்களை கண்டுகொள்ளாமல் இருப்பது கிடையாது. நம்முடைய இருதயத்தில் குடிகொண்டுள்ள ஜென்ம பாவத்திலிருந்து நாம் மீட்கப்பட வேண்டுமானால் பரிசுத்த ஆவியானவரால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும் -- அதாவது கர்த்தருடைய ஆவியினால் பாவத்தில் மரித்த நம்முடைய இருதயத்திற்கு ஆவிக்குரிய ஜீவனைக் கொண்டுவருவதாகும்.

**8-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 8, நாம் "முற்றிலும் எந்த நன்மையும் செய்யமுடியாது, ..........................................................................................", என்பதை நமக்கு கூறுகிறது.
2. ஜனங்கள் எல்லா தீமையான காரியங்களையும் செய்ய தூண்டப்படுகிறவர்கள் என்று நாம் அறிவிப்பது நம்மை பிரபலமடையச் செய்கிறது? ................................ இது சரியா, தவறா? .....................
3. "Depravity", "டிப்ரவிட்டி " (சீர்குலைவு) ...................................................................... வார்த்தையிலிருந்து வந்து,"...................................................................................."என்னும் அர்த்தத்தைத் தருகிறது.
4. "சீர்குலைவு" என்றால்....... (பின்வருபவற்றில் இரண்டை தேர்வு செய்க).
   அ. ஹிட்லர், நீரோ மன்னன் போன்ற சிலர் முற்றிலும் தீமையான கொடூரமான செயல்களை செய்வதைக் குறிப்பதாகும்.
   ஆ. நம்முடைய இதயங்களும் பாவத்தின் பிடியில் இருப்பதால் தேவனை வெறுக்கவும், அவரையே எதிர்க்கவும் நாம் தூண்டப்படுவதாகும்.
   இ. எல்லா மனிதர்களும் முடிந்த அளவு தீமையான எல்லா செயல்களையும் செய்வதாகும்.
   ஈ. பாவமானது நம்முடைய சிந்தனை மற்றும் ஆத்துமாவின் எல்லாப் பகுதியையும் கெட்டுப்போன நிலையிலிருப்பதைக் குறிக்கிறது.
5. ஜனங்கள் பிறக்கும்போது முழுவதும் சீர்குலைந்த இருதயத்தோடு பிறப்பது கிடையாது; பின்னர் தீமையான செயல்களைச் செய்யும்போது மட்டுமே இந்த நிலை உருவாகிறது. சரியா, தவறா? ..........................
6. எந்தவொரு மனிதனும் பிறருக்கு உதவி செய்து, சிறந்த குடிமகனாக வாழும்போது, அவன் முற்றிலும் சீர்குலைந்த நிலையில் இல்லாமல் தேவனையும், அவருடைய கற்பனைகளையும் நேசிக்க கொஞ்சம் அன்பை உடையவனாக இருக்கிறான். சரியா, தவறா? ...............................
7. நாம் முழுச் சீர்குலைவு நிலையில் இருப்பதால் தேவனை நேசிக்காமலும், அதனால் பாவமற்றவர்களாகவும் இருக்க முடியும். சரியா, தவறா? ..................................
8. "மறுபடியும் பிறத்தல்" என்பது, கர்த்தருடைய ஆவியினால் .................................................................................................. கொண்டுவருவதாகும், அதனால் ஒருபோதும் முழுவதும் சீர்குலைந்தவர்கள் அல்ல.
9. நம்முடைய ஆத்துமாவின் மறுபிறப்பு....... அ) நம்மாலேயே, ஆ) ஊழியரால், இ) ஞானஸ்நானத்தால், ஈ) திடப்படுத்தப்படுதலால், உ) பரிசுத்தாவியின் மேலான வல்லமையால், ஊ) மத போதனை......................, நடைபெறுகிறது.
10. எரேமியா 17:9, ரோம 8:7 ஐ எழுதவும்:

**9. தேவன் தம்முடைய கற்பனைகளில், மனிதனால் செய்ய முடியாத ஒன்றை, அவன் செய்யும்படி வேண்டுவது அநியாயமான ஒன்றாக இருக்குமல்லவா?**

இல்லை; ஏனெனில் தேவன் மனிதனைப் படைக்கும்போது அவைகளை நிறைவேற்றும் ஆற்றலோடேயே படைத்தார், ஆனால் மனிதனோ சாத்தானுடைய தூண்டுதலோடே தன் சுய விருப்பத்தின்படி கீழ்ப்படியாமற் போனதால் அந்த ஆற்றலை (கிருபையை) அவனும் அவனுக்குப் பின்வரும் சந்ததியாரும் இழக்க நேரிட்டது.

***

"மனிதனால் தேவனுக்கு பரிபூரணமாக கீழ்ப்படிய முடியாது, இருப்பினும் தேவன் அவனிடம் பரிபூரணக் கீழ்ப்படிதலை வேண்டுகிறார்", என்பதை ஜனங்கள் கேட்கும்போது, இந்தக் கேள்வி முன் நிறுத்தப்படுகிறது.

"என்னால் கொடுக்க முடியாத ஒன்றை என்னிடம் கேட்பது தேவனுக்கே நியாயாமாகுமா?", என்று அவர்கள் கேட்கக்கூடும்.

நியாயப்பிரமாணத்தின்படி, மனிதன் தேவனிடத்தில் பூரண அன்பு செலுத்த வேண்டும் என்று ஆண்டவர் வேண்டுவதை வேதம் போதிக்கிறது. இயேசு கிறிஸ்துவும் நியாயசாஸ்திரியிடம் பிரதானமான கற்பனைகளை மத்தேயு 22:36-40-ல் நினைவூட்டினார், அதோடு மத்தேயு 5:48-ல் "ஆகையால், பரரோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்றார்.

முழுவதும் சீர்குலைந்த நிலையிலுள்ள பாவ மனிதர்களிடம் தேவன் பூரண அன்பு மற்றும் கீழ்ப்படிதலை வேண்டுவதற்கான காரணம், அவனுடைய இந்த பரிதபிக்கப்பட்ட நிலைக்கு மனிதனே முழுவதும் குற்றம் சாட்டப்பட வேண்டியவன் என்பதாகும். ஒரு மாணவர், தனக்கு நன்றாகவே தெரிந்திருந்தும் பரீட்சை எழுத பள்ளிக்கு செல்லாதபோது, தேர்வு தோல்வியை அறிவிக்கும் ஆசிரியரை குற்றப்படுத்துவது முறையா? அதுபோலவே, தோட்டத்தில் ஆதாம் படைக்கப்பட்டபோது தேவன் எதை அவனிடம் எதிர்பார்த்தாரோ, அதுவே அனைவருக்கும் பொருந்தும்.

நம்முடைய முழுச் சீர்குலைவுக்குக் காரணம், ஏதேன் தோட்டத்தில் நீதியிலிருந்து பாவத்திற்குள் விழுந்ததேயாகும். ஆதாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டு, தேவனுக்குக் கீழ்ப்படியும் பெலத்தையுடையவனாக இருந்தான் (கேள்வி 6-ஐப் பார்க்கவும்), ஆனால் சாத்தானுக்குச் செவிகொடுத்து அவனுக்கு கீழ்ப்படிந்ததால், அவன் பாவம் செய்து தேவனுடைய சாபத்திற்கு கீழாகி, தேவனை நேசிப்பதற்கான தன்னுடைய ஆவிக்குரிய வல்லமையை இழந்தான்.

நீங்களும் நானும் ஏதேன் தோட்டத்தில் இல்லை என்பது உண்மைதான், ஆனால் ஆதாம் நம் அனைவரின் (Representative) சார்பாகவும் செயல்பட்டதால், அவனுடைய கிரியைகளின் பிரதிபலிப்பு, அவனுடைய சந்ததியாராகிய நமக்கும் வந்தது. ஆதாமின் கீழ்ப்படியாமை (அறியாமையினால் அல்ல) மனப்பூர்வமாக செய்த ஒன்று, அந்த முதல் (Original Sin) ஜென்ம பாவத்தின் தொடர் விளைவுகள் நம்மை தொடர்ந்தது. தேவனுக்கு முன்பாக, நமது சீர்குலைவுக்குக் காரணம் நாம் மட்டுமே, தேவன் அல்ல என்பதை நாம் அறிக்கை செய்ய வேண்டும், நாம் தேவனை பூரணமாக நேசித்து அவருக்கு கீழ்ப்படிய தவறும் ஒவ்வொரு நேரமும் நம்முடைய குற்ற உணர்வை நாம் அதிகரிக்கிறோம்.

**9-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 9-ல் தேவனுடைய (நியாயம், அன்பு, பொறுமை)-க் குறித்து பதிலைக் காண்கிறோம். (சரியான பதில் ஒன்றைக் கோடிட்டு காட்டுக)
2. மனிதன் தன்னுடைய மனுஷீகத்தில் ஒருபோதும் தேவனுக்கு பூரணமாக கீழ்ப்படிய இயலாதவனாகவே இருக்கிறான் என்று சொல்லலாம். சரியா, தவறா?..............................
3. மனிதனால் எதை செய்ய முடியாதோ அதை செய்யும்படி தேவன் வேண்டுவது "நியாயமா" என்று கேள்வி கேட்பவர்கள் எதை அறியாதிருக்கிறார்கள்?.........................................................................................
4. மனிதன் தேவனுடைய ...................................... படைக்கப் பட்டவன், இது கேள்வி .......................-ல் விளக்கப் பட்டுள்ளது, அதாவது மனிதன் தேவனை பூரணமாக நேசிக்கவும், அவருக்கு கீழ்ப்படியும் நிலையிலே படைக்கப்பட்டான்.
5. தேவனால் தூண்டப்படுதல் என்றால் என்ன? ..........................................................................................................
.........................................................................................................................................................................
6. ஆதாமின் மனப்பூர்வமான கீழ்ப்படியாமை நம்மையும் தொடர்கிறதா? ........................................................... விளக்குக:..............................................................................................................................................
7. மனிதன் பாவியாக இருக்கும் போதிலும், அவனிடம் பூரணமான அன்பையும், கீழ்ப்படிதலையும் வேண்டுகிறார் என்பதற்கான வேதவசன குறிப்புகளை எழுதவும். ..........................................................................
8. இன்றைய மனிதர்கள் தங்களின் (affairs) அலுவல்களில் உதவ, தங்களுக்கு பதிலாக வேறு ஒரு நபரை செயல்பட வைப்பது பழக்கத்தில் இல்லை. சரியா, தவறா? .................................
9. நம்முடைய குற்ற உணர்வு மற்றும் முழுச் சீர்குலைவுக்காக குற்றப்பட வேண்டிய நபர் ஆதாம் மட்டுமே நாம் அல்ல. சரியா, தவறா? .............................
10. ரோமர் 5:12 -ஐ எழுதவும்.

**10. கீழ்ப்படியாமையையும், பின் வாங்கிப் போகுதலையும் தேவன் தண்டிக்காமல் விட்டுவிடுவாரா?**

ஒருபோதும் இல்லை, மாறாக நம்மிடம் (inborn) பிறவியிலிருந்து காணப்படும் மற்றும் வளர்ந்து வரும்போது செய்கின்ற பாவங்களை (actual sins) கடுமையாக வெறுப்பதோடு, "நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன்"(கலாத் 3:10) என்று அறிவித்தபடி, இப்போதும், நித்தியத்திலும் நியாயந்தீர்த்து தண்டிப்பார்.

***

கேள்வி 9-ல் பாவத்திற்கான பொறுப்பு தேவனிடத்தில் அல்ல, மனிதனிடம் மட்டுமே என்பதைக் கண்டோம், கேள்வி 10 மற்றும் 11-ல் பாவத்தின் பின் விளைவுகளை நாம் காணலாம். பாவத்திற்கான அவசிய முடிவு அதற்கான தண்டனையாகும். கேள்வி 10, “தேவன் நமது பாவத்தை கடுமையாக வெறுத்து, அதற்காக அவசியம் தண்டிக்கிறார்” என்பதை நமக்கு கூறுகிறது. கேள்வி 11, ஏன் கடவுள் மிகவும் வெறுக்கிறார், காரணம் அவர் நீதியுள்ளவர், என்பதை நமக்கு கூறுகிறது. அவருடைய நீதியானது, அவருடைய உத்தமமான தன்மைக்கும், பரிசுத்தக் கற்பனைகளுக்கும் விரோதமாக செய்யப்பட்ட எல்லா பாவங்களையும் தண்டிக்க வேண்டுகிறது, அதனால் அவருடைய பரிசுத்தமும் நீதியும் கனப்படுத்தப்படுகிறது. பாவம் தேவனுக்கு விரோதமான முரட்டாட்டம், ஆகவே அவர் அதை முழுப் பகையாகப் பகைக்கிறார். பாவம் அவருடைய தெய்வீக ஆளுகைக்கு எதிரான தாக்குதல், ஆகவே அது முறைப்படி தண்டிக்கப்பட வேண்டும்.

இங்கே, 1) எந்தப் பாவங்களை தேவன் தண்டிப்பார், 2) எப்போது அவைகளைத் தண்டிப்பார் என்பதை கற்கிறோம்.

முதலாவது, நாம் இருவழிகளில் பாவிகளாக இருக்கிறோம்: நாம் பிறவியிலேயே சீர்குலைந்த ஒருதன்மையை உடையவர்களாவோம் -- ஆதாமிடத்திலிருந்து நம்முடைய பெற்றோர்கள் வழியாக நாம் பெற்ற பாவ சுபாவம். நம்முடைய சீர்குலைந்த தன்மை தேவனுடைய வெறுப்புக்குரியதாகவும், தேவனுடைய கோபத்தை நம்மீது கொண்டு வருகிறது. அதோடு, நம்முடைய நினைவு, சொல் மற்றும் செயல்களினாலும் பாவம்செய்து நாம் பாவிகளாக இருக்கிறோம். இவைகளே நம்முடைய சீர்குலைந்த இருதயத்திலிருந்து வெளிப்படும் சீர்கெட்ட கனிகள். ஒவ்வொரு தனிப்பட்ட பாவமும் தேவனுடைய நித்திய சாபத்திற்குரியதாகிறது. இப்படியாக நாம் இருவழிகளில் பாவிகளாக இருக்கிறோம்.

இரண்டாவது, எப்போது இந்த பரிசுத்த தேவன் நம்முடைய பாவத்தை தண்டிப்பார்? பாவத்திற்கான தண்டனை இப்போதும் (Time or Now) பின்னர் நித்திய (Hell) நரகத்திலும் என்று கேட்டகிசம் கூறுகிறது. எவன் ஒருவனுடைய பாவம் கிறிஸ்துவின் மூலம் மன்னிக்கபடாதிருக்கிறதோ அவன் இப்போதே தேவனுடைய சாபத்தின் ஆரம்பத்தை அனுபவிக்கிறவனாக இருப்பான்: அதாவது அவன் ஆவிக்குரிய மரணத்தில் வாழ்கிறவனாக இருந்து தேவனுடைய தயவு மற்றும் அன்பை அறியாதவனாக இருப்பதோடு; வியாதி, வேதனை, யுத்தம், விபத்து, (வெள்ளம், நெருப்பு, சூராவளி போன்ற) இயற்கையின் பேரழிவிற்கு ஆளாகி எல்லா வகையான தீமைகளையும் அனுபவிப்பவர்களாக இருப்பர். இவைகள் இந்த உலகில் அவிசுவாசிகளுக்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இருக்கிறது. இந்த ஜீவனிலிருந்து, மன்னிக்கப்படாத மனிதர் நித்திய தண்டனையான நரகத்திற்கு அனுப்பப்படுவர், அங்கே நித்திய அழுகையும், புலம்பலும், பற்கடிப்பும் உண்டாகியிருக்கும் (மத் 8:12; 13:42,50). தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பிலிருந்து எவராலும் தப்பிக்க முடியுமா? தங்களுடைய சொந்த கிரியைகளை மட்டும் சார்ந்து இருக்கும் ஒருவரும் தப்பிக்க முடியாது, காரணம் தேவனுடைய நியாயப்பிரமாண புத்தகத்தின்படி நியாயம் விசாரிக்கப்படும்போது சீர்கெட்ட பாவிகளின் எல்லா கிரியைகளும் முற்றிலும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட இயலாததாக இருக்கும்.

**10-க்கான கேள்விகள்**

1. கேள்விகள் 10, 11-ல், பாவத்தின் ........................................... நாம் காணலாம்.
2. தேவன் ......................................... உள்ளவராக இருப்பதினால், பாவியான மனிதன் தேவனிடமிருந்து தண்டனையை எதிர்பார்க்க வேண்டும், காரணம் அவர் .......................................
3. பாவம் எதினால் தேவனுக்கு வெறுப்பையும், அருவருப்பையும் கொடுக்கிறது? .
   ..................................................................................................................................................
4. எப்போதும் வெறுப்படைந்து இருப்பது தவறு. சரியா, தவறா? .....................................
5. கர்த்தருடைய வார்த்தையின்படி, நாம் செய்கின்ற (actual sin)துன்மார்க்கமான சிந்தனை, வார்த்தை மற்றும் செயல்களை மட்டும் நீதியாய் தண்டிப்பார். சரியா? தவறா? .......................................................
6. பிறக்கும் போதே நமக்குள் இருக்கும் பாவத்திற்கு... அ) நம்முடைய மறைமுகமான பாவ சிந்தனை, ஆ) நம்முடைய முழுச் சீர்குலைந்த சுபாவம், இ) நம்முடைய இருதயத்திலிருந்து வரும் பாவம்... என்று பெயர். எது சரி?....................
7. ஒவ்வொரு பாவமும், அது எவ்வளவு சிறியதாக இருப்பினும், தேவனுடைய நித்தியமான சாபத்தை பெறுகிறது. சரியா, தவறா? .................................
8. கடவுள் பாவிகளை இந்த உலக வாழ்விலே தண்டிக்கும் சில வழிகளைக் கூறு: ..............................
   ..................................................................................................................................................
9. பின்வாங்கிப் போகுதல் (apostasy) என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? (சொற் களஞ்சிய பகுதியை பார்க்கவும்) .........................................................................................................................
   ..................................................................................................................................................
10. ரோமர் 1:18-ஐ எழுதவும்:

**11. அப்படியானால், தேவன் இரக்கம் உள்ளவராக இல்லையா?**

தேவன் இரக்கம் உள்ளவரே, அதுபோலவே அவர் நீதியுள்ளவராகவும் இருக்கிறார்; அவருடைய நீதியானது, தேவனுடைய மகா உன்னத மகத்துவத்திற்கு எதிராக செய்யப்பட்ட பாவத்தை, அதே அளவிற்கு அதிக பட்ச தண்டனையாக சரீரம் மற்றும் ஆத்துமா ஆகிய இவ்விரண்டையும் நித்திய தண்டனைக்கு உட்படுத்துகிறது.

பாவத்தின் பின் விளைவுகளைத் தொடர்ந்து, இங்கே தேவனுடைய நீதியானது அவருடைய இரக்கத்தின் தன்மைக்கு எதிராக செயல்படுவது இல்லை என்பதைக் காண்கிறோம். பலர் தேவன் மிகுந்த அன்புள்ளவர், ஆகவே தான் படைத்த எவரையும் நரகத்திலே தள்ளி தண்டிக்கமாட்டர் என்று தவறாக எண்ணி தங்களின் பாவத்தைக் குறித்து கவலையற்றவர்களாக இருக்கின்றனர். ஆனால், இது தவறான நம்பிக்கை. தேவனுடைய அன்பும், இரக்கமும் பாவத்திற்கு எதிரான அவருடைய கோபத்தை ஒன்றுமில்லாமல் செய்யாது. தன்னுடைய சொந்த பாவத்திற்கு பொறுப்பான குற்றமுள்ள பாவியை தேவன் தண்டித்தே ஆகவேண்டும். அப்படி இல்லை என்றால், தேவன் பரிசுத்தம், நீதி மற்றும் நியாயம் இல்லாதவராகி விடுவார். தேவன், பரலோகத்தின் தந்தையாக / பிதாவாக மட்டும் இல்லாமல் மகா உன்னத மகத்துவமுள்ளவராகவும் இருக்கிறார்.

இயேசுவும் பரலோகத்தைக் காட்டிலும் நரகத்தைக் குறித்து அதிகம் போதித்துள்ளார். பலர் வேதத்தை முறையாக படிக்காததால் இதை சரியாக உணர்வது கிடையாது. அவர்கள் நரகத்தைக் குறித்து அதிகம் எச்சரிக்காத கள்ளப்போதகர்களில் நம்பிக்கை வைக்கின்றனர்.

தேவன் பாவத்தை தண்டிக்கிறார் என்று கூறும்போது என்ன சொல்கிறோம் என்பதைக் குறித்து தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதாவது, பாவம் செய்கின்ற பாவியை தேவன் தண்டிக்கிறார். பாவம் ஒரு மனிதனை விட்டுப் பிரிக்கப்பட இயலாத ஒன்று; பாவம், அதை செய்த மனிதனை தொடர்பு படுத்தாமல் தனியே தண்டிக்க கூடிய ஒன்று அல்ல. அதுபோலவே, தேவன் பாவத்தை வெறுக்கிறார் என்று வேதம் கூறும்போது, அவர் பாவம் செய்யும் மனிதனையும் வெறுக்கிறார் என்றுதான் அர்த்தம். “அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்” (சங்கீ 7:11). நம்முடைய பாவங்கள் யாவும் கிறிஸ்துவின் மீது சுமத்தப்படும்போது மட்டுமே நாம் அடைய வேண்டிய தண்டனையிலிருந்து தப்பிக்க முடியும்.

குற்ற மனசாட்சியுடன் மரிக்கும் பாவி தேவனுடைய நித்திய தண்டனையை அடைகிறான் என்பதை மீண்டும் நாம் நினைவு படுத்தப்படுகிறோம். ஒவ்வொரு மனிதனும் செய்கின்ற பாவத்தின் அளவு வேறுபடுவதால், அதற்கேற்ற தண்டனையின் அளவும் நரகத்தில் வேறுபடுகிற உண்மையை வேதம் நமக்கு கூறும்போதே; ஒவ்வொரு மனிதனுக்கும் வரும் நரகத்தின் வேதனையானது வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவிற்கு மிகவும் பரிதாபமானதாக இருக்கும் (லூக் 12:47,48). இது “புறம்பான இருள்” நிறைந்த இடம், “அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாகியிருக்கும்” (மத்தே 8:12). அப்படி என்றால், அங்கே தேவனுடைய கருணையின் ஒளி முற்றிலும் இல்லாதிருந்து, அவருடைய கோபம் மட்டுமே அங்கு விளங்கக்கூடியதாக இருக்கும். இது அக்கினி ஜுவாலைபோன்ற கொடூரமான வேதனையின் இடம் (மத் 13:42, வெளி 20:10), அங்கே பாவியினுடைய மனசாட்சியும், தேவனுடைய நியாயப்பிரமாணமும் அவனை வேதனை என்னும் புழுவைப்போல நித்தியமாக கடித்து பட்சிக்கும் (மாற் 9:48). உண்மையாகவே, நரகம் நினைப்பதற்கே பயமாக இருக்கும் இடம். நீ அங்கே செல்கிறவனாக இல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு, பிறரையும் உண்மையாக எச்சரிக்கை செய்ய மறவாதே.

**11-க்கான கேள்விகள்:**

1. தேவன் மிகுந்த அன்புள்ளவர், ஆகவே எவருக்கும் நரக தண்டனையை தரமாட்டார் என்று பலர் நினைத்து நரகத்தைக் குறித்து கவலையற்றிருக்கிறார்கள். சரியா, தவறா? ............................... அவர்களின் கருத்து சரியானதா? ...............................
2. தேவனுடைய கருணையும், அவருடைய நீதியும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடானது. சரியா, தவறா? ...............................
3. தேவனுடைய நீதி என்றால் என்ன? (சொற்களஞ்சிய பகுதியை பார்க்கவும்)............................................ ..........................................................................................................................................................
4. தேவன்... அ) பாவத்தை; ஆ) பாவியை; இ) பாவியைத் தவிர்த்து பாவத்தை; ஈ) பாவத்தைத் தவிர்த்து பாவ ஜனங்களை ... வெறுக்கிறார் என்று வேதம் கூறுகிறது. (சரியான பதிலை கோடிட்டு, வேதாகம குறிப்பு தரவும்). ...............................
5. அ) மனம் மாறிய; ஆ) மனம் மாறாத .... பாவியின் பாவம் நித்திய தண்டனையை பெறுகிறது. எது சரி? ...............................
6. யார் மீது, ஏன் தேவன் கருணையாக இருக்கிறார்? ............................................................................................................................................................ ............................................................................................................................................................
7. பாவ ஜனங்களை நரகத்திலே நித்திய நித்தியமாக தண்டிக்கும் தேவனை உன்னால் நேசிக்க முடியுமா? ..........................................................................................................................................

8. நரகத்தின் கொடூரத்தை விளக்கும் உண்மைகளை பின்வரும் வசனத்தோடு ஒப்பிட்டுக் காட்டுக: வெளி 14:11 தண்டனையில் அளவு வித்தியாசம் உண்டு. மத் 25:46இது மந்தாரமும் இருளுமான இடம். லூக்கா 12:47,48 இது எப்போதும் அவியாத வேதனையின் இடம் யூதா 13 இந்த தண்டனை நித்தியமானது. மத்தேயு 25:41 இது சாத்தானும் அவனுடைய தூதர்களும் தங்கும் இடம்.
9. பாவியினுடைய சரீரம் இந்த உலக வாழ்வில் மட்டும் தண்டிக்கப்படும்; பாவியினுடைய ஆத்துமாவோ நரகத்திலே நித்தியமாக தண்டிக்கப்படும். சரியா, தவறா? ...............................
10. வெளிப் 20:14,15 -ஐ எழுதவும்:

## இரண்டாம் பகுதி: என்னுடைய மீட்பு (கேள்விகள் 12 - 85)

**12. தேவனுடைய நீதியான நியாத்தீர்ப்பினிமித்தம் நாம் தற்காலிக மற்றும் நித்திய தண்டனையை அனுபவிக்க வேண்டியவர்களாக இருப்பினும், நாம் இத்தண்டனையிலிருந்து தப்பி இரக்கத்தைப் பெறுவது எப்படி?**

தேவன் தமது நீதி பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறார்; ஆகவே நாம் தேவ நீதியை முழுமையாக முழு பூர்த்தி செய்ய வேண்டும், அது நாமாகவோ அல்லது நமக்கு பதிலாக வேறொருவராகவோ இருக்கலாம்.

***

வேதாகமம் மனிதனுக்குரிய நியாயத் தீர்ப்பின் செய்தியை மட்டும் கூறி முடிவு பெறாமல் இருப்பதற்கு நாம் எத்தனை நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். கேட்டகிசமும் கேள்வி 11-வுடன் முடியவில்லை.

இப்போது, கேட்டகிசத்தின் இரண்டாவது முக்கிய பகுதி போதிக்கும், "சுவிசேஷம் - நற்செய்தி - நம்முடைய பாவம் மற்றும் நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலை" என்பதைக் குறித்து படிக்கலாம். பின்வரும் 73 கேள்விகளில் (The Nature of Redemption) நம்முடைய மீட்பின் தன்மையைக் குறித்து படிக்கும் வரிசையில், மீட்பர் யார்?; எப்படி நாம் அவர் கொடுத்த மீட்பை விசுவாசத்தினால் பெறமுடியும் என்பதைக் குறித்து படிக்கலாம்.

சுவிசேஷம் என்றால் என்ன என்பதை அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தைப் (கேள்விகள் 23-58) படிப்பதன் மூலமும், பின்னர், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்பதைக் குறித்து விளக்கமாகவும் (கேள்விகள் 59-64) நாம் படிக்கலாம். இந்தப் பகுதியின் முடிவில் ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி என்ற சாக்ரமந்துகள் மற்றும் நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்தி நம்மை இரட்சிப்பின் பாதையில் நடத்தும் கிறிஸ்தவ திருச்சபையின் அதிகாரத்தைப் பற்றியும் படிக்கலாம்.

கேள்வி 12-ல், தேவனுடைய நீதி பூர்த்தி செய்யப்படாத நிலையில் தேவனுடைய தண்டனையிலிருந்து தப்பிக்க வழியில்லை என்பதை படிக்கிறோம். மனிதனுக்கான மீட்பு பூரணமடைய வேண்டுமானால், அது தேவனுடைய பூரணமான நீதியின் வழியில் மட்டுமேயாகும். தேவன் உத்தமமும் நீதியுமுள்ளவராக இருப்பதால் நம்முடைய பாவத்தை இலகுவாக விட்டுவிட முடியாது. கேள்வி 11 நமக்கு விளக்குவது போல, அவருடைய நீதியும் பாவத்திற்கு எதிரான அவருடைய கோபமும் நம்முடைய பாவங்கள் சரியாக தண்டிக்கப்பட வேண்டுகிறது.

கேள்வி 12, (Divine Satisfaction) தெய்வீக மீட்புபொருளின் அவசியத்தை; அதாவது நமது பாவத்திற்கான பூரண தண்டனையினால் தேவனுடைய நீதி பூர்த்தி செய்யப்படுதல் என்பதை போதிக்கிறது. பாவப் பிரச்சனை தீர்க்கப் படாதவரையில் நமக்கு இரட்சிப்பு என்பதே இல்லை.

இப்போது, முக்கியமான கேள்வி, எப்படி இந்தப் பாவப் பிரச்சனை ஒழுங்கு செய்யப்படும்? நம்முடைய பாவத்திற்கான தண்டனையிலிருந்து நாம் தப்பிக்க நமக்குப் பதிலாக (Substitute) யார் தேவனுடைய கோபத்தை சுமப்பது? நமக்குப்பதிலாக செயல்பட ஒருவர் இல்லாத நிலையில், நாமே தேவனுடைய நீதியை பூர்த்தியும்படி செயல்பட வேண்டும். இது நம்முடைய தற்காலிகம் (இந்த உலக வாழ்வு) மற்றும் நிரந்தர (நரகம்) தண்டனைக்கு எதிராக தேவைப்படுகிறது!

ஒருவனுக்கு வரும் நியாயமான தண்டனையிலிருந்து அவனை மீட்பது என்பது இலகுவான காரியமல்ல. தேவனுடைய ஞானத்தினால் மட்டுமே இதற்கான பதிலை தரமுடியும் -எபேசியர் 1:7,8-ப் பார்க்கவும்.

**12-க்கானகேள்விகள்:**

1. கேட்டகிசத்தின் இரண்டாம் பகுதி ...................................... பற்றியதாகும்............................ இதைக் குறித்து படிக்கிறோம்.
2. சுவிசேஷத்தைச் சார்ந்து கீழ்வரும் வார்த்தைகளின் அர்த்தம் என்ன? (துணைப் புத்தகத்தை பார்க்கவும்). தேவனுடைய கோபம்: ..........................................................................................................இரட்சிப்பு: ..........................................................................கிறிஸ்துவின் பரிகாரம்: .......................................................... கிருபாதார பலி: ..........................................................................................................................................
3. நம்முடைய கேட்டகிசத்தில் எந்த மகத்தான விசுவாச அறிக்கை விளக்கப்பட்டுள்ளது? ......................... ......................................................................................................................................................
4. சாக்கரமந் மற்றும் சபை சீர்ப்படுத்துதல் போன்றவைகள் நம்முடைய இரட்சிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. சரியா, தவறா? ....................................

5. நமக்கு இரட்சிப்பு கிடைக்க வேண்டுமானால், அது தேவனுடைய பூரணமும், பரிசுத்தமான நீதியின் வழியில் மட்டுமேயாகும். சரியா, தவறா? ............................
6. கேள்வி 12 நமக்கு போதிப்பது: .....................................................................................................................
7. மனிதன் மீட்கப்படுவது என்பது என்ற கேள்விக்கான பதில்?
   அ) இலகுவானது, ஆ) கஷ்ட்டமானது, இ) மனிதனால் பதில்கூற முடியாது....இதில் எது சரி...........
8. நாம் தேவனுடைய தண்டனையிலிருந்து தப்பிக்க முடியும், ஆனால் நம்முடைய பாவம் தேவனுடைய நீதி மற்றும் கோபத்திலிருந்து தப்பிக்க முடியாது. சரியா, தவறா? ...............................
9. நாமே தேவனுடைய நீதியை பூர்த்தியும்படி செயல்படும்போது தேவனுடைய தண்டனையிலிருந்து நாம் தப்பிக்க (முடியும், முடியாது). நமக்குப் பதிலாக வேறேயொரு நபர் தேவ நீதி பூர்த்தி செய்யும்படி செயல்படும்போது நாம் தப்பிக்க (முடியும், முடியாது). சரியானவற்றை கோடிட்டு காட்டுக.
10. ரோமர் 2:11,12- ஐ எழுதவும்.

**13. நமக்கு நாமே இந்தப் பாவபரிகாரத்தை (Satisfaction) செய்ய முடியுமா?**

எதனாலும் முடியாது, மாறாக நாமே நமது (guilt) துர்மனசாட்சியை அதிகப்படுத்துகிறோம்.

***

நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்று, அவரோடு பரலோகத்திலே வாழும் நிலைக்கு தகுதி படுத்தப்பட வேண்டுமேயானால், நமது பாவங்களுக்கான பரிகாரம் அவசியம் காணப்பட வேண்டும். தேவனுடைய நீதியும், நியாயமும் ஒவ்வொரு பாவமும் தண்டிக்கப்பட வேண்டுகிறது. ஒருவேளை, தேவன் பாவத்தை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவார் எனில், அவரே நீதியற்ற தேவனாவதோடு, அவருடைய பரிசுத்த நியாயப்பிரமாணம் பிரயோஜனமற்றதாகிவிடும்.

இப்போது நாம் எதிர்நோக்கும் கேள்வி, நமக்காக தேவநீதி பூர்த்தி செய்யப்படுதல் எப்படி சாத்தியமாகும்?

கேள்வி 13 கேட்பது, நமக்கு நாமே இந்த பெரிய செயலை செய்யமுடியுமா? அது நிச்சயமாக முடியாது. சுயமாக மீட்கப்படுதலும், சுயமாக இரட்சிக்கப்படுதலும் முழுவதும் சாத்தியமல்ல. ஒரு பாவி தனது நித்தியத்தை நரகத்தில் செலவிடாமல் எப்படி தேவனுக்கு செலுத்த வேண்டிய தனது கடனை செலுத்த முடியும்? நரகத்திற்கே சென்றாலும், அந்தக் கடனை செலுத்த முடியாது, காரணம் நரகத்திலும் தொடர்ந்து தேவனை வெறுப்பதினால் பாவம் அதிகரிக்கின்றது. (நரகத்திலே வேதனை அனுபவிப்பவர்களும் தொடர்ந்து தங்கள் பாவத்தை அதிகரிக்கின்றனர் என்பது எத்தனை பரிதாபமானது!)

இரண்டாவது, நாம் தேவநீதியை பூர்த்தி செய்ய வேண்டுமானால், நமக்கு பூரணமான அன்பும் கீழ்ப்படிதலும் அவசியம், ஆனால் சீர்குலைந்து இருக்கும் நமது இருதயத்தால் அவற்றை செய்ய முடியாது. இந்த உலகில் வாழும் எந்தவொரு மனிதனாலும் தனது சிந்தனை, செயல் மற்றும் சொல்லில் பாவம் செய்யாமல் ஒருநாளும் இருக்க முடியாது. நாம் நம்மை இரட்சிக்க வேண்டுமானால், கடந்தகால பாவங்களுக்கான முழு அபராதத்தையும் செலுத்துவதோடு, தொடர்ந்து நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் தேவனை பூரணமாக நேசிக்க வேண்டியது அவசியம். இவ்விரண்டு காரியங்களும் நம்மால் முடியாது என்னும் உண்மை, நாம் சுயமாக மீட்கப்படுவது சாத்தியமல்ல என்பதை உணர்த்துகிறது: 1) நமது பாவங்கள் யாவும் நித்திய தண்டனையினால் தண்டிக்கப்பட வேண்டும் (கேள்வி 11), மற்றும் 2) பூமியில் நமது வாழ்வின் எஞ்சிய நாட்களிலும் பூரணமாக்கப்பட்ட நிலையில் வாழ முடியதாவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவின் மூலம் நாம் தினமும் மன்னிப்பை பெறுவதோடு தினமும் நமது பாவத்தை அதிகரிக்கின்றவர்களாகவே இருக்கிறோம்.

நற்காரியங்கள் ஒரு மனிதனை இரட்சிக்கும் என்று போதிக்கும் எல்லா மதங்களும் தவறு என்பதை இந்தக் கேள்வி பதில் போதிக்கிறது. பாவியான மனிதனின் "நற்காரியங்கள்" யாவும் நன்மையானவைகள் அல்லவே, அவைகளால் கடந்தகால பாவம் மற்றும் குற்றத்திற்கு எதிரான தேவநீதியை பூர்த்தி செய்ய முடியாது. தங்களுடைய நற்செயல்களில் நம்பிக்கை வைத்து அவைகள் தங்களை பரலோகத்திற்கு எடுத்துச் செல்லும் என்று நினைப்பவர்கள் முதலாவது தாங்கள் நரகத்தில் நித்திய தண்டனை பெறுகின்றவர்களாக காணப்படுவர்.

**13-க்கான கேள்விகள்:**

1. தேவனுடைய ............................... பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
2. எந்த ஒரு பாவியும் தனது பாவத்திற்கான தண்டனைக் கடனை இந்த உலகவாழ்வில் தீர்க்க முடியாது. சரியா, தவறா? ...............................
3. ஒரு பாவி தனது பாவத்திற்கான தண்டனைக் கடனை நரகத்தில் கொடுத்து தீர்க்க முடியும். சரியா, தவறா? ...............................
4. கேள்வி 13 நமக்குப் போதிப்பது .....................................................முடியாது.
5. தேவநீதி நமது பழைய பாவங்களுக்கான தண்டனையையும், பூமியின்மீதமுள்ள நாட்களிலும் நாம் என்ன செய்ய வேண்டுகிறது? ..........................................................
6. எதனால் நாம் ஒவ்வொரு நாளும் பாவத்திற்குட்படாமல் இருப்பதில்லை...................................................................

7. ரோமன் கத்தோலிக்க மதம் போதிப்பது, மரணத்திற்குப்பின் மனிதன் தான் செய்த பாவங்களுக்காக உத்தரிக்க ஸ்தலத்தில் (Purgatory)தண்டனைகளை அனுபவிப்பதால் தேவநீதியை பூர்த்திசெய்த பின்பு பரலோகத்திற்குச் செல்ல தகுதி பெறுகின்றான். ஏன் இந்த போதனைதவறானது? ..................................
8. நாம் தினமும் நம்முடைய சிந்தனை, ..................................நமது பாவத்தை அதிகரிக்கின்றோம்.
9. நற்கிரியைகளினால் மீட்பை அடையலாம் என்று போதிக்கும் புதுமைவாதிகள்(Modernitst), மற்றும் பலர்(அ) பாவம், நற்கிரியை மற்றும் இரட்சிப்பைக் குறித்து தவறு செய்கின்றனர்.
   ஆ) பழைய பாவங்களுக்கான தண்டனையின் அவசியத்தை மறுதலிக்கின்றனர்.
   இ) நற்கிரியையைக் குறித்து சரியானவைகளே.
   ஈ) நம்முடைய இரட்சகரை அசட்டை பண்ணுகின்றனர். எது சரி? ....................
10. சங்கீதம் 130:3,4 ஐ எழுதவும்.

**14. நமக்கான பாவபரிகாரத்தை ஏதாகிலும் ஒரு சாதாரண ஜீவராசியால் செய்ய முடியுமா?**

எவற்றாலும் முடியாது; முதலாவது, மனிதன் செய்த பாவத்திற்காக எந்தவொரு ஜீவராசியையும் தேவன் தண்டிப்பதில்லை; மேலும், எந்தவொரு ஜீவராசியினாலும் தேவனுடைய நித்திய கோபத்தின் உக்கிரத்தை தாங்கவும், பிறரை விடுவிக்கவும் முடியாது.

***

கேள்வி 14 யார் நமக்கான பாவபலியாக முடியும் என்ற கேள்விக்கு பதில் தருகிறது. முந்தைய கேள்வியில் நம்மை நாமே இரட்சிக்க முடியாது என்பதைக் கண்டோம், ஆனால் வேறேயொரு ஜீவராசியால் நமக்குப்பதிலாக செயல்பட முடியுமா? என்ற கேள்விக்கு பதில், “இல்லை” என்பதாகும்.

“சாதாரண படைப்பு / ஜீவராசி” என்று கேட்டகிசம் கூறுவது தேவனால் படைக்கப் பட்ட படைப்பைக் குறிக்கின்றதேயன்றி, அது தேவனல்ல.

முதலாவது, மனிதனுடைய பாவத்திற்காக மனிதன் மட்டுமே தண்டிக்கப்பட முடியும் என்று போதிக்கப்படுகிறோம். மனிதனால் செய்யப்பட்ட பாவத்திற்காக தேவன் வேறேயொரு படைப்பை தண்டிப்பது என்பது தேவனுடைய நியாயத்திற்குப் புறம்பானதாகும். இது மனிதனைவிட சற்று மேன்மையாகப் படைக்கப்பட்ட தூதர்களையும், சற்று கீழாகப் படைக்கப்பட்ட விலங்குகளையும் உள்ளடக்காது. மட்டுமல்லாது, தண்டிக்கப்பட வேண்டுமெனில், தூதர்களுக்கு சரீரமும், மிருகங்களுக்கு ஆத்துமாவும் இல்லை. உண்மையான மனித அவதாரம் மட்டுமே மனிதனுக்கு (substitute) பதிலாக வரமுடியும்.

அதோடு, தேவநீதியை பூர்த்தி செய்வதற்கு எந்தவொரு தனிமனிதன் மட்டுமே உங்களுக்கு பதிலாக தகுதிபெற முடியாது. ஏன் முடியாது? காரணம் சக மனிதனும் பாவியாக இருந்து தனது பாவத்திற்காக தேவனுடைய நித்திய தண்டனையை அனுபவிக்க வேண்டியவனாக இருக்கிறான். மேலும், இது ஒருபுறம் இருக்க, எந்தவொரு மனிதனும் அளவுக்கு அதிகமாக தேவனுக்கு கீழ்ப்படிந்து பெறும் தயவை பிறருக்கு கொடுக்கவும் முடியாது. எந்தவொரு தனி மனிதனும் தேவனுடைய இரக்கத்தை அதிகமாக சம்பாதித்து அதை தேவனுக்கு முன்பு குறைவான இரக்கம்பெற்ற பிறருக்கு பகிர்ந்தளிக்க முடியாது.

ஒருவேளை தேவன் பாவமற்ற ஒரு மனிதனை படைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பாவமற்ற மனிதன் உங்களுடைய பாவத்தை உங்களுக்குப் பதிலாக நரகத்திலே சுமக்கும் ஒரு நபராக மாறமுடியுமா? இதற்கான பதில், மீண்டும் “இல்லை” என்பதுதான். ஒருவேளை, பாவமற்ற ஒரு மனிதனை தேவன் படைத்தாலும், அவனால் நமக்காக தேவனுடைய கோபத்தின் உக்கிரத்தை சகிக்கும்போது தேவனை ஒரு நொடிப்பொழுதும் வெறுக்காமல் இருக்க முடியாது. அப்படி அவனுக்கு தண்டனை கொடுக்கப்படும்போது அவனை பாவியாக மாற்றுகிறது, பின்னர் அவனே தனது பாவத்திற்கு தண்டனை பெறவேண்டியவனாக மாறுகிறான். பூரணமான ஒரு நல்ல மனிதன் ஒரேயொரு மனிதனுக்கு ஈடாக மட்டும் செயல்பட முடியுமேயன்றி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதருக்குப் பதிலாக செயல்பட முடியாது.

இதனால், நமக்கு நாமாகவோ அல்லது பிற ஜீவராசியாலோ இரட்சிப்புக்கேற்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பே இல்லை என்பது தெளிவாகிறது. நமக்குப் பதிலாக எந்தவொரு மனிதப்படைப்பும் தேவனுடைய தண்டனையைப் பெறவோ அல்லது தேவனை நேசிக்கவோ முடியாது. நம்முடைய நிலை நம்பிக்கையற்ற நிலையாகவே இருக்கிறது. பாவப் பரிகாரம் மற்றும் தேவனுக்கு பூரணமாக கீழ்ப்படிதலின் அவசியம் ஆகியவற்றை நிறைவேற்றி தேவநீதி பூர்த்தி செய்யப்படவும் அதனால் நாம் மீட்கப்படுவதற்கான வழியை தேவன் ஒருவர் மட்டுமே அமைத்துத்தர முடியும். அந்த அமைப்பின் வழியே, தேவன் தமது சொந்த குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை சிலுவையின் பாவ நிவர்த்தி மரணத்தினால் உண்டாக்கியதாகும்.

**14-க்கான கேள்விகள்:**

1. இந்தக் கேள்வி பதிலானது, நமக்கு இரட்சிப்பானது வேறுசில படைப்பின் உதவியினாலும் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது என்ற நம்பிக்கையின் ஒளியை வீசச் செய்கிறது. சரியா, தவறா? ................................
2. தேவன் நீதியுள்ளவர், அவர் உனக்குப் பதிலாக ஒரு தூதனை நரகத்திலே தண்டிப்பாரேயானால் அவர் அன்புள்ளவராக இருக்க முடியாது. சரியா, தவறா? ................................

3. பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் விலங்குகளை பலிசெலுத்தினார்கள், அதன் மூலம்... அ) தங்களின் பாவத்திற்கு இணையானது, ஆ) தங்களின் சரியான ஒரே பலி இயேசு கிறிஸ்துவே, இ) தங்களின்பாவத்திற்கான பகுதி பரிகாரம்... என்பதை வெளிப்படுத்தினார்கள். எது சரி? .............
4. சாதாரணமான ஒரு மனிதன், பாவமற்றவனாக இருக்கும்போது,உங்களுக்கான பதிலாளியாக நரகத்தின் தண்டனையை எடுத்துக் கொள்ள முடியும். சரியா, தவறா? ................................
5. இயேசு கிறிஸ்து கடவுள், வெறும் மனிதனல்ல, ஆகவே பாவிகளுக்கான பதிலாளியாக அவர் செயல்பட முடியும். சரியா, தவறா? ................................
6. "பாவத்திற்கெதிரான நித்தியமான தேவ கோபத்தை சகித்தல் என்பது" பாவத்திற்கான முழு தண்டனையை அனுபவிக்கும் போது தேவனை முழுமையாக நேசிப்பதாகும். சரியா, தவறா? ................................
7. இயேசு கிறிஸ்து இருவழிகளில் நமக்கான பதிலாளியாக தேவநீதியை நிறைவேற்றினார். அ) அவர் நமக்காக தேவனுடைய ............................................ கீழ்ப்படிந்தார்., ஆ) அவர் நமக்காக ...................................... வேதனையை அனுபவித்தார்.
8. நம்முடைய இரட்சகர் நமது பாவங்களுக்காக அவர் தண்டிக்கப்பட்டபோதும் தேவனை முழுமையாக நேசித்தார். சரியா, தவறா? ................................
9. ரோமன் கத்தோலிக்க மதம் போதிப்பது: சில "பரிசுத்தவான்கள்" தங்களுடைய கூடுதலான பரிசுத்தத்தையும், நன்மைகளையும் பிறருக்கும் கொடுக்க முடியும். ஏன் இது தவறான போதனை?
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
10. எசேக்கியல் 18:20- எழுதவும்

**15. எந்த வகையான தன்மையையுடைய மத்தியஸ்தரும் மீட்பருமானவரை நாம் தேட வேண்டும்?**

உண்மையும், நீதியுமான ஒரு மனிதனாகவும், எல்லா படைப்பகளையும்விட அதிக வல்லமையுடையவராக, அதாவது உண்மையான தேவனாகவும் இருக்கும் தன்மையுடையவரை ஆகும்.

***

கேள்விகள் 15,16 மற்றும் 17 தேவனுடைய நீதியை பூர்த்தி செய்து நமக்கு பதிலாளாக செயல்படும் (substitute) மீட்பர் எப்படி இருக்க வேண்டும் என்ற அவசியத்தை விளக்குகிறது.

நாம் ஏற்கனவே பார்த்தது போல (கேள்வி 14), மனிதனுக்கு பதிலாளாக செயல்படும் நபர் பூரணமான மனிதனாக இருக்க வேண்டும். மேலும், அதே பதிலாள் சராசரி மனிதனைவிட சற்று உயர்நிலையில் உள்ளவராகவும் இருக்க வேண்டும். அதே நபர் கடவுளாகவும் இருக்க வேண்டும். அப்படியானால், நமக்கான பதிலாள் இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஒப்பற்றவராக இதுவரை பூமியில் அவர்போல் தோன்றிடாத ஒருவராக இருக்க வேண்டும். முக்கியமாக, இந்த மீட்பர் மனித இனத்தின் ஆற்றலினால் உண்டாக்கும் நிலைக்கு வேறுபட்ட நிலையில் தேவனால் கொடுக்கப்பட்டவராக இருக்க வேண்டும். முழு மனித இனமும் தேவனுடைய நீதிக்கு முன்பாக எந்தவொரு பாவியினுடைய பாவத்தையும் நிவர்த்தி செய்யக்கூடிய பதிலாள் ஒருவனை தரவே முடியாது.

ஆனால், நம்மை சந்தித்துள்ள பிரச்சனையை தீர்வு செய்வதற்கேற்ற சரியான மத்தியஸ்தரும் மீட்பருமான, அதாவது பூரணமான மனிதனும், தேவனுமான பதிலாளை நமக்காக தேவனே கொடுத்துள்ளார். அந்த நபர் இயேசு கிறிஸ்துவே என்பதை கேள்வி 18 விளக்குகிறது.

வேதத்தையும், இந்த கேட்டகிசத்தின் மீதமுள்ள பகுதியையும் புரிந்து கொள்ள இரு முக்கியமான வார்த்தைகான போதிய விளக்கதை அறியவேண்டியது அவசியம். அவைகள், "மத்தியஸ்தர்", மற்றும் "மீட்பர்" (இரட்சகர்) ஆகும்.

1. *மத்தியஸ்தர்*: "மத்தியஸ்தர்", வெவ்வேறு தன்மைகளைக் கொண்ட இரு நபர்களுக்கிடையே நின்று அவ்விருவரையும் ஒன்றாக்கும் செயலைச் செய்பவர் ஆவார். 1 தீமோத்தேயு 2:5 -ல், "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" என்று நாம் வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராக செயல்பட்டனர். ஆனால், அவர்கள் அனைவரும் பின்வரப்போகிற இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாக செயல்பட்டனர். அவர் ஒருவரே உண்மையான மத்தியஸ்தராக நம்மை தேவனிடமும், தேவனை நம்மிடமும் கொண்டுவரும்படி நம்முடைய பாவத்தை புறம்பே தள்ளி புதிய கிருபையின் உடன்படிக்கையை ஏற்படுத்தியவர் ஆவார் (எபிரே 8:6; 9:15; 12:24).

2. *மீட்பர்*: "மீட்பர்", சிறைப்பிடிக்கப்பட்ட அல்லது கொத்தடிமையாக உள்ள ஒருவருக்கான மீட்புத்தொகையை செலுத்தி அவரை விடுவிப்பவர் ஆவார். தேவன் தம்முடைய ஜனங்களுக்கான கிரையத்தை தாமே செலுத்தி தனக்கென்று அவர்களை மீட்டுக் கொண்டார். தேவன் எகிப்திலிருந்த இஸ்ரவேலரை பஸ்காவாகிய பலியினாலும், தமது மாபெரும் பராக்கிரமத்தாலும் மீட்டார் (யாத் 6:6; 15:3). தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவனை பலியாகக் கொடுத்து நம்மை பாவத்தின் வலிமையிலிருந்தும், சாத்தானின் அதிகாரத்திலிருந்தும் மீட்டுள்ளார். அவருடைய இரத்தம் நம்முடைய

மீட்பை சம்பாதித்தது (எபே 1:7). இந்த விலை தேவனுடைய நீதிக்காக கொடுக்கப்பட்டதேயன்றி சாத்தனுக்கு அல்ல.

நம்முடைய இரட்சகர் மத்தியஸ்தரும், மீட்பருமாவார். தேவனால் இந்த மாபெரும் வேலைக்காக நியமிக்கப்பட்டார், அவரும் முழுச் சம்மதத்துடன் தேவநீதியை நிறைவேற்றும்படி கடவுள் மனிதனாக (God - Man) செயல்பட்டார்.

**15-க்கான கேள்விகள்:**

1. கேள்விகள் 15 முதல் 17 வரை, தேவ நீதியை நிறைவேற்ற ......................................................................
2. பதிலாளியாக செயல்படுபவரிடம் காணப்பட வேண்டிய இரு முக்கிய தகுதிகள்:
   அ) ..........................................................................................................................................................
   ஆ) ..........................................................................................................................................................
3. நம்மை மீட்கும்படி தோன்றிய இரட்சகர் மனித இனத்தால் தோற்றுவிக்கப் பட்டார். சரியா, தவறா? ..............................
4. இயேசு கிறிஸ்து ... அ) உண்மையும், பாவமுமற்ற மனிதன் மட்டுமே; ஆ) உண்மையான கடவுள் மட்டுமே; இ) உண்மையாகவே மனிதனும் கடவுளுமாவார். எது சரி? ..............
5. மத்தியஸ்தர் என்பவர் யார்? ...........................................................................................................................
6. கிறிஸ்து மத்தியஸ்தராக இருந்து எவர்கள் இருவரை ஒன்றாக்கினார்? .......................................................................
7. மீட்பர் செய்வது என்ன? ..................................................................................................................................
8. கீழ்வருபவைகளை பொருத்துக:

| | |
|---|---|
| அ) மீட்பா | - யாத்திராகமம் 15:31 |
| ஆ) தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், இராஜாக்கள் | - கலாத்தியர் 3:20 |
| இ) எகிப்தில் எபிரேயர்கள | - யோபு 9:33 |
| ஈ) மத்தியஸ்தர் ஒருவனுக்குரியவர் அல்ல | - ஏசாயா 60:16 |
| உ) அவர் ஒரு மத்தியஸ்தரை கேட்டார் | - இயேசுவாகிய மத்தியஸ்தர். |

9. தேவன் ............................................................................................... கொடுத்து நம்மை ............................................................................................................ மீட்டுள்ளார்.
10. ஏசாயா 9:6-ஐ எழுதவும்.

**16. மீட்பராக செயல்படுபவர் உண்மையும், நீதியுமுள்ள மனிதராக இருக்க வேண்டும் ஏன்?**

ஏற்கனவே பாவம் செய்த மனித இயல்புடைய ஒருவர் தனக்கான பாவநிவர்த்தி செய்ய வேண்டும் என்று தேவநீதி வேண்டுகிறது. அதோடு, தனக்குத்தானே பாவியான ஒருவர் மற்றொருவரின் பாவத்திற்கான பரிகாரத்தைச் செலுத்த முடியாது.

***

கேள்வி 16, மீட்பரானவர் உண்மையும் நீதியுமுள்ளவராக ஏன் இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறது. கேள்வி 14 மற்றும் 15-லிருந்து மீட்பராக செயல்படும் நபரின் தகுதிகளாக அவர் உண்மையான மனிதனாகவும், உண்மையான கடவுளாகவும் இருக்க வேண்டியதும் மற்றும் அதன் அவசியத்தையும் பார்த்தோம். ஏற்கனவே 14, 15 கேள்விகளில் கூறப்பட்டுள்ளவைகளை இங்கே மீண்டும் கூற வேண்டிய அவசியமல்ல, இருப்பினும் நமக்கு பதிலாக செயல்படும் நபர் (பதிலாளி) நம்முடைய மனித இயல்பை உடையவராக இருந்து, நம்முடைய பாவ சுபாவத்தை உடையவராக இருக்கக் கூடாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, அவர் ஆதாமின் வழியில் வந்த சராசரி மனிதனாக இருக்க முடியாது. காரணம், "ஆதாமுக்குள் எல்லாரும் மரித்திருக்கின்றனர்" (1கொரி 15:22) என்றப்படி, ஆதாமுக்குள் அனைவரும் பாவிகளாக இருக்கின்றனர். மனிதக் குலத்தால் பாவமற்ற மனிதனாம், இயேசு கிறிஸ்துவை இந்த உலகுக்கு ஒருபோதும் கொடுக்க முடியாது என்பதை நாம் மீண்டும் கூறுகிறோம்.

இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் கருவுற்றதால் அவருடைய மனித இயற்பண்புகள் ஆதாமினிமித்தம் நமக்கு வரும் குற்றமும் கேடுமான தன்மைகளிலிருந்து அவரை பாதுகாத்தது. தேவதூதன் மரியாளிடம், "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்." (லூக் 1:35) என்றான். நமது மீட்பர் பரிசுத்தமாகவும், கன்னியின் வயிற்றில் உருவெடுத்தது அடிப்படை கிறிஸ்தவ உண்மைகளாகும், அப்போஸ்தல விசுவாசப் பிரமாணமும் இதை உள்ளடக்கியுள்ளது. (கேள்வி 35 ஐ பார்க்க)

ஒரு உண்மையான (சராசரி) மனிதனாக, இரட்சகர் இயேசுவால் ஒரு உன்மையான (சராசரி) மனிதனின் இடத்தை எடுத்துக்கொள்ள முடிந்தது. ஒரு தூதனால் நமக்குப் (substitute) பதிலாளியாக செயல்பட முடியாது, ஏனெனில் தூதனுடைய இயற்பண்பின் அடிப்படையில் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க முடியாது. அதேவேளையில், மிருகங்களுக்கும் ஆத்துமா என்ற ஒரு பரிமாணம் இல்லாதபடியினால் தேவநீதி வேண்டுகிற ஆவிக்குரிய தண்டனையைப் பெறமுடியாது.

நீதியுள்ள மனிதனாக, நம்முடைய ஆண்டவராகிய இயேசு பாவமற்றவர், அதனால் சுயதண்டனை பெறும் நிலையிலிருந்து விலக்குப் பெற்றிருக்கிறார்.

**16-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 16, மீட்பரானவர் ..........................................................................................என்பதை விளக்குகிறது.
2. இயேசு கிறிஸ்து உண்மையான மனித பண்புகளை உடையவர் என்பது, அவர்... அ) மனித சரீரத்தை, ஆ) மனித ஆத்துமாவை, இ) மனித சரீரம் மற்றும் ஆத்துமாவை ... பெற்றுள்ளார் என்பதாகும். எது சரி?...............
3. மனிதனுடைய இயற்பண்புகளே பாவ மனிதனுக்கான பாவநிவாரணத்தை சம்பாதிக்க வேண்டும் என்று தேவநீதி வேண்டுகிறது. சரியா, தவறா?................................
4. உண்மையான மனிதன் என்ற நிலையில், இயேசு கிறிஸ்து நம்மைப் போலவே ஆதாமின் குமாரன் ஆவார். சரியா, தவறா? ..........................
5. இயேசு கிறிஸ்து தனது மனித இயற்பண்புகளை... அ) பரிசுத்த ஆவியானரின் செயலால், ஆ) மாரியாளிடத்திலிருந்து, இ) மரியாள் மற்றும் யோசேப்பினிடமிருந்து... பெற்றார். எது சரி?.............
6. இயேசு கிறிஸ்து கன்னியின் வயிற்றில் பிறந்தார் என்னும் சத்தியத்தை மறுக்கும் பிரசங்கிமார்கள் உண்மையான ஊழியர்கள் என்று கூறலாம். சரியா, தவறா?..........................
7. இயேசு மரித்தபோது, அவருடைய மனித இயற்பண்புகளுக்கு என்ன நடந்தது என்று நினைக்கிறீர்கள்?
   அ) அவருடைய சரீரத்திற்கு? ..........................................................................................................................
   ஆ) அவருடைய ஆத்துமாவிற்கு? ...................................................................................................................
8. தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்கு எதிராக இயேசு ஒருமுறை பாவம் செய்திருந்தாலும், அவர் நமது மீட்பராக ஆக முடியாது. சரியா, தவறா? .........................
9. கேட்டகிசம் கூறுவதுபோல், ஒரு உண்மையான மனிதனாக, இரட்சகர் இயேசுவால் ................................................................ முடிந்து, மனிதனைப் போல................................................. இரண்டையும் பெற்றிருந்தார். நீதியுள்ள மனிதனாக ............................. நிலையை நமது ஆண்டவர் மனித பண்பில் பெற்றிருந்தார்.
10. எபிரேயர் 2:14- ஐ எழுதவும்

**17. அவர் ஏன் உண்மையான தேவனாக இருக்க வேண்டும்?**

அவர் தம்முடைய தெய்வீக வல்லமையினால், தேவ கோபத்தின் பாரத்தை மனித தன்மையிலேயே சுமந்து நீதியையும், ஜீவனையும் நமக்காக சம்பாதிக்க முடியும்.

***

கேள்வி 17, கேள்வி 14-ல் கூறப்படும் சத்தியமானது, நமது இரட்சகர் தேவனைவிட எந்தவிதத்திலும் குறைவற்றவராக இருக்க வேண்டியதின் அவசியத்தையே மீண்டும் கூறுகிறது.

காரணம், பதிலாளியான - மீட்பர் தேவனாகவே இருக்க வேண்டும், அப்படியில்லாமல் ஒரு மனிதன் பாவமற்றவனாக இருந்தாலும் தேவனுடைய கோபத்தின் உக்கிரத்தை அவரை வெறுக்காமல் தாங்க முடியாது.

“உண்மையான தேவன்” என்றால், இயேசு கிறிஸ்து சர்வ வல்லமையுள்ள திருத்துவ தேவநிலையில் இரண்டாவது நபராக, பிதாவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் இணையாகவே இருக்கின்றார். நவீன போதனையாளர்கள் மற்றும் குறுகிய மனதுடைய துர்உபதேசக்காரர்கள் (எகோவாவின் சாட்சிகள், கிறிஸ்தவ அறிவியல், நாளைய உலகம் போன்றோர்) இயேசு கிறிஸ்து தேவனுக்கு இணையானவர் என்பதை மறுதலிக்கின்றனர். ஆனால், கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிப்பது கிறிஸ்துவுக்கு எதிரானதாகவும், ஆத்துமாவை இழப்பதாகும். அப்போஸ்தலனாகிய யோவான் தனது சுவிசேஷத்தை ஆரம்பிக்கும்போதே, “ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது, அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.” (யோவா 1:1) என்றார். வசனம் 14 விளக்குவது போல அந்த “வார்த்தை”, இயேசுவேயாகும். இந்த “வார்த்தை” சிருஷ்டிகராக பிதாவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் இருப்பதை வசனங்கள் 3 மற்றும் 10 விளக்குவதோடு, வசனம் 18ன்படி அவர் காணக்கூடாத தேவனை வெளிப்படுத்தினார். தேவன் மட்டுமே தேவனை வெளிப்படுத்த முடியும்.

இயேசுவினுடைய மனித இயற்பண்புகளில் தேவகுமாரன் ஒன்றாக இணைவதை (incarnation) திருஅவதாரம் (God in the flesh - மாம்சத்தில் இறைவன்) என்கிறோம். ஒருவரில் இருவகையான இயற்பண்புகள் இணைவது நம்முடைய அறிவுக்கெட்டாத உண்மை, ஆனால் இது உண்மையாக நடந்தது என்று நாம் நம்புகிறோம், மேலும் நாம் மீட்கப்பட வேண்டுமானால் இது நடந்தாக வேண்டும்!

கிறிஸ்தவ சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில் பிரசித்தி பெற்ற போதகர்களும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் மனித மற்றும் தெய்வீக பண்புகளுக்கிடையேயான தொடர்புகளைக் குறித்து தவறான கருத்துக்களை போதித்தனர். இந்த தவறான கருத்துக்கள் நான்கு, அவைகள் தவறானவைகள் என்று ஆதித் திருச்சபை மன்றங்களால் கண்டனம் செய்யப் பட்டது. அந்த கருத்துக்கள் என்னவெனில்:

1. *ஏரியனிசம்*: கிறிஸ்து தேவனுடைய படைப்புகள் எல்லாவற்றிலும் உன்னதமானவர், அவர் தேவன் கிடையாது என்று ஏரியஸ் போதித்தது, கிறிஸ்துவின் தெய்வீக இயற் பண்புகளை அவர் மறுதலித்தார்.

2. *அப்பொல்லினாரியனிசம்*: கிறிஸ்து கடவுள்தான் ஆனால் அவர் முழுமையான மனிதன் கிடையாது என்று அப்பொல்லினாரியஸ் போதித்து, கிறிஸ்துவின் மனித இயற்பண்புகளை மறுதலித்தார்.

3. *நெஸ்ட்டோரியனிசம்*: இயேசு கிறிஸ்து தெய்வீக தன்மையுடையவராக இரு (கடவுள் மற்றும் மனித) இயற்பண்புகளை உடைய ஒரே நபராக இல்லாமல் தனித்தனியே கடவுளாகவும், மனிதனாகவும் இருந்தார் என்று நெஸ்ட்டோரியஸ் போதித்து, கிறிஸ்துவின் ஆள்த்தத்துவ ஒருமைப் பாட்டை மறுதலித்தார்.

4. *யூட்டிக்கியனிசம்*: யூட்டிக்கியஸ் கிறிஸ்துவின் இரு (தெய்வீக, மனித) இயற் பண்புகளை மறுதலித்து; கிறிஸ்து ஆள்தத்துவமுள்ள ஒரே நபர், அவர் கடவுள் மற்றும் மனித இயற்பண்புகளை ஒன்றாக கலந்து பெற்ற நிலையில் ஒரேயொரு (nature) இயற் பண்பை மட்டும் பெற்றவராக இருந்து, முழுமையான கடவுளாகவும், முழுமையான மனிதனாகவும் இருக்கவில்லை என்று போதித்தார்.

உண்மை என்னவெனில் நம்முடைய தேவன் இயேசு கிறிஸ்து இருவேறுபட்ட இயற்பண்புகளை தன்னிடம் பெற்ற தேவனுடைய குமாரன் ஆவார். அப்படியே அவர், தேவ குமாரனுடைய இயற் பண்புகளையும், முழுமையான மனித இயற்பண்புகளையும் (சரீரம், ஆத்துமா) பெற்றவராவார். இந்த உண்மைகளை நாம் முழுமையாகப் புரிந்து கொண்டோம் என்று போலியாக நடிக்காமல், வேதாகமம் நமது இரட்சகரைப் பற்றி போதிக்கும் சத்தியங்களை விசுவாசிக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் தெய்வீக இயற்பண்புகள் அவருடைய மனித இயற் பண்புகளுக்குத் தேவையான பெலத்தை கொடுத்ததால் உன்னதமான கர்த்தருடைய மாபெரும் கோபாக்கினையை ஏற்றுக்கொண்டு தேவன் மீது கசப்பு மற்றும் வெறுப்பு இல்லாமல் பாடனுபவித்தார். எல்லா விசுவாசிகளுக்கான நரகாக்கினையை தன்மீது ஏற்றுக்கொண்டு பாடனுபவிக்கும்போதும் நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிதாவை பூரணமாக நேசித்தார். கிறிஸ்துவின் தெய்வீக வல்லமையானது தேவனுடைய எல்லையற்ற தேவகோபத்தை தனது மனித பண்புகளில் தாங்குவதற்கான பெலனை கொடுத்தது.

கிறிஸ்துவில் இருவேறு இயற்பண்புகளின் இணைப்பு மற்றும் சொற்களால் விவரிக்க முடியாத அவருடைய பாடுகளைக் குறித்து நமக்கு மிகவும் குறைந்த புரிந்து கொள்ளுதலே உண்டு. நம்முடைய மீட்பர் நமக்காக பாடுபட்டது போல எந்த மனிதனும் பாடு பட்டதுமில்லை, இனிமேல் பாடுபடப் போவதுமில்லை. அவர் தேவனாக இருந்ததால் மட்டுமே இந்தப் பாடுகளை சகிக்க முடிந்தது.

அவருடைய பரிபூரணமான ஜீவியம் மற்றும் மரணத்திற்கேதுவான பூரணமான பாடுகளால் நமக்கான நித்திய நீதி மற்றும் நித்திய ஜீவனை சம்பாதித்தார்.

**17-க்கான கேள்விகள்:**

1. இயேசுவின் (Godhead) தெய்வீகத்தன்மை என்பது... அ) அவருடைய நீதியான மனித பண்புகளை; ஆ) அவருடைய தெய்வீக பண்புகளை; இ) இயேசுவில் இருந்த பரிசுத்த ஆவியானவரை... குறிக்கிறது. எது சரி?...................
2. கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைக்கும் அனைத்து தரப்பு மக்களுமே இயேசு கிறிஸ்து உண்மையாகவே கர்த்தர் என்ற போதனையை விசுவாசிக்கின்றனர். சரியா, தவறா?........................
3. ....................... சுவிசேஷப் புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து ...........................க்கு இணையானவர் என்பதற்கான சான்று உண்டு.
   அ) வசனங்கள் 1,14-ல் இயேசு ............................................... என்று அழைக்கப்படுகிறார்.
   ஆ) வசனங்கள் 3,10-ல் இயேசுவை ................................................... என்று நமக்குச் சொல்கிறது.
   இ) வசனம் 14-ன்படி இயேசு ............................................................................... நிறைந்தவராக, பிதாவினுடைய ...................................... வெளிப்படுத்துகிறார்.
4. இயேசு என்ற நபரில் மனித இயற்பண்புகளோடு தெய்வீக இயற்பண்புகள் இணைவதை குறிக்கும் வார்த்தை .................................... (incarnation - திரு அவதாரம்).
5. இயேசு என்ற நபரில் கடவுள் மற்றும் மனிதனின் இணைப்பு புரிந்து கொள்ள கடினமானதுதான், இருப்பினும் முற்றிலும் புரிந்து கொள்ள முடியாத ஒன்று அல்ல. சரியா, தவறா?.........................
6. திருஅவதாரம் எப்போது நேர்ந்தது? ...................................................
7. கிறிஸ்து பாடுபடும்போது தெய்வீக பண்புகள் அவருடைய மனித பண்புகளுக்கு என்ன செய்தது? ..........................................................................................................................................................
8. இயேசு பாவமறியாத மனிதனாக மட்டும் இருந்த நிலையில் தேவகோபத்தின் நரகாக்கினையை தனது சரீரம் மற்றும் ஆத்துமாவில் அனுபவிக்கும்போது என்ன நடந்திருக்க வேண்டும்? .............................
   .........................................................................................................................................................
9. தேவனுடைய கோபாக்கினையின் கீழ் இயேசு கிறிஸ்துவின் பூரணமான பாடு மரணத்தால் நமக்காக அவர் சம்பாதித்தவைகள் என்ன? ..................................................................................................
10. பிலிப்பியர் 2:6,8-ஐ எழுதவும்

**18. உண்மையான கடவுளாகவும், உண்மையும் நீதியும் உடைய மனிதனாகவும் இருக்கும் அந்த ஒரே நபர் யார், யார் அந்த மத்தியஸ்தர்?**

நம்முடைய முழுமையான மீட்பிற்கும், நீதிக்கும் நமக்காக இலவசமாகக் கொடுக்கப்பட்ட அந்த நபர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆவார்.

***

15 முதல் 17 வரையிலான கேள்விகளில் நமக்கு பதிலாளியாக செயல்படும் நபரின் தகுதிகள் என்ன என்பதை நாம் பார்த்த நிலையில், கேள்வி 18-ல் அந்த மீட்பர் யார் என்பதை நாம் அறிகிறோம். 2000 வருடங்களுக்கு முன்பு கன்னி மாரியாளிடத்தில் பிறந்த நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே அந்த மத்தியஸ்த இரட்சகர்.

இந்த கேள்வியில் மூன்று கருப்பொருள்கள் வலியுறுத்தப்பட்டுள்ளதை நாம் அறிய முடியும்.

1. கிறிஸ்து நமக்கு இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளார். இந்த சொற்றொடர் தேவன் தம்முடைய குமாரனை தமது இலவசமான கிருபையிலிருந்து நமக்காக அனுப்பினார் என்ற உண்மையை விளக்குகிறது. பாவிகளான நமக்கு தம்முடைய அன்பு குமாரனை கட்டாயம் அனுப்ப வேண்டிய அவசியமே அவருக்கு இல்லை, இருப்பினும் தமது அன்பு மற்றும் கருணையினிமித்தம் அனுப்பினார். நமக்கு நன்கு அறிமுகமான யோவான் 3:16, கர்த்தர் ஏன் தமது குமாரனை நமக்காக அனுப்பினார் என்பதை கூறுகிறது: “தேவன்... அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” ரோமர் 5:8 சொல்லுகிறது, “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மீது வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார்.” பிதா தமது குமாரனை தாராளமாக அனுப்பியதோடு, குமாரனும் நமது இரட்சகராக தாரளமாக மனமுவந்து வந்தார். எபேசியர் 5:2 கூறுகிறது, “கிறிஸ்து நம்மை நேசித்தார் அதனால் தம்மை நமக்காக ஒப்புக்கொடுத்தார்” (கலாத்தி 2:20, 1யோவா 3:16 -ஐயும் பார்க்கவும்)

பாவியான மனிதன் கிறிஸ்துவை விரும்பவில்லை, அவரை கேட்கவில்லை, அவரைப் பெற தகுதியுடைவன் அல்ல, மேலும் அவரை ஏற்றுக் கொள்ளவும் இல்லை என்பதை நாம் அறிய வேண்டும். ஆம், “அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.” (ஏசா 53:3)

2. கிறிஸ்துவில் நாம் முழுமையான மீட்பையும், நீதியையும் உடையவர்களாருயிக்கிறோம். (இந்த கருத்தை கேள்வி 30-வுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். கிறிஸ்து முழுமையும், எல்லாம் நிறைந்த இரட்சகர் ஆவார். அவருடைய மீட்பின் செயலோடு எதையும் சேர்க்க முடியாது. தேவன் தெரிந்து கொண்ட ஒவ்வொருவரின் சார்பாக தேவ நீதியை முழுவதும் நிறைவேற்றினார். நம்முடைய இரட்சகரின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் நாம் தேவனோடு ஒப்புரவாகி நித்திய ஜீவனைப் பெறுவதற்குத் தேவையான யாவையும் சம்பாதித்தார். மனந்திரும்புதலும், விசுவாசமும் கூட மகிமைக்குள் சென்ற நமது ஆண்டவர் அருளிய கிருபை வரங்களாகும் (அப்போ 5:31; எபேசி 2:8).

3. மத்தியஸ்தர் ஒரே நபர் ஆவார்: (கேள்வியில் உள்ள சொற்றொடரை கவனிக்கவும்). உண்மையான சத்தியங்களை காலகாலமாக கடைப்பிடிக்கும் (Orthodox) கிறிஸ்தவ திருச்சபையானது, இயேசு என்ற நபரில் இரு இயற்பண்புகள் இருந்ததையும், அவர் ஒரே ஆள்த்தத்துவமுள்ள நபராக -- கடவுளேயன்றி, மனிதன் அல்ல என்பதை விசுவாசிக்கிறது. இங்கே மீண்டும் ஒரு இரகசியத்தை நாம் பாக்கிறோம்; நாம் மீண்டும் வலியுறுத்துவது என்னவெனில், கிறிஸ்து இருநபர்கள் அல்ல மாறாக ஒருவரே. இயேசுவும் தன்னைக் குறித்து பேசும்போதெல்லாம், நாம் என்று சொல்லாமல் நான் என்று மட்டுமே கூறினார்.

சற்று முந்தைய கேள்வியில் பார்த்துபோல், துர்உபதேசி (கள்ளப் போதகனாகிய) நெஸ்ட்டோரியஸ் இயேசு இரண்டு நபர் என்று போதித்தார், இதைக் குறித்து திருச்சபையும் மாபெரும் கருத்து ஆராய்ச்சியை மேற்கொண்டது. முடிவில், நெஸ்ட்டோரியஸின் போதனை வேதத்திற்கு புறம்பானது என்பதை உறுதி செய்தது. பின்னர் கி.பி. 451-ல் கிறிஸ்துவைக் குறித்து திருசவனம் கூறும் சத்தியத்தை விளக்க (Creed of Chalcedon,) சால்சிடன் விசுவாச அறிக்கையை திருச்சபை எழுதியது. இந்த மகத்தான விசுவாச அறிக்கையை கண்டுபிடித்து கிறிஸ்துவின் இரு இயற்பண்புகளுக்கிடையேயான தொடர்பைக் குறித்த கருத்தை காண முடியுமா?

**18-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 18-ல் ............................................................ என்பதை நாம் அறிகிறோம்.
2. இந்தக் கேள்வியில் உள்ள மூன்று முக்கியமான கருத்துக்கள் யாவை?
   அ ........................................................................................................................................
   ஆ ........................................................................................................................................
   இ ........................................................................................................................................
3. பிதா தம்முடைய மகனை இலவசமாக நமக்காக தந்தார் என்று கூறும் சில வசனங்களைக் குறிப்பிடுக: ....................................................................... குமாரனும் தன்னை இலவசமாக தாராளமாக கொடுத்ததை கூறும் சில வசனங்களைகுறிப்பிடுக: ..........................................................................
4. பாவிகளான மனிதர்கள் இயேசுவை அதிகம் விரும்பியதால் இந்த உலகத்திற்கு அவர் வந்தார். சரியா, தவாறா? ...........................

5. பழைய ஏற்பாட்டில், நன்கு அறிமுகமான எந்த வசனம் மனிதன் இரட்சகரைப் பற்றி துச்சமாக எண்ணுகிறான் என்கிறது? ........................................
6. நம்முடைய மத்தியஸ்தர் நமக்காக இரட்சிப்பை சம்பாதித்துள்ளதால், நாம் செய்ய வேண்டியது நமது மனம்திரும்புதல் மற்றும் விசுவாசம் என்பவைகளை அவற்றோடு சேர்க்க வேண்டும். சரியா, தவறா?.......
7. இரட்சகர் மனிதனாகவும், கடவுளாகவும் இருப்பதால் அவர் இருவர் ஆவார்.சரியா, தவறா? .......................
8. நம்முடைய மீட்பர் உண்மையான தேவனாக இருப்பதால் அவருக்கு மனித ஆத்துமா இல்லை. சரியா, தவறா? .............................
9. கி.பி. ..................................-ல் கிறிஸ்துவைக் குறித்து திருசவனம் கூறும் சத்தியத்தை விளக்க ..................................................................................... திருச்சபை எழுதியது. இந்த விசுவாச அறிக்கை இயேசு கிறிஸ்து ................................இரண்டு நபர்கள் என்று போதித்த .......................................-ன் போதனைகளை கண்டித்தது.
10. 1கொரிந் 1:30-ஐ எழுதவும்

## 19. நீங்கள் எதிலிருந்து இதை அறிகிறீர்கள்?

பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து; அதாவது தேவனே முதலில் (paradise) ஏதேன் தோட்டத்திலே வெளிப்படுத்த, பின்னர் பரிசுத்த கோத்திரப் பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகளால் அறிவிக்கப்பட்டு, அதைத்தொடர்ந்து பலிகள் மற்றும் நியாயப்பிரமாண சடங்குகளினாலே முன் நிழல்களாக காண்பிக்கப்பட்டு; முடிவில் தம்முடைய அன்பான குமாரனால் நிறைவேற்றப்பட்டதிலிருந்தாகும்.

***

இந்த மீட்பர் எங்கே வெளிப்படுத்தப் பட்டுள்ளார், அதாவது எப்படி அவர் தன்னை நமக்கு வெளிப்படுத்தினார் என்பதாகும். அவர் நமக்கு கற்பிக்கப்பட்டுள்ள ஒரே இடம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே. திருவசனங்கள்,"சுவிசேஷத்தை", இரட்சிப்பைக் குறித்த நற்செய்தியை போதிக்கிறது.

மனுக்குலத்திற்கு தேவன் தம்மைக் குறித்து போதிக்க விருப்பம் கொள்வது வெளிப்பாடாகும். அவர் தன்னை குறித்து வெளிப்படுத்துவதின்படியே நாம் அவரை அறியமுடியும். மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்த வெளிப்பாடுகள் இருவகைகளாகும். அவைகளாவன:

1. *பொதுவான வெளிப்பாடு* (General Revelation): இது தேவன் தான் படைத்த இயற்கையின் மூலம் தம்மை வெளிப்படுத்தியுள்ளதைக் குறிக்கும். இந்த படைப்பு முழுமையும், தேவனுடைய "கரங்களின் கிரியையாகும்." (சங்கீ 19:1). இது தேவனுடைய மகிமை, ஞானம் மற்றும் வல்லமைகளின் ஒரு பகுதியை நமக்கு காண்பிக்கிறது. நாம் "இயற்கை" என்று அழைக்கும் -- வானம், நட்சத்திரம், பூமி, சமுத்திரம், மரம், செடி கொடி, மிருகம், முக்கியமாக மனிதன் ஆகிய யாவும் சிருஷ்டிகரின் மகத்துவத்தை பிரதிபலிக்கிறது. எங்கும் உள்ள எல்லா மனிதர்களும் இயற்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய மகிமையை சந்திப்பதால் அனைவரும் அவரை ஆராதித்து மகிமைப்படுத்த வேண்டும் என்பது தவிர்க்க இயலாத கடமையாகும் (ரோமர் 1:19,20). நாம் இந்த உலகத்தை (அறிவியல் போன்ற) கவனிக்கும்போது, நாம் அதில் தேவனுடைய பொதுவான வெளிப்பாட்டை காண்கிறோம். உங்களுடைய அறிவியல் ஆசிரியர் இதை கூறியது உண்டா?

2. *விசேஷமான அல்லது தனிப்பட்ட வெளிப்பாடு* (Special Revelation): இயற்கை தேவனை வெளிப்படுத்தினாலும், அவற்றை மட்டும் ஒருவர் கற்பதினால் மீட்கப்பட முடியாது. நம்முடைய மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இந்த படைப்பு போதிப்பதில்லை. இரட்சிப்பின் செய்தியானது வேதத்தில் மட்டுமே உள்ளது, இதை நாம் விசேஷமான அல்லது தனிப்பட்ட வெளிப்பாடு என்கிறோம். தேவன், கிறிஸ்து, இரட்சிப்பு, பொதுவான வெளிப்பாடு ஆகியவைகளைப் பற்றி நாம் அறிய வேதாகமம் மட்டுமே மாற்றவியலாத (அல்லது) முடிவான ஆதாரப் புத்தகம் ஆகும். பரிசுத்த வேதாகமம், இது தேவனுடைய விசேஷித்த வெளிப்பாடாகும், அது ஒன்று மட்டுமே நமது விசுவாசம் மற்றும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகும்.

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை, முழு வேதாகமமும் கிறிஸ்துவைப் பற்றி நமக்கு கூறுகிறது. இந்தக் கேள்வி 19, பழைய ஏற்பாடும் கிறிஸ்துவைக் குறித்து போதிக்கிறது என்பதை நமக்கு அழுத்தமாகக் கூறுகிறது. ஏதேன் தோட்டத்திலேயே கர்த்தர் இந்த இரட்சகரை வாக்குப் பண்ணினார். ஆதியாகமம் 3:16-ல், இந்த இரட்சகர், "ஸ்திரியின் வித்து", என்று அழைக்கப்பட்டார், இதைத் தொடர்ந்து முழு வேதாகமத்திலும் ஸ்திரியின் வித்தாகிய அவரைக் குறித்த இந்த வெளிப்பாட்டின் நிறைவேறுதலின் முழுமையையும் நாம் காண்கிறோம். ஆதியாகமம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோத்திரப் பிதாக்கள் (முற்பிதாக்கள்) தேவனுடைய மாபெரும் மனிதர்கள் ஆவார்கள். வரப்போகிற இரட்சகரைக் குறித்து தேவன் இவர்களுக்கு கூறும்போது, அவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யூதாவின் வித்தாக வெளிப்படுவார் என்றார்.

பழைய ஏற்பாட்டின், "தீர்க்கதரிசிகள்", என்ற மனிதர்கள் தேவனால் ஏவப்பட்டு வரப்போகிற கிறிஸ்துவைக் குறித்த மற்ற குறிப்புகளை பேசினார்கள். யோவான் ஸ்நானகன் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் என்ற வரிசையில் கடைசியாக கருதப்பட்டாலும், மல்கியா பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் கடைசியாக திருவசனங்களை எழுதினார்.

மேலும், கர்த்தர் பழைய ஏற்பாட்டில் மோசேயின் மூலமாக கற்றுக்கொடுத்த பலி மற்றும் சடங்குகளினாலான ஆராதனையின் மூலம் வரப்போகிற கிறிஸ்துவின் வேலையைக் குறித்து போதித்தார். ஜனங்களுடைய பாவங்களுக்காக வெள்ளாடும், செம்மறியாடும் பலிகொடுக்கப்பட்டாலும், தன்னைத்தானே பலியாகக் கொடுக்கும் மீட்பரை தேவன் கொடுப்பார் என்று ஜனங்கள் போதிக்கப் பட்டார்கள். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் இராஜாக்கள் யாவரும் வரப்போகிற தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் அடையாளங்கள் அல்லது திருஷ்டாந்தங்கள் ஆவர்.

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைக் குறித்த போதனைகள் ஆரம்பத்தில் மிகவும் எளிமையானதாகவும், சொற்பமானதாகவும் இருந்து, பின்னர் அதிகமதிகமான தகவல்கள் கொடுக்கப் பட்டு, முடிவில் பழைய ஏற்பாட்டு கால முடிவில் அவரைக் குறித்த மாபெரும் வெளிப்பாட்டுப் புத்தகம் உருவானது.

இயேசு கிறிஸ்து, அவருடைய பிறப்பின்போது, பழைய ஏற்பாட்டில் அவரைக் குறித்த பல விசேஷித்த வெளிப்பாடுகளின் நோக்கம் மற்றும் நிறைவேறுதலாகவும் அமைந்தது. காலம் நிறைவேறின போது, எல்லாம் ஆயத்தமாக்கப்பட்ட போது, தேவன் அவரை முன் கொண்டு வந்தார் (கலா 4:4).

இந்த பாடம் சற்று நீண்ட பாடமாக இருப்பினும், வேதத்தின் வெளிப்பாடு அல்லது வேதாகமம் வெளிப்படுத்தப் பட்ட விதத்தை சற்று விளக்காத நிலையில் இந்த பாடம் நிறைவை அடையாது. (நம்முடைய கேட்டகிசம் இந்தப் பாடத்தைக் குறித்து தனி கேள்வியின் மூலம் நமக்குக் கற்றுத்தரும்)

வேதாகமம், உண்மையாகவே கர்த்தருடைய வார்த்தை என்பதை நாம் எப்படி அறிவோம் -- அதாவது (Special Revelation) விசேஷித்த வெளிப்பாடு? அதாவது:

1. வேதாகமமே தன்னை கர்த்தருடைய வார்த்தைகள் என்று உரிமை பாராட்டுகிறது. முழு பழைய ஏற்பாட்டில், “கர்த்தர் சொல்லுகிறார்”, என்று அடிக்கடி வரும் சொற்றொடர்கள் மற்றும் லூக்கா 1:68-70, 2தீமோ 3:16, மற்றும் 2பேதுரு 1:21 போன்ற வசனங்கள் பழைய ஏற்பாட்டின் வசனங்கள் கர்த்தருடைய வார்த்தை என்பதை விளக்குகிறது.

2. கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் வசனங்களை எப்போதும் கர்த்தருடைய வார்த்தை என்று கூறினார். (மத் 4:4; யோவா 10:35)

3. கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுக்கு புதிய ஏற்பாட்டின் வசனங்களை எழுதுவதற்காக இயற்கை ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தெய்வீகமான பெலனை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பின்பு கொடுக்கப் போவதாக வாக்கு செய்தார் (யோவா 14:26; 15:26,27).

4. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் கர்த்தருடைய வார்த்தைகளை எழுதுவதாக உறுதியாகக் கூறினார்கள் (1 கொரி 2:13; 1தெசலோ 4:8)

இப்படியாக. கிறிஸ்துவினுடைய அதிகாரமும், வேதத்தின் அதிகாரமும் ஒன்று சேர்ந்து செல்கிறது. வேதத்தை புறக்கணிப்பது என்பது கிறிஸ்துவையே புறக்கணித்தலாகும். ஆகவே, திருவசனம் அல்லது பரிசுத்த வேதாகமம் (infallible) தவறேதும் இல்லாததும் (முற்றிலும் நம்பத்தகுந்ததும்), பிழைகள் அற்றது என்று அறிக்கை செய்கிறோம்.

உண்மையிலேயே, பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வேதாகமம் தன்னைக் குறித்து கூறும் காரியங்களை விசுவாசிக்கத் தேவையான ஆவிக்குரிய மனநிலையைக் கொடுக்காத நிலையில் பரிசுத்த வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை என்று எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை நாம் அறிய வேண்டும். (1 கொரி 2:14)

கடைசியாக, வேதாகமம் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட பூரணமான வார்த்தைகள் என்று நாம் கூறும்போது அவைகள் எபிரேய, கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டவைகளைக் குறிக்கிறது. நம்முடைய பலதரப்பட்ட மொழிபெயர்ப்புகள் யாவும் பூரணமானவைகளாக இல்லாதிருந்தும், அவைகள் உச்சநிலையில் பிழையின்றி நம்பத்தகுந்தவைகளாகும்.

**19-க்கான கேள்விகள்:**

1. “வெளிப்பாடு” என்ற வார்த்தை தேவனைக் குறித்து கூறப்படும்போது அதின் அர்த்தம் என்ன? ..............................................................................................................................................
2. தேவனைக் குறித்த இருவித வெளிப்பாடுகள் யாவை,?
   அ ..............................................................................................................................................
   ஆ ..............................................................................................................................................
3. கிறிஸ்து மற்றும் இரட்சிப்பைக் குறித்து தகவல்களை தரக்கூடிய ஒரே (source) பெட்டகநூல் ..............................................................................................................................................
4. வேதாகமத்தை நாம் பெறாத நிலையில், மற்ற மதங்களைப் பற்றி நாம் அறிவதால் நாம் எப்படி மீட்கப்படமுடியும் என்பதை அறிய முடியும். சரியா, தவறா? ........................
5. “சுவிசேஷம்”, என்ற வார்த்தையின் அர்த்தம்: ........................................................
6. கிறிஸ்துவின் சுவிசேஷம் பழைய ஏற்பாட்டில்... அ) முற்றிலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது, ஆ) முற்றிலும் வெளிப்படுத்தப்படவில்லை,இ) அதைக் குறித்து எதுவுமேயில்லை. எது சரி? ................
7. ஆதாம், ஏவாள் தாங்கள் மீட்கப்படுவதற்குத் தேவையான சுவிசேஷத்தை அறிந்தவர்களாக இருந்தும், பழைய ஏற்பாடு கிறிஸ்துவின் வேலையைக் குறித்த வெளிப்பாட்டின் வளர்ச்சியை விளக்குகிறது. சரியா, தவறா? ........................

8. பின்வருபனவற்றைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| இரட்சகரின் முதல் வாக்குத்தத்தம் | - | தேவனுடைய வார்த்தைகளைப் பேசினார் |
| கோத்திரப் பிதாக்கள் | - | எபிரேயர் 9:12 |
| தீர்க்கதரிசிகள் | - | யோவான் ஸ்நானகன் |
| சடங்குகள | - | ஆதியாகமம் 3:15 |
| பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் | - | "கிறிஸ்துவுக்கு" முன் அடையாளங்கள் |
| | - | "முற்பிதாக்கள்" |

9. வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை என்று நீங்கள் விசுவாசிப்பதற்கான சில காரணங்களை தருக.
அ).
ஆ)
இ.)
ஈ.)

10. யோவான் 5:46,47-ஐ எழுதவும்:

**20. ஆதாமுக்குள் மரித்த நிலையில் இருக்கும் அனைத்து மனிதர்களுமே கிறிஸ்துவால் மீட்கப்படுகிறார்களா?**

இல்லை; எவர்கள் விசுவாசத்தினால் தேவனோடு ஒட்டவைக்கப்பட்டு, அவருடைய சகல ஈவுகளையும் பெறுகிறார்களோ அவர்கள் மட்டுமே.

***

நமது கேட்டகிசத்தின் அடுத்து வருகின்ற மூன்று (20,21,22) கேள்விகளும், நம்முடைய இரட்சிப்பில் விசுவாசத்திற்கான பங்கு என்ன என்பதை விளக்குகிறது. 12 முதல் 19 வரையிலான கேள்விகளில் பாவத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும் விடுதலை, அதாவது தேவ நீதியின் படி நம்முடைய பாவத்திற்காக வரும் சாபம் மற்றும் தண்டனையை ஏற்று, நம்முடைய இடத்தில் நமக்கு பதிலாளியாக செயல்படுபவரைக் குறித்து பார்த்தோம். அதோடு மேலும், பரிபூரணமான கடவுள் மற்றும் பூரணமான மனிதனாகிய இயேசு கிறிஸ்துவே அந்த பதிலாளி என்பதையும் பார்த்தோம்.

இப்போது நாம் கேட்க வேண்டிய கேள்விகள்: கிறிஸ்துவின் மரணத்தினால் அனைவரும் மீட்கப்படுவார்களா? இயேசு இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்காகவும், இந்த மானிட வரலாற்றில் வாழ்ந்த ஒவ்வொருவருக்காகவும் பதிலாளியாக செயல்பட்டாரா? ஆதாமுக்குள் மரித்த நிலையில் இருக்கும் அனைத்து மனிதர்களுமே கிறிஸ்துவால் மீட்கப்படுவார்களா?

இல்லை என்பதே அழுத்தமும் உறுதியுமான பதில் ஆகும்! உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் இரட்சிக்கபடுவான் என்ற உலகளாவிய மீட்பு (universal salvation) போதனையை வேதாகமம் போதிக்கவில்லை. மக்கள் பலரின் ஆதரவைப் பெற்ற "யூனிவர்சலிசம் (Universalism)," -மனித இனம் முழுமைக்கும் மீட்பு கிடைக்கும், என்னும் கோட்பாட்டின்படி ஆதாமுக்குள் சீர்கெட்டுப்போன அனைவரும் கிறிஸ்துவுக்குள் மீட்கப்படுகின்றார்கள் என்பதாகும். (மாடர்னிசம் --தற்கால முறைமைக்கு ஏற்றவாறு செயல்படும் போக்கு மற்றும் யூனிவர்சலிசம் ஆகிய இரண்டைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்)

சத்தியம் என்னவெனில், ஆதாமுக்குள் தரித்திருக்கும் எல்லா மனிதர்களும் மரிப்பார்கள், ஆதாமிலிருந்து கிறிஸ்துவுக்குள் வரும் அனைவரும் நித்தியமாக வாழ்வார்கள் (1 கொரிந் 15:22- ஐப் பார்க்கவும்).

இந்தக் கேள்வி விசுவாசத்தின் அவசியத்தைப் போதிக்கிறது. கிறிஸ்துவுக்கும் நமது ஆத்துமாவுக்கும் இடையே "தொடர்பு உண்டாக்கும் இணைப்பு"(connecting link) ஜீவனுள்ள விசுவாசம் ஆகும். இதைத்தவிர்த்து கிறிஸ்துவினுடைய ஒப்புரவாகுதலினால் வரும் மீட்பின் ஈவுகளில் நாம் பங்குபெற முடியாது. விசுவாசம் என்பது ஆவிக்குரிய கரம் அது இயேசு கிறிஸ்துவிடம் நீட்டப்பட்டு பிடித்து அவரைப் பற்றிக்கொள்கிறது.

இந்தக் கேள்வியிலுள்ள மற்ற முக்கியமான கருத்துக்கள் என்னவெனில்:

1. விசுவாசம் என்பது கிறிஸ்துவினுடைய நல் ஈவுகளை பெறுவதற்கு தேவனால் ஏற்படுத்தப் பட்ட அடிப்படை உபகரணம் ஆகும். இது மனிதன் தனுக்குள் பெற்றிருக்கும் வலிமையினால் உண்டான ஒன்று அல்ல. இது பரிசுத்த ஆவியினுடைய வரம் ஆகும் (எபேசி 2:8)

2. மனிதன் தனுக்குத்தானே கிறிஸ்துவோடு ஒட்டிக்கொள்ள முடியாது, மாறாக தேவனால் ஒட்ட வைக்கப்படுகிறான். உதாரணமாக, ஒரு விவசாயினால்தான் ஒரு செடியை மற்றொடு மரத்தோடு ஒட்ட வைக்க இயலுமேயன்றி, அது தனுக்குத்தானே ஒட்டிக் கொள்ள முடியாது என்பதை கவனிக்கவும். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்மையான விசுவாசத்தைக் கொடுப்பதினால் நம்மை கிறிஸ்வோடு இணையும்படி செய்கிறார்.

3. கிறிஸ்துவோடு இணைக்கப்படுதல் என்பது, பரிசுத்த ஆவியானவரால் நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு, அதனால் கிறிஸ்துவிடமிருந்து வரும் கிருபையையும், ஜீவனையும் தொடர்ந்து பெறுதலைக் குறிக்கும். கிறிஸ்துவின் செயலால் வரும் ஆசீர்வாதங்களை நாம் இந்த ஜீவனுள்ள விசுவாசத்தின் மூலம் பெறுகிறோம். உயிர்த்தெழுந்த கிறிஸ்து தமது ஜீவன் மற்றும் கிருபையை ஒவ்வொரு கணப்பொழுதும் நமக்குத் தர பயன்படுத்தும் விசுவாசம் என்னும் வாய்க்காலை "கரம் மற்றும் பைப்" போல ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

கிறிஸ்துவாகிய திராட்சை செடிக்கு அப்பாற்பட்ட நிலையில் கொடிக்கு ஜீவன் கிடையாது (யோவா 15:1-8), அதுபோல பரிசுத்த ஆவியானவர் நமக்கு உண்மையான விசுவாசத்தைக் கொடுக்காத நிலையில் நாமும் மரித்த கொடிகளாக, ஆதாமுக்குள் மரணத்தோடு இணைந்தவர்களாக இருப்போம். நம்முடைய திருச்சபை அங்கத்தினர் என்ற நிலை அல்ல மாறாக விசுவாசமே நம்மை ஆதாமின் மரண மரத்திலிருந்து வேறுபிரித்து கிறிஸ்துவின் ஜீவனுள்ள மரத்தில் இணைக்கிறது.

**20-க்கான கேள்விகள்:**

1. கேள்விகள் 20,21,22 ஆகிவைகள் சொல்வது ..........................................................................................
   ..........................................................................................................................................
2. இயேசு கிறிஸ்து அ) எல்லா மனிதர்கள், ஆ) சில மனிதர்கள், இ) பழைய ஏற்பாட்டு கால சில மனிதர்கள், ஈ) புதிய ஏற்பாட்டு கால சில மனிதர்கள், இவர்களில் எவர்களுக்காக பதிலாளியாக செயல்பட்டார்?.............
3. மானிட வர்க்கம் அனைத்துமே மீட்கப்படும் என்று நமது கேட்டகிசம் போதிக்கிறது. சரியா, தவறா? .............................
4. உயிர்த்தெழுந்த கிறிஸ்து ................................................................................. ஒவ்வொரு .................................... நமக்குத் தர பயன்படுத்தும்................................................ "கரம் ...................................." போல ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.
5. "ஒட்டவைக்கப்படுதல்", என்னும் வார்த்தை மரம் செடிகளைப் பொறுத்து கூறும் செயல்பாடு என்ன?..........................................................................................................................................
6. யோவான் 15:8-ல் கிறிஸ்துவும் அவருடைய பிள்ளைகளும் திராட்சை செடி மற்றும் கொடிகளுக்கு ஒப்பாக கூறப்பட்டுள்ளனர்.
   அ). திராட்சை தோட்டக்காரர் யார்? ...............................................
   ஆ). கொடிகள் செடியுடன் இணைக்கப்படுவது எதனால்? ..........................................................................
   ..........................................................................................................................................
   இ). அதிக கனிகளைக் கொடுப்பதற்காக கொடிகள் செய்ய வேண்டியது என்ன? (வசனம் 2) ..........................................................................................................................................
   ஈ) திராட்சை செடியில் நிலைத்திருப்பதற்கு கொடிகள் என்ன செய்ய வேண்டும்? (வசனம் 7) ..........................................................................................
   உ) அறுத்து தீக்கிரையாக்கப்படும் கொடிகள் உண்மையிலேயே திராட்சை செடியில் ஒட்டவைக்கப் படாதவைகள்? சரியா, தவறா? .......................
7. கிறிஸ்துவோடு நாம் எதினால் ஒட்டவைக்கப் படுகிறோம்? அ) உண்மையான விசுவாஷத்தினால் மட்டுமே, ஆ) விசுவாசமும், நற்கிரியைகளினாலும், இ) விசுவாசம், நற்கிரியை, சபை அங்கத்தினர் நிலை.... எதினால்? ............
8. விசுவாத்தினால் மட்டுமே ஒருவன் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட முடியும். இந்த விசுவாசம் மனிதனின் சுய பெலத்தால் அனைவருக்கும் சாத்தியமே. சரியா, தவறா? .......................
9. கேள்வி 8-ஐப் பொறுத்த வரை, தேவனுடைய ஆவியினால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். பின்வரும் ஆசீர்வாதங்களின் சரியான வரிசைப்பாடு என்ன? விசுவாசம், புதிய பிறப்பு, கிறிஸ்துவின் ஈவுகள், கிறிஸ்துவோடு இணைக்கப்படுதல்.
   அ) ஆ)
   இ) ஈ)
10. எபேசியர் 2:8-ஐ எழுதவும்

**21. உண்மையான விசுவாசம் என்றால் என்ன?**

உண்மையான விசுவாசம் என்பது, தேவன் தம்முடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தியுள்ள சத்தியங்களை குறித்து நான் கொண்டுள்ள உறுதிப்பாடான அறிவாக மட்டுமல்லாது; கிறிஸ்துவினுடைய தகுதியினிமித்தம், தேவன் தமது கிருபையினாலே, இலவசமாக, சுவிசேஷத்தினாலே பரிசுத்த ஆவியானவரின் கிரியையால், மற்றவர்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் கொடுத்த பாவ மன்னிப்பு, நித்திய நீதி மற்றும் இரட்சிப்பைக் குறித்த இதயப்பூர்வமான நம்பிக்கையாகும்.

***

கேள்வி 20-ல் விசுவாசத்தின் அவசியத்தைக் குறித்து பார்த்தோம். இப்போது உண்மையான விசுவாசத்தின் தன்மை என்ன என்பது நமக்குப் போதிக்கப்படுகிறது. விசுவாசத்தைக் குறித்து பல தவறான கருத்துக்கள் இன்று இருப்பதால், இதைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை அறிய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அநேகர், கிறிஸ்தவ விசுவாசிகளாக இல்லாதிருக்கும்போதே தங்களை விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இந்தக் காரியத்தில் சாத்தான் நம்மை ஏமாற்ற இடம் தரக்கூடாது.

சீர்திருத்த வேத பண்டிதர்கள் (வேதாகம ஆராய்ச்சியாளர்கள்) திருவசனத்தால் எச்சரிக்கப்படும் மூன்று வகையான போலியான அல்லது ஏமாற்றுத்தன்மை கொண்ட விசுவாசங்களை கண்டுபிடித்துள்ளனர். உண்மையான விசுவாசத்தைக் குறித்து 21-ஆம் கேள்வி கூறுவதை தெளிவாகப் படிப்பதற்கு முன், அந்த மூன்று வகையான பொய்யான விசுவாசத்தைக் குறித்து சற்று அறிந்து கொள்வது நாம் ஏமாற்றப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க உதவும்.

1. *வரலாறு சார்ந்த விசுவாசம்* (Historical Faith): இந்த வகை விசுவாசத்தை உடையவன், வேதம் கூறும் செய்திகளை வெறுமனே நம்புகிறான். இயேசு வாழ்ந்தார், அவர் அற்புதங்கள் பல செய்தார்,... என்பதை விசுவாசிப்பதாகக் கூறுகிறான். ஆனால், அவன் தனிப்பட்ட நிலையில் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும், அவரிடம் ஜெபிக்கவும், அவருக்காக வாழவும் அவருடைய கிருபையை நாடாதவனாக இருக்கிறான். பிசாசும், அவனுடைய தூதர்களுக்கும் இந்த வகையான விசுவாசமே இருக்கிறது. மாற்கு 5:6-10; யாக்கோபு 2:19 ஆகியவற்றை பார்க்கவும். பலர் வேதத்தின் உண்மைகளை அறிந்தும் இரட்சிக்கபடாதவர்களாக இருப்பார்கள்.

2. *தற்காலிகமான விசுவாசம்* (Temporary Faith): இந்த வகையான விசுவாசத்தை உடையவர்கள், மத்தேயு 13:4-23-ல் நான்கு வகை நிலங்களைக் குறித்த உவமையில் இயேசு விளக்கியது போல, ஆரம்பத்தில் உண்மையான விசுவாசிகளைப் போன்று இருப்பார்கள், ஆனால் அது தற்காலிகமானதாக குறுகிய காலம் மட்டுமே நிலைத்திருக்கக் கூடியதாக இருக்கும். தற்காலிகமான விசுவாசத்தை உடையவன், கற்பாறையிலும், முட்புதரிலும் விழுந்த விதை முளைத்தாலும் நித்தியம் வரை கனிதராத வாழ்க்கையை உடையவனாக இருப்பான். இது போன்ற மனிதன் மனமாற்றம் பெற்று கிறிஸ்துவிடம் வந்ததாக எண்ணி மகிழ்ச்சியும், சந்தோசஷமும் உடையவன் போல இருந்தாலும் (மத்தேயு 13:20), பிரச்சனைகளும், பாடுகளும் நெறுக்கி, உலகப் பொருட்களின் மீதான ஆசை பெறுகும்போது அவன் தனது விசுவாசத்தை பின்னே எரிந்து போடுகிறான். அடுத்து அவனை தேவ ஜனங்களோடு பார்க்கவே முடியாது.

3. *வியக்கத்தக்க விசுவாசம்* (Miraculous Faith): இது இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்கள்வுகளில் கொண்ட மூடத்தனமான நம்பிக்கை வகையாகும். இந்த வகை விசுவாசத்தைச் சார்ந்தோர் அற்புதங்களில் நம்பிக்கை வைப்பவர்களாகவும், அதிசயமான காரியத்தை பார்த்ததாக அல்லது அனுபவித்ததாக அடிக்கடி கூறுவர். அவர்கள் நவீன கால அற்புதங்களான சுகம் பெறுதல், அந்நியபாஷை பேசுதல்,... போன்றவைகளை முக்கியப்படுத்தும் “கிறிஸ்தவ மார்க்கத்தை” மட்டுமே விரும்புவர் (மத்தே 7:22,23; அப்போ 8:18-20; 1கொரி 13:2). பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கும் கிறிஸ்துவைப் பார்க்கிலும், அற்புதங்கள் நடத்தும் ஒருவரையே அதிகம் நாடுவார்கள்.

இந்த மூன்று விசுவாச நிலைகளிலும் உள்ள ஒரு விசுவாசி உண்மையாக கர்த்தருடைய வார்த்தையை நேசித்து அதன் முழுமையையும் தனது ஜீவியத்தில் ஈடுபடுத்துவது கிடையாது.

உண்மையான விசுவாசம் என்றால் என்ன என்பதைக் குறித்து வேதம் சொல்வதை நாம் இப்போது காண்போம். தேவனுடைய ஆவியானவர் அன்பளிப்பாகத் தரும் உண்மையான விசுவாசத்தில் இரு முக்கிய காரியங்கள் உண்டு...

1. *உறுதிப்பாடான அறிவு* (A Certain Knowledge): கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து, முக்கியமாக பாவம், இரட்சகர் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் ஆகியவற்றைக் குறித்த சத்தியங்களில் தெளிவான அறிவு அவசியம். சுவிசேஷத்தின் முக்கிய சாரம்சாரத்தை போதுமான அளவு அறியாத ஒருவருக்கு இரட்சிப்பு கிடைக்க வாய்ப்பு இல்லை. நம்முடைய அறிவானது உறுதியும், திடனுமாக இருக்க வேண்டும் (எபிரே 11:6).

இதனால், நம்முடைய திருச்சபைகளில் வேதாகம போதனையின் அவசியம் மற்றும் மற்ற ஜனங்களுக்கு திருவசனத்தைப் போதிக்க நம்முடைய சபைக்கு வெளியே செய்யப்பட வேண்டிய சுவிசேஷ ஊழியத்தின் அவசியத்தைக் குறித்தும் அறிகிறோம்.

2. *இதயப் பூர்வமான நம்பிக்கை* (A Hearty Trust): உறுதிப்பாடான அறிவுக்கு அடுத்த படியாக, கர்த்தருடைய வார்த்தை உண்மை என்று பரிசுத்த ஆவியானவராலே தெளிவைப் பெற்றபின்பு, அந்த சத்தியத்திற்கு நம்மை தனிப்பட்ட நிலையில் ஒப்புக் கொடுக்க வேண்டும். நாம் நம்முடைய இருதயத்திலிருந்து, தனிப்பட்ட நிலையில் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவர் நம்முடைய பாவங்களை மன்னித்து, தம்முடைய நீதியை நமக்குத் தரும்படி கேட்க வேண்டும். உண்மையான விசுவாசம் தனிப்பட்ட அர்பணிப்பை உள்ளடக்கியதேயாகும். பரிசுத்த ஆவியானவர் இந்த இதயப்பூர்வமான நம்பிக்கையை “எனக்குள்” செயல்படுத்துகிறார்.

இந்த உண்மையான விசுவாசத்திற்கு வேதத்தில் உள்ள ஒரு பெரிய எடுத்துக்காட்டு ஆபிரகாம். ரோமர் 4:2-22 ஆபிரகாமைக் குறித்து சொல்வது... 1) “தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படவில்லை”. தேவனுடைய வாக்குத்தத்தின் மீது உறுதியான அறிவை உடையவனாக இருந்தான்., 2) “தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பினான்,” -- ஈசாக்கை பலிபீடத்தில் கிடத்தி பலியிடத் துணிந்தபோதும், தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று இதயப்பூர்வமாக நம்பினான்.

இந்த உண்மையான விசுவாசத்தினால் வரும் தனிப்பட்ட பலன்கள், இந்தக் கேள்வியில் வரிசைபடுத்தப்பட்டுள்ளது, அவைகள்: 1)பாவ மன்னிப்பு; 2) அழிவில்லா நீதி; 3) நித்திய இரட்சிப்பு.

இந்த நன்மைகளை நம்முடைய விசுவாசத்தினால் நாம் பெறுவதில்லை (கேள்வி 61ஐப் பார்க்கவும்), மாறாக...

அ) தேவனுடைய இலவசமான கிருபையினாலும், ஆ) கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினாலேயாம்.

இந்த உண்மையான விசுவாசம் மற்றும் நித்திய இரட்சிப்பை உடையவர்களாக இருக்கின்றீர்களா? அந்த உறுதியை நீங்கள் பெற்றவர்களானால், தேவனுக்கே நன்றி செலுத்துங்கள்!

**21-க்கான கேள்விகள்:**

1. தன்னைக் கிறிஸ்தவ விசுவாசி என்று கூறும் ஒருவரிடம் உண்மையான விசுவாசமும், கிறிஸ்துவின் இரட்சிப்பும் உண்டு. சரியா, தவறா?........................
2. உண்மையான விசுவாசம் என்று பலரால் நம்பப்படும் போலியான மூன்று விசுவாசங்கள் யாவை?
   அ).
   ஆ).
   இ).
3. நான் ஒரு கிறிஸ்தவன், எனக்கு எல்லாம் தெரியும், கேட்டகிசம் போன்ற எல்லாவற்றையுமே படித்திருக்கிறேன் என்று கூறும் ஒருவன், எந்த வகை விசுவாசத்தை உடையவன்? ................................................................................
4. நீ உண்மையுள்ளவனாக இருக்கும்வரை எந்த மத போதனைகளை நம்புகிறவனாக இருந்தாலும் பரவாயில்லை, என்று கூறும் பொதுவான கூற்றைக் குறித்து உங்கள் கருத்து என்ன? ......................................................................................................................................................
5. தேவன் தம்முடைய............................ அறிவே, திருவசனத்தைக் குறித்த உண்மையான அறிவு ஆகும்.
6. உண்மையான விசுவாசத்திற்கு திருவசனத்தைக் குறித்து சரியான அறிவு அவசியமாகையால், பின்வரும் செயல்பாடுகள் எதை நான் தெரிந்தெடுக்க வேண்டும்: அ) ஓய்வுநாள் பாடசாலைக்கு செல்வது, ஆ) வாராந்திர வேதபாட வகுப்புக்கு போவதற்கு பதிலாக தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்ப்பது, இ) கிறிஸ்தவ ஊழியத்தில் பங்குகொள்வது, ஈ) செய்தித்தாள்களை வாசிப்பது, உ) தினமும் திருவசனத்தை முறைப்படி வாசிப்பது. எது?...............
7. இதயப்பூர்வமான நம்பிக்கை என்பது...; அ) தனிப்பட்ட அர்ப்பணிப்பு, ஆ) குறிப்பிட்ட ஆர்வம், இ) கீழ்ப்படிதல் இல்லாத விசுவாசம், ஈ) தற்காலிகமான விசுவாசம், உ) சபையில் அங்கமாகுதல். இவற்றில் எது? ............
8. கிறிஸ்துவின் மீதான உண்மையான விசுவாசம்...; அ) அதிகமானோருக்கு இலகுவானது, ஆ) அதிகமானோருக்கு கடினமானது, இ) பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு அப்பாற்பட்ட நிலையில் ஒருபோதும் சாத்தியமல்ல. எது?............
9. உண்மையான விசுவாசம் எப்போதும் உறுதியானதாகவும், சந்தேகத்திற்கு இட மற்றதாகவும் இருக்கிறது. சரியா, தவறா? ...................., விளக்குக:........................................................................................................
10. யோவான் 20:31-ஐ எழுதவும்

**22. அப்படியானால் ஒரு கிறிஸ்தவன் விசுவாசிப்பதற்கு வேண்டியது என்ன?**

உலகளாவியதும், சந்தேகிக்க இயலாத நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் கோட்பாடுகள் நமக்கு சுருக்கமாகப் போதிக்கும் சுவிசேஷத்தில் நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அனைத்தும்.

நம்முடைய மீட்பில் விசுவாசத்தின் (place) பங்களிப்பு என்ன என்று ஆராயும் கடைசி கேள்வி உண்மையான கிறிஸ்தவ விசுவாசத்தின் உட்பொருள் என்ன என்பதை விளக்கியது. கேள்வி 21-ன், உறுதிப்பாடான அறிவு என்பது அப்போஸ்தல விசுவாச பிரமாணத்தில் உள்ளடங்கிய எல்லா சத்தியங்களையுமே, நாம் உலகளாவியதும், சந்தேகிக்க இயலாத கிறிஸ்தவ விசுவாசத்தின் கோட்பாடுகளாக கூறப்பட்டுள்ளது.

***

உண்மையான விசுவாசம் கர்த்தருடைய வார்த்தைளை மட்டும் ஆதாரமாகக் கொண்டது, முக்கியமாக படைப்பு, பாவம், மீட்பு மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவைகளைப் பற்றிய சத்தியங்களையும் உள்ளடக்கிய நிலையில் இருப்பதே நாம் அழைக்கும் சுவிசேஷமாகும். இவைகள் யாவும் விசுவாசப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நம்முடைய கேட்டகிசம் “அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம்” (Apostle Creed), என்ற பதத்தை பயன்படுத்தாமல் இருப்பது நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது. காரணம், திருச்சபை சீர்திருத்த காலக்கட்டத்தில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை, இந்தப் விசுவாசப் பிரமாணங்களை அப்போஸ்தலர்களே எழுதினார்கள் என்று கூறியதால்தான் இந்தப் பதம் பயன்படுத்தப்படவில்லை என்று அர்த்தமல்ல. உண்மை என்னவெனில், இந்த விசுவாசப் பிரமாணம் முதல் நூற்றாண்டுத் திருச்சபையில், ஆதிக்கிறிஸ்தவர்கள் சபையில் ஞானஸ்நானத்தின் போது அறிக்கை செய்யவதற்காக உருப்பெற்ற விசுவாச அறிக்கையாகும். ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது, ஞானஸ்நானம் கொடுக்கும் மதபோதகர், ஞானஸ்நானம் எடுக்கப்போகும் நபரிடம், “சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா” என்று கேட்பார். அதற்கு,

ஞானஸ்நானம் பெறும் நபர், "சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்" என்று பதில்கூறுவார். மேலும் அதில், தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும் கேள்விகள் அடங்கும். Creed (க்ரீட்), அதாவது சமயக் கொள்கை, என்ற வார்த்தை இலத்தீன் மொழியிலிருந்த (க்ரெடோ) Credo என்ற வார்த்தையின் வழியில் "நான் விசுவாசிக்கிறேன்" என்ற அர்த்தத்தைக் கொடுத்து, எப்படி மத்தேயு 28:19-ன் ஞானஸ்நான அடையாளச் சின்னமாக உருப்பெற்றது என்பதை நாம் காணமுடியும்.

இந்த விசுவாச அறிக்கைக் குறித்த நான்கு காரியங்களை நாம் கவனிக்க வேண்டும்:

1. இது "*உலகளாவியது* (It is Catholic)", மூல கேட்டகிசத்தில் இடம் பெற்றுள்ள இந்த "உலகளாவிய (Catholic)", என்ற பதம், 1950 யூரேகா க்ளாசிஸ் (யூரேகா குழுமத்தினர்)-ஆல் வெளியிடப்பட்ட கேட்டகிசத்தில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது வருந்தத்தக்கதே. ஆனால், இந்த விசுவாச அறிக்கை எல்லா காலத்திலும், அனைத்து திருச்சபைகளிலும் கர்த்தருடைய ஜனங்களுடைய விசுவாசமாக இருந்து, பயன்படுத்தப்படுவதினால் இது (Universal) உலகளாவியதேயாகும்.

2. "*இது சந்தேகத்திக்கப்பட இயலாதது* (It is Undoubted)," அதாவது தன்னை ஒருவன் விசுவாசமுள்ள கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொள்கிறவன், இந்த விசுவாசப் பிரமாணத்தில் அடங்கிய சத்தியங்களை கேள்வி கேட்கவோ அல்லது சந்தேகிக்கவோ முடியாது. இது கர்த்தருடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்ட தெளிவான உண்மையாகும்.

3. "*இது கிறிஸ்தவத்தைச் சார்ந்தது* (It is Christian)", இந்த விசுவாச அறிக்கை கிறிஸ்தவத்தின் அடிப்படை சத்தியங்களைப் போதிக்கிறது. முதலாவது கிறிஸ்தவம் என்பது ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட விசுவாசக் கோட்பாடாகும், இந்த வரைமுறைகளுக்குட்பட்ட சத்தியங்கள் இல்லாமல் உண்மையான கிறிஸ்தும் இருக்க முடியாது.

4. "*இது ஒரு விசுவாசம்* (Faith)", எல்லா மதங்களும் ஒரு நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு அல்லது வாழ்க்கையை நடத்தும் இருதயத்தின் அர்ப்பணிப்பாக உள்ளது. இன்னும் சொல்லப்போனால் வாழ்வைக்குறித்த அனைத்து காரியங்களும் இருதயத்தின் நம்பிக்கையை மையமாகக் கொண்டது. கிறிஸ்தவரல்லாதோரும் ஒரு அடிப்படை நம்பிக்கையை உடையவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் அது பொய்யான கடவுள்களில் வைக்கும் வழிமாறிய அல்லது தவறான நம்பிக்கையாகும். நம்முடைய விசுவாசமோ திருவசனம் கூறும் திரியேக தேவன் மீதாகும். நம்முடைய கிறிஸ்தவ விசுவாசமோ, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்"(யோவா 14:15) என்று கூறும் மீட்பின் அரசனோடு ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கையின் ஐக்கியத்தில் அவருடைய கற்பனைகளை கடைப்பிடிப்பதினாலாகும்.

சீர்திருத்த திருச்சபைகளானது ஹைடெல்பெர்க் கேட்டகிசத்தால் விளக்கப்பட்டுள்ள அப்போஸ்தல விசுவாச அறிக்கைக்கு தன்னை ஒப்புக்கொடுத்துள்ளது என்பதை நினைவிற் கொள்ளவும்.

இந்த விசுவாச அறிக்கையிலுள்ள பனிரெண்டு கோட்பாடுகளும் உங்களுக்குத் தெரியுமா? இந்த விசுவாச அறிக்கையை நீங்கள் அறிக்கை செய்யும்போது அது உங்கள் இருதயத்தின் விசுவாசமாக இருக்கிறதா?

**22-க்கான கேள்விகள்:**

1. ஒரு கிறிஸ்தவன் விசுவாசிப்பதற்கு அவசியமானது என்ன? ....................................................................................................

   ....................................................................................................................................
2. இந்த கேள்வி கூறுவது, உண்மையான விசுவாசம்.............................................முக்கியமாக ..........................................மீட்பு மற்றும்...............................................................................................

   சத்தியங்களையும் உள்ளடக்கிய நிலையில் உள்ள சுவிசேஷமாகும்.
3. இந்த அப்போஸ்தல விசுவாச அறிக்கை அப்போதஸ்தலர்களால் தனிப்பட்ட நிலையில் எழுதப்பட்டதால் அதை அப்படியே விசுவாசிக்க வேண்டும். சரியா, தவறா? ........................
4. மத்தேயு 28:19 அப்போஸ்தல விசுவாச அறிக்கையுடன், எதாகிலும், அல்லது என்ன தொடர்புடையதாக இருக்கிறது? ....................................................................................................................

   ....................................................................................................................................
5. Creed (க்ரீட்), அதாவது சமயக் கொள்கை, என்ற வார்த்தை ......................... மொழியிலிருந்து "..........................................................................." என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது.
6. அப்போஸ்தல விசுவாசம் வெளிப்படுத்தும் நான்கு குணாதிசயங்கள் என்ன?

   அ.

   ஆ.

   இ.

   ஈ.
7. நாம் ரோமன் கத்தோலிக்க திருச்சபையை சாராதவராக இருப்பதால் நம்முடைய விசுவாசத்தை உலகளாவியது என்று அழைப்பதை தவிர்க்க வேண்டும். சரியா, தவறா?...................... விளக்கம் தருக: ....................................................................................................................................

8. கீழ்வருபனவற்றை பொருத்துக:

| | |
|---|---|
| நான் விசுவாசிக்கிறேன் | - விசுவாச அறிக்கை நடை |
| உலகளாவிய | - ஒழுங்குமுறை படுத்தப்பட்ட விசுவாசம் மற்றும் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்க்கை |
| மத்தேயு 28:19 | - க்ரீட் (Creed) விசுவாச அறிக்கை |
| கிறிஸ்தவம் | - எல்லாராலும் விசுவாசிக்கப்படுகிற |

9. உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் அவனுடைய இருதயத்தின் நம்பிக்கையினால் நடத்தப்படுகிறது. சரியா, தவறா? .........................

10. ரோமர் 6:17 எழுதவும்

**23. அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தில் உள்ள விசுவாசக் கோட்பாடுகள் என்ன?**

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே பேரான குமாரனான நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்; அவர் பரிசுத்த ஆவியானவராலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார், பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார், அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருகிறார்.

பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன், பரிசுத்த உலகளாவிய திருச்சபையையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

***

இந்தக் கேள்வி அப்போஸ்தல விசுவாச அறிக்கையில் உள்ள பனிரெண்டு விசுவாசக் கோட்பாடுகளையும் நமக்குத் தருகிறது. இந்த விசுவாச அறிக்கை அப்போஸ்தலர்களாலும், தனிநபர் எவராலும் எழுதப்படவில்லை, மாறாக, கிறிஸ்தவத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் உருப்பெற்ற திரியேக தேவனைக் குறித்த அடிப்படை போதனைகளோடு, "அவர் பாதாளத்தில் இறங்கினார்", என்பது போன்ற துணைக் கோட்பாடுகள் கிறிஸ்துவுக்குப்பின் ஆறாம் நூற்றாண்டில் சேர்க்கப் பட்டது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இந்த விசுவாச அறிக்கையின் அதிகப்படியான கோட்பாடுகள் மூன்றாம் - நான்காம் நூற்றாண்டுகளில் ஒன்றுசேர்த்து உருவாக்கப்பட்டதாகும்.

சில "அடிப்படைவாத ( fundamentalist )" கிறிஸ்தவர்கள் "(No creed but Christ) க்ரீட் வேண்டாம் கிறிஸ்து போதும்," அதாவது விசுவாச அறிக்கை வேண்டாம் கிறிஸ்து போதும் என்பது போன்ற கூற்றுகளை பயன்படுத்தி அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம் மற்றும் ஹைடெல்பெர்க் கேட்டகிசம் போன்ற விசுவாச அறிக்கைகளைப் புறக்கணிக்கின்றனர். அவர்கள் கிறிஸ்து என்ற நபரும், வேதாகமம் மட்டும் போதும், மனிதனால் உருவாக்கப்பட்டவை வேண்டாம் என்று கூறுவார்கள். இவர்களுடைய இந்த வாதத்திற்கு ஒருவர் என்ன சொல்லுவார்?

இதுபோன்ற மக்களுக்கு, விசுவாச அறிக்கை (க்ரீட்) என்பது, வேதாகமம் கர்த்தர் மற்றும் இரட்சிப்பு என்பவைகளைக் குறித்து போதிப்பதைப் போல, ஒருவரின் விசுவாசத்தைக் குறித்த அறிக்கை (Statement of Belief) ஆகும் என்று விளக்கம் தரவேண்டும். ஒருவகையில், "(No creed but Christ) க்ரீட் வேண்டாம் கிறிஸ்து போதும்," என்ற தத்துவம்கூட ஒரு (க்ரீட்) விசுவாச அறிக்கை ஆகும் -- காரணம், இது ஒருவரின் நம்பிக்கை அல்லது விசுவாசத்தைக் குறித்த அறிக்கையாகும். ஆனால் இந்தக் கூற்று கிறிஸ்துவைக் குறித்து எதையுமே கூறாத நிலையில் எத்தனை தரக்குறைவானதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவே தமது சீஷர்களைப் பார்த்து, "கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார்" (மத்தே 22:42). உண்மையான செய்தி என்னவெனில், அப்போஸ்தலர்களால் பல ஆரம்பகால விசுவாச அறிக்கைகள் திருவசனத்தில் விளம்பப்பட்டுள்ளது. உதாரணமாக 1தீமோத்தேயு 3:16-ல், "... யாவரும் ஒப்புக் கொள்கிறபடியே (அறிக்கை செய்கிறபடியே)..." என்று ஆரம்பிக்கும் இந்த அறிக்கை ஆரம்பகால கிறிஸ்தவ அறிக்கையாக அல்லது துதிபாடலாக இருந்தது.

வேதாகம விசுவாச அறிக்கை என்பது திருவசனப் போதனைகளிலிருந்து விசேஷித்த அக்கறையுடன் உருவாக்கப்பட்டதாக இருந்து பின்வரும் முக்கியமான நோக்கங்களுக்கு பயன்படுகிறது.

1. விசுவாச அறிக்கை விசுவாசிகளை இணைக்க உதவுகிறது. இதுபோன்ற பொதுவான விசுவாச அறிக்கையில் உள்ள அடிப்படை சத்தியங்களை விசுவாசித்து அறிக்கை செய்யும் ஒரே விசுவாசத்தையுடையோரை ஒன்றாக்குகிறது.

2. ஒரு விசுவாச அறிக்கை என்பது அந்த ஒரு திருச்சபையின் விசுவாச தரத்தை வெளிப்படுத்துகிறது. இது ஒரு குறிப்பிட்ட திருச்சபையின் அங்கமாக இருப்பவர்கள் மற்றும் அந்த சபையில் அங்கமாக விரும்பும் விசுவாசிகளின் உபதேச நம்பிக்கையை சோதிக்கும் கருவியாக இருக்கிறது.

3. விசுவாச அறிக்கை சத்தியங்களை பின்வரும் சந்ததியினருக்காக பாதுகாக்கிறது. விலையேறப்பெற்ற விசுவாச பொக்கிஷத்தை நாம் மற்றவர்களிடமிருந்து பெற்றிருக்கிறோம், அதையே மற்றவர்களுக்கும் அனுப்ப வேண்டும்.

4. விசுவாச அறிக்கை திருச்சபையின் விசுவாசத்தை பயிற்றுவிக்க உதவும் முக்கியமான உபகரணம் ஆகும். எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டியது, விசுவாச அறிக்கைகள் மனிதர்களால் உருவானதுதான்; ஆம் உண்மையான பரிசுத்தவான்கள் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு வேதாகமத்தை அதிக கவனத்துடன் படித்து அது நமக்குக்கூறும் சத்தியங்களை நமக்கு சொல்லும்படியாக உருவாக்கினவைகளாகும். திருச்சபை விசுவாச அறிக்கைகளை சற்று மாற்றியிருக்கலாம், ஆனால் அது அனைத்து திருச்சபையாலும் தீவிர சிந்தனையின் விளைவில் மட்டுமேயாகும்.

திருவசன சத்தியங்களின் வெளிப்பாடுகளாலான அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம், அதன் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து கடந்த பதினைந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக காலத்தின் சோதனைகளை வென்று வேதாகம திருச்சபைகளால் அறிக்கை செய்யப்பட்டு வருகின்றது. இந்த விசுவாச அறிக்கையை புறக்கணிக்கும் ஒரு சபை அல்லது கிறிஸ்தவன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. அதே வேளையில் இந்த விசுவாச அறிக்கையை வாயிலே அறிக்கை செய்து இருதயத்தை இதற்கு தூரமாக வைத்திருப்பவனும் கிறிஸ்தவன் அல்ல.

உங்களுடைய விசுவாசம் கிறிஸ்தவத்தைச் சார்ந்ததாக இருக்கிறதா?

**23-க்கான கேள்விகள்:**

1. தற்போதுள்ள அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தில் எத்தனை அறிக்கைகள் உள்ளது? ................
2. எந்த சொற்றொடர் கடைசியாக சேர்க்கப்பட்டது? ..............................எப்போது அதிக பட்சமான அறிக்கைகள் கிறிஸ்தவ திருச்சபையின் பயன்பாட்டில் இருந்தது?...........................................................................................
3. பொதுவான முதுமொழியான "(No creed but Christ) க்ரீட் வேண்டாம் கிறிஸ்து போதும்," அதாவது விசுவாச அறிக்கை வேண்டாம் கிறிஸ்து போதும் என்பது... அ) மிகவும் சரியானதே; ஆ) மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அறிக்கையே; இ) கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த தவறான பார்வையாகும்... எது சரி? ............
4. விசுவாச அறிக்கை என்பது தேவன் மற்றும் சுவிசேஷத்தில் உள்ள ஒருவரின் விசுவாசம் மற்றும் புரிந்து கொள்ளுதலை வெளிப்படுத்தும் சொற்றொடராகும். சரியா, தவறா? .......................
5. திருச்சபையால் பயன்படுத்தப்படும் விசுவாச அறிக்கையின் நான்கு வகையான பயன்பாடுகள் என்ன?
   அ)
   ஆ)
   இ)
   ஈ)
6. சீர்திருத்த, லூத்தரன் மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபைகள் இந்த விசுவாசப் பிரமாணத்தை பயன்படுத்தி ஒரே நிலையில் வியாக்கியாணம் செய்கிறது. சரியா, தவறா? .......................
7. விசுவாசப் பிரமாணம் என்பது ஒருபோதும் மாற்றத்திற்கு உட்பட்டதல்ல, காரணம் அது திருவசனத்திற்கு இணையானதே. சரியா, தவறா? .......................
8. ஒருவர் ஹைடெல்பெர்க் கேட்டகிசம் போன்ற விசுவாச அறிக்கைகளை புறக்கணித்தாலும், அவசியப்படும் பணத்தை சபையில் கட்டினால் போதும் சீர்திருத்த சபையின் அங்கத்தினராகலாம்? சரியா, தவறா?.......................
9. அப்போஸ்தல விசுவாச பிரமாணத்தை வெறுமனே அறிக்கை செய்யும் ஒவ்வொருவரும் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் ஆவர். சரியா, தவறா? .......................
10. 1தீமோ 3:16-ஐ எழுதவும்

## 24. இந்த (articles) அறிக்கைகள் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது எப்படி?

மூன்று பிரிவுகளாகும்: முதல் பிரிவு -பிதாவாகிய கடவுள் மற்றும் நமது படைப்பு; இரண்டாவது - குமாரனாகிய கடவுள் மற்றும் நம்முடைய மீட்பு; மூன்றாவது -பரிசுத்த ஆவியாகிய கடவுள் மற்றும் நம்முடைய பரிசுத்தமாக்கப்படல்.

***

24 முதல் 58 வரையிலான கேள்வி பதில்கள் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் பனிரெண்டு அறிக்கைகளைக் குறித்த முழு விளக்கத்தையும் நமக்குத் தருகின்றது. 24 மற்றும் 25-ன் கேள்வி பதில்கள் இந்த விசுவாசப் பிரமாணத்தின் (outline) சுருக்கத்தைக் கூறி, அது திரியேக தேவனைச் சாரந்தது என்பதை நமக்கு விளக்குகிறது. ஒரு கிறிஸ்தவனின் அடிப்படை விசுவாச அறிக்கையானது உண்மையும் ஜீவனுமுள்ள ஒரே தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற திரித்துவமானவர் என்பதாக இருக்க வேண்டும். இந்த தேவனே படைப்பு, மீட்பு மற்றும் பரிசுத்த மாக்கப்படுதல் ஆகியவற்றின் ஊற்றாவார்.

திரியேக தேவனைக் குறித்த உண்மையானது எல்லா அடிப்படை சத்தியங்களிலும் மேலானதாகும். தேவன் யார் என்பதைக் குறித்து சரியாக அறியாத நிலையில் வேறே எந்த சத்தியத்தைக் குறித்தும் சரியாக அறிய முடியாது. திரியேக தேவன் என்பது அடிப்படை (reality) உண்மை நிலை, மற்ற எல்லா சத்தியங்களும் தேவனிடத்திலிருந்தே வருகிறதாக இருக்கிறது.

இந்த விசுவாச அறிக்கை மூன்று பகுதிகளாக, ஒவ்வொன்றும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விளக்கிக் கூறும் நிலையில் பிரிக்கப் பட்டுள்ளது. இந்த பனிரெண்டு அறிக்கையில் 2 முதல் 7 வரையிலான அதிகபட்ச அறிக்கைகள் குமாரனாகிய தேவனைக் குறித்ததாகவும், ஒரே ஒரு அறிக்கை பரிசுத்த ஆவியானவரைக் குறித்து, "பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்" (article 8 ) --என்று இருப்பதை நீங்கள் கவனிக்கலாம்.

இந்த கேட்டகிசம், 8 முதல் 12 வரையிலான விசுவாச அறிக்கைகள் பரிசுத்த ஆவியானவரின் செயல்களாக இருப்பதை தெளிவாக போதிக்கிறது. உண்மையென்னவெனில், இந்த விசுவாச அறிக்கையில் மிகவும் குறைவாக விளக்கப்பட்டள்ளது பிதாவாகிய தேவனைக் குறித்து மட்டுமே ஆகும்.

பனிரெண்டு (articles) அறிக்கை கருத்துகளும் பின்வருகின்றன:

அ. பிதாவாகிய கடவுள் மற்றும் நம்முடைய படைப்பு:

1. வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

ஆ. குமாரனாகிய கடவுள் மற்றும் நம்முடைய மீட்பு:

2. அவருடைய ஒரே பேரான குமாரனான நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்;
3. அவர் பரிசுத்த ஆவியானவராலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்,
4. பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்;
5. மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்;
6. பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்,
7. அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருகிறார்.

இ. பரிசுத்த ஆவியாகிய கடவுள் மற்றும் நாம் சுத்திகரிக்கப்படல்:

8. பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன்,
9. பரிசுத்த (உலகளாவிய -Catholic) திருச்சபையையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்,
10. பாவ மன்னிப்பும்,
11. சரீர உயிர்த்தெழுதலும்,
12. நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவன் வரிசைப் படுத்தப்பட்டுள்ள நிலையானது ஒவ்வொருவரின் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை சார்ந்தது என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. அடுத்து வரும் மற்றும் 53-வது கேள்விகள் திரியேக தேவனின் மூன்று ஆள்த்தத்துவமுள்ள நபர்களுமே சேர்ந்து (co-equal) ஒத்த தகுதியுள்ள மற்றும் ஒன்றாக ஆதிமுதலான (co-eternal) ஒரே தேவனாவார். தேவனுடைய செயல்களானது, பிதாவாகிய தேவனிடத்திலிருந்து, குமாரன் மூலமாக, பரிசுத்த ஆவியானவரால் வரும் வெளிப்பாடுகளாகும். திரியேக தேவனில் உள்ள எந்த ஒருநபரும் தன்னிச்சையாக மற்ற இருவரின் உடன்பாடு இல்லாத நிலையில் ஒருபோதும் செயல்படுவது கிடையாது.

**24-க்கான கேள்விகள்:**

1. 24 மற்றும் 25-ன் கேள்வி பதில்கள் ..........................................................................என்பதை நமக்கு விளக்குகிறது.
2. இந்த விசுவாசப் பிரமாணம் ............................ முக்கிய பகுதிகளை உடையதாக, ஒவ்வொரு பகுதியும் .............................. தேவனின் ஒரு நபரை விளக்குகிறது. இதில் மொத்தம் ................. அறிக்கைகள் உள்ளது.
3. எல்லா அறிந்து கொள்ளுதலுக்குமான அடிப்படை உண்மை என்ன?........................................................
4. அதிக பட்ச அறிக்கைகள் .......................................... குறித்தும், குறைந்த பட்ச அறிக்கைகள் .......................................... குறித்தது ஆகும்.
5. பொருத்துக:

   பரிசுத்த ஆவியானவர் - மீட்பு
   பிதாவானவர் - பரிசுத்தமாக்குதல்
   குமாரன் - படைப்பு
6. விசுவாசப் பிரமாணத்தின் 9-வது அறிக்கையை எழுதவும்:..............................................................................................
7. பரிசுத்த ஆவியாகிய தேவனின் செயல்களைக் குறித்து கூறும் அறிக்கை எண்கள்? ....................
8. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் வரிசைப்பாடு அவர்களின் முக்கியத்துவம் மற்றும் மதிப்பைக் குறிக்கிறது, அதாவது பிதாவானவர் குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரைவிட உயர்ந்தவர். சரியா, தவறா? ....................
9. பிதாவின் செயல் குமாரன் ............................, பரிசுத்த ஆவியானவர் .................... ஆகும்.
10. 1பேதுரு 1:2-ஐ எழுதவும்

**25. ஒரே ஒரு தேவன் மட்டுமே என்று கூறும்போது, பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்று மூன்று ஆள்தத்துவமுள்ள நபர்கள் என்று கூறுவது ஏன்?**

தேவன் தமது திருவசனத்தில் தன்னை மூன்றுவித தனித்தன்மையுள்ள ஒருவரான, உண்மையுள்ள, நித்திய தேவனாக வெளிப்படுத்தியுள்ளார்.

***

நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை கொள்கை தேவன் திரியேகமானவர் ஆவார், இந்த உண்மை அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் ஆதாரமாக அமைந்துள்ளது. இயற்கை மற்றும் திருவசனத்தில் தன்னை வெளிப்படுத்தியுள்ள உண்மையான தேவனைக் குறித்து யோசிக்கும் போது, மனித அறிவுகடந்த ஒருவரை நாம் சந்திக்க முடிகிறது.

புறமதத்தார்களின் தெய்வங்கள் மனிதனைவிட அதிக வித்தியாசம் இல்லாத ஒன்றாகவும், பலநேரங்களில் மனிதனைவிட பாவமான நிலையில் சித்தரிக்கப்பட்டிருப்பதை அறியலாம். ஆனால் உண்மையான கடவுளின் மகத்துவம் மற்றும் மேன்மைக்கு முன்பு நாம் பார்வையற்றவர்களாகும் அளவிற்கு, அவர் மகா உயர்ந்தவரும், மகிமையானவரும், அதிக வல்லமையும், ஞானமும், நீதியும் உள்ளவர் ஆவார். "இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?" என்று ஏசாயா கேள்வி எழுப்பினார். அப்போஸ்தலனாகிய பவுல் பிதாவையும், குமாரனையும் குறித்து கூறும்போது, "ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1 தீமோ 6:16) என்றார்.

தேவனைத் தேட நம்மால் ஒருபோதும் முடியாது; கிறிஸ்துவில் அவரைக் கண்டு பணிந்து ஆராதிக்கலாம். "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!" (ரோம 11:33)

தேவனுடைய தனி இயல்புகளைக் குறித்த முழு கருத்துப் பரிமாற்றத்தை தற்சமயம் தர இயலாது, ஆனால் முக்கியமாக நாம் இங்கே கற்றுக்கொள்ள வேண்டியது, கடவுள் திரியேகமானவர்.

தேவனுடைய இயல்பைக் குறித்து நாம் விசுவாசிக்க வேண்டிய இரு முக்கிய காரணங்கள் உண்டு.

1. *தேவன் ஒருவரே* (God is One) . பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் நமக்கு ஒரே ஒரு உண்மையும், நித்தியமுமான தேவன் உண்டு என்பதை போதிக்கிறது. உபாக 6:4, மாற் 12:29, 1 தீமோ 2:5 ஆகியவற்றைப் பார்க்கவும். (புற சமயத்தைச் சார்ந்தவர்கள் பல கடவுள்களில் நம்பிக்கை வைக்கின்றனர். இதை நாம் பளிகாமி (Polygamy) -பல கடவுள் நம்பிக்கை என்று கூறுகின்றோம்). கடவுள் தனது இயல்பில் ஒன்றானவர், அவர் சரீரம் மற்றும் அதின் பாகங்கள் என்று எதையும் பெற்றிடாத பரிசுத்த ஆவி ஆவார். அவர் தன்னுடைய நோக்கம் மற்றும் எண்ணத்தில் ஒன்றாகவும், ஒருபோதும் மாறாதவராகவும் இருக்கிறார்.

2. *கடவுள் மூன்று நபரானவர்* (God is Three Persons) . இங்கே நாம் மேலும் ஒரு இரகசியத்தைக் காண்கிறோம். ஒரே கடவுளில்: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்று மூன்று நபர்கள் இருக்கின்றனர். ஒரு "நபர்" என்பது "நான்" (ஆங்கிலத்தில் -I) என்று தன்னை அறிமுகப்படுத்தும் ஒருவர் ஆவார். கடவுள் தனக்குத்தானே மூன்று வழிகளில் பேசிக்கொள்ள இயலும். ஆம், பிதாவானவர் குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவருடன் பேசுவார், குமாரன் பிதா மற்றும் பரிசுத்த ஆவியானவருடன் பேசுவார், பரிசுத்த ஆவியானவர் பிதா மற்றும் குமாரனுடன் பேசுவார். ஒரே தேவன் என்ற நிலையில் திரியேக தேவனின் மூன்று நபர்கள் ஒருவரோடு ஒருவர் நித்தியகாலமாக தெய்வீக ஐக்கியத்தில் மகிழ்கின்றனர்.

இந்த திரியேக (Triune: tri = three, une = one) தேவன் நமக்கு புரியாத புதிராக இருக்கிறார். எப்படி மூன்று நபர்கள் ஒருவராக முடியும்?, நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் ஏன் இதை நாம் விசுவாசிக்க வேண்டும்? அப்போஸ்தல விசுவாசப் பிரமாணமும் இதை உறுதி செய்ய வேண்டும்? இதற்கு இலகுவான பதில், வேதாகமம் கடவுளைப் பற்றி இப்படி போதிக்கிறது. வேதப் புத்தகத்தின் ஆரம்ப வரிகளிலும் (ஆதியா 1:26) ஏசாயா 6:3; 48:16 போன்ற பகுதிகளிலே, கடவுள் தன்னை பன்மை நிலையில் அறிமுகப்படுத்துகிறார்.

கடவுள் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்ற மூவரும் ஆள்த்தத்துவ முள்ள நபர்கள் என்பதையும், மூவரும் சேர்ந்து ஒரே கடவுள் என்பதை புதிய ஏற்பாடு நமக்கு விளக்குகிறது. மத் 3:16,17; 28:19; யோவ 8:19; 10:30,33; அப்போ 5:3,4; 20:28; 2கொரி 13:14; 1பேது 1:2 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.

**25-க்கான கேள்விகள்:**

1. வேதாகம தேவனில் கிறிஸ்தவர்கள் விசுவாசம் வைக்க காரணம் அவர் புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையானவர். சரியா, தவறா? .......................
2. கடவுள் மனிதனால் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருப்பதால், தேவையான அளவு புரிந்து கொண்டு அவருடன் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. சரியா, தவறா?.......................
3. திரித்துவத்தைக் குறித்த உபதேசம்... அ) சந்தேகத்திற்குரிய போதனை, ஆ) அடிப்படை கிறிஸ்தவ போதனை, இ) தவறான மதத்திலிருந்து உண்மையான கிறிஸ்தவத்தைக் காண்பிக்கிறது. எது சரி? ...............

4. திரித்துவத்தைக் குறித்த வேதாகம போதனையானது, விசுவாசத்தினால் திருவசனத்திலிருந்து நாம் எடுக்கும் இரண்டு அடிப்படை உண்மைகளை உள்ளடக்கியது. அவைகள்: அ) ................................................ ஆ ......................................................................................................இ..................................................................
5. திரித்துவ தேவனைக் குறித்த போதனை நம்மால் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கிறது. சரியா, தவறா? ......................
6. பின்வருபவற்றை பொருத்துக:

| | | |
|---|---|---|
| பிதாவாகிய கடவுள் | - | யோவான் 1:1 |
| குமாரனாகிய கடவுள் | - | 1 கொரி 3:16 |
| பரிசுத்த ஆவியாகிய கடவுள் | - | கொலே 1:13 |

7. திரித்துவம் (Triune) என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? ..........................................................................
8. திரியேக தேவனைக் குறித்த போதனை... அ) பழைய ஏற்பாட்டில் தெளிவாக விளக்கப் பட்டுள்ளது. ஆ) பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது, இ) பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எது சரி? ..............................................................................................
9. தங்களைக் கடவுள் மீது நம்பிக்கை வைப்பவர்கள் என்று சொல்லியும் திரியேக தேவனைக் குறித்த போதனையை ஏற்றுக் கொள்ளாதவர்களையும் நாம் கிறிஸ்தவர்கள் எனலாம்? சரியா, தவறா? ......................
10. 2கொரி 13:14-ஐ எழுதவும்

**26. "வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்", என்று நீங்கள் அறிக்கை செய்யும்போது எதை விசுவாசிக்கின்றீர்கள்?**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய பிதா, அவராலேயன்றி வேறொன்றும் பூமியிலும், வானத்திலும் உருவாக்கப்படவில்லை, மேலும் அவைகள் அவருடைய நித்திய ஆலோசனை மற்றும் தயவினாலே அவருடைய குமாரனும், என்னுடைய கர்த்தரும், தகப்பனுமாகிய கிறிஸ்துவினிமித்தம் பாதுகாக்கப்பட்டு ஆளப்படுகிறது. என்னுடைய சரீரம் மற்றும் ஆத்துமாவிற்கு தேவையான யாவற்றையும் கொடுக்கிறவரில் சந்தேகப்படாமலும், இந்த அழுகையின் பள்ளத்தாக்கில் இருக்கும் எனக்கு அனுப்பப்படும் எந்த தீமையும் அவரால் எனக்கு நன்மையாக மாற்ற அவர் உண்மையுள்ள தகப்பனாக இருப்பதோடு, வல்லமையுள்ள கர்த்தரும், போதுமானவரும், சித்தமுள்ளவருமாக இருக்கின்றார் என்பதாகும்.

***

26,27 மற்றும் 28 ஆகிய கேள்விகள் விசுவாசப்பிரமாணத்தின், "வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்." என்னும் முதல் அறிக்கையை விளக்குகிறது. இந்த அறிக்கை கர்த்தரை, முக்கியமாக பிதாவை சர்வ வல்லமையுள்ள, சகலத்தையும் படைத்த சிருஷ்டிகராகவும், கிறிஸ்துவினுடைய மற்றும் நம்முடைய பிதா என்று கூறுகிறது.

பிதாவாகிய தேவன், வசனம் மற்றும் நம்முடைய கேட்டகிசத்தின்படி, மூன்று வழிகளில் "பிதாவாக" இருக்கிறார்.

1. *கர்த்தர் படைப்பின் பிதாவானவர்*: விசுவாசப் பிரமாணம் (Creed) பிதாவானவர் எல்லாவற்றையும் படைத்தார் என்று கூறும்போது, அது பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரை உள்ளடக்கிய முழு தேவத்துவத்தையும் குறிக்கிறது. சில நேரங்களில் வசனம் கர்த்தரை "பிதா" என்று கூறும்போது மூன்று நபர்களையுமே குறிப்பிடுகிறது.

படைப்பைக் குறித்த போதனை கிறிஸ்தவத்தின் அடிப்படை போதனையாகும்; இந்த போதனை இல்லாமல் கிறிஸ்தவமே இருக்க முடியாது. இருப்பினும், இன்றும் பலர் இதை மறுப்பவர்கள் இருக்கின்றனர். படைப்பு என்பது கர்த்தருடைய வார்த்தையினாலே (சங்கீ 33:6; எபி 11:3) எல்லாமே உருப்பெற்றுள்ளது என்பதாகும். சிருஷ்டித்தல் அல்லது படைத்தல் என்பது, "ஒன்றுமல்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்குவது" ஆகும். சர்வ வல்லமையுள்ள கர்த்தருடைய பெலன் மட்டுமே இதை உருவாக்க முடியும்.

எல்லாவற்றின் ஆரம்பத்தையும் வேதாகமத்தில் மட்டுமே நாம் காண்கிறோம். ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படைப்பின் வரலாறை ஒருவன் விசுவாசிக்காத பட்சத்தில், இந்த படைப்பு தற்செயலாக தோன்றி நித்தியமாக உள்ளது என்று நம்ப நேரிடும். ஆனால் இந்த நடைமுறைக்கு ஒத்துவராத கோட்பாடு (theory) எந்த உண்மையையும் விளக்காமல் வெறுமனே தவறான மத நம்பிக்கையை தருகின்றது.

அநேகர் (Biological Evolution) உயிரினங்களின் பரிணாமம் என்ற போதனையை நம்புகின்றனர். இந்த கோட்பாட்டின்படி எல்லா ஜீவராசிகளும் (மரம், விலங்கு மற்றும் மனிதன்), பல நூறு ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தற்செயலாக ஒரு சாதாரண உயிரியிலிருந்து மற்றொரு உயிரி தோன்றியது என்பதாகும். அதிக பட்சம் எல்லா பள்ளிப்பாட புத்தகங்கள் மூலம் பள்ளிகளில் (சில கிறிஸ்தவ சபைகளிலும் கூட) இந்த கோட்பாடே போதிக்கப்படுகிறது. ஆனால், இது ஒரு பொய், கிறிஸ்தவர்கள் இதை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கவும், திருவசனத்திற்கு புறம்பானது என்று எதிர்க்கவும் வேண்டும்.

2. *கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் பிதா / தகப்பன் ஆவார்*: திருத்துவத்தின் முதல் நபர் பிதா, இரண்டாம் நபர் குமாரன் என்று அழைக்கப்படுவதை திருவசனத்தில் காண்கிறோம். திரியேகத்தில் உயிர்

பெருக்கம்/விரிவாக்கம் உள்ளது. குமாரனுடைய ஜீவன் பிதாவினிடமிருந்து வருகிறது. ஆகவேதான் இயேசு கிறிஸ்து, “ஒரே பேரான குமாரன்” (யோவா 1:14,18; 3:16) என்று அழைக்கப்படுகிறார். (கேள்வி 33-ஐ பார்க்கவும்) பரிசுத்த ஆவியானவரின் ஜீவன் பிதா மற்றும் குமாரனின் ஜீவனிலிருந்து வெளிப்படுகிறது. கிறிஸ்து தேவனுடைய நித்தியமான குமாரனாக தொடக்கமும் முடிவுமில்லாதவர்.

3. *கர்த்தர் விசுவாசிகளின் தகப்பன்*: படைப்பின் பிதாவானவர், கிறிஸ்துவின் பிதாவானவர் “பரலோகத்தில் இருக்கும்” நம்முடைய பிதாவுமாவார். கிறிஸ்துவைப் போல நாம் கர்த்தருடைய குமாரர்கள் அல்ல, ஆனால் “சுவிகார புத்திரராக” (ரோம 8:15, எபே 1:5) இருக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம். இன்றைய பல நவீன உபதேசிகள் கிறிஸ்துவைப்போலவே மனிதர்கள் யாவரும் சமமாக கர்த்தருடைய பிள்ளைகள் என்று போதிக்கின்றனர்.

இந்த கேள்வி கர்த்தர் விசுவாசிகளின் தந்தையாக இருப்பதை விளக்குகிறது, அவர் சாத்தானுடைய பிள்ளைகளின் தந்தை அல்லவே (யோவா 8:44). கிறிஸ்துவின் மூலமாக நம்முடைய கிருபையுள்ள பிதாவகிய கர்த்தர்...

அ. “என்னுடைய சரீரம், ஆத்துமாவிற்குத் தேவையான யாவற்றையும் கொடுக்கிறார்,”

ஆ. “தீமையான யாவற்றையும் எனக்கு நன்மையாக மாற்றுகிறார், நம்முடைய நன்மைக்காகவும், தமது மகிமைக்காகவும் எல்லாவற்றையும் படைத்து ஆள சர்வ வல்லமையுள்ள கர்த்தரால் மட்டும் முடியும்.

தேவனுடைய படைப்பில் எதற்கும் பயப்படாமல், படைப்பின் நாயகரை மட்டும் ஆராதித்து அவர் ஒருவருக்கே ஊழியம் செய்வோமாக!

**26-க்கான கேள்விகள்:**

1. ..................... ஆகிய கேள்விகள் விசுவாசப்பிரமாணத்தின், .................... அறிக்கையை, முக்கியமாக தெய்வத்துவத்தின் ....................... நபரை விளக்குகிறது
2. பரலோகத்தின் பிதாவானவர், மூன்று வழிகளில் பிதாவாக இருக்கின்றார், அவைகள்...
   அ.
   ஆ.
   இ.
3. திரியேக தெய்வத்தின் முதல் நபராகிய பிதா மட்டுமே தனி நபராக எல்லாவற்றையும் படைத்தார். சரியா, தவறா?.........................
4. ஏற்கனவே இருந்த வேதிப்பொருட்கள் மற்றும் இயற்கையின் வளங்களைப் பயன்படுத்தி கர்த்தர் அகில உலகத்தையும் படைத்தார். சரியா, தவறா? ........................
5. கீழ்க்காணும் வார்த்தைகளின் விளக்கம் என்ன?
   அ. சர்வ வல்லமை:..........................................................................................................................
   ஆ. படைப்பு: ..................................................................................................................................
   இ. நித்திய ஆலோசனை: ...................................................................................................................
   ஈ. கண்ணீரின் பள்ளத்தாக்கு: ..........................................................................................................
6. கிறிஸ்தவன் படைப்பைக் குறித்த வேதாகம உபதேசம் மற்றும் பரிணாமக் கோட்பாடு இரண்டையுமே விசுவாசிக்கலாம். சரியா, தவறா? ........................
7. பிதாவாகிய தேவன் எப்படி கிறிஸ்துவின் பிதாவாக இருக்கிறாரோ அதுபோலவே நம் அனைவரின் பிதாவாகவும் இருக்கிறார். சரியா, தவறா?........................ விளக்கம்: ............................................................
   ...............................................................................................................................................
8. கர்த்தர் எல்லா மனிதனையும் படைத்தபடியால் அவர் எல்லா மனிதருக்கும் “பரலோகத்தின் பிதா” ஆவார். சரியா, தவறா? ........................
9. இந்தக் கேள்வி-பதிலின்படி, பரலோகத்தின் பிதாவாக நமக்கு செய்யும் இரண்டு முக்கிய காரணங்கள் யாவை?
   அ. ...........................................................................................................................................
   ஆ. ...........................................................................................................................................
10. கொலோசியர் 1:16-ஐ எழுதவும்:

**27. தெய்வீக செயல் (God’s Providence) என்பதைக் குறித்து என்ன புரிந்து கொள்கின்றீர்கள்?**

சர்வ வல்லமையுள்ள, எங்கும் நிறைந்து காணப்படும் தேவ வல்லமையால் வானம் பூமி அதின் எல்லா ஜீவன்களோடும் தமது கரத்தால் தாங்கி அவற்றை ஆள்கிறார், அதனால் புல் முதலான அனைத்து பயிர்களும், மழை மற்றும் வறட்சி, செழிப்பான மற்றும் தரிசான வருஷங்கள், போஜனமும் பானமும், சுகமும் சுகவீனமும், செல்வமும் ஏழ்மையும், ஆகிய அனைத்தும் தற்செயலாக வராமல் தந்தைப் பாசம் நிறைந்த பிதாவின் கரத்திலிருந்து வருகிறது.

***

கேள்விகள் 27&28 ஆகியவை தெய்வீக செயலைக் குறித்த உபதேசத்தை விளக்குகிறது. இது படைப்பைக் குறித்த உபதேசத்தோடு நெருங்கியது. உலகத்தைப் படைப்பதில் கர்த்தர் சகலத்தையும் அவைகள் இருக்கும் நிலைக்கு கொண்டு வந்தார். படைப்பானது ஒரே முறை, தொடர்ந்த ஆறு நாட்களின் கிரியை ஆகும். கர்த்தருடைய தெய்வீக செயல் (Providence - from the Latin “providere” = “to see before”) என்பது படைக்கப்பட்டவைகளை பராமரித்தல், பாதுகாத்தல் மற்றும் ஆளுதல் ஆகியவற்றைக் குறிக்கிறது. தெய்வீகச் செயலானது படைக்கப்பட்டவைகள் மீண்டும் ஒன்றுமில்லாமை என்னும் நிலைக்கு போகாதபடிக்கு தமது வல்லமையினால் பாதுகாத்தல் ஆகும். ஆக தெய்வீக செயல் என்பது படைப்புக்கு இணையாக மிக முக்கியமானதாகும்.

இந்த தெய்வீக செயல் பாவம் மற்றும் தீமையையும் உள்ளடக்கியதே. தேவன் தம்முடைய நித்தியமான திட்டத்தில் இணைத்து, தமது நாமம் மகிமைக்காக அனுமதிக்காத பட்சத்தில் பாவமும், தீமையும் இந்த உலகில் வந்திருக்கவே முடியாது. தெய்வீக செயல் மற்றும் தீர்மானத்தில் பாவம் உள்ளடங்கியதாக இருப்பினும் (ஆமோஸ் 3:6), தேவன் எப்போதும் பாவத்தை வெறுக்கிறார் என்பதை நாம் மறக்க கூடாது (உபாக 25:16).

எல்லா பகுதி மற்றும் நிலைகளிலும் தேவனால் ஆட்சி செய்யப்படும் உலகில் தற்செயலாக அல்லது எதிர்பாராத நிலையில் தேவனுடைய திட்டத்திற்கு மீறி ஏதும் நடைபெறாது. பரந்து விரிந்து கிடக்கும் வானத்திலிருந்து, கண்ணுக்குத் தெரியாத மிகச்சிறிய அணுவரை, முக்கியமாக நம்முடைய வாழ்வானது விதி, நட்சத்திரம், சந்தர்ப்பம் மற்றும் அதிர்ஷ்டம் போன்றவற்றால் நடத்தப்படாமல் சர்வ வல்லமையுள்ள பரலோகத்தின் கர்த்தரால் ஆகும் (மத்தே 10:29-31)

கர்த்தர் சகலத்தையும் ஆறு நாட்களில் படைத்து பின்னர் அதிலிருந்து ஓய்ந்து இருந்தார், பின்னர் நடைபெற்ற அற்புதங்களைக் குறித்து என்ன, அவைகள் படைப்பின் கிரியைகளா, அல்லது தெய்வீக செயலின் வெளிப்பாடா? படைப்பில் இல்லாதவைகள் இருப்பவைகளாக உருப்பெற்றது, அதாவது ஏழை விதவையின் வீட்டில் குறையாத எண்ணை (1 இரா 17:8; 2 இரா 4:1), ஐயாயிரம் பேர் சாப்பிட்ட உணவு (யோவா 6). இதுபோன்ற செயல்களில் சர்வ வல்லமையினாலே நடைபெற்ற தேவனுடைய பிற படைப்பின் கிரியைகளாகும். புவி ஈர்ப்பு சக்தி போன்ற இயற்கையின் நியதிகளைக் குறித்து பேசும்போது, இந்த நியதிகளை உண்டாக்கிய தேவனால் அவைகளைத் தமது விருப்பத்திற்கு ஏற்ப மாற்றவும் முடியும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதுபோன்ற மறுக்க முடியாத அற்புதங்களை இன்று நாம் எதிர்பாக்க முடியாவிட்டாலும், கர்த்தர் தமது அன்புள்ள செயலால் நம்மை ஆசீர்வதிப்பதை எப்போதும் எதிர்பார்க்க வேண்டும் (மத் 6:33; 1 தீமோ 4:8)

**27-க்கான கேள்விகள்:**

1. கேள்விகள் 27&28 ஆகியவை ........................................................ குறித்த உபதேசத்தை விளக்குகிறது.
2. கர்த்தருடைய தெய்வீக செயல் (Providence - from the Latin “providere” = “to see before”) என்பது படைக்கப்பட்டவைகளை ......................................................................................... ஆகியவற்றைக் குறிக்கிறது.
3. கர்த்தருடைய தெய்வீக செயல் என்பது... அ) இன்றும் ஆண்டவர் படைத்துக் கொண்டே இருக்கிறார், ஆ) தேவனுடைய வல்லமை சிலவற்றில் இருக்கிறது, இ) படைக்கப்பட்டவைகளைத் தொடர்ந்து பாதுகாத்து, பராமரித்து வருவதல்... ஆகும். எது சரி? .................
4. தேவன் தான் படைத்த ஒன்றைத் தாங்கும் தமது செயலை நிறுத்தினால், அந்த பொருளுக்கு என்ன நடக்கும்? ........................................................................................................
5. ஜனங்கள் தேவனுடைய தெய்வீக செயலில் விசுவாசம் வைக்காத போது, பேசுவது என்ன? ..............................................................................................................................................
6. சாத்தான் மற்றும் மனிதர்களின் பாவ கிரியைகள், தேவனுடைய வெறுப்புக்கு உரியதாகையால், அவைகள் தேவனுடைய திட்டம் மற்றும் ஆளுகைக்கு உட்பட்டது அல்ல? சரியா, தவறா?......................
7. அற்புதங்கள் இயற்கை நியதிகளுக்கு எதிரானது, ஆகவே அவைகள் இன்று நடைபெறுவது கிடையாது. சரியா? தவறா? .......................
8. பஞ்சம், பட்டினி மற்றும் வியாதி போன்றவைகள் தற்செயலாக நமக்கு நேரிடாமல் தேவனுடைய ஆளுகையின் கீழ் நமக்கு வருவதாகையால்,.... அ) இவைகளைப் புறக்கணிக்க முயற்சி செய்யக் கூடாது, ஆ) நாம் அவைகளை நன்றியோடு பெற வேண்டும், இ) தேவன் நம்மை வெறுப்பதால் இவைகளை அனுப்புகிறார் என்று அறிய வேண்டும். எது சரி? .............
9. தேவனுடைய செயலும், இயற்கையின் நியதியும் ஒன்றுக்கொன்று எதிரானது. அதாவது, ஒன்று உண்மையெனில், மற்றொன்று உண்மையாக இருக்காது. சரியா, தவறா? .......................
10. அப்போ 14:17-ஐ எழுதவும்:

**28. தேவன் படைத்தார், தமது தெய்வீக செயலால் அவைகளைத் தாங்குகிறார் என்பதை அறிவதினால் நமக்கு என்ன நன்மை?**

உபத்திரவத்தில் பொறுமை, செழிப்பில் நன்றியுணர்வு உடையவர்களாக, சகலத்தையும் படைத்து

தாங்குகிற நம்முடைய பிதாவும் கர்த்தருமாகிய தேவனில் நல் நம்பிக்கை கொண்டு, எந்த ஒரு படைப்பும் நம்மை அவருடைய அன்பிலிருந்து பிரிக்க முடியாது, அவருடைய சித்தம் இல்லாமல் நம்மை அசைக்க முடியாது என்பதை அறியலாம்.

***

அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் முதல் அறிக்கையை விளக்குவதற்கான இந்தக் கடைசி கேள்வியானது நம்மை எல்லாவற்றையும் படைத்து பாதுகாத்து ஆளுகை செய்யும் தேவனின் கிரியைகளை அறிவதால் பெறப்படும் உன்னத ஆறுதலுக்கு நேராக நம்மை நடத்துகிறது. இந்த அறிவானது, நாம் தேவனுடைய தெய்வீக செயலில் விசுவாசம் வைத்தாலும் அல்லது வைக்காவிட்டாலும், பரலோக தேவன் மட்டுமே நம்முடைய வாழ்வின் காரியங்களை ஆளுகிறார் என்பதை விசுவாசித்தாலும், விசுவாசிக்கா விட்டாலும் நம்மில் ஒரு பெறும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

தேவனுடைய தெய்வீக செயலைக் குறித்து மூன்று வித கிறிஸ்தவ மனப்பான்மையை நாம் பெற வேண்டிய அவசியத்தை நாம் இங்கே காண்கிறோம்:

1. உபத்திரவத்தில் நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.
2. செழிப்பான நேரத்தில் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. எதிர்காலத்தைக் குறித்த நல் நம்பிக்கையுடையவர்களாக இருக்க வேண்டும்.

நம்மைப் படைத்து நம்மை மீட்ட அதே கர்த்தர் நம்மை விட்டு விலகுவதுமில்லை நம்மைக் கைவிடுவதுமில்லை. அவருடைய தெய்வீக செயலானது எப்போதும் நம்முடைய நன்மைக்காகவும், நம்மை நித்திய நன்மை மற்றும் மகிமைக்கு ஏதுவாக நடத்துகிறது.

"வேறெந்த சிருஷ்டியானாலும் அவருடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்க மாட்டாது". "சிருஷ்டி" என்பது படைக்கப்பட்ட எதுவானாலும், உயிருள்ளதோ அல்லது உயிரற்றதோ; மனிதன், மிருகம், ஏஞ்சல். போன்றவைகள் தேவனுடைய சித்தமல்லாமல், வானத்திலுள்ள சூரியன் அல்லது சந்திரன் அல்லது மனிதனுடைய சிந்தனைகள் எதுவுமே நம்மை அசைக்க கூட முடியாது இது. எத்தனை அருமையான ஆறுதல்! முக்கியமாக துன்பம், துக்கம், வேதனை போன்ற நேரங்களில்.

ஆனால், இங்கே நாம் சிந்திக்க வேண்டிய ஒரு செய்தியுண்டு. அதாவது, உயிருள்ள, யோசிக்கும் திறன் கொண்ட படைப்பு, உதாரணம் மனிதர்கள், இவர்களுக்கு (self will / will-power) தான் என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கும் வினைத்திறன் உண்டா? நீங்கள் ஒரு காரியத்தை தனியாக விரும்பி, தீர்மானம் செய்கின்றீர்களா? நிச்சயமாகவே நீங்கள் செய்கின்றீர்கள்! தேவனுடைய விருப்பம், மனிதனுடைய விருப்பம் என்று உண்டு, இரண்டும் வெவ்வேறு, ஒன்றோடு ஒன்றைச் சார்ந்தது அல்ல.

இதற்குப் பதில், "இல்லை" என்பதாகும். தேவனுடைய (will) சித்தம் / தீர்மானம், அதாவது எதையும் தம் சித்தம்போல முன்குறித்தல் மற்றும் தெய்வீக செயலானது படைக்கப்பட்ட சிந்திக்கும் ஜீவன்களையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறது, ஆகவே மனிதன் தானாக முடிவெடுக்கும் வினைத்திறனிலும் தேவனுடைய சித்தம் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. ஆம், மனிதன் பாவம் செய்யும்போதும் கூட, அவர்கள் குமாரனாகிய கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த போதும் தேவனுடைய தீர்மானத்தை மட்டுமே நிறைவேற்றினார்கள் (அப்போ 2:23; 4:26,28). இது நம்மால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கும், "அவருடைய சித்தம் இல்லாமல் அவர்கள் அசையவும் கூடாது" நீதி 19:21; அப்போ 17:28 ஆகியவற்றைப் பார்க்கவும். ஆனால், தேவனுடைய மற்றுமொரு சித்தமும் உண்டு: அவருடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தம் அல்லது அவருடைய கற்பனைகளின் சித்தம். இந்த இரண்டாவது தேவனுடைய சித்தமானது பாவியான மனிதனால் ஒருபோதும் கடைப்பிடிக்க முடியாத ஒன்றாக உள்ளது. ஆகவே தேவனுக்கு இருவகையான சித்தம் / தீர்மானம் உண்டு என்பதை அறியவேண்டும், அதாவது, முன் குறித்தலின் சித்தம், வெளிப்படுத்தப்பட்ட சித்தம், இவை இரண்டுக்கும் இடையே உள்ள உறவுகளின் இரகசியத்தை நம்மால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. (உபா 29:29 பார்க்க)

**28-க்கான கேள்விகள்:**

1. தேவன் சகலத்தையும் ஆள்கின்றார் என்பது... அ) விசுவாசிக்கு, ஆ) அவிசுவாசிக்கு... ஆறுதலின் செய்தி. எது சரி? ..................
2. தேவனுடைய தெய்வீக செயல் என்பது மனித அறிவால் புரிந்து கொள்ள முடியாத ஒன்று, சில நேரங்களில் சில நல்ல கிறிஸ்தவர்களும் அவருடைய சித்தத்தின்படி சபிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். சரியா, தவறா? ....................
3. "சிருஷ்டி" என்று கேட்டகிசம் கூறுவதென்ன? ..................................................................................................
   ..................................................................................................................................................
4. தேவன் எல்லாவற்றையும் எல்லா நேரத்திலும் ஆளுகை செய்யாவிட்டால், வேறு ஒரு சக்தி தேவனுக்கு இணையாக இருக்க நேரிடும். சரியா, தவறா? ....................

**5. பொருத்துக:**

| | | |
|---|---|---|
| நன்றியுடைமை | - | உபத்திரவத்தில் |
| நல் நம்பிக்கை | - | செழிப்பில் |
| நம்பிக்கை | - | எதிர் காலத்தில் |
| பொறுமை | - | பாடுகளில் |

6. செழிப்பு, வருமானம், நல் அறுவடை போன்றவற்றுக்காக மட்டும் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும், வறட்சி, தோல்வி, வியாதி போனறவற்றுக்காக அல்ல. சரியா, தவறா? ......................
7. தேவனுடைய இரண்டு சித்தங்கள்:
   அ) ..........................................................................................................................................................
   ஆ) ..........................................................................................................................................................
8. மனிதர்களுடைய பாவமும் தேவனுடைய இரகசியமான திட்டத்துக்குள் உட்பட்டதால் தங்களின் பாவங்களுக்கு மனிதர்கள் பொறுப்பு அல்ல. சரியா, தவறா? .......................
9. எல்லா மனிதர்களும் ஆட்டோபாம் போன்றவற்றால் திடீரென அழிக்கப்படுவார்கள் என்று மனிதர்களில் அநேகர் கூறுகின்றனர். தேவன் தமது சபைக்காக திட்டமிட்டுள்ள எதிர்காலத்தை மனிதன் அழிக்க முடியாமா? விளக்குக:.....................................................................................................................................
10. ரோமர் 8:28,35 எழுதவும்.

**29. தேவனுடைய குமாரன் இயேசு, அதாவது இரட்சகர் என்று அழைக்கப்படுவது ஏன்?**

காரணம் இவர் நம்மை நம்முடைய பாவத்திலிருந்து இரட்சிக்கிறார், மேலும் இரட்சிப்பு வேறெங்கும் தேடவும், கண்டுபிடிக்கவும் முடியாது.

***

கேட்டகிசத்தின் 29 முதல் 52 வரையிலான கேள்விகள் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் 2 முதல் 7 வரையிலான அறிக்கைகளை விளக்குகிறது. இந்த (articles) அறிக்கைகள் தேவனுடைய குமாரன் மற்றும் நம்முடைய மீட்பைக் குறித்து விளக்குகிறது. கேட்டகிசம் இந்தப் பாடத்தை மூன்று பிரிவாக பிரிக்கின்றது.

1) கிறிஸ்துவின் நாமங்கள் மற்றும் தகுதி பெயர்கள் (29-34)
2) கிறிஸ்துவின் ஐந்து தாழ்வு நிலைகள் (35-44)
3) கிறிஸ்துவின் நான்கு உயர்வு நிலைகள் (45-52)

இப்போது நாம் கிறிஸ்துவின் நாமங்களைக் குறித்து படிப்பதைத் தொடர்வோம்.

தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் வேதம் பல பெயர்களைக் கொடுக்கிறது. சில “விடிவெள்ளி”, “நீதியின் சூரியன்” (வெளி 22:16, மல்கி 4:2) போன்ற வானுலகத்திற்குரிய படைப்பு பெயர்களும்; சில நேரங்களில் ”சாரோனின் ரோஜா”, “பள்ளத்தாக்கின் லீலி” (உன்ன 2:1) போன்ற தவாரவுலகப் பெயர்களும்; சில “தேவ ஆட்டுக்குட்டி”, “யூத சிங்கம்” (யோவா 1:29, வெளி 5:5) போன்ற விலங்குலக பெயர்களும் எடுத்தாளப்பட்டுள்ளது. இன்னும் பல பெயர்கள் கொடுக்கப்படலாம். நமது இரட்சகருக்கு கொடுக்கப்படும் எல்லா பெயர்களும் அர்த்தமுள்ளவைகளாக, அவருடைய தனிசிறப்பு மற்றும் செயல்களின் (His Person and Work) மகத்துவம் மற்றும் சிறப்புயர்வை வெளிப்படுத்துகிறது.

“ஆண்டவர்”, “இயேசு”, மற்றும் “கிறிஸ்து” போன்ற பெயர்கள் இரட்சகருக்கான பொதுவான பெயர்களாகும். “இயேசு” என்ற பெயர் இந்த கேள்வியில் விளக்கப்பட்டுள்ளது. இயேசு என்ற புதிய ஏற்பாட்டு பெயர், பழைய ஏற்பாட்டின் “யோசுவா” என்ற பெயரின் வடிவாமாக “ஆண்டவர் இரட்சிக்கிறார்” என்ற அர்த்தமுடையதாகும். தூதன் யோசேப்பிடம் மரியாளின் குழந்தைக்கு இயேசு என்று பெயரிடும்படி கூறினான், காரணம் “அவர் தமது ஜனங்களின் பாவத்தை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” (மத் 1:21) என்பதாகும். எப்போதெல்லாம், “இயேசு” என்ற பெயரை கேட்க அல்லது வாசிக்க நேரிடுகிறதோ, அப்போதெல்லாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்று மீட்கப்பட தேவ குமாரனால் மட்டுமே முடியும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டில் யோசுவா எப்படி தேவ ஜனங்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்திற்குள் நடத்தினாரோ அதுபோல புதிய ஏற்பாட்டு “யோசுவா” ஆகிய இயேசு நம்மை பரலோக கானானுக்குள் நடத்துகிறார். இயேசு கிறிஸ்து மட்டுமே ஒரே இரட்சகர், மேலும் அடுத்த கேள்வி கற்பிப்பதைப் போல அவரே முற்று முடிய இரட்சிக்கிறவர்.

**29-க்கான கேள்விகள்:**

1. கேட்டகிசத்தின் 29 முதல் 52 வரையிலான கேள்விகள் ..................................................... பிரமாணத்தின் ................................. அறிக்கைகளை விளக்குகிறது.
2. இந்த அறிக்கைகள் (articles) எதை விளக்குகிறது?
3. கேள்விகள் 29 முதல் 34 ............................................................................................................ விளக்குகிறது.
4. நமது இரட்சகருக்கு கொடுக்கப்படும் எல்லா பெயர்களும் ........................................................................ .................................................................................................................................... வெளிப்படுத்துகிறது.
5. இயேசு என்றால் ........................................................................................ இது பழைய ஏற்பாட்டின் ............................ என்ற பெயரின் வடிவமாகும்.
6. தேவ குமாரன் இயேசு “இரட்சகர்” என்று அழைக்கப்படுவதேன்? ........................................................................ ...........................................................................................................................................................

7. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பெயர் இருப்பதுபோல "இயேசு" என்பது கிறிஸ்துவினுடைய தனி ஆளுக்குரிய பெயராகும். சரியா, தவறா? ........................
8. யாரை பாவத்திலிருந்து இரட்சிப்பார் என்று தூதன் கூறினான்? ................................................ (மத் 1:21) இது எல்லா மனிதரையும் குறிக்கிறதா? அல்ல தெரிந்து கொள்ளப்பட்டவர்களை மட்டுமா? ..............................
9. "இயேசு" என்ற பெயர் கூறுவது... அ) தேவன் இரட்சிக்கிறார், ஆ) பழைய ஏற்பாட்டு யோசுவா இரட்சிகிறார், இ) நாம் நம்மை நாமே இரட்சிக்க வேண்டும். எது சரி? ................
10. அப்போ 4:12 எழுதவும்:

**30. தங்களுடைய மற்றும் பிறருடைய மீட்பு மற்றும் நன்மைகளுக்காக தங்களையோ அல்லது வேறு எதையாகிலும் நோக்குகின்றவர்கள் ஒரே இரட்சகராகிய இயேசுவில் விசுவாசம் வைக்கின்றார்களா?**

இல்லை, அநேகர் இயேசுவைக் குறித்து பெருமையாக பேசினாலும், தங்களுடைய செயல்களினால் ஒரே இரட்சகராகிய இயேசுவை மறுதலித்து, இயேசு முழுமையான இரட்சகர் இல்லை என்று நினைக்கின்றனர் அல்லது உண்மையான விசுவாசத்தால் இரட்சகரை ஏற்றுக் கொள்கிறவர்கள், தங்களுடைய மீட்புக்குத் தேவையான அனைத்தும் அவருக்குள் உள்ளது என்று விசுவாசிக்க வேண்டும் என்று கேட்டகிசம் கூறுகின்றது.

***

இந்த கேள்வி இயேசு "ஆண்டவர் இரட்சிக்கிறார்" என்ற பெயரின் அடுத்தகட்ட விளக்கத்தை தருகிறது. இயேசு இரட்சிக்கிறார் என்று சொல்வது, இயேசு மட்டுமே ஒரே இரட்சகர் என்று அர்த்தம். இன்றும் அநேகர், இந்த கேட்டகிசம் எழுதப்பட்ட நேரத்தில் இருந்ததுபோல, இயேசுவை இரட்சகர் என்று கூறியும், அவர் மட்டுமே ஒரே இரட்சகர் என்பதை மறுக்கின்றனர். ரோமன் கத்தோலிக்கர்கள் இயேசுவோடு பரிசுத்தவான்களையும் சேர்த்து, இயேசுவிடம் ஜெபிப்பது போல முக்கியமாக மரியாள் போன்றவர்களிடமும் ஜெபம் செய்கின்றனர். மற்றவர்கள், உதாரணமாக (16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், பொதுவாக ஏற்றுக்கொண்ட சமயக் கருத்துகளுக்கு எதிரான டச்சுக்காரர் ஜேம்ஸ் ஆர்மீனியசின் போதனைகளை நம்பும்) ஆர்மீனியர்கள் அவர்களுடைய இயற்கையான சொந்த விசுவாசம் மற்றும் (free will) தன்னிச்சையாக முடிவெடுக்கும் வினைத்திறன் ஆகியவை இல்லாமல் கிறிஸ்துவால் ஒருவனை ஒருபோதும் இரட்சிக்க முடியாது என்று கூறுகின்றனர். வேறு சிலர், தங்களுடைய நற்கிரியைகள் மற்றும் பிரசித்தி பெற்ற திருச்சபையின் அங்கமாக இருப்பது அவர்களை இரட்சிக்கும் என்று நம்புகின்றனர். இப்படிப்பட்டவர்களை நாம் (Legalist லீகலிஸ்ட்) சட்டம் சார்ந்வர்கள் என்கிறோம், காரணம் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பதோடு நியாயப்பிரமாணத்தையும் கடைப்பிடித்தால்தான் இரட்சிப்பு என்று நம்புகின்றனர். கலாத்தியருக்கு எழுதிய நிருபம் இதுபோன்ற லீகலிஸ்ட் கொள்கைகளுக்கு எதிராக எழுதப்பட்டதாகும். கலா 2:16,21-ஐப் பார்க்கவும்.

இவர்கள் யாவரும் கிறிஸ்து ஒருவர் மட்டுமே இரட்சகர் மற்றும் முழுமையான இரட்சகர் என்பதை மறுதலிக்கின்றனர். உங்களுடைய இரட்சிப்புக்குத் தேவையான அனைத்தும் கிறிஸ்துவில் மட்டுமே உள்ளதால் அவரில் முழுமையாக விசுவாசம் வைக்க உதவும்படி உங்கள் ஆண்டவரிடம் வேண்டுங்கள். சொல்லப்போனால் உங்களின் விசுவாசம் இயேசு மட்டுமே கொடுக்கும் ஈவு (எபே 2:8).

**30-க்கான கேள்விகள்:**

1. இந்தக் கேள்வி எதனுடைய விளக்கத்தை அதிகமாக தருகிறது? ................................................................
2. இயேசுவை விசுவாசிக்கிறேன் என்று கூறும் அனைவரும் உண்மையாகவே அவர் மட்டுமே ஒரே இரட்சகர் என்று கூறுகின்றனர். சரியா, தவறா? ..................
3. ஒரு மனிதன் இயேசு இரட்சகர் என்று கூறியும் தன்னுடைய சுய சித்தம் மற்றும் கிரியைகளைக் குறித்து பெருமை பேச முடியும். ஆம், இல்லை: ................., விளக்கம்: ..........................................................
.............................................................................................................................................
4. உண்மையான விசுவாசத்தால் இரட்சகரை ஏற்றுக் கொள்கிறவர்கள், ........................................................ ..................................................................................... என்று விசுவாசிக்க வேண்டும் என்று கேட்டகிசம் கூறுகின்றது.
5. மூன்று வகையான கூட்டத்தார் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லியும் அவர் மட்டுமே முழுமையான இரட்சகர் என்பதை மறுதலிக்கின்றனர், அவர்கள் யார்?
அ) லீகலிஸ்ட், ஆ) கால்வினிஸ்ட், இ) ரோமன் கத்தோலிக்கர், ஈ) பிரஸ்பிடீரியன்ஸ், உ) பாப்டிஸ்ட், ஊ) ஆர்மீனியன்ஸ், எ) ரிபார்ம்டு / சீர்திருத்த கிறிஸ்தவர். எந்த மூன்று? ..........................................
6. ஆர்மீனியன் என்றால் என்ன? ....................................................................................................
.............................................................................................................................................
7. ரோமன் கத்தோலிக்கர்கள் அதிகமாக எந்த பரிசுத்தரிடம் ஜெபம் செய்கின்றார்கள்? ..............................
8. உண்மையான விசுவாசம்... அ) இயற்கையான சொந்த நம்பிக்கையிலிருந்து, ஆ) பரிசுத்த ஆவியின் பெலத்திலிருந்து. எது? ............
9. ஒரு ரிபார்ம்டு கிறிஸ்தவன் கிறிஸ்துவைக் குறித்து பெருமைப் பட்டும், தனது மீட்புக்கு அவரில் மட்டும் விசுவாசம் வைப்பது போதுமானது அல்ல என்று கூறமுடியுமா? ................., விளக்கம்: ..........................
.............................................................................................................................................

10. கொலோ 2:10-ஐ எழுதவும்:

### 31. இயேசு, கிறிஸ்து (அபிஷேகிக்கப்பட்டவர்) என்று அழைக்கப்படுவதேன்?

நம்முடைய இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய சித்தம் மற்றும் இரகசிய ஆலோசனைகளை முழுமையாக நமக்கு வெளிப்படுத்த பிரதான தீர்க்கதரிசியாகவும், போதகராகவும் இருக்கும்படியாக பிதாவாகிய தேவனால் நியமிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப் பட்டிருப்பதாலும்; இவரே நம்முடைய ஒரே பிரதான ஆசாரியராக, தமது சரீரத்தை பலியாக்கி நம்மை மீட்டு, நமக்காக தம்முடைய பிதாவும், நம்மை தமது வார்த்தையினாலும், ஆவியினாலும் ஆட்சி செய்து பெற்றுக்கொண்ட மீட்புக்குள் பாதுகாத்து பராமரிக்கும் நம்முடைய பிதாவிடம் என்றைக்கும் பரிந்து பேசுகிறவராக இருப்பதாலும் ஆகும்.

***

கிறிஸ்து என்ற பெயரின் விளக்கத்தை கேள்விகள் 31, 32 தருகின்றது. இந்த பெயர் இயேசுவின் சரீரப்பிரகாரமான பெற்றோர்களால் கொடுக்கப்பட்டது அல்ல. மாறாக, இந்த பெயர் இயேசு நமது மீட்பர் என்ற நிலையில் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு மற்றும் பணிகளை விளக்கும் வகையில் அதிகாரப் பூர்வமாக தேவனால் கொடுக்கபட்ட நாமம் ஆகும். (கவனிக்கவும், இயேசுவை கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்தவர்கள், வேறேயொரு கிறிஸ்துவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்). கிறிஸ்து என்ற பெயர் கிரேக்க மொழியின் “கிறைஸ்ட்டாஸ்“ என்ற வார்த்தையிலிருந்து வந்து, “அபிஷேகிக்கப்பட்ட ஒருவர்” என்ற அர்த்தத்தைத் தருகிறது. பழைய ஏற்பாட்டு எபிரேய வார்த்தையான “மேஸியா”வும், கிரேக்க வார்த்தை “கிறிஸ்து” ஆகிய இரண்டும் ஒரே அர்த்தமுள்ள, “ஆபிஷேகிக்கப்பட்ட ஒருவர்” என்பதாகும்.

கிறிஸ்து அபிஷேகிக்கப்பட்டவர், தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் இராஜா ஆகிய மூன்று பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டியவராக இருந்தார் என்று நமது கேட்டகிசம் கூறுகின்றது. இவைகள் பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்வைகளாகும். மோசே, எலியா மற்றும் ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகள், ஆரோன் மற்றும் ஏலி போன்ற ஆசாரியர்கள், தாவீது மற்றும் சாலொமோன் போன்ற இராஜாக்கள் யாவரும் தேவனால் நியமிக்கப்பட்டு அபிஷேகிக்கப் பட்டார்கள். இந்த அபிஷேகமானது தலையில் எண்ணை ஊற்றி காண்பிக்கப்பட்டது, இது பரிசுத்த ஆவியானவர் ஒருவரை தான் நியமித்த வேலையை செய்வதற்குத் தேவையான ஞானம் மற்றும் பெலனைக் கொடுப்பதை அடையாளமாக காண்பித்தது.

தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் இராஜா ஆகிய மூன்று பதவிகளையும் தேவன் இயேசுவுக்கு கொடுத்தார். இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது (மத் 3:16), இந்த மூன்று கடைமைகளையும் நிறைவேற்ற புறாவின் வடிவாக வந்த பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப் பட்டார். இந்த இயேசு கிறிஸ்துவில் பழைய ஏற்பாட்டு காலத்தில் இருந்தவர்களைக் காட்டிலும் மகத்தான தேவனுடைய உன்னதமான தீர்க்கதரிசி, அவருடைய மேலான பிரதான ஆசாரியர் மற்றும் அவருடைய மிகச்சிறந்த இராஜா நமக்கு உண்டு.

நமது கேட்டகிசமானது, இந்த மூன்று பதவிகளின் வெவ்வேறு பட்ட கடைமைகளையும் போதிக்கிறது:

1. ஒரு தீர்க்கதரிசியாக, இயேசு தேவ சத்தியங்களின் முழுமையையும் நமக்கு விளக்கினார் (யோவா 15:1).
2. ஒரு ஆசாரியராக, இயேசு தம்மை பலியாகக் கொடுத்து, நமக்காக வேண்டுதல் செய்கிறார் (எபி 7:25,27).
3. ஒரு இராஜாவாக, இயேசு நம்மை ஆட்சி செய்து, என்றென்றும் நம்மைப் காப்பாற்றி பாதுகாக்கிறார் (லூக் 1:33)

இந்த மூன்று பதவியின் கடைமைகளையும் இயேசு பூமியில் நிறைவேற்றினார், மேலும் அவைகளை பரலோகத்திலிருந்தும் தொடர்ந்து செய்து வருகின்றார்.

**31-க்கான கேள்விகள்:**

1. கிறிஸ்து என்ற பெயர் இயேசுவிற்கு அவருடைய... அ) பெற்றோர், ஆ)தேவனால்... கொடுக்கப்பட்டது. எது? ..........., காரணம் இது அவருடைய... அ)தனிப்பட்ட, ஆ) பதவியைச் சார்ந்த பெயர். எது? ..........
2. கிறிஸ்து என்ற பெயர் பழைய ஏற்பாட்டின் எந்த கிரேக்க பெயரைக் குறிக்கும்? .................. அதன் விளக்கம் என்ன? ..........................................................................................................................................
3. புதிய ஏற்பாட்டில் இயேசு என்று அறியப்படும் அனைவருமே இயேசு கிறிஸ்து ஆவர். சரியா, தவறா?..........
4. பின்வரும் குறிப்புகளைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1 சாமு 16:13 | தீர்க்கதரிசி | எபிரே 8:1 |
| எரே 1:5 | ஆசாரியர் | 1 தீமோ 6:15ஆ |
| லேவிய 8:12 | இராஜா | யோவா 4:17-19 |

5. எப்போது இயேசு பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவின் கடமையைச் செய்ய அபிஷேகம் செய்யப்பட்டார்? ..........................................................................................................................................................
6. இயேசு கிறிஸ்து பிரதான தீர்க்கதரிசியாகவும், போதகராகவும் பிதாவாகிய தேவனால் நியமிக்கப்பட்டு நம்முடைய ............................................. குறித்த தேவனுடைய .............................................................................. நமக்கு வெளிப்படுத்தினார்.

7. நம்முடைய பிரதான ஆசாரியராக இயேசு இரண்டு செயல்களைச் செய்கிறார், அவைகள்?
   அ)
   ஆ)
8. இயேசு நம்முடைய இராஜாவாக செய்யும் மூன்று காரியங்கள் என்று நம்முடைய கேட்டகிசம் கூறுவது என்ன?
   அ)
   ஆ)
   இ)
9. ஒருவர் கிறிஸ்து தன்னுடைய இரட்சகர் என்று சொல்லியும், இராஜாவான அவருக்கு கீழ்ப்படியாமல் இருக்க முடியும். சரியா, தவறா? ..................
10. யோவான் 1:41 ஆ- எழுதவும்:

### 32. கிறிஸ்தவர் என்று நீங்கள் அழைக்கப்பட காரணம் என்ன?

விசுவாசத்தினால் நான் அவருடைய நாமத்தை அறிக்கை செய்து, அவருக்கு நன்றிக் கடனாக என்னையே ஜீவ பலியாக கொடுத்து, இந்த ஜீவனில் எனது சுதந்திரமான மனசாட்சியின்படி பாவம் மற்றும் பிசாசுக்கு எதிராக போராடி, நான் கிறிஸ்துவின் அங்கமாக இருந்து, அவருடைய அபிஷேகத்தில் பங்கெடுத்ததினால் அவரோடு நித்தியத்தில் சகல படைப்புகளையும் ஆளுகை செய்வேன் என்பதாலே ஆகும்.

***

நீங்கள் ஒரு பதவி வகிக்க விரும்புகின்றீர்களா? அரசியல்வாதிகள் பொதுவான பதவிகளை விரும்பி, அதற்காக அதிகமாக பிரயாசப் படுகின்றார்கள். ஆனால் மகாப் பெரிய மதிப்பு என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகின்றது வேறு எவருக்கும் இல்லை. கிறிஸ்தவர் என்ற பதவி நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது!

"கிறிஸ்தவன்" என்பது, "கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்" என்று அர்த்தம். "கிறிஸ்து" என்ற பெயர் எப்படி ஒரு பதவிப் பொறுப்பைக் குறிக்கின்றதோ, அதுபோல "கிறிஸ்தவர்கள்" என்ற பெயரால் அவரோடு நாமும் அவருடைய அபிஷேகத்தில் பங்குள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறோம். கிறிஸ்தவர் என்ற பெயர் மிகவும் சிறப்புமிக்க முக்கியமான பெயராக இருக்கின்றது. ஆனால் இந்தப் பெயர், அன்று கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களுக்கு அவருடைய எதிரிகளால் அவப்பெயராகக் கொடுக்கப்பட்டது! இந்தப் பெயர் புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் மட்டுமே காணப்படுகின்றது (அப் 11:26; 26:28; 1 பேது 4:16), இருப்பினும் நாம் இந்த பெயரை பெருமையாக அணிந்து கொள்கிறோம் இன்று!

கிறிஸ்துவின் மூன்று முக்கியமான பதவிகளைப் (கேள்வி 31 பார்க்க) பின்பற்றி, நாமும் அதே தீர்க்கதரிசி, ஆசாரியன் மற்றும் இராஜா ஆகியோரின் பதவிகளையும் உடையவர்களாக இருக்கின்றோம். உண்மையில், ஆதாம், நம்முடைய முதல் பெற்றோருக்கு இந்த மூன்று வகை பதவிகள் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், வீழ்ச்சியில், அவன் பிசாசுக்காக தீர்க்கதரிசி, ஆசாரியன் மற்றும் இராஜாவாக செயல்பட்டு, சாத்தானின் பொய்யைப் பேசி, தன்னை சாத்தானின் வேலைக்காக அர்பணித்துவிட்டு, சாத்தானுக்கு பதிலாக உலகை ஆளுகின்றவனாக மாறினான்.

நம்முடைய முதல் மூன்றுவகை பதவிகள் கிறிஸ்துவில் மீண்டும் பெறப்பட்டது. கிறிஸ்தவர்களாக, நாம் மீண்டும் தீர்க்கதரிசி, ஆசாரியன் மற்றும் இராஜாவாக இருக்கிறோம்.

1. தீர்க்கதரிசியாக, நாம் அவருடைய நாமத்தை அறிக்கை செய்து, பிறருக்கு அவருடைய சத்தியத்தை கூற வேண்டும்: அப்போ 2:17; ரோம 10:9; எபே 4:25.

2. ஆசாரியராக, நாம் கிறிஸ்துவுக்கு நம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, நம்முடைய எல்லாவற்றையும் அவருடைய சேவைக்காக அர்ப்பணிக்க வேண்டும் (இது நமது திறமைகள் மற்றும் செல்வத்தையும் உள்ளடக்கியதே): ரோம 12:1,2; 1 பேது 2:9.

3. இராஜாவாக, நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு, நம் மீது, நமது குடும்பம், திருச்சபை மற்றும் சமூதாயத்தின் மீது ஆளுகை செய்ய வேண்டும். நாம் பாவம் மற்றும் சாத்தானுக்கு எதிராக நல்ல போராட்டத்தை போராடுகின்றவர்களாக கிறிஸ்துவோடு இன்றும் என்றும் ஆட்சி செய்கின்றவர்களாக இருக்க வேண்டும்: ஆதி 1:28; ரோ 8:37; வெளி 1:6; 5:10.

கிறிஸ்தவன் என்றால் என்ன என்பதின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ள ஆரம்பிக்கும்போது, வாழ்க்கை அற்புதமானதாகவும், புதிய சவால் நிறைந்ததாகவும் மாறுகின்றது. பிரதான அதிகாரியான கிறிஸ்துவின் கீழ் உள்ள அதிகாரிகளாக இருப்பது எத்தனை ஆச்சரியமான காரியம்! கிறிஸ்துவுக்குள்ளான நமது அழைப்பை ஒருபோதும் மறக்கவோ அல்லது நமக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த பதவிகளான தீர்க்கதரிசி, ஆசாரியன் மற்றும் இராஜா ஆகியோருக்கு எதிரான காரியங்களை நாம் செய்யக் கூடாது. இந்த உன்னதமான வேலைக்கு தேவையான ஞானம் மற்றும் பெலன் ஆகியவற்றுக்கு நம்மை அபிஷேகித்த பரிசுத்த ஆவியானவரை சார்ந்தே இருக்க வேண்டும் (அப் 2:38; 1 யோவா 2:20,27)

**32-க்கான கேள்விகள்:**


1. நாம் பரிசுத்த ஆவியானவரால் அவரோடு இணைக்கப்பட்டு அவரைப் பின்பற்றுகின்றவர்கள் ஆனதால் நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். சரியா, தவறா? .............
2. "கிறிஸ்தவன்" என்றால் என்ன? ..........................................................................................................................
3. இந்தப் பெயர் விசுவாசிகளுக்கு முதலாவது யாரால் கொடுக்கப்பட்டது?..................................................
4. புதிய ஏற்பாட்டில் எத்தனை முறை இந்தப் பெயர் காணப்படுகின்றது? ........................................................
5. கிறிஸ்துவின் தீர்க்கதரிசியாக நாம் ........................................................................................ வேண்டும்.
6. கிறிஸ்தவ தீர்க்கதரிசியாக நாம், ஜனங்கள் கேட்க விரும்பாவிட்டாலும், சத்தியத்தை சத்தியமாக சொல்ல வேண்டும். சரியா, தவறா? .......................
7. நீங்கள் உங்கள் சரீரங்களை நன்றியினிமித்தம் ஜீவ பலியாக அர்ப்பணிப்பதால் தேவனுடைய ....................................... ஆவீர்கள்.
8. கிறிஸ்துவுக்காக நம்மை பரிசுத்தமாக்குவது என்பது... அ) எப்போதாகிலும் நாம் விரும்பும் போது அவருக்கு சேவை செய்வது, ஆ) நம்மிடம் அதிகமாக இருந்தால், அதில் கொஞ்சம் ஆண்டவருடைய பணிக்காக கொடுப்பது, இ) சிறந்த குடிமக்களாக இருப்பது, அதே நேரத்தில் விசுவாசத்தைக் குறித்து அதிக அக்கரை அற்றிருப்பது, ஈ) வேறு எந்த கேளிக்கைகளும் இல்லை என்றால் திருச்சபைக்கு வருவது, உ) இதில் எதுவும் இல்லை... எது சரி? ................
9. கிறிஸ்துவின் இராஜாக்களாக, நாம் சுவிசேஷத்தை பிறர் புறக்கணித்தாலும் தைரியமாக பிறருக்கு எடுத்துக் கூறுவதாகும். சரியா, தவறா? ...............
10. வெளி 1:6-ஐ எழுதவும்:

**33. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படும்போது, கிறிஸ்து மட்டும் அவருடைய "ஒரே பேரான குமாரன்" என்று அழைக்கப்படுவது ஏன்?**

காரணம், கிறிஸ்து மட்டுமே நித்தியமாக, இயற்கையாக தேவனுடைய குமாரனாக இருக்கின்றார்; ஆனால் நாமோ கிருபையினால் கிறிஸ்துவினிமித்தம், சுவிகாரப்புத்திரராக்கப் பட்டுள்ளோம்.

***

அப்போஸ்தல விசுவசாப் பிரமாணத்தில் இரட்சகரின் மூன்றாவது பெயர் "ஒரே பேரான குமாரன்" என்பதாகும். இந்தக் கேள்வியில் இந்தப் பெயர் விளக்கப்பட்டுள்ளது. ஒரு தகப்பன் ஒரு குழந்தையை "பெற்றெடுக்கிறார்", அவர் ஒரு குழந்தைக்கு ஜீவனைக் கொடுக்கிறார். நீங்கள் யாவரும் உங்களுடைய தகப்பனால் பெற்றெடுக்கப்பட்டீர்கள். தேவனுடைய குமாரனும் பிதாவின் ஒரே பேரான குமாரன் என்று அழைக்கப்படுகின்றார். யோவா 1:14,18; 3:16 ஆகியவற்றை காண்க. இது பிதாவாகிய கடவுள் மற்றும் குமாரனாகிய கடவுள் ஆகிய இருவருக்கும் இடையேயுள்ள மிகவும் நெருங்கிய உறவைக் குறிக்கின்றது. குமாரனின் ஜீவன் பிதாவிடமிருந்து வருகின்றது. அப்படியானால் பிதா குமாரனைக்காட்டிலும் முதியவர் அல்லது பெரியவர் என்று அர்த்தம் ஆகாது. பிதாவைப்போலவே குமாரனும் நித்தியமானவர். குமாரன் பிதாவினுடைய இயற்கையான குமாரனாக இருக்கின்றார்; அதாவது, குமாரனும் பிதாவைப்போலவே ஒரே (same Divine Substance) தெய்வீக சாரத்தை உடையவராகவும், பிதாவைப் போலவே (same Being) ஒரே நபராகவும் இருக்கின்றார். தேவனுடைய ஜீவன் பிதாவிலிருந்து குமாரனுக்கும், ஆவியானவருக்கும் செல்கின்றது. ஒரு வரைபடம் இதை விளக்க உதவும்:




பிதாவாகிய தேவனுடைய ஜீவன் எப்படி மூன்று நபர்களிடையே பிரவாகிக்கிறது

நவீன காலத்தில் பலர் கிறிஸ்துவை "தேவனுடைய குமாரன்" என்று அழைக்க விரும்பினாலும், வேதமும், நமது கேட்டகிசமும் அர்த்தப்படுத்துவதுபோல் அர்த்தம் கொள்வது இல்லை; மற்றபடி நாம் அனைவருமே அவரைப்போலவே தேவனுடைய குமாரர்கள் என்கின்றனர். இயேசு நம்மைப்போல் இருக்கிறார், ஆகவே நாமும் அவரைப்போல இருக்கிறோம். உண்மை என்னவெனில், கிறிஸ்து இயற்கையாக பூர்வ முதல் தேவனுடைய குமாரனாகவும், நாமோ புத்திர சுவிகாரத்தை இலவசமாய்ப் பெற்றதினிமித்தமும்

தேவ குமாரர்களாக இருக்கிறோம். இயேசு "தேவனுடைய ஒரே பேரான குமாரன்" என்று சொல்வது அவர் தேவன்/கடவுள் என்பதாகும். நாம் புத்திர சுவிகாரத்தின்படி தேவனுடைய குமாரர்கள் என்பது, மனிதர்களான நாம் கிருபையினால் மீட்கப்பட்டு தேவனுடைய குடும்பத்திலும் வீட்டிலும் அங்கமாக்கப்பட்டோம் என்பதாகும்.

**33-க்கான கேள்விகள்:**

1. பிதாவாகிய தேவன் மட்டுமே குமாரனை பிறப்பிக்கமுடியும்; மனித பெற்றோர்கள் பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியாது. சரியா, தவறா? .......................
2. இயேசு, "ஒரே பேரான குமாரன்" என்பது, அவர் பிதாவைவிட சிறியவர் என்பதாகும். சரியா, தவறா?............
3. இயேசு தேவனுடைய இயற்கையான குமாரன் ஆவர். இப்படி சொல்வது, எல்லா விசுவாசிகளும் தேவனுடைய இயற்கையான குமாரர்கள் ஆவர். சரியா, தவறா? .......................
4. "ஒரே பேரான குமாரன்" என்பது குமாரனை கடவுளைக் குறிக்கும் சில வசன ஆதாரங்களை குறிப்பிடுக: ......................................................................................................................................................
5. இயேசுவை நித்தியமான, இயற்கையான குமாரன் என்று சொல்வது அவர் தேவன்/கடவுள் என்பதாகும். சரியா, தவறா? ..................
6. தேவனுடைய ஜீவன் எப்படி திரியேக தேவனின் நபர்களுக்கிடையே பிரவாகிக்கிறது என்ற விளக்கப் படம் வரைக:
7. எந்த ஜனங்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்று சொல்லியும், அவர் உண்மையாகவே கடவுள் என்பதை மறுக்கின்றனர்? ........................................................
8. சாதாரண மனிதர்கள் ஒருபோதும் எந்த அர்த்தத்திலும் "தேவனுடைய குமாரர்கள்" என்று அழைக்கப்பட முடியாது. சரியா, தவறா? ..................
9. யோவா 1:12, ரோம 8:14-16, ஆகிய வசனங்களை கவனிக்கவும்...
   அ. கிருபையினால் தேவனுடைய குடும்பத்தில் புத்திர சுவிகாரத்தின்படி அங்கமாவது என்பதைக் குறித்து உங்களின் அபிப்பிராயம் என்ன? ......................................................................................
   ஆ. யார் இந்த சுவிகாரப் புத்திரத்தைப் பெறுகின்றனர்? ......................................................................
   இ. எப்போது இது நடக்கிறது? ........................................................................................................
10. எபேசி 1:5,6 ஐ எழுதவும்:

**34. குமாரனாகிய இயேசுவை "எங்கள் ஆண்டவரே" (Our Lord) என்று அழைப்பது ஏன்?**

அவர் பொன்னினாலும், வெள்ளியினாலுமல்ல, ஆனால் தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தால் நம்முடைய சரீரம் மற்றும் ஆத்துமாவை பாவத்திலிருந்தும், சாத்தானின் வல்லமையிலிருந்தும் மீட்டு கிரயம் செலுத்தி நம்மை அவருக்கு சொந்தமாகக் கொண்டதாலேயாகும்.

***

கிறிஸ்துவுக்கு விசுவாசப் பிரமாணத்தில் நான்காவதும், கடைசியுமாக கூறப்பட்டுள்ள பெயரான, "ஆண்டவர்" (Lord), என்பதன் விளக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. "ஆண்டவர்" என்ற பெயர் மற்றவர்களின் மீது அதிகாரமும், ஆளுகையும் உடைய ஒருவருக்கு கொடுக்கப்படுவதாகும். இயேசு கிறிஸ்து எல்லாவற்றுக்கும் மேலான ஆண்டவர். இவர் "இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா" (வெளி 17:14;19:16). இயேசு "ஆண்டவர்" என்று அழைக்கப்படுவதன் காரணம், அவர் நம்முடைய ஆத்துமா மற்றும் சரீரத்தை நம்முடைய முந்தைய எஜமானிடமிருந்து மீட்டார். நம்முடைய சுயவிருப்பத்தின்படி ஆதாமுக்குள் செய்த பாவத்தினால் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பின்படி பாவம், மரணம், பிசாசு, மற்றும் நரகம் ஆகியவற்றின் ஆளுகைக்குள் வந்தோம்.

இப்போது, இயேசு தமது விலையேறப் பெற்ற இரத்தத்தை கிரயமாகச் செலுத்தி நம்முடைய சுதந்திரத்தை அடிமைத்தனத்திலிருந்து மீட்டார் (1 பேது 1:18,19). பழைய ஏற்பாட்டில், அடிமையின் எஜமானிடம் விலைக் கிரயத்தை செலுத்தினால் அவனை மீட்க முடியும். நம்முடைய இரட்சகர் பாவம் மற்றும் சாத்தானுக்கு அடிமைகளாக இருந்த நம்மை மீட்டார். தம்முடைய சொந்த இரத்தத்தால் நம்மை மீட்டு, தனக்கு சொந்த வேலையாட்களாகவும், அடிமைகளாகவும் நம்மை மாற்றினார். நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து அவரை சொந்த ஆண்டவராகவும், இரட்சகராகவும் பெற்றிருந்தால் மட்டுமே, அவரை நீங்கள், "எங்கள் ஆண்டவரே" என்று அழைக்க முடியும். கிறிஸ்து உங்களுடைய ஆண்டவராக இருந்தால் பிசாசுக்கு அடிமைகளாக வாழும் அவிசுவாசிகளைப் போல நீங்கள் வாழ முடியாது. கேள்வி பதில் 1-ஐ வாசிக்கவும்.

**34-க்கான கேள்விகள்:**

1. இயேசுவினுடைய அதிகாரம் நமக்கு முக்கியமானதல்ல. சரியா, தவறா?...................
2. எப்போது மனிதன் சாத்தானின் வேலையாளாக மாறினான்? ............................................................................
3. இயேசு அல்லது சாத்தான், இவ்விருவரில் ஒருவருக்கு மனிதன் வேலைக்காரனாக வாழ வேண்டும். சரியா, தவறா?...................

4. இயற்கையாக நாம் சாத்தானுக்கு அடிமைகளாக இருக்கின்றோம் என்பதை பின்வரும் வேதாகம சம்பவங்களில் எது கூறகின்றது?
   அ. ............. ஆதாம் - ஏவாள் தோட்த்தில் வேலை செய்தல்.
   ஆ. ............. இஸ்ரவேலர் எகிப்தில் பார்வோனுக்காக கஷ்ட்டப்படுதல்.
   இ. ............. இஸ்ரவேலர் சாலொமோனின் ஆலயத்தை கட்டுதல்.
   ஈ. ............. பாபிலோனின் இராஜாவுக்கு இஸ்ரவேலர் சேவை செய்தல்.
5. "மீட்டெடுத்தல்" என்பது... அ) விற்பது, ஆ) மீண்டும் வாங்குவது, இ) சிறைப்பிடித்தல், ஈ) தண்டித்தல்... எது? .............
6. இயேசு கிறிஸ்து நமது ஆண்டவராக இருக்கும் அளவிற்கு எதை செலுத்தி நம்மை மீட்டார்? ......................................................................................, வேதாகம குறிப்பு தருக: ..........................................
7. நிரப்புக: அவர் பொன்னினாலும், ..........................................., ..................... விலையேறப் பெற்ற இரத்தத்தால் நம்முடைய ........................................................................................................................................................ ........................................... நம்மை அவருக்கு சொந்தமாக்கினார்.
8. கிறிஸ்து நம்முடைய எஜமான் என்பதால், நம்முடைய அ) அன்பு; ஆ) கீழ்ப்படிதல்; இ) பயம்; ஈ) நன்றியுடைமை... இதில் எதைத் தர கடன்பட்டுள்ளோம். ............
9. நாம் இயேசுவுக்கு சொந்தமானால், நம்முடைய நேரம், திறமை, பணம், சொத்து யாவும் யாருக்கு சொந்தம்? ...........................................
10. தீத்து 2:14-ஐ எழுதவும்:

**35. "அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்" என்றால் என்ன?**

நித்தியமான தேவ குமாரன், தொடர்ந்து உண்மையான நித்திய தேவனாக இருக்கும் நிலையில், பரிசுத்த ஆவியானவரின் செயலால், கன்னி மரியாளின் இரத்தம் மற்றும் சரீரத்தால் மனித சாயலைத் தரித்து, பாவத்தை தவிர மற்ற எல்லாவற்றிலும் தன்னுடைய சகோதரருக்குள் தாவீதின் வம்சத்தில் ஒருவராக தோன்றினார்.

***

இயேசு கிறிஸ்துவின் நான்கு பெயர்களைப் படித்த நாம், இப்போது அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் 3&4 அறிக்கைகளில் உள்ள கிறிஸ்துவின் ஐந்து வகையான தாழ்ச்சி நிலைகளைப் படிக்கலாம். அவைகள், 1)அவருடைய பிறப்பு; 2)அவருடைய பாடுகள்; 3)அவருடைய மரணம்; 4)அவருடைய மரண அடக்கம்; 5)அவரின் பாதாள இறக்கம். இயேசுவின் தாழ்வு நிலை என்பது, முதலாவது அவர் பரலோகத்தை விட்டு துன்மார்க்கம் நிறைந்த இந்த உலகில், பாவத்தினாலான வேதனை பிரதிபலன்களை அனுபவிக்க இந்த உலகில் வந்ததாகும். இயேசு பரலோகத்தின் மகிமையை விட்டு தேவனுடைய கோபத்தின் ஆழத்திற்குள் சென்று முடிவில் நரகத்தின் முழு ஆக்கினையையும் அனுபவித்தார்.

கேள்விகள் 35 மற்றும் 36, அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் மூன்றாவது அறிக்கையான, "கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பை" குறித்து விளக்குகிறது: இது எப்படி நடந்தது, ஏன்,? மத்தே 1,2; லூக் 1,2 ஆகிய அதிகாரங்கள் பெத்லெகேமில் ஆண்டவரின் கன்னிப்பிறப்பை சொல்கிறது. இயேசுவின் மனிதனுக்கான இயற்கைப் பண்பு (சரீரம் மற்றும் ஆத்துமா) பரிசுத்த ஆவியால் கன்னி மரியாளின் கருவில் அவதரிக்கப்பட்டார். இப்போது, மரியாளின் மூலமாக மனிதனுக்கான இயற்பண்புகள் அனைத்தையும், நம்மைப்போலவே எல்லாவிதத்திலும், பாவம் மட்டும் நீங்கலாக, பெற்றார். கேள்வி 16-ல் இயேசு ஏன் உண்மையான மனித இயற்பண்புகளைப் பெற வேண்டும் என்பதைக் காணலாம். (மீண்டும் பார்க்கவும்)...

நவீனகாலக் கருத்துடையோர் (Modernists) இயேசுவின் கன்னிப்பிறப்பை மறுதலித்து, யோசேப்பு மட்டுமே இயேசுவுக்கு சரீர மற்றும் இரத்த சம்மந்தமான தகப்பன் என்கிறார்கள். ஆனால், இயேசு ஒரு பாவியான மனிதனுக்கு மகனாகப் பிறந்திருந்தால், அவர் நம்மை பாவத்திலிருந்து மீட்கும் இரட்சகராக முடியாது. இயேசுவின் பிறப்புக்குப் பின்னர், மரியாளும் யோசேப்பும் சேர்ந்து தங்களுக்கு இயற்கையான குழந்தைகளைப் பெற்றெடுத்தனர் (யோவா 7:3; அப்போ 1:14), இதை ரோமன் கத்தோலிக்கர்கள் மறுக்கின்றனர்.

ஏன் நம்முடைய ஆண்டவர், இந்த பதில் கூறுவதுபோல "தாவீதின் உண்மையான வித்தாக" இருக்க வேண்டும்; சங்கீ 132:11 சிறு குறிப்பு தருகின்றதா?

**35-க்கான கேள்விகள்:**

1. அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் ................. அறிக்கைகளில் உள்ள கிறிஸ்துவின் ................................ நிலைகளை விளக்குகிறது.
2. இயேசுவின் தாழ்ச்சி என்றால் என்ன? ........................................................................................ ................................................................................................................................................
3. கிறிஸ்து கருத்தரிக்கப்பட்டார்... அ) யோசேப்பு மற்றும் மரியாளால்; ஆ) பரிசுத்த ஆவியால் மரியாளுக்குள்; இ) மரியாளால் மட்டும்... எது சரி? .......
4. தேவ குமாரன் மனிதனானபோது, அவர் உண்மையான நித்திய தெய்வத்துவத்தை இழந்தார். சரியா, தவறா? ................

5. மரியாளுக்குள் நடந்த அற்புதத்தினால் இயேசு ............................, ................... சாயலைத் தரித்தார்.
6. இயேசு கருத்தரிக்கப்படல் மற்றும் பிறப்பை எந்த சுவிசேஷம் கூறுகின்றது? ..........................................
7. நவீன உபதேச ஊழியர்கள் இயேசுவின் தந்தை என யாரைக் கூறுகின்றனர்? .................................
8. ஏன் இயேசு பரிசுத்த ஆவியால் உற்பவிக்கப்பட்டு கன்னி மரியாளின் கருவில் தோன்ற வேண்டும்? ...........................................................................................................................................................
9. மரியாள் தாவீதின் இராஜ பரம்பரையில் வந்தமையால், மரியாளின் குமாரன் எந்தவிதமான பதவி வகிக்க தகுதியானவர்? ..........................................................................................................................
10. லூக் 1:35 ஐ எழுதவும்:

**36. கிறிஸ்துவின் பரிசுத்த கருத்தரிப்பு மற்றும் பிறப்பால் நீங்கள் பெறும் நன்மை என்ன?**

அவர் என்னுடைய மத்தியஸ்தராகவும், அவர் தமது குற்றமற்ற பூரணமான பரிசுத்தத்தால், என்னுடைய பாவம், நான் உருவான இடத்திலிருந்து, தேவனுடைய பார்வையில் என்னை மூடுகின்றார்.

***

பரிசுத்த ஆவியினால் இயேசு மரியாளின் கருவில் உருவானதின் நோக்கத்தை இங்கு காணலாம். அவர் பூரணமான மனித சாயலைத் தரிக்கும்படியாக நடந்தது. இந்த பரிசுத்த கருத்தரிப்பு தேவனுடைய குமாரனையும், அவருடைய பாவமற்ற மனித சாயலையும் பூரணமாக ஒன்றாக்கியது. மனிதக் கடவுள், இயேசுவால், இப்படியாக நமக்கு பதிலாளியாகவும், மத்தியஸ்தராகவும், நமது இரட்சகராகவும் செயல்பட முடிந்தது. ஒருவேளை இயேசு, யோசேப்பு மற்றும் மரியாள் தம்பதியால் மட்டும் கருவுர செய்யப்பட்டிருந்தால், அவரும் ஒரு சாதாரண மனிதனாக, ஆதாமின் பாவத்துடன் நரக ஆக்கினைக்குரியவராகவே பிறந்திருக்க வேண்டும். ஆனால் அவர் பரிசுத்த ஆவியால் கருவுரச் செய்யப்பட்டதால், அவர் தெய்வீக நபராக, பாவமற்ற நிலையில், நம்முடைய குறை ஏதும் அற்ற இரட்சகரானார். நம்முடைய பாவத்தை அவர் ஏற்றுக்கொண்ட நிலையில், அவருடைய நீதி நம்முடையதானது.

இயேசுவின், மனித புத்திக்கு மேலான தெய்வீக கருவுருதலை, நவீன சிந்தனையாரைப்போல, மறுதலிப்பது நம்முடைய பாவத்திலிருந்து விடுதலை செய்யும் பாவமற்ற தேவ குமாரனை மறுதலிப்பதற்கு இணையானது.

கடவுள் மனிதனாகும் அவதாரத்தைக் குறித்த உண்மையானது தனிமனித மீட்புக்கு மட்டுமல்ல, முழு மானிடத்தின் விடுதலைக்கும் அடிப்படையாகும். இதன் விளக்கம்: எந்தவொரு தனிமனிதனும், தேவனற்ற அரசாங்கம் செய்வதுபோல, மற்ற மனிதர்கள் மீது கடவுளைப்போல அதிகாரம் இருப்பதாக கூறமுடியாது. கிறிஸ்து மட்டுமே கடவுளாகவும், மனிதனாகவுமிருக்கிறார். எல்லா மனித அதிகாரங்களும் கிறிஸ்துவிடமிருந்து வருகின்றது, அவைகள் அவருடைய நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படியக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த சத்தியம் நடைமுறைப் படுத்தப்படும்போது எல்லா அரசுகளும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும், பின்னர் மனித சுதந்திரம் பாதுகாக்கப்படும். மனிதர்கள் அல்ல, கிறிஸ்து, ஒருவர் மட்டுமே மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துகின்றார், எந்தவொரு அரசாங்கமும் இதை செய்வதாக கூறமுடியாது.

**36-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 36-ல், இயேசுவின் பிறப்பு ..................................................................................................... என்பதை அறிகிறோம்.
2. சரியான பதிலை குறிப்பிடுக:
   அ. ......... இயேசு மரியாளின் கருவில் தெய்வீக குழந்தையாக உருவானது ஓர் அற்புதம்.
   ஆ. ......... இயேசுவின் பிறப்பு ஓர் அற்புதம்.
   இ. .......... இயேசுவின் தெய்வீகக் கருவுறுதலும், பிறப்பும் அற்புதங்களே.
3. எந்த விதத்தில் இயேசு நம்மைப்போல் இல்லை? (எபிரே 4:15) ......................................................... ..........................................................................................................................................................
4. எந்த விதத்தில் இயேசு நம்மைப்போல் இருந்தார்? ................................................................................ ..........................................................................................................................................................
5. இயேசு யோசேப்பால் பிறப்பிக்கப்பட்டிருந்தால் அவர் நம்முடைய இரட்சகராக இருந்திருக்க முடியாது, காரணம் என்ன? ................................................................................................................................ ..........................................................................................................................................................
6. இயேசு கிறிஸ்துவின் தெய்வீகம் மற்றும் மனித சாயல் மரியாளிடமிருந்து வந்தது. சரியா, தவறா?.........
7. யோசேப்பை தேவன் இயேசுவின் சட்டப்பட்டியான தந்தை என்று தெரிந்து கொண்டது அவசியம் என்று உணர்கின்றீர்களா? (மத் 1:20; லூக் 1:27; 2:4) ............................................................................... ..........................................................................................................................................................
8. ஏசாயா 7:14 கிறிஸ்துவின் பிறப்புக்கு சம்மந்தப்பட்டதா? ................................................................... ..........................................................................................................................................................
9. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அவதாரம் மானிடத்தின் மீது ஏற்படுத்தும் மாற்றம் என்ன? ..........................................................................................................................................................

10. கலாத் 4:4-5-ஐ எழுதவும்:

**37. “பாடுபட்டார்” என்ற வார்த்தையைக் குறித்து நீங்கள் புரிந்து கொள்வதென்ன?**

அவர் எல்லா நேரத்திலும் பூமியில் வாழ்ந்தார், முக்கியமாக அவருடைய வாழ்வின் முடிவில், அவர் தமது சரீரம் மற்றும் ஆத்துமாவில் முழு மானிடத்தின் பாவத்திற் கெதிரான தேவ கோபத்தை தாங்கினார். ஆகவே, அவருடைய பாடு மரணத்தினால் நம்முடைய சரீரம் மற்றும் ஆத்துமாவை நித்திய நரக தண்டணையிலிருந்து விடுவித்து நமக்கு தேவ கிருபையினால் நீதியையும், நித்திய ஜீவனையும் சம்பாதித்தார்.

***

கேள்விகள் 37,38 மற்றும் 39 ஆகியவை நமது ஆண்டவரின், இரண்டாம் நிலையான **“**பாடுகள்**”** என்ற தாழ்ச்சியை விளக்குகின்றது. இந்த கேள்வியோடு, அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் நான்காவது அறிக்கையை நாம் படிக்கலாம்: **“**பொந்துயு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்**“** கேள்வி 44 வரை இந்த நான்காவது அறிக்கையின் விளக்கத்தை நாம் காணலாம்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாடுபட்டார்! நாம் அனைவருமே பாடுகள் என்றால் என்ன என்பதை அறிவோம். பலர் மரணப்படுக்கையில் பல ஆண்டுகள் போராடி அதிக பாடுகளை அனுபவிக்கின்றார்கள். சிலர் தங்கள் வாழ்வில் நடந்த மாபெரும் விபத்தினிமித்தம் மனதளவில் போராடுகிறார்கள்; சிலர் தங்களுக்கு வந்துள்ள துன்பம் தாங்க முடியாதது என்று தற்கொலை செய்கிறார்கள். பூமியில் நம்முடைய இரட்சகரின் முழு வாழ்நாளும், தமது சரீரத்தில் பாடுகளை, முக்கியமாக தனது ஆத்துமாவில் அனுபவித்தார். அவர் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய நேரம் நெறுங்கியபோது, அவருடைய பாடுகள் இன்னும் அதிகமாக அதிகரித்தது. கெத்சமனே தோட்டத்தில் (லூக் 22:39-46), அவருடைய ஆத்துமா வெடிக்கும் அளவிற்கு வந்தது, அவருடைய சரீரமும் வார்த்தைகளால் கூறமுடியாத அளவுக்கு வாரினால் அடித்து, கை கால்களில் ஆணிகளால் துளையிட்டு மரத்தில் தூக்கியதற்கு இணையாக பாடுபடுத்தப்பட்டது. இயேசுவின் பாடுகள், பாவியான மனிதர்கள் அனுபவிக்க வேண்டிய பாடுகளைப்போல இருக்கவில்லை.

இயேசு ஏன் இந்த எல்லாப் பாடுகளின் வழியே செல்ல வேண்டும்? இந்த கேள்வி பதிலைத் தருகின்றது:

1) இவருடைய பாடுகள் தேவனிடமிருந்து வந்த தண்டனையாகும்: **“**தேவ கோபம்**”** இயேசு கிறிஸ்துவின் ஆத்துமா மற்றும் சரீரத்திற்கு நேராக திருப்பி விடப்பட்டிருந்தது.

2) அவருடைய பாடுகள் நம்முடைய பாவங்களினிமித்தம் வந்தவை, அவர் பாவம் செய்யவில்லை. தேவன் தாம் தெரிந்து கொண்டவர்களின் பாவத்தினிமித்தம் இயேசுவை வாதித்தார். இவர் நம்முடைய பாடுகளையும், மரணத்தையும் எடுத்துக் கொண்டார்.

இயேசு கிறிஸ்துவின் இந்த பரிகார பலியினால் வரும் பிரதிபலன்கள்:

1) நித்திய நரக தண்டனையிலிருந்து நமக்கு விடுதலை

2) எவர்களுக்காக அவர் மரித்தாரோ, அவர்களுக்கான **“**தேவ கிருபை, நீதி மற்றும் நித்திய ஜீவன்**”** முற்றிலும் விலைக்கு வாங்கப் பட்டது.

இந்த கேள்வியில் கூறப்பட்ட ஒரு வார்த்தைக்கு மேலும் விளக்கம் தேவைப்படுகிறது: **“**முழு மானிட வர்க்கம்.**”** தேவன் தம்முடைய திருச்சபையை மீட்பதை மட்டும் தன்னுடைய நோக்கமாகக் கொண்டுள்ளார் என்பதை இந்த கேட்டகிசத்தில் பலமுறை கண்டோம், ஆகவே இயேசுவின் மரணம் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தெரிந்து கொள்ளப்படாதவர்கள் ஆகியோர் அனைவருக்கும் பொதுவானது என்று கருதாமல், அவர் தம்முடையவர்களுக்காக மரித்தார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். **“**முழு மானிட வர்க்கம்**”** என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழும் அனைத்து வகையானவர்களையும் குறிக்கும். பின்வரும் கேள்விகள், கிருபையின் ஈவு, நீதி மற்றும் ஜீவனை பெறுகின்றவர்கள் யார், அதாவது கிறிஸ்துவின் மரணம் மற்றவர்களுக்காக அல்ல, **“**நமக்காக**”** மட்டுமே என்பதை விளக்கும். மற்றவர்கள் தங்களுடைய பாவத்திற்காக பாடுபட்டு மரிக்க வேண்டும்.

ஆர்மீனியன் கோட்பாடு, ஒவ்வொரு மனிதனுக்குமான உலகளாவிய பரிகாரத்தைக் குறித்து, அதாவது கிறிஸ்து உலகின் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரித்தார் என்று போதிக்கிறது. ஏன் இந்த போதனை தவறானது? 1 யோவா 2:2 என்ன போதிக்கிறது.

**37-க்கான கேள்விகள்:**

1. கேள்விகள் 37 முதல் 39 வரை ........................................................................................ நாம் படிக்கிறோம்.
2. இயேசு தனது வாழ்வில் பாடுகளை அனுபவித்தது எப்போது? .........................................................................
3. இயேசு சிறு குழந்தையாக இருந்தபோது எப்படி பாடுகளை அனுபவித்தார்? (மத் 2:13,14) ....................
...........................................................................................................................................................
4. மத்தேயு 4:1-11-ல் எந்த வகையான பாடுகளை இயேசு அனுபவித்தார்? அ) சரீரப்பிரகாரமான, ஆ) ஆவிக்குரிய, இ) இரண்டு வகையான... எது சரி? ..............

5. கெத்சமனே தோட்டத்தில் இயேசு தமது ஆத்துமாவில் அடைந்த பாடுகள் மகாப் பெரியவை, அவைகள் (லூக் 22:44 பார்க்க): ..........................................................................................................................................
6. இயேசுவின் பாடுகள் அவருடைய சரீரம் மற்றும் ஆத்துமாவில் ஏன் மிகவும் பெரிதாக இருந்தது என்று நம்முடைய கேட்டகிசம் கூறுகின்றது. **"**தேவன் தாம் தெரிந்து கொண்டவர்களின் ........................ ........................ வாதித்தார். இவர் நம்முடைய ........................., ......................... எடுத்துக் கொண்டார்.
7. நமக்காக இயேசு கிறிஸ்து அடைந்த பாடு மரணத்தினால் பெற்ற இரண்டு பிரதிபலன்கள் யாவை?
   அ.
   ஆ.
8. **"**முழு மானிட வர்க்கம்**"** என்பது, உலகின் ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த மற்றும் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனையும் குறிக்கும். சரியா, தவறா? ................ விளக்கம் தருக: ......................................
   ..........................................................................................................................................................................
9. 1யோவா 2:2-ஐ ஆர்மீனிய கோட்பாட்டை உடையோர் எப்படி விளக்குகின்றனர்? ......................................
   ..........................................................................................................................................நீங்கள் இதை எப்படி விளக்குகின்றீர்கள்? ..........................................................................................................................................
10. 1பேது 2:24 எழுதவும்:

**38. பொந்தியு பிலாத்து, நீதிபதியாக இருக்க, இயேசு பாடுபட்டதேன்?**

அவர், குற்றமற்றவராக இருந்தும், தற்காலிக நீதிபதியால் தண்டனைக்குட் படுத்தப்படுவதால், நாம் அடைய வேண்டிய கடுமையான தேவ தண்டனையிலிருந்து நீக்கப்படுகிறோம்.

***

குறுகிய அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம், இயேசுவை தவிர அவரைப் பெற்ற மரியாள் மற்றும் அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த பிலாத்து ஆகிய இரு நபர்களின் பெயர்களை நமக்கு அறிவிக்கிறது. இந்த பாவியான மனிதன் குறிப்பிடப்படுவது ஏன்? இதன் காரணம்: பிலாத்து என்ற மனிதன் இயேசு கிறிஸ்து யூதர்களால் தவறாகக் குற்றம் சுமத்தப்பட்டபோது, அதை நியாயம் விசாரிக்கும் அதிகாரம் உடைய நீதிபதியாக இருந்தான். இவன் ரோமப் பேரரசின் தலைவரால் உலகப்பிரகாரமான காரியங்களை கவனிக்கும்படி நியமிக்கப்பட்டிருந்தான், அதோடு தேவனுடைய ஆளுகையின் கீழ் இவனுடைய நியாயத்தீர்ப்பு அமைந்திருந்தது.

முதலாவது, பிலாத்து, யூதர்கள் கூறும் குற்றச்சாட்டுகளைக் கேட்டபோது, இயேசு கிறிஸ்து குற்றமற்றவர் என்று அறிவித்தான் (லூக் 23:4; யோவா 19:4). உலகின் ஆட்சி அதிகாரத்தின் படி இயேசு குற்றமற்றவர். இந்த அறிவிப்பு எந்த நிலையிலும் மாற்றப்படவில்லை. காரணம், அவர் எந்தவொரு பாவத்தையும், அநியாயத்தையும் செய்யவில்லை. இரண்டாவது, அதே பிலாத்து இயேசுவை குற்றவாளியாக சிலுவையில் அறையும்படி படைவீரர்களிடம் ஒப்புக்கொடுத்தான். அதே உலக அதிகாரம் இயேசுவை தண்டித்து குற்றமற்ற மனிதனாக மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தது.

இவைகள் அனைத்துமே மிகவும் அர்த்தம் நிறைந்தவைகளாகும். தேவனுடைய ஆளுகையானது இந்த உலக ரோம அரசாங்கத்தையும் செயல்படுத்தியது (ரோம 13:1,2). பிலாத்து மூலமாக, தேவன் இயேசுவை தனிப்பட்ட நிலையில் குற்றமற்றவர் என்பதை விளக்கும்படி செய்தார்! அதே வேளையில், தேவனுடைய ஜனங்களின் பாவத்தை சுமக்கும் கிறிஸ்துவை, பிலாத்துவின் மூலம் மரணத்திற்கும் ஒப்புக் கொடுத்தார். இப்போது தேவனாகிய மாபெரும் நீதிபதியால் இயேசு மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப் படுகின்றார் என்பதை அறியாத நிலையில், குற்றமற்ற இயேசுவை சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்ததே ரோமப் பேரரசின் மகாப்பெரிய குற்றமாகும். குற்ற மற்ற இயேசுவை கொலை செய்ததில், ரோமப்பேரரசு - இந்த உலகின் பிரதிநிதியாக, தேவனுடைய பரிசுத்த குமாரனை கொலை செய்தமைக்காக தேவனுக்கு முன்பாக தனக்குத்தானே தண்டனைக்கு உரியதாக மாறுகிறது.

இப்படி குற்றமற்ற இயேசு விளங்கப்பட முடியாத நிலையில் வழக்கு விசாரிக்கப்படுவதினால், திருச்சபை தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து மீட்கப்படுகிறது; ஆனால் இந்த உலகமோ கிறிஸ்துவை தண்டித்ததற்காக தண்டனைக்குள்ளாகிறது.

**38-க்கான கேள்விகள்:**

1. பொந்தியு பிலாத்து யார்? (லூக் 3:1) ..........................................................................................................................................
2. நீதிபதி பிலாத்து இயேசுவின் மீது கூறப்பட்ட குற்றங்களுக்காக அதிகாரப் பூர்வமாக இயேசுவைக் குறித்து கூறியது என்ன? ..........................................................................................................................................
3. இயேசு குற்றமற்றவர் என்று அறிவிக்கப்பட்டால், நீதிபதியாகிய பிலாத்து இயேசுவை என்ன செய்திருக்க வேண்டும்? ..........................................................................................................................................
4. குற்ற மற்ற ஒருவரை மரண தண்டனைக் உட்படுத்தியதால் தானும், தன்னோட முழு உலகத்தையும் தண்டனைக்கு உட்படுத்தினான் பிலாத்து. சரியா, தவறா? ................

5. பிலாத்துவின் அதிகாரப் பூர்வமான அறிவிப்புகள் அனைவரையும் நியாயம் தீர்க்கும் ஒருவரின் சித்தத்தின்படி அமைந்தது. அவர் யார்? ...............................
6. இயேசு ஒரு குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக மரிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. தேவன் அவரை... அ) தன்னுடைய பாவத்திற்காக; ஆ)நம்முடைய பாவத்திற்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். எது சரி? ...........
7. ஒருவேளை இயேசு குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக இல்லாமல் வயதாகியோ, வியாதியிலோ அல்லது விபத்திலோ மரித்திருந்தால், தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து நம்மை விடுவித்திருக்க முடியாது. சரியா, தவறா? ................
8. இயேசுவின் வழக்கு மனுக்குலம் கண்டிராத விளங்க முடியாத வழக்கு. சரியா, தவறா? ................
9. பொந்தியு பிலாத்துவின் கீழ் நம்முடைய ஆண்டவர் பாடுபட்டது எப்படி? .....................................................
.....................................................................................................................................................
10. அப்போ 4:27,28-ஐ எழுதவும்:

**39. இயேசு சிலுவையில் அறையப்படுவதைக் காட்டிலும் வேறேவிதமான மரணத்தை அனுபவிக்க நேர்ந்திருந்தால் என்ன?**

ஆம், சிலுவையின் மரணம் தேவனுடைய சாபமாகும், என்மீது சுமத்தப்பட வேண்டிய சாபம் மற்றும் மரணத்தை அவர் தன்மீது எடுத்துக் கொண்டார் என்ற நிச்சயத்தை சிலுவை எனக்கு கொடுக்கிறது.

***

கேள்வி 38-ல் கூறப்பட்டுள்ளபடி, கிறிஸ்துவின் மரணம் சாதாரணமான ஒன்றாக இல்லாமல் அது அதிகாரப் பூர்வமான சிலுவை மரணமாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்த அதிக விளக்கத்தை இந்தக் கேள்வி தருகிறது. இயேசு அன்றைய ரோமர்களின் மரணதண்டனை முறையான வேதனை மிக்க சிலுவை மரணத்தை அனுபவித்தார்.

இயேசு ரோமர்களின் மரண தண்டனை முறையான (இரண்டு மரங்களில் கைகள் மற்றும் கால்களில் ஆணிகள் துளைக்க) கொலை செய்யப்பட்டாலும், இது பழைய ஏற்பாட்டின் சாபமாகவும் உள்ளது. யூதர்களின் மரணதண்டனை முறை கல்லால் எரிந்து கொலை செய்வது என்பது பழக்கத்தில் இருந்தபோதும், உபாக 21:22,23-ல் குற்றவாளிகளின் செத்த உடல் மரத்தில் தொங்க விடப்பட்டு, கட்டளைகளை மீறி தேவனுடைய சாபத்திற்கு உட்பட்டவர்களுக்கு வரும் தண்டனையை மற்றவர்களுக்கு எச்சரிக்கும் விதமாகச் செய்யப்பட்டது. அப்படியே, சிலுவையில் தொங்கவிடப்பட்ட இயேசுவின் சரீரம் அவமானச் சின்னமாக தேவனுடைய சாபம் அவர்மீது இருந்தது என்பதை வெளிப்படுத்தியது. நாம் அடைய வேண்டிய ஆக்கினை இயேசு தாமே தன்மீது எடுத்து தேவனுடைய சாபத்தின் முழுமையையும் ஏற்றுக் கொண்டார். ஒருவேளை, இயேசு கலிலேயாக் கடலில் மூழ்க்கடிக்கப்பட்டோ, உணவில் விஷம் கலந்தோ அல்லது வயதாகி இயற்கையாக மரித்திருந்தால், உனக்காக எனக்காக இயேசு தேவனுடைய சாபத்தை சிலுவையில் சுமந்தாதக் கருத முடியாமல் போயிருக்க வேண்டும். இங்கே தேவன் தமது குமாரனுக்கு மரண தண்டனையைத் தருவதை நாம் கவனிக்க வேண்டும். சிலர் மரண தண்டனையானது ஒழுக்கக் கேடான காரியம், அது நீக்கப்பட வேண்டும் என்பது எத்தனை அறிவீனமான காரியம்! அவர்கள் தேவனுடைய நீதியையும், மனிதர்களின் பாவத்தையும் தேவன் எவ்வளவாய் வெறுக்கிறார் என்பதையும் அறியாதிருக்கின்றார்கள்.

**39-க்கான கேள்விகள்:**

1. கிறிஸ்துவினுடைய பாடுகள் அவருடைய .................... ஆல் பிலாத்துவின் வழக்கின்போதும் மிக அதிசயமாகி, சிலுவையில் அவருடைய ............................... சுமந்தார்.
2. சிலுவையில் அறையப் படுதல் என்றால் என்ன? .............................................................................................
.....................................................................................................................................................
3. சிலுவை மரணம் என்பது குற்றவாளிகளை தண்டிக்க யூதர்கள் பயன்படுத்திய முறை. சரியா, தவறா? ................
4. கிறிஸ்து எப்படி மரித்தார் என்பது முக்கியமல்ல,மாறாக அவர் மரித்தார் என்பது மிக முக்கியம் சரியா, தவறா? ................
5. கிறிஸ்துவின் மரித்த உடல் தொங்கிய காட்சி பழைய ஏற்பாட்டோடு எப்படி ஒத்து போகின்றது? விளக்கி, அதற்கான குறிப்பு தருக: .......................................................................................................
6. என்மீது சுமத்தப்பட வேண்டிய .............. .............. ............... அவர் தன்மீது எடுத்துக் கொண்டார் என்ற ........................................... எனக்கு கொடுக்கிறது.
7. ரோமப் பேரரசால் அதிகாரப் பூர்வமாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் மரணம் தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இருக்க, தனது குமாரனை எதற்காக மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார்? .....................................................................................................................................................
.....................................................................................................................................................
8. இயற்கையாகவே தேவனால் சபிக்கப்பட்டு, ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான மரணத்தை அடையவேண்டிய நமக்காக இயேசு **"**தேவனால் சபிக்கப்பட்டவரானார்**"**. சரியா, தறவா? .................

9. கிறிஸ்துவின் மரணம்... அ) வெட்ககேடான; ஆ) மகிமையான; இ) பதிலாலியாக; ஈ) தனியாக பொறுப்பேற்ற; உ) ஒரு தூக்கு தண்டனை ஆகும்... எது? ............
10. கலாத் 3:13,14-ஐ எழுதவும்:

### 40. கிறிஸ்து மரிக்க வேண்டியது அவசியமானது ஏன்?

தேவனுடைய நீதி மற்றும் உண்மையின்படி, பாவத்திற்கான உகந்த பரிகாரம் தேவ குமாரனின் மரணத்தினாலேயன்றி வேறொன்றினாலும் முடியாததால் ஆகும்.

***

இயேசுவின் மூன்றாம் நிலை தாழ்ச்சியான அவருடைய மரணம் இந்தக் கேள்வியில் விளக்கப் பட்டுள்ளது. ஒருவர் இப்படி கேட்கலாம், "நம்முடைய இரட்சகர் சிலுவையில் அனுபவித்த மகாப் பெரிய வேதனைகளே தேவ நீதியின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லையா?." இதற்கான பதில், "பாவம் செய்கின்ற ஆத்துமா சாகும்" (எசே 18:4,20), இதுவே பாவத்திற்கான தேவனுடைய தீர்ப்பாக வேதாகமம் முழுவதிலும் காண்கிறோம். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோம 6:23). தேவனுடைய நீதியும் சட்டமும் பாவியிடமிருந்து மரணமேயன்றி வேறொன்றையும் எதிர்பார்க்கவில்லை (ஆதி 2:17). ஆகவே, நம்முடைய பாவத்தை சுமக்கும் இயேசு மரிப்பது அவசியமாயிற்று. என்ன ஆச்சர்யமான விஷயம் இது! இயேசுவின் பாவமற்ற மனித சாயலில் ஜீவிப்பதற்கு தகுதியான ஒரே மனிதனாகிய இயேசு ஆத்துமாவை சரீரத்தினின்று பிரிக்கும் மரணத்தை அனுபவித்து, தேவனிடமிருந்து பிரிக்கப்படும் ஆவிக்குரிய மரணத்தையும் அனுபவித்தார். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறினார் (மத் 27:46). தேவ குமாரனின் மரணமேயன்றி வேறு எந்த வழியிலும் நம்முடைய பாவத்திற்கான முழுமையான அபாராதத்தை செலுத்த முடியாது. இதை யோசிக்கவும்! அடிக்கடி இதை யோசித்து பார்க்கவும்!

**40-க்கான கேள்விகள்:**

1. இயேசுவின் மரணம் கிறிஸ்துவின் ............................................................................. நிலை தாழ்ச்சியாகும்.
2. இதுவரை நாம் படித்த தாழ்ச்சியின் நிலைகள் யாவை? ................................................................................
   ........................................................................................................................................................................
3. சரீரப்பிரகாரமான மரணம் என்றால் என்ன? ................................................................................................
4. ஆவிக்குரிய மரணம் என்றால் என்ன? ........................................................................................................
5. இயேசு ஏன் பாடுபட்டதோடு மரிக்கவும் செய்தார்? ........................................................................................
   ........................................................................................................................................................................
6. சிலுவையில்... அ) மனித சாயல், ஆ) தெய்வீக சாயல், இ) மனித மற்றும் தெய்வீக சாயல் இரண்டும் மரணத்திற்குள்ளானது. எது சரி? ..................
7. சிலுவையில் இயேசுவின் ஆவிக்குரிய மரணம், "..................................................................................................... ....................................." என்று கதறியதால் அறியப்பட்டது.
8. கேள்வி 40-க்கான பதிலை எழுதவும்.
9. இயேசு பாவத்திற்காக மரிக்க பூமிக்கு வந்தார் என்பதால், அவரை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்கள் செய்த காரியம் நல்லதே. சரியா, தவறா? ..................
10. பிலிப் 2:8 -ஐ எழுதவும்:

### 41. இயேசு அடக்கம் பண்ணப்பட்டது ஏன்?

அவர் உண்மையாகவே மரித்தார் என்பதைக் காண்பிக்கும்படியாக.

***

இந்த சிறிய கேள்வி பதிலில் இயேசு ஏன் அடக்கம் செய்யப்பட்டார் (கிறிஸ்துவின் தாழ்ச்சியின் நான்காவது நிலை) என்பதற்கான காரணத்தை படிக்கிறோம். இங்கே கொடுக்கப்பட்டுள்ள காரணம், அவர் மரித்தார் என்பதை நிரூபிக்கும்படியாக என்பதாகும். மரித்தவர்கள் மட்டுமே அடக்கம் செய்யப்படுவார்கள். இந்தச் சான்று மிகவும் முக்கியம் ஏன்? சில அவிசுவாசிகள் இயேசு உண்மையாகவே மரிக்கவில்லை என்று சில கற்பனைக் கதைகளை கண்டுபிடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு கற்பனைகதையின்படி, இயேசு சிலுவையில் சுயநினைவிழந்து மட்டுமே இருந்தார் என்கிறது; மற்றொன்று இயேசு சிலுவையில் மரித்தது போல நடித்தார் என்கிறது. ஆனால், அன்றைய ரோம அதிகாரிகள் கிறிஸ்து மரித்ததால் மட்டுமே அடக்கம் செய்வதற்கான அனுமதி கொடுத்தனர். ஒரு ரோம போர்ச்சேவகன் தன்னுடைய ஈட்டியை இயேசுவின் மார்பில் பாய்த்தபோது இரத்தமும் தண்ணீரும் கொட்டியது (யோவா 19:33,34); அவர் மரித்தார்.

மேலும், கிறிஸ்து அடக்கம் செய்யப்படுவதும் சரீரத்தின்மீது இருந்த தேவனுடைய சாபத்தை காண்பிக்கிறது. தேவன் ஆதாமை சபித்தபோது, "மண்ணிலிருந்து நீ எடுக்கப்பட்டாய், ஆகவே நீ மண்ணுக்கே திரும்புவாய்" என்றார் (ஆதி 3:19). கிறிஸ்துவின் சரீரம் நமக்காக மூன்று நாட்கள் சீர்கேட்டுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டதாயிருந்தது. இப்போது மரணத்திற்குப்பின் நம்முடைய சரீரமானது கல்லறையில் அடக்கம்

செய்யப்படுவது என்பது, நமது இரட்சகரின் சரீரம் அடக்கம் செய்யப்பட்டதால் வந்ததாகும். நம்முடைய சரீரங்களும் சீர்கெட்டு மண்ணுக்கே திரும்பினாலும், கிறிஸ்து கல்லறையின் சீர்கேட்டையும் தமது ஆசீர்வாதமான உயிர்த்தெழுதலினால் ஜெயித்தார் என்பதை அறிந்திருக்கிறோம். "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது!" (1 கொரி 15:54).

**41-க்கான கேள்விகள்:**

1. இந்த கேள்வியைவிட இந்த கேட்டகிசத்தில் இரண்டு கேள்விகள் சிறிதாக இருக்கின்றது. அவைகள் ............................................................................................
2. கிறிஸ்துவின் தாழ்ச்சியின் நான்காவது நிலையானது: ........................................................................................
3. கிறிஸ்துவின் அடக்கத்திற்கான காரணமாக கேட்டகிசம் கூறுவது என்ன? .................................................... ........................................................................................................................................................................
4. இயேசு உண்மையாகவே மரித்தார் என்பதை அறிய ரோம அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முன் ஏற்பாடு என்ன? (யோவா 19:33,34) ............................................................................................................ ........................................................................................................................................................................
5. கிறிஸ்து மரிக்கவில்லை என்றால், அவருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்டிருக்குமா? ஆம், இல்லை. சரியா? ..............
6. ஆதியா 3:19 சரீர மரணம் மற்றும் மண்ணுக்குத் திரும்புவதை மனித சரீரத்தின் மீது பாவத்திற்கான தேவனுடைய .................... என்று அறிகிறோம்.
7. கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட கிறிஸ்துவின் சரீரம் மூன்று நாட்களில் சீரழிய ஆரம்பித்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? ........................................................................................................ ........................................................................................................................................................................
8. கிறிஸ்துவின் சரீரம் அடக்கம் செய்யப்படுவதற்கும், நம்முடைய சரீரம் அடக்கம் செய்யப்படுவதற்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன? ........................................................................................................... ........................................................................................................................................................................
9. மரித்த உடலுக்கு அதனுடைய கல்லறையில் ஏதாகிலும் எதிர்காலம்/நம்பிக்கை உண்டா? ................ விளக்குக: ....................................................................................................................................................
10. லூக் 23:52,53-ஐ எழுதுக:

**42. கிறிஸ்து நமக்காக மரித்த பின்னும் நாமும் மரிக்க வேண்டியது ஏன்?**

நம்முடைய மரணம் நமது பாவத்திற்கு இணையான பரிகாரம் அல்ல, மாறாக பாவத்திற்கு மரித்து நித்திய ஜீவனுக்குள் நுழைகின்றோம்.

***

கிறிஸ்து என்னுடைய இடத்தில் எனக்காக மரித்தார் என்பதை அறியவரும் அதிக பட்ச அனைத்து புதிய கிறிஸ்தவர்களும் கேட்கும் பொதுவான கேள்விக்கு பதிலை இங்கே காணலாம். கிறிஸ்து நமக்காக மரித்த பின்னும் நாமும் மரிக்க வேண்டியது ஏன்? என்ற கேள்விக்கு இரண்டு பகுதிகளாக பதில் உண்டு: ஒன்று எதிர்மறையான காரணம், மற்றொன்று ஆக்கமுறையான காரணம்:

முதலாவது, விசுவாசியின் மரணம் அவனுடைய பாவத்திற்கு பதிலான பரிகாரம் அல்ல. அதாவது, மரிக்கும் ஒருவன் தனது பாவத்திற்கான தேவனுடைய சாபத்தினால் உண்டாகும் தண்டனைக்காக மரிப்பது இல்லை. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம 6:23), ஆனால் ஒரு உண்மைக் கிறிஸ்தவனுடைய பாவத்திற்கான சம்பளம் நம்முடைய பதிலாளியான இயேசு கிறிஸ்துவால் கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் மரணம் நம்முடைய பாவங்களுக்கு இணையான பரிகாரமாகும். கிறிஸ்தவனின் பாவத்திற்கான தண்டனை அனைத்தையும் கிறிஸ்து எடுத்துக் கொண்டதால் அவனுடைய மரணம் அவனுடைய பாவத்திற்கான தண்டனை ஆகாது. "கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" (கலா 3:13)-ன்படி, கிறிஸ்தவ விசுவாசியின் மரணத்தைச் சார்ந்த சாபமானது கிறிஸ்துவின் சாபமான மரணத்தினால் நீக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது, இந்தக் கேள்விக்கான ஆக்கமுறையான பதில்: விசுவாசியின் ஆத்துமா பரலோகத்திற்குள் பிரவேசிக்க மரணம் கருவியாக இருக்கிறது. கிறிஸ்தவனின் சரீரப்பிரகாரமான மரணத்தினால், அவன் இந்த பாவ உலகத்திலிருந்தும், தன்னுடைய பாவ சாயலிலிருந்தும் கிருபையாக விடுதலை பெற்று நித்திய மகிமைக்குள் பிரவேசிக்கிறான். சரீரத்திலிருந்து பிரிந்து செல்வது என்பது தேவனுடன் சேர்வதைக் குறிக்கிறது என்று வேதம் தெளிவாக போதிக்கிறது (2 கொரி 5:6-8) மேலும் சாவு நமக்கு ஆதாயம் (பிலி 1:21). மரண அனுபவம் சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குள் நம்மை அழைத்து செல்வதால் கிறிஸ்தவர்களாகிய நாம் மரணத்திற்கு ஒருபோதும் பயப்படக் கூடாது! இந்த பாவ சரீரத்தில் நாம் நித்தியமாக சபிக்கப்பட்ட பூமியில் வாழாதபடிக்கு நம்மை பரலோகம் எடுத்துச் செல்லும் ஆண்டவர் எத்தனை கிருபை நிறைந்தவர்! பூமியிலேயே காலமெல்லாம் வாழ்வது என்பது எத்தனை பயங்கரமானதாக இருக்கும்.

எல்லா கிறிஸ்தவர்களும் சரீரப்பிரகாரமாக மரிப்பதில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். கிறிஸ்து மீண்டும் வரும்போதும் ஒரு சந்ததி இந்த பூமியில் இருக்கும். அவர்கள் மரணத்தை காண்பதில்லை. ஒருவேளை மரணத்தைக் காணாமல் கிறிஸ்துவால் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுபவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம் -1கொரி 4:17-ஐ பார்க்கவும்!

**42-க்கான கேள்விகள்:**

1. கிறிஸ்து உங்களுக்காக மரித்திருக்க நீங்கள் ஏன் மரிக்க வேண்டும் என்று எப்போதாகிலும் நினைத்ததுண்டா? ................
2. ஒரு விசுவாசி ஏன் மரிக்க வேண்டும் என்று கேட்கும் ஒருவரிடம் இந்த செய்தியை எப்படி எடுத்துக் கூறுவீர்கள்? ..........................................................................................................................................
3. “நம்முடைய மரணம் நமது பாவத்திற்கு இணையான பரிகாரம் அல்ல” என்ற விளக்கத்தை மற்றவருக்கு எப்படி விளக்குவீர்கள்? ..........................................................................................................................
4. ஒரு கிறிஸ்தவன் மரிக்கும்போது அது அவனுக்கு உண்மையாகவே மிகப்பெரிய ஆசீர்வாதம் என்பதை எப்படி விளக்குவீர்கள்? ..........................................................................................................
5. “பாவத்திற்கு மரித்தல்” என்பதின் விளக்கம் என்ன? ..............................................................................
6. “நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது” என்பதின் விளக்கம் என்ன? ..............................................................
7. நீங்கள் சரீரப்பிரகாரமான மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்பது உண்மையா? ........................................
8. 1தெச 4:16,17 கடைசி சந்ததி கிறிஸ்தவர்களைக் குறித்து போதிப்பது என்ன? ........................................ ..........................................................................................................................................
9. நித்திய ஜீவன் எப்பொழுது ஆரம்பிக்கின்றது (யோவ:5:24 பார்க்கவும்)? ............................................................ ..........................................................................................................................................
10. ரோம 14:7,8-ஐ எழுதுக:

**43. கிறிஸ்துவின் சிலுவையின் பலி மற்றும் மரணத்தினால் நாம் பெரும் பிற நன்மைகள் யாவை?**

அவருடைய மரணத்தில் நம்முடைய பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டு, மரித்து அவரோடு அடக்கம் செய்யப்படுகிறது, அதனால் பழைய பாவ இச்சைகள் நம்மீது ஆட்சி செய்ய அதிகாரம் இல்லை, ஆக நாம் நம்மையே அவருக்கு ஸ்தோத்திர பலியாக அர்ப்பணிக்கிறோம்.

***

கிறிஸ்துவின் மரணம் நம்முடைய பாவத்திற்கு ஈடான பலியாகும். அவருடைய பரிசுத்த இரத்தத்தால் நம்முடைய எல்லா பாவமும் இரு மடங்கு சுத்தம் செய்யப்படுகிறது.

1. நாம் நம்முடைய பாவத்தினிமித்தமான குற்ற மனசாட்சியினின்று சுத்திகரிக்கப் படுகிறோம். இது நாம் நீதிமான்களாக்கப்படுவதாகும்.

2. நாம் நம்முடைய பாவத்தின் வல்லமையிலிருந்து சுத்திகரிக்கப் படுகிறோம். இது நாம் பரிசுத்தமாக்கப்படுவதாகும்.

நம்முடைய இரட்சகர் சிலுவையில் மரித்து, பாவத்தின் வல்லமையை நம்முடைய இருதயத்திலிருந்து உடைத்தெரியும் பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்றுத் தந்தார் என்பதை இந்த 43ஆம் கேள்வி போதிக்கிறது. ரோமர் 6:1-13-ஐ மையமாக வைத்து இந்த கேள்வி அமைந்துள்ளது. கிறிஸ்துவின் மரணம் நம்முடைய பாவத்தின் குற்றமனசாட்சியை எடுத்துப்போடுவதோடு, நம்முடைய ஆசை இச்சைகளின் வலிமையையும் உடைத்துப்போடும்படியாக அமைந்தது. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நம்முடைய இருதயத்தை சுத்திகரித்து, நம்மை பரிசுத்தமாக்கவே அவர் மரித்தார்.

“பழைய மனிதன்” என்னும் குறிப்பு ஆதாமிலிருந்து நாம் பெற்ற பாவத்தின் வலிமையைக் குறிக்கிறது. இந்தப் “பழைய மனிதன்” என்பது நாம் மறுபடியும் பிறப்பதற்கு முன் நம்மை ஆட்கொண்ட பாவத்தின் வல்லமை ஆகும். ஆனால் கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் அடக்கத்தால் நமது இருதயத்திலிருந்த பாவத்தின் வல்லமைக்கு பரிசுத்த ஆவியால் சாவடி கொடுக்கப்பட்டுள்ளது. நாமும் “அவருடன் சிலுவையில் அறையப்பட்டுள்ள” (ரோம 6:6; கலா 2:20) நிலை மற்றும் “அவருடன் அடக்கம் செய்யப்பட்டுள்ள” (ரோம 6:4) மற்றும் “அவருடன் எழுப்பப்பட்டள்ள” (கொலோ 3:1) நிலைகளை வேதாகமம் விளக்குகிறது. அதாவது, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு, உயித்தெழுந்தபோது நம்முடைய சாயல்கள் அவருக்குள் இருந்தது. ஆகவேதான் நம்முடைய வாழ்வின் பாவம் மற்றும் அவிசுவாசத்தின் ஆளுகையை முறியடிக்க உயிர்தெழுந்த கிறிஸ்துவின் ஆவி கொடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் ஆவியினால் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப்படுவதின் சந்தோசஷத்தை அனுபவிக்க முடியும்.

பரிசுத்த ஆவியினால் பிறந்த நிலையில், நாம் நம்மையே கிறிஸ்துவுக்கு (பூரணமாக இல்லாவிட்டாலும்) அன்பினால் பரிசுத்தமும் நன்றியும் நிறைந்து கீழ்ப்படிந்து வாழ அவசியமான விருப்பத்தையும் வலிமையையும் பெறுகிறோம். பரிசுத்த மாக்கப்படுதலின் (பரிசுத்த விருப்பம்) ஈவு மற்றும் நீதிமானாக்கப்படுதலின் (பாவ மன்னிப்பு மற்றும் நரகத்திலிருந்து விடுதலை) ஈவுக்காக நன்றியுள்ளவர்களாக இருக்கின்றீர்களா?

**43-க்கான கேள்விகள்:**

1. கிறிஸ்து தனது பாடு மரணத்தினால், பாவ மன்னிப்பு மட்டுமன்றி பல நன்மைகளை சம்பாதித்தார். சரியா, தவறா? .................
2. நாம் இருவழிகளில் பாவத்திலிருந்து கழுவப்படுகிறோம். அவைகள் யாவை?
 அ.
 ஆ.
3. கேள்வி 43 எந்தவகை பரிசுத்த மாக்கப்படுதலை குறிக்கிறது? ....................................................................
4. பழைய மனிதன் என்பது... அ) ஆதாம், ஆ) நமது உலகப்பிரகாரமான தந்தை, இ) ஆதாமிலிருந்து நாம் பெற்ற நமது பாவசாயல், ஈ) நம்முடைய வயது... எது சரி? ...........
5. கேள்வி 43, எந்த வசனப் பகுதியை ஆதாரமாகக் கொண்டுள்ளது? ..............................................................
 ..............................................................................................................................................................
6. நாம் கிறிஸ்துவோடு அடக்கம் செய்யப்பட்டுள்ளோம் (ரோம 6:6). அப்படியானால்... அ)நாமும் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவோடு, ஆ)தெரிந்தெடுப்பு மற்றும் பெற்றுக்கொள்வதின்படி ஆவிக்குரிய நிலையில்...எது? ............
7. ஒருவன் கிறிஸ்துவில் இருந்து, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றும் சரீரத்தின் இச்சைகள் தன்னை ஆளுகை செய்ய அனுமதிக்க முடியும். சரியா, தவறா? ................
8. நம்முடைய இருதயத்தில் உள்ள "பாவ இச்சைகள்"... அ) வேதத்தை ஜெபத்துடன் வாசிக்க, ஆ) திருச்சபைக்கு வருவதை தவறவிட, இ)பரிசுத்த ஆவியானவரின் உதவிக்காக ஜெபிக்க... அதிகம் அதிகமாக அழிக்கப்படுகின்றது. சரியா, தவறா? ................
9. பரிசுத்தமாக்கப்படுதல் என்னும் ஈவுக்காக தேவனுக்கு எதை நாம் நன்றியாக செலுத்த வேண்டும்? கேட்டகிசம் கூறுவதை அப்படியே பதிலாகத் தருக: ..............................................................................................
 ..............................................................................................................................................................
10. கலா 2:20-ஐ எழுதவும்:

**44. "அவர் பாதாளத்தில் இறங்கினார்" என்று சேர்க்கப்பட்டுள்ளது ஏன்?**

என் ஆண்டவராகிய கிறிஸ்து வார்த்தைகளால் விளக்க முடியாத தனது வியாகுலம், வேதனை மற்றும் பயங்கரங்களை சிலுவையிலும், அதற்கு முன்னரும் அனுபவித்து என்னை நரகத்தின் வியாகுலம் மற்றும் வேதனையினின்று விடுவித்துள்ளார் என்பதை எனது மகாப் பெரிய சோதனைகளிலும் நான் அறிய வேண்டும் என்பதாலேயாகும்.

***

கிறிஸ்துவின் தாழ்ச்சியின் ஐந்தாம் நிலைக்கு நாம் வந்துள்ளோம். (இப்போதும் நாம் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் நான்காவது அறிக்கையின் விளக்கத்தை நாம் ஆராய்கிறோம்). "அவர் பாதாளத்தில் இறங்கினார்" என்று விசுவாச அறிக்கை சொல்கிறது, இந்த அறிக்கைக்கு பலவழிகளில் வியாக்கியாணம் செய்யப்படுகிறது. இயேசு உண்மையாகவே நரகத்திற்கு சென்று, அங்கே மூன்று நாட்கள் வேதனையை அனுபவித்து, பின்னர் அங்கிருந்த பரிசுத்தவான்களை தன்னோடு பரலோகத்திற்கு எடுத்து சென்றார் என்று ரோமன் கத்தோலிக்கர்கள் அர்த்தம் தருகிறார்கள். கிறிஸ்துவின் ஆத்துமா மட்டும் நரகத்திற்கு சென்றது, அங்கே பாடுபடும்படிக்கு அல்ல, மாறாக தனது எதிரிகளின் மீதான வெற்றியை அறிவிக்கும் படி என்று லுத்தரன் சபையைச் சேர்ந்தோர் விளக்கம் தருகின்றனர். சீர்திருத்த (Reformed ? Biblical) கண்ணோட்டத்தின் படி, இயேசுவின் ஆத்துமா உடனே பரலோகத்திற்கு சென்றது. சிலுவையில் இருந்த கள்ளனுக்கு இயேசு சொன்னதை கவனிக்கவும், "இன்றைக்கே நீ என்னுடன் பரதீசில் (பரலோகத்தில்) இருப்பாய்" (லூக் 23:43). மேலும், "பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன்" என்று தனது தந்தையிடம் கூறினார் (லூக் 23:46).

அப்படியானால் இந்த அறிக்கை கூறுவது என்ன? கேட்டகிசம் நமக்கு கூறும் விளக்கத்தின்படி: கிறிஸ்து சிலுவையிலும், அதற்கு முன்பு கெத்சமனே தோட்டத்தின் துன்ப வேளையிலும் நரக வேதனையை தனது ஆத்துமாவில் அனுபவித்தார். இயேசு கிறிஸ்து தனது ஆத்துமாவில் நரக வேதனையை நமக்காக அனுபவித்ததுபோல வேறே எவரும் அனுபவிக்க முடியாது. "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்பது நரகப் படுகுழியின் ஆழத்திலிருந்து வந்த அவருடைய கதறலாகும். அவர் அனுபவித்த பாடுகள், எந்தவொரு படைப்பும் தாங்க முடியாத முழு, எல்லையற்ற தேவ கோபம் ஆகும். நம்முடைய ஆண்டவர் தேவனுடைய ஜனங்களுக்காக நரகத்தின் கடன்களை ஆறு மணிநேரம் பாடுபட்டு செலுத்துவதை உங்கள் மனக்கண்கள் முன்பு கொண்டு வந்து பாருங்கள்!

கிறிஸ்து நமக்காக பட்ட பாடுகள் அனைத்தும் அவருடைய மரணத்தில் நிறைவு பெற்றது.

**44-க்கான கேள்விகள்:**

1. இயேசுவை பொறுத்த நிலையில் நரகம் என்பது மரணத்திற்கு முன்பா அல்லது பின்பா?.................
2. "நரகம்" என்பது தண்டிக்கப்பட்டவர்கள் பாடுபடும் இடம். சரியா, தவறா? ................
3. வார்த்தைகளால் சொல்லமுடியாத வியாகுலம், பாடு, மரணம் மற்றும் நரகத்தின் பயங்கரத்தை இயேசு எப்போது அனுபவித்தார்? ..............................................................................................................................

..........................................................................................................................................................

4. இயேசுவின் சரீரம் கல்லறையில் மூன்று நாட்கள் வைக்கபட்டது, அவருடைய ஆத்துமாவோ.... அ) நரகம், ஆ) பரதீசு, இ) கல்லறை, ஈ)பிதாவிடம்... எங்கு சென்றது? ...........
5. "அவர் பாதாளத்தில் இறங்கினார்" என்பதற்கான லுத்தரன் வியாக்கியாணம் என்ன? ............................ ..........................................................................................................................................................
6. கிறிஸ்துவின் பாடுகளைக் குறிக்கும் பழைய ஏற்பாட்டு வசனங்களை கோடிட்டு காட்டுக: சங் 18:5,6; 113:9; 116:3; ஏசா 55:1.
7. நரகம் என்பது, சரீரம் மற்றும் ஆத்துமா தேவனுடைய அன்பு, வெளிச்சம் மற்றும் ஜீவனிலிருந்து நித்தியமாகவும், முழுமையாகவும் பிரிக்கப்படுவதாகும். சரியா, தவறா? ............
8. "பூமியிலே நரகம்" என்னும் பொதுவான விளக்கம் சரியா, தவறா? ..............., விளக்கம் தருக: ..........................................................................................................................................................
9. கிறிஸ்து நரக ஆக்கினையை அனுபவித்ததால் விசுவாசிகள் அடையும் நன்மை என்ன? கேட்டகிசத்தின் வரிகளில் எழுதவும்: .......................................................................................................................... ..........................................................................................................................................................
10. மத்தே 27:46-ஐ எழுதவும்:

**45. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் நாம் அடையும் நன்மை என்ன?**

முதலாவது, கிறிஸ்து தனது மரணத்தினால் சம்பாதித்த நீதிக்கு பங்காளிகளாக நம்மை மாற்றும்படியாக, அவர் தமது உயிர்த்தெழுதலினால் மரணத்தை ஜெயித்தார். இரண்டாவது, அவருடைய வல்லமையினால் நாமும் புதிய ஜீவனுக்காக எழுப்பப்பட்டும் இருக்கிறோம். மூன்றாவது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய ஆசீர்வாதமான உயிர்த்தெழுதலின் நிச்சயத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

***

அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் 3,4 ஆகிய அறிக்கைகள் கூறும் கிறிஸ்துவின் பிறப்பு முதல் மரணம் வரையிலான ஐந்து வகை தாழ்ச்சி நிலைகளைப் படித்தோம். இப்போது நம்முடைய ஆண்டவர், மரணத்திலிருந்து எழுப்பப்பட்டு மகிமையடைவதின், நான்கு வகையான உயர்வுகளைப் படிப்போம். இந்த நான்கு நிலைகள்: 1) கிறிஸ்துவின் உயிர்த்தெழுச்சி, 2)அவர் பரலோகத்திற்கு ஏறிச் செல்லுதல், 3)பரலோகத்தில் அவருடைய ஆட்சி, 4)உலகத்தை நியாயம் தீர்க்க அவர் மீண்டும் வருதல். இந்த நான்கு தலைப்புகளுக்கான சுருக்கம், அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் 5,6 மற்றும் 7வது அறிக்கைகளில் காணலாம்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் குறித்த உண்மை மற்றும் அர்த்தத்தை கேள்வி 45-ல் படிக்கலாம். இயேசுவின் சரீரம் மூன்று நாட்கள் மரித்த நிலையில் கல்லறையில் வைக்கப்பட்டு, பின்னர் சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையை வேதாகமம் விளங்கக் கூறுகிறது. உயிர்த்தெழுதலில் அவருடைய சரீரம் முழுவதும் மாற்றப்பட்ட நிலையில், அதற்கு மகாப் பெரிய மகிமை மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை கொடுக்கப்பட்டது. இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது உண்மை என்பதை பலவகை சாட்சிகளான, வெறுமையான கல்லறை மற்றும் இரட்சகரின் செயலும் அறியத் தருகின்றது. மேலும் சந்தேகப்பட்ட தோமாவும், இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை மறுக்க முடியவில்லை (யோவா 20:24-29). உயிர்த்தெழுந்த இயேசுவும் கிட்டத்தட்ட 14 வெவ்வேறுபட்ட நேரங்களில் தமது சீஷர்களுக்கும், ஒருமுறை 500 பேருக்கும் தரிசனம் ஆனார் (1கொரி 15:6). பலர், முக்கியமாக நவீன கருத்துக்களை ஆதரிக்கிறவர்கள், சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலை மறுதலித்து, உயிர்த்தெழுதலை குறித்து அப்போஸ்தலர்கள் எழுதியுள்ளவைகளை புறக்கணிக்கவும் செய்கிறார்கள். அதாவது, உயிர்த்தெழுதலின் சாட்சிகளான மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், பவுல் மற்றும் பேதுரு ஆகியோர் பொய்யர்கள் என்கின்றனர்.

உயிர்த்தெழுதலைப் பற்றிய அர்த்தம் அதனுடைய உண்மைக்கு இணையாக முக்கியமானது ஆகும். கேள்வி 45 போதிப்பதுபோல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூன்று பெரிய நன்மைகளை நமக்குத் தருகின்றது.

1. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், அவர் மரணத்தின் வல்லமையை மேற்கொண்டு, அதனால் அவர் தனது மரணத்திற்கு காரணமான பாவம் மற்றும் சாத்தானின் வல்லமையையும் தோற்கடித்தார் என்பதை நிரூபிக்கிறது. இரட்சகரின் உயிர்த்தெழுதலினால் நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப் பட்டு, நீதிமான்கள் என்று அறிவிக்கப்படுகிறோம் (ரோம 4:25). அவர் தேவனுடைய நீதியைப் பூர்த்தி செய்ததால் மரணம் அவரை ஆண்டு கொள்ளவில்லை, நம்மையும் ஆண்டு கொள்ளாது.

2. கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவன் நமது மறுபிறப்பில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால், நம்முடைய மரித்த ஆத்துமாக்கள் பரிசுத்த ஆவியானவரால் ஜீவன் கொடுக்கப்பட்டதாக தேவனோடு இணைக்கப்படுகிறது (ரோம 6:4,11).

3. நம்முடைய ஆத்துமாவும், சரீரமும் கிறிஸ்துவோடு என்றென்றும் இணைக்கப்பட்டதாக இருப்பதால், நம்முடைய சரீரமும் கல்லறையிலிருந்து எழுப்பப்படும் என்பதற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உத்திரவாதம் தருகிறது (1கொரி 15:21-23).

**45-க்கான கேள்விகள்:**

1. நம்முடைய இரட்சகரின் ஐந்து வகை தாழ்ச்சி நிலைகளைக் குறிப்பிடுக: 1........................................................, 2........................................................................................, 3 ........................................................................................, 4........................................................................, 5) ........................................................................................
2. கிறிஸ்துவின் மகிமையான உயர்த்தப்படுதலின் நான்கு நிலைகள் யாவை? 1. ...................................., 2. ..............................................., 3.........................................., 4..................................................,5.......................................................
3. வேதாகமமும், கேட்டகிசமும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்த ......................., .................................... போதிக்கிறது.
4. இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கான மூன்று சான்றுகளைத் தருக:
   அ.
   ஆ.
   இ.
5. இயேசுவின் போதனை, மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவைகள் நம்மை உணர்வடையச் செய்வதற்காகவே, மற்றபடி அவர் தனது சரீரத்தோடு இன்று ஜீவிக்கவில்லை என்னும் கோட்பாட்டைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ........................................................................................................................................................
6. கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரம், உயிருடன் எழுப்பப்பட்ட லாசருவின் சரீரத்தைவிட எந்த விதத்திலும் வித்தியாசமானது அல்ல. சரியா, தவறா? .................
7. கேட்டகிசத்தின்படி, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு எத்தனை நன்மைகளைத் தருகிறது? ................., அவைகளைக் குறிப்பிடுக: (உங்களுடைய வார்த்தைகளில்) ........................................................................................................................................................
8. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தேவனுடைய நீதியின் முழுமைக்கான சரியான பரிகாரம் செலுத்தப்பட்டது என்பதை நிரூபிக்கிறது. சரியா, தவறா? .................
9. ஒருவேளை கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றாலும் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் மீட்கப்படுவோம். சரியா, தவறா? .................
10. 1 கொரி 15:22,23- ஐ எழுதுக:

**46. “அவர் பரமண்டலத்துக்கு ஏறினார்” என்ற வார்த்தைகளை நீங்கள் எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?**

கிறிஸ்து, தமது சீஷர்களின் பார்வையில், பூமியிலிருந்து பரலோகத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டார்; மரித்தோரையும் உயிருள்ளோரையும் நியாயம் தீர்க்க வரும்வரை அங்கேயே நமக்காக இருக்கிறார்.

***

கிறிஸ்து தான் உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின்னர் ஒலிவ மலையிலிருந்து பரலோகத்திற்கு ஏறிப்போனது, அவருடைய உயர்வின் இரண்டாம் நிலை ஆகும் (அப்போ 1). அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் ஐந்தாம் அறிக்கையின் முதல் பகுதியான, “அவர் பரமண்டலத்துக்கு ஏறினார்” என்பது கேள்விகள் 46 முதல் 49 வரையிலானவற்றில் விளக்கப் பட்டுள்ளது. கேள்வி 46-ல், பரலோகத்திற்கு ஏறுதலைக் குறித்த உண்மை அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது. நம்முடைய ஆண்டவர் ஒலிவ மலையிலிருந்து ஆகாயத்தின் வழியே பரலோகத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டதானது, அப்போஸ்தலர்கள் (மற்றும் பலர்) காண நடந்த வரலாற்று சம்பவமாகும். உயிர்த்தெழுந்த பின்னர் நாற்பது நாட்கள் பூமியில் கிறிஸ்து வாசம் செய்ததற்கு காரணம்: 1) பல வழிகளில் தான் உயிர்த்தெழுந்ததை நிரூபிக்க; 2) தன்னுடைய வேலைக்கான தேவையான கடைசிக்கட்ட போதனைகளை தமது சீஷர்களுக்கு (முன்பு அவர்களுக்கு அதிகமாக விளங்காத நிலையில்) மீண்டும் அறிவிக்கவும் ஆகும். அந்த போதனைகள்:

அ. சீஷர்கள் தன்னுடைய சாட்சிகளாக இருப்பதற்கு பரிசுத்த ஆவியினால் பெறவேண்டிய பெலனைப் பெற எருசலேமில் காத்திருக்க வேண்டும் (அப்போ 1:4,8).

ஆ. தேவனுடைய இராஜ்ஜியத்தை பிரசங்கித்து, உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக உலகமெங்கும் செல்ல வேண்டும். (அப் 1:4,8)

இ. எல்லா தேசத்தாருக்கும் அவருடைய வார்த்தையை போதித்து, ஞானஸ்நானத்தின் மூலம் அவருக்கு சீஷர்களை ஏற்படுத்துதல் (மத் 28:19,20).

அவர்கள் ஒலிவ மலையின் மேல் கூடினபோது, “இயேசு தமது கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.” (லூக் 24:50,51). வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தையும் உடையவராக, இயேசு தமது உயித்தெழுந்த சரீரத்தோடு பரலோகில் வாசம் செய்கிறார். மரித்தோரை உயிரோடு எழுப்பவும், உயிருள்ள அனைவரையும் நியாயம் தீர்க்கவும் குறித்த நேரத்தில் மீண்டும் இயேசு வருவார்.

**46-க்கான கேள்விகள்:**

1. இயேசுவின் உயர்வின் இரண்டாம் நிலை ........................................................................................................

2. இந்த இரண்டாம் நிலையை விளக்க எத்தனை கேள்விகள் நமக்கு உண்டு? .................
3. உயிர்த்தெழுந்த பின்னர் எத்தனை நாட்கள் இயேசு பூமியில் உளாவினார்? ...............................................
4. இயேசு பூமியில் சில காலம் இருந்ததற்கான இரண்டு காரணங்கள்?
   அ.
   ஆ.
5. இயேசு தனது பிரிவின்போது, சீஷர்களுக்கு அப்போ 1:8-ல் கொடுத்த அறிவுரை நமக்கு பொருந்துமா? ஆம், இல்லை .................
6. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறித்து மற்றவர்களுக்கு சாட்சி கூறி, ஊழியர்களாக செயல்பட வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டா? ஆம், இல்லை? .................
7. இயேசு எங்கிருந்து மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்? ..........................................................................
8. இயேசு ஆகாயத்தின் வழியே பரலோகத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டபின் சீஷர்கள் செய்தது என்ன? (லூக் 24:52): ..............................................................................................................................
9. உயித்தெழுந்த .......................... வானத்திலும், ......................... உடையவராக, பரலோகில் .................................
10. அப்போ 1:9-ஐ எழுதவும்:

## 47. அப்படியானால், உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களோடு இருப்பேன் என்ற கிறிஸ்து நம்முடன் இல்லையா?

உண்மையான மனிதனாகவும், உண்மையான கடவுளாகவும் கிறிஸ்து இருக்கிறார். அவருடைய மனித சாயலின்படி இன்று அவர் நம்முடன் இல்லை, ஆனால் அதே நேரத்தில், தனது தெய்வீக மாட்சிமை, கிருபை மற்றும் ஆவியின்படி ஒருபோதும் அவர் நம்மைவிட்டு பிரிவதே இல்லை.

***

"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத் 28:20) என்று இயேசு கூறியதற்கான அர்த்தத்தை 47 மற்றும் 48 ஆகிய கேள்விகளில் நாம் காணலாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் நிலையில் இயேசு அவர்களுடன் சரீரப்பிரகாரமாக இருப்பேன் என்று வாக்குப் பண்ணியிருக்க முடியாது. நம்முடைய லுத்தரன் நண்பர்கள், இன்றைக்கும் இயேசுவின் சரீரப்பிரகாரமான சாயல் பூமியில் இருப்பதாக நம்புகின்றனர். இவர்கள், இயேசுவின் இந்த வார்த்தைகளுக்கு அப்படியே அர்த்தம் கொள்கிறார்கள். இதற்கான காரணம், அவர்கள் கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான பிரசன்னம் இருக்கிறது என்று நம்புவதாலேயாகும். இதுபோன்ற நம்பிக்கையை அவர்கள் பெற்றிருப்பது, கிறிஸ்துவின் மனித சாயல் தெய்வீகமாக மாறியது, அதனால் அவர் எங்கும் பிரசன்னமாக இருக்கிறார் என்பதாகும். ஆக, கிறிஸ்து தனது இரத்தம் மற்றும் சரீரத்துடன் உண்மையாகவே லண்டன் மற்றும் நியூயார்க் போன்ற நகரங்களில் இருக்கிறார், அத்துடன் கர்த்தருடைய பந்தி அனுசரிக்கும் இடத்திலும் பிரசன்னமாகிறார் என்பதாகும்.

கிறிஸ்துவின் மகிமை படுத்தப்பட்ட மனித சாயலைக் குறித்த லூத்தரன் போதனைக்கு வேதாகம பதிலானது, கிறிஸ்து மகிமைப்படுதலானது அவருடைய மனித சாயலை தெய்வீக சாயலாக மாற்றவில்லை. கிறிஸ்துவின் மகிமைப் படுத்தப்பட்ட மனித சாயல் தொடர்ந்து மனித சாயலாகவே இருப்பதால், எல்லா இடத்திலும் இருப்பதும், கர்த்தருடைய பந்தியில் சாப்பிடவது என்பதும் சாத்தியமானது அல்ல. கிறிஸ்துவின் மனித சாயல் பூமியில் அல்ல, மாறாக பரலோகத்திலே உள்ளது. யோவா 13:1; 16:7,28; அப்போ 3:21 மற்றும் பல வசனங்கள் இதை நிரூபிக்கிறது.

கிறிஸ்து இன்றைக்கும் நம்முடன் தனது தெய்வீக மாட்சிமை, கிருபை மற்றும் பரிசுத்த ஆவியானவராக நம்முடன் இருக்கிறார். விசுவாசிகளுக்கு திருவசனத்தின் மூலமாக, பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் மகிமை மற்றும் கிருபையை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார். பூமியிலுள்ள தமது திருச்சபைக்கு பரிசுத்த ஆவியானவர், இரட்சகரின் "தனிப்பட்ட பிரதிநிதியாக" இருந்து உடனிருக்கும் தேற்றரவாளனாக இருக்கிறார் (யோவா 14:16).

**47-க்கான கேள்விகள்:**

1. "சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்பதைக் குறித்த தவறான போதனைகளுக்கு விளக்கத்தை இந்த கேள்வியில் காண்கிறோம். சரியா, தவறா? ................
2. இயேசு தமது மனித சரீரம் உலகத்தின் முடிவுமட்டும் சீஷர்களோடு இருக்கும் என்றார்? சரியா, தவறா?............
3. எங்கெல்லாம் கர்த்தருடைய பந்தி நடைபெறுகிறதோ அங்கெல்லாம் கிறிஸ்துவின் சரீரப் பிரகாரமான பிரசன்னம் இருக்கிறது. சரியா, தவறா? ...................
4. லூத்தரன் மற்றும் (ரிபார்ம்டு) சீர்திருத்த கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் உடல் எங்கே இருக்கின்றது என்பது போன்ற சின்னச் சின்ன விஷயங்களுக்காக விவாதிப்பது சரியா? ......................, விளக்கம் தருக: ..............................................................................................................................
5. கிறிஸ்து இன்று நம்முடன் இருக்கிறார் என்று கூறுவது முறையல்ல? சரியா, தவறா? ..................
6. விசுவாசிகளிடம் தன்னுடைய தனிப்பட்ட பிரதிநிதியாக இருக்கும்படி இயேசு யாரை அனுப்பினார்? ..............................................................................................................................

7. பூமியிலுள்ள சபை கர்த்தருடைய வேதம் மற்றும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற நிலையில் அவருக்கு ஊழியம் செய்யவும், எல்லா தேசத்தாரையும் சீஷராக்குவதற்கும் தேவையான பெலன் கொடுக்கபட்டுள்ளது (மத் 28:19,20). சரியா, தவறா? ................
8. கிறிஸ்துவின் ............... சாயல் பரலோகத்தில் உள்ளது. கிறிஸ்துவின் ............... சாயல் எங்கும் உள்ளது.
9. கிறிஸ்துவின் மனித சாயல் மகிமைப் படுத்தப்பட்டதாக இருப்பினும், அது பரலோகத்தில் ஒரு இடத்தில் உள்ளது. சரியா, தவறா? ..................
10. எபிரே 4:14-ஐ எழுதவும்:

**48. கிறிஸ்துவின் தெய்வீகம் எங்கு இருக்கிறதோ அங்கு அவருடைய மனித சாயல் இல்லை என்றால், கிறிஸ்துவின் இந்த இரண்டு சாயல்/இயல்பு-களும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கப்பட்டுள்ளதா?**

அப்படியல்லவே; தெய்வத்துவம் என்பது மனித அறிவால் புரிந்து கொள்ள முடியாததாகவும், எங்கும் நிறைந்ததாகவும் இருக்கிறது, அது தொடர்கிறது, ஆனால் கிறிஸ்து எடுத்துக்கொண்ட மனித சாயலானது தெய்வீகத்தைப் போலவே இருக்க வேண்டியதல்ல, இருப்பினும் தனிப்பட்ட நிலையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாகவே இருக்கிறது.

***

இங்கே விளக்கப்பட்ட பதிலின் வெளிச்சத்தில், கிறிஸ்துவின் மனித சாயல் பரலோகத்தில் ஒரு இடத்தில் இருக்கிறது, ஆனால் அவருடைய தெய்வீக சாயலோ எல்லா இடத்திலும் ஒரே நேரத்திலும் இருக்கிறது, இந்த நிலை இரு சாயல்களும் ஒன்றை விட்டு மற்றொன்று பிரிந்திருக்கின்றது என்று அர்த்தமா? கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்துவின் உண்மையான சரீரம் பிரசன்னமாக இல்லை என்று நாம் நம்புவதால், லுத்தரன் நண்பர்கள், நாம் கிறிஸ்துவின் மனித சாயல் பரலோகத்தில் இருக்கிறது என்றும், தெய்வீக சாயலையும் தனியாகப் பிரிக்கிறோம் என்று குற்றப்படுத்தக் கூடும். இருப்பினும் அது உண்மையல்ல. கிறிஸ்துவின் தெய்வீக சாயல் எங்கும் நிறைந்து காணப்படும் அதே நேரத்தில், பரலோகில் உள்ள அவருடைய மனித சாயலிலும் இணைந்தேதான் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அவருடைய தெய்வீக சாயல், மூன்று நாட்கள் கல்லறையில் வைக்கப்பட்டிருந்த அவருடைய மரண சரீரத்தோடும், பரலோகத்திலிருந்த அவருடைய ஆத்துமாவோடும் இணைந்ததாகவே இருந்தது. இந்த இரண்டு சாயல்களும் தனிப்பட்ட நிலையில் ஒன்றோடு ஒன்று என்றும் இணைந்ததாகவே இருக்கிறது.

இந்த குறிப்பிட்ட உண்மையை விளக்கும் வசனங்களைக் குறித்த சீர்திருத்த (Reformed) புரிந்து கொள்ளுதலையே ஆரம்பகால திருச்சபை தந்தைகளும் கொண்டிருந்தனர். உதாரணமாக, (கி.பி 430-ல் மரித்த) அகஸ்டின் என்ற பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ போதகர் போதித்தது:

அவருடைய சரீர இயல்பு முறை பற்றிய காரியத்தில், அவர் எங்கும் நிறைந்து இருக்கின்றார் என்று நாம் கற்பனை செய்யக் கூடாது. கிறிஸ்துவின் தெய்வீக ஆள்தத்துவத்தைக் குறித்த விஷயத்தில் அவருடைய மனுஷீக தன்மையின் உண்மை நிலையை நாம் சீர்குலைத்தும்விடும் அளவிற்கு நாம் எதையும் மனம்போல யோசிக்க கூடாது... கடவுள் மற்றும் மனிதன் ஆகிய இருவரும் ஒரே நபராக உருப்பெற்று, ஒரே இயேசு கிறிஸ்துவாக, பரலோகத்தில் அவருடைய மனித சாயலிலும், தெய்வீக சாயலிலுலோ எங்கும் நிறைந்தவராக இருக்கிறார். இது இந்த கிறிஸ்தவ விசுவாச அறிக்கையைக் குறித்த எளிமையான புரிந்து கொள்ளுதலாக கிறிஸ்தவ சபையில் விளங்குகிறது. (Thelemann's AN AID TO THE HEIDELBERG CATECHISM, page 183 லிருந்து எடுக்கப் பட்டுள்ளது).

இப்படியாக திருவசனத்தைக் குறித்த சீர்திருத்த (Reformed) வியாக்கியாணம் ஆரம்பகால கிறிஸ்தவ திருச்சபையின் ஆதரவைப் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

கிறிஸ்து உண்மையாக, ஜீவிக்கிற கர்த்தர், அவர் தேவனுடைய சகல பண்புகளையும் உடையவராய் இருக்கிறார் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, கிறிஸ்து எல்லாம் வல்லவர் (Omnipotence), எல்லாம் அறிந்தவர் (Omniscience), எப்போதும் எங்கும் நிறைந்தவர் (Omnipresence) ஆகும். நம்முடைய இரட்சகர் ஒருபோதும் நம்மை தனியே விடுவதில்லை என்பதை நினைவிற்க் கொள்ள வேண்டும். எல்லா மனிதர்களும் நம்மைக் கைவிட்டாலும், கிறிஸ்து தமது பரிசுத்த ஆவியானவராகவும், வார்த்தையாகவும் நம்முடைய உதவியாளராக, ஆலோசகராக, ஆண்டவராக, இரட்சகராக நம்முடன் இருக்கிறார். நம்முடைய வாழ்வின் தனிமை மற்றும் துயர நேரங்களில் இதை நினைப்போமாக!

**48-க்கான கேள்விகள்:**

1. 47 மற்றும் 48-ஆகிய கேள்விகள் போதிப்பது... அ)கிறிஸ்துவின் மனித சரீரம் இருக்கும் இடத்தைக் குறித்து, ஆ)இயேசு தேவனா இல்லையா, இ)கடவுள் எங்கும் இருக்கிறாரா, இல்லையா என்பது குறித்து ஆகும். எது சரி? ............
2 எங்கெல்லாம் கிறிஸ்துவின் தெய்வீகம் இருக்கிறதோ அங்கெல்லாம் அவருடைய சரீர பிரசன்னம் இருக்கிறது. சரியா, தவறா? ...................

3. கிறிஸ்துவின் தெய்வீகம் என்பது மனித ஞானத்தால் முற்றும் புரிந்து கொள்ள முடியாது. சரியா, தவறா? ..................
4. கிறிஸ்துவின் தெய்வீக சாயல் திரியேக தெய்வத்தின் இரண்டாம் நபர் ஆவார். சரியா, தவறா? ..................
5. ஒரு சாதாரண படைப்பு பெற்றிருக்க இயலாத, தேவனின் மூன்று பண்புகளை எழுதுக.
   அ.
   ஆ.
   இ.
6. இயேசுவின் தெய்வீகம் மற்றும் அவருடைய மனித சாயல் அவருடைய சிலுவை மரணத்தின்போது சற்று பிரிந்து இருந்தது. சரியா, தவறா? ..................
7. கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்துவின் சரீரப் பிரகாரமான பிரசன்னம் இல்லாததால் அவர் இன்றும் நம்முடன் இருக்கிறார் என்பதை நாம் நம்ப முடியாது. சரியா, தவறா? ..................
8. கிறிஸ்துவின் மனித சாயல் பூமியில் அல்ல, அது பரலோகத்தில் இருக்கிறது என்று போதித்த புகழ்பெற்ற பழங்கால கிறிஸ்தவ ஆசிரியர் யார்? ....................................., எந்த நூற்றாண்டு?..................
9. உன்னுடைய மிக நெருங்கிய நண்பர்கள் உன்னைக் கைவிடும்போது யாரை நீ நம்ப வேண்டும்.
10. மத்தே 28:20-ஐ எழுதுக:

**49. கிறிஸ்து பரலோகத்திற்குள் பிரவேசித்ததால் நாம் பெறும் நன்மைகள் என்ன?**

முதலாவது, பிதாவின் முன்பாக அவர் நமக்காக வழக்காடுகிறவராக இருக்கிறார். இரண்டாவது, அவர் சபையின் தலையாக இருப்பதினால், அவருடைய சபையில் அங்கமாக இருக்கும் என்னை தம்மோடு இருக்கும்படி எடுத்துக்கொள்வார் என்பதற்கான உறுதியான நம்பிக்கையாக அவர் நம்முடைய சரீரமாக பரலோகத்தில் இருக்கிறார். மூன்றாவது, நாம் பூலோகத்திற்கு உரியவைகளை அல்ல, மாறாக கிறிஸ்து வீற்றிருக்கும் பரலோகத்திற்கு உரியவைகளை நோக்கிப் பார்ப்பதற்குத் தேவையான பரிசுத்த ஆவியானவரை நமக்கு அச்சாரமாக அனுப்புகிறார்.

***

நம்முடைய இரட்சகர் பரலோகத்திற்கு ஏறிச்சென்றதாலும், பிதாவாகிய தேவனால் உள்ளே ஏற்றுக் கொள்ளப்பட்டதாலும் நாம் பெறும் மூன்றுவித நன்மைகளைக் குறித்து இந்த கேள்வி போதிக்கிறது.

1. பரத்திற்குச் சென்ற கிறிஸ்து நம்முடைய "வழக்கறிஞர்/பரிந்து பேசுபவர்". ஒரு "வழக்கறிஞர்", தன்னிடம் தஞ்சம் புகுந்துள்ள ஒருவருக்காக நீதிபதியிடம் பரிந்து பேசுகிறவர். எபிரே 7:25-ல், "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார்" என்று அறிகிறோம். பிதாவின் சமூகத்தில் கிறிஸ்து தமது ஜனங்களுக்கான பிரதிநிதியாக இருந்து, நமக்காக ஜெபித்து, எப்போதும் நமக்கு பதிலாக தன்னுடைய பலியை பதிலாக வைத்து பரிந்து பேசுகிறவராக இருக்கிறார். 1யோவா 2:1, "ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராகயிருக்கிறார்" என்கிறது. கிறிஸ்து பலியானதின் மதிப்பானது நமக்காக தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். நம்முடைய வழக்கறிஞராகிய கிறிஸ்து மூலமாக மட்டுமே நம்முடைய ஜெபங்கள் தேவனிடம் செல்ல முடியும். எப்போதும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கவும், நமக்காக பிதாவின் வலது பாரிசத்தில் எப்போதும் வழக்காடும் ஒருவர் பரலோகத்தில் உண்டு என்பதையும் நாம் மறக்க கூடாது.

2. பரமேறிய இரட்சகர் நம்முடைய பரமேறுதலுக்குமான நம்பிக்கையின் அடையாளம் ஆவார். கிறிஸ்துவோடு அவருடைய ஆவியால் என்றும் இணைக்கப்பட்ட நிலையில் இருக்கும் நாம் பரலோகத்தில் தனிப்பட்ட நிலையில் அவரோடு சேர வேண்டும். கிறிஸ்துவில் நம்முடைய மனித சாயல் ஏற்கனவே பரலோகில் உள்ளதால் நமது சரீரமும் ஒருநாள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பது உறுதியாகிறது. நம்முடைய ஆத்துமா முதலில் செல்லும், பின்னர் உயிர்த்தெழுதலுக்குப் பின் நம்முடைய சரிரமும் பின்செல்லும். கிறிஸ்துவின் சரீரம் பரலோகத்தில் இருப்பது என்பது, பரலோகமானது சரீரம் மற்றும் ஆத்துமா வாசம் செய்யும் இடம், அங்கே நாமும் ஒருநாள் செல்வோம் என்பதையும் நமக்கு நினைவு படுத்தட்டும்.

3. பரமேறிய கிறிஸ்து தமது ஆவியை தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு அனுப்புகிறார். தான் தெரிந்து கொண்டவர்களைப் பரிசுத்தமாக்க தமது ஆவியையும், சுவிசேஷத்தையும் அனுப்புகிறார். எவர்கள் கிறிஸ்துவின் மரணத்தினால் மீட்கப்பட்டார்களோ, அவர்களுக்குள் மறுபிறப்பு, விசுவாசம், மனமாற்றம் மற்றும் பரிசுத்தமாகுதலின் வரத்தைக் கொடுக்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுத்து, பரிசுத்த ஆவியால் அவர்களை அழைக்கிறார். "அச்சாரம் (earnest)" என்ற வார்த்தை "உறுதிப் பணம் (down payment)" என்பதாகும். பரிசுத்த ஆவியின் வரம் என்பது "உறுதிப் பணம் (down payment)" ஆகவும், நம்முடைய நித்திய இரட்சிப்புக்கான (foretaste) முன்சுவையாகும். நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் ஆவியானவர், நாம் வாழும் இந்தப் பாவ உலகில் கிறிஸ்துவைத் தேடவும், அவரைப் போல இன்னும் அதிகமாக வளரவும் ஊக்கமளிக்கிறார்.

**49-க்கான கேள்விகள்:**

1. நமது இரட்சகரின் பரமேறுதல் தரும் மூன்றுவித நன்மைகள் யாவை?
   அ.
   ஆ.
   இ.
2. நம்முடைய ஆண்டவர் "வழக்காடுபவர்" என்று அழைக்கப்படுவது ஏன்? ..................................................
   ..............................................................................................................................................................
3. பலியான கிறிஸ்துவின் மதிப்பு அனுதினமும் நமக்காக பரலோகத்தில் நமக்கு கொடுக்கப்பட வேண்டும். சரியா, தவறா? ..................
4. "நாம் நம்முடைய சரீரத்தை பரலோகத்தில் பெற்றிருக்கிறோம்" என்று நமது கேட்டகிசம் கூறுவதின் அர்த்தம் என்ன? ...........................................................................................................................................
5. நமது இரட்சகர் பரலோகத்தில் இருக்கிறார் என்பது நமக்கு தரும் உறுதிப்பாடு என்ன? .......................
   ..............................................................................................................................................................
6. கிறிஸ்து தனது மீட்பின் நன்மைகளை தெரிந்து கொள்ளப்பட்ட தமது ஜனத்திற்கு கொடுக்க யாரை அனுப்புகிறார்? .....................................
7. பரிசுத்த ஆவியானவர் "அச்சாரம் (earnest)" என்பது... அ)இது அவருடைய பெயர்களில் ஒன்று, ஆ)நம்முடைய நித்திய இரட்சிப்புக்கான "உறுதிப் பணம் (down payment)", இ)அவரும் பரலோகத்திற்குள் ஏறிப்போனார். எது சரி? ...................
8. சுவிசேஷம் பிரசங்கிக்க கேட்கும் அனைவருக்கும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். சரியா, தவறா? ...................
9. பொருத்துக:

| | | |
|---|---|---|
| தலை | - | வழக்காடுபவர் (வழக்காடுபவரோடு இணைக்க வேண்டாம்) |
| வழக்காடுபவர் | - | நிச்சயமான உறுதி |
| அச்சாரம் | - | உறுதிப் பணம் |
| நம்முடைய சரீரம் | - | அங்கத்தினர்கள் |
| 1யோவா 2:1 | - | வழக்கறிஞர் |

10. கொலோ 3:1-ஐ எழுதவும்:

**50. "பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என்ற வார்த்தை இணைக்கப் பட்டிருப்பது ஏன்?**

தமது திருச்சபையின் தலையாக இருக்கும் கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் ஆளுகை செய்யும் பிதாவின் முன்பாக தோன்றுவதற்காகவே கிறிஸ்து பரலோகத்திற்குள் ஏறிச் சென்றார்.

***

அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் ஆறாவது அறிக்கையின் முதல்பகுதி, கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிப்போனதைப் பற்றியும், இரண்டாம் பகுதி, "பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என்பதைப் பற்றியும் கூறுகிறது.

கேள்வி 49-ல் விளக்கப்பட்ட மூன்று நன்மைகளோடு மேலும் கூடுதலான நன்மைதான் இந்த கேள்வி 50-லும் கூறப்பட்டுள்ளது எனலாம். இருப்பினும் கிறிஸ்து பரமேறுதலும், பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்ற இரண்டும் இருவேறு விசேஷித்த கருத்துக்கள், ஆகவே அவைகளைத் தனித்தனியே கவனிப்பது சிறந்தது. இந்த "வீற்றிருக்கிறார்" என்ற நேரத்தில், கிறிஸ்து வெற்றியின் ஆண்டவராக, சகல படைப்பின் மீதும் ஆளுகைசெய்ய அதிகாரத்தை பெற்றுள்ளவராக, கர்த்தரால் முடிசூட்டப் பட்டு மத்தியஸ்த இராஜாவாகக் காணப்படுகிறார். பாவம் மற்றும் சாத்தானின் மீது சிலுவையில் தான் பெற்ற வெற்றியினால் சகலத்தையும் ஆளும் அதிகாரம் பெற்றார். அவருடைய எதிரிகள் அனைவரும் முழுமையாக அழிக்கப்படும்வரை அவர் ஆட்சி செய்வார் (1கொரி 15:25; எபிரே 2:8). தூதர்கள் பரமேறுகின்றார்கள், ஆகவே நாமும் பரமேறுவோம், ஆனால் இயேசு கிறிஸ்து மட்டுமே கர்த்தருடைய வலது பாரிசத்தில் என்றும் வீற்றிருப்பார்.

"வீற்றிருக்கிறார்" என்றால் என்ன? பழங் காலத்தில், ஒரு அரசனோ அல்லது ஒரு மாமனிதனோ தான் பெருமைப் படுத்த விரும்பும் ஒருவரை தனது வலது பக்கமாக உட்காரச் செய்வது வழக்கமாக இருந்தது. இராஜாவாகிய சாலொமோன் தனது அம்மாவை தனது வலது பக்கமாக உட்காரச் செய்து கனப்படுத்தியதை (1 இராஜா 2:19) வாசிக்கிறோம். யாக்கோபு மற்றும் யோவானின் தாய் தனது குமாரர்களை இயேசுவின் சிம்மாசனத்திற்கு வலது புறத்தில் ஒருவரும், இடது புறத்தில் ஒருவருமாக உட்கார கேட்டுக் கொண்டாள் (மத் 20:21). கர்த்தரால் மிக உயர்ந்த நிலைக்கு இயேசு உயர்த்தப்பட்டார். கிறிஸ்து சகலத்தின் மீதும் தொடர்ந்து அதிகாரம் உடையவராக, தமது சபையின் தலையாக, தாம் தெரிந்து கொண்டு மீட்டவர்களை ஒன்று சேர்க்கவும், தமது இராஜ்ஜியத்தின் விரிவாக்கம் மற்றும் தனது எதிரிகளை நியாந்தீர்க்கவும் பூமியின் எல்லா காரியங்களையும் இயக்கி வருகிறார்.

"தேவனுடைய வலது பாரிசம்" என்றவுடன், தேவனுக்கு கரங்கள் இருக்கும் ஒரு சரீரம் உண்டு என்றும், தங்கத்தாலான ஒரு சிம்மாசனம் உண்டு என்றும் நாம் நினைக்க கூடாது. தேவன் பரிசுத்தமான ஆவியாக இருக்கிறார், ஆகவே அவர் உட்காருவதில்லை. ஆனால், தனது மனித சாயலில் இயேசுவுக்கு தேவனால் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நமக்கு விளக்குவதற்காக இதுபோன்ற உச்சரிப்புகளை வேதம் பயன்படுத்தியுள்ளது.

**50-க்கான கேள்விகள்:**

1. கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பது, கேள்வி 49-ல் விளக்கப்பட்ட மூன்று நன்மைகளோடு மேலும் கூடுதலான நன்மையே ஆகும். சரியா, தவறா? .................
2. கிறிஸ்து மத்தியஸ்த இராஜாவாக வீற்றிருக்கிறார் என்பது அவர் பரமேறிப்போனதை விட்டு பிரித்துப் பார்க்க கூடாது. சரியா, தவறா? ................
3. பழங்காலத்தில் அரசனின் வலது புறமாக உட்காரச் செய்வது வழக்கமாக இருந்தது. இது எதற்கு அடையாளமாக இருந்தது? ....................................................................................எடுத்துக்காட்டு தருக:........................................................................................................................................
4. கிறிஸ்து பரலோகில் நம்முடைய இராஜாவாக... அ) சிலவற்றின் மீது, ஆ)அவருடைய திருச்சபையின் மீது மட்டும், இ)தூதர்கள் மீது மட்டும், ஈ)எல்லா மனிதர் மற்றும் தூதர்கள் மீதும், உ)பாவம், மரணம் மற்றும் நரகம் மீது... அதிகாரம் உடையவராக இருக்கின்றார்? எது சரி? ................
5. கிறிஸ்து எப்படி தனது திருச்சபையை ஆளுகிறார்? (கேள்வி 31-ஐ பார்த்து பதிலளிக்கவும்) ........................................................................................................................................
6. கிறிஸ்துவுக்கு அதிக வல்லமை உண்டு என்று நம்புகிறோம், அதே நேரத்தில் யுத்தம், பேரழிவுகள், குணமாக்க முடியாத வியாதி போன்றவைகள் அவரின் வல்லமைக்குள் உட்பட்டதல்ல. சரியா, தவறா? ................
7. தேவன் கரங்களை உடையவராக இருப்பதால் அவற்றில் கிறிஸ்து வீற்றிருக்கிறார். சரியா, தவறா? ................
8. 1கொரி 15:24-28-ஐ வாசித்து பின்வரும் கேள்விகளுக்கு பதில் தருக:
   அ. எல்லா ........................................................................................................................................
   . ................................................................. செய்ய வேண்டியது. (வச 25)
   ஆ. பரிகரிக்கப்படுங் ..................................................................................... (வச 26)
   இ. (வச 28) கிறிஸ்துவுக்கு எல்லாம் கீழ்ப்படுத்தப்பட்ட நிலையில் கிறிஸ்து அவைகளை யாருக்கு கீழ்ப்படுத்துவார்? .................................
   ஈ. குமாரன் ...................................................................................................................... கீழ்ப்பட்டிருப்பார்.
9. கிறிஸ்து தம்முடைய திருச்சபையை தமது வார்த்தை மற்றும் ஆவியினால் ஆளுகை செய்கிறார், அப்படியான ஆளுகை தமது "நித்திய ......................................................................................................"
10. எபிரே 10:12-ஐ எழுதவும்:

**51. நம்முடைய தலையாகிய கிறிஸ்துவின் மகிமையினால் நமக்கு வரும் நன்மை என்ன?**

முதலாவது, அவருடைய சரீரத்தின் அங்கமான நம்மீது பரலோக வரங்களை தமது பரிசுத்த ஆவியின் மூலம் பொழிந்தருளி; தமது வல்லமையினால் நம்மை எல்லாவித எதிரிகளிடமிருந்து காப்பாற்றி பாதுகாக்கிறார்.

***

"தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கும்" மகிமை அடைந்த கிறிஸ்துவிடம் இருந்து நாம் பெறும் இரண்டுவித நன்மைகளை இந்த கேள்வியில் படிக்கிறோம். ஏற்கனவே இந்த நன்மைகளை கேள்விகள் 49 மற்றும் 50-ல் பார்த்தாயிற்றே, பின்னர் எதற்கு என்று நீங்கள் நினைக்கலாம். இங்கே இந்த நன்மைகளைக் குறித்த மேலும் பலவிளக்கத்தைக் காணலாம்.

1. கிறிஸ்து தமது பரிசுத்த ஆவியினால் பரலோக நன்மைகளை நம்மீது அருள்கிறார். சீஷர்கள் பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டது இதன் தொடக்கத்தைக் குறிக்கிறது. ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவனும் இயேசு கிறிஸ்து அனுப்பிய பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றவன் என்பது சத்தியம் (எபேசி 1:13). ஆவியானவரால் நமக்குக் கொடுக்கப்பட்ட பரலோக வரங்கள் என்பது என்ன? அவைகள், உண்மையான விசுவாசம், பாவத்திற்கான துக்கம், கிறிஸ்துவின் மீது அன்பு, தாழ்மை, தேவனுக்கு கீழ்ப்படிவதற்கான விருப்பம், கிறிஸ்துவுக்குள்ளான சமாதானம் மற்றும் போதுமென்ற மனநிறைவு, போன்ற பல ஆவியக்குரிய விருப்பங்களும், அவைகளை செய்வதற்கான பெலனையும் நாம் பெற்றிருப்பதாகும். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியானவர் மூலம் கிறிஸ்துவிடமிருந்து பெறும் ஆவிக்குரிய வரங்களை கலாத்தியர் 5:22,23 பட்டியலிடுகிறது.

நம்மில் காணப்படும் எந்தவொரு நன்மையான காரியத்திற்கான புகழ் கிறிஸ்து ஒருவருக்கே சேரும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் ஆவியினால் மட்டுமே நமக்குள் விசுவாசம், அன்பு, அர்ப்பணம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவைகள் உருப்பெற்றது.

2. பரலோகத்தில் உள்ள கிறிஸ்துவே நம்மை நம்முடைய எல்லா எதிரிகளிடமிருந்தும் காப்பாற்றி பாதுகாக்கிறார். நம்முடைய எதிரிகள் எவைகள்? நம்முடைய பாவ குணாதிசயம், நம்மைச் சுற்றியுள்ள தீய உலகம், எப்பொழுது நம்மை விழுங்கலாம் என்று சுற்றித் திரியும் பிசாசு என்பவைகளே (1பேது 5:8).

இது போன்ற எதிரிகளின் சீற்றம் நம்மைச் சூழ்ந்திருந்தாலும், பரலோகத்தில் உள்ள நமது ஆண்டவர் நமக்கு போதிய கிருபையையும், பெலத்தையும் கொடுத்து, இவ்வெதிரிகளால் நமக்கு மரணமே வந்தாலும், அவருக்கு நாம் உண்மையாக இருக்க உதவி செய்கிறார். காரணம், இவைகளை எல்லாம் கிறிஸ்து தமது ஆளுகையின் கீழ் வைத்திருக்கிறார், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோம 8:28).

கிறிஸ்து பரலோகத்தில் சோம்பலாக உட்கார்ந்திருப்பதில்லை. தமது ஜனங்களை இரட்சிக்கும் உன்னத பணியானது இரவும், பகலும், வருடங்கள் பலவாக நடந்து கொண்டே இருக்கிறது.

**51-க்கான கேள்விகள்:**

1. கிறிஸ்துவின் சிலுவை மரணம் நமக்குப் போதுமானது, ஆகவே அவர் பரலோகிலிருந்து நமக்காக எதையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சரியா, தவறா?.................
2. நமக்கு ஆவிக்குரிய நன்மைகளைத் தர கிறிஸ்து பரலோகத்திலிருந்து, ......................... நபராகிய ....................................... அனுப்புகிறார்.
3. எந்த நாளில் பரிசுத்த ஆவியின் வரம் முதலாவது தமது சீஷர்களுக்கு கொடுக்கப்பட்டது? ......................................................
4. கிறிஸ்து நமக்குத் தரும் சில பரலோக வரங்களை எழுதுக: ........................................................................ ..............................................................................................................................................................
5. பரிசுத்த ஆவியின் வரங்கள்... அ) எல்லா ஜனங்கள், ஆ) சில கிறிஸ்தவர்கள், இ)கிறிஸ்து எவர்களுக்காக மரித்தாரோ அவர்கள் அனைவருக்கும்... கிறிஸ்துவால் கொடுக்கப்படுகிறது. எது சரி................
6. கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட விசுவாசத்தைக் குறித்து பெருமைப் படவேண்டும், காரணம் பலருக்கு கிறிஸ்துவின் மீதான இந்த விசுவாசம் கொடுக்கப்படவில்லை. சரியா, தவறா? ................., விளக்கம்: ..............................................................................................................................
7. கிறிஸ்து பரலோகத்திற்குப் போகும்போது சாத்தான் சந்தோஷப்பட்டான், காரணம் அவன் பூமியில் செய்யும் தீய செயல்களை கிறிஸ்து தடை செய்யமாட்டார் என்பதால். சரியா, தவறா? .................
8. எதுபோன்ற எதிரிகளிடமிருந்து கிறிஸ்து நம்மைக் காப்பாற்றி பாதுகாக்கிறார்?
   அ.
   ஆ.
   இ.
9. கிறிஸ்து பரலோகத்தில் தமது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறபடியால் எல்லா காரியங்களும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நன்மைக்கேதுவாகவே நடைபெறுகிறது. சரியா, தவறா? .................
10. அப்போ 2:33-ஐ எழுதுக:

### 52. "மரித்தோரையும், உயிருள்ளோரையும் நியாயம் தீர்க்க மீண்டும் வருவார்" என்பது உனக்குத் தரும் ஆறுதல் என்ன?

என்னுடைய எல்லாவித கவலைகள் மற்றும் உபத்திரவங்களிலும், நிமிர்ந்த தலையோடு, தேவனுடைய நியாயத்தீர்ப்பின்படி எனக்காக தன்னையே பலியாகத் தந்து,என்னுடைய எல்லா சாபத்தையும் நீக்கி, பரலோகத்திலிருந்து நியாயாதிபதியாக வரும் அதே கிறிஸ்துக்காகவே எதிர் நோக்கி இருக்கிறேன். அவர் தம்முடைய மற்றும் என்னுடைய எதிரிகளை நித்திய ஆக்கினைக்குள் தள்ளி, என்னையோ தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோடு தனக்காக பரலோக சந்தோஷம் மற்றும் மகிமைக்குள் எடுத்துச் செல்வார்.

***

"அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயம் தீர்க்க வருவார்." என்னும் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் ஏழாவது அறிக்கையை இந்தக் கேள்வி 52 விளக்குகிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது, தமது நான்காவது மற்றும் முடிவான உயர்வு நிலை ஆகும். கிறிஸ்துவின் உயர்வு நிலைகளை உங்களால் ஞாபகப்படுத்த முடிகிறதா? அவைகள்: அவருடைய உயிர்த்தெழுதல், பரமேறிச் செல்லுதல், தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருத்தல் மற்றும் இரண்டாம் வருகை.

பரலோகத்திலிருந்து வரும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து புதிய ஏற்பாடு பல காரியங்களைக் கூறுகிறது, ஆனால் மிக சொற்ப எண்ணிக்கையுடையவர்களே அதில் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றனர்! பல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பிறப்பையும், கிறிஸ்துமஸ்-ஐயும் கொண்டாடுகிறார்கள், ஆனால் கொஞ்ச ஜனங்களே அவருடைய இரண்டாம் வருகையை எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றனர். இதற்கான காரணம், இவர்கள் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்வதில் மட்டும் மிக அலுவலாக இருக்கின்றார்கள் என்பதினால் அல்ல. "அவர்மேல் (அவர் மீண்டும் வருவார் என்று) இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும்

சுத்திகரித்துக் கொள்ளுகிறான்” என்று 1யோவன் 3:3 கூறுகிறது. கிறிஸ்து வருகிறார். நீங்கள் மரிப்பதற்கு முன் அவர் வந்தால், அவருக்குப் பிரியமான காரியங்களைச் செய்கிறவர்களாக நீங்கள் காணப்படுவீர்களா?


ஆண்டவர் மீண்டும் வருவது எப்போது? இதை ஒருவரும் அறியார்; எல்லாம் ஆயத்தமாக இருக்கும்போது அவர் மீண்டும் வருவார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இன்றைய பல கிறிஸ்தவர்கள் “Pre-Millennialism - வருகைக்கு முன்னான ஆயிரவருட அரசாட்சி”யில் நம்பிக்கை வைத்துள்ளனர். வேதத்தின் வசனங்களுக்கான ஆவிக்குரிய அர்த்தத்தைக் கவனிக்காமல், வார்த்தைகளை மட்டும் கருத்தில் கொள்ளும் (Fundamentalist) திருச்சபைகள், தொலைக் காட்சி மற்றும் வானொலியில் (TV and Radio) இதைக் குறித்த போதனையை நாம் அடிக்கடி கேட்கிறோம். இந்தக் கற்பனைக் கோட்பாட்டின்படி, உலகத்தின் முடிவு பலவித பருவ கட்டங்களை உடையது ஆகும்:

1. கிறிஸ்து வானத்தில் தோன்றுவார், அப்போது மரித்த மற்றும் உயிரோடிருக்கும் விசுவாசிகள் அவரை ஆகாயத்தில் சந்திக்கும்படி எழுப்பப்படுவார்கள். பின்னர், அவர்களை பரலோகத்திற்கு எடுத்துச் செல்வார். ப்ரீ-மில்லெனியலிஸ்ட்ஸ் - Premillennialists (வருகைக்கு முன் ஆயிரவருட அரசாட்சியில் நம்பிக்கை வைப்பவர்கள்) இதை “Rapture - சபை எடுத்துக் கொள்ளப்படுதல்” என்பர். சிலர் இதை (Secret Rapture) இரகசியமாக சபை எடுத்துக் கொள்ளப்படுதல், அதாவது உலகில் உள்ள மற்ற ஜனங்களுக்குத் தெரியாமல் நடக்கும் செயல் என்கிறார்கள்.

2. இந்த உலகம் (இதை நம்பும் ப்ரீ-மில்லெனியலிஸ்ட்ஸ் தவிர) அவிசுவாசிகள் அனைவரையும் இந்த பூமியில் கொண்டதாக அடுத்த ஏழு ஆண்டுகள் தொடரும்.

3. பின்னர் ஏழு ஆண்டுகள் கழித்து, கிறிஸ்து மீண்டும் பூமிக்கு வந்து, தமது எதிரிகளைக் கொன்று, யூத தேசத்தாரை மனமாற்றி, எருசலேமை உலகத்தின் தலைநகராகக் கொண்டு ஆயிரம் வருட (Millennium - மில்லெனியம்) அரசாட்சியை ஏற்படுத்துவார். இயேசு அரசவைக்கான ஒரு பெரும் அரண்மனை மற்றும் அதில் தான் உட்காரத்தக்கதாக உண்மையான ஒரு சிம்மாசனத்தையும் உடையவராக இருப்பார். எருசலேமில் ஒரு புதிய ஆலயம் கட்டப்படும்படி இயேசு செய்வார் என்று இந்த ப்ரீ-மில்லெனியலிஸ்ட்ஸ் நம்புகிறார்கள்.

4. இந்த ஆயிர வருட அரசாட்சியின் முடிவில், கிறிஸ்துவுக்கு எதிரான யுத்தம் ஒன்று இருக்கும், அதில் அவர் தனது எதிரிகளைக் கொன்று, மரித்த துன்மார்க்கரை எழுப்பி சாத்தானோடும், அவனுடைய தூதர்களோடும் அவர்களை தண்டித்து நரகத்தில் தள்ளுவார் என்பதாகும். எதிர்காலத்தைக் குறித்த ப்ரீ-மில்லெனியலிஸ்ட்ஸ் கண்ணோட்டத்தை விளக்கும் படத்தை நாம் இங்கே காணலாம்.




**எதிர்காலத்தைக் குறித்த ப்ரீ-மில்லெனியலிஸ்ட்ஸ் கண்ணோட்டம்**


ஹைடெல்பெர்க் கேட்டகிசம் இந்தக் கற்பனைக் கோட்பாட்டை சரியாக நிராகரிக்கிறது. உலகமெங்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதினால் (மத் 24:14; 28:18-20; 24:47; அப்போ 1:8) புறஜாதியாரும், யூதர்களும் மனமாற்றம் பெறுவதினால் (அப்போ 15:14-18; ரோம 11; 1கொரி 15:25) கொஞ்சம் கொஞ்சமாக தேவனுடைய இராஜ்ஜியம் நிறுவப்படும் என்று வேதம் கூறுகிறது. இந்த முழு புதிய ஏற்பாட்டுக் காலம், “Millennium - ஆயிரவருடம்” (வெளி 20:1-9-ன் 1000 வருடங்கள், என்பது ஒரு நீண்ட காலத்தைக் குறிக்கும் அடையாள குறியீட்டு வார்த்தை) என்று அழைக்கப் படுகிறது; மரித்தோரை எழுப்பி, பூமியிலுள்ள அனைவரையும் நியாயம் தீர்த்து புதிய வானம் மற்றும் புதிய பூமியை ஸ்தாபிக்க பரலோகத்திலிருந்து கிறிஸ்து மீண்டும் வரும்போது இந்த நீண்ட காலமானது முற்றுப் பெறும்.

உலகத்தில் உள்ளவர்களின் மனமாற்றம் குறித்த எண்ணிக்கையைக் குறித்து ரிபார்ம்டு மாணவர்களால் விவாதிக்கப்பட்டு வருகிறது. சிலர் (Post-millennialists - போஸ்ட் மில்லெனியலிஸ்ட்ஸ்) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பே தேசங்கள் கிறிஸ்தவத்திற்கு மாறிவிடும் என்று நம்புகிறது. தங்களுடைய இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக ஆதி 12:2,3; 17:4-6; சங் 2:8-9; 18:43-45; 22:27-28; 72:8-19; 86:9; 110; ஏசா 2:1-4; 9:6-7; 11:4-9; தானி 2:35,44; 7:13,14; மல் 1:11; மத் 13:31-33; 28:18-20; வெளி 11:15; 15:3,4; 19:11-

16 போன்ற வசனங்களை பயன்படுத்துகின்றனர். மற்றவர்கள் (A-millennialists - ஆமில்லெனியலிஸ்ட்ஸ் என்று அழைக்கப்படுபவர்கள்) கிறிஸ்துவுக்கு எதிரான அமைப்புகள் இந்த உலகில் தொடாந்து வளர்ந்து கொண்டே இருக்கும், திடீரென பரலோகத்திலிருந்து கிறிஸ்துவின் வெளிப்பாடு தோன்றும் வரை பூமியில் உள்ள சிறிய திருச்சபையானது பல நிலைகளில் தாக்கப்பட்டு வரும் என்று நம்புகிறார்கள். இவர்கள் மத் 24:21-31; லூக் 17:26-30; 18:8; 2தெச 2:3,4; வெளி 13 ஆகிய வசனக் குறிப்புகளை தங்கள் நம்பிக்கைக்கு ஆதாரமாகக் காண்பிக்கிறார்கள்.

எப்படியிருந்தாலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது...

1) மரித்த (நீதிமான்களும், துன்மார்க்கரும்) அனைவரும் எழுப்பப்படுவார்கள் (யோவா 5:28,29; (வெளி 24:15)
2) அனைவரையும் நியாயம் தீர்த்து, செம்மறியாடுகளை வெள்ளாடுகளிடமிருந்து பிரிப்பார் (மத் 25:31-46)
3) தம்முடைய பரிசுத்தவான்களுக்காக புதிய வானம் மற்றும் புதிய பூமியை ஸ்தாபிப்பார் (2பேது 3:13)
4) துன்மார்க்கரை நித்திய நரகாக்கினைக்குள் தள்ளுவார் (வெளி 20:15)




### Post, Pre, Amillenial Views...

இப்போது எழும் கேள்வி, கிறிஸ்தவர்கள் எவரேனும் நீயாயத்தீர்ப்பில் தோற்கடிக்கப்பெற்று தண்டிக்கும்படி தள்ளப்படுவார்களா? இதற்கான பதில், "உண்மையான கிறிஸ்தவர்கள் அந்த பயங்கரமான அதே நேரத்தில் அற்புதமான அந்த நாளில் தோற்றுப்போக மாட்டார்கள்" என்பதாகும். காரணம், ஏற்கனவே அவர்களுக்கான நரக ஆக்கினையை சிலுவையில் தான் எடுத்துக் கொண்டார். தேவனுடைய நியாயத்தீர்ப்பின்படி தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்து நம்முடைய எல்லா சாபத்தையும் நீக்கிவிட்டார். இருப்பினும் நாம் அந்த நாளிலே மாய்மால கிறிஸ்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களாக உண்மைக் கிறிஸ்தவர்கள் என்று கிறிஸ்துவால் அங்கீகரிக்கப்படுவோம். எவர்கள் ஆவியின் கனிகளில் குறைவு படுகின்றார்களோ அவர்கள் பொய்யான கிறிஸ்தவர்கள் (வெள்ளாடு) என்று வெளிப்படுத்தப்பட்டு, கிறிஸ்தவர்களே என்ற அறியப்படாத புறஜாதியாரோடு நரகத்தில் தள்ளப்படுவார்கள். நாம் இந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து மிகவும் கருத்துடையவர்களாக இருந்து, அதற்கேற்ப வாழ்வது என்பது எத்தனை அவசியம். தன்னைதானே ஏமாற்றி, நரகத்தில் போய் முடிவது என்பது எத்தனை திகிலும் மோசமுமான காரியம்!

**52-க்கான கேள்விகள்:**

1. "நிமிர்ந்த தலையோடு" கிறிஸ்துவை எதிர்பார்ப்பது என்பது... அ) சீர்திருத்த திருச்சபையின் அங்கத்தினர்களாக இருப்பது; ஆ) எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போது கடவுளுக்கு ஊழியம் செய்தல்; இ) கிறிஸ்துவை மட்டும் முன் வைத்து, அவருடைய வருகைக்காக ஆவலோடு எதிர்நோக்கி இருப்பது; ஈ)கிறிஸ்து நாம் உயிரோடு இருக்கும்போது வருவாரா என்று சந்தேகம் கொள்வது...எது? ..........
2. பல பெயர் கிறிஸ்தவர்கள் தாங்கள் உண்மையாக கிறிஸ்துவுக்காக சரியாக ஊழியம் செய்யாததால் கிறிஸ்து வருகிறார் என்பதை விசுவாசிக்கவில்லை என்கிறனர். சரியா, தவறா? ..................
3. உண்மையான கிறிஸ்தவர்களைப் பொறுத்த நிலையில், அவர்களுடைய பாவங்கள் ஏற்கனவே சிலுவையில் கிறிஸ்துவால் எடுத்துப்போடப் பட்டது ஆகும். சரியா, தவறா? ..................
4. கிறிஸ்துவில் மட்டும் விசுவாசம் வைத்து, அவருக்கு மட்டும் கீழ்ப்படிந்து வாழும் கிறிஸ்தவர்கள், வரப்போகும் நியாயத்தீர்ப்பில் தண்டிக்கப்பட்டு நரகத்திற்குச் செல்ல கூடும். சரியா, தவறா? ..................
5. ப்ரீ-மில்லெனியலிஸ்ட்ஸ் - Premillennialists பூமியில் "ஆயிர வடரும்" "அரசாட்சி" இருக்கும் என்று நம்புகிறார்கள். இதனால், இவர்கள் கூறுவது என்ன? ........................................................................................ ........................................................................................அது உண்மையா? ..................................................
6. கிறிஸ்துவின் வருகையின்போது மரித்த உடல்களுக்கு நடப்பது என்ன? .................................................. ..........................................................................................................................................................................

7. துன்மார்க்கரின் நியாயத்தீர்ப்பு அவர்கள் அ) எழும்பும் முன்பு, ஆ) எழுந்த பின்பு... நடக்கும். எது?...........
8. மரித்த துன்மார்க்கரின் ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்புக்கு முன் மனம்திரும்ப ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும். சரியா, தவறா? ....................
9. உலகில் எவருமே பூரணமானவர்களாக இல்லாதிருக்கும்போது, தேவன் துன்மார்க்கரை நரகத்தில் தள்ளுவது நியாயமானதா? ...................... விளக்கம் தருக: ..................................................................................
.............................................................................................................................................................
10. 2பேதுரு 3:14-ஐ எழுதுக:

**53. பரிசுத்த ஆவியைக் குறித்து நீங்கள் விசுவாசிப்பது என்ன?**

முதலாவது, அவர் பிதாவுக்கும், குமாரனுக்கும் நிகராக நித்தியமானவர். இரண்டாவது, அவர் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளார், உண்மையான விசுவாசத்தினால் கிறிஸ்து மற்றும் அவர் சம்பாதித்த அனைத்து நன்மைகளிலும் பங்கெடுத்துக்கொள்ளச் செய்து, என்னை ஆறுதல் படுத்தி என்றும் என்னோடு வாசம் செய்கிறார்.

***

குமாரனாகிய கடவுள் மற்றும் நம்முடைய மீட்பைக்குறித்து அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் 2 முதல் 7 வரையிலான அறிக்கைளின் விளக்கத்தை (கேள்விகள் 29-52) இதுவரை நாம் பார்த்தோம். விசுவாசப்பிரமாணத்தின் எட்டாவது அறிக்கை பரிசுத்த ஆவியாகிய கடவுள் மற்றும் நம்முடைய பரிசுத்தமாக்கப்படுதலையும் குறிக்கிறது. (Articles 2-7) அறிக்கைகள் 2 முதல் 7 வரையிலான அறிக்கைகள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த விளக்கத்தை தருவது போல, (Articles 8-12) பரிசுத்த ஆவியைக் குறித்த பாடத்தின் கீழே வருகிறது.

“பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்” என்ற அறிக்கைகான விளக்கத்தை, கேள்வி 53 சுறுக்கமாக தருகிறது. பரிசுத்த திரியேக தேவனின் மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியைக் குறித்து இரண்டு காரியங்கள் இங்கே கூறப்பட்டுள்ளது.

1. முதலாவது, அவர் பிதாவுக்கும், குமாரனுக்கும் நிகராக நித்தியமானவர். கேள்வி 25 மற்றும் அதன் விளக்கவுரையை மீண்டும் வாசிக்கவும். பரிசுத்த ஆவியியைக் குறித்து நாம் பேசும்போது, “அது”, “இது” என்று நாம் கூறக்கூடாது. காரணம், ஆவியானவர் ஜீவனுள்ள கர்த்தராக, தெய்வீக நபருக்குரிய எல்லா குணாதிசயங்களையும், பூரணத்தையும் உடையவராக இருக்கும் ஒரு ஆள்தத்துவம் உள்ளவர் (Person) ஆவார்.

2. பரிசுத்த ஆவியானவர் நம்மை பரிசுத்த மாக்குகிறவர் (கேள்வி 24-ஐப் பார்க்கவும்). அதாவது, பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து நமக்காக சிலுவையிலே சம்பாதித்த மீட்பின் நன்மையை தனிப்பட்ட நிலையில் நமக்கு கொடுக்கும் விதத்தில் நமக்குள் செயல்படுகிறவராக இருக்கிறார்.

இந்த நேரத்தில், சீர்திருத்த - ரிபார்ம்டு கிறிஸ்தவர்களான நாம் வரலாற்றுக்கு நம் கண்ணோட்டத்தை திருப்புவது நம்மை உற்சாகப்படுத்தும். பரிசுத்த ஆவியின் கிருபையின் வல்லமையைக் குறித்த பாடத்தை படிக்க ஹாலந்தில் உள்ள டோர்ட் என்னும் நகரத்தில் 1618-19 ஆகிய வருடத்தில் (Synod - சினாட் வேதாக போதனைக் காரியங்களை விவரித்து முடிவு காணும் குருமார்களின் கூட்டம்) கூட்டப்பட்டது. இந்த “டோர்ட் சினாட்”டில் ஒரு வேதாகம விரிவுரையாளர் ஜேம்ஸ் ஆர்மீனியஸின் (1516-1609) போதனைகுளுக்கெதிராக தீர்ப்பு கூறவேண்டியதாக இருந்தது. (இவரின் பெயர் கேள்வி 30-க்கான நமது விளக்கத்தில் இடம் பெற்றுள்ளது.) தேவனுடைய கிருபை மற்றும் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கும் அனைவருக்கும் ஒரே அளவில் கொடுக்கப்படுகிறது, இந்நிலையில் இந்த தேவனுடைய கிருபையை பயன்படுத்துவதும், பயன்படுத்தாமல் இருப்பதும் தனிமனித சுய விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் இருக்கிறது என்று ஆர்மீனியஸ் மற்றும் அவரைச் சேந்தவர்களும் ஹாலந்தில் உள்ள சீர்திருத்த திருச்சபைகளில் பிரசங்கித்து வந்தார்கள். அதாவது, தேவனுடைய கிருபை பொதுவானது மற்றும் பரிசுத்த ஆவியானவர் எல்லா மனிதர்களுக்கும் அதிகபட்சம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்கிறார்; எல்லா மனிதர்களுக்கும் சமமாகக் கொடுக்கப்படும் தேவ கிருபைக்கு ஒத்துழைப்பதும், பயன்படுத்துவதும் மனிதன் மட்டுமே முடிவெடுக்க வேண்டும். ஆக இரட்சிப்பு என்பது பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்படுத்தப்பட்ட வல்லமை மற்றும் பாவியான மனிதனின் சுயமாக தீர்மானம் எடுக்கும் திறன் ஆகிய இவ்விரண்டின் கூட்டு முயற்சியாகும் என்று ஆர்மீனியர்கள் சொல்கிறார்கள்.

நம்முடைய சீர்திருத்த பெற்றோர்கள் இதுபோன்ற ஆர்மீனியசின் போதனைகளை கண்டனம் செய்து, தேவனுடைய தடைசெய்யப்பட முடியாத கிருபையைக் குறித்த வேதாகம போதனைகளை போதித்தனர். திருவசனமோ தெரிந்து கொள்ளப்பட்ட பாவிகளுக்கு (particular) குறிப்பிடப்பட்ட அழைப்பு மற்றும் கிருபை குறித்து போதிப்பதைக் அவர்கள் கண்டனர்; அப்படியே, கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியானவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைப் புதுப்பித்து, அவர்களின் தானாக தீர்மானம் எடுக்கும் சக்திகளை கிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்துக்கும் நேராகத் திரும்பத்தக்கதாக அவர்களின் இருதயம் மற்றும் சிந்தனைக்குள் சர்வ வல்லமையோடு பிரவேசிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தனது தடைசெய்யப்படமுடியாத கிருபையின் வல்லமையினால் “கிறிஸ்து மற்றும் அவர் சம்பாதித்த அனைத்து நன்மைகளிலும் என்னை பங்கெடுத்துக்கொள்ளச் செய்கிறார்.”

தடை செய்யப்பட முடியாத தேவகிருபையைக் குறித்து தெளிவாகப் போதிக்கும் பல முக்கியமான வசனங்களில் சில குறிப்புகள்: தர்சு பட்டணத்து பவுல் மற்றும் பிலிப்பு பட்டணத்து லீதியாள் (அப் 9:1-6; 16:14); யோவா 6:37; அப் 13:48, ரோம 8:29,30; எபே 2:1,5-10; பிலி 2:13.

ஆர்மீனியர்களின் தவறான ஐந்து போதனைகளை கண்டனம் செய்யும் நிலையில் ஐந்து வேதாகம அறிக்கைகளை (Biblical statements or "cannons") டோர்ட்ட சினாட் உருவாக்கி வெளியிட்டது. இந்த அறிக்கை ஆவணம் "Canons of Dordt"- கேனான்ஸ் ஆப் டோர்ட்- என்று அழைக்கப்படுகிறது. இதைப் படிக்க விரும்பும் அனைவரும் ...

1. முழுச் சீர்குலைவு (Total Depravity)
2. நிபந்தனையற்ற தெரிந்தெடுப்பு (Unconditioanl Election)
3. வரையறுக்கப்பட்ட பரிகாரம் (Limited Atonement)
4. தடைசெய்யப்பட முடியாத கிருபை (Irresistible Grace)
5. பரிசுத்தவான்களின் விடாமுயற்சி (Perseverance of the Saitnts)

போன்ற போதனைகளின் விளக்கத்தையும் படிக்க வேண்டும். இந்த டோர்ட் சினாட் நடைபெறுவதற்கு 55 ஆண்டுகளுக்கு முன்பே ஜான் கால்வின் கிறிஸ்துவிடம் எடுத்துக் கொள்ள பட்ட பின்பு, இந்த ஐந்து உபதேசங்களும், "ஐவகை கால்வினிய சித்தாந்தங்கள் (Five Points of Calvinism)" என்ற புணைப் பெயரால் அழைக்கப்படுகிறது. "ஐவகை கால்வினிய சித்தாந்தங்கள் (Five Points of Calvinism)"-ன் இறையியல் தேவனுடைய ஒப்புயர்வற்ற இலவச கிருபையைக் குறித்த இறையியல் ஆகும். இன்றைய பல இவாஞ்சலிக்க கிறிஸ்தவர்கள் நம்புவதுபோல, இந்த ஆர்மீனிய இறையியல் மனுஷனை மையமாகக் கொண்ட கோட்பாடாகவும், இரட்சிப்பை மனிதனின் சுய விருப்பு வெறுப்புகளின்படி அமையும் ஒன்று என்று கூறுவதாக இருக்கிறது.

கேள்வி 53 கூறுவது போல பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு தெரிந்து கொள்ளப்பட்ட விசுவாசிக்கும் கொடுக்கப்படுகிறார். உண்மையான விசுவாசத்தினால் நம்மை கிறிஸ்துவோடு இணைத்து அவரின் இரட்சிப்பின் சகல நன்மைகளிலும் பங்கு கொள்ளச் செய்கிறார். இந்த நன்மைகளில் ஒன்றுதான் கலாத்தியர் 5:22,23 கூறும் ஆவியின் கனிகள் ஆகும்.

நீங்கள் கிறிஸ்தவரா? அப்படியானால் நீங்கள் கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களாக இருக்கிறீர்கள்: "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல" (ரோம 8:9). நீங்கள் ஒரு கிறிஸ்தவ விசுவாசியாக இருந்தால், பரிசுத்த ஆவியானவர் உங்களைப் பரிசுத்தப் படுத்தி, பரிசுத்தமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ உங்களை நடத்துகிறார். "தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபேசி 4:30)

**53-க்கான கேள்விகள்:**

1. கேள்விகள் 29-52, .................... கடவுள் மற்றும் .................................................................. நமக்கு போதிக்கிறது.
2. தேவனுடைய குமாரன் பரிசுத்த ஆவியானவரைவிட மிகவும் முக்கியம், ஆகவேதான் விசுவாசப் பிரமாணத்தில் பல அறிக்கைகள் அவரைப் பற்றியதாக உள்ளது. சரியா, தவறா? ...................
3. பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும், குமாரனோடும் ........................................... ஆனவர். அப்படியானால், உங்கள் சொந்த வார்த்தைகளில்: அவர் ..............................................................................................................
.......................................................................................................................................................
4. கேள்வி 53-ன்படி நம்முடைய உண்மையான விசுவாசம் எங்கிருந்து வருகிறது. .......................................
.......................................................................................................................................................
5. பின்வருவனவற்றில் தவறான பதில்களைக் குறிப்பிடுக:
   அ. .......... பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் நன்மைகளில் நம்மை பங்குபெறச் செய்கிறார்.
   ஆ. .......... பரிசுத்த ஆவியானவரை நாம் "அது, இது" (அஃறிணை) என குறிப்பிடலாம்.
   இ. .......... கேள்வி 25 கடவுள் ஒரே தெய்வீக நபராக இருக்கிறார் என்று கூறுகிறது.
6. பரிசுத்தமாக்கப்படுதல் என்பது... அ) சிலுவையில் கிறிஸ்துவால் செய்யப்பட்டது, ஆ) பரிசுத்த ஆவியானவர் எனது இருதயத்தில் செய்வது, இ)இரண்டும் அல்ல. எது சரி? ..........
7. பரிசுத்த ஆவியானவர் நமக்காக மூன்று காரியங்களைச் செய்கிறார், இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில்: பரிசுத்த ஆவியானவர்: .........................................................................................................................,
.......................................................................................................................................................
8. டோர்ட் சினாட்... எந்த வருடத்தில் நடந்தது? ...................., யாருடைய கள்ள போதனைகளை கண்டித்தது? ……………………………………………………, கூட்டத்தின் முடிவில் வெளியிட்ட போதனைகளுக்கு ............................................................................................................................. என்ற புனைப்பெயரினால் அறிகிறோம். அவைகள்:
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
   உ.

9. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தால், நீங்கள்.... அ) கிறிஸ்துவுக்குச் சொந்தம்; ஆ)பூரணமான வாழ்க்கை வாழ்கிறீர்கள்; இ)அவரை என்றும் உடையவராக பெற்றிருப்பீர்கள்; ஈ)அவரை இலகுவாக அவித்துப்போட முடியும்; உ)மரணம் வரை உண்மையான விசுவாசத்தில் நிலைத்திருப்பீர்கள்: எது? ..............
10. 1கொரி 6:19-ஐ எழுதுக:

## 54.“Holy Catholic Church”- பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையை” ஐக் குறித்து நீங்கள் விசுவாசிப்பது என்ன?

குமாரனாகிய கடவுள், தமது ஆவியினாலும், வார்த்தையினாலும் முழு மனித வர்க்கத்திலிருந்தும், உலகத்தின் ஆரம்பம் முதல் முடிவரை, உண்மையான விசுவாசத்தின் ஐக்கியத்தினால், நித்திய ஜீவனுக்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட ஐக்கியத்தை/சந்ததியாரை தமக்கென்று சேர்த்து, காப்பாற்றிப் பாதுகாக்கிறார்; நானும் இந்த சந்ததியாரில் ஜீவனுள்ள ஒரு அங்கத்தினனாக என்றும் நிலைத்திருப்பேன்.

***


விசுவாசப் பிரமாணத்தின் 9-வது அறிக்கை இந்த கேள்வியில் விளக்கப் பட்டுள்ளது. விசுவாசப் பிரமாணத்தின் சில மொழிபெயர்ப்பு, “I believe one Holy Christian Church”-என்றும், மற்றவர்கள் “I believe the Holy Catholic Church”- “பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையை நான் விசுவாசிக்கிறேன்” என்றும் வாசிக்கிறார்கள். “Catholic-கத்தோலிக்க” என்ற வார்த்தை “உலகளாவிய அல்லது எங்கும் உள்ள” என்று அர்த்தமாகும்; அதாவது, கிறிஸ்துவின் சபையானது உலகெங்கும் பரவியுள்ளதாகவும், எல்லாக் காலத்திலும் நிலைத்திருப்பதாகவும் உள்ளது. நாம் கத்தோலிக்கர்கள், ஆனால் ரோமன் கத்தோலிக்கர்கள் அல்ல!


இந்த அறிக்கை திருச்சபையை ஒரு சமயப்பிரிவாகவோ அல்லது நிறுவனம் என்றோ கூறவில்லை; மாறாக தேவனுடைய பார்வையில், இது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, கிறிஸ்துவினால் மீட்கபட்டு, ஆவியினாலும், சுவிசேஷத்தினாலும் கூட்டப்பட்டு, கிறிஸ்துவோடு என்றும் இணைக்கப்பட்டவர்களான ஆண்கள், பெண்கள், ஆண் பிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகளாலான ஒரே பெரும் சரீரமாக உள்ளது. நாம் ஒரு சீர்திருத்த திருச்சபையின் அங்கத்தினர்களாக இருப்பது முக்கியம், அதைப் பார்க்கிலும் நாம் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் இந்த ஒரே சரீரத்தின் அங்கமாக இருக்க வேண்டும்!

உண்மையான ஆவிக்குரிய திருச்சபையின் பண்புகள்: 1. இது ஒன்றானது; ஆதாம் முதல் கடைசி மனிதன் வரை, இது கிறிஸ்துவின் ஒரே சரீரமாகும். 2. இது பரிசுத்தமானது; தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பாவத்திலிருந்து பிரிக்கப்பட்டு தேவனுக்கு சொந்தமானவர்களாக இருக்கின்றனர். 3. இது உலகளாவியது (Catholic); அதாவது, இனம், வயது அல்லது குறிப்பிட்ட சமயப் பிரிவின் அங்கீகாரம் போன்ற எல்லாவற்றையும் கடந்ததாக இருக்கிறது.

ஒரே திருச்சபை, ஒரே சுவிசேஷம், ஒரே விசுவாசம் என்று இருந்த போதிலும், பல திருச்சபை பிரிவுகள் (அமெரிக்காவில் மட்டும் 300) இருக்கிறதே என சொல்லப்படலாம். அந்த ஒரே உண்மையான திருச்சபையை நாம் கண்களால் காணப்படாத சபை என்று அழைக்கிறோம், மேலும் அதில் அங்கமானவர்கள் யார் என்பதை தேவன் மட்டுமே அறிவார். மற்றபடி நாம் இருக்கும் இடங்களில் காணப்படும் சபைகளில் அங்கமாக இருப்பவர்களை மனிதர்கள் பார்க்க முடியும் அந்த சபையை கண்களால் காணப்படும் சபை என்று அறிகிறோம். கண்களால் காணப்படும் சபை ஒருபோதும் பூரணமானது அல்ல, சில சுவிசேஷத்தை முழுமையாக வெளியில் தூக்கி எரிந்த நிலையில் உள்ளது. சில ஜனங்கள் கண்களால் காணப்படாத சபையின் அங்கத்தினராக இருந்து கண்களால் காணப்படும் சபையில் அங்கத்தினராக இல்லாதிருப்பார்கள். கண்களால் காணப்படும் சபையின் அங்கத்தினர்களாக இருப்பவர்கள், உண்மையான விசுவாசிகளாக இல்லாதவர்களாக கண்களால் காணப்படாத சபையின் அங்கத்தினர்களாகவும் இல்லாதிருப்பார்கள்.

கண்களால் காணப்படும் சபை... கண்களால் காணப்படாத சபை....



கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினாலும், கிறிஸ்துவை அறிக்கை செய்வதாலும் நாம் இவ்விரு சபையிலும் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும்.

முன்பு உள்ள விளக்கப்படம் கண்களால் காணப்படும், காணப்படாத சபைகளுக்கு இடையேயுள்ள தொடர்பை விளக்குகிறது.

**54-க்கான கேள்விகள்:**

1. தேவனுக்கு பல கண்களால் காணப்படாத திருச்சபைகள் உண்டு. சரியா, தவறா? ..................
2. அப்போஸ்தலனாகிய யோவான் அங்கமாக இருந்த திருச்சபையில் ஆபிரகாம் அங்கமாக இருக்கவில்லை. சரியா, தவறா? .................., விளக்கம் தருக: ........................................................................................................
   ........................................................................................................
3. ஜான் கால்வின் அங்கமாக இருந்த அதே சபையில் மோசே அங்கமாக இருக்கவில்லை. சரியா, தவறா? .................., விளக்குக: ........................................................................................................
   ........................................................................................................
4. பொருத்துக:
   அ. தெரிந்து கொள்ளப்பட்ட ஐக்கியம் - சேர்த்து, காப்பாற்றி பாதுகாக்கிறார்.
   ஆ. அவருடைய ஆவியினாலும், - அதே சந்ததியின் ஜீவனுள்ள அங்கமாகும்
   இ. தேவனுடைய குமாரன் - தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட
   ஈ. நான் - வார்த்தை / வசனம்.
5. கண்களால் காணப்படாத ஒரே சபை இருந்தும், பூமியில் கண்களால் காணப்படும் பல திருச்சபைகளும் உண்டு. சரியா, தவறா? ..................
6. எந்த சபையில் இருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல, அதைப் பார்க்கிலும் நீங்கள் கிறிஸ்துவுக்கும், அவருடைய கண்களால் காணப்படாத சபையிலும் அங்கமாக இருக்கின்றீர்களா என்பது மிகவும் முக்கியம். சரியா, தவறா? ..................
7. கண்களால் காணப்படும், காணப்படாத சபைகளுக்கு இடையேயுள்ள தொடர்பை விளக்கப் படம் வரைந்து விளக்குக:
8. அந்த வரைபடத்தில் விசுவாசிகள் இருக்கும் இடத்தை குறிப்பிடுக:
9. சில திருச்சபைகள் நவீன காலக் கருத்துக்களை உடையதாக மாறி, உண்மையான உலகளாவிய சபையில் அங்கமாக இருக்கும் நிலையை இழந்து விட்டது. சரியா, தவறா? ....................
10. எபேசி 4:4,5-ஐ எழுதுக:

**55. "பரிசுத்தவான்களின் ஐக்கியம்" என்பதைக் குறித்து நீங்கள் புரிந்து கொள்வதென்ன?**

முதலாவது, விசுவாசிகள் தனிப்பட்ட மற்றும் கூட்டான நிலையில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அங்கமாகவும், அவருடைய பொக்கிஷம் மற்றும் வரங்களில் பங்கு பெறுகிறவர்களாகவும் இருக்கின்றனர்; இரண்டாவது, ஒவ்வொருவரும் அவரவருடைய வரங்களை மற்றவர்களின் பிரயோஜனம் மற்றும் நலனுக்காக உடனடியாகவும், மகிழ்ச்சியுடனும் பயன்படுத்த கடமைப் பட்டவர்கள் என்பதை கட்டாயம் உணரவேண்டும்.

***

"பரிசுத்தவான்களின் ஐக்கியம்" என்பது திருச்சபையைக் குறித்து கூறும் 9-வது அறிக்கையின் மற்றுமொரு பகுதியாகும். திருச்சபை என்பது பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவில் உள்ளவர்களைக் கொண்டு ஒன்றுகூட்டி உருவாக்கப்பட்ட ஜீவனுள்ள சரீரமாகும். ஜீவனுள்ள சரீரத்தின் அங்கமாக இருக்கும் நிலையில், விசுவாசிகள் மற்றவர்களோடு ஆவிக்குரிய உறவில் மகிழலாம். தேவனுடைய பிள்ளைகளாக, நாம் யாவரும் ஒரே ஆவிக்குரிய குடும்பத்திற்கு சொந்தமானவர்கள். நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானால், பிதா நாம் யாவருக்கும் பொதுவான தகப்பனாவார். நாம் யாவரும் ஒரேவகை ஆவிக்குரிய விருப்பம் கொண்டவர்களாக, ஒரே குறிக்கோளுக்காக செயல்படுகிறவர்களாக இருக்கிறோம். நாம் யாவரும் நம் சொந்த தேசமான பரலோகத்தை நோக்கி இருக்கிறோம்.

இந்த "ஒன்று சேர்ந்தநிலையானது (Togethernes)" நெருங்கிய தொடர்பும், ஐக்கியமுமாகும். அதை புனிதர்கள் மட்டுமே பெற்றிருக்கின்றனர். "புனிதர்" என்பது ஒரு பரிசுத்தவான் என்று அர்த்தப்படுத்தும் அனைத்து உண்மையான கிறிஸ்தவர்களையும் குறிக்கிறது. ரோமன் கத்தோலிக்கர்கள் அவர்களின் சபையில் மிகவும் பிரசித்தம் பெற்றவர்களை மட்டுமே புனிதர்கள் என்று அழைக்கிறது, ஆனால் வேதமோ அனைத்து கிறிஸ்தவர்களையும் பரிசுத்தவான்கள் என்று அழைக்கிறது (1கொரி 1:2).

இந்தக் கேள்வி இரண்டு காரியங்களை முக்கியப்படுத்தி கூறுகிறது. 1)எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவின் பொக்கிஷம் மற்றும் வரங்களில் (கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதற்கான ஆவிக்குரிய பெலனில்) பங்கு கொள்கிவறவர்களாக இருக்கிறார்கள்; 2) நம்முடைய சக கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வாதத்தைத் தரும் நிலையில் இந்த வரங்களை நாம் பயன்படுத்த வேண்டும். போதிக்கும் வரம், இசை, தலைமைத்துவம், பணம் சம்பாதிக்கும் வழி, மகிழ்ச்சியும் ஆறுதலும் கொடுக்கும் செயல் போன்ற எந்த வரங்களாக இருப்பினும் அவைகளைக் கிறிஸ்து மற்றும் நம்முடைய சக பரிசுத்தவான்களுக்காக பயன்படுத்த வேண்டும்.

நம்முடைய இருதயத்தில் உள்ள பாவம் இந்த ஐக்கியத்திற்கு விரோதமாக செயல்பட்டு, நம்மை மற்றவர்களை வெறுக்கவும், கசப்பு, பொறாமை, பெருமை மற்றும் மற்றவர்களுக்கெதிராக சுயநலத்துடன் செயல்படும்படியும் செய்கிறது; ஆனால் பரிசுத்த ஆவியானவர் கூறுவது: தேவனுடைய ஜனங்கள் மத்தியில், அவர்களின் குறைகளைக் காணாமல், அவர்களின் தேவைகளைச் சந்திக்கும் விதத்தில் நாம் சமாதானதைக் கொண்டுவரவும், அன்பை பாவிக்கவும் வேண்டும் என்பதாகும். இந்த பூமியில் நம்முடைய மகிழ்ச்சியானது தேவனுடைய பிள்ளைகளின் ஐக்கியத்தில் உண்மையாக பிரவேசிப்பதை சார்ந்ததாகவே இருக்க வேண்டும்.

**55-க்கான கேள்விகள்:**

1. விசுவாச அறிக்கையின் 9-வது அறிக்கை ..........................................................க் குறித்து கூறுகிறது.
2. நாம் யாவரும் பொதுவான ஆண்டவரையும் மீட்பரையும் பெற்றிருப்பதால் மற்ற கிறிஸ்தவர்களோடு நெருங்கிய ஐக்கியத்தைக் கொள்ள முடியும். சரியா, தவறா? ....................
3. “புனிதர்” என்பது விசேஷித்த மனிதர்கள் அடையும் தகுதி, வெகு சொற்ப கிறிஸ்தவர்களே இத்தகுதியைப் பெறுகின்றனர். சரியா, தவறா? ....................
4. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவரவருடைய வரங்களை ............................................................................................ ........................................................................................................................................... கடமைப் பட்டவர்கள்
5. சில கிறிஸ்தவர்கள் மிகவும் திறமையுடையவர்களாகவும், பிறருக்கு உதவி செய்வதில் சிலர் ஓரளவிற்கு பெலன் உடையவர்களாகவும், ஒருசிலரோ எந்தவிதமான வரமும் பெற்றிடாதவர்களாக இருக்கிறார்கள். சரியா, தவறா? ...................
6. மற்ற கிறிஸ்தவர்களின் நலனுக்காக கிறிஸ்தவர்கள் பெற்றுள்ள சில “வரங்களை” குறிப்பிடுக: ...........................................................................................................................................................
7. பரிசுத்தவான்களின் ஐக்கியம்... அ)ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்வதால், ஆ)ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதால், இ)ஒருவரை ஒருவர் புறக்கணிப்பதால், ஈ) கருணையின் செயல்களால், உ)மற்றவர்களை உதாசினப்படுத்துவதால், ஊ)திருச்சபையின் ஊழியத்தை தாங்குவதால்... உண்டாகுவதாகும். எது? ...........
8. “மகிழ்ச்சியுடன்” என்ற வார்த்தை இந்தபதிலில் சேர்க்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன? பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்கு இது எத்தனை முக்கியமானது? ........................................................................ ...........................................................................................................................................................
9. புறங்கூறுதல் மற்றும் சிறுசிறு குற்ற விமர்சனம் சகோதர சிநேகத்திற்கான அடையாளம் அல்ல. சரியா, தவறா? ...................
10. ரோம 12:5,10-ஐ எழுதுக:

**56. “பாவ மன்னிப்பு”- குறித்து நீங்கள் விசுவாசிப்பது என்ன?**

தேவனாகிய கர்த்தர், கிறிஸ்து எனக்காக செலுத்திய கடனினிமித்தம், என்னுடைய பாவங்களையும், எனது ஜீவ காலம் முழுதும் போராடவேண்டிய எனது பாவ சாயலையும் ஒரு போதும் நினைவு கூறாமல்; நான் ஒருபோதும் தண்டனைக்கு உட்படாமல் இருக்கும்படிக்கு கிறிஸ்துவின் நீதியை எனக்கு சொந்தப்படுத்துகிறார்.

***

“பாவ மன்னிப்பை நான் விசுவாசிக்கிறேன்” என்ற, அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் 10-வது அறிக்கைக்கு நாம் வருகிறோம். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்பது எத்தனை அருமையான சத்தியம்! ஆனால் பாவம் என்றால் என்ன? பாவம் என்றால் என்ன என்பதை கேட்டகிசத்தின் கேள்விகள் 3 மற்றும் 4 விளக்குகிறது. தேவனுடைய அன்பின் பிரமாணத்தை பூரணமாகக் கடைப்பிடிக்க தவறுவதே பாவம். பாவத்தினால் வரும் நம்முடைய குற்ற மனசாட்சி மற்றும் இழிநிலையை தேவனுடைய பிரமாணம் நமக்குக் காண்பிக்கிறது. நம்முடைய குற்றமுள்ள நிலையினிமித்தம் கண்டனத்தையும், தண்டனையையும் நாம் பெறுகிறோம். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாத நிலையில் தண்டனையை நாம் பெறுவது தப்பாது.

தேவனால் வரும் பாவ மன்னிப்பைக் குறித்து வேதம் மீண்டும் மீண்டும் பேசுகிறது. இது உண்மையாகவே நல்ல செய்தி! ஆனால் “மன்னிப்பு” என்றால் அர்த்தம் என்ன? மன்னிக்கப்பட்ட ஒருவருடைய குற்றம் மீண்டும் நினைக்கப்படுவதில்லை அல்லது அதற்காக அவர் தண்டிக்கப் படுவதில்லை என்பதாகும். ஒருவரை நீங்கள் மன்னிக்கும்போது, அவர் செய்த தவறான செயல் அல்லது பாவத்தை நீங்கள் ஒருபோதும் மனதில் கொள்வது இல்லை. ஒருவேளை அந்த பாவ செயல்களை நீங்கள் மறக்கவில்லை என்றால், நீங்கள் அவரை மன்னிக்கவில்லை என்று அர்த்தம். தேவன் “நம்முடைய பாவங்களை ஒருபோதும் நினைப்பதில்லை” என்று நமக்கு வேதம் சொல்லுகிறது, அதாவது நாம் செய்த பாவங்களினிமித்தம் நம்மை ஒருபோதும் குற்றப்படுத்துவதில்லை. ஒருமுறை மன்னிக்கப்படும் நாம், எப்போதும் மன்னிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். நாம் “ஒருபோதும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவதில்லை”.

இங்கே இரண்டு வகையான நம்முடைய பாவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன: 1)நாம் தனிப்பட்ட நிலையில் (சிந்தனை, வார்த்தை மற்றும் செயல்களால்) செய்யும் பாவங்கள்; மற்றும் 2) நம்முடைய பாவ குணாதிசயம்

(சீர்கெட்ட நம்முடைய இருதயம்). நம்முடைய தீய சாயல் தேவனுடைய வெறுப்புக்கு உள்ளாகிறது, அப்படி நாம் பெற்றிருக்கும் சீர்கெட்ட இருதயத்தனிமித்தமே நாம் தண்டனைக்கு தகுதியானவர்கள். தேவனோ தம்முடைய கிருபையினால் நமது பாவங்களையும், நம்முடைய குற்ற மனசாட்சிக்கு காரணமான பாவங்களையும் மன்னிக்கிறார்.

நீதியுள்ள தேவன், பாவத்திற்காக நியாயமாக தண்டிக்காமல் பாவங்களை எப்படி மன்னிக்க முடியும்? அவரால் முடியாது என்பதே, பதில். தேவன் நம்முடைய பாவங்கள் மற்றும் பாவ சாயல்கள் யாவற்றையும் நம்முடைய பதிலாளியான இயேசு கிறிஸ்துவில் தண்டித்தார். இயேசு கிறிஸ்து நமக்கான தண்டனையை தன்மீது ஏற்றுக் கொண்டதால் தேவன் நம்மை மன்னித்தார். இங்கே நாம் மீண்டும் "கிறிஸ்துவின் கடன்தீர்த்தல்"- குறித்து காண்கிறோம். கிறிஸ்து மட்டுமே தேவனுடைய நீதியை நிறைவேற்றி, அவர் நம்மை இலவசமாக மன்னிக்கும்படி செய்தார்.

எவர்கள் மன்னிக்கப் பட்டார்கள்? அனைவரும் அல்ல; எவர்கள் உண்மையாக கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, பாவத்தை அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்காக வேண்டினார்களோ அவர்கள் மட்டுமே. நீங்கள் அதை செய்திருக்கிறீர்களா?

**56-க்கான கேள்விகள்:**

1. பாவ மன்னிப்பைக்குறித்த அறிக்கையை அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் ................................ நாம் காண்கிறோம்.
2. பாவ மன்னிப்பைக் குறித்து அறியவேண்டியது நமக்கு... அ)மிக அவசியம், ஆ) அவசியமல்ல:..........
3. பாவம் என்றால் என்ன? சொந்த வார்த்தைகளில் விளக்கம் தருக: ............................................................ ..............................................................................................................................................................
4. பாவ மன்னிப்பு என்றால் என்ன அர்த்தம்? ..............................................................................................
5. நீங்கள் ஒருவரை மன்னிக்கிறீர்கள் என்றால்... அ)அவருக்கு விரோதமாக கோபமாக இருத்தல், ஆ)அவருக்கு விரோதமாக எனக்கு ஒன்றுமில்லை என்று சொல்வது, இ)பாவம் என்பது பாவமே அல்ல என்று சொல்வது, ஈ)நாம் இருவருமே தவறாக புரிந்து கொண்டோம் என்று சொல்வது: எது? ................
6. தேவன் மன்னிக்கும் இருவகை பாவங்கள்:
   அ.
   ஆ.
7. பாவத்திற்காக எப்போதும் நம்மை தண்டிக்க முடியாததால் தேவன் நம்மை மன்னிக்கிறார். சரியா, தவறா? ...................
8. தேவன் நம்முடைய பாவத்தை... அ) மறப்பதினால், ஆ) அவைகளைக் கண்டு கொள்ளாமல் இருப்பதினால், இ) நமக்கு தனிப்பட்ட தண்டனையை கொடுப்பதினால், ஈ) நம்முடைய பாவத்தை கிறிஸ்துவில் தண்டித்ததினால்... மன்னிக்கிறார். எது சரி? ............
9. பாவ மன்னிப்பபை பெறுவது யார்? .................................................................................................... ..............................................................................................................................................................
10. எபேசியர் 1:7-ஐ எழுதவும்:

## 57. "சரீர உயிர்த்தெழுதல்" உனக்குத் தரும் ஆறுதல் என்ன?

இந்த உலகவாழ்வை முடிக்கும் கனப்பொழுதில் என்னுடைய ஆத்துமா தலையாகிய கிறிஸ்துவிடம் எடுத்துக் கொள்ளப்படுவதோடு; கிறிஸ்துவினுடைய வல்லமையினால், இந்த என்னுடைய சரீரமும் எழுப்பப்பட்டு, என்னுடைய ஆத்துமாவுடன் இணைக்கப்பட்டு, கிறிஸ்துவின் மகிமையான சரீரத்தைப் போல மாற்றப்படும்.

***

"சரீர உயிர்த்தெழுதலையும் விசுவாசிக்கிறேன்" என்ற, அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் 11-வது அறிக்கையை இந்த கேள்வி விளக்குகிறது. இந்த விலையேறப் பெற்ற சத்தியத்தைக் குறித்து கேள்விகள் 45 மற்றும் 49-ல் ஏற்கனவே படித்தோம், மீண்டும் இதே பாடத்தில் தனியொரு அறிக்கையை பார்க்கலாம்.

நம்முடைய மரணத்தின் போது, முதலாவது பரலோகில் உள்ள கிறிஸ்துவிடம் நம்முடைய ஆத்துமா எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது, சிலுவையில் இருந்த கள்ளனிடம் இயேசு கூறிய வார்த்தைகள் (லூக் 23:43) மற்றும் "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்" (அப்போ 7:59) என்ற ஸ்தேவானின் ஜெபம் மற்றும், பிலிப் 1:23, வெளி 6:9,10 -ஆகியவற்றால், நிரூபணம் ஆகிறது. மரணத்தில் மரித்த சரீரத்துடன் ஆத்துமா நித்திரை செய்கிறது என்று கூறும் (ஏழாம்நாள்) செவன்த்டே அட்வன்டிஸ்ட், எகோவாவின் சாட்சிகள், வோல்ட் டுமாரோ போன்றோரின் கருத்துக்களை தவறு என்று புறக்கணிக்கிறோம். சீர்த்திருத்த சான்றோரான ஜான் கால்வின் தான் முதலாவது எழுதின புத்தகங்களில் ஒன்று, "Soul Sleep - ஆத்தும தூக்கம்" என்பதாகும். அதன் தலைப்பு, "Psychopannychia -- சைக்கேரியன்னிக்கியா" என்பது, ஆத்தும தூக்கம் என்பதற்கான கிரேக்க வார்த்தையாகும்.

மரித்த சரீரங்கள் கல்லறை மற்றும் எல்லா இடங்களிலிமிருந்தும் உயிர்த்து எழும்பும் மகாப் பெரிய மகிமையான நாள் வரும் என்று வேதம் போதிக்கிறது. இது ஒரு பெரும் இரகசியம் என்று 1கொரி 15:51 நமக்குச் சொல்கிறது. இது சரீரத்தின் ஒவ்வொரு சிறு உள் உறுப்புகளும் மீண்டும் கொண்டுவரப்படும் என்று அர்த்தமல்ல, மாறாக மரித்த அந்த சரீரத்தை அடையாளம் கண்டும் கொள்ளும் அளவிற்கு போதுமான சிறப்புகளுடன் எழுப்பப்படும். ஜ்யார்ஜ் ஸ்மித் எழுப்பப்படும்போது பில் ப்ரௌன்னைப் போல இருக்கமாட்டார், மாறாக ஜ்யார்ஜ் ஸ்மித்தாகவே இருப்பார். நாம் பெறப்போகும் புதிய சரீரமானது, விதைக்கப்பட்ட விதையிலிருந்து முளைத்து வரும் புதிய பயிருக்கு ஒப்பாக இருக்கும் (1கொரி 15:36-38): விதையும், பயிரும் வெவ்வேறு, ஒன்றிலிருந்து ஒன்று வருகிறதாக இருக்கிறது. புதிதாக எழுப்பப்படும் நம்முடைய சரீரம் எப்படி இருக்கும் என்பதைக் குறித்து நம்மால் சரியாக புரிந்து கொள்ளமுடியாவிட்டாலும், கர்த்தருடைய வல்லமை மரித்த சடலங்களை உயிருடன் எழுப்பும் என்பதை நாம் அறிவோம்.

சரீரங்களின் உயிர்த்தெழுதலைக் குறித்த மூன்று உறுதியான காரியங்களை நாம் கூறலாம்: 1)தேவனுடைய வாக்குத்தத்தின்படி, இது உறுதியாக இருக்கிறது; 2)நம்முடைய சரீரமும் ஆத்துமாவும் ஒருபோதும் பிரிக்கப்பட முடியாதபடிக்கு இணைக்கப்படுகிறது; 3)கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு காணப்பட்ட இயற்கைக்கு மாறான அவருடைய மகிமையான சரீரத்தைப் போல என்னுடைய சரீரமும் மகிமையானதாக இருக்கும் (பிலி 3:21).

அவிசுவாசிகளின் சரீரங்களைக் குறித்து என்ன? அவர்களும் உயிருடன் எழுப்பப்பட்டு, அவர்களுடைய சரீரங்கள் அவர்களுடைய ஆத்துமாவுடன் இணைக்கப்பட்டு, தேவனுடைய தண்டனையை நித்தியகாலமாக அனுபவிக்கும்படிக்கு நரகத்தில் தள்ளப்படுவார்கள். தங்களுடைய ஆத்தும மீட்பை அடையாதவர்களுக்கு அந்த நாள் எத்தனை பயங்கரமான நாளாக இருக்கும் (தானி 12:2)!

எப்போது இந்த உயிர்த்தெழுதல் நடைபெறும்? இந்த காலத்தின் முடிவு எப்போது வரும் என்பதை கேள்வி 50-ஐ மீண்டும் வாசித்து அறியவும்.

**57-க்கான கேள்விகள்:**

1. சரீரத்தின் உயிர்த்தெழுதல் குறித்து இதற்கு முன்பு உள்ள கேள்விகள் குறிப்பிடப்படவில்லை. சரியா, தவறா? ......................
2. "(உங்கள் பெயர்)-ன் ஆத்துமாவும், சரீரமும் இங்கே உறங்குகிறது" என்று உங்கள் கல்லறையில் எழுதப்பட விரும்புகிறீர்களா? ஆம், இல்லை: ..................................., விளக்கம்: ..........................................
..........................................................................................................................................
3. பின்வரும் கூட்டத்தார் மரணத்தைக் குறித்து தவறாக போதிக்கின்றனர்: அ)பிரஸ்பிடீரியன், ஆ) செவன்த்டே அட்வன்டிஸ்ட், இ)ரோமன் கத்தோலிக்கர்கள், ஈ) வோர்ல்ட் டுமாரோ, உ)கால்வினிஸ்ட், ஊ)எகோவாவின் சாட்சிகள்... எவை? .....................
4. சரீரங்கள் மீண்டும் எழுப்பப்படும் போது, மரிக்கும்போது எப்படி இருந்ததோ அப்படியே இருக்கும். சரியா, தவறா? .....................
5. உயிருடன் எழுப்பப்பட்ட சரீரங்கள் முற்றிலும் அடையாளம் தெரியாத அளவிற்கு இருக்கும், நம்மை நாமே இனம் கண்டு கொள்ள முடியாது. சரியா, தவறா?.....................
6. உயிர்த்தெழுதலைக் குறித்து அதிகம் பேசும் 1கொரி 15-ஆம் அதிகாரத்தில், 42-44வரையிலான வசனங்களை ஆதாரமாகக் கொண்டு, பின்வருனவற்றை பொருத்துக:

| | | |
|---|---|---|
| கனவீனமுள்ளதாய் விதைக்கபடும் | - | மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும் |
| ஜென்ம சரீரமாய் விதைக்கப்படும் | - | அழிவில்லாததாய் எழுந்திருக்கும் |
| அழிவுள்ளதாய் விதைக்கப்படும் | - | ஆவிக்குரிய சரீரமாக |
| பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும் | - | பலமுள்ளதாய் எழுந்திருக்கும் |

7. 1கொரி 15:15:36,37 எந்த எடுத்துக் காட்டைப் பயன்படுத்தி மரித்த சரீரம் உயிர்த்தெழுவதை விளக்குவது எப்படி?..........................................................................................................................................
8. உயிரோடு எழுப்பப்படும் நம்முடைய சரீரங்களைக் குறித்த உறுதிப்பாடுகள் மூன்றை எழுதுக:
அ.
ஆ.
இ.
9. துன்மார்க்கரின் சரீரங்களும் உயிருடன் எழுப்பப்படும். சரியா, தவறா? ................... வசனக் குறிப்பு தருக: ....................................................................
10. யோவான் 6:40-ஐ எழுதவும்:

**58. "நித்திய ஜீவன்" உண்டு என்பதை கூறும் அறிக்கையிலிருந்து நீங்கள் பெறும் ஆறுதல் என்ன?**

இந்த ஜீவனுக்குப் பின் நான், கண்ணால் கண்டிராததும், காதால் கேட்டிராததும், மனிதனுடைய இருதயத்தில் நுழையாததுமான பேரின்பத்தின் முழுமையையும் பெற்று, பரலோகத்தில் தேவனை

என்றென்றுமாய் துதிப்பேன் என்பதை அறியும் இப்பொழுதே நித்திய சந்தோஷத்தின் ஆரம்பத்தை என்னுடைய இருதயத்தில் உணர்கிறேன்.

***

இப்போது, நாம் அப்போஸ்தல விசுவாசத்தின் 12-வதும், கடைசியுமான அறிக்கைக்கு வந்திருக்கிறோம். இந்த அறிக்கையின் பொருள், "நித்திய ஜீவன்" என்பதாகும். இந்த நித்திய ஜீவனைக் குறித்து வேதம் மீண்டும் மீண்டும் பேசுகிறது. இதைக் குறித்த பதம், யோவான் சுவிசேஷத்தில் மட்டும் மொத்தம் 28முறை இடம் பெறுகிறது! (உதாரணமாக யோவான் 3:15, 16,36; 6:27,40,47,54,68).

"நித்திய ஜீவன்" என்றவுடன், மரணத்திற்குப் பின் பரலோகத்தில் நாம் பிரவேசிக்கும்போது பெறுவது என்று நாம் பொதுவாக நினைக்கிறோம். கேள்வி 42 அதே போன்ற விளக்கத்தைத் தருவது போல் இருக்கலாம். இருப்பினும், இங்கே நித்திய ஜீவன் என்பது எவ்வளவு காலம் என்பதைக் குறித்து இல்லாமல், அந்த புதிய ஜீவனின் தன்மை மற்றும் அதன் தனிச்சிறப்பையே முக்கியப் படுத்தியதாகும். நித்திய ஜீவன் என்பது கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவனுடன் நாம் ஐக்கியம் கொள்ளும் வாழ்வைக் குறிக்கும் ஒன்றாக இருக்கிறது. "ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று யோவான் 17:3-ல் கூறினார். இதனால், நித்திய ஜீவன் என்பது நமது மரணத்திற்குப் பின்னர் ஒருநாள் அடையப்போகும் ஒரு நிலை அல்ல, மாறாக இந்த உலகிலேயே தேவனைக் குறித்து அறிவதிலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் அவருடன் வைக்கும் உறவினால் நாம் அடையும் ஆனந்த பாக்கியம் என்று அறியலாம். எவர்கள் (இப்பொழுது) கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டிருக்கின்றார்களோ அவர்கள் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கின்றார்கள் என்று யோவான் 5:24 கூறுகிறது. நம்முடைய கேட்டகிசம் "இப்பொழுதே நித்திய சந்தோஷத்தின் ஆரம்பத்தை என்னுடைய இருதயத்தில் உணர்கிறேன்"- என்று கூறி இந்த சத்தியத்தின் உண்மையை தெளிவாக கூறுகிறது.

உண்மையில், கிறிஸ்துவுக்குள்ளான இந்த வாழ்க்கை என்றும் உள்ளது (நாம் மரித்தாலும்), தேவனுடன் பூரணமான வழியில் ஐக்கியம் கொள்ளும்படி பிரவேசிக்கும் பொழுது கிறிஸ்துவை நாம் முகமுகமாய் தரிசிப்போம் (1கொரி 3:2; வெளி 22:4).

பரலோகத்தில் நாம் என்ன செய்வோம்? வேதாகமம் இதைக் குறித்து அதிகம் சொல்லவில்லை, (இது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு காரியம்) நம்முடைய மனித ஞானத்தால் முழுமையாக இதைப் புரிந்து கொள்ள முடியாது. இருப்பினும், "முழுமையான பேரானந்தத்தை நாம் பெற்றவர்களாகவும், நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பில் அவருக்கு சேவை செய்து அவரை என்றென்றுமாய் துதிப்போம்" என்பதை நாம் அறிவோம். உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், கர்த்தர் நமக்காக புதிய வானம் மற்றும் புதிய பூமியை ஸ்தாபிப்பார் என்று வேதம் சொல்கிறது (ஏசா 65:17; வெளி 21:1). நாம் நித்திய ஜீவனைப் பெற்றவர்களாக இப்போதே இருப்பதால் எத்தனை அற்புதமான எதிர்காலம் நம்முடையதாக இருக்கிறது! கிறிஸ்துவுக்குள்ளான இந்த சந்தோஷம் உங்கள் இருதயத்தில் இருக்கிறதா?

**58-க்கான கேள்விகள்:**

1. அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் கடைசி அறிக்கை என்ன? ............................................................ ....................................................................................................................................................
2. நித்திய ஜீவனைக் குறித்து நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியும் என்பதால், வேதம் இதைக் குறித்து அடிக்கடி வெளிப்படுத்தியுள்ளது. சரியா, தவறா? ..................
3. நித்திய ஜீவனைக் குறித்து அநேக குறிப்புகளை உடைய புதிய ஏற்பாட்டு புத்தகம் எது? ......................................................, சில வசன குறிப்புகளை தருக: ...............................................................
4. நித்திய ஜீவன் என்பது... அ) எவ்வளவு காலம், ஆ) எப்படிப்பட்ட வாழ்க்கை, இ) இரண்டும்... குறித்து கூறுகிறது. எது சரி? ............
5. நித்திய ஜீவன் என்பது கிறிஸ்துவின் மூலம் தேவனோடு கொள்ளும் உறவு ஆகும், பூமியில் உள்ள சிலர் இன்றும் நித்திய ஜீவனை உடையவர்களாக, ஆவிக்குரிய மரணத்தை ஒருபோதும் அடையாதவர்களாக இருக்கின்றனர். சரியா, தவறா? ..................
6. விசுவாசிகள் பரலோகத்தில் பெற்றிருக்கும் "முழுமையான பேரானந்தம்" என்றால் என்ன? ....................................................................................................................................................
7. கேள்வி 58-க்குரிய கேட்டகிசத்தின் பதில், எந்த வசனத்தின் ஒருபகுதியைக் குறிப்பிட்டுள்ளது? ......................................................................................................, வசனம்: ....................................................
8. அவிசுவாசிகள் பூமியில் தேவனை துதிக்க புறக்கணித்தாலும் பரலோகத்தில் துதித்து மகிழ்ந்திருப்பார்கள். சரியா, தவறா? ..................
9. வெளிப்ப 21:1-ன்படி நமக்குக் கிடைக்கப்போவது என்ன? ..................................................................... ....................................................................................................................................................
10. வெளி 12:4-ஐ எழுதுக:

**59. இவைகளை எல்லாம் விசுவாசிப்பது இப்போது உனக்குச் செய்யும் உதவி என்ன?**

தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவுக்குள் நான் நீதிமானாகவும், நித்திய ஜீவனுக்குச் சொந்தமானவனாகவும் இருக்கிறேன்.

***

இந்தக் கேள்வி, சுவிசேஷத்தின் உன்னதமான சத்தியங்கள் மற்றும் கேள்விகள் 59-64-ல் போதிக்கப்பட்டுள்ள விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படல் போன்ற சுவிசேஷத்தின் உன்னத நன்மைகளை இணைக்கும் பாலமாக அல்லது மற்ற சத்தியங்களுக்கு வழிநடத்தும் படிக்கல்லாக இருக்கிறது.

கேள்வி 21 விசுவாசத்தின் தன்மை என்ன என்பதையும், கேள்வி 22 எதை விசுவாசிக்க வேண்டும் (விசுவாசத்தின் உட்பொருள்) என்று விளக்கி அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தை அறிமுகப்படுத்துவதை நினைவு கூறவும். கேள்விகள் 23-58 வரையில் விசுவாசப் பிரமாணம் கவனமாக விளக்கப்பட்ட பின், "இவைகளை (விசுவாசப் பிரமாணத்தில் வரிசைப் படுத்தப்பட்டுள்ள சத்தியங்களை) எல்லாம் விசுவாசிப்பது இப்போது உனக்குச் செய்யும் உதவி என்ன?" என்ற கேள்வியை நாம் சந்திக்கிறோம். இதற்கு, கிருபையினால் மட்டும் வரும் நீதி மற்றும் நீதிமானாக்கப்படுதல் போன்ற நன்மைகளை சத்தியதை விசுவாசிப்பதின் மூலம், நாம் பெறுகிறோம் என்பதே பதில். கேட்டகிசத்தின் ஒழுங்குமுறை அமைப்பு மிகவும் தெளிவானதாகவும், அறிவுக்குகந்ததுமாக இருக்கிறது:

கே 21 - *உண்மையான விசுவாசத்தின் தன்மை*: உறுதிப்பாடான அறிவு மற்றும் இருதயப் பூர்வமான நம்பிக்கை.

கே 22-59 - *உண்மையான விசுவாசத்தின் உட்பொருள்*: விசுவாச அறிக்கையில் வரிசைப் படுத்தப்பட்டுள்ள சுவிசேஷம்.

கே 60-64 - *உண்மையான விசுவாசத்தின் பிரதிபலன்*: விசுவாசத்தின் மூலம், கிருபையினால் நீதிமானாக்கப்படுதல்.

அடுத்து வரும் ஐந்து கேள்விகளில் கிருபையினால் நீதிமானக்கப்படுதலின் நன்மைளுக்கான விரிவான விளக்கம் தரப்பட்டாலும், இந்தக் கேள்வியில் இதற்கான சுருக்கமான விளக்கம் இங்கே காணலாம். "தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவுக்குள் நாம் நீதிமான்களாக இருக்கிறோம்", அதாவது, தேவனுடைய பார்வையில் முழுவதும் பூரணமான நீதியை (தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிதல்) உடையவர்களாக இருக்கிறோம். இந்த நீதி கிறிஸ்துவின் கிருபையினால் நமக்குக் கொடுக்கப்பட்டது, அதை நாம் விசுவாசத்தினால் மட்டும் பெற்றுக் கொண்டோம். இந்தப் பூரணமான நீதியைப் பெற்ற நிலையில், நாம் தேவனால் நீதிமானாக்கப்பட்டு, நம்மிடமிருந்து எடுக்கப்பட முடியாத, நாம் சொந்தமாக உரிமை பாராட்டும் நித்திய ஜீவனுக்குச் சொந்தமாகிறோம். நம்முடைய மீட்பராகிய கிறிஸ்துவின் நீதியின் மூலம் தேவனால் நாம் நம்முடைய எல்லா பாவத்திலிருந்தும் நீதிமானாக்கப்பட்டோம்.

**59-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 59 உண்மையான விசுவாசத்தின் உட்பொருள் மற்றும் உண்மையான விசுவாசத்தினால் வரும் நன்மை ஆகியவற்றை ......................................, ........................................................................, வதாக அமைந்துள்ளது.
2. அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்துக்கும், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையே உறுதியான தொடர்பு உண்டு. சரியா, தவறா? .......................
3. கேள்வி 21 நமக்குப் போதிப்பது: அ) ..................................................................................................... ஆ) ....................................................................................................................................................
4. அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம் உண்மையான விசுவாசத்தின் உட்பொருளை விளக்குகிறது. அதாவது,... அ) நாம் மீட்கப்படுவதற்கு கிறிஸ்துவைக் குறித்து நாம் அறிய வேண்டியதை நமக்கு கூறுகிறது, ஆ) இது அப்போஸ்தலர்களால் வெளிப்படுத்தப்பட்டது, இ)ஒருவர் மீட்கப்பட தொடர்ந்து இவைகளை உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்... என்பதாகும். எது சரி? ...........
5. அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தை கேள்விப்படாத ஒருவர், கிறிஸ்துவில் விசவாசம் வைப்பதால் மீட்கப்படமுடியும். சரியா, தவறா? ......................., விளக்கம்: ............................................................................ ........................................................................................................................................................
6. பின்வரும் சொற்றொடர்களைப் பொருத்தக:
   அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம் - கிறிஸ்தவ அறிவு மற்றும் கிறிஸ்துவில் நம்பிக்கை
   விசுவாசத்தின் நம்பிக்கை - உண்மையான விசுவாசத்தின் பொருளடக்கம்
   உண்மையான விசுவாசத்தின் தன்மை - எல்லா பாவத்திலிருந்தும் நீதிமானாக்கப்படுதல்
7. விசுவாசத்தினால் யாருடைய நீதி நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது? ...................................................................
8. "நீதி" என்பதின் விளக்கம்: .........................................................................................................................
9. "நித்திய ஜீவனுக்கு சொந்தமானவர்" என்பதின் விளக்கம்: ........................................................................ ........................................................................................................................................................
10. தீத்து 3:7-ஐ எழுதுக:

**60. தேவனுக்கு முன்பாக நீங்கள் நீதிமானாக இருப்பது எப்படி?**

இயேசு கிறிஸ்துவில் உண்மையான விசுவாசம் வைப்பதின் மூலம்; அதாவது, என்னுடைய மனசாட்சி, தேவனுடைய எல்லா கற்பனைகளில் ஒன்றையும் கடைப்பிடிக்காமல், அவைகளுக்கு விரோதமாக துணிகரமாக நான் பாவம் செய்தவன், தொடர்ந்து எல்லாத் தீமைகளையும் செய்யும் விருப்பம் கொண்டவன் என்று என்னை குற்றப்படுத்தினாலும்; நான் விசுவாச இருதயத்தோடு ஏற்றுக் கொள்ளும்போது மட்டும், தேவன் என்னுடைய எந்தவிதமான தகுதியையும் பாராமல், சுத்த கிருபையினிமித்தம் கிறிஸ்துவின் பூரணமான நீதி, பரிசுத்தம் மற்றும் பாவபரிகாரத்தை எனக்கு கொடுத்து என்னுடையதாக்கி, நான் பாவமற்ற நிலையிலும், ஒருபோதும் பாவம் செய்யாதது போலவும், கிறிஸ்து எனக்காக நிறைவேற்றிய எல்லா கீழ்ப்படிதலையும் நான் நிறைவேற்றியது போலவும் செய்கிறார்.

***

ஒருவகையில் இந்தக் கேள்வி, கேட்டகிசத்தின் மையக் கருத்து என்று விளக்கப்படலாம். எல்லாக் கேள்விகளும், தேவனுக்கு முன்பாக நாம் எப்படி நீதிமான்களாக இருக்கிறோம் என்ற வியக்க வைக்கும் மகிமையான சத்தியத்திற்கு நேராக நடத்துவதாக உள்ளது. இதற்குப் பின்வரும் கேள்விகளும், கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தினால், பரிசுத்தமுள்ள தேவனின் பார்வையில் நான் இப்பொழுது நீதிமான் என்ற அற்புதமான உண்மையை விளக்கும் நிலையில் அமைந்திருக்கிறது.

இந்த பதிலுக்குள் அநேக செய்திகள் இருப்பினும், முக்கியமான குறிப்புகளை மட்டும் காண்போம்.

1. பரிசுத்தமுள்ள தேவனால் நாம் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால், முற்றிலும் நீதிமானாக இருக்க வேண்டியதின் அவசியத்தை நாம் இங்கே காண்கிறோம். நாம் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கும் தேவன் பூரணமான அன்பின் நியாயப்பிரமாணத்தை நாம் முழுமையாகக் கடைப்பிடிப்பவர்கள் என்று நம்மைக் குறித்து அறிவிக்க வேண்டும்.

2. நம்முடைய சொந்த செயல்களின் அடிப்படையில், நாம் தேவனால் நீதிமான்கள் என்று ஒருபோதும் அறிவிக்கப்பட முடியாது என்பது நன்கு தெரிந்த ஒன்றேயாகும். நம்முடைய சொந்த மனசாட்சியும் நாம் ஒருபோதும் தேவனுடைய கற்பனைகளை முழுமையாகக் கைக்கொள்ளாத உண்மை நிலையைக் குறித்து நம்மை குற்றப்படுத்துகிறது, இந்த வாழ்வில் அது ஒருபோதும் முடியாது.

3. நம்முடைய சொந்த கீழ்ப்படியாமை மற்றும் குற்ற உணர்வு இருந்த போதிலும், தேவனுடைய அன்பின் நியாயப்பிரமாணத்தை பூரணமாக நிறைவேற்றிய கிறிஸ்துவின் நீதியானது இலவசமாக கொடுக்கப்படுவதால் நாம் பெற்றோம். இலவசமாகக் கொடுக்கப்படும் கிறிஸ்துவின் நீதியினிமித்தம் நாம் தேவனால் நீதிமான்களாக்கப்படுகிறோம்.

4. விசுவாசிகள் மட்டுமே இலவசமாகக் கொடுக்கப்படும் கிறிஸ்துவின் நீதியைப் பெறமுடியும். நம்முடைய இரட்சிப்புக்கான வழிவகை, நாம் தனிப்பட்ட நிலையில் நமது முழு நம்பிக்கை, உறுதி மற்றும் எதிர்பார்ப்பை இயேசு கிறிஸ்துவின் ஜீவன், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் உண்மையாக வைப்பதால் மட்டுமேயாகும். இயேசு கிறிஸ்துவை நம்முடைய ஆண்டவராக விசுவாசிக்கும்போது தேவனுக்கு முன்பாக நாம் நீதிமான்கள் என்றும் பாவமற்றவர்கள் என்றும் அறிவிக்கப்படுவோம். மேலும், கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசமும் தேவனுடைய வரமாக இருப்பதால், கிருபையினால் மட்டுமே நீதிமான்களாக்கப் பட்டோம் என்று நாம் உறுதியாகக் கூறமுடியும். பாவபாரம் சுமந்த மக்களுக்கு (Protestant Reformers) சீர்திருத்தச் சான்றோர்களால் அறிவிக்கப்பட்ட உன்னதமான சத்தியமாகும். இந்த உண்மை மற்றும் ஆசீர்வாதங்களை நீங்கள் அறிவீர்களா? கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கத் தவறுதல் என்பது ஒருவன் தன் பாவத்தில் நிலைத்திருந்து தேவனுடைய கோபத்திற்கு ஆளாக இருப்பதையே குறிக்கிறது.

**60-க்கான கேள்விகள்:**

1. இந்தக் கேள்வி, கேட்டகிசத்தின் மையக் கருத்தை விளக்குகிறது என்று எடுத்துக் கொள்ளலாம். சரியா, தவறா? ..................., விளக்கம்: ..............................................................................................................................
2. “தேவனுக்கு முன்பாக நீங்கள் நீதிமானாக இருப்பது எப்படி?”- என்ற கேள்வி முக்கியமான கேள்வியாக இருப்பது ஏன்? ..............................................................................................................................
3. தன்னை கிறிஸ்தவன் என்று அழைக்கும் ஒவ்வொருவருமே தேவனுக்கு முன்பாக நீதிமான்கள் ஆவர். சரியா, தவறா? ...................
4. தேவனுக்கு முன்பாக நீதிமான்... அ)கிறிஸ்துவின் நீதியை மட்டும் உடையவன், ஆ)தன்னுடைய சொந்த நீதியை உடையவன், இ)கிறிஸ்து மற்றும் தன்னுடைய சொந்த நீதியை உடையவன்... ஆவான். எது சரி? ............
5. கிருபையினால் மீட்கப்படுவது என்பது, தேவனுக்கு முன்பாக கொண்டுவரப்படும்போது நமக்கு பூரணமான நீதி இருக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. சரியா, தவறா? ...................
6. நீதிமானாக்கப்படுதல் என்பது... அ)திடப்படுத்துதலின்போது நடைபெறுவது, ஆ)நியாயாதிபதியான தேவனால் செய்யப்படுவது, இ)கிறிஸ்தவனாக மாறும்போது நமக்கு நாமே செய்து கொள்வது... எது சரி? .............

7. பின்வரும் வார்த்தைகளின் விளக்கம் எழுது (பின்பு உள்ள சொற்களஞ்சியத்தை பார்க்கவும்):
   அ. பொறுப்பை சுமத்துதல்:
   ஆ. நீதி
   இ. நீதிமானாக்கப்படுதல்
8. ஒருவருடைய மனசாட்சி, தேவனுடைய அன்பின் நியாயப்பிரமாணத்தை உடைத்து, அதற்கு கீழ்ப்படியாதவன் என்று, குற்றப்படுத்தினால் அவன் நீதிமானாக்கப்பட முடியாது. சரியா, தவறா? ..................
9. நீதிமானாக்கப்படுதலின் செயல்.... ........................................................................................................................................................................................................................................................................................................................................................ ஆகியவற்றை உள்ளடக்கிது.
10. ரோமர் 3:24,26-ஐ எழுதுக:

## 61. விசுவாசத்தினால் மட்டும் நீதிமான்கள் என்று உங்களை நீங்கள் அழைக்க காரணம் என்ன?

என்னுடைய சொந்த விசுவாசத்தின் தகுதியினிமித்தம் தேவனால் நான் ஏற்றுக் கொள்ளப்படுகிறேன் என்பதினால் அல்ல, மாறாக கிறிஸ்துவின் பரிசுத்தம், நீதி மற்றும் எனக்கான கடன்தீர்ப்பு ஆகியவை என்னுடைய நீதியாக தேவனுக்கு முன்பாக இருப்பதினால், விசுவாசத்தினால் மட்டும் நானும் அதையே பெற்று என்னுடையதாகக் கொண்டதால் ஆகும்.

***

கிறிஸ்துவின் பூரணமான நீதி நம்முடையதாக்கப் பட்டதினிமித்தம் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப் பட்டு, தேவனால் நீதிமானாக்கப்பட்டோம் என்று கேள்வி 60-ல் பார்த்தோம். ஒரு கிறிஸ்தவன் பண்டமாற்று முறையில் கிறிஸ்துவிடம் ஒன்றைக் கொடுத்துப் பெற்றுக் கொண்டவன் ஆவான். அதாவது, கிறிஸ்து விசுவாசியின் பாவத்தை ஏற்றுக் கொண்டு, பதிலாக தன்னுடைய பூரணமான நீதியை கிறிஸ்தவனிடம் கொடுக்கிறார் (2கொரி 5:21-ஐப் பார்க்க).

கேள்வி 61-ல், நீதிமானாக்கப்படும் செயலோடு விசுவாசத்திற்கு உள்ள உறவை நாம் காணலாம்; அதாவது, ஒருவன் எப்படி கிறிஸ்துவின் நீதியையும், அதனால் பாவங்களுக்கான மன்னிப்பையும் பெறுகிறான் என்பது ஆகும்.

கிறிஸ்துவின் மீது உண்மையாக விசுவாசம் வைப்பவன் மட்டுமே தேவனால் நீதிமானாக்கப் படுகிறான். கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்படுவோர் அனைவரும் அல்ல, மாறாக எவர்கள் உண்மையாக விசுவாசம் வைக்கின்றார்களோ அவர்கள் மட்டுமே ஆகும். “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்” (அப் 16:31) என்று அப்போஸ்தலர் சொன்னார். மேலும், “நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்” (ரோம 5:1) என்று பார்க்கிறோம்.

விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம் என்று நாம் சொல்லும்போது, நம்முடைய சொந்த விசுவாசம் தேவனால் நாம் அங்கீகரிக்கப்படுவதற்கும், இரட்சிப்பை சுதந்தரிப்பதற்குமான காரண பொருளானது என்று அர்த்தம் அல்ல. இன்றைய நாட்களில், நமக்கு அதிக விசுவாசம் இருந்தால் போதும் எல்லாம் சரியாகி விடும் என்று கேள்விப்படுகிறோம். ஆனால் விசுவாசம் மட்டும் நம்மை இரட்சிக்காது, கிறிஸ்து மட்டுமே நம்மை இரட்சிக்கிறார். நமக்கு விசுவாசத்தில் விசுவாசம் இல்லை, மாறாக கிறிஸ்துவில் விசுவாசம் உடையவர்களாக இருக்கிறோம்! இந்த கேள்வி தெளிவாகப் போதிப்பது போல, நம்முடைய விசுவாசம் எந்தவிதமான தகுதியுடையது அல்ல, மாறாக கிறிஸ்து தகுதியை உடையவராக இருக்கிறார்.

கேள்வி 65-ல் நாம் பார்ப்பதுபோல, கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசம், எழுதப்பட்ட கர்த்தருடைய வார்த்தையால் பரிசுத்த ஆவியின் செயலால் நமக்குள் உருவாக்கப்பட்ட விசுவாசம் ஆகும். உன்னுடைய சொந்த இரட்சகராக கிறிஸ்துவில் நீங்கள் விசுவாசம் உடையவராக இருக்கின்றீர்களா? உங்களின் விசுவாசத்தை நீங்கள் அறிக்கை செய்கிறீர்களா?

### 61-க்கான கேள்விகள்:

1. கேள்வி 61, நீதிமானாக்கப்படுதல் மற்றும் ................................ ஆகியவற்றுக்கும் ...................................... .............................................. குறித்து போதிக்கிறது.
2. விசுவாசமும், இரட்சிப்பும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தே செல்கிறது என்ற அர்த்தம். சரியா, தவறா? ....................
3. கிறிஸ்து மட்டுமே ஒரு பாவியை மீட்க முடியும் என்பதால், அவன் கிறிஸ்து மற்றும் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறானா இல்லையா என்பது முக்கியமல்ல. சரியா, தவறா? ................
4. கிறிஸ்துவில் உள்ள விசுவாசம்.. அ) நீதிமானாக்கப்படுதலுக்குத் தகுதிப் படுத்துகிறது, ஆ) நீதிமானாக்கப்படுதலுக்கு தகுதிப் படுத்தாது. எது சரி? ........................................, விளக்கம் தருக: ..............................................................................................................................................
5. இந்தக் கேள்வியைப் பொறுத்த நிலையில் என்னுடைய நீதி என்பது என்ன? ..............................................................................................................................................

6. எந்த மதத்தில் நீங்கள் விசுவாசம் வைக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல, ஆனால் உறுதியாகவும், நேர்மையாகவும் விசுவாசம் வைக்கிறீர்களா என்பதுதான் முக்கியம். சரியா, தவறா? ....................
7. "விசுவாசத்தை" ................................................. என்று அழைக்கலாம், அதனால் கிறிஸ்து நமக்கு சொந்தமாகிறார்.
8. நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் போது, தேவன் நம்மை நீதிமானாக்குகிறார், காரணம் உண்மையான விசுவாசம் தேவனுடைய பார்வையில் மிகவும் பெரிய தகுதியைப் பெறுகிறது. சரியா, தவறா? .....................
9. கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசம் மற்றும் திருச்சபை அங்கத்தினராக இருக்கும் நமது நிலை தேவன் நம்மை இரட்சிக்கும்படி செய்கிறது. சரியா, தவறா? ................
10. ரோமர் 3:28-ஐ எழுதுக:

**62. தேவனுக்கு முன்பாக நம்முடைய நற்செயல்கள் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ நீதியாக இருக்க முடிவதில்லை ஏன்?**

தேவனுடைய நியாயத் தீர்ப்பின் சிம்மாசனத்திற்கு முன்பு நிற்க வேண்டிய நீதியானது பூரணமானதாகவும், தேவ நியாயப்பிரமாணத்தால் உள்ளும் புறமும் இணக்கமுள்ளதாகவும் இருக்க வேண்டும்; ஆனால் இந்த வாழ்வில் நம்முடைய தலைசிறந்த செயல்களும் குறைவுள்ளதாகவும், பாவத்தால் கறைபட்டதாகவும் இருக்கிறது.

***

விசுவாசத்திற்கும், நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையே உள்ள உறுதியான உறவை நாம் கற்ற நிலையில் (விசுவாசம் "கை"-யாக இருந்து நீதிமானாக்கப்படுவதற்காக கிறிஸ்துவின் நீதியை எட்டிப்பிடிக்குதல்), கேள்விகள் 62-64-ல் நீதிமானாக்கப்படுவதில் நம்முடைய நற்செயல்களுக்கான பங்கு என்ன என்பதை நாம் கற்கிறோம்.

தனிப்பட்ட நிலையில் விசுவாசத்தில் எந்தவிதமான தகுதியும் இல்லாதது போல, நற்செயல்களில் எந்தவிதமான சிறப்பு தகுதியும் இல்லை என்பதை கேள்வி 62 விளக்குகிறது. இருப்பினும் நற்செயல்களுக்கு "சிறப்பு பரிசு" உண்டு என்பதை கேள்வி 63 நமக்கு போதிக்கிறது. இப்போது நற்செயல்கள் மற்றும் நீதிமானாக்கப்படுதல் ஆகியவற்றைக் குறித்து நாம் பார்க்கலாம்.

இயற்கையாக, எல்லா மனிதர்களுமே கடவுளை பிரியப்படுத்தும் சில நற்செயல்களைச் செய்வதால், தங்களுடைய பாவத்திற்கான பரிகாரமும், மரணத்திற்குப் பின் பரலோகில் இடத்தையும் பெற்றுவிடலாம் என்று தங்கள் இருதயத்தில் நினைக்கிறார்கள். மனிதன் தன்னை இரட்சித்துக் கொள்ள சில காரியங்களைச் செய்தால் முடியும் என்று மனிதன் உருவாக்கிய எல்லா மதங்களும் போதிக்கிறது. நற்செயல்களைச் செய்வதால் மட்டும் மனிதன் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள முடியாது என்று உண்மையான மார்க்கமான கிறிஸ்தவம் போதிக்கிறது.

காரணம், நம்முடைய நற்செயல்கள் தேவன் எதிர்பார்க்கும் அளவிற்கு இருந்து, நம்மை நீதிமானாக்க உதவிசெய்யும் அளவிற்கு அவைகள் பூரணமானவைகளாகவும், உண்மையானவைகளாகவும் இருப்பதில்லை. ஒரு செயல், பூரணமானதாக இருக்க வேண்டும் என்றால், செய்யப்படும் அந்த செயல், தேவனுடைய அன்பினால், நம்முடைய இருதயத்தில் தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பு எந்தவிதமான பாவத்தின் வாசனையுமற்றதாக இருக்க வேண்டும்.

ஆனால் நாம் ஏற்கனவே பார்த்ததுபோல (கேள்விகள் 5 மற்றும் 8-ஐ மீண்டும் வாசிக்கவும்), மனிதனுடைய இருதயம் முழுவதும் துன்மார்க்கமாக இருப்பதால், தேவனுடைய பரிசுத்தமான நியாயப்பிரமாணங்களுக்கு தேவன்மீது பூரணமான அன்பினால் அவன் கீழ்ப்படிய ஆரம்பிப்பது இல்லை. இப்படியாக நம்முடைய எல்லா நற்செயல்களும் "குறைவுள்ளதாகவும், பாவத்தால் கறைபட்டதாகவும்" இருக்கிறது. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னும் ஒரே ஒரு நபர் மட்டுமே தேவனுடைய பார்வைக்கு பூரணமானவைகளை செய்தார் -அவைகள் யாவும் பூரணமானவைகளாகவும், தேவனால் அங்கீகரிக்கப்படுகிறவைகளாகவும் இருந்தது. நன்மையும், நீதியுமான கிறிஸ்துவின் நற்செயல்கள் அவர் மீது விசுவாசம் வைக்கும் நமக்கு இலவசமாக கொடுக்கப்படுகிறது.

தங்களுடைய சொந்த நற்கிரியைகள் தங்களுக்கான பாரலோக சீட்டை வாங்கித்தரும் என்று நம்பும் ஜனங்கள் முடிவில் ஏமாற்றப்படுவார்கள். தேவனுடைய பார்வையில், முற்றிலும் அழுகிப் போன தங்களுடைய சுய கிரியைகளால் அவர்கள் சீர்கெட்டவர்களாக இருக்கிறார்கள். "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோம 3:10). நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம், அது நம்முடைய சுய கிரியைகளினால் அல்ல.

**62-க்கான கேள்விகள்:**

1. கேள்விகள் 62-74 என்ற பகுதி, ............................................... நாம் நீதிமானாக்கப்படுதல் ஆகிய ............................................. உள்ள உறவை விளக்குகிறது.
2. நாம் நீதிமானாக்கப்படுவதில் கிறிஸ்துவின் செயல்களோடு நம்முடைய நற்செயல்களும் பங்கு வகிக்கிறது என்று கேள்வி 62 போதிக்கிறது. சரியா, தவறா? .......................
3. "நீதி" என்பது சுத்தமான இருதயத்துடன் தேவனுடைய பரிசுத்த நியாயப்பிரமாணங்களுக்கு பூரணமாக கீழ்ப்படிவதாகும். சரியா, தவறா? .......................

4. தேவன் விசுவாசிகளை கிருபையின் அடிப்படையில் இரட்சிப்பதால் நீதி என்பதே நமக்குத் தேவையில்லை. சரியா, தவறா? ......................, விளக்குக: ..........................................................................................................

..............................................................................................................................................................

5. பாவத்தால் கறைபட்டுள்ள செயல்களை குறிப்பிடுக:
   அ. ஒருவருடைய வாழ்க்கையை காப்பதற்காக பொய் சொல்லுதல்: ...........
   ஆ. பக்கத்து வீட்டுக்காரரை ஏமாற்றுதல் ..........
   இ. மோசமான டிவி நிகழ்ச்சிகளை காண்பது: ..........
   ஈ. தாழ்மையாக வேதத்தை வாசிப்பது: ..........
   உ. விசுவாச வைராக்கியமற்ற சபையில் சேர்வது: ..........
6. மனிதனுடைய நற்செயல்களைக் குறித்து இந்த கேட்டகிசத்தில் உள்ள மற்ற கேள்விகள் போதிப்பது என்ன? ..............................................................................................................................................
7. மனிதன் தான் செய்யும் நற்செயல்களால் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளலாம் என்று கிறிஸ்தவ மார்க்கத்தைத் தவிர மற்ற மனிதனின் போதிக்கும் மதங்கள் போதிக்கிறது. சரியா, தவறா? ....................
8. கிறிஸ்தவனான பின்பு நாம் நற்செயல்கள் செய்யலாம், ஆனால் பூரணமான செயல்கள் செய்ய முடியாது. சரியா, தவறா? ....................
9. பூரண அன்பின் இருதயத்தால் தேவனுடைய பார்வையில் நற்காரியங்களைச் செய்த அந்த ஒரு நபர் யார்? .................................................
10. ஏசாயா 64:6-ஐ எழுதவும்:

**63. நாம் செய்யும் நற்செயல்களுக்காக நன்மையான பிரதிபலன்களை இந்த உலக வாழ்விலும், இதற்கு பின்வரும் வாழ்விலும் நமக்கு கொடுப்பது தேவனுடைய சித்தமாக இருப்பினும், அவைகள் எந்தவிதமான தகுதியும் பெறுவதில்லையா?**

நன்மையான பிரதிபலன்கள் தகுதியிலிருந்து வருவது கிடையாது, கிருபையினால் மட்டுமே.

***

நீதிமானாக்கப்படுதலுக்கும் நமது நற்செயல்களுக்கும் இடையே உள்ள உறவைக் குறித்து நமது ஆய்வைத் தொடர்கிறோம். கேள்வி 62-ல், நம்முடைய நற்செயல்கள் தேவனுக்கு முன்பான நம்முடைய நீதியில் எதையும் தகுதியாக நமக்குக் கொடுப்பதில்லை என்பதை விளக்கியது. இப்போது பதில் காணப்பட வேண்டிய புதிய ஒரு கேள்வி எழும்புகிறது. கீழ்ப்படிதலும் உண்மையுமான மனிதனை தேவன் ஆசீர்வதித்து, தீமையும் கீழ்ப்படியாமையுள்ள மனிதனை தண்டிப்பதைக் குறித்து வேதம் பேசவில்லையா?

உண்மையாகவே பேசுகிறது. நற்செயல்களுக்கான பிரதிபலன்களைக் குறித்து நூற்றுக்கும் அதிகமான வசனங்கள் வேதத்தில் உண்டு. தம்முடைய கிருபையினால் நற்காரியங்கள் செய்கிறவர்களுக்கு வரும் பலனைக் குறிக்கும் சில வசனங்கள்: சங்கீ 19:11; மத் 6:4; 19:29; 1கொரி 3:14; 1தீமோ 4:8; எபி 6:10 மற்றும் வெளி 22:12... இந்த வசன குறிப்புகளை வாசித்தறியவும்.

செய்யப்படும் நற்செயல்களுக்காக தேவன் நன்மையான ஈவுகளைத் தருவார் என்றால், அந்த நற்செயல்களில் தகுதி அடங்கியுள்ளது என்றும், அதற்காக தேவன் பதிற் செய்ய வேண்டும் என்றாகிறது. ஆனால், இது அப்படியல்ல! தனக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தேவன் தரும் நன்மையான ஈவுகள், தகுதியினிமித்தம் அல்ல, மாறாக தமது கிருபையினிமித்தம் ஆகும். தேவன் மனிதனுக்கு எதிலும் கடனாளி அல்ல. கீழ்ப்படிதலுக்கான பிரதிபலனை ஒருபோதும் சம்பாதிக்க முடியாது.

எந்த ஒரு மனிதனாலும் தனக்கு மிஞ்சிய அளவிற்கு நன்மை செய்ய முடியாது (லூக் 17:10). ஒவ்வொரு மனிதனும் படைப்பின் நியதியின்படி தேவனுக்கு பூரணமாகக் கீழ்ப்படிய வேண்டிய கடமையை உடையவனாக இருக்கிறான். மேலும், நாம் செய்யும் எல்லாவித நன்மைகளும் (எப்போதுமே குறைவாகவே உள்ளது) தேவன் கொடுக்கும் பெலத்தினால் மட்டுமே செய்கிறோம் (பிலி 2:13). ஆகவே தேவன் நமக்கு நன்மை செய்ய கடனாளியாக இருக்கிறார் என்று ஒருபோதும் சொல்ல முடியாது. ஆனாலும், தேவன் நன்மைகளைத் தருவதை நாம் காண்கிறோம். நாம் ஆசீர்வாதங்களைப் பெற தகுதியற்றவர்களாக இருப்பினும், தேவன் நமக்கு பல நன்மையான ஈவுகளை தமது கிருபையினிமித்தம் தருகிறார். நமக்கு உண்டான இரட்சிப்பு நமது நற்கிரியைகளினால் அல்ல, மாறாக கிருபையே, அந்த கிருபையே நமக்கு தேவன் தரும் ஈவு.

**63-க்கான கேள்விகள்:**

1. விசுவாசத்தினால் கிறிஸ்துவிடமிருந்து நாம் நீதியைப் பெறுவதினால், நாம் செய்யும் நற்காரியங்களுக்கு பிரதிபலன் ஏதும் கிடையாது. சரியா, தவறா? ....................
2. நற்கிரியைகளுக்கு தேவன் தரும் பிரதிபலனைக்குறித்த மூன்று வசனங்களை சுருக்கமாக எழுது:
   அ.
   ஆ.
   இ.
3. மனிதர்கள் மற்றவர்களுக்கு பரிசளிக்கிறார்கள், ஆனால் தேவன் பாவிகளான மனிதருக்கு பரிசளிப்பது இல்லை. சரியா, தவறா? ....................

4. நற்செயல்கள்... அ)தேவனுக்கு முன் தகுதி பெறுகிறது, ஆ)விசுவாசத்தின் கனிகளாகும், இ)தேவனுக்கு முன்பாக நம்முடைய நீதிக்கு அவசியம், ஈ)தேவனால் திருப்பி செலுத்தப்படுகிறது... எது சரி? ...............
5. ஒரு மனிதன் தனக்கு கொடுக்கப்பட்ட கடமையைச் செய்யும்போது, அதற்கான வெகுமதியைப் பெறுவான். சரியா, தவறா? ...................
6. லூக்கா 17:10 நம்முடைய பாடத்தோடு எப்படி தொடர்புடையதாக இருக்கிறது? ......................................
.......................................................................................................................................................
7. இயேசு கிறிஸ்துவில் உண்மையான விசுவாசத்தோடு எவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறார்களோ அவர்கள் பிரதிபலனைகளை அ)எப்போதுமே அல்ல, ஆ)இந்த உலக வாழ்வில் மட்டும், இ)பரலோகத்தில் மட்டும், ஈ)இரண்டு வாழ்விலும்... எதிர்பார்க்கலாம். எது சரி? ..........
8. பின்வரும் வசனங்களின் படி, எந்த வகையான கிறிஸ்தவ பணிகள் பாராட்டப்படுகிறது?
   அ. மத் 10:42 ..............................................................................................................................
   ஆ. எபி 11:6 ..............................................................................................................................
   இ. யாக்கோ 1:12 ..........................................................................................................................
   ஈ. 1பேது 5:1-4 ..........................................................................................................................
   உ. வெளி 2:10 ..............................................................................................................................
9. இரட்சிப்பானது தேவனுடைய .........................னால் மட்டும் நமக்கு கொடுக்கப்படுவது என்றால், நம்முடைய இரட்சிப்பின் எந்தவொரு பகுதியையும் பெற தகுதியுடையவர்கள் அல்ல. சரியா, தவறா? ...................
10. வெளிப் 22:12-ஐ எழுதுக:

**64. இந்த போதனை மனிதனை கவலையற்ற மற்றும் தூய்மையற்ற வாழ்க்கை வாழச் செய்யாதா?**

வாய்ப்பே இல்லை! காரணம் உண்மையான விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் ஊன்றப் பட்டவர்கள் நன்றியின் கனிகளாக நற்செயல்களைச் செய்யாமல் இருக்க முடியாது.

***

இரட்சிப்பு கிருபையினால் மட்டுமே என்றும், கிறிஸ்துவின் நீதி விசுவாசத்தினால் மட்டுமே என்றும் சொல்லப்படும்போது, நம்முடைய தனிப்பட்ட நற்செயல்களும், நல்ஒழுக்க நெறிகளும் ஒரு பொருட்டே அல்ல என்பதுபோல காணப்படலாம். தேவனுடைய பிள்ளைக்கு நற்செயல்கள் அவசியமா?

வேதம் இதைக் குறித்து கூறுவதை நமது கேட்டகிசம் விளக்குகிறது. தேவனுடைய கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படிவது நம்மை இரட்சிக்காது, ஆனால் தேவனுடைய கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்பது அவசியம்! நம்முடைய நற்செயல்களால் நாம் நீதிமான்களாக்கப் படவில்லை, மாறாக நாம் நற்செயல்கள் செய்யும்படி நீதிமான்களாக்கப்பட்டுள்ளோம்.

நாம் தேவனுக்காக வாழவும், அவருக்கு ஊழியம் செய்யும்படியாகவே தேவன் நம்மை இரட்சிக்கிறார் என்பதை இதற்குமுன் கேட்டகிசம் (கேள்விகள் 1 & 43) கூறியதை நாம் கண்டோம். கிறிஸ்தவர்கள் தங்கள் இரட்சகருக்கு முன்பு பரிசுத்தமாக, கீழ்ப்படிதலோடு, நன்றியின் வாழ்க்கை வாழ வேண்டியது விரும்பப்படதக்கதாக இருப்பினும், இந்த வாழ்க்கை கட்டாயம் அவசியம் ஆகும். நன்றியின் கனிகளான நற்கிரியைகளை நம்மால் வெளிக்கொண்டுவராமல் இருக்கவே முடியாது. நாம் இரட்சிக்கப்பட்டு வருவதற்கான காரணமே, இயேசு கிறிஸ்துவின் சாயலைப் போல நாமும் அடைய வேண்டும் என்றும் (ரோம 8:29), நற்காரியங்களை நாம் செய்ய வேண்டும் (எபேசி 2:10) என்பதற்கும் ஆகும்.

ஒரு விசுவாசி நற்செயல்கள் செய்து புதிய நன்றியின் வாழ்க்கை வாழ்வதற்கான உள்ளான வல்லமையை எங்கிருந்து பெறுகிறான்?

நாம் பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பை (யோவா 3:6-8; 1யோவ 3:9) பெற்றதால், தேவனால் பிறந்தவர்களாக தேவனுக்கு (இன்னும் பூரணமாக இல்லாவிட்டாலும்) கீழ்ப்படிய வல்லமை பெற்றுள்ளோம். ரோமர் 6:18,22ன்படி தேவனுக்கு நாம் அடிமைகளாக்கப்பட்டு, அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ நாம் பெலப்படுத்தப் பட்டுள்ளோம். இதுவே, கிறிஸ்துவில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதின் கனியாகிய பரிசுத்தமாக்கப் படுதலாகும். தேவனுடைய பிள்ளையாக, பரிசுத்தமான வாழ்க்கை வாழ பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு விருப்பத்தைக் கொடுக்கிறாரா? நாம் ஒவ்வொருவரும் இந்தக் கேள்வியை அடிக்கடி நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற உன்னதமான வேதாகம போதனையை, கேள்விகள் 59-64-ல் படித்து முடிக்கிறோம். அடுத்து பரிசுத்த (ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி போன்ற) சாக்கரமந்துகளைக் குறித்து கேட்டகிசம் போதிப்பதை காணலாம்.

**64-க்கான கேள்விகள்:**

1. நற்செயல்கள் செய்வதினால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை, ஆகவே நற்செயல்கள் செய்வதைக் குறித்து யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். சரியா, தவறா? ..................., விளக்கம் தருக: ..........................................................................................................................

2. இந்தக் கேள்வியில் வரும் “தூய்மையற்ற” என்ற வார்த்தையின் விளக்கம் என்ன? .............................
.............................................................................................................................................................
3. கிறிஸ்துவில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்டு ....................................................... செய்யும்படியாக நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறோம்.
4. கலாத்தியர் 5:22-23 மற்றும் எபேசியர் 5:9-ல் கூறப்படும் கிறிஸ்தவ கனிகளை எழுதுக: ........................
.............................................................................................................................................................
5. கர்த்தருடைய வார்த்தைக்கும், முக்கியமாக பத்துக் கற்பனைகளுக்கும், நம்முடைய நன்றியின் கனிகளாக கீழ்படிகிறோம். சரியா, தவறா? ....................
6. தேவனை நேசிக்கவும், அவருக்கு ஊழியம் செய்வதற்கான வல்லமை... அ) இயற்கையான நம்முடைய இருதயத்திலிருந்து, ஆ) நம்முடைய புதிய பிறப்பால், இ) மற்றவர்களின் நல்ல செயல்களைப் பார்த்து, ஈ) பரிசுத்த ஆவியானவரிடமிருந்து... வருகிறது. எது சரி? ............
7. கேள்வி 87-ன்படி, கர்த்தருடைய வார்த்தைக்கு தொடர்ந்து கீழ்ப்படியாமல் இருப்பவர்கள், சபையில் அங்கத்தினராக இருந்தாலும் அவர்கள் .......................................................... இருக்க மாட்டார்கள்.
8. கேள்வி 114-ன்படி, ஒரு கிறிஸ்தவன்... அ)தேவனுடைய நியாயப்பிரமாணத்தை பூரணமாக கடைப்பிடிக்கிறான், ஆ)மனப்பூர்வமான நோக்கத்துடன் வசனத்தை கடைப்பிடிக்கிறான், இ)எல்லா கற்பனைகளையும் பூரணமாகக் கடைப்பிடிக்கிறான்? எது சரி? ...................
9. ..................................................................................... என்ற உன்னதமான வேதாகம போதனையை, கேள்விகள் ..................-ல் படித்து முடிக்கிறோம்.
10. யோவான் 15:5-ஐ எழுதுக:

### 65. கிறிஸ்து மற்றும் அவருடைய நன்மைகளில் விசுவாசத்தினால் மட்டும் பங்கு கொள்வதால், இந்த விசுவாசம் எங்கிருந்து வருகிறது?

பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது நம்முடைய இருதயங்களில் விசுவாசத்தை செயல்படுத்தி, சாக்ரமந்துகளின் பயன்பாட்டால் அதை உறுதி செய்கிறார்.

***

கேள்வி 65-லிருந்து, சாக்கரமந்துகளைக் குறித்த படிப்பை நாம் ஆரம்பிக்கிறோம். இது கேள்வி 82-வரை நம்மை கொண்டு செல்லும். பரிசுத்த ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய திருவிருந்து (இராபோஜனம்) ஆகிய இரண்டு சாக்ரமந்துகளைப் படிக்க 17 கேள்விகள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இந்த கேட்டகிசத்தில், வேதத்தைக் குறித்து சொல்வதற்கு ஒரு கேள்வியும் இல்லை, திரியேக தேவன் மற்றும் திருச்சபையைக் குறித்து ஒரேயொரு கேள்வி மட்டும் இருக்க, சாக்ரமந்துகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது ஏன்? இந்த கேட்டகிசம் எழுதப்பட்ட போது (கி.பி 1523-ல்) மற்ற போதனைகளைக் குறித்து கேள்வியோ அல்லது விவாதமோ இல்லை.

சாக்ரமந்துகளைக் குறித்து பலவிதமான கருத்து வித்தியாசங்கள் காணப்பட்டன. ரோமன் கத்தோலிக்கர் மற்றும் லூத்தரன் ஒருவகை கருத்தையும், பாப்டிஸ்ட் வேறு ஒரு கருத்தையும் உடையவர்களாக இருந்தனர். ரிபார்ம்டு (சீர்திருத்த) திருச்சபையினர் ஒரு விளக்கத்தையும் வலுயுறுத்தினர், அதுவே மற்ற எல்லாக் கருத்துக்களைக் காட்டிலும் திருவசனத்துக்கு மிகவும் நெறுங்கிய தொடர்புடையதாக இருக்கிறது என்று விசுவாசிக்கிறோம்.

கேட்டகிசத்தின் இந்த பகுதி, “உண்மையான விசுவாசம் எங்கிருந்து வருகிறது” என்ற கேள்வியிலிருந்து ஆரம்பித்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவும். இரட்சிப்பு கிரியைகளினால் அல்ல, கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்தினால் வருகிறது என்பதை இதற்கு முந்திய பகுதியில் கண்டோம். கிறிஸ்துவில் நம் விசுவாசம் எங்கிருந்து வருகிறது என்பதைக் குறித்து நாம் அறிய வேண்டியது மிகவும் முக்கியம். இந்த விசுவாசம் தேவனிடமிருந்து வருகிறதா, அல்லது நம்மிடமிருந்தே வருகிறதா? ஒருவேளை இது நம்மிடமிருந்து வருகிறதாக இருப்பின், நமக்கு நாமே நன்றி சொல்லலாம், அல்லது தேவனிடமிருந்து வரும் எனில் நமக்கு கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தேவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் என்பது தேவனுடைய விசேஷித்த வரம் என்றும், அது தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறது என்றும் வேதம் தெளிவாக கூறுகிறது (எபேசி 2:8; தீத்து 1:1). பரிசுத்த ஆவியானவர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் இருதயத்தில் இந்த விசுவாசத்தை வைக்கிறார். இதை அவர் செய்வது எப்படி? தேவனுடைய வார்த்தையை பயன்படுத்துவதினால், முக்கியமாக கர்த்தருடைய வார்த்தை பிரசங்கிக்கபடும் போது பரிசுத்த ஆவியானவர் விசுவாசத்தை வைக்கிறார் (ரோம 10:14).

இருதயத்தில் விசுவாசம் உருவாக்கப்பட்ட பின்பு, அது பெலப்படுத்தப்பட்டு அதிகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இரண்டு முக்கியமானவற்றின் உதவியினால் இது செய்யப்படுகிறது: முதலாவது, திருவசனம் தொடர்ந்து பிரசங்கிக்கப்படுவதினால்; இரண்டாவது, சாக்கரமந்துகள் பயன்படுத்தப்படுவதினால். இப்படியாக, நம்முடைய விசுவாசத்திற்கு மிகவும் முக்கியமான காரணமாக கர்த்தருடைய வார்த்தை

இருப்பதை நாம் காணலாம். இதற்கு சாக்ரமந்துகள் முக்கியமானதாக இருப்பினும், திருவசனம் அதைவிட மிகவும் முக்கியமானதாக இருக்கிறது, அதை நாம் பின்னர் காண்போம்.

**65-க்கான கேள்விகள்:**

1. கேள்விகள் 65 லிருந்து ...........-வரை எதைக் குறித்து விளக்கம் தருகிறது? ..........................................
2. ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி போன்றவைகள் கர்த்தருடைய வார்த்தையைக் காட்டிலும் மிகவும் முக்கியமானவைகள், ஆகவேதான் அவைகளுக்காக அநேக கேள்விகள் ஒதுக்கப் பட்டுள்ளது. சரியா, தவறா? .....................
3. திரியேகம், திருச்சபை மற்றும் வேதாகமம் ஆகியவற்றைக் குறித்த போதனைகளின் மீது லூத்தரன் மற்றும் ரிபார்ம்டு (சீர்திருத்த) திருச்சபைகள் ஒரே கருத்தை உடையதாக இருக்கவில்லை. சரியா, தவறா? .....................
4. பின்வரும் வசனங்களின்படி, கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்பது, பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் விசேஷித்த வரம் ஆகும்: ..................................................................................................................................
5. நீங்கள் சபை ஆராதணையில் பங்கு பெறுவதற்கும், உங்கள் விசுவாசம் பெலப்படுவதற்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்குக: ..................................................................................................................................
6. கர்த்தருடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதைக் குறித்த உங்களுடைய மனப்பான்மை என்ன? (ரோம 10:17- குறிப்பு தருகிறது) ..................... ..............................................................................................................
7. கிறிஸ்துவில் விசுவாசம் எப்போது உருவாகிறது? அ)ஞானஸ்நானத்தின் போது, ஆ)கர்த்தருடைய விருந்தில் முதலாவது பங்கெடுக்கும் போது, இ)வேதத்தை வாசிக்கும் எவருக்கும், ஈ)பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய இருதயத்தில் விதைக்கும்போது. எது? ............
8. சாக்ரமந்துகள் நம்முடைய விசுவாசத்தின் எந்த செயலுக்காக பரிசுத்த ஆவியால் பயன்படுத்தப் படுகிறது? ..................................................................................................................................
..................................................................................................................................
9. சாக்ரமந்துகளைக் குறித்த அர்த்தத்தில் எந்த திருச்சபைகளின் விளக்கத்தை நாம் நிராகரிக்கிறோம்? ..................................................................................................................................
10. அப்போ 20:32-ஐ எழுதவும்:

**66. சாக்ரமந்துகள் என்பது என்ன?**

சாக்ரமந்துகள் என்பது, கண்களால் காணப்படும் நிலையில் தேவனால் நியமிக்கப்பட்ட பரிசுத்தமான அடையாளம் மற்றும் முத்திரைகள் ஆகும், இவைகளின் பயன்பாட்டினால், கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய பலியினிமித்தம் தேவன் நமக்கு பாவமன்னிப்பு மற்றும் நித்திய ஜீவனை தரும்படியாக, சுவிசேஷத்தின் வாக்குத்தத்தமான இலவச கிருபையை நமக்கு முழுமையாக அறிவித்து, நமக்கு முத்திரையாக்குகிறார்.

***

சாக்கரமந்துகளின் உட்கருத்து என்ன என்பதை கேள்விகள் 66 மற்றும் 67-லிருந்து நாம் அறியலாம்: அவைகள் இயேசு கிறிஸ்துவின் தியாகபலியான மரணம் மற்றும் அதனால் நாம் பெறும் இரட்சிப்பையும் சுட்டிக் காட்டுகிறது.

சாக்ரமந்தைக் குறித்த தெளிவான விளக்கத்தை கேள்வி 66 கூறினாலும், இந்த வார்த்தை எங்கிருந்து வருகிறது என்பதை நாம் பார்ப்போம். சாக்ரமந்து என்ற வார்த்தை உங்களின் தமிழ் (மற்றும் ஆங்கில) வேதத்தில் இல்லை. ரோமன் கத்தோலிக்கர்களின் இலத்தீன் மொழி பெயர்ப்பு வேதத்தில் நாம் காணமுடியும். இந்த வார்த்தை “Sacrare -- சாக்ரரி”-என்ற இலத்தின் வார்த்தையிலிருந்து வந்து, புனிதம் அல்லது பரிசுத்தம் என்ற அர்த்தத்தைத் தருகிறது. ரோம படைவீரன் படையில் சேர்வதற்கு முன் எடுத்துக்கொள்ளும் சத்தியபிரமாணத்தை இந்த வார்த்தை குறிக்கிறது. இந்த வார்த்தை வேதத்தில் இல்லை என்றாலும், வேதாகமம் கூறும் இரண்டு சடங்குகளான ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி ஆகியவற்றை இது குறிப்பதால் இதைப் பயன்படுத்தலாம்.

ஒரு சாக்கரமந்து நான்கு அடிப்படை கூற்றுகளை உடையதாக இருக்கிறது என்று இந்த கேள்வி நமக்கு போதிக்கிறது:

1. *இது கண்களால் காணப்படும் நிலையில் உள்ளது*: ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி ஆகிய இரண்டும் கண்களால் காணப்படும் நிலையில் உள்ள பொருட்களைக் கொண்டதாக தொட்டு உணரும் நிலையில் உள்ளது. இது சாக்ரமந்தின் வெளித்தோற்றத்தின் பகுதியாகும். சாக்ரமந்தின் ஆவிக்குரிய பகுதியான கர்த்தருடைய கிருபையானது, சாக்ரமந்தின் வெளித்தோற்ற பகுதியை விசுவாசத்தினால் பயன்படுத்தும்போது உடன் வெளிப்படுகிறது.

2. *இது பரிசுத்தமானதாக இருக்கிறது*: சாக்ரமந்து, மனிதனால் அல்ல, தேவனால் நியமிக்கப்பட்டதாகையால் இது பரிசுத்தமாக இருக்கிறது, ஆகவே தேவனுக்குமுன் பயபக்தியுடன் அனுசரிக்க வேண்டும். சாதாரணமாக இருக்கும் தண்ணீர், அப்பம் மற்றும் திராட்சை ரசமானது, கிறிஸ்துவின் வார்த்தைகளின் பயன்பாட்டால் நிலைப்படுத்தப்படும்போது அது சாதாரண பயன்பாட்டிலிருந்து தேவனுடைய சேவைக்காக

வேறுபடுத்தப்படுகிறது (யாத் 29:33). கர்த்தருடைய வார்த்தையை போதிக்கும் போதகர்கள் மட்டுமே இந்த சாக்கரமந்துகளை நிர்வகித்து கொடுக்க வேண்டும், மேலும் இது தேவ ஆராதணையில் மட்டுமன்றி தனிப்பட்ட கூடுகைகளில் நிர்வகிக்கப்படக் கூடாது.

3. *இது ஒரு அடையாளமாக இருக்கிறது*: பயணிகளுக்கு வழிகாட்டும் அடையாள சின்னங்கள் போல சாக்ரமந்துகள் நமக்கு கிறிஸ்துவை காண்பிக்கிறது. சுவிசேஷத்தின் வாக்குத்தத்தத்தை நமக்கு பாடமாக போதிக்கிறது. திருச்சபை தந்தைகள் இதை "கண்களால் காணமுடியாத தேவகிருபை, கண்களால் காணும் நிலையில் விளக்கும் அடையாளச் சின்னம்" என்றனர்.

4. *இது ஒரு முத்திரையாக இருக்கிறது*: முத்திரை என்பது ஒரு அதிகாரத்தின் சின்னமாக இருக்கிறது. இது முத்திரையிடும் ஒருவரின் அதிகாரத்தை சுமக்கிறது. சுவிசேஷத்தின் வாக்குத்தத்தத்தை விசுவாசிப்பவர்களுக்கு தேவன் இரட்சிப்பை கொடுக்கிறார் என்ற உறுதியை விளக்கும் நிலையில் இது செயல்படுகிறது. "முத்திரை" மற்றும் "அடையாளம்" என்ற இந்த வார்த்தைகள் ரோம 4:11-ல், தேவனுடைய நீதியை தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது கொண்ட விசுவாசத்தினாலே ஆபிரகாம் பெற்றதற்கு அடையாளமாக பழைய ஏற்பாட்டு சாக்ரமந்தான விருத்தசேதனம் இருந்ததைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது இந்த வார்த்தைகளை நாம் காண்கிறோம். சாக்ரமந்துகள் தேவனுடைய சுவிசேஷத்தின் வாக்குத்தத்தங்களை நமக்கு அதிகமதிகமாக உறுதிப்படுத்துகிறதாக இருக்கிறது. இவைகள் கர்த்தருடைய வார்த்தையில் நமக்குள்ள விசுவாசத்திற்கு அதிக உதவியாக இருக்கிறது.

"சுவிசேஷத்தின் வாக்குத்தத்தம்", கிறிஸ்துவின் செயலால் உண்டாகும் பாவ மன்னிப்பு மற்றும் நித்திய ஜீவனையும் குறித்து கேள்வியின் கடைசி பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. சாக்ரமந்துகளைக் குறித்த நம்முடைய கேள்விகளைப் படிக்கும்போது இந்த வாக்குத்தத்தத்தை அடிக்கடி நினைவு படுத்தப்படுவோம்.

**66-க்கான கேள்விகள்:**

1. சாக்ரமந்து என்ற வார்த்தை வேதத்தில் இல்லை என்றால் அதை நாம் பயன்படுத்த கூடாது. சரியா, தவறா? ....................
2. "சாக்ரமந்து", என்ற வார்த்தை எந்த மொழியிலிருந்து வருகிறது, அதன் அடிப்படை அர்த்தம் என்ன? ................................................................................................................................................
3. சாக்ரமந்துகள் நம்மை விசேஷித்த நிலையில் ...................................... நோக்கி நடத்துகிறது.
4. சாக்ரமந்தின் நான்கு உட்கருத்துகளை எழுது:
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
5. திருச்சபையில் சாக்ரமந்து பரிமாற்றத்தை செய்ய தகுதியுடையவர் யார்? ..................................................
6. சாக்ரமந்துகள் "அடையாளம்" என்று அழைக்கப்படுவது ஏன்? ...................................................................... ................................................................................................................................................
7. "முத்திரைகள்" என்று சாக்ரமந்துகள் அழைக்கப்படுகிறது, ஏனெனில்... அ)இவைகளை பெறும் அனைவரும் நிச்சயமாக இரட்சிக்கபடுவர், ஆ)தேவன் தமது ஜனங்களுக்கான மீட்பை இதில் உறுதிசெய்கிறார், இ)அவைகள் போதகர்களால் கொடுக்கப்படுவதால் ஆகும். எது சரி? ...........
8. சாக்ரமந்துகள் கிறிஸ்துவைக் குறித்து அதிக தகவல்களைச் சொல்லாவிட்டாலும், அவைகள் நமது விசுவாசத்திற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. சரியா, தவறா? ...................
9. இந்த கேள்வியில் உள்ள "இலவசமான கிருபை", தகுதியற்ற நமக்கு தேவன் கொடுக்கும் இரட்சிப்பை குறித்து சொல்கிறது. சரியா, தவறா? ...................
10. ரோமர் 4:11-ஐ எழுதுக:

**67. திருவசனம் மற்றும் சாக்கரமந்து ஆகிய இரண்டும், நாம் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழியான, கிறிஸ்துவின் சிலுவை தியாகத்திற்கு நேராக நம்முடைய விசுவாசத்தை நடத்தும்படியான உள்நோக்கம் கொண்டதா?**

ஆம், நம்முடைய முழு இரட்சிப்பும் கிறிஸ்து சிலுவையில் தன்னை பலியாகக் கொடுத்த ஒரே செயலினிமித்தமே என்று பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தில் நமக்கு போதித்து, சாக்ரமந்துகளின் மூலம் நமக்கு உறுதி செய்கிறார்.

***

திருசவனம் மற்றும் சாக்கரமந்துகள் ஆகிய இரண்டும், நம்முடைய இரட்சிப்பு கிறிஸ்துவினால் மட்டுமே என்று சேர்ந்து நமக்கு சுட்டிக்காட்டுகிறது. ஆனால், திருவசனம் முதன்மையானது, காரணம் திருவசனம் இல்லாத நிலையில் சாக்ரமந்துக்கு இடமேயில்லை. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல் மற்றும் சுவிசேஷம் கொடுக்கப்படுதல் ஆகிய இவ்விரண்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன என்பதை பின்வருமாறு அறியலாம்.

முதலாவது, அணுகுமுறையில் ஒரு வித்தியாசம் உண்டு: திருவசனம் செவிகளின் வழியாக நமக்குள் வருகிறது; சாக்ரமந்துகள் நமது கண்களின் வழியாக நமக்குள் வருகிறது. இரண்டாவது, இதனால் வரும் விளைவில் ஒரு மாற்றம் உள்ளது: நமது இருதயங்களில் விசுவாசத்தை உருவாக்கி அதை பெலப்படுத்துவதற்கு திருவசனம் பயன்படுத்தப் படுகிறது, சாக்ரமந்துகளோ நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துவதற்கு மட்டும் பயன்படுகிறது. மூன்றாவது, அவைகளைக் குறித்த தேவையில் வேறுபடுகிறது: இரட்சிப்பிற்கு மிகவும் இன்றியமையாததாக திருவசனம் இருக்கிறது, ஆனால் சாக்ரமந்து அப்படியல்ல.

சாக்ரமந்தை முதன்மைப்படுத்தி, திருவசனத்தை இரண்டாம் நிலைக்குத் தள்ளும் ரோமன் கத்தோலிக்க நிலைக்கு எதிராக சீர்திருத்த (ரிபார்ம்டு) விசுவாசம் இவைகளுக்கு இடையே உள்ள சரியான உறவைக் காண்கிறது. சாக்ரமந்துகளுக்கு நாம் அளவிற்கு மிஞ்சி இடம் கொடுக்கவும் கூடாது, அதே நேரத்தில் பாப்திஸ்து திருச்சபைகளைப் போல இவைகளை வெறும் சடங்குகளாகவும் பாவிக்க கூடாது.

திருவசனம் மற்றும் சாக்ரமந்துகள் மூலம் கிறிஸ்துவை நமக்கு கொண்டு வருவதற்கு பரிசுத்த ஆவியானவரின் அவசியத்தை கேட்டகிசம் நமக்கு முக்கியப்படுத்துகிறது என்பதை நாம் காண வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வலிமையான செயல் இல்லாத நிலையில் திருவசனப் பிரசங்கம் மற்றும் சாக்ரமந்துகளில் பங்குபெறுதல் நமக்கு எந்த நன்மையையும் தராது. பரிசுத்த ஆவியானவர் ஒருவர் மட்டுமே கிறிஸ்துவில் நாம் உண்மையான நம்பிக்கை கொள்ளவும், திருவசனம் மற்றும் சாக்ரமந்துகளினால் நாம் அவர்மீது பற்று வைக்கவும் செய்கிறார்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்கள். உங்களுடைய பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டதென்று தண்ணீர் போதிக்கிறது. உங்களுடைய ஞானஸ்நானம் நீங்கள் ஆண்டவருக்கு உடையவர்கள் என்ற உறுதியைக் கொடுக்கிறதா? பரிசுத்த ஆவியானவர்தாமே அந்த விசுவாசத்தை தருவாராக!

**67-க்கான கேள்விகள்:**

1. இந்த கேள்வி சாக்கரமந்துகளின் முக்கியத்துவம் குறித்த தவறான கருத்துகளை சரி செய்கிறது, எந்த சபை(கள்) அதை போதிக்கிறது? ..............................................................
2. கர்த்தருடைய வார்த்தை மற்றும் சாக்ரமந்து இரண்டும் சேர்ந்த நிலையில் பயன்படுத்தக் கூடாது. சரியா, தவறா? ...................
3. திருவசனம் மற்றும் .................................................... ஆகிய இரண்டும், நம்முடைய ...................................... .................................. மட்டுமே என்று சேர்ந்து நமக்கு ..............................................................
4. திருவசனம் மற்றும் சாக்ரமந்துகளை அணுக வேண்டியதில் இருக்கும் வித்தியாசம் என்ன? ..............................................................
5. கர்த்தருடைய வார்த்தை மற்றும் சாக்ரமந்து ஆகிய இரண்டுமே நம்முடைய இரட்சிப்புக்கு மிகவும் அவசியம். சரியா, தவறா? ....................
6. சிலர் திருவசனம் கேட்டும், சாக்ரமந்துகளை பயன்படுத்தியும் விசுவாசம் இல்லாதவர்களாக இருக்க காரணம் என்ன? ..............................................................
7. திருச்சபையின் அங்கத்தினர் என்ற உறுதி பெற்ற விசுவாசி, எப்போதெல்லாம் கர்த்தருடைய பந்தி அனுசரிக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் அதில் பங்கு கொள்ள வேண்டும். ஆம், இல்லை? ................, விளக்கு: ..............................................................
8. ஒரு குழந்தை ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தப்படும், நேரத்தில், கிறிஸ்துவின் ஒரே பலியில் அந்த குழந்தை விசுவாசத்தை பெற்றிருக்கும் என்று விசுவாசிக்கிறீர்களா? உண்டு என்று நம்புகிறீர்களா? ஆம், இல்லை? ................
9. சாக்ரமந்துகளை விசுவாசிகள் பெறும்போது... அ)வெளிப்படையான அடையாளத்தை, ஆ)தேவனுடைய கிருபை மற்றும் அடையாளத்தை, இ) அடையாளம் மற்றும் பெரும் தண்டனை...-ஐப் பெறுகின்றனர். எது? ................
10. மாற்கு 16:16-ஐ எழுதுக:

**68. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து ஏற்படுத்தியுள்ள சாக்ரமந்துகள் எத்தனை?**

பரிசுத்த ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து ஆகிய இரண்டும் ஆகும்.

***

சாக்ரமந்துகளின் உள்நோக்கம் என்ன என்பதை கேள்விகள் 65-67-ல் படித்த நாம், கிறிஸ்து தமது சபைக்காக ஏற்படுத்திய சாக்ரமந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதை கேள்வி 68-ல் நாம் காணலாம். அவைகள், இரண்டே இரண்டு மட்டும் ஆகும்.

இது குறித்த கேள்வி தேவையில்லாத ஒன்றாக இருக்கலாம், காரணம் நாம் நம்முடைய சீர்திருத்த சான்றோர்கள் போல ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறக்காததே ஆகும். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து கொடுத்த இரண்டு சாக்ரமந்துகளோடு மேலும் ஐந்து சாக்ரமந்துகளை ரோமன் கத்தோலிக்க திருச்சபை சேர்த்துக் கொண்டது. அவைகள்...

1. (Confirmation) உறுதிப்படுத்துதல் --இரட்சிப்புக்கான கிருபை சமய குரு கைகளை மேலே வைப்பதினால் உறுதிசெய்யப்படுதல்;

2. (Penance) பிராயச்சித்தம் --சமய குருவுக்கு முன் பாவத்தை அறிக்கை செய்து, செய்த பாவத்திற்காக தன்னைத்தானே வறுத்தி பாவத்திற்காக பரிகாரம் தேடுதல்;

3. (Holy Orders) பரிசுத்த ஆணைகள் -- குருமாரை சமையப்பணியில் அமர்த்தும் சடங்கு, அதனால் மதகுரு மாஸ் (அப்பம் மற்றும் திராட்சை இரசத்தை மாம்சம் மற்றும் இரத்தமாக மாற்றம் செய்வதற்கான) அதிகாரத்தைப் பெறுதல்.

4. (Marriage) திருமணம் --திருமணம் முடிக்கும் மணமக்களுக்கு மதகுரு விசேஷித்த கிருபைகளை வழங்குதல்.

5. (Extreme Unction) இறுதியான அபிஷேகம்: மரணத்தோடு இறுதி தருவாயில் போரடும் ஒருவரை பெலப்படுத்துவதற்கு மதகுரு எண்ணைப் பூசும் சடங்கு.

இவைகள் எல்லாவற்றிலும் மூடநம்பிக்கைகள் உண்டு; இந்த சாக்ரமந்துகள் அனைத்தும் நல்லதாகவே தெரிந்தாலும், அவைகள் யாவும் வேதாகமம் கூறாத நிலையில் மனிதனின் கண்டுபிடிப்புகளாக இருப்பதால் அச்செயல்கள் கண்டிக்கப்பட வேண்டும். திருச்சபை சீர்திருத்த சான்றோர்கள் திருவசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததால் ரோமின் இந்த ஐந்து சாக்ரமந்துகளை புறக்கணித்தனர். நம்மை திருவசனத்தின் சத்தியத்திற்கு நேராக நடத்திய இந்த பரிசுத்தவான்களுக்காக தேவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

இரண்டு சாக்ரமந்துகள் மட்டுமே என்று கூறும்போது, புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து ஆகிய இரண்டு சாக்ரமந்தும் பழைய ஏற்பாட்டின் விருத்தசேதனம் மற்றும் பஸ்கா சாக்ரமந்துக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டிருப்பதை அறிய வேண்டும். ஞானஸ்நானம் விருத்தசேதனத்தையும், திருவிருந்து பஸ்காவையும் மாற்றம் செய்கிறது. பழைய ஏற்பாட்டின் இவ்விரு சாக்ரமந்துகளும் இரத்தம் சிந்துவதை உள்ளடக்கியதாக வரப்போகும் கிறிஸ்து இரத்தம் சிந்தப்போவதை முன்குறிக்கும் நிலையில் இருந்தது. கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப் பட்டதினாலே, புதிய ஏற்பாட்டு சாக்ரமந்துகள் இரத்தம் சிந்தும் செயல்களை உள்ளடக்கவில்லை. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் சாக்ரமந்துகள் கிறிஸ்துவின் மரணத்தை சுட்டிக்காட்டும் நிலையில், விருத்தசேதனம் மற்றும் பஸ்கா நடக்கப்போகும் கிறிஸ்துவின் மரணத்தை சுட்டிக்காட்டியது, ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து நடந்துமுடிந்த கிறிஸ்துவின் மரணத்தை சுட்டிக் காட்டுகிறது.

**68-க்கான கேள்விகள்:**

1. இரண்டு சாக்ரமந்துகள் என்னவென்று அனைவருக்கும் தெரியும், ஆகவே கேள்வி 68 அவ்வளவு முக்கியமானது அல்ல. சரியா, தவறா? ....................
2. ரோமன் கத்தோலிக்க திருச்சபை கையாளும் சாக்ரமந்துகள் எத்தனை? ..................
3. (Confirmation) உறுதிப்படுத்துதல் சாக்ரமந்து இல்லையெனில் அது என்ன? ....................................
4. ரோமன் கத்தோலிக்கர்களின் கர்த்தருடைய பந்தியை ............................................................................................ ............................................................................................................................ என்று அழைக்கின்றனர்.
5. புதிய ஏற்பாட்டுடன் ரோமன் கத்தோலிக்கர்கள் இணைத்துள்ள சாக்ரமந்துகள் எத்தனை? ..........., அவைகள்... அ)வெறும் மூடநம்பிக்கை, ஆ)துன்மார்க்கமான கண்டுபிடிப்பு, இ)அறியாமையால் செய்யும் தவறுகள்..., எது? ...........
6. ரோமன் கத்தோலிக்கரின் கூடுதல் சாக்ரமந்துகள், வேதாகம சாக்ரமந்துகள் இல்லை வெறும் கிறிஸ்தவ சடங்குகள் என்று சொல்லலாமா? .........................., அவைகள் எவை? ............................................................................ ...................................................................................................................................................................
7. பின்வரும் வசனங்களை பழைய, புதிய ஏற்பாடுகளின் சாக்ரமந்துகளுடன் ஒப்பிட்டு எழுதவும்:
   அ. மத் 28:19 - விருத்தசேதனம்
   ஆ. ஆதியாகமம் 17:10,11 - கர்த்தருடைய பந்தி
   இ. 1கொரி 11:23-25 - ஞானஸ்நானம்
   ஈ. யாத்திராகமம் - பஸ்கா
8. பழைய ஏற்பாட்டின் சாக்ரமந்துகள்: .................................................................................................................
9. பழைய மற்றும் புதிய ஏற்பாட்டடின் சாக்ரமந்துகள் எதை சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளன? ................................................................................................................................................................... ...................................................................................................................................................................
10. 1கொரி 10:2-4 ஐ எழுதுக:

### 69. ஞானஸ்நானத்தினால் நீங்கள் கிறிஸ்துவின் ஒரே சிலுவை பலியில் பங்கெடுக்கிறீர்கள் என்பது எப்படி சுட்டிக்காட்டப்படுகிறது?

தண்ணீரினால் வெளிப்படையான சுத்திகரிப்பை கிறிஸ்து உருவாக்கி அதோடு அவர் கொடுத்த வாக்குத்தத்தம்: தண்ணீரினால் கழுவப்படும்போது பொதுவாக சரீரத்தின் அழுக்கு நீக்கப்படுவதுபோல,

சகல பாவங்களினால் கறைப்பட்ட என்னுடைய ஆத்துமாவும் அவருடைய பரிசுத்த இரத்தம் மற்றும் ஆவியினால் கழுவப்பட்டு நான் சுத்தரிகரிப்பட்டுள்ளேன் என்பதாகும்.

***

நாம் படிக்கும் முதல் சாக்ரமந்து, கேள்விகள் 69-74-ல் விளக்கப்பட்டுள்ள ஞானஸ்நானம் ஆகும். இந்த சாக்ரமந்துகளைக் குறித்த பாடத்தில், கேட்டகிசம் இரண்டு சாக்ரமந்துகளை விளக்க ஒரே வகையான கேள்விகளை முன்வைக்கிறது.

| | ஞானஸ்நானம் | திருவிருந்து |
|---|---|---|
| அடையாளச் சின்னம் | 69 | 75 |
| சாரம்/உண்மைப்பொருள் | 70 | 76 |
| நியமணம்/உருவாக்கம் | 71 | 77 |
| புறக்கணிக்கப்படும் ஒரு தவறு | 72 | 78; 80 |
| கொடுக்கப்படும் கிருபை | 73 | 79 |
| பங்குபெறுபவர்கள் | 74 | 811-82 |

ஞானஸ்நானத்தின் அடையாளம் கூறும் விளக்கத்தை கேள்வி 69-ல் காணலாம். சாக்ரமந்துகள் 1)வெளிப்படையான அடையாளம் மற்றும் 2)உள்ளான ஆசீர்வாதம் ஆகிய இரண்டையும் உடையதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் நமது பாவங்களற சுத்திகரிக்கப்படுவதே உள்ளான ஆசீர்வாதம் ஆகும்.

நடைமுறை வாழ்க்கையில் தண்ணீர் பலகாரணங்களுக்காக பயன்படுத்தப் படுகிறது, அதற்குரிய சுத்திகரிக்கும் திறன் முக்கியமான ஒன்று ஆகும். நம்மை சுத்திகரிக்க தினமும் தண்ணீரைப் பயன்படுத்துகிறோம். தண்ணீர் ஞானஸ்நானத்தை நம்முடைய பாவங்கள் சுத்திகரிக்கப்படுவதை சுட்டிக்காட்டும்படி கட்டளையிட்டார்.

சாக்ரமந்துகள் நமக்கு அடையாளமாக செயல்படுவதோடு (பாப்திஸ்துகள் இதை அடையாளம் மட்டும் என்கின்றனர்), தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் இது இணைக்கப் பெற்றுள்ளதாக இருக்கிறது. இரட்சிப்பிற்கான கிருபை இந்த சாக்ரமந்தோடு இணைக்கப்பட்டுள்ளது. மேலே உள்ள பதிலின்படி, “அவருடைய பரிசுத்த இரத்தம் மற்றும் ஆவியினால் நான் சுத்தரிகரிப்பட்டுள்ளேன்.” இப்படியாக, ஞானஸ்நானம் உள்ளாக ஏற்படும் ஒரு ஆசீர்வாதத்திற்கு முத்திரையாகவும், வெளிப்படையான ஓர் அடையாளமாகவும் செயல்படுகிறது. ஞானஸ்நானம் எடுக்காமல் இருப்பது, இரட்சிப்பிற்கான முத்திரையை பெறாமல் இருப்பதற்குச் சமம். உங்களுடைய ஆவிக்குரிய சுத்தமாக்கப்படுதலுக்கான அடையாளம் மற்றும் முத்திரைக்காக தேவனுக்கு நன்றி சொல்கின்றீர்களா?

அப்படியானால், ஞானஸ்நானம் எடுத்துள்ள ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவின் மரணத்தினால் பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பிக்கப்பட்டுள்ளான் என்று அர்த்தமா? இல்லை, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் எப்போதுமே ஞானஸ்நானத்தில் முற்றும் கழுவப்படுகிறவர்களாக இல்லாமல், அவர்கள் தங்கள் மரணத்திற்கு முன்பு வரை கழுவப்படுகிறார்கள், ஆனால் தேவனால் தெரிந்து கொள்ளப்படாதவர்கள் ஞானஸ்நானத்தின் வெளிப்படையான அடையாளத்தைப் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒருபோதும் கழுவப்பட்டவர்கள் அல்லவே.

ஞானஸ்நானத்தில் எவ்வளவு தண்ணீர் பயன்படுத்தப்பட வேண்டும்? சரீரம் முழுவதும் மூழ்கப்படும் அளவுக்குத் தொட்டிமுழுவதும் நிரம்பிய அளவு தண்ணீர் தேவை என்று பாப்திஸ்துகள் கூறுகின்றனர். சில சபைகள் தண்ணீரை ஊற்றுகின்றதைக் கையாள்கின்றனர். நாம் தெளிப்பதைக் கையாள்கிறோம். பழைய ஏற்பாட்டின் கழுவப்படுதல் வழக்கமாக தெளிக்கப்படுதல்களாகவே இருந்தது (லேவி 16:15,16; எண் 8:7; எசேக் 36:25), மேலும் எபிரே 9:13,14 மற்றும் 10:22 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் கழுவப்படுவதை தெளிக்கப்படுதல் என்று அழைக்கப்படுகிறது. ஞானஸ்நானத்தில் எவ்வளவு தண்ணீர் பயன்படுத்தப் படுகிறது என்பது முக்கியமல்ல, மாறாக தண்ணீர் ஞானஸ்நானம் கூறும் அர்த்தம், “கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் ஆத்துமா சுத்திகரிக்கப்படுதல்” முக்கியம் ஆகும்.

**69-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 69, .......................................... அடையாளத்தை விளக்குவது போல, கேள்வி ............ திரு....................., ..........................................-ஐ விளக்குகிறது.
2. சாக்ரமந்துகளுக்கான கேட்டகிச விளக்கம் ஒரு ஒப்புமைபடுத்தும் விளக்கமுறையைக் கொண்டதாக இருக்கிறது. சரியா, தவறா? .....................
3. சாக்ரமந்து இரு பகுதிகளை உடையதாக இருக்கிறது, அவைகள் யாவை?
   அ.
   ஆ.

4. ஞானஸ்நான தண்ணீரினால் கழுவப்படுவது எதற்கு மாதிரியாகக் கூறப்பட்டுள்ளது? .................................
.................................................................................................................................................
5. ஞானஸ்நானத்தில் தண்ணீர் பயன்படுத்தப்படும் மூன்று முறைகள் யாவை?
அ.
ஆ.
இ.
6. தெளிப்பு ஞானஸ்நானம் மட்டுமே சரியான வேதாகம முறை என்பதற்கான வேதாகம குறிப்புகளைத் தருக: .................................................................................................................................
7. தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு, ஞானஸ்நானம் கொடுக்கும் தேவனுடைய வாக்குத்தத்தம் என்ன? .................................................................................................................................................
.................................................................................................................................................
8. ஞானஸ்நானம் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் ஆகிய இருவருக்கும் ஒரே அர்த்தத்தையே தருகிறது. சரியா, தவறா? .................., விளக்கம்: .................................................................................................
.................................................................................................................................................
9. ஞானஸ்நானம் எடுக்கும் அனைவரும் உண்மையாகவே கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்கள் ஆவர். சரியா, தவறா? ..................
10. 1பேதுரு 3:21-ஐ எழுதவும்:

**70. கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் கழுவப்படுதல் என்றால் என்ன?**

சிலுவையில் நமக்காக கிறிஸ்து தன்னை பலியாகக் கொடுத்து சிந்திய இரத்தத்தினிமித்தம் கிருபையினால் தேவனிடமிருந்து பாவமன்னிப்பை பெற்று; மேலும் மேலும் பாவத்திற்குச் செத்து, குற்றம் சாற்றப்பட முடியாத பரிசுத்த வாழ்க்கை வாழ பரிசுத்த ஆவியினால் புதிதாக்கப்பட்டு, கிறிஸ்துவின் அங்கமாக சுத்திகரிக்கப்படுதல் ஆகும்.

***

தண்ணீரினால் ஆகும் புறம்பான சுத்திகரிப்பு கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் உள்ளாகக் கழுவப்படுதலுக்கான அடையாளம் என்பதை முன்பு உள்ள கேள்வியில் பார்த்த நாம், இப்போது உள்ளாகக் கழுவப்படுதலைக் குறித்த தெளிவான விளக்கத்தை காணலாம். ஞானஸ்நானத்தின் சாரம்/உண்மைப்பொருள் அல்லது ஆவிக்குரிய அர்த்தத்தை கேள்வி 70 நமக்கு விளக்குகிறது.

இரட்சிப்பின் கழுவப்படுதல் இருவகையான காரியங்களை உள்ளடக்கியதாகும்: 1)கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுதல், 2)கிறிஸ்துவின் ஆவியினால் கழுவப்படுதல். இந்த இருவகை கழுவப்படுதலின் அர்த்தம் என்ன?

1. “கிறிஸ்துவின் இரத்தம்”, என்பது, கேட்டகிசம் பலமுறை கூறுவது போல, நம்முடைய பாவங்களுக்கான கிறிஸ்துவின் பரிகாரபலியான மரணத்தைக் குறிக்கிறது. அவருடைய வாழ்வு நம்முடைய வாழ்வுக்கும், அவருடைய மரணம் நம்முடைய மரணத்திற்கும் ஈடாக்கப்பட்டது. நம்முடைய பாவத்திற்கான குற்றம் அவர்மீது சுமத்தப்பட்டது, நம்மீது வரவேண்டிய தேவனுடைய சாபம் அவர்மீது வந்தது. தமது மரணத்தினால் கிறிஸ்து நமக்கு ஜீவனையும், இரட்சிப்பையும் சாம்பாதித்தார். இரட்சகரின் இரத்தத்தால் (பரிகாரபலி மரணத்தால்) நம்முடைய பாவம் (குற்றம்) கழுவப்பட்டது (மன்னிக்கப்பட்டது).

2. “கிறிஸ்துவின் ஆவியினால் கழுவப்படுதல்”, இந்த இரண்டாம் நிலை சுத்திகரிப்பு இல்லாத நிலையில் தனிப்பட்ட நிலையில் இரத்தத்தால் கழுவப்படுதல் சாத்தியமல்ல. கிறிஸ்துவின் ஆவியினால் கழுவப்படுதல் இருநிலைகளை உடையாதாக இருக்கிறது: “புதுப்பிக்கப்படுதல் மற்றும் மறுபிறப்படைதல்”, (யோவா 3:3; தீத் 3:5) என்ற நம்முடைய சாயல் புதுப்பிக்கப்படுதல் முதல் நிலையாகும். “மறுபடியும் பிறத்தல்” என்பதை கேள்வி 8 விளக்குகிறது, உண்மையான விசுவாசத்தைக் கொடுத்து, “கிறிஸ்துவிலும், அவருடைய எல்லா நன்மைகளிலும் நாம் பங்குபெறுவதை” பரிசுத்த ஆவியானவர் செய்கிறார் என்பதை கேள்வி 53 விளக்குகிறது. புதிய பிறப்பானது நமக்குள் கண்ணிமைக்கும் நேரத்தில் நடைபெறுகிறது, அது மீண்டும் ஒருபோதும் நடைபெறுவது கிடையாது. ஆவியானவர் நம்மை சுத்திகரிக்கும் செயலின் இரண்டாம் நிலை வளரும் பரிசுத்தமாக்கப்படுதல், அதாவது விசுவாசிகள் தொடர்ந்து கழுவப்பட்டு, “மேலும் மேலும் பாவத்திற்குச் செத்து, குற்றம் சாற்றப்பட முடியாத பரிசுத்த வாழ்க்கை வாழ” தேவையான வல்லமை பெறுதல் ஆகும் (எசே 36:25-27; 1பேது 1:2). ஆவியின் இருவகை பரிசுத்தமாக்குதல் கிறிஸ்துவின் மரணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதைக் கவனிக்கவும்.

உங்களின் ஞானஸ்நானம் கிறிஸ்துவின் மரணத்தினால் உங்களின் பாவம் மன்னிக்கப்பட்டு, உங்கள் இருதயம் கிறிஸ்துவின் ஆவியினால் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதை போதிக்கிறதா? உங்கள் ஜீவியமும் நீங்கள் இரண்டுவித சுத்திகரிப்பை உடையவர்களாக இருக்கின்றீர்கள் என்பதைக் காண்பிக்கிறதா?

**70-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 70 நமக்கு ............................................................ என்ன என்பதை விளக்குகிறது.

2. ஞானஸ்நானம் என்பது சரீரம் மற்றும் ஆத்துமா சுத்திகரிப்பை பற்றி போதிக்கிறது. சரியா, தவறா? ....................
3. இரண்டு வகையான சுத்திகரிப்பும் கிறிஸ்துவைச் சேர்ந்ததாக இருக்கிறது, அவ்விரு சுத்திகரிப்புகள் எவை? அ)..............................................................................., ஆ)..................................................................................
4. "கிறிஸ்துவின் இரத்தம்" என்ற கருத்து கூறுவது என்ன? .............................................................................. ..................................................................................................................................................................
5. நமக்கு மட்டுமே சொந்தமான இரண்டு காரியங்களை கிறிஸ்து தன்மீது ஏற்றுக் கொண்டார், அவைகள் யாவை? அ........................................................, ஆ..........................................................................
6. கிறிஸ்துவின் ஆவியினால் சுத்திகரிக்கப்படுதல் என்பது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சீர்கெட்ட இருதயத்தை சுத்திகரிப்பதையே குறிக்கிறது. சரியா, தவறா? ....................
7. கிறிஸ்துவின் ஆவியிடமிருந்து ஒரு கிறிஸ்தவ விசுவாசி பெறும் இருவகை இருதயப் பரிசுத்தமாக்கப்படுதல் எவை? அ. ..........................................................................................................
ஆ ..........................................................................................................................................................
8. நாம் மன்னிக்கப்பட முடியும், நம்மிடம்... அ)கிறிஸ்துவின் ஆவியில்லாமல், இரத்தம் இருந்தால் போதும், ஆ)பரிசுத்த ஆவியானவர் இருந்து, இரத்தம் இல்லாவிட்டல், இ)கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியானவர் இரண்டும் இருந்தால், ஈ)இவைகளில் எதுவும் இல்லாவிட்டால்... எது? ..........
9. பின்வருபவைகளை பொருத்துக:

| | | |
|---|---|---|
| கிறிஸ்துவின் இரத்தம் | - | நம்முடைய ஆத்துமாவின் நிலை |
| மறுபிறப்பு | - | ஞானஸ்நானத்தின் சாரம் |
| சீர்கெட்ட | - | பலியான தியாக மரணம் |
| பரிசுத்தமாக்கப்படுதல் | - | புதிய பிறப்பு |
| கேள்வி 70 | - | பாவத்திற்கு மரித்து, பரிசுத்ததத்தில் வாழ்வதல் |

10. தீத்து 3:5-6ஐ எழுதவும்:

**71. ஞானஸ்நான தண்ணீரால் நாம் கழுவப்படும்போது நிச்சயமாகவே அவருடைய இரத்தம் மற்றும் ஆவியினால் கழுவப்பட்டுள்ளோம் என்று கிறிஸ்து எங்கே நமக்கு வாக்கு செய்துள்ளார்?**

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்...", "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று கூறி ஞானஸ்நானத்தை நிலைநாட்டின போது ஆகும். ஞானஸ்நானத்தை பாவத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் புதிய பிறப்பின் சுத்திகரிப்பு என்று திருவசனம் எங்கு கூறுகிறதோ அங்கே இந்த வாக்குத்தத்தம் மீண்டும் கூறப்படுகிறது.

***

ஞானஸ்நானத்தை நிறைவேற்றுவதற்கான கட்டளை மற்றும் வேதாகம அதிகாரம் சார்ந்த விளக்கத்தை கேள்வி 71-ல் காணலாம். நாம் ஏற்கனவே கற்றுக் கொண்டதுபோல சாக்ரமந்துகள் "தேவனால், முக்கியமாக கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவைகள்", (கேள்வி 66) ஆகும். ஞானஸ்நானம் தேவனால் கட்டளையிடப்பட்டவைகள் என்பதை நிரூபிக்க வேதாகமம் கூறும் நான்கு வசன ஆதாரங்களை இந்த கேள்வியில் நாம் காணலாம்.

1. *மத்தேயு* 28:18-20, கிறிஸ்து பரம் ஏறுவதற்கு சற்று முன்பு அவருடைய திருச்சபைக்கு கொடுத்த (Great Commission) "பிரதான கட்டளை"-யை நமக்குத் தருகிறது. இந்தக் கட்டளையின்படி, திருச்சபையானது (அ)எல்லா தேசத்தாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து (மனித இனத்தின் எல்ல தரப்பினரையும் மனமாற்றம் செய்ய வேண்டும்), (ஆ) மனமாற்றம் பெற்ற அனைவருக்கும் திரியேக (பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய) தேவனின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்து, (இ)ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்து கட்டளையிட்ட அனைத்தையும் தொடர்ந்து போதிக்க வேண்டும்.

யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களும் ஞானஸ்நானம் கொடுத்து வந்தும், பிரதான கட்டளையில்தான் கட்டளையிடப்பட்ட திரியேக தேவனின் நாமத்தினால் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தை நாம் காண்கிறோம். திரியேக தேவன் நம்முடன் ஏற்படும் கிருபையின் உடன்படிக்கைக்கு அடையாளமாகவும், முத்திரையாகவும் ஞானஸ்நானம் விளங்குகிறது. இந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதி, முக்கியமாக கேட்டகிசம் முக்கியப்படுத்திக் கூறுவதுபோல, கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் நாம் கழுவப்படுவது ஆகும்.

2. *மாற்கு* 16:16, இந்த வசனமும் (Great Commission) "பிரதான கட்டளை"-யின் ஒரு பகுதியாக இருந்து, விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும் ஒருவருக்கு இரட்சிப்பின் உடன்படிக்கையை அறிவுறுத்துகிறது. கிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டுள்ளதாக அறிவிப்பவர்களால் மட்டுமே ஞானஸ்நானத்தைப் பெறமுடியும் என்பதைக் கவனிக்கவும். இருப்பினும் ஞானஸ்நானம் இல்லாததால் அல்ல, விசுவாசம் இல்லாத நிலையில் ஞானஸ்நானம் பெறுவது நரக தண்டனையில் முடிகிறது, அதே நேரத்தில் ஒருவருக்கு ஞானஸ்நானம்

எடுப்பதற்கான வாய்ப்பு இருந்தும், அதைத் தவறவிடும்போது, அவருக்கு விசுவாசமே இல்லை என்பது தெரியவருகிறது.

3. *தீத்து* 3:5, இந்த வசனமும், "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும் (புதிய பிறப்பு) , பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்தார்" என்று சொல்கிறது. கேட்டகிசத்தை எழுதியவர்கள் இந்த வசனம் ஞானஸ்நானத்தை குறிக்கிறது என்று நினைத்தார்கள். ஆனால் தண்ணீர் ஞானஸ்நானம் மறைமுகமாக உள்ளடங்கி இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் மறுஜென்ம முழுக்கினால் இருதயத்தைப் பரிசுத்தப்படுத்தும் ஆவிக்குரிய சுத்திகரிப்பை இந்த வசனம் கூறுகிறது. இவர்களின் அறிக்கை ஞானஸ்நானத்தினால் மறுபடியும் பிறத்தல் என்ற அர்த்தம் கொடுப்பதுபோல இருப்பினும், அவர்கள் அப்படி அர்த்தம் கொடுக்கவில்லை. இந்த வசனத்திற்கான கால்வினின் கருத்து மிகவும் சரியானதாக இருக்கிறது: "கர்த்தருடைய ஆவி நம்மை மறுபடியும் பிறக்கச் செய்து, புது சிருஷ்டியாக மாற்றுகிறது; அவருடைய கிருபை கண்களால் காணப்பட முடியாத நிலையில் மறைந்து இருப்பதால், கண்களால் காணப்படக் கூடிய ஒரு அடையாளம் ஞானஸ்நானத்தில் காணப்பட வேண்டும்."

4. *அப்போஸ்தலர்* 22:16, இந்த வசனம் இரட்சிப்பை அடைந்த பவுலிடம் அனனியா கூறியது. இது ஞானஸ்நானத்தின் அர்த்தத்தை போதிக்கிறது: இது இருதயத்தின் சுத்திகரிப்புக்கு அடையாளமாகவும், முத்திரையாகவும் இருக்கிறது. இங்கே "தேவனுடைய நாமத்தைத் தொழுது கொள்வது" என்பது சுத்திகரிக்கப்படுதலை குறிக்கிறது. இந்த சுத்திகரிப்பு, அடுத்த கேள்வி போதிப்பது போல, அது வெளிப்புறமான தண்ணீரால் அல்ல.

இந்த வசனங்கள் எல்லாம் வயதான, மனம்திரும்பிய பெரியவர்களைக் குறித்து சொல்லும் வசனங்கள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது அப்படியல்ல என்பதை கேள்வி 74-ல் காணலாம்.

**71-க்கான கேள்விகள்:**

1. ஞானஸ்நானம் "ஏற்படுத்தப்படுதல்",... அ)திருச்சபையின் வழக்கமான செயல், ஆ)திருவசனத்தின் அதிகாரம், இ)ஞானஸ்நானத்தின் தண்ணீர், என்று அர்த்தம். எது சரி?...........
2. இந்த கேள்வியில் பயன்படுத்தப்பட்டுள்ள நான்கு வசனங்களுமே தண்ணீர் ஞானஸ்நானத்தை மட்டும் போதிக்கிறது. சரியா, தவறா?. ....................
3. பின்வரும் சொற்றொடர்களில் சரியானவற்றை குறிப்பிடுக:
   அ. மலைப்பிரசங்கம் "பிரதான அழைப்பு" ஆகும் ...........
   ஆ. நாம் கிறிஸ்தவ ஞானஸ்நானம் கொடுப்பது போல யோவான் ஸ்நானகன் கொடுக்கவில்லை. ..........
   இ. ஞானஸ்நானம் கிருபையின் உடன்படிக்கைக்கான அடையாளமாகவும், முத்திரையாகவும் இருக்கிறது........
   ஈ. நம்முடைய ஆண்டவர் மரிப்பதற்கு சற்று முன்னர் "பிரதான கட்டளை" கொடுக்கப்பட்டது. ..........
4. ஞானஸ்நானம் எந்த நாமத்தினால் இருக்க வேண்டும்? ....................................................................................
5. ஒருவர் ஞானஸ்நானம் எடுக்கவில்லை என்றால் அவர் நரகாக்கினைக்கு உட்படுத்தப்படுவார் என்று மாற்கு 16:16 போதிக்கிறது. சரியா, தவறா? ..................
6. கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லியும், ஞானஸ்நானம் எடுத்து கிறிஸ்துவின் சபையில் அங்கமாக மறுக்கும் ஒருவரின் விசுவாசம் குறித்து என்ன? .............................................................................
   ..........................................................................................................................................................................
7. அப்போ 22:6-ன்படி, அனனியா பவுலிடம் பாவங்கள் யாவும் கழுவப்பட ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்று சொன்னார். சரியா, தவறா? ..................
8. தீத்து 3:5... அ)கிறிஸ்தவ ஞானஸ்நானத்தை குறித்து எதையும் சொல்லவில்லை, ஆ)தண்ணீர் ஞானஸ்நானத்தை குறித்து மட்டும் பேசுகிறது, இ)இருதயம் சுத்திகரிக்கப்படுவதை குறிக்கும் ஞானஸ்நானத்தையும் சேர்த்து... ஆகும். எது? .........
9. மாற்கு 16:16 மனம்திரும்பிய விசுவாசிகள் மட்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும், குழந்தைகள் அல்ல, என்று போதிக்கிறது. சரியா, தவறா? ..................
10. மத்தே 28:19-ஐ எழுதுக:

**72. அப்படியானால் தண்ணீரால் புறம்பாகக் கழுவப்படுதலே பாவங்கள் கழுவப்படுதல் ஆகுமா?**

இல்லை, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே எல்லா பாவங்களிலுமிருந்தும் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம்.

***

ரோமன் கத்தோலிக்க மற்றும் லூத்தரன் சபைகள் கொண்டுள்ள ஒரு தவறை, கேள்வி 72 சுட்டிக்காட்டி புறக்கணிக்கிறது. ஞானஸ்நானத்தின் போது ஒருவருடைய ஆத்துமா தானாகவே சுத்திகரிக்கப்படுகிறது என்பது தவறான போதனையாகும். பரிசுத்த ஞானஸ்நான தண்ணீரில் சுத்திகரிப்புக்கான ஆவிக்குரிய வல்லமை உண்டு என்றும், தேவனுடைய கிருபையை ஞானஸ்நானம் பெறும் ஒருவர் தடைசெய்யாதபோது அது வேலை செய்கிறது என்றும் ரோமன் கத்தோலிக்கர்கள் போதிக்கின்றனர்.

லூத்தரன்கள் அந்த அளவிற்கு புறம்பான அர்த்தம் தருவதாக இல்லாமல், விசுவாசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இருப்பினும், லூத்தரும் சாக்ரமந்துகள் தன்னில்தானே பரிசுத்த வல்லமையுடையதாக இருக்கிறது என்று போதித்தார். அவருடைய கேட்டகிசம் ஒன்றில், “விசுவாசிக்கும் அனைவருக்கும் பாவத்தின் மன்னிப்பை கொடுத்து, மரணம் மற்றும் சாத்தானிடமிருந்து விடுவித்து, நித்திய இரட்சிப்பை ஞானஸ்நானம் தருகிறது” என்று எழுதினார். மறுபடியும், “ஞானஸ்நானம் கிருபையின் ஜீவதண்ணீர் மற்றும் மறுஜென்ம முழுக்கு” என்றும் எழுதினார் (லூத்தரின் சிறிய கேட்டகிசம்).

ஞானஸ்நானத்தைக் குறித்த திருவசனம் -- சீர்திருத்த (ரிபார்ம்டு) போதனையானது: ஆத்துமா சுத்திகரிக்கப்படுதல் என்பது மறுபிறப்படைதலில் கிறிஸ்துவின் இரத்தம் (அவருடைய மரணம்) மற்றும் கிறிஸ்துவின் ஆவியினால் மட்டுமே, மேலும் அந்த கழுவுதல் தண்ணீர் ஞானஸ்நானத்தின் செயலோடு கட்டப்பட்டது அல்ல. மாறாக, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மறுபிறப்பு என்பது ஞானஸ்நானத்திற்கு முன்பு, அந்த நேரத்தில் அல்லது அதற்கு பின்பு அல்லது ஞானஸ்நானத்தை சாராத நிலையில், பரிசுத்த ஆவியானவரின் நோக்கம் மற்றும் செயலைச் சார்ந்த நிலையில் கொடுக்கப்படும் ஒன்று ஆகும். சாக்ரமந்துகளில், தன்னில்தானே இரட்சிக்கும் வல்லமை இல்லை.

இந்த நாட்களில், தங்களை “கிறிஸ்துவின் சீஷர்கள்” அல்லது “கிறிஸ்துவின் சபையார்” என்று அழைப்பவர்கள் ரோமன் கத்தோலிக்கர்களைப் போல “Baptismal Regeneration - ஞானஸ்நான மறுபிறப்பு”-ஐ போதிக்கின்றனர். அதாவது, ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்ற கட்டளைக்கு கீழ்ப்படியும் ஒருவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது என்பதாகும். ஆனால் உண்மை என்னவெனில், நமது இருதயங்கள் பாவத்தின் வலிமையிலிருந்து கர்த்தருடைய வார்த்தையின் மூலம் பரிசுத்த ஆவியானவரால் சுத்திகரிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் மரணத்தில் நாம் விசுவாசம் வைக்கும்போது, நம்முடைய பாவத்தின் குற்றமனப்பான்மை மற்றும் தண்டனை நம்மை விட்டு நீக்கப்படுகிறது (கேள்வி 70-ஐ மீண்டும் வாசிக்க). தண்ணீர் ஞானஸ்நானம் நம்முடைய ஆவிக்குரிய சுத்திகரிப்பிற்கான அடையாளமாகவும், முத்திரையாகவும் இருக்கிறது, இந்த தண்ணீர் நமது சரீரத்தில் படும்போதுதான் நடக்க வேண்டும் என்று அவசியமல்ல.

**72-க்கான கேள்விகள்:**

1. நம்முடைய கேட்டகிசத்தின் இந்த கேள்வி ......................................................, ...................................................... ஆகியோரின் தவறான போதனையை புறக்கணிக்கிறது.
2. மற்ற திருச்சபையார் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டுவது கிறிஸ்தவ பண்பு இல்லை, ஆகவே அப்படி செய்யக் கூடாது. சரியா, தவறா? ..................
3. ஞானஸ்நானம் தானாகவே பாவங்களை கழுவுகிறது என்று கூறும் சபைகளை கோடிட்டு காட்டு: பாப்திஸ்து, ரோமன் கத்தோலிக்க, பிரஸ்பிடீரியன், ரிபார்ம்டு, லூத்தரன், கிறிஸ்துவின் சபை...
4. ஒரு குழந்தை ஞானஸ்நானம் எடுக்கும்போது மறுபிறப்பை அனுபவிக்கிறது என்று ரோமன் கத்தோலிக்க மற்றும் லூத்தரன் திருச்சபைகள் போதிக்கிறது. சரியா, தவறா? .................
5. நம்முடைய இருதயத்தை பரிசுத்த ஆவியானவர், ஞானஸ்நானத்திற்கு... அ)முன்பு, ஆ)எடுக்கும்போது, இ)பின்பு ... சுத்தம் செய்ய முடியும். எது? ..........
6. பூர்த்தி செய்த ..................................................................... இரத்தம் மற்றும் ........................................... மட்டுமே ........................................................................................................ சுத்திகரிக்கப்படுகிறோம்.
7. மறுபடியும் பிறத்தல் மற்றும் ஞானஸ்நானத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. சரியா, தவறா? ......................, விளக்கம்: ........................................................................................................................................ ...............................................................................................................................................................
8. “கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் கிறிஸ்துவின் ஆவியினால் சுத்திகரிப்பு”- குறித்து எந்த கேள்வி தெளிவான விளக்கம் தருகிறது.
9. ஆவியினால் சுத்திகரிக்கப்படுவது, இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுவது, இவற்றில் உங்களுடைய ஆத்துமாவில் எது முதலாவது வருகிறது. ..........................................................................................., விளக்கம்: ...............................................................................................................................................................
10. அப்போ 10:44&47-ஐ எழுதுக.

**73. ஞானஸ்நானத்தை மறுபிறப்புக்கான கழுவுதல் மற்றும் பாவத்திலிருந்து கழுவப்படுதல் என்று பரிசுத்த ஆவியானவர் அழைப்பது ஏன்?**

சரீரத்தின் அழுக்கு தண்ணீரால் நீக்கப்படுவதுபோல, கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் நம்முடைய பாவங்கள் நீக்கப்படுகிறது என்பதை பெரிய காரணத்துடன் போதிப்பதோடு மட்டுமல்லாமல்; இந்த தெய்வீக உறுதிப்பாடு மற்றும் நினைவுச் சின்னத்தால், தண்ணீரால் நம்முடைய சரீரங்கள் கழுவப்படுவதுபோல நமது பாவத்திலிருந்து ஆவிக்குரியவிதமாக நாம் கழுவப்பட்டுள்ளோம் என்பதை அவர் நமக்கு உறுதி செய்கிறார்.

***

கேள்வி 72-ல் நாம் பார்த்ததுபோல, தண்ணீர் ஞானஸ்நானத்தினால் நம்முடைய பாவங்கள் உண்மையாகவே கழுவப்படுகிறது என்பது தவறு. தண்ணீர் ஞானஸ்நானத்தை மிகவும் அற்பமாகவோ அல்லது முக்கியமானது அல்லவென்றோ நாம் நினைக்க கூடாது என்பதை கேட்டகிசம் நமக்கு நினைவு படுத்துகிறது. உறுதிப்பாட்டின் கிருபையானது பரிசுத்த ஞானஸ்நானத்தில் கொடுக்கப்படுகிறது.

ஞானஸ்நான சாக்ரமந்துக்கும், கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் நம்முடைய ஆத்துமா கழுவப்படுவதற்கும் இடையே ஆவிக்குரிய நெருங்கிய தொடர்பை கர்த்தர் உருவாக்கியுள்ளார். இந்தக் கேள்வி கிட்டத்தட்ட 69வது கேள்வியைப் போலவே இருக்கும். இரண்டு கேள்விகளுமே இரட்சிப்பதற்கான தேவனுடைய "வாக்குத்தத்தம்", "உறுதிமொழி" மற்றும் "நினைவுச் சின்னம்" ஆகியவை இந்த சாக்ரமந்தில் பெறப்படுகிறது என்பதை முக்கியப்படுத்திக் கூறுகிறது.

ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்காவிட்டாலும், "நம்முடைய பாவங்களிலிருந்து நாம் கழுவப்பட்டோம்" என்பதை நமக்கு உறுதிப்படுத்த பரிசுத்த ஆவியானவர் இதை பயன்படுத்துகிறார். புறம்பான சுத்திகரிப்பை உள்ளான சுத்திகரிப்பாக வேதம் அடிக்கடி பேசி ஞானஸ்நானத்தை இரட்சிப்புக்கு மிகவும் நெருக்கமானதாகக் காண்பிக்கிறது. அப்போ 2:38 சொல்கிறது, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்". அப்போ 22:16 சொல்கிறது, "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெறு". 1பேதுரு 3:21 சொல்கிறது, "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." நம்மை இரட்சிப்பது கிறிஸ்து மட்டுமே, தண்ணீர் அல்ல என்பதைக் கவனிக்கவும்; ஆனாலும் தண்ணீர் நம்முடைய இரட்சகரால் அவரின் இரட்சிக்கும் கிருபைக்கு அடையாளமாகவும், முத்திரையாகவும் கட்டளையிடப்பட்டுள்ளது.

ஆகவே, ஞானஸ்நானம் நமக்கு அவசியம், கிறிஸ்து மட்டுமே நம்முடைய பாவங்களைக் கழுவ முடியும் என்பதற்கு அடையாளமாக இருந்து நமக்குப் போதிக்கிறது; நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவால் கழுவப்பட்டுள்ளது என்பதற்கு முத்திரையாக இருந்து நமக்கு உறுதிப்படுத்துகிறது.

தண்ணீர் ஞானஸ்நானம் என்பது வேதாகம கடமை, இதைப் புறக்கணிக்கும் ஒருவர், தேவனுக்கு கீழ்ப்படியாத பாவத்திற்கு உள்ளாகிறார். அதே நேரத்தில் பாப்திஸ்து கிறிஸ்தவர்கள் தங்களின் உடன்படிக்கையின் குழந்தைகளுக்கு இந்த சாக்ரமந்தை கொடுக்க மறுப்பது, அவர்கள் விரும்பி தேவனுக்கு கீழ்ப்படியாமற் போகிறார்கள் என்று அர்த்தமல்ல, மாறாக அது அவர்களின் நம்பிக்கையை சார்ந்ததாகும். ஆகவே, நாம் அவர்களின் இருதயத்தை நியாயம் தீர்க்காதிருப்போம்.

விசுவாசிகளின் குழந்தைகள் ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தலாமா? நமது அடுத்த கேள்வி இதற்கான பதிலை சொல்கிறது.

**73-க்கான கேள்வி:**

1. தண்ணீர் ஞானஸ்நானம் நம்முடைய ஆத்துமாவை கழுவாததால் அது முக்கியமானதல்ல. சரியா, தவறா? .................
2. இந்த 73-வது கேள்வியைப் போல் இருக்கும் மற்றொரு கேள்வி? ..........., அவைகள் இரண்டும் முக்கியப் படுத்தும் செய்தி என்ன? ...........................................................................................................................................................................................................................
3. புறம்பான சுத்திகரிப்பு இரட்சிப்பின் உள்ளான சுத்திகரிப்புக்கும் மிகவும் நெருங்கிய ஆவிக்குரிய தொடர்பைக் குறித்து (எல்லா வசனத்தின் ஆக்கியோனாகிய) பரிசுத்த ஆவியானவர் கூறுவதற்கான மூன்று வசனக் குறிப்புகளைத் தருக: .......................................................................
4. இந்த வசனங்களில் யார் மற்றும் என்ன பாவத்தை கழுகிறார்கள் என்பதை (சரியான சொற்றொடருடன்) குறிப்பிடுக: அ)......................................................................, ஆ) ......................................................, இ)...........................................................................................
5. ஞானஸ்நானம் ஒரு உருவக எடுத்துக்காட்டு, ஆகவே வெறும் தண்ணீர் நம்முடைய பாவங்களை கழுவாது என்று பேதுரு கூறுகின்றார். சரியா, தவறா? .................
6. தண்ணீர் நம்முடைய இரட்சகரால் ................................. கிருபைக்கு ................................., ..................................................... கட்டளையிடப்பட்டுள்ளது.
7. இந்த கேள்விகள் நாம் பாவத்திலிருந்து .............................................................. மற்றும் ................................................... சுத்திகரிகப்படுகிறோம் என்று போதிக்கிறது.
8. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது .................................... , இதைப் புறக்கணிக்கும் ஒருவர், .................. ....................................................... உள்ளாகிறார்.
9. விசுவாசிகள் தங்கள் உடன்படிக்கையின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மறுக்கும் பாப்திஸ்துகளை தேவன் தண்டிப்பார். ஆம், இல்லை: ...................., விளக்கம்: ......................................................................................................................................................................
10. எசேக்கி 36:25-ஐ எழுதுக:

**74. குழந்தைகளும் ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டுமா?**

ஆம், தேவனுடைய ஜனங்களும் அவர்களின் குழந்தைகளும் உடன்படிக்கைக்குச் சொந்தமானவர்கள் ஆவர்; கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் மீட்பு மற்றும் விசுவாசத்தை செயல்படுத்தும் பரிசுத்த ஆவியானவரும் அவர்களின் பெற்றோரைக் காட்டிலும் எந்தவிதத்திலும் குறைவாக அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்படாததால், உடன்படிக்கையின் அடையாளமாக, அவர்கள் ஞானஸ்நானத்தினால் கிறிஸ்தவ திருச்சபையுடன் சேர்த்திணைக்கப்பட்டு, அவிசுவாசிகளின் குழந்தைகளிடமிருந்து வேறுபடுத்திக் கண்டறியும் விதத்தில், பழைய ஏற்பாட்டில் விருத்த சேதனம் பயன்படுத்தப்பட்டது போல, புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

***

ஞானஸ்நானத்தைக் குறித்த பகுதியை இந்த கேள்வி 74-கோடு முடிக்கிறோம். இந்தக் கடைசி கேள்வியில் ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தப்படுபவர்கள் யார் என்பது நமக்கு சொல்லப்படுகிறது. இது மிகவும் முக்கியமான கேள்வி, காரணம் இரட்சிப்பின் அடையாளம் மற்றும் முத்திரையான ஞானஸ்நானம் கிறிஸ்தவ பெற்றோர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படுவதைக் குறித்து விளக்குகிறது. ஞானஸ்நானத்தைக் குறித்து ரோமன் கத்தோலிக்கர் மற்றும் லூத்தரன் சபைகள் கொண்டுள்ள தவறை கேள்வி 72 திருத்துவது போல இந்தக் கேள்வி 74, பாப்திஸ்து திருச்சபைகளின் தவறைத் திருத்துகிறது.

இந்த கேள்வியில் கலந்தாலோசிக்கப்படும் பல செய்திகள் இருப்பினும், மிகவும் முக்கியமான குறிப்புகளை மட்டும் சுருக்கமாக காணலாம்.

முதலாவது, திருவசனத்தின் வழியில், கேட்டகிசம் குழுந்தைகளின் ஞானஸ்நானத்தை, தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களை கிறிஸ்துவின் மூலமும், அவருடைய ஆவியின் மூலமும் இரட்சித்து, அவர்களின் தேவனாகவும், நித்திய நண்பனாகவும் இருப்பதற்கான வாக்குத்தத்தமான "இரட்சிப்பின் உடன்படிக்கை" அல்லது "கிருபையின் உடன்படிக்கையை", அடிப்படையாகக் கொண்டு போதிக்கிறது. இந்த உடன்படிக்கை வேதாகமம் முழுவதும் கூறப்பட்டுள்ளது. இரட்சிப்பின் உடன்படிக்கையை தேவன் ஆபிரகாமிடம் சொன்னபோது, குழந்தைகளும் இந்த உடன்படிக்கைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள் என்பதை உறுதிசெய்தார். இதை ஆதியாகமம் 17:1-9-ல் வாசிக்கிறோம். தேவனுடைய உடன்படிக்கை, "நித்திய உடன்படிக்கை" என்றும், அது ஆபிராகமுக்கு பின்னர் வரும் அனைத்து விசுவாச சந்ததியினருக்கும் சொந்தம் என்றும் வசனம் 8 கூறுவதைக் கவனிக்கவும்.

ஆபிரகாம் முதல் பழைய ஏற்பாடு முழுவதும் உடன்படிக்கையின் அடையாளம் மற்றும் முத்திரையாக விருத்தசேதன சாக்ரமந்து ஆண்பிள்ளைகள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது (வசனங்கள் ஆதி 17:10-14-ஐ பார்க்கவும்).

உடன்படிக்கையின் அடையாளம் மற்றும் முத்திரையான பழைய ஏற்பாட்டு விருத்த சேதனம், புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானமாக மாற்றம் பெற்றாலும், உடன்படிக்கை மாறாமல் நிலைத்திருக்கிறது. "ஆபிராகாமின் பிள்ளைகள்" என்று அழைக்கபடும் அனைத்து விசுவாச சந்ததியினருக்கும் இந்த உடன்படிக்கை தொடர்கிறது (கலா 3:7,29). பழைய ஏற்பாட்டைப் போலவே, விசுவாசிகளின் குழந்தைகளும் இந்த உடன்படிக்கைக்கு சொந்தமாகின்றனர். இது பெந்தேகோஸ்தேயில், "வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று..." (அப் 2:39) பேதுரு செய்த பிரசங்கத்தால் உறுதி செய்யப்படுகிறது. இரட்சிப்பின் வாக்குத்தத்த உடன்படிக்கை குழந்தைகளுக்கும் சொந்தம் என்பதை, இயேசு கிறிஸ்து, "சிறு பிள்ளைகள் என்னிடம் வருவதை தடைப் பண்ணாதிருங்கள் பரலோக இராஜ்ஜியம் அவர்களுடையது" என்று சொல்லி உறுதிப்படுத்தினார் (லூக் 18:15,16). கிறிஸ்தவ விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு, தேவன் கிறிஸ்துவின் மூலம் மீட்பு, பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பு மற்றும் விசுவாசத்தின் வரத்தை வாக்குபண்ணியுள்ளார். இந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்ததைப் பெற்ற நிலையில், இதற்கு அடையாளமும் முத்திரையுமான ஞானஸ்நானத்தைப் பெற குழந்தைகள் உரிமை பெறுகின்றனர். இந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தம், சாத்தானின் பிள்ளைகளாக இருக்கும் அவிசுவாசிகளின் குழந்தைகளுக்கு அல்ல, மாறாக விசுவாசிகளின் குழந்தைகளுக்கு மட்டுமே என்பதைக் கவனிக்கவும்.

வரும் நாட்களில் பாப்த்திஸ்து கிறிஸ்தவர்களுடன் நீங்கள் கலந்து பேசும் வாய்ப்பு பெறலாம். அவர்கள் குழந்தை ஞானஸ்நானத்திற்கு எதிராக இருப்பது ஏன் என்பதையும், அதற்கான பதிலையும் நீங்கள் அறிய வேண்டும். குழந்தை ஞானஸ்நானத்திற்கான பாப்திஸ்துகளின் எதிர்வாதம் மற்றும் அதற்கான வேதாகம பதிலை இங்கே காணலாம்.

1. குழந்தைகளால் மனம்திரும்பவோ, கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கவோ அல்லது ஞானஸ்நானத்தைப் புரிந்து கொள்ளவோ முடியாது என்பதால் அவர்களுக்கு ஞானஸ்நானம் தரக்கூடாது என்பதாகும். இதற்கு பதில்: பழைய ஏற்பாட்டிலும் குழந்தைகள் விருத்தசேதனத்தை புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கும்போது, விருத்தசேதனம் செய்யப்படும்படி கட்டளை கொடுக்கப்பட்டது. உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தின் அடையாளமான விருத்தசேதனம், குழந்தைகள் புரிந்து கொள்வார்கள் என்பதால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது அல்ல, மாறாக அவர்களும் தேவனுடைய கிருபையின் உடன்படிக்கைக்கு சொந்தமானவர்கள் என்பதால் ஆகும்.

2. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்ற கட்டளை வேதத்தில் இல்லையே. இதற்கு பதில்: இதற்கான புதிய கட்டளை தேவையில்லை. அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போ 2:39-ல் கூறியதுபோல, உடன்படிக்கை நித்திய உடன்படிக்கையாக தொடர்கிறது, அதற்குள் விசுவாசிகளின் பிள்ளைகளும் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தேவன் தமது உடன்படிக்கையை நீக்கிவிட்டார் என்பதை பாப்திஸ்துகள் வேதத்தில் காண்பிக்க வேண்டும்!

3. குழந்தைகள் ஞானஸ்நானத்திற்கான எடுத்துக்காட்டு வேதத்தில் இல்லை. இதற்கு பதில்: இது உண்மையானால், இந்த செயல் தவறு என்று வேதம் நிரூபிக்கவில்லை. குழந்தைகளையும் இந்த உடன்படிக்கை உள்ளடக்கியுள்ளது, ஆகவே, இந்த உடன்படிக்கையின் அடையாளம் அவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். மேலும் அப்போ 16:15,33 மற்றும் 1கொரி 1:16 குடும்ப ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகிறது, அது குழந்தைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

4. மத்தேயு 28:19 மற்றும் மாற்கு 16:16 ஆகிய பகுதிகள் ஞானஸ்நானத்திற்கு முன் விசுவாசத்தை முன்வைக்கிறது. இதற்கு பதில்: இந்த பிரதான கட்டளைப் பகுதிகள், ஊழிய பணித்தளங்களில் ஞானஸ்நானம் பெறாத புறஜாதியிலிருந்து மனம்திரும்பும் வயது வந்தவர்களை குறிக்கிறது. கிறிஸ்தவரல்லாத ஒவ்வொரு வயதுவந்தவரும் ஞானஸ்நானத்திற்கு முன்பு, முதலாவது மனந்திரும்ப வேண்டியது அவசியம். வயது வந்தோர் மனந்திரும்பி கிறிஸ்தவனாகி, ஞானஸ்நானம் பெற்றபின்னர், அவர்களின் குழந்தைகளும் ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று இரட்சிப்பின் உடன்படிக்கை வேண்டுகிறது.

குழந்தைகளால் பழைய மற்றும் புதிய உடன்படிக்கையைப் புரிந்து கொள்ள முடியாது என்று பாப்திஸ்துகள் தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. இதை முடிக்கும் தருணத்தில், நாம் மீண்டும் கூறுவது, ஞானஸ்நானம் எடுக்கும் அனைத்து வயதுவந்தவர்களும் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பதில்லை, அதுபோல ஞானஸ்நானம் எடுக்கும் அனைத்து குழந்தைகளும் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று நாம் நம்புவதில்லை. சில குழந்தைகள் கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் ஞானஸ்நானத்திற்கு முன்பு அல்லது பின்பு கழுவப்படுகிறார்கள். சில குழந்தைகள் ஒருபோதும் கழுவப்படுவதில்லை, அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இல்லாத நிலையில். ஆனால் திருச்சபைக்குள்ளான கிறிஸ்தவ விசுவாசிகளின் குழந்தைகள், தேவனுடைய கட்டளையின் நிமித்தம், ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**74-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 74 யாருடைய தவறான நம்பிக்கைக்கு தேவையான விளக்கத்தைத் தருகிறது? ............. ...........................
2. குழந்தை ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாக கேட்டகிசம் எதை ஆதாரமாகக் காண்பிக்கிறது? அ)சிறுவர்களின் அறியாமை, ஆ)புதிய ஏற்பாட்டில் உள்ள குழந்தை ஞானஸ்நான எடுத்துக் காட்டு, இ)கிருபையின் உடன்படிக்கை, ஈ)சிறுவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும். எது? ..........
3. கிருபையின் உடன்படிக்கை அல்லது இரட்சிப்பின் உடன்படிக்கை என்றால் என்ன? ............................. ..............................................................................................................................................
4. இரட்சிப்பின் உடன்படிக்கையை, ஆதியாகமத்தில், ............-ம் அதிகாரத்தில் தேவன் ...............................டன் ஏற்படுத்தி, தமது கிருபையின் உடன்படிக்கைக்கு .......................... மற்றும் .........................................யாக, பழைய ஏற்பாட்டில் .....................................................-மாக ஆரம்பித்து, புதிய ஏற்பாட்டில் ........................................-மாக தொடரும்படி கட்டளையிட்டுள்ளார்.
5. கேள்வி 74-ன்படி, சிறுவர்களுக்கு ஏற்ப்படுத்தப்பட்ட தேவனுடைய உடன்படிக்கை உள்ளடக்கியவைகள்...
   அ. கிறிஸ்துவில் ........................................................................................... மீட்பு
   ஆ. பரிசுத்த ................................................................................................... விசுவாசம். என்பதாகும்.
6. எந்த குழந்தைகள் ஞானஸ்நானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்? .........................................................
7. இரட்சிப்பின் உடன்படிக்கைக்குள் விசுவாசிகளின் குழந்தைகளும் உட்பட்டவர்கள் என்பதை கூறும் வசனங்களைக் கோடிட்டு காட்டு: ஆதி 17:10; ஆதி 26:12; யோவேல் 2:16; மத் 19:14; யோவா 7:1; அப் 2:39; 1கொரி 7:14.
8. இரட்சிப்பின் உடன்படிக்கை... அ)எல்லா சந்ததியிலும் தொடர்கிறது, ஆ)பாப்திஸ்துகளால் சரியாக புரிந்து கொள்ளப்பட்டது, இ)பேதுருவால் பிரசங்கிக்கப்பட்டது, ஈ)மனந்திரும்பி கிறிஸ்துவில் விசுவாசிப்பவர்களை மட்டும் உள்ளடக்கியது, உ)குழந்தை ஞானஸ்நானத்திற்குரிய ஆதாரம். எது? ..................
9. பாப்திஸ்துகளின் வாதத்திற்கு நீங்கள் பதில் தருவது எப்படி?:
   அ. புதிய ஏற்பாட்டில் குழந்தைகள் ஞானஸ்நானம் குறித்து கட்டளையில்லை. ....................................
   ..............................................................................................................................................
   ..............................................................................................................................................
   ஆ. குழந்தைகளால் சுவிசேஷத்தை புரிந்து கொள்ள முடியாததால் அவர்களை ஞானஸ்நானத்திற்கு உட்படுத்த முடியாது. .......................................................................................................................
   ..............................................................................................................................................

10. ஆதி 17:7-ஐ எழுதுக:

**75. இராப்போஜனத்தினால் ஒரேதரம் பலியான கிறிஸ்து மற்றும் அவருடைய நன்மைகளிலும் நீங்கள் பங்கெடுக்கிறீர்கள் என்பது உங்களுக்கு முத்திரையாகத் தெரியப்படுத்தப்படுவது எப்படி?**

அவரை நினைவு கூறும்படி என்னையும், எல்லா விசுவாசிகளையும் பிட்கப்படும் அப்பத்தைச் சாப்பிட்டு, பாத்திரத்திலிருந்து குடிக்கும்படி கிறிஸ்து கட்டளையிட்டு, பின்வரும் வாக்குறுதிகளுக்கு என்னை இணைத்துள்ளார்: முதலாவது, பிட்கப்படும் தேவனுடைய அப்பம் மற்றும், பாத்திரத்தில் நான் பங்குபெறுவதையும், நிச்சயமாக என் கண்களால் நான் காண்பது போல, எனக்காக அவருடைய சரீரம் சிலுவையில் பிட்கப்படும்படி ஒப்புக் கொடுக்கப்பட்டு, அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது; மேலும், கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் அடையாளமாக எனக்குக் கொடுக்கப்படும் அப்பம் மற்றும் தேவனுடைய பாத்திரத்தை நிச்சயமாக ஊழியரின் கையிலிருந்து பெற்று ருசிப்பதினால், கிறிஸ்துவின் சிலுவையில் அறையப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தினால் அவரே என்னை போஷித்து எனது ஆத்துமாவை நித்திய ஜீவனுக்கேதுவாக ஊட்டமளித்து காக்கிறார் என்பது நிச்சயம்.

***

கேள்வி 75 முதல் 82, நம்முடைய இரட்சகரால் ஏற்படுத்தப்பட்ட “கர்த்தருடைய பந்தி அல்லது திருவிருந்து”-க்கான விளக்கத்தைத் தருகிறது. ஞானஸ்நானத்திற்கு கடைப்பிடிக்கப்பட்ட அதே விளக்க முறையே இதற்கும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது (கேள்வி 69-ல் உள்ள விளக்க வரைபடத்தை காண்க). இந்தக் கேள்வி 75, கேள்வி 69 ஞானஸ்நானத்தின் அடையாளச் சின்னத்திற்கு விளக்கம் கொடுத்தது போல, கர்த்தருடைய பந்தியின் அடையாளச் சின்னத்தை விளக்குகிறது.

திருவிருந்து அல்லது தேவனுடைய மேஜை என்று அழைக்கப்படும் கர்த்தருடைய பந்தியில், அப்பம் (மாவினால் செய்யப்பட்ட ரொட்டி) மற்றும் திராட்சை ரசம் ஆகிய இரண்டு பொருட்கள் உட்படுகிறது. இவ்விரண்டும் வேதாகம நாட்களில் சாதாரணமாக உணவுக்காக எங்கும் கிடைக்கும் பொருட்கள், முக்கியமாக ரொட்டியும் நம்முடைய நாட்களிலும் எங்கும் பழக்கத்தில் உள்ள உணவேயாகும். பரிசுத்த சாக்கரமந்தின் அடையாளமாக கிறிஸ்து உணவைத் தெரிந்து கொண்டார். இதன் காரணம், உடலுக்கு தேவையான ஜீவனுக்கு உணவு எப்படி அவசியமானதோ, அதே போல நம்முடைய ஆத்துமாவின் ஆவிக்குரிய வாழ்விற்கு கிறிஸ்துவின் சரீரமும், இரத்தமும் அவசியமாகும். அப்பமும் ரசமும் கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தை நமக்கு நினைவு படுத்துகிறது. சாப்பிடுவதற்கு அப்பமானது (அந்நாட்களில் கத்தியால் வெட்டப்படவில்லை) பிட்கப்பட வேண்டும், அதுபோல நம்முடைய பாவங்களுக்கு பரிகாரமாக கிறிஸ்துவின் சரீரம் பிட்கப்பட்டது. (கிறிஸ்துவின் எலும்புகள் உடைக்கப்படவில்லை என்பதை கவனிக்கவும் (யோவா 19:31-36), ஆனால் அவருடைய சரீரம் மற்றும் ஆத்துமா மரணத்தில் பிரிக்கப்பட்டது, இந்த விதத்தில் அவருடைய சரீரம் நமக்காகப் பிட்கப்பட்டது.) திராட்சை ரசம் சிகப்பு நிறமாக இரத்தத்தைப்போல தோற்றமளிக்கிறது; மேலும் மயங்கி சோர்ந்திருக்கும் ஒருவருக்கு புத்துணர்ச்சி தருகிறது.

கர்த்தருடைய பந்தி போதிக்கும் இரண்டு காரியங்களை இந்த கேள்வி நமக்கு போதிக்கிறது: 1)ஒரே முறை கிறிஸ்து செய்தது என்ன? 2)அவர் தொடர்ந்து செய்வது என்ன? கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தம் ஒரேதரம் சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. தமது விலையேறப் பெற்ற மரணத்தினால் அவர் சம்பாதித்த நீதி மற்றும் ஆவிக்குரிய ஜீவன் தமது பரிசுத்த ஆவியினால் நமக்கு தொடர்ந்து கொடுக்கப்படுகிறது. உணவு இடைவிடாமல் நமக்குத் தேவை, அதுபோல கிறிஸ்துவின் ஜீவன் மற்றும் கிருபை நமக்கு இடைவிடாமல் தேவை, இல்லையெனில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவன் இல்லாமல் போகும்.

இப்படியாக, பிட்கப்படும் அப்பமும், ஊற்றப்படும் ரசமும் கிறிஸ்து சிலுவையில் என்ன செய்தார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது; நாம் அப்பத்தையும் இரசத்தையும் பார்க்கும்போதும், அதில் பங்கெடுக்கும்போதும், “அவரே என்னை போஷித்து எனது ஆத்துமாவை நித்திய ஜீவனுக்கேதுவாக ஊட்டமளித்து காக்கிறார் என்பது நிச்சயம்.” “நிச்சயமாக” என்ற வார்த்தை இரண்டுமுறை பயன்படுத்தப்பட்டிருப்பதை கவனிக்கவும். சாக்ரமந்தின் இந்த வெளிப்படையான பொருட்கள் கிறிஸ்துவோடு நமக்கு உள்ள இணைப்பை சுட்டிக்காட்டுகிறது. ஆவிக்குரிய சுத்திகரிப்பை ஞானஸ்நானத்தோடு எனக்கு வாக்கு செய்திருப்பதுபோல, கர்த்தருடைய பந்தியை ஆவிக்குரிய ஊட்டமளிப்புக்கு ஒப்பாக கிறிஸ்து இணைத்துள்ளார்.

**75-க்கான கேள்விகள்:**

1. இந்தக் கேள்வி 75, ........... ஞானஸ்நானத்தின் ............................................................ விளக்கம் கொடுத்தது போல, ..................................................................... அடையாளச் சின்னத்தை விளக்குகிறது.
2. இந்த சாக்ரமந்தின் மற்ற பெயர்களை எழுதுக: ........................................................................................
...........................................................................................................................................................
3. இந்தப் பதிலின்படி யார் மட்டுமே கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ள வேண்டும்? ...........................
...........................................................................................................................................................

4. கர்த்தருடைய பந்தியை நாம் "உணவு சாக்கரமந்து" என்று சொல்லலாம், காரணம்: ............................ ........................................................................................................................................................ ........................................................................................................................................................
5. அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் வேலை குறித்து இரண்டு காரியங்களை நமக்குப் போதிக்கிறது. அவைகள்: அ)........................................................................................................................................ ஆ)........................................................................................................................................................
6. கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரம் என்று... அ)அவருடைய எலும்பு முறிவை, ஆ)மரணத்தில் அவருடைய சரீரம் மற்றும் ஆத்துமா தனித்தனியாக பிரிக்கப்பட்டதை... குறிக்கிறோம். எது? ........
7. கிறிஸ்துவின் மரணம் விசுவாசிக்களுக்கு தொடர்ந்து நீதி மற்றும் ஜீவனைத் தருகிறது. சரியா, தவறா? .......................
8. கர்த்தருடைய பந்தியில் தேவன் நமக்குத் தரும் வாக்குத்தத்தங்கள் என்ன? (சரியான பதில்(களை) கோடிட்டு காட்டு):

   அ. இதில் பங்குகொள்ளும் அனைவருமே உண்மையான விசுவாசிகள்.

   ஆ. எல்லா உண்மை விசுவாசிகளுக்காகவும் கிறிஸ்துவின் சரீரம் சிலுவையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

   இ. அவருடைய மரணத்தின் நன்மையினால் நம்முடைய ஆத்துமாவை தொடர்ந்து போஷிக்கிறார்.

   ஈ. அப்பத்தையும், ரசத்தையும் கண்களால் கண்டு, ருசிக்கும் அனைவரும் உண்மையாகவே கிறிஸ்துவுக்குச் சொந்தம்.
9. கிறிஸ்து நம்முடைய ஆத்துமாவின் உண்மை உணவாக இருப்பதால் கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்படும் உணவு சம்மந்தமான பொருட்கள் சரியே. சரியா, தவறா? .................
10. லூக்கா 22:19,20-ஐ எழுதுக:

**76. கிறிஸ்துவின் சிலுவையில் அறையப்பட்ட சரீரத்தை உண்டு, சிந்தப்பட்ட இரத்தத்தை பானம் செய்வது என்றால் என்ன?**

இது கிறிஸ்துவின் எல்லா பாடுகள் மற்றும் மரணத்தை விசுவாச இருதயத்தால் அணைத்துக் கொள்வது மட்டுமல்லாது, பாவமன்னிப்பு மற்றும் நித்திய ஜீவனையும் பெறுவதாகும்; மேலும் நாம் கிறிஸ்துவிலும், நம்மிலும் இருக்கும் பரிசுத்த ஆவியினால் அவருடைய பரிசுத்த சரீரத்தோடு இன்னும் அதிகமதிகமாக நாம் ஒன்றுசேர்க்கப்பட்டு, அவர் பரலோகத்திலும் நாமோ பூமியில் இருந்தாலும், நாம் அவருடைய எலும்பில் எலும்புமாகவும், சரீரத்தில் சரீரமுமாகவும், ஒரே சரீரத்தின் அங்கமாகவும் ஒரே ஆவியினாலும், ஆத்துமாவினாலும் வாழ்ந்து ஆட்சி செய்யப்படுகிறோம் என்பதாகும்.

***

இந்தக் கேள்வி கர்த்தருடைய பந்தியின் சாரம்/உண்மைப்பொருள் அல்லது ஆவிக்குரிய அர்த்தம் என்ன என்பதை விளக்குகிறது. ஆவிக்குரிய சுத்திகரிப்பு கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் ஆவியினால் நிறைவேற்றப்படுவதை கேள்வி 70 விளக்குவதுபோல, கிறிஸ்துவை ஆவிக்குரிய நிலையில் சாப்பிடுதல் மற்றும் பானம் செய்தல் என்றால் என்ன என்பதை இங்கே காணலாம்.

மனித சரீரத்தை சாப்பிட்டு, இரத்தத்தைக் குடிப்பது என்று கேள்விப்படும் ஒரு அவிசுவாசிக்கு இது பெரும் வியப்பாகவும், கேலிக்கூத்தானதாகவும் இருக்கும். கிறிஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில் கிறிஸ்தவர்கள் மனித மாம்சத்தைத் திண்பவர்கள் என்று தங்கள் எதிரிகளால் குற்றம் சாட்டப்பட்டனர். ஆனால், கர்த்தருடைய பந்தி என்பது கிறிஸ்துவினால் ஆவிக்குரிய நிலையில் போஷிக்கப்படுவது என்பதாகும், மாறாக உண்மையாகவே அவரைத் தின்று, அவருடைய இரத்தத்தைக் குடிப்பது என்று அர்த்தமல்ல.

நாம் கிறிஸ்துவை விசுவாசத்தில் உணவாகக் கொள்கிறோம் என்று இங்கே போதிக்கப்படுகிறோம் -- "விசுவாச இருதயத்தால் கிறிஸ்துவை அணைத்துக் கொள்கிறோம்." இதற்கு முந்தைய கேள்வி குறிப்பிட்டதுபோல, இராபோஜனம் எடுப்பதால் கிறிஸ்துவைக் குறித்து இரண்டு காரியங்களை நாம் விசுவாசிக்கிறோம்:

1. நாம் அவருடைய சிலுவையின் மீதான பரிகார பலியில் விசுவாசம் கொள்கிறோம் -- பாவமன்னிப்பு மற்றும் ஜீவனுக்கான "கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் மரணம்".

2. பரிசுத்த ஆவியினால் நாம் கிறிஸ்துவின் சரீரத்துடன் ஆவிக்குரிய பிரகாரமாக இணைக்கப்படுகிறோம், அதனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவன் அவரிலிருந்து நம்முடைய ஆத்துமாவுக்குள் வருகிறது என்று விசுவாசிக்கிறோம். கிறிஸ்து நம்முடைய தலை, நாம் அவருடைய சரீரமாகிய சபையின் அங்கமாக இருக்கிறோம். அவருடைய சரீரத்தில் உள்ள எலும்பும் சதையும் எவ்வளவு நெருக்கமானதோ, அதே நிலைக்கு நாமும் கிறிஸ்துவுக்கு மிகவும் நெருங்கிய நிலையில் இருக்கிறோம்!

கர்த்தருடைய விருந்தை சாப்பிடுவதினால், பூமியில் கிறிஸ்துவின் பலி மற்றும் பரலோகத்தில் அவருடைய ஆளுமையிலும் இணைக்கப்பட்டு, நம்முடைய விசுவாசம் பெலப்படுத்தப் படுகிறது. நாம் சாப்பிடும்போது, அவருடைய நீதி, அவருடைய ஜீவன் மற்றும் அன்பிலிருந்து நம்மை எதுவும் ஒருபோதும் பிரிக்க மாட்டாது என்னும் உறுதியைப் பெறுகிறோம்.

நம்முடைய விசுவாசம் கர்த்தருடைய விருந்தில் மிகவும் செயல்படும் ஒன்றாக இருக்கிறது. கிறிஸ்து நமக்கு என்னமாய் அர்த்தப்படுகிறார் என்பதை ஆழமாக தியாணிக்கிறோம். இதுவே ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம். கிறிஸ்து நம்மை தம்முடன் இணைப்பதற்கான அடையாளமும், முத்திரையுமாக ஞானஸ்நானம் செயல்படும்போது நாம் அவ்வளவாக செயல்படாத அல்லது நமக்குள் கிறிஸ்து என்ன செய்கிறார் என்பதையே அறியாத நிலையில் இருக்கிறோம். மறுபடியும் பிறப்பிக்கப்படுதலில் நாம் செய்வதற்கு அவ்வளவாக எதுவும் இல்லை. ஆனால், திருவிருந்தில் நம்முடைய ஆத்துமா மற்றும் மனதின் உணர்வும் செயல்படும் நிலையை அடைகிறது. நாம் பார்க்கிறோம், சுவைத்து, உண்கிறோம் -- நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவை உணவாகக் கொண்டு மகிழ்கிறது. மேலும், கிறிஸ்துவோடு ஞானஸ்நானத்தினால் இணைக்கப்படுவது ஒரே ஒரு முறை நடக்கும் செயல்; கிறிஸ்துவை உணவாகக் கொள்வது நமது வாழ்வில் அனுதினமும் நடக்க வேண்டும், ஆகவே திருவிருந்தை நம்முடைய வாழ்நாள் முழுவதும் எடுக்க வேண்டும். திருவிருந்தின் மூலமாக பெறும் கிறிஸ்துவுடனான நம்முடைய ஐக்கியம் ஒரு குறிப்பிட்ட தருணத்திற்கு மட்டும் இருக்ககூடியது என்று அல்ல, மாறாக இதன் ஆசீர்வாதங்கள் மீண்டும் அதை எடுக்கும்வரை நம்முடன் இருக்கிறது என்பதை நாம் மறக்க கூடாது.

**76-க்கான கேள்விகள்:**

1. இந்தக் கேள்வி 76 கர்த்தருடைய பந்தியின் ........................................................ அல்லது ஆவிக்குரிய ........................................................ விளக்குகிறது.
2. கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தை நாம் உட்கொள்வதால் நரமாமிசபட்சினிகள் என்று நாம் அழைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளலாம். சரியா, தவறா? ..................., விளக்கம்: ........................................ ........................................................................................................................................................
3. யோவான் 6:53-58-ஐ அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கேள்விகளுக்கு பதில் தரவும்.
   அ. கிறிஸ்துவை புசித்து, குடிப்பதால் நாம் பெறுவது என்ன? (வ 53,54): .................................................. ........................................................................................................................................................
   ஆ. அவருடைய மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன், அவரில் ......................................, அவரும் நம்மிலே .............................................
   இ. கிறிஸ்து .................................................. அப்பம், இந்த அப்பத்தைப் .................................... என்றென்றைக்கும் ..................................... என்றார்.
   ஈ. கிறிஸ்துவை உணவாகக் கொள்வதால், நமக்கு ......................................... உண்டு; நம்முடைய சரீரமும் ......................................... ......................................... படும்.
4. விசுவாசத்தினால் கிறிஸ்துவை உட்கொள்வதினால், அவரைக் குறித்து இரண்டு முக்கிய காரியங்களை விசுவாசிக்கிறோம். அவைகள்:
   அ.
   ஆ.
5. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளனர், நம்மைக் குறித்து வேதாகமம் சொல்வது என்ன? (எபே 5:30)........................................................................................................ ........................................................................................................................................................
6. கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவன் பரிசுத்த ஆவியினால் நமக்குள் தொடர்ந்து கொண்டுவரப்படுகிறது. சரியா, தவறா? ....................
7. அவிசுவாசிகள் திருவிருந்தில் பங்கு பெறும்போது, அவர்கள் சாதாரண அப்பம் மற்றும் ரசத்தை மட்டுமே உண்கின்றனர், அவர்கள் கிறிஸ்துவை உணவாகக் கொள்வது கிடையாது. சரியா, தவறா? ....................
8. எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட நிலையில் அவர்கள் ஒருவரோடு ஒருவராகவும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். சரியா, தவறா? ....................
9. ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம். ஞானஸ்நானத்தினால் நாம் தேவனுடைய கிருபையின் அடையாளத்தைப் பெறும்போது நாம் அவ்வளவாக செயல்படாத நிலையில் இருக்கிறோம். ஆனால், திருவிருந்தினால் தேவனுடைய கிருபையைப் பெறும்போது நாம் செயல்படும் நிலையில் இருக்கிறோம். சரியா, தவறா? .............
10. 1கொரி 10:16-ஐ எழுதுக:

**77. பிட்கப்படும் அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் செய்கிறவனை தம்முடைய சரீரம் மற்றும் இரத்தத்தினால் போஷிப்பதாக கிறிஸ்து எங்கே வாக்குப் பண்ணியுள்ளார்?**

திருவிருந்தை நியமிக்கப்படுதலில், “கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப்

பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து. இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்."

மேலும் இந்த வாக்குத்தத்தம் பரி.பவுலால் மீண்டும் கூறப்பட்டது, அதாவது, "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்."

***

கர்த்தருடைய பந்தி நியமிக்கப்படும் போது, கேள்வி 77 தெளிவுபட கூறுகிறது: அதாவது, இது உண்மையாகவே கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட சாக்ரமந்து என்பதற்கான திருவசனச் சான்று. இந்தக் கேள்வி, ஞானஸ்நானத்தின் நியமனம்/உருவாக்கத்தை விளக்கும் கேள்வி 71க்கு ஒத்ததாகும். (சாக்ரமந்துகள் வெறும் மனிதச் சடங்குகள் இல்லை என்றால் அதற்கு வேதாகம ஆதாரம் அவசியம் ஆகும்.)

மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்று சுவிசேஷங்களும், 1கொரி 11:23-25 ஆகியவை இராபோஜன நியமனத்தைக் குறித்து கூறுகிறது. கிறிஸ்துவின் மரணம் மற்றும் அவருடைய ஆளுமையில் போஷிக்கப்படுவதற்கான வாக்குத்தத்தத்தை இந்த பகுதிகளில் விளக்குகிறது. மேலும் ஒரு பகுதியான 1கொரி 10:16,17-ம் கேட்டகிசத்தின் இந்த தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டு: "இந்த வாக்குத்தத்தம் மீண்டும் கூறப்பட்டுள்ளது". (இந்த சொற்றொடர் கேள்வி 71-ன் கடைசிப் பகுதியிலும் இடம் பெற்றிருப்பதைக் கவனிக்கவும், இதனால் இவ்விரு சாக்ரமந்துகளும் கிறிஸ்துவினால் நியமிக்கப்பட்டிருப்பது அப்போஸ்தலனாகிய பவுலால் உறுதி செய்யப்படுகிறது.)

திருவிருந்து அனுசரிப்பதைக் குறித்த மேலும் சில செய்திகளை நாம் காணலாம்:

1. இந்த திருவிருந்து, பஸ்கா பண்டிகையுடன் தொடர்புடையதாக கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டுள்ளது. பஸ்காவின் உணவு சாப்பிடப்பட்ட பின்பு, இயேசு இந்த புதிய சாக்ரமந்தை உண்டாக்க புளிப்பில்லா அப்பம் மற்றும் திராட்சைரச மேஜையை பயன்படுத்தினார். இராபோஜனத்தில் கிறிஸ்துவின் மரணத்தை திரும்பி பார்த்து "நினைவு கூறுகிறோம்", பழைய ஏற்பாட்டு பஸ்கா கிறிஸ்துவின் வரப்போகும் மரணத்தை முன்சுட்டிக் காட்டுகிறது, சொல்லப் போனால் இராபோஜனம், பாஸ்கா சாக்ரமந்தின் தொடர்ச்சியாகும். மற்றும் ஒரு வித்தியாசம்: பஸ்கா இரத்தம் சம்மந்தப்பட்ட சாக்ரமந்து, ஆனால் ஒரே தரம் முடிவாக இரத்தம் சிந்தப்பட்டதால் இராபோஜனத்தில் இரத்தம் சிந்துதல் இல்லை.

2. கர்த்தருடைய பந்தி எல்லா விசுவாசிகளுக்காகவும் கிறிஸ்துவால் கட்டளையிடப் பட்டவைகள் ஆகும். "இதைச் செய்யுங்கள்", என்பது அவர் மீது விசுவாசம் வைக்கும் அனைவரும் திருவிருந்தின் மூலம் அவரை உணவாக்கிக் கொள்ள வேண்டும். இதைப் புறக்கணிப்பது, கிறிஸ்துவுக்கும், அவருடைய பாவநிவாரண மரணத்திற்கும் விரோதமான பெரிய பாவம் ஆகும்.

3. கர்த்தருடைய பந்தி அடிக்கடி திருச்சபையில் அனுசரிக்கப்பட வேண்டும். "இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம்" (1கொரி 11:25), என்பது ஒருவருடத்தில் இத்தனை முறைதான் அனுசரிக்க வேண்டும் என்று வசனத்தில் குறிப்பிடப் படவில்லை. வாரம் ஒருமுறை இது அனுசரிக்கப்பட வேண்டும் என்று ஜான் கால்வின் நினைத்தார். சில சபைகள் வாரம் ஒருமுறை, சில சபைகள் மாதம் ஒரு முறை, சில சபைகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை, சில சபைகள் வருடத்திற்கு மூன்று என்று அனுசரிக்கிறது. ஆகவே ஒரு சபையின் சிறந்த பக்தி விசுவாசத்திற்கு அவசியமானபடி எத்தனை முறை இது அனுசரிக்கப்பட வேண்டும் என்பதை அந்தந்த திருச்சபையின் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

4. ஞானஸ்நானத்தைப் போல, இந்த சாக்ரமந்தும் அதிகாரப் பூர்வமான சமயச் சடங்கு: கர்த்தருடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதோடு, திருச்சபையில் இது அனுசரிக்கப்பட வேண்டும். இந்த இராபோஜனத்தை நியமித்த போது கிறிஸ்து தமது சீஷர்களை ஒன்று சேர்த்திருந்தார். இது தனிப்பட்ட நிலையில் அனுசரிக்கப்படக் கூடாது, இருப்பினும் திருச்சபையின் மூப்பர்கள் இதை அவசியமாகக் கருதப்படும் தனிநபர் வீடுகளில் அவர்களின் ஞானமான கவனிப்பில் இது கொடுக்கப்படலாம்.

5. இந்த இராபோஜனத்தில் பங்குபெறும் மற்ற விசுவாசிகளின் மத்தியில் ஒரு ஆவிக்குரிய ஐக்கியம் காணப்படுகிறது. இந்த உண்மை 1கொரி 10:17-ல் தெளிவாகப் போதிக்கப்படுகிறது, "அந்த ஒரே அப்பத்தில் (கிறிஸ்துவில்) நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்". நமது சீர்திருத்த திருச்சபைகளின் திருவிருந்து மேஜையில் பலிக்கான பலிபீடம் வைப்பது கிடையாது, மாறாக நாம், ஜீவனுள்ள அப்பமாகிய கிறிஸ்து என்னும் ஒரே அப்பத்தை பிட்டு உண்டு ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் கொள்கிறோம்.

**77-க்கான கேள்விகள்:**

1. கர்த்தருடைய விருந்துக்கான வேதாகம ஆதாரத்தை நாம் காண்கிறோம். இது .............................. நியமிக்கப்பட்டதாகும்.
2. மத்தேயு, லூக்கா மற்றும் யோவான் தேவனுடைய பந்தியைக் குறித்து சொல்கிறது. சரியா, தவறா?...........

3. பழைய ஏற்பாட்டின் எந்த பண்டிகையின் தொடர்ச்சியாக கர்த்தருடைய பந்தி இடம் பெறுகிறது? ...................................................................
4. ஒவ்வொருமுறையும் இராபோஜனம் கொடுக்கப்படும்போது அனைத்து விசுவாசிகளும் பங்கெடுக்க வேண்டும் என்பதற்கான வசன ஆதாரம் குறிப்பிடுக: ...................................................................................................................
5. ஒருவருடத்திற்கு நான்கு முறை கர்த்தருடைய பந்தி அனுசரிக்கப்பட வேண்டும் என்று வேதம் சொல்கிறது. சரியா, தவறா? ..................., விளக்கம்: ....................................................................................
6. கர்த்தருடைய பந்தியை இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு கொடுத்ததால், அதை நாம்... அ)அப்போஸ்தலர்களுக்கு மட்டும், ஆ)ஊழியர் எப்போது விரும்புகிறாரோ அப்போது தனிப்பட்டவிதத்தில் கொடுக்கலாம், இ)கர்த்தருடைய வார்த்தை பிரசங்கத்தின் கீழ் சபையில் கொடுக்கப்படலாம்... என்று சொல்லலாம். எது சரி? ...........
7. சபையார் அனைவரும் பார்க்க, தனியாக இராபோஜனம் பெற்றுக்கொள்ளும்படி கொடுக்கப்படும் திடப்படுத்துதலுக்கான வகுப்புகள் எடுப்பதை சில திருச்சபைகள் வழக்கத்தில் கொண்டுள்ளன அதைக் குறித்து நீங்கள் நினைப்பது என்ன? ...................................................................................................................
8. பின்வருதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. சாக்ரமந்துகளை நியமித்தல் | .... | திருவசனத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது |
| ஆ. பழைய ஏற்பாட்டு பஸ்கா விருந்து | .... | புறக்கணிப்பது பெரிய பாவம் |
| இ. தனிமையான இராபோஜன ஆராதனை | .... | விசுவாசிகளின் ஐக்கியம் |
| ஈ. “என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள்” | .... | கேள்விகள் 71 மற்றும் 77 |
| உ. ஒரே அப்பம் | .... | கர்த்தருடைய பந்தியில் தொடர்கிறது |

9. கர்த்தருடைய பந்தியில், ஜீவனுள்ள அப்பமாகிய கிறிஸ்து என்னும் “ஒரே அப்பம்” என்பது நமக்கு போதிப்பது... அ)கிறிஸ்துவோடு மட்டும், ஆ) மற்ற கிறிஸ்தவர்களோடு மட்டும், இ)கிறிஸ்துவோடு மற்றும் பிற கிறிஸ்தவர்களோடும்... நாம் கொள்ளும் ஐக்கியத்தைக் குறிக்கிறது.....................................
10. மத்தே 26:26,27-ஐ எழுதவும்:

**78. அப்படியானால் அப்பமும், திராட்சைரசமும் இயல்பான கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தமாக மாறுகிறதா?**

இல்லை, ஞானஸ்நானத்தில் தண்ணீர் கிறிஸ்துவின் இயல்பான இரத்தமாக மாறாமலும், தானாக பாவத்தை கழுவாமல், அதற்காக தெய்வீக அடையாளம் மற்றும் உறுதியாகச் செயல்படுவது போல; கர்த்தருடைய பந்தியில், பரிசுத்த அப்பம், பயன்படுத்தும்போது கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்பட்டாலும், இயற்கையின் நியதியோடு ஒத்து, அது கிறிஸ்துவின் இயல்பான சரீரமாக மாறுவது கிடையாது.

***

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தவறை இந்த கேள்வி விளக்கி புறக்கணிக்கப்படுகிறது. (கேள்வி 72 ஞானஸ்நானத்தைக் குறித்த தவறை புறக்கணிப்பது போல, இந்தக் கேள்வியும் அதற்கு சரிநேராக இருக்கிறது.) இராபோஜனத்தின் அப்பமும், திராட்சைரசமும், வார்த்தையின்படியே கிறிஸ்துவின் இயல்பான சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகிறது என்னும் போதனையை ரோமன் கத்தோலிக்க சபை கி.பி 1215-ல் ஏற்றுக் கொண்டது. இந்த மாற்றம் “transubstantiation -- மெய்யான பொருள் மாற்றம்” (இலத்தீன் வார்த்தையான *trans மற்றும் substantia* என்ற வார்த்தைகளிலிருந்து வருகிறது: *trans* =accross - மறுபக்கத்திற்கு மாறுதல் ; *substantia* = substance -பொருள் ) என்பதாகும். அதாவது ஒரு பொருள் இன்னொரு பொருளாக மாற்றம் அடைவதற்கான மறுபக்கம் செல்லுதல் என்பதாகும்.

ரோமன் கத்தோலிக்கரின் இந்த “transubstantiation -- மெய்ப்பொருள்மாற்றம்” குறித்த தவறான நம்பிக்கையைக் கேள்வி 80 (கேட்டகிசத்தில் பின்னர் சேர்க்கப்பட்டது என்பதைக் காண்போம்) விளக்குகிறது.

அப்பமும், திராட்சைரசமும் இயேசுகிறிஸ்துவின் இயல்பான சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகிறது என்னும் மெய்ப்பொருள்மாற்றம் என்னும் இந்தத் தவறான போதனை, மிகவும் விசித்தரமானதாக இருக்கும், யாருக்கு இதுபோன்ற ஒரு கற்பனை தோன்றியது என்று ஆச்சரியப் படலாம். இராபோஜனத்தின் போது கிறிஸ்து பேசிய ஒரு சிறிய சொற்றொடரை தவறாக வியாக்கியாணம் செய்வததினால் இந்த தவறான போதனை வந்தது. இயேசு (மத் 26:26,28)-ல், “(அப்பத்தை தொடர்புபடுத்தி) இது என் சரீரமாய் இருக்கிறது” என்றும், “(திராட்சைரசத்தை தொடர்பு படுத்தி) இது புதிய உடன்படிக்கைக்குரிய என் இரத்தமாய் இருக்கிறது”, என்றும் சொன்னார். ஆனால் இயேசு தமது உண்மையான சரீரத்தின் ஒரு சிறிய துண்டை கையில் ஏந்தியோ அல்லது தமது உடலின் இரத்தத்தை பாத்திரத்திலோ வைத்திருப்பதாக அர்த்தப்படுத்தவில்லை. இங்குள்ள “இருக்கிறது” (is) என்னும் சிறிய வினைச்சொல் “பதிலாக செயல்புரிகிறது”(represents) என்ற அர்த்தத்தையே தருகிறது. அப்பமும், திராட்சைரசமும் அவருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் பதிலாக செயல்புரிகிறதாக இருக்கிறது.

இதை நாம் நிரூபிக்க முடியுமா? ஆம், “நானே வாசல்” (யோவா 10:7) என்றும் “நானே மெய்யான திராட்சைச்செடி” (யோவா 15:1) என்று இயேசு சொல்லும்போது, அவர் உண்மையான வாசலாகவும், செடியாகவும் இருப்பதாக அர்த்தப்படுத்தவில்லை. அதோடு, ஒரே நேரத்தில் இந்த இரண்டாகவும் அவர் இருக்க முடியாது. மற்றபடி அவர் வாசல் மற்றும் திராட்சைச்செடிக்குப் பதிலாக செயல்படும் நபராக இருக்கிறார் என்பதாகும்.

ரோம உபதேசம் திருவசனத்தை உண்மைக்கு மாறாக விளக்கினாலும், இது நமது சிந்தனைக்கு முரன்பாடானதாகவும், புத்தியீனமானதாகவும் இருக்கிறது. ஒரு அப்பத்தின் சிறு துண்டு, அப்பத்தைப் போலவே காணப்பட்டு, அப்பத்தைப்போலவே உணரப்பட்டு, அப்பத்தைப்போலவே ருசி கொடுத்து, அறிவியல் ஆய்வின்படி அப்பமாகவே இருக்கும் நிலையில், எப்படி மனித மாமிசம் ஆகும்? இது வெறும் மூடநம்பிக்கையே தவிர, விசுவாசம் அல்ல. கிறிஸ்து செய்த அற்புதங்கள் அனைத்தும் உண்மையான அற்புதங்கள். இயேசு தண்ணீரை திராட்சைரசமாக மாற்றியபோது (யோவா 2:6-11) எவராலும் சந்தேகிக்க முடியாதபடிக்கு, அது உண்மையாகவே “மெய்ப்பொருள் மாற்றத்தை” (Transubstantiation) அடைந்தது.

இந்தக் கேள்வி ரசத்தைப் பற்றியும் கூறாமல், அப்பத்தை குறித்து மட்டும் பேசுவது ஏன்? காரணம், ரோமன் கத்தோலிக்க சபையின் இராபோஜனத்தில் (Mass- மாஸ் என்று அழைக்கின்றனர்), அப்பம் மட்டுமே கொடுக்கப்படுகிறது; காரணம், கொடுக்கப்படும் சரீரத்தில் ஏற்கனவே இரத்தம் இருக்கிறது என்பதாகும். ஆக ஜனங்கள் அப்பத்தை சாப்பிடும்போது, இரத்தத்தையும் சேர்த்து உட்கொள்கின்றனர் என்பதாகும். இது வெறும் துன்மார்க்க மனித யோசனையேயாகும்.

லூத்தரன் போதனை இதைவிட அதிக சிறப்பானதும் அல்ல. லூத்தர் “*consubstantiation* (*con* = with) -- கான்சப்ஸ்டான்சியேசன்” என்பதைப் போதித்தார். அதாவது, அப்பமும் ரசமும் மாறாவிட்டாலும் கிறிஸ்துவின் இயல்பான சரீரம் மற்றும் இரத்தத்தின் தோற்றம் அப்பம் மற்றும் ரசத்துடன் இருக்கிறது என்பதாகும். இதுவும் திருவசனத்திற்கு புறம்பானதாகவும், நமது பொதுவான அறிவுக்கும் ஒத்துப்போகாததாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் ஒரே சரீரம் பரலோகத்தில் இருக்கிறது, அது கோடிக்கணக்கான மாமிச துண்டுகளாக உலகமெங்கும், எல்லா காலத்திலும், எல்லா சபைகளிலும், எல்லா இராபோஜன மேஜைகளிலும் சிதறி இருக்கவில்லை. கிறிஸ்துவின் சரீரம் என்பது ஆவிக்குரியது அல்ல, அது சரீரப்பிரகாரமானதாக இருப்பதால், அதை அப்படியே சாப்பிட முடியாது.

கிறிஸ்துவின் சரீரத்தை நாம் உணவாகக் கொள்கிறோம் என்றால், அவர் தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் சம்பாதித்த இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை, பரிசுத்த ஆவியானவர் நமது இருதயங்களில் செயல்படுவதினால் நாம் விசுவாசத்தினால் பெறுகிறோம் என்பதாகும் (அடுத்த கேள்வி இதைப் போதிக்கிறது)

**78-க்கான கேள்விகள்:**

1. ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தவறை இந்த கேள்வி விளக்கி புறக்கணிக்கப்படுகிறது. சரியா, தவறா? ..................
2. ....................................................... என்னும் தவறான போதனையை சபை .................. வருடத்தில் ஏற்றுக் கொண்டது.
3. “transubstantiation -- மெய்ப்பொருள்மாற்றம்” என்றால் என்ன? இது கர்த்தருடைய பந்தியோடு ஒப்பிடப்படுவது எப்படி? ..........................................................................................................................................
...........................................................................................................................................................
4. “இது என்னுடைய சரீரமாக இருக்கிறது”- என்னும் இயேசுவின் வார்த்தைகளை நீங்கள் எப்படி வியாக்கியாணம் செய்வீர்கள்? ...........................................................................................................................
.......................................................வசன ஆதாரம் தருக: ........................................................................
5. ரோமன் கத்தோலிக்க மாஸ் என்னும் நம்பிக்கைப்படி அற்புதமாக மெய்ப்பொருள் மாற்றம் நடைபெற்றாலும் அது குறைவுள்ள அற்புதமாகவே இருக்கும், காரணம்: ..............................................................................
..........................................................................................................................................................
6. ரோமன் கத்தோலிக்க மாஸில் திராட்சைரசத்தை அவர்கள் பருகுவதில்லை, ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தைப் அவர்கள் எப்படி பெறுவதாக நினைக்கிறார்கள்? ......................................................................
7. இராபோஜனத்தைக் குறித்து லூத்தரன் போதனை... அ)ட்ரான்சப்ஸ்டான்சியேசன், ஆ)கான்சப்ஸ்டான்சியேசன். எது? ..........
8. இராபோஜனத்தில் கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான மாம்சம் மற்றும் இரத்ததை உட்கொள்வதாக லூத்தரன்கள் நம்புகின்றனர். சரியா, தவறா? .................
9. இராபோஜனத்தில் கிறிஸ்துவின் இயற்கையான சரீரம் தங்கியிருக்க முடியாது. காரணம், .....................
...........................................................................................................................................................
10. யோவான் 6:35-ஐ எழுதவும்:

**79. அப்படியானால், அப்பத்தை சரீரமாகவும், பாத்திர ரசத்தை இரத்தமாக அல்லது அவருடைய இரத்தத்தாலான புதிய உடன்டிக்கை என்று இயேசுவும், கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்ததின் ஐக்கியம் என்று பரி.பவுலும் அழைக்க வேண்டியது ஏன்?**

அப்பமும் திராட்சைரசமும் தற்காலிகமான ஜீவனைத் தாங்குவது போல, சிலுவையில் அறையப்பட்ட அவருடைய சரீரமும், சிந்திய இரத்தமும் நம்முடைய ஆத்துமாவின் நித்திய ஜீவனுக்கான உண்மையான ஆகாரமாகவும் பானமாகவும் விளங்குவதை நமக்கு மிகவும் கவனத்துடன் போதிப்பதோடு மட்டுமல்லாமல்; மேலும் நாம் அவரை நினைவு கூறும்நிலையில், கண்களால் காணப்படும் அடையாளத்தின் சின்னங்களை, நமது சரீரத்தின் வாயால் பெறும் பரிசுத்த அடையாளச் சின்னங்கள் மூலம் பரிசுத்த ஆவியின் செயலால், நாம் கிறிஸ்துவின் உண்மையான சரீரம் மற்றும் இரத்தத்தில் பங்குடையவர்களானோம் என்ற உறுதியைப் பெறுகிறோம்; மேலும், நம்மில் நாமே பாடுகள் அனுபவித்து நம்முடைய சொந்த ஆளுமையில் எல்லாவற்றையும் நிறைவேற்றியது போல, கிறிஸ்துவின் பாடுகளும், கீழ்ப்படிதலும் நிச்சயமாக நம்முடையதாகிறது.

***

இராபோஜனத்தில் கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான மாம்சத்தையும், இரத்தத்தையும் நாம் சாப்பிடுவதில்லை என்பதை பார்த்த நாம், இப்போது அப்பத்தை சாப்பிட்டு, ரசத்தைப் பருகுவதால் நாம் பெறுவது என்ன என்பதை காண்போம். ஞானஸ்நானத்தினால் உறுதியென்னும் கிருபையைப் நாம் பெறுகிறோம் என்பதை கேள்வி 73 போதித்தது, அதுபோல ஒரு விசுவாசி சரியான நிலையில் இராபோஜனத்தில் பங்கு கொள்வதால் உறுதியென்னும் கிருபையை பெறுகிறான் என்பதை இங்கு நாம் படிக்கலாம். கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தம் --அவருடைய மரணம் --ஆகியவை உண்மையாகவே விசுவாசியின் இரட்சிப்புக்காக என்பதைத் தேவன் உறுதிப்படுத்துகிறார்.

இப்போது "சாக்ரமந்த பாஷை" நமக்கு சற்று பழக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது புறம்பான அடையாளமே ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்று அடிக்கடி அழைக்கப்படுகிறது. ஞானஸ்நான தண்ணீர் "பாவம் கழுவப்படுவதற்கும்" (அப் 22:16), அப்பமும் திராட்சைரசமும் கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தமாகவும் அழைக்கப்படுகிறது. இதற்கு காரணம், புறம்பான பொருட்களை சரியாகப் பெறும்போது, அவைகளோடு கிருபையின் வாக்குறுதியும் இணைக்கப்பட்டதாயிருக்கும். புறம்பான அடையாளப் பொருட்கள் பரிசுத்த ஆவியானவரால் முக்கியமான ஆவிக்குரிய கிருபைகளை எடுத்துக் செல்லும் செயலே சாக்ரமந்து ஆகும். ஞானஸ்நானமும், இராபோஜனமும் வெறும் அர்த்தமற்று அனுசரிக்கும் சடங்குகள் அல்லவே. அவைகள் மூலம் தேவன் தமது கிருபைகளையளிக்கிறார். இருப்பினும் சாக்ரமந்துகள் சமயச்சடங்குகளை மாற்றுகிறதாக அல்ல, ஆனால் அவைகள் ஏற்கனவே இருக்கின்ற அல்லது இருக்கப்போகின்ற (உதாரணமாக குழந்தை ஞானஸ்நானத்தில்) கிருபையை பெலப்படுத்துவதாகவும், உறுதி செய்வதாகவும் இருக்கின்றதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

இராபோஜனத்தின் அடையாளம் மற்றும் முத்திரை ஆகிய இரண்டும் இந்தக் கேள்வியில் அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளன (கேள்வி 75-லும் இவைகள் அழுத்தி கூறப்பட்டுள்ளது). முதலாவது, "சிலுவையில் அறையப்பட்ட அவருடைய சரீரமும், சிந்திய இரத்தமும் நம்முடைய ஆத்துமாவின் நித்திய ஜீவனுக்கான உண்மையான ஆகாரமாகவும் பானமாகவும் விளங்குவது" நமக்குப் போதிக்கப்பட்டது. இரண்டாவது, அப்பத்தையும் இரசத்தையும் விசுவாசத்தில் உட்கொள்ளும்போது, கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் மற்றும் மரணத்தின் ஆசீர்வாதங்கள் பரிசுத்த ஆவியினால் நமக்கு முத்திரையாக்கப்படுகிறது. அதாவது, நாம் உண்மையாகவே கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் என்பது நமது இருதயத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆக, இராபோஜனத்தின் நோக்கம் மற்றும் அதனுடைய அர்த்தத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது எத்தனை அவசியம், இதை தேவன் நமக்கு கொடுத்துள்ள உயர்ந்த ஆவிக்குரிய சிறப்புரிமைகளில் ஒரு முக்கியமான ஒன்று என்றழைக்கிறோம். ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தருடைய மேஜைக்கு செல்வதற்கான அனுமதி வரும்வரை கவனமற்று இருக்காதீர்கள்!

**79-க்கான கேள்விகள்:**

1. இராபோஜனத்தில் சரியாகப் பங்கு கொள்வதால் ........................................................................... பெறுகிறோம் என்று கேள்வி 79 நமக்குப் போதிக்கிறது.
2. கர்த்தருடைய விருந்தில் நாம் கிறிஸ்துவை நினைவு கூறுகிறோமேயன்றி, கிறிஸ்துவிடமிருந்து நாம் எதையும் பெறுவதில்லை என்பது சரியா? .........................................................................................
3. "சாக்ரமந்து பாஷை" என்பது... :சரியான பதிலை(களை) கோடிடுக:
   அ. புறம்பான அடையாளங்கள் உண்மையான சாக்ரமந்துகள் இல்லை
   ஆ. புறம்பான அடையாளங்கள் வேறெயொரு காரியங்களை சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றன
   இ. புறம்பான பொருட்கள் வேறே பொருட்களாக மாறுகிறது.
4. சாக்ரமந்து அப்பம் மற்றும் ரசத்தை கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தம் என்று அழைப்பது சரியல்ல. சரியா, தவறா? ..................
5. சாக்ரமந்துகள் சமயச்சடங்குகளை மாற்றும் ஒன்று ஆகும்; அதாவது, ஆவிக்குரிய மரணத்தில் இருக்கும் ஒருவர் சாக்ரமந்தை பெறும்போது அவர் உயிர்பிக்கப்படுகிறார். சரியா, தவறா? .................., விளக்கம்: ..........................................................................................................................................................

6. கர்த்தருடைய பந்தி அடையாளமும், முத்திரையுமாக இருந்து: பரிசுத்த ஆவியின் செயலால், நாம் கிறிஸ்துவின் உண்மையான ............................................................ பங்குடையவர்களானோம் என்ற ............................... பெறுகிறோம்; மேலும், நம்மில் நாமே .................................................................................. ............................................................................................................ நிறைவேற்றியது போல, கிறிஸ்துவின் .................... ......................................... நிச்சயமாக நம்முடையதாகிறது.
7. அவிசுவாசிகள் இராபோஜனத்தில் கலந்து கொள்ளும் போது, அவர்கள் பெறுவது சிறிய அப்பத் துணிக்கை மற்றும் ரசம் மட்டும்தானா? (1கொரி 11:29-ஐப் பார்க்க): ............................................................ ......................................................................................................................................................
8. இப்போது நீங்கள் ஒரு விசுவாசியாக இருப்பீர்களானால், நீங்கள் உங்களுடைய விசுவாசத்தை திடப்படுத்துதலில் சபையில் அறிக்கை செய்வதற்கு முன், இராபோஜனத்தில் பங்கு பெறலாமா? ................, விளக்கம்: ......................................................................................................................... ......................................................................................................................................................
9. இராபோஜனத்தினால் வரும் ஆவிக்குரிய நன்மைகளை அறியும் நீங்கள் அதில் பங்கடைய வேண்டும் என்ற விருப்பத்தை உடையவர்களாயிருக்கறீர்களா? ............
10. 1கொரி 5:8-ஐ எழுதுக:

**80. கர்த்தருடைய பந்திக்கும், போப்பாண்டவரின் சமயமுறையான (Mass - மாஸ்) இறுதிவிருந்து சடங்கு ஆகிய இரண்டுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன?**

இயேசு கிறிஸ்து தாமே ஒரேதரம் சிலுவையில் நிறைவேற்றிய பலியினால் நம்முடைய எல்லா பாவத்திற்கான முழு மன்னிப்பு நமக்குண்டு என்பதை கர்த்தருடைய பந்தி நமக்கு சாட்சியிடுகிறது; தமது உண்மையான சரீரத்தோடு பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கப்பெற்று, ஆராதனை செய்யப்படும் கிறிஸ்துவோடு பரிசுத்த ஆவியினால் நாம் சேர்த்திணைக்கப் பட்டிருக்கிறோம். ஆனால் மாஸ் போதிப்பது, கிறிஸ்து ஜனங்களுக்காக தினமும் மதகுருவால் பலிசெலுத்தப்படாத பட்சத்தில் மரித்தோருக்கும், உயிருள்ளோருக்கும் கிறிஸ்துவின் பாடுகளினிமித்தம் பாவமன்னிப்பு இல்லை என்றும்; அப்பமும் இரசமுமான நிலையில் கிறிஸ்து இருக்கிறார், ஆகவே அவர் ஆராதிக்கப்பட வேண்டும் என்பதாகும். இப்படியாக, மாஸ் என்பது இயேசு கிறிஸ்துவின் ஒரே பலியையும், அவருடைய பாடுகளையும் மறுதலிப்பதும், சபிக்கப்பட்ட விக்கிரக ஆராதனையுமாகும்.

***

கேள்வி 69-ல் உள்ள விளக்க அட்டவணையின்படி, ஞானஸ்நானம் குறித்த தவறான நம்பிக்கைக்கு எதிரான கண்டனத்தை கேள்வி 72 தெரிவிக்கிறது, ஆனால் இராபோஜனம் குறித்த ரோமன் கத்தோலிக்கரின் தவறான நம்பிக்கைக்கு எதிரான கண்டனத்தை இரண்டு கேள்விகள் (78 & 80) தெரிவிக்கிறது. சாக்ரமந்துகளைக் குறித்த கேட்டகிசத்தின் விளக்கத்தின் அமைப்பில் இதற்கான இடத்தை கேள்வி 80 விளக்குகிறது.

இதற்கான காரணம், இந்தக் கேள்வி 80, கேட்டகிசம் ஆரம்பத்தில் எழுதப்பட்டபோது அதன் ஒரு பகுதியாக இருக்கவில்லை. ரோமன் கத்தோலிக்க மாஸை மேலும் கண்டனப்படுத்தும்படி (Elector Frederick III) எலெக்டர் மூன்றாம் ப்ரெடெரிக்-கின் உத்தரவின்படி பின்னர் இந்தக் கேள்வி சேர்க்கப்பட்டது. மாஸின் அக்கிரமத்தை வெளிப்படையாகக் கண்டனம் செய்வதில் கேள்வி 78 போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்ததால் கேள்வி 80-ம் பின்னர் சேர்க்கப்பட்டது.

கர்த்தருடைய பந்தியை ரோமன் கத்தோலிக்க சபை "மாஸ்" என்று அழைப்பது ஏன்? இந்த வார்த்தை லத்தீன் மொழியில் "நீக்கிவிடு அல்லது அகற்றிவிடு" என்ற அர்த்தம் கொடுக்கும் "*miss* - மிஸ்ஸா" வார்த்தையிலிருந்து வருகிறது. கிறிஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில், திருவிருந்தில் கலந்து கொள்ளமுடியாதவர்கள் பிரசங்கத்தின் பின்னர், திருவிருந்துக்கு முன்னர் சபைநீக்கம் செய்யப்பட்டனர். அப்படியாக ஆரம்பத்தில் சபையில் உள்ளவரை நீக்கம் செய்வதைக் குறிக்கும் வார்த்தை காலப்போக்கில் இரபோஜனத்திற்கான வார்த்தையாக மாறியது. அதாவது, அவர்கள் கர்த்தருடைய விருந்தை தவறவிட்டனர் என்பது இதன் அர்த்தமாகும்.

முந்தைய கேள்விகளில் நாம் பார்த்தது போல திருவிருந்தின் திருவசன அர்த்தத்தை இந்த கேள்வியின் முதல் பகுதியில் காண்கிறோம். ரோம மாஸ் சம்மந்தப்பட்ட இரண்டு தவறுகளின் அக்கிரமத்தன்மையைக் குறித்து இந்த பதிலின் இரண்டாவது பகுதி கூறுகிறது. இந்த பதிலின் இரண்டாவது பகுதியை நாம் கவனிக்கலாம்.

1. ஒவ்வொரு முறையும் மாஸ் செய்யப்படும்போது கிறிஸ்துவின் புதிய பலியாக போலி நடப்பு அரங்கேறுகிறது. "சிலுவையில் உள்ள பலியைப் போலவே இந்த மாஸ் இருக்கிறது" -என்று (Baltimore Catechism #931) ரோமன் கத்தோலிக்க கேட்டகிசம் கூறுகிறது. அதனால் ஒரு ரோமன் கத்தோலிக்கர் கிறிஸ்து தனக்காக மரித்தார் என்பதை விசுவாசிக்காமல், கிறிஸ்து தனக்காக தொடர்ந்து மரிக்கிறார் என்று நம்புகின்றனர். இது கிறிஸ்துவின் மரணத்தை பயனற்றதாக்குகிறது. பின்னர் பாவத்திற்கு பரிகாரமாக ஒரேதரம் உண்டான மரணம் இல்லாமல் போகிறது. 2000 வருடங்களாக கிறிஸ்து மரித்து முடிக்கவில்லை

என்றால், எப்போது அவர் மரித்து முடிப்பார் என்ற உறுதி நமக்கு வருவது எப்படி? ஆகையால், கிறிஸ்துவில் முன்னர் மரித்தவர்களும், இப்போது விசுவாசம் வைப்பவர்களும் செய்து முடிக்கப்பட்ட பலியினால் இரட்சிக்கப்பட முடியாதவர்களாகின்றனர். ஆனால் வேதாகமம் இதற்கு நேர் எதிரானவற்றைப் போதிக்கிறது, இயேசுவும் "முடிந்தது" என்று சொன்னார் (யோவா 19:30), அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படி ஒரேதரம் பலியானார் என்று எபி 9:26,28 & 10:12 ஆகியவை போதிக்கிறது. பொதுவாக ரோமன் கத்தோலிக்கர்கள் திருச்சபை, போதக தந்தை மற்றும் அப்பத்தின்மீது நம்பிக்கை வைக்கின்றரே தவிர ஒரேதரம் சிலுவையில் பலியான கிறிஸ்துவின் மீது அல்ல.

2. அப்பமும், திராட்சை ரசமும் மெய்பொருள் மாற்றம் அடையும்போது அவற்றில் கிறிஸ்து பிரசன்னமாகிருப்பதால் அவரை வழிபட (ஆராதிக்க) வேண்டும் என்று ரோமன் கத்தோலிக்கம் போதிக்கிறது. ஆகவே, போதக தந்தை அப்பத்தையும், பாத்திரத்தையும் தூக்கி பிடிக்கும்போது அந்த பொருட்களை தலைவணங்கி வழிபட வேண்டும். இது ஆராதிப்பவர்களை பொருட்களை வணங்கும் விக்கிரக ஆராதனைக்கு உட்படுத்துகிறது. "கிறிஸ்துவின் பலியை மறுதலிப்பதோடு, சபிக்கப்பட்ட விக்கிரக ஆராதணையாக" இருக்கும் இந்த மாஸ்-ஐ கேட்டகிசம் வன்மையாகக் கண்டனப்படுத்தவில்லை. ஆகவே, கேள்வி 80 அதைச் செய்கிறது. இந்த தீர்ப்பு ஏற்கனவே லூத்தர், "போப்பாண்டவரைச் சார்ந்த மாஸ் மகாப்பெரியதும், கொடியதுமான அருவருப்பு" என்றார் (Smalkald Articles, Part 2, Art.2).

ரோமன் கத்தோலிக்க சபையில் இந்த நம்பிக்கை சரியானதே என்னும் புராட்டஸ்டன்டுகள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா! அவர்களின் இந்த அறியாமை மிகவும் பெரிய அவப்பேராகும்.

**80-க்கான கேள்விகள்:**

1. கேட்டகிசம் பின்பற்றும் ஒழுங்கின்படி பார்க்கும்போது, கேள்வி 80 புதிதாக இருப்பதற்கான காரணம் என்ன? ..........................................................................................................................................................
..........................................................................................................................................................
2. ரோம மாஸை, கேள்வி 80 போதுமான அளவிற்கு வன்மையாகக் கண்டனம் செய்கிது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ................., விளக்கம்: ..........................................................................................................
..........................................................................................................................................................
3. மாஸ் என்னும் வார்த்தை... அ)புதிய ஏற்பாட்டிலிருந்து, ஆ)"இரவு உணவு" என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து, இ)"நீக்கிவிடு" என்னும் லத்தீன் வார்த்தையிலிருந்து... வருகிறது. எது? .........
4. இந்தக் கேள்வியின் படி மாஸின் இருமுக்கியமான தவறுகள்:
அ. "கிறிஸ்துவை இன்னமும் ..........................................................................................................................."
ஆ. "அப்பத்தோடும், ரசத்தோடும் கிறிஸ்து சரீரப்பிரகாரமாக ............................ இருப்பதால், அவர் ........................................................, இது சபிக்கப்பட்ட ....................................................... இருக்கிறது.
5. கிறிஸ்து மாஸில் தொடர்ந்து மரித்துக் கொண்டிருப்பாரானால், நாம் அவருடைய ஒரே மரணத்தினால் மீட்கப்பட முடியாது. சரியா, தவறா? .................
6. கிறிஸ்துவின் சரீரம் எங்கே இருப்பதாக திருவசனம் போதிக்கிறது. ..........................................................
7. கிறிஸ்துவின் சரீரம் எங்கிருப்பதாக ரோமன் கத்தோலிக்கம் போதிக்கிறது? ..............................................
8. ஒரு புராட்டஸ்டன்டு கிறிஸ்தவன் அவ்வப்போது ரோமன் கத்தோலிக்க சபை ஆராதனையில் பங்கெடுத்து, மற்றவர்களோடு ஆராதிப்பது தவறு இல்லை. சரியா, தவறா? ………………, விளக்கம்: ..........................................................................................................................................................
9. மாஸ் என்பது சபிக்கப்பட்ட விக்கிரக ஆராதனை என்றால், அதைச் செய்பவர்களுக்கு என்ன நடக்கும்? (எபேசி 5:5,6 பார்க்க): ...........................................................................................................................
..........................................................................................................................................................
10. எபிரே 10:12,14-ஐ எழுதுக:

**81. தேவனுடைய மேஜைக்கு யார் வரமுடியும்?**

தங்களுடைய பாவத்திற்காக மெய்யாக மனஸ்தாபப்பட்டு, அவைகள் மன்னிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பெலவீனமும் கிறிஸ்துவின் பாடு மற்றும் மரணத்தினால் மூடப்பட்டதென்று விசுவாசிப்பவர்கள்; மேலும், எவர்கள் தங்கள் விசுவாசத்தை அதிகமதிகமாக பெலப்படுத்தி, வாழ்வை மேலும் சீர்திருத்த விரும்புகிறவர்கள். ஆனால் மனந்திரும்பாதவர்களும், மாய்மாலக்காரர்களும் தங்களுக்கே நியாயத்தீர்ப்புண்டாக புசித்து பானம் பண்ணுகிறார்கள்.

***

கர்த்தருடைய பந்தியில் யார் பங்குகொள்ள முடியும் என்பதை கேள்வி 81 மற்றும் 82-ல் காணலாம். இந்த கேள்வி, எவர்கள் ஞானஸ்நானத்திற்குரியவர்கள் என்பதை விளக்கும் கேள்வி 74-டன் தொடர்புடையது.

தேவனுடைய பந்தி பரிசுத்தமான பந்தியாகும், கிறிஸ்துவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் மட்டுமே அவருடைய ஆசீர்வாதத்தில் பங்கு பெற முடியும். கிறிஸ்துவினால் ஏற்றுக்

கொள்ளப்படாதவர்கள் தங்களுக்கே நியாயத் தீர்ப்புண்டாக பங்கெடுக்கிறார்கள் (1கொரி 11:29). ஒரு கிறிஸ்தவன் தகுதியான நிலையில் இதில் பங்கு பெறுவதற்குத் தேவையான தனிப்பட்ட தகுதி என்ன என்பதை இந்த கேள்வி விளக்குகிறது. பரிசுத்த நற்கருணையில் பங்கெடுக்க விசுவாசிக்கு தேவவைப்படும் திருச்சபையின் தகுதியை அடுத்த கேள்வி விளக்குகிறது.

இராபோஜனத்தில் பங்குபெறுதல், பழைய ஏற்பாட்டின் பஸ்காவைப் போல, இந்த கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை ஒருவர் அறிந்திருக்க வேண்டும். இதில் பங்குபெறுவர்கள் இதைக் குறித்து சரியான விதத்தில் போதிக்கபட்டு, வருடங்களாக இதை புரிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். இராபோஜனத்தில், நமது விசுவாசம் கிறிஸ்துவை உணவாகக் கொண்டு, அவருடைய மரணத்தை நினைவு கூறவேண்டும். இப்படியாக, பிள்ளைகள் கர்த்தருடைய பந்திக்கு வருவதற்கு முதலாவது சத்தியத்தில் போதிக்கப்பட வேண்டும். ஆகவேதான், நீங்கள் வேதத்தையும், இப்போது இந்த கேட்டகிசத்தையும் படிக்கிறீர்கள்!

கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதற்கு முன்பு ஒரு கிறிஸ்தவன் மீண்டும் தன்னைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் (1கொரி 11:28). இந்தப் பரிசோதனை, கேள்வி 81-ல் தரப்பட்டிருப்பது போல, மூன்று பகுதிகளை உடையதாக இருக்கிறது. இதில் பங்குபெறுவதற்கு முன், ஒரு விசுவாசி கருத்துடன் தன்னுடைய பாவம், தன்னுடைய இரட்சகர் மற்றும் தன்னுடைய நன்றிப்பணி (இந்தப் பகுதிகள் இந்த கேட்டகிசத்தின் முக்கிய அம்சங்களை அடிப்படையில் இருப்பதை நீங்கள் அறியமுடியும்) ஆகியவற்றைக் குறித்து தனக்குத்தானே கேட்க வேண்டும்.

1. *என்னுடைய பாவம்.*: நான் பாவி என்பதினால் உண்மையாக வருத்தப்படுகிறேனா? நான் கர்த்தருடைய கற்பனைகளை பலமுறை மீறியதற்காகவும், என்னுடைய சீர்குலைந்துள்ள சாயலுக்காக என்னை நானே வெறுக்கிறேனா? தேவனையும், பிற கிறிஸ்தவர்களையும், மற்றவர்களையும் நான் நேசிக்க வேண்டியவிதத்தில் நேசிக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேனா? நொறுங்குண்ட ஆவியுடன் இந்தப் பாவங்கள் யாவற்றையும் தேவனிடம் அறிக்கை செய்கிறேனா?

2. *என்னுடைய இரட்சகர்.*: என்னுடைய பாவங்கள் மூடப்படுவதற்காக கிறிஸ்துவின் மரணத்தில் மட்டும் நம்பிக்கை வைக்கிறேனா? என்னுடைய எல்லா பாவங்கள் மற்றும் சீர்கெட்ட நிலைகளை மன்னிப்புக்காக கிறிஸ்துவிடம் அறிக்கை செய்கிறேனா? கிறிஸ்து, தேவனுடைய குமாரன் என்றும், அவர் மட்டுமே என்னை இரட்சித்து, எனக்கு நித்திய ஜீவனை தரமுடியும் என்பதை ஒப்புக் கொள்கிறேனா?

3. *என்னுடைய நன்றிப்பணி.*: கிறிஸ்துவுக்காக அதிக பரிசுத்தமான வாழ்க்கை வாழ விரும்புகிறேனா? தேவனுக்குப் பிரியமான நடை மற்றும் உறுதியான விசுவாசத்தை விரும்புகிறேனா? கிறிஸ்துவின் சித்ததத்திற்கு பூரணமாகக் கீழ்ப்படிவதில் இருதயப் பூர்வமான விருப்பம் எனக்கு இருக்கிறதா (மத் 5:48)?

இந்த மூன்று வகையான கேள்விகளுக்கு உண்மையாக பதில்கூற எவன் ஒருவனால் முடியவில்லையோ அவன் ஆவிக்குரிய நிலையில் கர்த்தருடைய பந்திக்கு வரத் தகுதியற்றவன். அவன் தேவனுக்கு முன்பாக மனம்திரும்பி, இந்த கேள்விகளுக்குப் திருப்பதிகரமான பதிலை தரும்படி தேவனுடைய கிருபைக்காக கெஞ்ச வேண்டும். மனிதர்களால் காணப்பட வேண்டும் என்பதற்காக மட்டும் இதில் பங்கெடுத்து கிறிஸ்துவின் கோபத்திற்கு ஆளாவதைப் பார்க்கிலும், அவன் இதில் பங்கெடுக்காமல் இருப்பதே நலம்! மனம்திரும்பாத மற்றும் மாய்மாலமான நிலையில் புசித்து, குடிப்பதால் தங்களுக்கு நியாயத்தீர்ப்பையே கொண்டுவருகின்றனர்.

**81-க்கான கேள்விகள்:**

1. கர்த்தருடைய பந்தியில் ........................................................................ முடியும் என்பதை கேள்வி .......... மற்றும் ......... கூறுகிறது. முதல் கேள்வி ....................................... தகுதி என்ன என்பதை விளக்குகிறது. அடுத்த கேள்வி ........................................ தகுதியை விளக்குகிறது.
2. பரிசுத்த விருந்துக்கு தேவன்... அ)அனைவரையும், ஆ)எல்லா ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களையும், இ) அனைத்து அறிக்கை செய்யும் விசுவாசிகளை... அழைக்கிறார். எது? .........
3. பழைய ஏற்பாட்டின் .................................. போல, இந்த கொண்டாட்டத்தின் .................................. அறிந்திருக்கும் ஒருவர் மட்டுமே ..................................................................................................................................
4. கர்த்தருடைய பந்தியில் ஒருவர் பங்கெடுக்கும் முன்பு ........................................................................................ ......................................................................... என்று 1கொரி 11:28 போதிக்கிறது.
5. திருவிருந்தில் பங்கெடுக்கும் முன்பு எத்தனை வகையான பரிசோதனையை ஒருவர் செய்ய வேண்டும் என்று நமது கேட்டகிசம் கூறுகிறது? ................., அவர் தனது இருதயம் மற்றும் விசுவாசத்தை ஒருமுறை ஆராய்ந்தால் போதுமா, அல்லது ஒவ்வொரு முறையும் ஆய்வு செய்ய வேண்டுமா? .....................................
6. திருவிருந்துக்கு வரும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ... அ)தன்னுடைய ...................., ஆ) தன்னுடைய ....................................., இ)தன்னுடைய .................................... குறித்து தனக்குத்தானே கேட்க வேண்டும்.
7. குறிப்பிட்ட வயதை அடைந்துள்ள ஒருவரை, கர்த்தருடைய பந்திக்குச் செல்ல அங்கீகரித்து அனுமதிக்கலாம், காரணம் அவரால் சுவிசேஷத்தை போதிய அளவு புரிந்து கொண்டு விசுவாசிக்க முடியும் என்பதால். சரியா, தவறா? ......................, விளக்கம்: ....................................................................................................... ............................................................................................................................................................

8. திருவிருந்தில் பங்கெடுப்பவர்களை தேவன் ... அ)பூரணமாக, ஆ)தங்களுடைய பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப் படுகிறவர்களாக, இ) தங்களுடைய சிறப்பின் மீது நம்பிக்கை வைப்பவராக, ஈ)கிறிஸ்து உன்னதமான ஆசிரியராக மதிப்பவராக... இருக்க வேண்டுகிறார். எது சரி? ..........................
9. மனம்திரும்பாத மற்றும் மாய்மாலமான நிலையில் புசித்து, குடிப்பதால் தங்களுக்கு ..............................
........................................................................................................................................................................
10. 1கொரி 11:27,28-ஐ எழுதுக:

**82. தங்களின் அறிக்கை மற்றும் வாழ்வில் அவிசுவாசியாகவும், தேவனற்றவர்களாகவும் இருப்பவர்கள் இராபோஜனத்திற்கு அனுமதிக்கலாமா?**

இல்லை, அப்படி செய்வது தேவனுடைய உடன்படிக்கையை நிந்தித்து, முழு சபைக்கும் எதிராக தேவனுடைய கோபத்தை தூண்டுவதாகும்; ஆதலால், அதுபோன்றவர்கள் தங்கள் வாழ்வை சீர்படுத்தும் வரை கிறிஸ்து மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களின் கட்டளைப்படி, (Office of the Key) திறவுகோல் கடமையினால், தடைசெய்யும்படி கிறிஸ்தவ சபை கட்டுண்ட நிலையிலிருக்கிறது.

***

திருவிருந்தில் பங்கெடுப்பதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றிருக்க வேண்டிய திருச்சபை தகுதியைக் குறித்து இந்த கேள்வியில் நாம் படிக்கலாம். திருச்சபையில் நல் முன்மாதிரியுடன் இருக்கும் கிறிஸ்தவர்கள் மட்டுமே திருவிருந்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை சீர்திருத்த (ரிபார்ம்டு) திருச்சபை வலியுறுத்துகிறது. சத்தியத்தை செவ்வையாக அறிந்து அறிக்கை செய்து, தெய்வீக வாழ்க்கை வாழும் சபை அங்கத்தினர் மட்டுமே இதில் கலந்து கொள்ளும்படி சபையின் மூப்பர்கள் கர்த்தருடைய பந்தியை பத்திரப்படுத்த வேண்டும்.

தகுதியற்ற ஜனங்கள் இராபோஜனத்தில் கலந்து கொள்வதால் இரண்டு தீமையான விளைவுகள் நேரிடுகிறது: 1) தேவனுடைய உடன்படிக்கை நிந்திக்கப்படுவதோடு, முழு சபைக்கும் எதிராக தேவனுடைய கோபம் தூண்டப்படுகிறது, 2)தகுதியற்ற நிலையில் உட்கொள்கிறவர் தனக்குதானே நியாயத்தீர்ப்பை உட்கொள்கிறார் என்பதாகும்.

இராபோஜனத்தில் யார் கலந்து கொள்ளலாம் என்ற கேள்விக்கு மூன்றுவிதமான கருத்துக்கள் உண்டு.

1. *திறந்த திருவிருந்து* (Open Communion): இந்த கருத்தின்படி யாரெல்லாம் இந்த சாக்ரமந்தில் பங்குபெற விரும்புகிறார்களோ அவர்கள் அனைவரும் கலந்து கொள்ள இது திறந்த நிலையில் உள்ளது என்பதாகும். இதில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. இங்கே கலந்துகொள்ளும் ஒவ்வொருவரும் தங்கள் இருதயங்களை சோதித்துப்பார்க்கும்படி கேட்கப்படலாம், ஆனால் சபையின் மூப்பர்கள் அவர்களின் விசுவாசம் மற்றும் வாழ்க்கை குறித்து எதையும் அறிந்திருப்பது இல்லை. அங்கே (Modernist) விசுவாசத்தில் உறுதியில்லாதவர்களும், வேசிமார்க்கதாரும் பங்குபெறுவார்கள், ஆனால், உடன்படிக்கைக்குச் சொந்தமான (திடப்படுத்துதல் பெறாத நிலையில்) நமது பிள்ளைகள் பின்னே தள்ளப்பட்டிருப்பார்கள்! இது அப்பட்டமான தவறு, காரணம் திருவிருந்தை இயேசு உலகத்தாருக்கு கொடுக்காமல், தமது சீஷர்களுக்கு மட்டும் கொடுத்தார். “ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்” (1கொரி 5:13) என்றும், “ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரரையும் நீங்கள் விட்டு விலகவேண்டும்” (2தெச 3:6) என்றும் பவுல் சபைக்கு கூறினார். இந்த சாக்ரமந்து ஒழுங்கான வாழ்க்கை மற்றும் விசுவாசம் உடையவர்களுக்கு மட்டுமே, ஆகவே மூப்பர்கள் இவர்களுக்கு மட்டுமே மேஜையிடம் வர அனுமதி தர வேண்டும்.

2. *நெருங்கிய திருவிருந்து* (Close Communion): இந்த கருத்தின்படி ஒரே திருச்சபை அல்லது ஒரே விசுவாசப்பிரிவைச் சார்ந்தவர்கள் மட்டும் பங்கெடுப்பதாகும். இப்படி செய்வது, மற்ற எல்லா திருச்சபைகளும் பொய்யான சபைகள், அந்த சபைகளில் அங்கமாக உள்ள எல்லா கிறிஸ்தவர்களும் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல என்பது போன்ற கருத்தை தரலாம். இது நிச்சயமாக அப்படியல்ல, விசுவாசத்தில் பழமைபெற்ற மற்ற திருச்சபையில் அங்கமாக இருக்கும் ஒரு உண்மையான கிறிஸ்தவனை புறக்கணிப்பது தவறாகும்.

3. *கட்டுப்படுத்தப்பட்ட திருவிருந்து* (Restricted Communion): இந்த கருத்தின்படி, திருவிருந்தில் கலந்து கொள்ளும் அங்கத்தினர்களின் விசுவாசம் மற்றும் வாழ்க்கையை சபை மூப்பர்கள் பொறுப்புடன் கவனித்து, உண்மையான கிறிஸ்தவர்களை மேஜைக்கு அழைப்பதாகும், இதுவே முறையான கருத்தும், நாம் கடைப்பிடிக்கும் முறையுமாகும். இருப்பினும் பிற சபைகளைச் சார்ந்த கிறிஸ்தவர்கள், அவர்கள்: 1)உண்மையான சத்தியத்தை அறிக்கை செய்கிறவர்களாவும், 2)வேதத்தை மட்டும் விசுவாசிக்கும் சபையில், சரியான சாட்சியுள்ளவர்களாக... இருப்பதாக காணப்பட்டால் அவர்களும் திருவிருந்தில் அனுமதிக்கப்படலாம். ஆகவே, சபையின் அங்கத்தினராக இல்லாத மற்ற கிறிஸ்தவர்கள் திருவிருந்தில் பங்கெடுக்க விரும்பும்போது, சபை மூப்பர்களிடம் வேண்டுகோள் விடுவதும், அவர்களை மூப்பர்கள் விசாரிக்க வேண்டியதும் அவசியமாகிறது.

இந்த விதத்தில், திருவிருந்தில் உண்மையான கிறிஸ்தவர்கள் தடைபடாதபடிக்கும், அவிசுவாசமும், துன்மார்க்கமுமானவர்கள் கலந்து கொள்வதால் மேஜையின் புனிதத்தைக் கெடுத்து, தங்களுக்கும் சபைக்கும் தண்டனையை வருவிப்பதையும் தடுக்கலாம். ஆகவே இராபோஜனம் நியாயத் தீர்ப்பின் மேஜையாக இல்லாமல், ஆசீர்வாதமாக இருப்பதற்கு இந்த காரியத்தில் மூப்பர்கள் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும்.

**82-க்கான கேள்விகள்:**

1. ஒருவன் தன்னைத்தானே சோதித்தறிவதோடு, தன்னுடைய ………………………… மற்றும் ........................................................................ ஆகியவற்றில் உறுதியாக இருக்கிறான் என்று மூப்பர்களால் ............................. பட வேண்டும் என்பதை இந்த கேள்வியில் படிக்கிறோம்.
2. மூப்பர்கள் ஒருவரை அனுமதிப்பது அல்லது புறக்கணிப்பது என்பது, அவர்கள் அவரைப் பற்றி கொஞ்சமாகிலும் அறிய வேண்டும் என்பதைப் பற்றியதாகும். சரியா, தவறா? ......................
3. "புனிதத்தைக் கெடு" என்ற வினைச்சொல்லின் அர்த்தம் என்ன? ...................................................................
4. இரட்சிப்புக்கான தேவனுடைய உடன்படிக்கையின் அடையாளமாகவும், முத்திரையாகவும் சாக்ரமந்துகள் இருக்கிறது என்றால், உடன்படிக்கையின் அடையாளம் மற்றும் முத்திரையாக இருப்பதில் யார் மட்டுமே பங்குபெற முடியும். ....................................................................................................................................
5. தங்கத்தையும் வஸ்திரத்தையும் திருடிய ஆகானின் சம்பவத்தில் (யோசுவா 7), ஒரு மனிதனின் பாவம் அந்த முழு சபைக்கும் எதிராக தேவனுடைய கோபத்திற்கு காரணமானது. சரியா, தவறா? ...................
6. திருவிருந்தில் பங்குபெற விரும்பும் விசுவாசத்தில் உறுதியற்ற மற்றும் துன்மார்க்கமான ஒருவரை தடைசெய்வது... அ) இரக்கமுள்ள, ஆ) இரக்கமற்ற ...செயலாகும். எது?.........
7. தகுதியற்றவர்கள் சாக்ரமந்தில் பங்கெடுக்க தடைசெய்யும்படி எந்த வசனங்கள் சபை பொறுப்பில் உள்ளவர்களுக்கு கட்டளையிடுகிறது. அ)மத் 16:19, ஆ)கலா 1:21, இ)யோவா 20:23, ஈ)1கொரி 5:13, உ)2தெச 3:14. பதில்: .............................................
8. பின்வருவதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. "திறந்த திருவிருந்து" | .. | வேதாகம திருச்சபையில் அங்கமாக இருக்கும் நல்அறிக்கை செய்யும் விசுவாசிகள் மட்டும் |
| ஆ. "கட்டுப்படுத்தப்பட்ட திருவிருந்து" | .. | சபையின் மூப்பர்கள் |
| இ. "நெருங்கிய திருவிருந்து" | .. | விருப்பமுள்ள எவரும் திருவிருந்தில் கலந்து கொள்வது |
| ஈ. பரலோகத்தின் திறவுகோல்கள் | .. | நம்முடைய சொந்த அங்கத்தினர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவது |

9. தேவனுடைய மேஜையை பாதுகாக்கவும், பிறசபையைச் சார்ந்த மற்ற உண்மையான கிறிஸ்தவர்களும் தடைபடாதபடிக்கு எந்தவகை திருவிருந்தை நாம் கையாளலாம். ..................................................................
.............................................................................................................................................................
10. சங்கீதம் 50:16,17-ஐ எழுதவும்:

**83. திறவுகோல்களின் வேலை என்பது என்ன?**

பரிசுத்த சுவிசேஷப் பிரசங்கம் மற்றும் திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை; ஆகிய இவ்விரண்டால் பரலோக இராஜ்ஜியம் விசுவாசிகளுக்குத் திறக்கப்படுதல் மற்றும் அவிசுவாசிகளுக்கு மூடப்படுதல் ஆகும்.

***

கர்த்தருடைய மேஜையை அவிசுவாசமாக (போதனையில் தவறும்) அல்லது தேவனற்ற (ஒழுக்கத்தில் தவறும்) மக்கள் மாசுபடித்தாமல் பாதுகாக்க, சபைப் பொறுப்பில் நியமிக்கப்பட்ட நிலையில் மூப்பர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் அதிகாரம் பெற்றிருக்கின்றனர். இப்போது நாம், "திறவுகோல்களின் வேலை" என்னும் சபை அதிகாரம் குறித்த (கேள்விகள் 83,84 மற்றும் 85-ல்) பாடத்திற்கு வந்துள்ளோம்.

தேவனுடைய இராஜ்ஜியத்தை (அதாவது கண்களால் காணப்படும் மற்றும் காணப்படாத சபை) திறக்கவும், மூடவும் இரண்டு திறவுகோல்கள் உண்டு என்பதை கேள்வி 83 விளக்குகிறது. இந்த மொழிநடை நமது இரட்சகர் மத் 16:19, வெளி 1:18; 3:7,8 ஆகிய பகுதியில் கூறியுள்ள போதனையிலிருந்து வருகிறது. திறவுகோல்களான 1)அதிகாரப்பூர்வமான பிரசங்கம், 2)அதிகாரப்பூர்வமான திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை, ஆகிய இரண்டும் மூப்பர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கிறது.

திறவுகேல்களின் பயன்பாட்டினால், ஜனங்கள் திருச்சபைக்குள் வருவதற்கும் அல்லது வெளியே அடைத்து வைக்கப்படுகிறார்கள். இது வெறும் மனிதர்கள் மிகஅதிக அதிகாரம் பெற்றிருப்பது போல காணப்படுவதால் பல புராட்டஸ்டன்டு கிறிஸ்தவர்கள் இந்த சபை அதிகாரம் குறித்த திறவுகோல்களின் போதனையை புறக்கணிக்கிறார்கள். ஆனால், இது வேறே எவருடைய போதனையும் அல்லாமல், கிறிஸ்துவினுடையதாக இருப்பதால் இதற்கு மிகுந்த கவனத்தை செலுத்த வேண்டும். திறவுகோல்களின் வேலையை கவனிப்பதற்கு முன்பு, புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ள திருச்சபையின் ஆட்சியமைப்பைக் குறித்து புரிந்து கொள்ளவேண்டும். இந்த நாட்களில் பொதுவாக சபைகளில் மூன்றுவகையான திருச்சபை ஆட்சியமைப்பை கையாளப்படுவதை நாம் காணலாம். அவைகள்:

1. *ஹைரார்க்கிகல் அமைப்பு* (Hierarchical System)-- படி நிலையாய் அமைந்த அல்லது மேலிருந்து கீழாக, அதாவது போப், ஆர்ச் பிஷப், பிஷப், போதக பிதா... என்று அதிக அதிகாரத்திலிருந்து குறைந்த அதிகாரமுள்ள சபை குருவை கண்காணித்து ஆளும் சமய குருமார் அமைப்பு. உதாரணமாக, ரோமன், எபிஸ்கோபலியன், மெத்தடிஸ்ட் மற்றும் எவான்ஜலிக்கல், ப்ரதரன் போன்ற சபைகள் இந்த சபை அமைப்பை சார்ந்ததாகும்.

2. *காங்கிரிகேசனல் அமைப்பு* (Congregational System). ஸ்தல சபையின் மீது அந்த சபை மக்களே உயர்ந்த ஆட்சி அதிகாரத்தைப் பெற்றிருப்பது. இதில் சபையின் அனைத்து காரியங்களின் முடிவையும் அங்கத்தினர்களே எடுப்பது. மற்ற சபையிலிருந்து எந்த ஒரு மூப்பரும் அல்லது போதகரும் ஸ்தல சபையின் காரியங்களில் அதிகாரம் செலுத்த முடியாது. இந்த வகை அமைப்பு, பாப்திஸ்து, காங்கிரிகேசனல் மற்றும் பிறர் ஆதரவு சாராத (independent) சபைகளில் கையாளப்படுகிறது. சில இன்டிபென்டன்ட் சபைகள் அங்குள்ள மூப்பரால் மட்டும் ஆட்சி செய்யப்படுவதால் அவைகள் காங்கிரிகேசனல் சபை அமைப்பை சரியாகக் கடைப்பிடிப்பது இல்லை.

3. *பிரஸ்பிடீரியன் மற்றும் ரிபார்ம்டு அமைப்பு*: இந்த சபை அமைப்பு ஏற்றுக் கொள்வது...

அ. கிறிஸ்து சபையின் தலை (எபே 5:23) ஆவார்.

ஆ. மூப்பர்களால் (பிஷப் அல்லது பிரஸ்பிட்டர்) சபையின் பொறுப்புகள் ஆளப்படுவது. மூப்பர்கள் சபையின் மக்களால் தெரிந்து கொள்ளப்பட்டாலும், அவர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தினால் மட்டும் ஆளுகிறார்கள் (அப் 20:17,28; 1கொரி 12:28; எபி 13:7).

இ. அனைத்து மூப்பர்களும் (பாஸ்ட்டர்களும் மூப்பர்களே) அதிகாரத்தில் சமமானவர்கள், ஒவ்வொரு சபையிலும் (பாஸ்ட்டரையும் சேர்த்து) குறைந்தது இரண்டு மூப்பர்கள் இருக்க வேண்டும் (அப் 14:23; 1பேது 5:1).

ஈ. க்ளாசிஸ் மற்றும் பிரஸ்பிட்டெரீஸ் போன்ற கூடுகைகளில் கலந்து கொள்ளும் மற்ற சபைகளின் மூப்பர்களின் அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்கிறது (அப் 15:22; 1தீமோ 4:14).

உ. ஸ்தல சபை மன்றத்தின் தேவைக்கான உதவியை உயர்ந்த சபை மன்றத்திடம் அணுக உரிமையுண்டு (அப்போ 15)

இந்த வகையான ரிபார்ம்டு (பிரஸ்பிடீரியன்) சபை அமைப்பு மட்டுமே வேதத்தின் அனைத்து சபை கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டதாக இருக்கிறது; அதனால் நமது சபை அமைப்பு வசனத்திற்கு அதிக உண்மையான ஒன்று என்று சொல்லலாம்.

ஆகவே திறவு கோல்களின் அதிகாரம் சபையின் மக்களிடம் அல்ல (போதிக்கும் மற்றும் ஆளுகை செய்யும்) மூப்பர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, நம்முடைய சபைகளில் தேவனால் மூப்பர்களாக நியமிக்கப் பட்டவர்களுக்கு சரியான முதல் மதிப்பையும், கீழ்ப்படிதலையும் நாம் கொடுக்க கவனமாக இருக்க வேண்டும்.

**83-க்கான கேள்விகள்:**

1. ..................................-ன் தி............................................, சபைக்கு கிறிஸ்து கொடுத்திருப்பதால் தகுதியற்றவர்கள் திருவிருந்திக்கு வருவதை தடைசெய்ய வேண்டும்.
2. கேள்வி .............-ல் “திறவுகோல்களின்” செயலை (பொறுப்பு) குறித்த விளக்கதை நாம் காணலாம்.
3. கதவுகளைப் பூட்டுவதற்கும், திறப்பதற்கும் திறவுகோல்கள் பயன்படுவதுபோல, ஜனங்களை .................-ல் ஏற்றுக்கொள்ளவும், .............-யிலிருந்து புறம்பே தள்ளுவதற்கான .................................. இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றுள்ளனர்.
4. பரலோக இராஜ்ஜியத்தின் இரண்டு திறவுகோல்கள் என்ன?
   அ.
   ஆ.
5. திருச்சபைக்கு இந்த திறவுகோல்கள் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான வசன ஆதாரம் குறிப்பிடுக. ..........................................................................................................................................
6. திறவுகோல்கள் மற்றும் திருச்சபையின் அதிகாரம் குறித்து சரியாக அறிந்து கொள்ள, திருச்சபை அமைப்பு குறித்து புதிய ஏற்பாடு கூறுவதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். சரியா, தவறா? .................
7. பல கிறிஸ்தவ சபைகள் கொண்டிருக்கும் சபை அமைப்புகளைக் குறிப்பிடுக:
   அ.
   ஆ.
   இ.
8. வேதத்தின்படி, கிறிஸ்து ....................-ன் தலையாக இருக்கிறார், ................................ என்று அழைக்கப்படுபவர்களுக்கு ............................. கொடுத்து சபையை ஆளும் பரலோகத்தின் ........................... -களைத் தருகிறார். இது ...................................-ல் போதிக்கப்பட்டுள்ள .................................... அல்லது ரிபார்ம்டு சபை அமைப்பு ஆகும்.
9. ஒரு திருச்சபை எந்த வகையான சபை அமைப்பைப் பெற்றுள்ளது என்பது முக்கியமல்ல, மாறாக இரட்சகர் சரியாகப் பிரசங்கிக்கப்பட்டால் அது போதும். சரியா, தவறா? ......................, விளக்கம்: .........
...........................................................................................................................................................
10. மத்தேயு 16:19-ஐ எழுதுக:

**84. பரிசுத்த சுவிசேஷத்தின் பிரசங்கம் பரலோக இராஜ்ஜியத்தை திறக்கவும், மூடவும் செய்வது எவ்வாறு?**

கிறிஸ்துவின் கட்டளைப்படி, ஒரு தனிப்பட்ட மற்றும் அனைத்து விசுவாசிகளுக்கும் பறைசாற்றப்பட்டும், வெளிப்படையான சாட்சி பகரபட்டதுமாக இருப்பது என்னவெனில், எப்போதெல்லாம் அவர்கள் உண்மையான விசுவாசத்தால் சுவிசேஷத்தின் வாக்குத்தத்தத்தை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களின் எல்லாப் பாவங்களையும் உண்மையாகவே கிறிஸ்துவினிமித்தம் தேவன் மன்னிக்கிறார் என்பதாகும்; மேலும் இதற்கு முற்றிலும் மாறாக, எல்லா அவிசுவாசிகளும், மாய்மாலக்காரர்களும் மனம்திரும்பாத வரைக்கும் தேவனுடைய கோபமும், நித்திய நரகாக்கினையும் அவர்களோடிருக்கும். இந்த சுவிசேஷத்தின் சாட்சியாக தேவன் மனிதர்களை இந்த வாழ்விலும், இதற்குப்பின் வரும் வாழ்விலும் நியாயந்தீர்ப்பார் என்பதாகும்.

***

இயேசு, பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர்களிடமும் (மத் 16:19; 18:18), அவர்கள் பூமியிலே கட்டுவதை பரலோகத்திலும் கட்டப்படும் என்றும், பூமியிலே கட்டவிழ்ப்பதை பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும் என்றார். இது மனம்திரும்பாத பாவிகள் தங்கள் பாவத்திலேயே கட்டப்பட்டிருப்பார்கள் என்பதையும், மனம்திரும்பும் பாவிகள் அவர்களின் பாவத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதையும் குறிக்கிறது. தேவன் மட்டுமே மன்னிக்கவும் தண்டிக்கவும் செய்கிறார், ஆனால் யார் மன்னிக்கப்படுகின்றனர் அல்லது யார் மன்னிக்கப்படவில்லை என்பதை அதிகாரப் பூர்வமாக அறிவிக்கும்படி திருச்சபை அதிகாரத்தைப் உடையதாக இருக்கிறது. இதுவே கேள்வி 84-ல் விளக்கப்பட்டுள்ள திருச்சபையின் அதிகாரப்பூர்வமான பிரசங்கத்தின் திறவுகோல் ஆகும்.

(கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டு திருச்சபையின் மூலம் நியமிக்கப்பட்ட) ஊழியன் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போது கண்களால் காணமுடியாத (தேவனுடைய இராஜ்ஜியத்தின்) திருச்சபையின் கதவுகள் அகலமாக திறந்திருக்கிறது என்பதை கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேட்கும் அனைவருக்கும் கேட்கும்படி விளக்குகிறார். உண்மையான பிரசங்கியாரால், மனம்திரும்பும் விசுவாசிகளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவர்களுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்படுகிறது. "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோம 10:13) என்பதையும், "கிறிஸ்துவின் சுவிசேஷத்தை... விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோம 1:16) என்பதை பிரசங்கியார் அறிவிக்க வேண்டும்.

விசுவாசிகளை தமது இராஜ்ஜியத்திற்குள் கிறிஸ்து மட்டுமே அனுமதிக்கிறார், இதை பொது மக்களுக்கு அறிவிக்க தமது ஊழியர்களை வைத்திருக்கிறார். ஒரு உண்மையான பிரசங்கி கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போது, கிறிஸ்துவே அவரின் மூலமாக பேசி, தம் மீது பசி தாகமாக இருப்பவர்களுக்கு இரட்சிப்பின் கதவுகளைத் திறக்கிறார்.

ஆனால் திருச்சபையின் அதிகாரப்பூர்வமான பிரசங்கத்தின் திறவுகோலும் வசனம் பிரசங்கிகக்படுவதை கேட்கும் அனைவருக்கும் கதவை மூடுகிறது. உண்மையான ஊழியர், கிறிஸ்துவுக்கு தங்களை அர்ப்பணிக்காத அனைவரின் மீதும் வரும் நியாயத்தீர்ப்பையும் அறிவிக்கிரவராகவும் இருக்க வேண்டும். அவிசுவாசிகளும், மாய்மாலக்காரர்களும் மனம்திரும்பாமலிருக்கும் வரை அவர்கள் மீது தேவனுடைய கோபமும், நித்திய நரகதண்டனையும் நிலைத்திருக்கும். அவர்களுக்கு பரலோகத்தின் கதவுகள் எதிராக இருக்கமாகப் பூட்டியிருக்கும் என்பது திட்டமாக அறிவிக்கப்பட வேண்டும் (யோவா 3:36; லூக் 13:3)

எப்போதெல்லாம் கிறிஸ்துவின் ஊழியரால் கிறிஸ்துவின் சுவிசேஷம் அதிகாரப்பூர்வமாக பிரசங்கிக்கப்படுகிறதோ அப்போது, "திறக்கப்படுதல்" மற்றும் "மூடப்படுதல்" நடைபெறுகிறது: இரட்சிப்பின் கதவுகள் திறக்கவும், மூடவும் செய்கிறது. சுவிசேஷத்தைக் கேட்கும் அனைவருக்கும், அவர்கள் எந்தப் பக்கம் நிற்கிறார்கள் என்பதை தெளிவாக அறிவிக்க வேண்டும். உண்மையான பிரசங்கம், தேவனுக்குப் பயந்த, மறுபடியும் பிறந்த மற்றும் பாவம் மன்னிக்கப்பட்ட ஆத்துமாக்களுக்குரிய அடையாளம், மற்றும் பாவத்தைத் தொடர்ந்து நேசிக்கும் மாய்மாலக்காரர் நரகாக்கினைக்கு உட்பட்டிருக்கிறார் என்பதற்கான அடையாளத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். உங்களுடைய போதகர் தேவனுக்குப் பயந்து நியாயப்பிரமாணத்தையும், சுவிசேஷத்தையும் மாபெரும் வல்லமையோடும், தெளிவோடும் பிரசங்கிக்க வேண்டும், அதனால் பரிசுத்தவான்கள் ஆறுதல்படுத்தப்படவும், பாவிகள் மகத்துவமான தேவனுக்கு முன்பு நடுங்கவும் வேண்டும் என்று எத்தனை அதிகமாக ஜெபம் செய்கிறீர்கள்?

ஒரு ஊழியர் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போது, அவர் அவிசுவாசிகளுக்கு மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், விசுவாசிகளுக்கு ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறார் (2 கொரி 2:16)

**84-க்கான கேள்விகள்:**

1. இந்த கேள்வி, பரலோக இராஜ்ஜியத்தின் முதல் திறவுகோலான ........................................................ குறித்து விளக்கம் தருகிறது.
2. பிரசங்கியார் யாருடைய கட்டளை மற்றும் நாமத்தினால் இந்த திறவு கோலைப் பயன்படுத்துகிறார்? ..............................................
3. போதகர் பிரசங்கிக்கும்போது கிறிஸ்து சிலருக்கு கதவைத்திறந்து சிலருக்கு எதிராக கதவை மூடுகிறார்.

சரியா, தவறா? ...................

4. ஒரு ஊழியர் பிரசங்க திறவுகோலை சரியாகப் பயன்படுத்தியும், ஜனங்கள் எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்பதை சொல்ல தவற முடியுமா? ........................, அவர் இந்த திறவுகோலை சரியாகப் பயன்படுத்தி மாய்மாலக்காரர் மனம்திரும்பாத நிலையில் நரகத்திற்கு செல்வார்கள் என்பது சரியா? .................
5. ஒரு அவிசுவாசியோ அல்லது மாய்மாலக்காரரோ தேவனால் இந்த உலகிலேயே நியாயந் தீர்க்கப்படுவார் என்று ஒரு ஊழியர் சொல்வதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. சரியா, தவறா? ................
6. எப்போதெல்லாம் நாம் உண்மையான ................................., ................................., ................................... ஏற்றுக் கொள்கிறோமோ அப்போது நம்முடைய எல்லாப் .................................., .................................. கிறிஸ்துவினிமித்தம் .................................. என்பதாகும்.
7. பிரசங்க திறவுகோலைப் பயன்படுத்தி சபையில் உள்ள பலரின் இருதயங்களின் நிலைகளை ஒரு போதகர் அறியலாம். சரியா, தவறா? ....................., விளக்கம்: ...........................................................................
.............................................................................................................................................................
8. ஆலயத்தின் கதவுகள் ஞாயிற்றுக் கிழமைகளில் அனைத்து வகையானவர்களுக்காகவும் திறந்திருக்க வேண்டும். ................., வரும் அனைவரும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட வேண்டும். சரியா, தவறா? ........................
9. ஒரு ஊழியர் தமது பிரசங்கத்தைப் ஆயத்தப்படுத்தும்போதும், அதைப் பிரசங்கிக்கும்போதும் அவருக்காக சபை அங்கத்தினர் ஜெபிக்க வேண்டும் ஏன்? ...........................................................................................
.............................................................................................................................................................
10. அப்போஸ்தலர் 10:42,43. எழுதுக

**85. பரலோக இராஜ்ஜியம் திருச்சபை ஒழுங்கு நடவடிக்கையினால் திறக்கப்பட்டு, மூடப்படுவது எப்படி?**

கிறிஸ்துவின் கட்டளைப்படி, கிறிஸ்தவன் என்று தன்னை சொல்லியும், அவன் உபதேசத்திலும், வாழ்விலும் சீர்கெட்டவராக/உறுதியற்றவராக இருக்கும்போது, சகோதர அன்புடன் பலமுறை எச்சரித்தும் தங்கள் தவறான மற்றும் தீய வழியிலிருந்து மனம்திரும்பாத நிலையில், அவர்களைக் குறித்து திருச்சபையிடம் அல்லது சம்மந்தப்பட்ட சபை பொறுப்பாளர்களிடம் புகார் செய்யப்பட வேண்டும்; அவர்களுக்கும் கீழ்ப்படிய மறுக்கும்போது, அவர்களுக்கு பரிசுத்த சாக்ரமந்துகள் மறுக்கப்பட்டு, கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திலிருந்து தேவனால் பிரிக்கப்படுவார்கள்; ஒருவேளை அவர்கள் தங்களைத் திருத்தி வாழ்வதற்கான உத்திரவாதத்தை கொடுத்து, அப்படியே வாழும்போது மீண்டும் அவர்கள் கிறிஸ்து மற்றும் அவருடைய சபையின் அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளப்படுவர்.

***

கிறிஸ்து தமது சபையின் அதிகாரப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு பிரங்கம் மற்றும் திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை என்னும் இரண்டு திறவுகோல்களைக் கொடுத்துள்ளார். பலரால், கிட்டத்தட்ட அநேக திருச்சபைகளால் இந்த இரண்டாவது காரியம் வெறுக்கப்படுகிறது. ஆனால் வேதாகம சீர்திருத்த திருச்சபைகள் அங்கீகரிக்கப்பட்ட திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோலை, கேள்வி 85-ல் விளக்கப்படுவது போல, கையாள்கிறது.

திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோல் திருவசனப் பிரசங்கத்தை பின்பற்றியதாக இருக்க வேண்டும். பிரசங்கம் என்னும் திறவுகோலால் தனிப்பட்ட நபர்கள் மனமாற்றத்திற்குட்பட்டு பரலோக இராஜ்ஜியத்துக்குள் கொண்டுவரப்படுவதால், இரண்டாவது திறவுகோலின் பயன்பாட்டினால் அவர்கள் கண்களால் காணப்படும் ஸ்தல திருச்சபைக்குள் அங்கமாக கொண்டு வரப்பட வேண்டும். சபை மூப்பர்கள் மனமாறியதாகக் கூறுபவர் சபையின் அங்கமாக மாறுவதற்குகான கதவுகளைத் திறக்கலாமா அல்லது வேண்டாமா என்பதை முடிவு செய்ய அவர்களின் அறிக்கை மற்றும் வாழ்க்கையை கட்டாயமாக ஆராய வேண்டும். இவ்விரு காரியங்களும், திருச்சபையின் தலையாகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மற்றும் அதிகாரத்தால் செய்யப்பட வேண்டும். திருச்சபைக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் தொடர்ந்து மூப்பர்களின் ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோலுக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இவ்விரண்டு திறவுகோல்களும் (எப்போதும் தனிமைப் படுத்தப்படக் கூடாது) ஒன்றாக பயன்படுத்தப்படும் நிலையில், கர்த்தருடைய வார்த்தையின்படி, அவைகளுக்கு நான்கு விதமான நோக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. கிருபையினால், விசுவாசத்தின் மூலம் சபைக்கு சொந்தமான, ஆனால் வெளியில் இருப்பவர்கள் இதனால் உள்ளே கொண்டு வரப்பப் பயன்படுகிறது.

2. அவிசுவாசம் மற்றும் கீழ்ப்படியாமையினிமித்தம் வெளியில் இருக்க வேண்டியவர்கள், ஆனால் உள்ளே இருக்கிறார்கள், இவர்கள் மீண்டும் சபைக்கு வெளியே கொண்டுவர பயன்படுத்தப்படுகிறது.

3. இவைகள் வெளியிலிருக்க வேண்டியவர்களை அவர்களின் முரட்டாட்டத்தினிமித்தம் வெளியிலேயே இருக்கச் செய்ய பயன்படுகிறது.

4. உள்ளே இருக்க வேண்டியவர்கள், வெளியே செல்லும்படி சோதிக்கப்படும் போது, அவர்கள்

மறுபடியும் பிறந்தவர்களானதால், அவர்களை உள்ளேயே இருக்கச் செய்ய பயன்படுகிறது.

தவறான வழியில் செல்லும் அங்கத்தினர்கள் மீது திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதை பலர் எதிர்க்கின்றனர். சபை அங்கத்தினர்களின் தேவனற்ற காரியங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கூடாது என்பதற்கான காரணங்கள்:

அ. ஒழுக்கப்பயிற்சி ஜனங்களை புண்படுத்துகிறது, ஆகவே இதைக் கைவிட வேண்டும். மேலும் தவறு செய்யும் நபரைக் கண்டிக்கும்போது அவர் புண்படுத்தப்படுவதோடு, சபையில் உள்ள அவருடைய நண்பர்களும் துக்கப்படுத்தப்படுகின்றனர். இந்த எதிர்ப்பிற்குரிய பதில், கிறிஸ்துவைப் புண்படுத்துவதைப் பார்க்கிலும் மனிதன் துக்கப்படுவது மேலானது. ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோல் பயன்படுத்துவது அன்பற்றதும், கொடூரமானது என்றால், இது சம்மந்தப் பட்ட பாவங்களை கிறிஸ்துவின் மீது சுமத்துவதற்குச் சமம்! உண்மை என்னவெனில், கிறிஸ்தவ ஒழுங்கு நடவடிக்கையை கைவிடுவது என்பது பாவம் செய்யும் நபரின் ஆத்துமாவை அதே பாவத்திலேயே நிலைக்கச் செய்து, கீழ்ப்படியாமல் பாவத்திலேயே மடியும்படி விட்டுவிடுவதற்குச் சமம். ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோலை பயன்படுத்துவதால் வரும் பிரதிபலன், கொரிந்து சபையின் அங்கத்தினர் மனம்திரும்புதலுக்குக் கொண்டுவரப்பட்டான் (1கொரி 5:13; 2கொரி 2:6,7,8-ஐப் பார்க்கவும்), ஆக இதுபோன்ற முடிவு எவரையும் புண்படுத்தாது!

ஆ. ஒழுக்கப்பயிற்சி தவறு, காரணம் இது ஒருவரின் இருதயத்தை குற்றப்படுத்துவதாகும். நியாயமாகத் தோன்றும் இந்தக் கூற்றும் முற்றிலும் தவறான ஒன்றேயாகும். திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை ஒருபோதும் தனி நபரின் இருதயத்தை குற்றப்படுத்துவதைக் குறித்தது அல்ல; மாறாக ஒருவரின் அறிக்கை மற்றும் வாழ்வை சீர்தூக்கிப் பார்ப்பதாகும். கிறிஸ்து மூப்பர்களிடம் ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோலை பயன்படுத்தும்படி கூறியுள்ளார் எனில், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, தங்களுடைய பொறுப்பில் உள்ள சபை மக்களின் விசுவாசம் மற்றும் வாழ்வை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மத் 7:16-20 என்னும் பகுதி "நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்" --மத் 7:1-றோடு முரண்பாட்டை ஏற்படுத்தவில்லை. 1கொரி 5:7; 1தெச 5:14; 2தெச 3:6,14,15; 1தீமோ 5:20 மற்றும் தீத்து 3:10 போன்ற பகுதிகளை பவுல் எழுதும்போது கிறிஸ்துவின் (மத் 7:1) வசனங்களை மீறியதாக வருந்தவில்லை. மூப்பர்கள் திருச்சபைக்குள் தவறு செய்வோரை கண்டிப்பது தவறு என்றால், அதற்கு முதலாவதாக அவர்களை சபைக்குள் அங்கமாக ஏற்றுக் கொண்டு அங்கீகரித்ததும் தவறாகுமே! ஒருவருடைய இருதயத்தின் உள்ளான எண்ணங்கள் தேவனுக்கு மட்டுமே தெரியும் என்றாலும், அவருடைய அறிக்கை மற்றும் வாழ்க்கையும் சபைக்கு தெரிகிறது, அப்போது அவர் திருவசனத்தின் மேன்மைக்கு ஏற்ப வாழ்கிறாரா என்று சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும்.

இ. சபை தனது அங்கத்தினர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் பகுதிகளை கண்டு கொள்ளக் கூடாது. இதற்கு பதில்: கிறிஸ்து சபையில் உள்ள மூப்பர்களின் பொறுப்பில் கொடுத்துள்ள ஒவ்வொருவரின் ஆத்துமாவைக் குறித்தும் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றார்கள் (எபி 13:17). சபை அங்கத்தினரின் தனிப்பட்ட மற்றும் பொது வாழ்வைக் குறித்து திருவசனம் கடுமையான வேறுபாட்டை உடனடியாக காண்பிப்பது இல்லை. மூப்பர்கள் சபை அங்கத்தினர்களின் தனிப்பட்ட வாழ்வின் காரியங்களில் தலையிடக் கூடாது, ஏதாகிலும் ஒன்றைக் குறித்து அதிகம் சத்தம்போடக் கூடாது; ஆனால், கிறிஸ்துவின் ஆடாக சபையில் அங்கமாக இருப்பவர்களின் ஆத்துமா வளர்ச்சிக்கான பொறுப்பு மூப்பர்களிடம் இருப்பதால், முறைப்படுத்தப்பட்ட வீடு சந்திப்புகள், தனிப்பட்ட சந்திப்பு, தேவைப்பட்டால் தனிப்பட்ட விசாரணை போன்றவைகளை அவசியப்படுத்துகிறது (அப் 20:20). தனிப்பட்ட நிலையில் கையாளப்படும் ஒழுக்கப்பயிற்சி தோல்வியடையும்போது அது பொதுவான நிலைக்கு தள்ளப்படுகிறது (மத் 18:17).

சபை ஒழுங்கு நடவடிக்கைக்கான செயல்முறையை கேள்வி 85 விளக்குகிறது. இவைகள் மத்தேயு 18:16-18-ல் கிறிஸ்துவின் போதனைகளைச் சார்ந்ததாகும். இந்த திருவசன செயல்முறை, அரிதாக கடைப்பிடிக்கப்பட்டாலும், மிகவும் முக்கியமானது.

1. தவறு செய்யும் தனது சக விசுவாசி அதிலிருந்து மீட்கப்படுவதில் ஒவ்வொரு விசுவாசிக்கும் பொறுப்பு உண்டு. ஒருவரின் செயலால் நீங்கள் புண்படுத்தப்பட்டீர்கள் என்றால், புண்படுத்தியவரிடம் நீங்கள் தனியாக சென்று உண்மை அறியும் நிலையில் பேச வேண்டும். ஒருவேளை நீங்கள் மற்றொருவரை தெரிந்தே துக்கப்படுத்தியிருந்தால் நீங்கள் சென்று அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

2. பாவம் செய்யும் நபர் திருந்தவில்லை எனில், ஏற்பட்ட பிரச்சனையை இரண்டு பக்கமும் கேட்டறிய இரண்டு சாட்சியான நபர்களை நீங்கள் அழைத்துச் செல்ல வேண்டும்.

3. இப்போதும், பாவம் செய்யும் நபர் தனது பாவத்தை ஏற்றுக் கொண்டு, அதை அறிக்கை செய்து விட்டுவிட மனதில்லை எனில், சபையில் மூப்பர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அவர்கள் இந்தக் காரியத்தைக் குறித்து தீர்ப்பு செய்வார்கள்.

4. மூப்பர்கள் முதலாவது பாவம் செய்தவர் மனம் திரும்பும்படி அன்புடன் கண்டிப்பார்கள். இப்போதும், அவர் கீழ்ப்படியவில்லை எனில் திருச்சபையின் சாக்ரமந்து மற்றும் பொறுப்புகளிலிருந்து நீக்கப்படுவார்கள். இப்போதும் அவர் மனம்திரும்பாமல் இருந்தால், முடிவாக சபை நீக்கம் செய்யப்படுவார் --சபையிலிருந்து தூக்கி எறியப்படுவது புறஜாதி (அவிசுவாசி) எனக் கருதப்படுவார்.

திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை கிறிஸ்தவரை சபையிலிருந்து நீக்குவது என்று அர்த்தமல்ல, மாறாக

கிறிஸ்தவரை அவர் செய்யும் பாவத்திலிருந்து பிரித்தெடுப்பதாகும். இருப்பினும், அவர் மனம்திருந்தாத போது, சபை என்னும் சரீரம் தீட்டுப்படாதபடிக்கும், கிறிஸ்துவின் கோபம் சபையின் மீது வராதபடிக்கும், பாவம் செய்யும் அந்த நபர் தள்ளி வைக்கப்படுகிறார் (1கொரி 5:6,7). எல்லா பாவங்களும் தேவனால் சபிக்கப்பட்டவைகள், சபை மக்கள் மத்தியில் பாவம் செய்யப்படும்போது அது சரியாக கவனிக்கப்பட்டு நீதியாக சரிசெய்யப்பட வேண்டும். பிறர் முன் சாட்சி குறைவை ஏற்படுத்தும்படி செய்யப்பட்ட எந்த பாவமும் அலட்சியம் செய்யப்படாமல், அதற்கேற்ற ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். எத்தனை பெரிய பாவமாக இருந்தாலும், மனம்திரும்பி வரும் எவரையும் மன்னிக்கவும், மீண்டும் ஏற்றுக் கொள்ளவும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பது கவனிக்கப்படத்தக்கது. மனம்திரும்பும் எவருக்கும் கிறிஸ்து பாவமன்னிப்பை வாக்கு செய்துள்ளார், ஆகவே அவருடைய சரீரமாகிய சபையும் அதைச் செய்ய வேண்டும்.

கிறிஸ்தவ ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோலைப் பயன்படுத்த தவறும், சபை கிறிஸ்துவின் சபையாக இருக்க முடியாது. உங்களுடைய சபை எப்படி?

**85-க்கான கேள்விகள்:**

1. திருச்சபை ஒழுங்கு நடவடிக்கை என்னும் திறவுகோல்... அ)அதிகமாக, ஆ)அரிதாக, இ)உண்மையாக... இன்றைய எல்லா சபைகளிலும் பயன்படுத்தப் படுகிறது. எது சரி? .........
2. பாவம் செய்யும் சபை அங்கத்தினரை ஒழுக்கப் பயிற்சிக்குட்படுத்துவதை தவறும் சபை... அ)அவர்களின் மேம்பாட்டைக் குறித்து அதிக அக்கரையுடன் இருக்கிறது, ஆ)கிறிஸ்துவின் அன்பு மற்றும் பொறுமையைக் காண்பிக்கிறது, இ)கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறது, அதற்கான தீமையான பிரதிபலன்களை காணும். எது சரி? .........
3. இரண்டு திறவுகோல்களுக்குமிடையே உள்ள உறவு என்ன? ........................................................................
   ........................................................................................................................................................................
4. திறவுகோள்களின் நான்குவிதமான நோக்கங்களில் ஒன்றை எழுதுக: ........................................................................
   ........................................................................................................................................................................
5. திருச்சபை ஒழுக்கப் பயிற்சிக்கு எதிராக பொதுவாகக் கொடுக்கப்படும் தவறான மூன்று எதிர் கருத்துக்கள் யாவை?
   அ.
   ஆ.
   இ.
6. பாவம் செய்யும் சபை அங்கத்தினர்களை மூப்பர்கள் கண்டிக்க வேண்டும் என்பதற்கான வசனப் பகுதியை 2தெசலோனிக்கியரிலிருந்து எடுத்தெழுதுக: ........................................................................................
   ........................................................................................................................................................................
   ........................................................................................................................................................................
   ........................................................................................................................................................................
7. திருச்சபை ஒழுங்கு நடவடிக்கையின் நோக்கம்: அ)பாவியை கிறிஸ்துவிடம் மீண்டும் கொண்டு வருதல், ஆ)மக்களை வெட்கப்படுத்துதல், இ)திருச்சபையை கிறிஸ்துவுக்காக சுத்தமாக பாதுகாத்தல், ஈ)திருச்சபை அங்கத்தினர் பட்டியலிலிருந்து ஜனங்களை நீக்குதல், உ)தேவனுக்குப் பயப்படும் பயத்தில் ஜனங்களை வைத்திருத்தல்... எது? .............
8. பின்வருவதை பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. ஒழக்கப்பயிற்சியின் முதல்படி | .. | "ஒருவர் அல்லது இருவரை உன்னோடு கூட்டிக் கொண்டு போ" |
| ஆ. ஒழுக்கப்பயிற்சியின் இரண்டாம்படி | .. | "அவன் உனக்கு அஞ்ஞானியைப் போல இருப்பானாக" |
| இ. ஒழுக்கப்பயிற்சியின் மூன்றாம் படி | .. | "தனியாக சென்று அவனுடைய தவறை அவனுக்கு அறிவி" |
| ஈ. ஒழுக்கப்பயிற்சியின் நான்காம் படி | .. | "சபைக்குத் (பொறுப்பில் உள்ளவர்களுக்கு) தெரியப்படுத்து" |

9. தனியொரு நபர் செய்யும் பாவத்தை, முதலில் அவரிடமே சென்று அதைக் குறித்து எதையும் அவரிடம் பேசாமல், மற்றவரிடம் கூறுவது சரியே. சரியா, தவறா? ..................., விளக்கம்: ....................
   ........................................................................................................................................................................
10. யாக்கோபு 5:20-ஐ எழுதுக:

## பகுதி மூன்று: என்னுடைய நன்றியுடைமை -- (கேள்விகள் 86 - 129)

**86. நாம், நம்முடைய எந்தவிதமான தகுதியினிமித்தம் இல்லாமல், கிருபையினால் கிறிஸ்துவின் மூலம் நம்முடைய இழிவு நிலையிலிருந்து மீட்கப்படுவதால், நாம் ஏன் நற்கிரியைகள் செய்ய வேண்டும்?**

கிறிஸ்து நம்மை தம்முடைய இரத்தத்தால் மீட்டு, அவருடைய பரிசுத்த ஆவியினால் நம்மை அவருடைய சாயலின்படி புதுப்பிக்கிறார், ஆகவே நமது மூலமாக அவர் மகிமைப்படும்படி, நாம் அவருடைய ஆசீர்வாதங்களுக்காக நம்முடைய ஜீவகாலம் முழுவதும் அவருக்கு நன்றியுடையவர்களாக நம்மை காண்பிக்க வேண்டும்; மேலும், இது போன்ற கனிகளினால் நம்முடைய விசுவாசமும் நமக்கு உறுதிபடுத்தப்படுவதோடு, நம்முடைய தேவபற்றுள்ள நடக்கையினால் பலரை கிறிஸ்துவுக்கு சொந்தமாக்கவும் முடியும் என்பதால் நற்கிரியைகள் அவசியம் ஆகும்

***

நம்முடைய இரட்சிப்பைக் குறித்த கேட்டகிசத்தின் பெரிய மற்றும் இரண்டாவது பகுதியை (கேள்விகள் 12-85) நாம் முடித்த நிலையில், இப்போது நாம் "நன்றியுடைமை மற்றும் ஊழியம்" என்னும் கேட்டகிசத்தின் மூன்றாவதும் மற்றும் முடிவுமான பகுதியை படிக்க ஆரம்பிக்கலாம்.

நமக்கு இரட்சிப்பை கொடுத்திருக்கும் தேவனுக்கு நாம் எவ்வளவாக கடன்பட்டுள்ளோம்! அவருடைய இரக்கத்திற்காக தேவனுக்கு நம்மையே அவருக்கு கீழ்ப்படிந்த வேலையாட்களாக எப்போதும் ஒப்புக் கொடுப்பதால் நம்முடைய நன்றியுணர்வை நாம் தெரிவிக்கலாம். எவனுக்கு அதிகமாக மன்னிக்கப்பட்டதோ பதிலுக்கு அவன் அதிகமாக நேசிப்பான் (லூக் 7:47) என்று இயேசு ஒருமுறை கூறினார். நீங்கள் உண்மையாகவே கிறிஸ்துவால் பாவத்திலிருந்தும், அதன் நரகாக்கினையிலிருந்தும் மீட்கப்பட்டிருப்பீர்களானால், மனமாறிய பரிசுத்த ஜீவியத்தால் உங்களுடைய நன்றியுணர்வை நீங்கள் தெரிவிப்பீர்கள்; மேலும் தேவனுடைய கிருபையிலும் சத்தியத்திலும் தொடர்ந்து வளரும்படி நீங்கள் தினமும் அவருடைய வார்த்தையை வாசித்து ஜெபிக்கிறவர்களாக இருப்பீர்கள்.

மறுபிறப்பு மற்றும் மனமாற்றத்தின் அனுபவத்தை நாம் தனிப்பட்ட நிலையில் அனுபவித்திருந்தால் மட்டுமே (தேவனுக்கு கீழ்படிந்த) பரிசுத்தமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியும் என்பதை நாம் அறிய வேண்டியது மிகவும் அவசியம். மக்களை கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் என்று (Modernists) நவீன சிந்தனையாளர்கள் கூறினாலும், கிறிஸ்துவுக்காக வாழ்வதை சாத்தியமாக்கும் மீட்பைக் குறித்த கிறிஸ்தவ உபதேசங்களை மறுதலிக்கிறவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவ உபதேசங்களே நம்முடைய கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாகும். அவிசுவாசிகளான நவீன சிந்தனையாளர்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ முடியாது.

நற்கிரியைகளைக் குறித்த வேதாகம போதனைகள் கேள்விகள் 86 முதல் 91 வரையில் உள்ளவற்றில் நாம் போதிக்கப்படுகிறோம். அந்த வரிசையில்...

| | |
|---|---|
| அ. நற்கிரியைகளின் நோக்கம் -86, | ஆ. நற்கிரியைகளின் அவசியம் -87 |
| இ. நற்கிரியைகள் தோன்றுமிடம் -88-90 | ஈ. நற்கிரியைகளின் தன்மை -91 |

நற்கிரியைகள் என்பது, நம்முடைய புதுப்பிக்கப்பட்ட இருதயத்தில் தோன்றி, தேவனுடைய சித்தத்தின்படி நமது சரீரத்தால் செய்யப்படும் செயல்களும், கனிகளுமாகும். அவைகள் அன்பினால் தேவனுக்கு கீழ்ப்படிந்த நிலையில், அவருடைய உதவியுடன், அவரை சந்தோஷப் படுத்தும் நிலையில் நாம் செய்யும் செயல்களாகும்.

நாம் நற்காரியங்களைச் செய்ய வேண்டியது ஏன்? இதற்கான பதில்: நாம் கிறிஸ்துவின் இரத்ததால் (மரணம்) மீட்கப்பட்டு, அவருடைய பரிசுத்த ஆவியால் (மறுபிறப்பு) புதுப்பிக்கப் பட்டிருப்பதால் ஆகும். நாம் நற்காரியங்கள் செய்யும்படி மீட்கப்பட்டிருக்கிறோம். நாம் மீட்கப்படவோ அல்லது புதுப்பிக்கப் படுவதற்காகவோ நற்காரியங்கள் செய்வதில்லை. மீட்கப்பட்ட கிறிஸ்தவர்கள் செய்யும் நற்காரியங்கள் பலவகையான நோக்கங்களை உடையதாக இருக்கிறது. அவைகள்...

1. நாம் தேவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்கிறோம் என்பதற்காக. தேவனுக்கு கீழ்ப்படிந்தவர்களாக நற்காரியங்கள் செய்வதைக் காட்டிலும் வேறு எப்படி நமது நன்றியுணர்வை நாம் காண்பிக்க முடியும்?

2. தேவன் நம்மில் மகிமைப்படும்படியாக. அவருடைய படைப்புகள் அவர் சொல்வதைக் செய்யும்போது அவருடைய நாமம் கனப்படுத்தப்படுகிறது. ஆனால் தேவனற்றவர்கள் தங்கள் தீமையான செயல்களால் தேவனை அவமதிக்கிறார்கள்.

3. நம்முடைய விசுவாசம் மற்றும் கிறிஸ்துவுடன் நம் ஐக்கியத்தின் உறுதிப்பாட்டை நாம் பெறலாம். நாம் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறவர்களாக இருந்தால் நாம் தேவனுடையவர்கள் என்ற உறுதிப்பாடு நமக்கு இல்லை. "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" (1யோவ 2:3). விசுவாசத்தின் உறுதிப்பாடு மற்றும் கீழ்ப்படிதலின் வாழ்வு இவ்விரண்டையும் தனித்தனியே பிரிக்க முடியாது.

4. மற்றவர்களை கிறிஸ்துவுக்காக கொள்ளைப் பொருளாக்க முடியும். நம்முடைய சாட்சியுள்ள வாழ்க்கையினால் மட்டுமே மற்றவர்கள் கிறிஸ்தவ வாழ்வு என்றால் என்ன என்பதை அறிந்து கிறிஸ்தவராக

மாற உற்சாகப்படும்படி நாம் சிறந்த சாட்சிகளாக மாறமுடியும்.

நீங்கள் வாழும் வாழ்க்கையை பிறர் பார்க்கும்போது நீங்கள் கிறிஸ்து மற்றும் அவருடைய வார்த்தையின் அடையாளமாக இருக்கிறீர்களா? இந்த நான்கு நோக்கங்களும் நம்முடைய வாழ்வில் நிறைவேறும்படி நாம் "நற்கிரியைகள் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாக" (தீத் 2:14) இருப்போமாக!

**86-க்கான கேள்விகள்:**

1. கேட்டகிசத்தின் மூன்று பகுதிகள்: அ) என்னுடைய ..............................................................................., ஆ)என்னுடைய ................................., இ) என்னுடைய ................................................
2. நாம் உண்மையிலேயே பாவம் மற்றும் அதன் நரகாக்கினையிலிருந்து மீட்கப்பட்டிருப்போமானால், நாம் கிறிஸ்துவுக்கு நன்றியுணர்வும், சேவை செய்கிறவர்களாகவும் இருப்போம். சரியா, தவறா? ................
3. கிறிஸ்து கன்னியின் வயிற்றில் பிறந்தது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலை மறுதலிக்கும் ஒருவர் அவருடைய கற்பனைகளின்படி வாழும் நல்ல கிறிஸ்தவராக வாழ முடியும். சரியா, தவறா? .................
4. கேள்விகள் 86 முதல் 91 வரை நமக்கு போதிப்பது என்ன? .................................................................................. ..................................................................................................................................................................
5. இந்த கேள்வியின் படி... அ)நம்முடைய இழிவான நிலையிலிருந்து நாம் மீட்கப்பட, ஆ)தேவனுக்கு முன்பாக நாம் அங்கீகாரம் பெற, இ)பரிசுத்த ஆவியினால் நாம் புதுப்பிக்கப்பட்டிருப்பதால், ஈ)மற்றவர்களை பார்க்கிலும் நாம் சிறந்தவர்கள் என்பதற்காக, உ)மற்றவர்களை நாம் கிறிஸ்தவர்களாக்க... நாம் நற்காரியங்களை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். எது சரி? .............
6. நற்கிரியைகள் என்பது... அ)நன்றியின் கனிகளாகும், ஆ)தம்மைப் படைத்த தேவனுக்கு முன்பான தன்னுடைய கடமையாகும், இ)நல்லது, ஆனால் அவசியமில்லை... எது? ..........
7. நாம் கிறிஸ்துவுக்குள் விசுவாசம் உடையவர்களாக இருக்கிறோம் என்பதற்கும், (கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்த நிலையில்) நற்கிரியைகள் செய்வதற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? ..................................................................................................................................................................
8. கிறிஸ்துவின் ஆவியால் நாம் அவருடைய .......................... படி புதுப்பிக்கப்பட்டிருப்பதால், நம்முடைய ................................ ஜீவியத்தால் நாம் அவருக்கு நன்றியுடன் இருப்பதை நாம் வெளிப்படுத்த வேண்டும்.
9. நாம் அவருடைய இராஜரீக, அன்பின் பிள்ளைகளாக அவருடைய சித்தத்தைச் செய்ய நாம் விரும்புவோம் என்பதால் அவர் நம்மை இரட்சிக்கிறார். சரியா, தவறா? ................
10. தீத்து 3:8-ஐ எழுதுக:

**87. தங்களுடைய மனம்திரும்பாத மற்றும் நன்றிகெட்ட வாழ்விலிருந்து தேவனிடம் திரும்பாதவர்கள் இரட்சிக்கப்பட முடியாதா?**

ஒருபோதும் முடியாது; திருவசனம் சொல்வது போல, அசுத்தன், விக்கிரகாராதனைக்காரன், விபச்சாரக்காரன், திருடன், பொருளாசைக்காரன், மதுபானப்பிரியன், அவதூறு பேசுபவன், கொள்ளைக்காரன் போன்ற எவரும் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பது இல்லை.

***

நற்கிரியைகள் நன்றியுணர்வின் கனிகள் என்ற நிலையில் அவைகள் மிகவும் விரும்பப் படத்தக்கவைகளாக இருப்பினும், அவைகள் மிகவும் அவசியமானவைகள் அல்ல என்ற எண்ணம் நமக்கு வரலாம். ஆனால் அது சரியானது அல்ல. நற்கிரியைகள் நிறைந்த வாழ்வு கிறிஸ்தவர்களுக்கு மிகவும் அவசியமானதாகும், கற்பனைகளை மீறி பாவத்தில் வாழ்பவர்கள், கிறிஸ்தவர்கள் என்றாலும், சபை அங்கத்தினர்கள் என்றாலும் பரலோகத்திற்குள் நுழைய முடியாது என்று வேதம் எச்சரிக்கிறது.

பரிசுத்தமான வாழ்வைக் குறித்து கவலையற்றிருக்கும் ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவனே அல்ல. கிறிஸ்துவின் ஆவியானவர் நம்முடைய வாழ்வை பரிசுத்தமாக்காவிட்டால் நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அல்லவே. நம்முடைய "விசுவாசமும்" பொய்யானதாகவும் உண்மையும் ஜீவனுமற்றதாகவும் இருக்கும்.

ஆனால், நற்கிரியைகள் கிறிஸ்தவ வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது என்று கூறினாலும், அவைகளினால் நமது இரட்சிப்பை நாம் சம்பாதிக்க முடியாது. ரோமன் கத்தோலிக்க சபை நற்கிரியைகள் இரட்சிப்பை சம்பாதிக்கிறது என்று போதிக்கிறது, ஆனால் இது கண்டிக்கப்பட வேண்டிய உபதேசம். நற்கிரியைகள் செய்யும்படியாக நாம் மீட்கப்பட்டுள்ளோம் என்று வேதம் கூறுகிறது (தீத் 2:14); ஆனால் நாம் நற்கிரியைகள் செய்வதினால் இரட்சிக்கப்படுகிறோம் என்று போதிக்கவில்லை (தீத் 3:5). இவ்விரு போதனைகளுக்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு.

கற்பனையை மீறுகிறவர்கள் "பரலோக இராஜ்ஜியத்துக்குள்" பிரவேசிக்க முடியாது என்று கேட்டகிசம் சொல்வதால், இது வேதத்திற்கு உண்மையுள்ளதாக இருக்கிறது. தேவனுடைய சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக வாழ பரிசுத்த ஆவியானவர் நமக்கு விருப்பம் தரவில்லை என்றால் நம்மிடம் பரிசுத்த ஆவியானவர் இல்லை என்பதாகும். அப்படியானால் நாம் இந்த உலக வாழ்வில் பூரணராக முடியுமா? முடியாது, மாறாக நாம் பாவம் செய்யும்போது உண்மையாகவே அறிக்கை செய்து, பூரணமாக வாழ

எப்போதும் முயற்சி செய்கிறவர்களாகவும், அதற்காக ஜெபிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரி 6:9,10; கலா 5:19-21; மற்றும் எபே 5:5,6 ஆகிய பகுதிகளில் வரிசைப் படுத்தியுள்ள பாவங்களைக் குறித்து இந்த பதில் பேசுகிறது. இந்தப் பாவங்களில் நிலைத்திருப்பது மட்டும் ஒருவரை நரகத்திற்குள்ளாக்கும் என்று நாம் நினைக்க கூடாது. "பேராசை" என்னும் ஒரே பாவம் மட்டும் சிந்தனையை அல்லது சரீரத்தை சார்ந்த எல்லா வகைப் பாவத்தையும் உள்ளடக்குகிறது. பாவ மன்னிப்புக்காகவும், பாவத்தின் சோதனைகளுக்கு எதிராக தேவைப்படும் பெலத்திற்காகவும் தினமும் நாம் ஜெபிக்க வேண்டும்.

நீங்கள் தேவனுடைய நீதி மற்றும் கீழ்ப்படிதலைக் குறித்த தாகத்தையும், பசியையும் உடையவர்களாக இருக்கும்படி கிறிஸ்துவின் ஆவியானவர் உங்களுக்குள் செயல்படுகிறாரா?

**87-க்கான கேள்விகள்:**

1. பரிசுகளைப் பெறும் சிலர் நன்றியுடையவர்களாக இருப்பதில்லை, அதுபோல சில உண்மையான கிறிஸ்தவர்கள் நன்றியுடைய வாழ்வு வாழ்வது கிடையாது. சரியா, தவறா? .................
2. பரிசுத்தமான வாழ்க்கை -- நற்கிரியைகள்... அ)அவசியம், ஆ)அவசியமல்ல, இ)பயன்படும், ஆனால் பரலோகம் போவதற்கு அவசியமானதல்ல... எது? ...........
3. நற்கிரியைகள் மற்றும் இரட்சிப்பு இவைகளைக் குறித்து ரோமன் கத்தோலிக்க போதனை என்ன? ..............................................................................................................................................................
4. கிறிஸ்தவ கீழ்ப்படிதல் மற்றும் நற்கிரியைகள் நமக்கு இரட்சிப்பை சம்பாதித்து தருகிறது என்பீர்களா? அல்லது அவைகள் புதுப்பிக்கப்பட்ட இருதயத்தின் கனிகளா அல்லது இரண்டுமா? ..............................................................................................................................................................
5. ஒருவர் இரட்சிக்கப்பட்டவர் எனில் தேவனுக்கு கீழ்ப்படிந்த வாழ்க்கை அவசியம் என்பதை, பின்வரும் வசனங்களில் எவைகள் கூறுகிறது என்பதை கோடிட்டு காட்டுக? மத் 5:19:20; லூக் 16:20; ரோம 6:22; 1கொரி 6:9,10; கலா 1:1; எபே 2:10; தீத் 3:14.
6. தேவனுடைய நியாயப்பிரமாணத்தை நேசிக்காத ஒருவர் இயேசு கிறிஸ்துவை நேசிக்கிறார் என்று சொல்லலாமா? .....................
7. பின் குறிப்பிடப்பட்டவர்கள் பத்துக் கற்பனைகளில் எவைகளை மீறுகிறார்கள்? ……… விக்கிரகாராதனைக்காரன், ......... விபச்சாரக்காரன், ......... திருடன், ......... பொருளாசைக்காரன், ......... மதுபானப்பிரியன், ......... அவதூறு பேசுபவன், .........கொள்ளையர்.
8. இருதயக்கடினமானவர் (impenitent) என்றால் என்ன? ......................................................................
9. தேவனுடைய சித்தத்தைக் குறித்து நாம் பசி தாகமாக இருக்க நமது உள்ளத்தில் கிரியை செய்ய வேண்டியது யார்? ..............................................................
10. வெளிப்படு 22:14,15-ஐ எழுதுக:

**88. உண்மையான மனவருத்தம் அல்லது மனமாற்றம் அடங்கி இருக்கும் செயல்கள் எத்தனை?**

இரண்டு: பழைய மனிதன் மரிப்பதும், புதிய மனிதன் உயிர்ப்பிக்கப்படுவதும் ஆகும்.

***

கிறிஸ்தவ வாழ்விற்கு நற்கிரியைகள் மிகவும் இன்றியமையாதது என்பதைப் படித்த நாம், கேள்வி 88,89 மற்றும் 90-ல், பூரணமான ஆண்டவர் பிரியப்படும்படியான நற்கிரியைகளின் ஊற்று, பாவிகளான நமக்குள் இருந்து எப்படி தோன்றுகிறது என்பதை நாம் படிக்கலாம்.

ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் நற்கிரியைகள் தோன்றுவதற்கான ஊற்று பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் அவனுடைய புதுப்பிக்கப்பட்ட இருதயமே ஆகும். ஆகவே இருதயத்தின் மாற்றம் குறித்த உண்மையை நமக்கு கேட்டகிசம் போதிக்கிறது.

இன்றைய திருச்சபைகளில் மனமாற்றம் குறித்த பல தவறான கருத்துகள் காணப்படுகிறது. உதாரணமாக, ஜனங்கள் மனமாற்றம் அடைவதற்காக "சுவிசேஷக் கூட்டங்கள்" அல்லது "உயிர்மீட்சிக் கூட்டங்கள்" நடத்துகின்றனர். பொதுவாக, உயிர்மீட்சி செய்திகளைக் கொடுக்க "சுவிசேஷகர்" என்று அழைக்கப்படும் ஒருவரை பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டு வருகின்றனர். இது போன்ற கூட்டங்களில், அதிகபட்சமாக பிரசங்கியார் வேதத்தைக் குறித்து அதிகம் கூறாமல், ஜனங்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் பாடல், இசை மற்றும் கதைகளைப் பயன்படுத்துவார். இதில் கதை சொல்லி முடிக்கும் நேரத்திற்குப் பின், மனமாற்றம் அடையாதவர்கள் முன்பு வந்து தன்னுடன் ஜெபிக்கும்படி பிரசங்கியார் அவர்களை மிகவும் கெஞ்சுவார். இப்போது முன்பு வரும் அனைவரும் மனம் திரும்பியவர்களாகக் கருதப்பட்டு, அவர்கள் சபையில் கட்டாயம் அங்கமாகும்படி தூண்டப்படுவர். இந்தக் கூட்டங்களில் இரட்சிப்பின் சுவிசேஷம் சரியாக விளக்கப்படாததால் "மனம்திரும்பியவர்கள்" என்று அழைக்கப்படும் இவர்கள் இதைக் குறித்து அறியாமல், கூட்டம் முடிந்தவுடன் அதைப்பற்றிய ஆர்வம் குறைந்து தங்கள் பழைய வழிக்கே திரும்புவார்கள். இந்தப் பின்மாற்றக்காரர்களை மீண்டும் மனமாற்றத்திற்கு கொண்டுவரும்படி அடுத்த ஆண்டு மற்றொரு சுவிசேஷகர் வரவழைக்கப்படுவார், இப்போது அதே செயல் தொடர்கிறது. இந்தவகை மனமாற்றம் தவறானது,

ஏனெனில்:

1. சுவிசேஷமானது திருவசனத்திலிருந்து தெளிவாக பிரசங்கிக்கப்படவில்லை.
2. சுவிசேஷகர் தனது சொந்த யுக்திகளால் ஜனங்களை மனமாற்றமடையச் செய்வது.
3. ஒரு பாவி தன்னை மனம்மாற்றிக் கொள்வதற்கான சுயாதீன வலிமை அவனுக்கு உண்டு என்று சொல்லப்படுதல்.
4. பாவிகள் கூட்டமேடைக்கு வருவதாலும், வந்து ஜெபிப்பதாலும் மனமாற்றம் அடைந்தாயிற்று என்று உறுதிபடுத்தப்படுகின்றனர்.
5. ஆனால் உண்மையான மனமாற்றம் அடைந்தவர்கள் மீண்டும் உலகத்திற்கு செல்வதில்லை.

வேதாகமம் மனமாற்றத்தைக் குறித்து பேசும்போது, கர்த்தருடைய ஆவியானவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவரின் இருதயத்தில் கிரியை செய்து, பாவத்தை தள்ளி விசுவாசத்தில் கிறிஸ்துவிடம் திரும்பம்படி சுவிசேஷத்தை விசுவாசிக்க தேவையான பெலனையும், ஜீவனையும் கொடுக்கிறார். எந்தவொரு மனித விடாமுயற்சியும் பாவியின் மரித்த ஆத்துமாவில் இந்த வேலையை செய்ய முடியாது (யோவா 1:13).

நம்முடைய இந்த பாவசாயலை "பழைய மனிதன்" என்று புதிய ஏற்பாடு கூறுகிறது (ரோம 6:6; எபே 4:22; கொலோ 3:9), காரணம் இது ஆதாமைப்போலவே மிகவும் பழைமையானதாகவும், அவனிடமிருந்து வந்ததுமாகும்; பாவம் நம்முடைய ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியிலும் இருப்பதால், இதை "மனிதன்" என்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆத்துமாவை புதுப்பிக்கும் வரை இந்த பழைய மனிதன் அல்லது பாவசாயல் நம்மீது முழு அதிகாரத்தையும் உடையதாக இருக்கிறது. பின்னர் கிறிஸ்துவில் நாம் புதிய மனிதனாகிறோம் (எபே 4:24; கொலோ 3:10). நம்முடைய இருதயத்திற்கு புதிய ஜீவன் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்படுவதால், சுவிசேஷத்தின் சத்தியம் புரிந்து கொள்ளப்பட்ட நிலையில், நாம் பழைய மனிதனிடமிருந்து திரும்பி கிறிஸ்துவிடம் மனமாற்றம் அடைகிறோம்.

நம்முடைய ஆத்துமாவின் மனமாற்றம் இரண்டு பகுதிகளை உடையதாக இருக்கிறது:

1. *மனந்திரும்புதல்*: பரிசுத்த ஆவியின் பெலத்தால், பாவத்திலிருந்து தெய்வீக துக்கத்தால் மனம் திரும்புவதை (பழைய மனிதனை சாகடிப்பது) இந்த வார்த்தை குறிக்கிறது.

2. *விசுவாசம்*: பாவ மன்னிப்பு மற்றும் இரட்சிப்புக்காக கிறிஸ்துவில் மட்டும் நம்பிக்கை வைப்பதை (புதிய மனிதன் உயிர்ப்பிக்கப்படுதலை) இது குறிக்கிறது. இவ்விரண்டு பகுதிகளையும் பின்வரும் இரண்டு கேள்விகளிலும் படிக்கலாம்.

**88-க்கான கேள்விகள்:**

1. ............................................................ இருதயமே விசுவாசிகள் செய்யும் நற்கிரியைகளுக்கான .................. என்பதை, கேள்விகள் 88-91 விளக்குகிறது.
2. பாவிகளை மனமாற்றத்திற்கு கொண்டுவருவதற்கு சுவிசேஷக் கூட்டங்களை பல சபைகள் நடத்துகிறது. ஆனால் இவைகளில் மனமாறியதாக கூறுபவர்கள் உண்மையிலேயே கிறிஸ்துவிடம் வராமல் இருப்தற்கான சில காரணங்களைக் கூறுக:
   அ.
   ஆ.
   இ.
3. எல்லா பாவிகளும் தங்களை மாற்ற சுயவிருப்பம் என்னும் வலிமையைப் பெற்றிருக்கின்றனர். சரியா, தவறா? ..................
4. நம்முடைய இருதயத்திற்கு புதிய ஜீவன் ........................................................... கொடுக்கப்படுவதால், சுவிசேஷத்தின் சத்தியம் ..................................................................................., நாம் பழைய மனிதனிடமிருந்து திரும்பி .........................................................மனமாற்றம் அடைகிறோம்.
5. கர்த்தருடைய ஆவியானவர் ......................................................................... இருதயத்தில் கிரியை செய்து, ....................................., ..................................... விசுவாசத்தில் கிறிஸ்துவிடம் திரும்பம்படி சுவிசேஷத்தை விசுவாசிக்க தேவையான ..................................... ., ..................................... கொடுக்கிறார்.
6. "மனமாற்றம்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? (சொற்களஞ்சியத்தை பார்க்க) .......................... ..............................................................................................................................................................
7. திருவசனத்தின் படி "மனமாற்றம்", இரண்டு பகுதிகளை உடையதாக இருக்கிறது. அவைகள்: .................................................. மற்றும் .....................................
8. நீங்கள் ஒரு ரிபார்ம்டு திருச்சபையில் உடன்படிக்கையின் குழந்தையாக ஞானஸ்நானம் பெற்று, அங்கமாக இருப்பதினால் மனமாற்றம் உங்களுக்கு அவசியமானது அல்ல. சரியா, தவறா? .............
9. தேவனிடம் மனம்திரும்புவதைப் பற்றி எந்த வசனங்கள் பேசுகிறது (கோடிட்டு காட்டுக): மத் 18:3; லூக் 1:40; லூக் 22:32; அப் 3:19; 1கொரி 7:29; யாக் 5:19,20.
10. அப்போ 20:21-ஐ எழுதுக:

**89. பழைய மனிதன் மரித்தல் என்றால் என்ன?**

பாவத்தினிமித்தம் வரும் இருதயப் பூர்வமான துக்கம், அவற்றை எப்போதும் அதிகமதிமாக வெறுத்து, அவற்றிலிருந்து திரும்புவதாகும்.

***

மனமாற்றத்தின் இரு பகுதிகளான மனந்திரும்புதல், "பழைய மனிதனை சாகடித்தல்" மற்றும் விசுவாசம் (புதிய மனிதன் உயிர்ப்பிக்கப்படுதல்) ஆகியவற்றைக் குறித்து கேள்வி 89 மற்றும் 90 விளக்குகிறது. மனமாற்றத்தைக் குறித்த இந்த கலந்துரையாடல் நம்முடைய நற்கிரியைகளுக்கான ஊற்று பரிசுத்த ஆவியினால் புதுப்பிக்கப்பட்டு மாற்றப்பட்ட இருதயம் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

மனந்திரும்புதல், அல்லது பாவமான பழைய மனிதன் சாகடிக்கப்படுதல் என்பது நம்முடைய ஆத்துமாவின் இரட்சிப்புக்கு மிகவும் முக்கியமானதாகும். தோற்றத்தின் அடிப்படையில், இயல்பாக நாம் இந்தப் பாவத்தின் வல்லமையினால் ஆளுகை செய்யப்பட்டு, தேவனையும் அவருடைய கற்பனைகளையும் வெறுக்கிறவர்களாகவும், சாத்தன் மற்றும் அவனுடைய வழிகளை நேசிக்கிறவர்களாகவும் இருந்தோம். பரிசுத்த ஆவியுடன் நாம் ஐக்கியம் வைக்க வேண்டுமானால் நம்முடைய இருதயத்தில் உள்ள பாவத்தின் வல்லமை உடைக்கப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் செயலால் தேவன் இதை நமக்குள் செய்கிறார்.

புதுப்பிக்கப்படுதலின்போது -புதிய பிறப்பு- நடைபெறுகிறது, அப்பொழுது பாவத்தின் வல்லமைக்கு எதிராக நம்முடைய இருதயம் செயல்பட ஆரம்பிக்கிறது; இது மனவருத்தமடைதல் ஆகும். உண்மையான மனந்திரும்புதலின் மூன்று பகுதிகள்:

1. பாவத்தைக் குறித்த அறிவு (ரோம 3:20)
2. பாவத்தினிமித்தம் வரும் இருதயப்பூர்வமான வருத்தமும் வெறுப்பும் (2கொரி 7:10)
3. பாவத்திலிருந்து திரும்புதல் (ரோம 8:13; கொலோ 3:5-10)

மனந்திரும்புதலைக் குறித்த சில முக்கியமான சத்தியங்கள் என்னவெனில்:

அ. *மனந்திரும்புதல் தேவனுடைய கிருபையின் ஈவு*: "ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் அருளினார்" (அப்போ 11:3). உயர்த்தப்பட்ட அதிபதியான கிறிஸ்து "இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறார்" (அப்போ 5:31).

ஆ. *மனந்திரும்புதல் என்பது கர்த்தருடைய பிள்ளையின் மனதில் இருக்கும் உணர்வு நிலை கொண்ட அனுபவமாகும்.* பாவம் நம்முடைய பரலோகத்தின் பிதாவாகிய பரிசுத்த தேவனுக்கு எதிரானதாக இருப்பதால் நம்முடைய ஆத்துமா பாவத்திற்கு எதிராக எப்போதும் பரிசுத்தமான வெறுப்பும், பகைமையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

இ. *மனந்திரும்புதல் முழுமைபெற்றதாக இருக்க வேண்டும்*: நம்முடைய மனதின் எல்லா பகுதிகளும் இந்த மனந்திரும்புதலில் இருக்க வேண்டும். இல்லையெனில் நம்மிடம் உண்மையான மனந்திரும்புதல் இல்லை என்றாகும். நம்முடைய சொந்தப் பாவங்களினிமித்தம் வருத்தமடைய நாம் கற்றுக் கொள்ள வேண்டும். பாவத்தினிமித்தம் வருத்தம் கொள்கிறோம் என்று சொல்லியும், துணிகரமாக அதிலே நிலைத்திருந்தால் நமது மனந்திரும்புதல் பொய்யானது என்பதைக் காட்டும்.

ஈ. *மனந்திரும்புதல் ஒரு தொடரும் அனுபவம்:* கிருபையிலும், அறிவிலும் அதிகமதிகமாக நாம் வளரும்போது நம்முடைய மனந்திரும்புதலும் அதிக ஆழமாகிறது. ஆகவேதான் பாவத்திலிருந்து அதிகமதிகமாக நாம் திரும்புவதைக் குறித்து கேட்டகிசம் போதிக்கிறது. நாம் இந்த தற்காலிகமும், பாவமுமான சரீரத்தில் வாழும் காலமெல்லாம் தொடர்ந்து பாவமாகிய பழைய மனிதனை சாகடிக்க வேண்டும்.

இந்த கேள்வியைச் சார்ந்து, ஒரு சிறு குறிப்பு; கேட்டகிசத்தின் யூரேக்கா க்ளாசிஸ் பதிப்பில் வரும் "மரித்தல்" (dying) என்னும் வார்த்தை "சாகடித்தல்"(killing) என்று மொழி பெயர்க்கப்பட வேண்டும், காரணம் நாம் பாவமான பழைய மனிதனை சாகடிப்பதில் துடிப்புடன் இருக்கிறோம். அவன் தானாக மரிப்பதை உட்கார்ந்து வேடிக்கை பார்க்கிறவர்கள் நாம் அல்ல! நம்முடைய பழைய மனிதனை, இந்த உலகில் நாம் வாழும்வரை முழுமையாக சாகடிக்க முடியாவிட்டாலும், ஒவ்வொரு நாளும் இன்னும் சற்று அதிகமாக சாகடிப்பதற்கு தேவையான கிருபையை நாம் தேவனிடம் தேட வேண்டும். நம்முடைய பழைய சாயலும் சாத்தானுக்கு சேவை செய்யும்படி நமக்கு விரோதமாக சண்டையிடும்படி எப்போதும் கொஞ்சம் வலிமையுடையதாகவே இருக்கும்.

**89-க்கான கேள்விகள்:**

1. நற்கிரியைகள் குறித்த போதனைகளின் வரிசையில், இந்த மனந்திரும்புதல் குறித்து இங்கே விளக்கப்படுவது ஏன்? ..................................................................................................................................................................
2. ....................................... என்பது "பழைய மனிதனை சாகடித்தல்" என்பதாகும்.
3. நம்முடைய பாவ சாயல், பழைய மனிதன் என்று அழைக்கப்படுவது ஏன்? (கேள்வி 88-ன் விளக்கத்தை

காண்க) ...........................................................................................................................................................

4. இயேசு கிறிஸ்து நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாக இருக்கும்வரை பாவத்தின் வலிமை நம்முடைய இருதயத்தில் உடைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. சரியா, தவறா? .................., விளக்கம்: ..............................................................................................................................................................
5. உண்மையான கிறிஸ்தவ வாழ்வு என்பது ..................-க்கு எதிரான வாழ்வு ஆகும். இந்த போராட்டத்தைக் குறித்து கவலையற்றிருக்கும் கிறிஸ்தவர்கள் .......................................................-த்தை அடையவில்லை.
6. உண்மையான மனந்திரும்புதலின் மூன்று பகுதிகள் யாவை? ஆ........................................................., ஆ................................................................................., இ.....................................................................................
7. கிறிஸ்தவ மனந்திரும்புதலைக் குறித்த சில முக்கியமான சத்தியங்கள்:
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
8. மனந்திரும்புதலின் அனுபவம் -- பாவத்திற்காக மனம்வருந்தி, அதிலிருந்து திரும்புதல்... அ)ஒரு பாவி முதலாவது மனமாற்றம் அடையும்போது மட்டும், ஆ)நாம் பெரிய பாவம் செய்யும்போது மட்டும், இ)உண்மையான கிறிஸ்தவ அனுபவத்தில் அனுதினமும்... தொடர்கிறது. எது? ..........
9. பழைய சாயலை சாகடித்தல் என்பது... அ)இலகுவான காரியம், ஆ)நாம் இரட்சிக்கப்பட மிகவும் அவசியம், இ)ஒருவர் முதிர்வயதை அடையும்போது நிறைவடைகிறது, ஈ)ஆவியினாலும், வார்த்தையின் உதவியினாலும் மட்டும் நடைபெறுகிறது. எது? ..........
10. எபேசி 4:22-ஐ எழுதுக:

**90. புதிய மனிதன் உயிர்பிக்கப்படுதல் என்றால் என்ன?**

கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் உண்டாகும் இருதயப்பூர்வமான சந்தோஷம், எல்லா நற்செயல்களிலும் கர்த்தருடைய சித்தத்தின்படி வாழ்வதால் மகிழ்ச்சியடைதல் ஆகும்.

***

மனந்திரும்புதலின் இரண்டாவது பகுதி விசுவாசம், அல்லது "புதிய மனிதன் உயிர்ப்பிக்கப் படுதல்" "புதிய மனிதன்" என்பது புதிய அல்லது மறுபிறப்பால் நாம் பெறும் புதிய ஆவிக்குரிய ஜீவன் ஆகும். இந்த ஜீவன் நமக்குள் மறுபிறப்பால் வருவதால் இது புதிய ஜீவன் ஆகும். இந்த புதிய ஜீவன் நம்முடைய ஆளுமைக்கும் பரவுவதால் இது "மனிதன்" என்றழைக்கப்படுகிறது; உயிர்த்தெழுதலின் போது நம்முடைய சரீரமும் இதை அனுபவிக்கும். "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாக இருக்கிறான்" (2கொரி 5:17).

இந்த "புதிய மனிதன்" அல்லது கிறிஸ்துவுக்குள்ளான புதிய ஜீவன், கிருபையின் வாய்க்காலாக விளங்கும், வசனம், ஜெபம், ஓய்வுநாள் ஆராதனை, பரிசுத்தவான்களின் ஐக்கியம் மற்றும் சாக்ரமந்துகளால் தினமும் பெலப்படுத்தப்பட வேண்டும். இந்த புதிய ஜீவன் நமக்குள் பெலப்படுத்தப் படுவதே "புதுப்பிக்கப்படுதல்" என்பதாகும்.


அப்போஸ்தலனாகிய யோவான் விசுவாசியின் இந்த புதிய ஜீவனை "வித்து" (1யோவா 3:9) என்கிறார். வித்து என்னும் இந்த புதிய ஆவிக்குரிய ஜீவன், வார்த்தை மற்றும் ஆவி என்னும் தண்ணீராலும், ஜெபம் மற்றும் கர்த்தருடனான ஐக்கியம் என்னும் சூரியவெளிச்சத்தால் வளர்க்கப்பட வேண்டும். முடிவாக இந்த வித்து தேவனால் நடப்பட்ட மரமாக வளரும் (ஏசாய 61:3 சங் 1:3)

புதிய மனிதன் உயிர்ப்பிக்கப்படுதலின் இரண்டு பகுதிகளைக் குறித்து கேட்டகிசம் போதிக்கிறது:


1. "கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் உண்டாகும் இருதயப்பூர்வமான சந்தோஷம்." கிறிஸ்துவே ஒரு விசுவாசியின் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாவார். கிறிஸ்துவிலான சந்தோஷம் மற்றும் பாவத்தினிமித்தமாக துக்கம் ஆகிய இரண்டும் சேர்ந்து போகிறது என்பதைக் கவனிக்கவும். பாவத்திற்காக நாம் அதிக துக்கமடையும்போது கிறிஸ்துவில் நாம் அதிக மகிழ்ச்சியடைகிறோம். நாம் கிறிஸ்துவை அறிவதினால், "நம்முடைய சந்தோஷம் நிறைவடைகிறது" (1யோவ 1:4).

2. "எல்லா நற்செயல்களிலும் கர்த்தருடைய சித்தத்தின்படி வாழ்வதால் மகிழ்ச்சியடைதல்" கர்த்தருடைய சித்தத்தை நாம் செய்வதால் நமது புதிய ஜீவன் பெலப்படுத்தப்படுகிறது. இது இருவழிகளில் செயல்படுவதை நாம் காணலாம். புதிய ஜீவன் நற்கிரியைகளை உண்டாக்குகிறது, நற்கிரியைகள் புதிய ஜீவனைப் பெலப்படுத்துகிறது! அந்த நற்கிரியைகள் என்ன என்பதை அடுத்த கேள்வியில் நாம் காண்போம்.

பின்வரும் விளக்கப்படங்கள் மனமாறிய (புதுப்பிக்கப்பட்ட) ஒருவருக்கும், மனமாறாத (புதுப்பிக்கப்படாத) ஒருவருக்கும் இடைய உள்ள ஆவிக்குரிய வித்தியாசம் என்ன என்பதை காட்டும்:




2.புதுப்பிக்கப்படாத பாவி




1.புதுப்பிக்கப்பட்ட பாவி

1. புதுப்பிக்கப்படாத பாவி:அ)புதுப்பிக்கப்படாத மனமாற்றமடையாத ஒருவரின் இருதயம் ஆதாமின் சாயலின்படி பாவமாகிய பழைய மனிதனால் முழுமையாகக் கட்டுப்படுத்தப் படுகிறான். தேவனை மகிமைப்படுத்தும் எதையும் அவனால் சிந்திக்க முடியாதவனாக இருக்கிறான்: எபே 2:1; 4:22.
ஆ) சரீரத்தின் எல்லா செயல்களும், தீய இருதயத்திலிருந்து வெளிப்படும் நிலையில், தீமையானவைகளாக மட்டும் இருக்கின்றன: ரோம 6:19; 8:7,8; கலா 5:19-21.

2. புதுப்பிக்கப்பட்ட கிறிஸ்தவன்:அ)மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனின் இருதயம், புதிய பிறப்பின் மூலம் “புதிய மனிதனாகிய” ஆவிக்குரிய ஜீவனையும், நீதியையும் பெற்றிருக்கிறது: யோவா 3:3; எபே 4:24; கொலோ 3:10; 1யோவா 3:9.ஆ)ஆவியின் “புதிய மனிதன்” கிறிஸ்தவனின் இருதயத்தை ஆளுகிறது, ஆனால் பாவம் என்னும் “பழைய மனிதன்” “புதிய மனிதனை” எதிர்த்து சண்டையிடும்படி நிலைத்திருக்கிறது: ரோம 7:21; கலா 5:6.

இ)கிறிஸ்தவனின் சரீரம் மற்றும் அங்கத்தின் கிரியைகள் அதிகபட்சம் நன்மையானதாக இருக்கும், காரணம் அவைகள் இருதயத்தின் புதிய மனிதனிடமிருந்து வருவதால் ஆகும்; ஆனால் அவைகள் பழைய பாவ மனிதனால் கறைப்படுத்தப் படுகிறவைகளாக இருப்பதால் ஒருபோதும் பூரணமாக இருப்பதில்லை: ரோம 6:6, 12-14; 7:19.ஈ)பரிசுத்த ஆவியின் பெலத்தால் பழைய மனிதன் மரணத்திற்குட்படுத்தும் படியாகவும், புதிய மனிதனுக்கேதுவாக தொடர்ந்து வாழும்படியாகவும் ஒரு கிறிஸ்தவன் வற்புறுத்தப் படுகிறான்.

**90-க்கான கேள்விகள்:**

1. மனமாற்றத்தின் இரண்டாவது பகுதி, அல்லது புதிய மனிதன் உயிர்ப்பிக்கப்படுதல் என்பது .......................... ஆகும்.
2. “புதிய மனிதன்” என்னும் பதத்தின் அர்த்தம் என்ன? ....................................................................
...........................................................................................................................................
3. புதுப்பிக்கப்படுதல் மற்றும் மனமாற்றமடைதல் ஆகிய இவ்விரண்டுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன? (சொற்களஞ்சயத்தை பார்க்க): ................................................................................
...........................................................................................................................................
4. சிலர் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக இருக்கிறார்கள், ஆனால் பழைய மனிதன் அவர்களின் இருதயம் மற்றும் வாழ்வை இன்னமும் ஆளுகை செய்கிறது. (1கொரி 5:17) சரியா, தவறா? .................
5. “புதிய மனிதன்” உயிப்பிக்கப்படுதலின் இரு பகுதிகள் யாவை?
   அ.
   ஆ.
6. நம்முடைய இருதயத்தில் உள்ள புதிய ஜீவனை பெலப்படுத்துவதற்கான சில வழிகளைக் குறிப்பிடுக:
...........................................................................................................................................
...........................................................................................................................................
7. பின்வருவதில், எந்த செயல்கள் புதிய மனிதனைப் பெலப்படுத்தும், எந்த செயல்கள் பழைய மனிதனை பெலப்படுத்தும்? ஒவ்வொரு கருத்துக்கும் பின்னர் “பழைய” அல்லது “புதிய” என்று எழுதவும்:
   அ. தகுதியற்ற T.V நிகழ்ச்சிகளைப் பார்ப்பது: ..................
   ஆ. வாரத்தில் இடைப்பட்ட வேதபாட வகுப்பில் கலந்து கொள்வது: ................
   இ. மற்றவர்கள் சொல்லும் அசுத்தமான காரியங்களை கேட்பது: ..................
   ஈ. தினமும் தேவனிடம் ஜெபிப்பது: ..................
   உ. ஓய்வுநாளில் ஆராதனைக்கு வராமல் மற்றவர்களை போய் சந்திப்பது: ................
   ஊ. சக கிறிஸ்தவர்களைப் பற்றிய தவறான கருத்துக்களை புறங்கூறுதல்: ..................
8. மனமாறிய மனிதன் மற்றும் மனமாறாத மனிதன் ஆகியோரின் இருதய விளக்கப்படம் வரைந்து எந்த

வகையான மனிதன் ஒவ்வொரு இருதயத்தையும் ஆளுகிறான் என்பதை விளக்கு:

9. மனமாறிய மனிதன் நன்மையான காரியங்களை மட்டும் செய்கிறான், மனமாறாதவனோ தீமையான காரியங்களை மட்டும் செய்கிறான். சரியா, தவறா? ................., விளக்கம்:

10. 1யோவான் 2:5-ஐ எழுதுக:

**91. நற்கிரியைகள் எவைகள்?**

நம்முடைய சுய அபிப்பிராயம் அல்லது மனிதர்களின் கட்டளையினிமித்தம் இல்லாமல், தேவனுடைய மகிமைக்காக, கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி, உண்மையான விசுவாசத்தின் மூலம் வெளிப்படும் காரியங்களே ஆகும்.

***

பரிசுத்த ஆவியனாவர் வாழும் நமது புதுப்பிக்கப்பட்ட இருதயமே நற்கிரியைகளின் ஊற்று என்று அறிந்த நிலையில், இந்த நற்கிரியைகளின் தன்மை என்னவென்று நாம் அறியலாம்.

ஜனங்கள் நற்கிரியைகளைக் குறித்து தவறான கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். உதாரணமாக, இயேசுவின் நாட்களில் இருந்த பரிசேயர் மற்றும் சதுசேயர் தங்களின் இரட்சிப்புக்காக கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமல் "நற்கிரியைகள்" என்று அழைக்கப்படுபவைகளில் வைத்தார்கள். கிறிஸ்துவின் மூலம் விசுவாசத்தினாலன்றி, நற்கிரியைகளினால் ஒருவர் நீதிமானாக்கப்பட முடியும் என்று ரோமன் காத்தோலிக்க திருச்சபை போதித்தது (ஆனால் தீத் 3:5-ஐ பார்க்க). அவிசுவாசிகளும், பக்கத்திலுள்ளவர்களுக்கு உதவுதல், இரத்ததானம் அல்லது ஆலயத்தில் காணிக்கை போடுதல் போன்ற நற்கிரியைகளை செய்கின்றனர் என்று அநேகர் நம்புகிறார்கள்.

ஆனால் இவைகள் எல்லாம் நற்கிரியைகளைக் குறித்த தவறான கருத்துக்கள் ஆகும். ஒரு செயல் தேவனுடைய பார்வையில் நல்லவையாக இருக்க வேண்டுமானால், அது நல்ல மூலகாரணம், நல்ல தரம் மற்றும் நல்ல நோக்கம் ஆகிய மூன்று உண்மைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. *நல்ல மூலகாரணம்* (Root) - உண்மையான விசுவாசம்: நற்கிரியைகள் உண்மையான விசுவாசத்திலிருந்து வெளிப்படுகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமல் தேவனை பரியப்படுத்த முடியாது (எபே 11:6). எல்லா செயல்களுக்கும் பின்பு உள்ள இருதய மனப்பான்மையை எப்போதும் தேவன் பார்க்கிறார். ஒரு அவிசுவாசி, இருதயத்தில் கிறிஸ்துவை வெறுக்கும்போது அவன் செய்யும் எல்லா கிரியைகளும் கிறிஸ்துவுக்கு எதிரானவையே. அவன் பக்கத்திலுள்ள ஒருவருக்கு செய்யும் நற்செயல்களும் தவறான உள்நோக்கதிலிருந்து வெளிப்பட்டதாகவே இருக்கும்.

2. *நல்ல தரம்* (Standard) - தேவனுடைய நியாயப்பிரமாணம். கர்த்தருடைய பரிசுத்த நியாயப்பிரமாணத்தின்படி செய்யப்படும் செயல்களே தேவனுடைய பார்வையில் நற்கிரியைகளாகும். நற்செயல்களுக்கான தரத்தை தேவன் மட்டுமே நிர்ணயிக்கிறார், அது அவருடைய நியாயப்பிரமாணமாகும், இதைக் குறித்து அடுத்த கேள்வியில் நாம் காணலாம். நற்கிரியைகளுக்கான தவறான தரம் பின்வருமாறு:

அ. "என்னுடைய மனசாட்சியே என்னுடைய வழிகாட்டி" இருப்பினும், மனிதனுடைய மனசாட்சி பாவத்தால் கறைப்பட்டதாக இருப்பதால் (1தீமோ 4:2; எபே 4:18) நல்ல நோக்கத்தை தருவதில்லை என்று வேதம் சொல்கிறது.

ஆ. "எது சரி, எது தவறு என்பதை என்னுடைய சபை எனக்கு சொல்கிறது." இருப்பினும், மனிதர்களின் கட்டளைகள் தேவனுடைய கட்டளைகளுக்கு பலநேரங்களில் எதிராக இருக்கின்றது (மாற் 7:7-9,13) என்று வேதம் சொல்கிறது. உதாரணமாக, குருமார் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்றும், "லெந்து" காலத்தில் உபவாசம் இருக்க வேண்டும் என்ற வேதத்திற்கு எதிர்மறையானவைகளை ரோமன் கத்தோலிக்க சபை போதிக்கிறது. இன்னும் பல புராட்டஸ்டன்டு கிறிஸ்தவர்களும் இதுபோன்ற சில வேதத்தால் அங்கீகரிக்கப்படாத செயல்கள் மற்றும் கிறிஸ்துமஸ், உயிர்த்தெழுந்த நாள் மற்றும் பரமேறும் நாள் போன்றவற்றை கட்டாயம் அனுசரிக்க வேண்டிய புனித நாட்களாக கடைப்பிடிக்கின்றனர். இன்னும் சிலர் ஆண்டவருக்கு சேவை செய்கிறோம் என்று நினைத்து வறுந்தத்தக்க காரியங்களை தவறான நம்பிக்கையினிமித்தம் செய்கிறவர்களாக இருக்கின்றனர் (யோவா 16:2)! நேர்மையாக மட்டும் இருப்பது போதாது, தேவன் நியமிக்கும் தரத்திற்கு ஏற்றாற்போல் நாம் வாழ வேண்டும்.

3. *நல்ல நோக்கம்* (Goal) -தேவனுடைய மகிமையே. தேவனுடைய மகிமைக்காக செய்யப்பட்டவைகளே நற்கிரியைகள் ஆகும். மனிதனுடைய வாழ்வின் உயர்ந்த நோக்கம் மற்றும் செயல் தேவனுடைய மகிமைக்கானதாக இருக்க வேண்டும். தேவனை மட்டும் மகிமைப் படுத்தும்படியாகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான், இது மனிதனுடைய நோக்கமாக இல்லாதபோது, அவன் ஒரு விக்கிரகதிற்கு சேவை செய்கிறான் என்பதாகும்.

தேவனுடைய பார்வையில் நற்செயல் என்றால் என்ன என்பதை நாம் அறியும்போது, மனமாறாத கிறிஸ்தவரல்லாதவரால் நற்கிரியை செய்வது முடியாததாகிறது. அவிசுவாசிகள் வெளிப்படையாக நற்செயல்கள் என்றென்னப்படும் --பிறருக்கு உதவுதல்-- போன்றவைகளைச் செய்யும்போதும், அவர்கள் கிறிஸ்துவின் மீது அன்பு மற்றும் தேவனுடைய மகிமை ஆகியவற்றை மையமாகக் கொண்டு செய்யாததால் அவர்கள்

தொடர்ந்து பாவம் செய்கிறவர்களாகவே இருக்கின்றனர்.

**91-க்கான கேள்விகள்:**

1. நற்செயல்களின் ................................ என்ன என்பதை கேள்வி 91-ல் நாம் படிக்கிறோம்.
2. நற்செயல்கள் குறித்து பலர் தவறான கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். எடுத்துகாட்டு தருக: ...................................................................................................................................................................... ......................................................................................................................................................................
3. மனித செயல்கள் தேவனுடைய பார்வையில் நல்லவைகளாக இருக்க அவைகள் பெற்றிருக்க வேண்டிய அவசியமான மூன்று என்ன? அ. ......................................................................................., ஆ.................. ..........................................................................., இ.......................................................................................................
4. ஒரு அவிசுவாசி பொது சேவைக்காக ரூபாய் 50000 தருகிறார் என்றால், அவர் தேவனுடைய பார்வையில் நற்செயல் செய்கிறார் என்று அர்த்தமாகிறது. சரியா, தவறா? ..................
5. நற்செயல்கள் குறித்து ஜனங்கள் கொண்டுள்ள சில தவறான தரங்கள் என்ன? அ. .................. ..........................................................................., ஆ. ..............................................................................................................
6. இறைச்சி சாப்பிடக் கூடாது என்று ஒரு சபை போதிக்கும்போது, இறைச்சி சாப்பிடுவது பாவம். சரியா, தவறா? ..................
7. ஒரு கிறிஸ்தவனின் சிந்தனை, செயல் மற்றும் வார்த்தை தேவனுடைய பார்வையில் நல்லவைகளாக இருக்கின்றது. சரியா, தவறா? ..................
8. கொலோ 2:16-23-ஐ அடிப்படையாக கொண்டு பின்வரும் வினாக்களுக்கு பதில் தருக:
   அ. இறைச்சி, பானம் மற்றும் பரிசுத்த நாட்கள் குறித்த மனிதனின் சட்டத்தைக் குறித்து எந்த வசனம் கண்டனம் தெரிவிக்கிறது. ...........
   ஆ. மனித போதனைகளை கடைப்பிடிப்பது, "மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" என்று எந்த வசனம் கூறுகிறது. .........
   இ. மனிதனின் கட்டளை மற்றும் போதனைகளை எந்த வசனம் கண்டனப்படுத்துகிறது? .........
   ஈ. மனிதன் கற்பிக்கும் ஆராதனை "..........................................................." (வ 23) ஆகும்.
9. ஒருவன் கடவுளுடைய மகிமைக்காக இல்லாமல் மனிதனுடைய புகழ்ச்சிக்காக செய்யும் செயல் விக்கிரக ஆராதனை ஆகும். சரியா, தவறா? .....................
10. 1கொரி 10:31-ஐ எழுதுக:.

**92. தேவனுடைய நியாயப்பிரமாணம் என்பது என்ன?**

தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளான, உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே,

**முதலாம் கட்டளை**

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

**இரண்டாம் கட்டளை**

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிரவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்.

**மூன்றாம் கட்டளை**

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடமாட்டார்.

**நான்காம் கட்டளை**

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

**ஐந்தாம் கட்டளை**

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

**ஆறாம் கட்டளை**

கொலை செய்யாதிருப்பாயாக

**ஏழாம் கட்டளை**

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக

**எட்டாம் கட்டளை**

களவு செய்யாதிருப்பாயாக

**ஒன்பதாம் கட்டளை**

பிறனுக்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக

**பத்தாம் கட்டளை**

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.

***

தேவனுடைய கற்பனைகளிடம் நாம் இரண்டாவது முறையாக இங்கே வருகிறோம். இந்த கேட்டகிசத்தின் ஆரம்பத்தில் (கேள்விகள் 3,4&5) நியாயப்பிரமாணம் நம்மை கண்டித்து மீட்புக்காக கிறிஸ்துவிடம் செல்ல வேண்டிய அவசியத்தை கூறும்போது முதல்முறையாக நாம் பார்த்தோம். நாம் இப்பொழுது கிருபையாக மீட்கப்பட்ட நிலையில், நாம் கிறிஸ்தவ கீழ்ப்படிதல் மற்றும் அவருக்கு நன்றியுணர்வுடன் வாழ்வதற்காக கிறிஸ்து நம்மை மீண்டும் நியாயப்பிரமாணத்திற்கு நடத்துகிறார்.

நற்கிரியைகளைக் குறித்த உபதேசத்தை கேள்விகள் 86-91 விளக்குகிறது. இப்போது இந்த நற்கிரியைகளின் தரம் மற்றும் ஒழுங்குமுறையாக விளங்கும் பத்துக் கற்பனைகளின் (also called Decalogue, which means the “Ten Words”) விளக்கத்தை நாம் காணலாம். கிறிஸ்தவ நன்றியுணர்வைக் குறித்த பாடத்தை கேட்டகிசம் முறையாக விளக்கியுள்ளதை கவனிக்கவும்.

1. மீட்கப்பட்ட கிறிஸ்தவன் நன்றியுணர்வுடன் வாழ வேண்டும்.
2. நன்றியுணர்வுடன் வாழ்வது என்பது நற்கிரியைகள் நிறைந்த வாழ்வு வாழ்வதாகும்.
3. நற்கிரியைகள் என்பது இருதயப்பூர்வமாக, துடிப்புடன் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதாகும்.

ஆக கேள்விகள் 92 -- 115 விளக்கும் பாடம், “நியாயப்பிரமாணம் மற்றும் கிறிஸ்தவ நன்றியுணர்வு” ஆகியவற்றைப் பற்றியதாகும்.

கேள்விகள் 92 மற்றும் 93-ல், நியாயப்பிரமாணம் நமக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கேள்வி 92-ல் இதனுடைய பொருளடக்கம், மற்றும் கேள்வி 93-ல் இதனுடைய பிரிவுகளையும் நாம் காணலாம்.

இயேசு கிறிஸ்துவுக்கு கிட்டத்தட்ட 1450 வருடங்களுக்கு முன்பு, சீனாய் மலையில் பத்து கற்பனைகளைக் கொடுத்தல் என்பது தேவன் மனிதனுக்கு கொடுத்தவைகளில் எல்லாம் மிகவும் உன்னதமான ஒன்றாகும். இது கிறிஸ்து கொடுக்கப்பட்டதற்கு இரண்டாவது முக்கியமான ஒன்று ஆகும். பத்துக் கற்பனைகள் கொடுக்கப்பட்ட இந்த சம்பவத்திற்குப் பின்னர், தேவன் மனுக்குலத்தின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளை சோதித்து நியாயம் விசாரிப்பதற்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் இவைகள் விளங்கிற்று. பத்துக் கற்பனைகளின் சில முக்கியமான சிறப்புகளைக் குறித்து இப்போது நாம் காணலாம்.

1. பத்துக் கற்பனைகள் தேவனுடைய நிரந்தரமான சித்தத்தின் வெளிப்பாடாகும். ஆதாம் தான் படைக்கப்பட்டபோது தேவனுடைய சித்தத்தை அறிந்தவனாக இருந்தான், அவனைப் பின்பற்றியவர்களும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் சிலவற்றை அறிந்திருந்தனர் (ரோம 2:14,15), ஆனால் சீனாய் மலையில் கற்பலகைகளில் இவற்றை எழுதி இந்த உலகம் நிலைத்திருக்கும்வரை மனிதனுக்கான தன்னுடைய மாறாத சித்தத்தை வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்து இந்தப் பத்துக் கற்பனைகளை புறக்கணிக்கவே வந்தார் என்று சொல்கிறார்கள். ஆனால், “நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல அதை நிறைவேற்றவே வந்தேன்” (மத் 5:17) என்று இயேசு சொன்னார்.

2. பத்துக் கற்பனைகள் எல்லா நேரத்திலும், எல்லாருக்காகவும் தேவனுடைய (moral law) நெறிமுறை ஒழுங்காக இருக்கிறது. இஸ்ரவேலருக்கு மற்ற சட்டங்களையும் கொடுத்தார், பழைய ஏற்பாட்டின் சடங்குகள் மற்றும் ஆராதனை சட்ட நியமங்கள் அன்றைய இஸ்ரவேலருக்கு தற்காலிகமாக கொடுக்கப்பட்டவைகள் ஆகும். கிறிஸ்து வந்தபோது, அவைகளுக்குரிய அர்த்தம் நிறைவேற்றப்பட்ட நிலையில், அவைகள் நீக்கப்பட்டது. மேலும், இந்த பத்துக் கற்பனைகள் நெறிமுறை ஒழுங்காக ஒவ்வொரு மனிதரையும் கட்டுப்படுத்துகிறது. இவைகள் தேவனுக்கும் மற்ற மனிதருக்கும் நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சொல்கிறது. இவற்றையே தரமாக வைத்து தேவன் நியாயத்தீர்ப்பின் நாளில் அனைவரையும் நியாயம் தீர்ப்பார் (ரோம 3:19).

3. பத்துக் கற்பனைகள் நமக்கு நெறிமுறை ஒழுங்குக்கான அடிப்படை தத்துவத்தை தருகிறது. வேதத்தில் எல்லா ஒழுக்க நெறி போதனைகளும், மக்கள் சமுதாயத்திற்குரிய சட்டங்களும், இந்த பத்துக் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டதேயாகும். வேதத்தை நாம் அதிகமதிகமாக படிக்கும்போது, ஒவ்வொரு கற்பனைகளின் ஆழத்தை நாம் அறிய முடியும். “உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம்” (சங் 119:96).

4. பத்துக்கற்பனைகள் மறுப்புத் தெரிவிக்கும், செய்யும்படி சொல்லும் இரண்டையும் உடையதாக

இருக்கிறது. அதாவது, "செய்யாதிருப்பாயாக" என்பதினால் நாம் சிலவற்றை செய்யாதிருக்கும்படி நமக்கு சொல்வதோடு, கேட்டகிசம் நமக்கு போதிப்பதுபோல் அதற்கு நேர் எதிரானவற்றை நாம் செய்யும்படி நமக்கு சொல்கிறது. நாம் நம்மில் அன்புகூருவது போல தேவனிலும், பிறரிடத்திலும் அன்பு கூரும்படி நம்மை நடத்துகிறது. அன்பு மட்டுமே நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்பதற்கான ஏற்றுக்கொள்ளும் வழியாகும், "ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது" (ரோம 13:10).

**92-க்கான கேள்விகள்:**

1. கேட்டகிசம் நம்மை இரண்டுமுறை பத்துக்கற்பனைகளுக்கு கொண்டுவருகிறது. அப்படி முதல்முறை கொண்டு வந்தபோது... அ)நம்முடைய சிறப்பு, ஆ)நம்முடைய பாவம் மற்றும் இழிநிலை, இ)நம்முடைய நன்றியுணர்வு... குறித்து போதிக்கிறது. எது? ..........., இரண்டாவது முறை.... ஈ)நம்முடைய சிறப்பு, உ)நாம் எப்படி நன்றியுள்ள வாழ்வு வாழ்வது என்பதை, ஊ)நாம் பூரணமாக இருக்க முடியாது, ஆகவே, ஏன் முயற்சி செய்ய வேண்டும்... என்பதைக் குறித்து போதிக்கிறது. எது? ...........
2. கிறிஸ்தவ நன்றியுணர்வு, நற்கிரியைகள், தேவனுக்கு கீழ்படிந்து, அவருக்கு சேவை செய்வதை பத்துக் கற்பனைகளைப் படிப்பதால் அறியலாம். சரியா, தவறா? ................
3. கேள்விகள் 92 மற்றும் 93-ல், ............................................................................................. பட்டுள்ளது. கேள்வி 92-ல் ......................................................................................... நாம் காணலாம்.
4. பத்துக்கற்பனைகள் கொடுக்கப்பட்டிருத்தல் முழு வேதாகம சரித்திரத்துக்கும் எவ்வளவு முக்கியமானது? ..........................................................................................................................................
5. சீனாய் மலையில் ஆண்டவர் இஸ்ரவேலுக்கு... அ)ஒழுக்க நெறிகளை, ஆ)பத்துக் கற்பனைகள், இ)டெக்கலாக் (பத்து வார்த்தைகள்) கொடுத்தார். எது? ..........
6. பத்துக்கற்பனைகளின் நான்கு முக்கியமான சிறப்புகளைக் குறிப்பிடுக:
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
7. இயேசு தமது கிருபை மற்றும் சத்தியத்தோடு வந்தபோது மோசேயின் நியாயப்பிரமாணத்தை நீக்கிவிட்டார் என்று யோவான் 1:17 போதிக்கிறது. சரியா, தவறா? .................
8. ரோமர் 2:14,15 மற்றும் 3:19-ன்படி பின்வரும் வரும் சொற்றொடர்களை நிறப்புக:
   அ. எல்லாரும் நியாயப்பிரமாணம் ........................................................................... எழுதியிருக்கிறது என்று காண்பிக்கிறார்கள்.
   ஆ. எல்லா மனிதர்களும் (புறஜாதிகள்) "சுபாவமாய் .......................................... செய்கிறார்கள்"
   இ. ஒவ்வொருவரின் "மனசாட்சியும் ................................................................"
   ஈ. உலகத்தார் யாவரும், "தேவனுடைய ...................................................... ஏதுவானவர்களாக" இருக்கிறார்கள்.
9. பத்துக்கற்பனைகளைக் கேள்விப்பட்டிராத புறஜாதியார் அவைகளினால் தண்டிக்கப்படுவது இல்லை. சரியா, தவறா? .................
10. யாக்கோபு 2:12-ஐ எழுதுக:

**93. இந்த கற்பனைகள் பிரிக்கப்பட்டிருப்பது எப்படி?**

இரண்டு அட்டவணைகளாக: முதல் பகுதி தேவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைக் கூறும் நான்கு கற்பனைகள்; இரண்டாவது மற்ற மனிதருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்த ஆறு கற்பனைகள்.

***

தேவனுடைய கற்பனைகளின் அறிமுகத்தைத் தொடர்ந்து, பத்துக்கற்பனைகளின் பிரிவுகளைக் குறித்து இந்த கேள்வியில் நாம் காணலாம். உபா 6:5 மற்றும் லேவி 19:18 ஆகியவை கிறிஸ்துவால் மத் 22:37-40-ல் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதிலிருந்து, பத்துக்கற்பனைகள் இரு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

கேட்டகிசத்தைப் பொறுத்தவரை முதல் நான்கு கற்பனைகள் அடங்கிய முதலாவது பகுதி, கிறிஸ்துவால் அழைக்கப்பட்டது போல "முதலாவதும், மேன்மையானதும்" ஆகும். இந்த கற்பனைகள் தேவனுக்குரிய நம்முடைய கடமைகளை போதிக்கிறது, இவைகள், "உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் உன் ஆண்டவரில் அன்பு கூருவாயாக" என்ற சொற்றொடரால் சுருக்கப்பட்டிருக்கிறது.

ஐந்து முதல் பத்துவரையிலான கற்பனைகள் அடங்கிய இரண்டாவது பகுதி, பிற மனிதனுக்கு நாம்

செய்ய வேண்டிய கடமைகளை போதிக்கிறது, இதை கிறிஸ்து இரண்டாவது பிரதான கற்பனையாக, “நீ உன்னில் அன்பு கூறுவது போல பிறனிலும் அன்பு கூருவாயாக” என்றார். மேலும், இயேசு, “இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்” (மத் 22:40), அதன் அர்த்தம், பழைய ஏற்பாட்டின் முழு ஒழுக்க நெறிமுறைகளும் பத்துக்கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

உண்மையில், “முதலாம்” மற்றும் “இரண்டாம்” பிரதான கற்பனைகளுக்கிடையேயான பிரிக்கும் கோடு எங்கே என்று வேதம் கூறவில்லை. சிலர், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைக்கு தேவனுக்குப் பிரதிநிதியாக விளங்குவதால், ஐந்தாவது கற்பனை முதல் பகுதிக்குரியது என்று நினைக்கிறார்கள். இருப்பினும் நம்முடைய இந்த பிரிப்பு சரியான ஒன்று ஆகும்.

இரு கற்பலகைகளைக் குறித்து மற்றுமொரு கேள்வி எழும்புகிறது. தேவன் தமது கற்பனைகளை இரு கற்பலகைகளில் எழுதினார் என்பதை நாம் அறிவோம் (யாத் 31:18; 32:15-16), ஆனால் முதல் நான்கு கற்பனைகள் ஒரு கற்பலகையிலும், மற்ற ஆறு ஒரு கற்பலகையிலும் எழுதப்பட்டதா, அல்லது பத்து கற்பனைகளுமே இரண்டு கற்பலகைகளிலும் எழுதப்பட்டிருந்ததா என்பது தெரியாது.

கற்பனைகளின் இருபிரிவுகள் குறித்து மேலும் இருமுக்கியமான காரியங்கள் குறிப்பிடப்பட வேண்டும். முதலாவது, கத்தோலிக்கர்களைப் போல லூத்தரன்களும், முதல் இரண்டு கற்பனைகளை ஒன்றாக்கி, பத்துக்கற்பனைகள் இருக்க வேண்டும் என்பதற்காக, பத்தாவது கற்பனையை இரண்டாக பிரித்துள்ளதை நீங்கள் அறிவீர்களா? இப்படி முதல் இரு கற்பனைகளை ஒன்றாக்குவது முறையாகாது, காரணம் இவ்விரண்டு கற்பனைகளும் ஒரேவகை பாவத்தை கூறவில்லை. அதேசமயம், பத்தாவது கற்பனை இச்சை என்ற ஒரே பாவத்தைக் குறித்தது, ஆகவே “பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக” என்பதையும், “பிறனுடைய வீடு... மற்றும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக” என்ற கடைசிப் பகுதியையும் தனியே பிரிக்க கூடாது.

இரண்டாவது, நியாயப்பிரமாணத்திற்குரிய முன்னுரையைக் குறித்ததாகும்: “தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளான, உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே”. இந்த சொற்றொடர் பத்துக்கற்பனையின் ஒருபகுதி அல்ல, மாறாக முழு நியாயப்பிரமாணத்துக்கும் முகவுரை ஆகும். இது மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும், காரணம் இது தேவன் தமது ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை தருவதை போதிக்கிறது. இதனால், 1)மேலான ஆண்டவர்: தமது படைப்பாகிய நமக்கு தன்னுடைய கட்டளைகளைக் கொடுக்க சகல அதிகாரத்தையும் உடையவராக இருக்கிறார். எல்லா மனிதர்கள் மற்றும் தூதர்களும் தங்களைப் படைத்தவரின் அதிகாரத்திற்கு தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். 2)கிருபையான மீட்பர்: ஆண்டவர் தமது கட்டளைகளை அடிமைத்தனத்திலிருந்து மீட்ட தமது ஜனங்களுக்குத் தருகின்றார். இப்படியாக, தேவனுடைய கற்பனைக்கு கீழ்படிய இஸ்ரவேலர் மீது இரட்டிப்பான பொறுப்பு இருந்தது, நம்மீதும் அப்படியே இருக்கிறார்: அவர் நம்முடைய சிருஷ்டிகரும், மீட்பருமாக இருக்கிறார்.

**93-க்கான கேள்விகள்:**

1. பத்துக் கற்பனைகளின் ......................................... குறித்து இந்த கேள்வி போதிக்கிறது. இதில் ........................... முக்கிய பிரிவுகள் இருப்பதை நாம் அறியலாம், காரணம் இயேசுவும் மத்தேயு ..........-ல் இதைக் கூறியுள்ளார்.
2. வேதாகமம்... அ)இரண்டு கற்பலகைகள் இருந்தது என்று, ஆ)முதல் நான்கு கற்பனைகள் முதல் பலகையில் இருந்தது என்று, இ)நான்கு மற்றும் ஐந்துக்கு இடையே இந்த பிரிவு உண்டு என்று... தெளிவாக சொல்லவில்லை. எது? ..........
3. கற்பனைகளின் முதல் பகுதியை இயேசு எப்படி சுருக்கியுள்ளார்? ..................................................................
...........................................................................................................................................
4. பல நேரங்களில் அவிசுவாசிகள் கற்பனையின் முதல்பகுதியைக் கடைப்பிடிக்க தவறினாலும், இரண்டாம் பகுதியை (பிறருக்கு நாம் செய்ய வேண்டியது) கடைப்பிடிக்கிறார்கள்? சரியா, தவறா? .................., விளக்கம் தருக:
5. “உன் தேவனாகிய கர்த்தர் நானே” என்று முதலாம் கற்பனை தொடர்கிறது. சரியா, தவறா? ..................
6. முதலாவது மற்றும் பத்தாவது கற்பனையை ரோமன் கத்தோலிக்கர் மற்றும் லூத்தரன் எப்படி பிரித்து வரிசைப் படுத்துகிறார்கள்? ...................................................................................................
...........................................................................................................................................
7. இந்த வரிசைப் படுத்துதல் தவறானது ஏன்? ..............................................................................
...........................................................................................................................................
8. கற்பனைகளின் முன்னுரை தேவனைக் குறித்து போதிக்கும் இரண்டு சத்தியங்கள்:
   அ. அவர் ......................................................................................................................
   ஆ. அவர் ......................................................................................................................
9. இஸ்ரவேலலைப் போல நமக்கும் தேவனுடைய கற்பனையைக் கடைப்பிடிக்க இரண்டு வகையான

பொறுப்பு உண்டு. சரியா, தவறா? .....................

10. உபாகமம் 4:13-ஐ எழுதுக:

### 94. முதலாவது கற்பனையில் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்?

என்னுடைய ஆத்துமா ஆபத்திலிருந்து மீட்கப்படும்படி, நான் எல்லா வகையான விக்கிரக ஆராதணை, பில்லிசூனியம், வசீகரம், பரிசுத்தவான்கள் முதல் மற்ற படைப்புகளின் வழிபாடுகளுக்கும் என்னை விலக்கி; உண்மையான ஒரே தேவனை நான் சரியாக ஏற்று, அவரில் மட்டும் நம்பிக்கை கொண்டு, எல்லாவித தாழ்மை மற்றும் பொறுமையோடும் அவரிடமிருந்து மட்டும் எல்லா நன்மைகளும் வரக் காத்திருந்து, என்னுடைய முழு இருதயத்தோடும் அவரை நேசித்து, அவருக்கு பயந்து மதிப்பேன்; ஆகவே அவருடைய சிதத்தத்திற்கு எதிரான சிறிய ஒரு காரியத்தைச் செய்வதைக் காட்டிலும், எல்லா படைப்புகளையும் உதறிவிடுவதே மேலானது.

***

தேவனுக்கான நம்முடைய கடமைகளை முதல் நான்கு கற்பனைகள் விளக்குகிறது: முதல் கற்பனை தேவனுடைய ஒப்பற்ற ஆளுமைக்கான நம்முடைய கடமையைக் குறித்து பேசுகிறது. இரண்டாவது கற்பனை தேவனை ஆராதிப்பதில் நம்முடைய கடமை என்ன என்பதை பேசுகிறது. மூன்றாவது கற்பனை தேவனுடைய நாமத்திற்கான நம்முடைய கடமையை விளக்குகிறது. நான்காவது கற்பனை கர்த்தருடைய நாளில் நம்முடைய கடமை என்ன என்பதை விளக்குகிறது.

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்," என்னும் முதலாவது கற்பனை நாம் யாரை ஆராதிக்க வேண்டும் என்பதை சொல்கிறது. ஒரே ஒரு தேவன் மட்டுமே உண்டு, அவர்: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என மூன்று நபராக இருக்கிறார். இந்தக் கற்பனை எல்லா கற்பனைகளும் சார்ந்து இருக்கும் அடித்தளமாக இருக்கிறது. தேவன் முதலானவர், அவர் ஒருவர் மட்டுமே நம்முடைய இருதயம் மற்றும் வாழ்வில் முதலாவதாக இருக்க வேண்டும். ஒரேயொரு தேவன் மட்டுமே இருப்பினும் மனிதனின் பாவ இருதயம் உண்மையான தேவனின் இடத்தை பொய்யான தெய்வங்களுக்கு தருவதை விரும்புகிறது. ஒருவரின் இருதயத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொய்யான தெய்வங்களை கொண்டிருப்பது விக்கிரக ஆராதனை ஆகும். அனைத்து புறஜாதியார் தேசங்களும் பொய்யான தெய்வங்களை உடையதாகவும், அவைகளுக்கு உருவங்களையும் செய்தது. மேலும் இன்றைய நவீன மனிதன் குடும்பம், பணம், உலக இன்பம், உடலுறவு, புகழ், உணவு, ஹீரோஸ், சினிமா நட்சத்திரங்கள் போன்ற பல தெய்வங்களை வழிபடுகின்றான்.

உண்மையான தேவனை நாம் நேசிப்பதற்காக எவைகளை நாம் அகற்ற வேண்டும் என்று பதிலின் முதல் பகுதி கூறுகிறது: "விக்கிரக ஆராதனை, மந்திரம், வசீகரம் செய்தல் அல்லது குறிசொல்லுதல், பரிசுத்தவான்கள் மற்றும் படைக்கப்பட்ட ஜீவராசிகளை வழிபடுதல்" போன்றவைகள். ஜெர்மனிய கேட்டகிசம் இதோடு "மூடநம்பிக்கை"-யையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இவைகள் யாவும் வெளிப்படையான விக்கிரக ஆராதனையாகும். இந்தக் கற்பனையை மீறும் செயல்கள் என 33 செயல்களை வெஸ்ட்மின்ஸ்ட்டர் (Westminster) விரிவான கேட்டகிசம் விளக்கியுள்ளது!

1. *விக்கிரக ஆராதனை*: ஆராதனை, அன்பு மற்றும் சேவைகளை உண்மையான தேவனுக்கு அன்றி மற்றவைகளுக்கு கொடுப்பது. இதைக் குறித்து அடுத்த கேள்வியில் அதிகம் காணலாம்.

2. *மந்திரம்*: தேவன் மீது மட்டும் நம்பிக்கை வைக்காமல் தீய ஆவியின் வல்லமையால் மாயவித்தை மற்றும் செய்வினை ஆகியவற்றின் மூலம் நன்மைகளைத் தேடுதல்.

3. *வசீகரம் செய்தல் அல்லது குறிசொல்லுதல்*: ஜோசியம் மற்றும் சோதிடம் பார்த்தல், மற்றும் தீய ஆவியாலான தீர்க்கதரிசனம். தேவனுடைய வார்த்தைகளுக்குப் பதிலாக இவைகளைச் சார்ந்திருத்தல்.

4. *மூடநம்பிக்கை*: (முகூர்த்த, எமகண்டம், அமாவாசை போன்ற) நாள் நேரம் பார்த்தல், பல்லி சத்தத்திற்கு சகுணம் பார்த்தல், பூனை குறுக்கே சென்றால் சில வினாடிகள் நின்று செல்வது போன்றவைகள் உண்மையான தேவனை மறுதலிப்பதற்குச் சமம் ஆகும்.

5. *பரிசுத்தவான்களிடம் ஜெபம் செய்வது*: சகல வல்லமையும், இரக்கத்தையும் உடைய சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகரில் விசுவாசம் வைக்காமல், ரோமன் கத்தோலிக்க மதம் கூறும் பரிசுத்தவான்களிடம், படைக்கப்பட்ட மனிதர்களிடம், முக்கியமாக மாரியாளிடம் ஜெபம் செய்வது.

6. *பிற ஜீவராசிகளில் நம்பிக்கை வைப்பது*: நல்ல காரியங்களைப் பெற நியாயமான எல்லாவற்றையும் பயன்படுத்தலாம், ஆனால் தேவனைத் தவிர நம்மீதோ அல்லது மற்றவர்கள் மீதோ நம்பிக்கை வைக்க கூடாது.

ஒரே மெய்யான தேவனை சரியாக நேசித்து அவருக்கு சேவை செய்வது என்பதைக் குறித்த சிறந்த வழியை பதிலின் இரண்டாவது பகுதி விளக்குகிறது.

1. *தேவனைக் குறித்த சரியான அறிவை நாம் பெற்றிருக்க வேண்டும். இந்த அறிவு வேதத்திலிருந்து வரவேண்டும்.* திருவசனத்திலிருந்து மட்டுமே இந்த உண்மையான ஆண்டவரை அறிவதையும், அவருக்கு

சேவை செய்வதையும் குறித்து அறிய வேண்டும். நவீன சிந்தனையாளர்கள், யூதர்கள் மற்றும் பல மதவாதிகள் (Supreme Being) கடவுளைக் குறித்து பேசுகின்றனர், ஆனால் உண்மையான கடவுள் வேதத்தின் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர் என்பதாகும்.

2. *எல்லாவிதமான தாழ்மை மற்றும் பொறுமையுடன் நாம் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும்.* இந்த உண்மையான கடவுள் சர்வவல்லமையும், உண்மையும் சத்தியமானவர் என்று நம்ப வேண்டும். இவர் எப்போதும் தமது வாக்குத்தத்தத்தை காக்கிறார். அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை, ஒருபோதும் மறப்பதுமில்லை. நம்முடைய வாழ்வுக்கான தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்து, தாழ்மையுடனும், பொறுமையுடனும் அவரிடம் காத்திருக்க வேண்டும். அவரில் மட்டும் விசுவாசம் வைக்கும் நாம் முறுமுறுப்பில்லாமலும் சோர்ந்து போகாமலும் இருக்க வேண்டும்.

3. *எல்லா நன்மைகளையும் அவரிடமிருந்து மட்டும் நாம் எதிர்பார்க்க வேண்டும்:* திருவசனத்தின் ஆண்டவர் எல்லாவிதமான நன்மை மற்றும் ஆசீர்வாதங்களின் தேவனாவார். அவரே ஜீவனின் ஊற்று. "நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" (யாக் 1:17). இந்த உலகிலும், இதற்குப் பின்வரும் உலகிலும் ஜீவன் மற்றும் மகிழ்ச்சிக்கு நாம் அவரையன்றி வேறொன்றிலும் விசுவாசம் வைக்க கூடாது.

4. நம்முடைய முழு இருதயத்தோடும் அவரை நேசித்து, பயந்து அவரை மகிமைப் படுத்த வேண்டும். தேவ அன்பு மற்றும் தேவ பயம் இரண்டும் சேர்ந்தே செல்கின்றன. அவரை நேசிப்பது என்றால் அவர் சித்தம் செய்வது என்றும், அவருக்குப் பயப்படுவது என்பது அவரை மதித்து நம்மீது அவருக்கு அதிகாரம் கனப்படுத்துவது ஆகும். நம்முடைய முழு இருதயமும் அவரோடு இணைந்திருக்க வேண்டும். நம்முடைய வாழ்வில் தேவனை புறக்கணிக்கச் செய்யும் எல்லா விக்கிரக ஆராதனையையும் நாம் புறம்பே தள்ள வேண்டும். நம்முடைய ஆத்துமாவில் அவர் மட்டுமே மேலாக ஆட்சி செய்ய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக நாம் அவருடைய மகிமையை மட்டுமே தேட வேண்டும். "சகலமும் அவராலும், அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக" (ரோம 11:36)

தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக சிறியதொரு செயலைச் செய்வதைக் காட்டிலும் எல்லா படைப்புகளையும் கைவிட்டு அவைகளை விட்டு விலக விரும்புகிறீர்களா? இதுவே கிறிஸ்தவ மார்க்கத்தின் முதலாவதும், அடிப்படையுமான வேண்டுகோள் ஆகும்.

**94-க்கான கேள்விகள்:**

1. முதலாவது கற்பனையில் மற்ற தெய்வங்களும் இருப்பதை தேவன் உறுதிசெய்கிறார். சரியா, தவறா? .......................
2. முதலாவது கற்பனையில் தேவனுடைய ........................................................ நம்முடைய ..................................... பேசுகிறது.
3. எகிப்தியர், கானானியர், கிரேக்கர்கள் மற்றும் இந்தியர்கள் பல தெய்வங்களை வழிபடுகின்றனர். ஆனால் இந்திய கிறிஸ்தவர்கள் (அமெரிக்கர்கள்) உண்மையான ஒரே தேவனை வழிபடுகின்றனர். சரியா, தவறா? ......................
4. மாந்திரீகம், வசீகரம் மற்றும் மூடநம்பிக்கை போன்றவைகள் அனைத்தும் விக்கிரக ஆராதனை என்று சொல்வது சரியே. சரியா, தவறா? ...................
5. இரட்சிப்புக்காக கிறிஸ்துவை மட்டுமே நாம் நம்பும் போது, 8 போன்ற எண்கள் ராசி இல்லாதது மறறும் ராசிபலன்களின் மீது நம்பிக்கை வைப்பது தவறில்லை. சரியா, தவறா? ...................
6. ஜோசியம் மற்றும் பிற தீர்க்கதரிசன வெளிப்பாடுகள்... அ)அதிகமாக கவனிக்கப்படவில்லை எனில் தவறில்லை, ஆ)தீய ஆவிகளின் செயல்கள், இ)நம்முடைய வாழ்வுக்கு திருவசனம் போதும் என்பதை மறுதலிப்பது. எது? ..............
7. உண்மையான தேவனை நாம் நேசித்து அவருக்கு சேவை செய்ய அவசியமான நான்கு யாவை:
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
8. பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. கற்பனைகள் (1-4) | .. | முதல் கற்பனைக்கு எதிரான 33 செயல்கள் |
| ஆ. விளையாட்டு, பணம் மற்றும் புகழ் | .. | குறி சொல்லுதல் |
| இ. வெஸ்ட்மின்ஸ்ட்டர் விரிவான கேட்டகிசம் | .. | பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் |
| ஈ. சாத்தானின் தீர்க்கதரிசனம் | .. | தேவனுக்கான நம்முடைய கடமை |
| உ. மெய்யான ஒரே தேவன் | .. | நவீன கால விக்கிரகங்கள் |

9. வெளி 22:14,15-ன்படி எல்லா விக்கிரக ஆராதனைக்காரர்களுக்கும் நடக்கப்போவது என்ன?
   ..........................................................................................................................................................
10. உபாக 6:4,14,24-ஐ எழுதுக:

**95. விக்கிரக ஆராதனை என்றால் என்ன?**

தமது திருவசனத்தில் தம்மைக் குறித்து வெளிப்படுத்தியிருக்கும் தேவன் மீது விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக வேறு ஒன்றை கற்பனை செய்தல் அல்லது அவற்றில் நம்பிக்கை வைத்தல் விக்கிரக ஆராதனை ஆகும்.

***

முதலாவது கற்பனையைச் சார்ந்த இந்த இரண்டாவது கேள்வியில் விக்கிரக ஆராதனையின் உண்மைத் தன்மை என்ன என்பதை நாம் படிக்கலாம்: உண்மையான ஒரே தேவனில் விசுவாசம் வைக்காமல் ஏதாகிலும் ஒன்றை கற்பனை செய்து அல்லது உருவாக்கி அதில் நம்பிக்கை வைத்தல்.

விக்கிரக ஆராதனை பல வடிவங்களைக் கொண்டது. மனிதனுடைய பாவ இருதயமே உண்மையும், ஜீவனுமுள்ள தேவனுக்கு பதிலாக பலவகையான விக்கிரகங்களை இடைவிடாமல் உருவாக்கும் தொழிற்சாலையாக இருக்கிறது!

மனிதன் தனது நம்பிக்கையை வைக்கும் சில வகையான தெய்வங்கள் மற்றும் விக்கிரகங்களை நாம் காணலாம். எல்லாவகையான விக்கிரக ஆராதனையும் இரண்டு முக்கியப் பகுதிகளாக பிரிக்கப்படலாம்.

1. *வெளிப்படையான (Gross Idolatry) விக்கிரக ஆராதனை*, தனிப்பட்ட தெய்வங்களை வழிபடுதல்.

பழங்கால மனிதர்களும், இன்றைய கிறிஸ்தவரல்லாதோரும் பலவகையான ஆண் பெண் தெய்வங்களை வழிபடுகின்றனர். (ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வத்தில் நம்பிக்கை வைப்பது (Polytheism) பலதெய்வ நம்பிக்கை ஆகும்.) எகிப்தியர்கள் (சூரிய கடவுள், நதி கடவுள்...) பல தெய்வங்களைக் கொண்டிருந்தனர், ஆனால் மோசேயின் தேவனோ எகிப்தியர்கள் மீதும், அவர்களுடைய தெய்வங்கள் மீதும் பத்து வகையான கொள்ளை நோயினால் தமது கோபத்தை வெளிப்படுத்தினார். அதேபோல கானானியர்களும் பால், மோலேக், அஸ்தரோத், தாகோன் போன்ற தெய்வங்களை உடையவர்களாக இருந்தனர். ரோமர்களும் ∴பார்ச்சுனா (Fortuna), என்னும் அதிர்ஷ்ட்ட தேவதை; பாக்கூஸ், திராட்சைரச தெய்வம்; ஜீப்பிட்டர், பாதுகாக்கும் தெய்வம்; மார்ஸ், போர் தெய்வம் போன்றவற்றை வழிபட்டனர். லீஸ்த்திராவில் இருந்த மக்கள் பா்னபா மற்றும் பவுலை கிரேக்க கடவுளான சீயஸ் மற்றும் ஹெர்ம்ஸ் (ரோமர்களின் யூப்பித்தர் மற்றும் மெர்குரி) என்று நினைத்தனர்- அப் 14:11-13. அவர்கள் செய்த சிலைகள் மற்றும் விக்கிரகங்கள் தெய்வீக வல்லமை நிறைந்தவர்களாக எங்கோ இருந்தவர்கள் என்று அவர்கள் நினைத்த தனிப்பட்ட நபர்களை குறிக்கும் நிலையில் இருந்தன.

2. *மனதாலான (Mental) விக்கிரக ஆராதனை*, அல்லது மனித சிந்தனையின் தெய்வ வழிபாடு.

பழங்காலத்து மற்றும் இன்றைய மனிதர்கள் தங்களைக் குறித்தும், தாங்கள் வாழும் (பிரபஞ்சம்) உலகத்தைக் குறித்தும் விளக்குவதற்கு, மெய்யான ஜீவனுள்ளவரும், ஒரே சிருஷ்டிக் கர்த்தரையும் விட்டுவிட்டு, பலவிதமான மத நம்பிக்கைகளை உருவாக்கியுள்ளனர்.

அ. *ஏத்தீயிசம்* (கடவுள் நம்பிக்கையின்மை) மற்றும் மெட்டீரியலிசம். இந்த வகையான நம்பிக்கை தனிப்பட்ட கடவுள் அல்லது ஆவியின் மீது நம்பிக்கை வைக்காமல், கண்களால் காணப்படுபவைகளில் மட்டும் நம்பிக்கை வைப்பதை குறிக்கிறது. நாம் நமது கண்களால் காணப்படும் பொருட்கள் மற்றும் செயல்வினைகளில் மட்டும் நம்பிக்கை வைப்பது. கம்யூனிசமானது ஏத்தீயிசம் மற்றும் மெட்டீரியலிசத்தை அடிப்படையாகக் கொண்டது, கம்யூனிச கொள்கைக்காரர்கள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்று தங்களைக் கூறினாலும், வெறியுணர்வைத் தூண்டும் மதத்தைச் சார்ந்தவர்களாவர்.

ஆ. *பான்தீயிசம்* (எல்லாம் கடவுள் என்னும் நமபிக்கை), இந்த நம்பிக்கையுடையவர்கள் எல்லாவற்றிலும் கடவுள் இருக்கிறார், ஆகவே எல்லாம் கடவுள் என்கின்றனர். சூரியன், சந்திரன், மரம், பறவைகள் போன்ற அனைத்தும் கடவுளின் பகுதிகளாகும். இதுபோன்ற கடவுள் நம்பிக்கையானது, தமது படைப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபடும் சிருஷ்டிக் கர்த்தரை மறுதலிப்பதாகும்.

இ. *ஹுமனிசம்* (மனிதநலக் கோட்பாடு). இன்றைய நவீன காலத்து மனிதர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானதும், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளும் பலரின் மதமாகவும் இது இருக்கிறது. மனிதனை ஆராதிப்பது ஹுமனிசம்: மனிதனின் ஞானம், திறமை, மனிதனின் சிறப்பு, மனிதன் விரும்பும் சுதந்திரம், பிரதானமான இலக்கு மனிதனின் பாதுகாப்பு ஆகியவைகள். எல்லாமே மனிதனுக்கு சேவை செய்ய வேண்டும், கடவுளும் மனிதனுக்கு சேவை செய்யும்படி இருக்கிறார். நவீன காலத்து கண்டிப்பற்ற போதனை மற்றும் சமூக செயல்களுக்கு ஹுமனிசமே பின்னணியாக உள்ளது. நாட்டு மக்களுக்கு போதிய அளவு பாதுகாப்பு மற்றும் வாழ்வுக்கு தேவையான எல்லா நன்மைகளையும் செய்ய அரசு தீவிரமாக செயல்பட வேண்டும் என்பதை மட்டும் மிகவும் வற்புறுத்துகிறவர்கள் ஜீவனுள்ள உண்மை தேவனை விட அரசாங்கத்தின் திட்டங்களை தங்களுக்கு பாதுகாப்பு தரும் கடவுளாக மாற்றுகின்றனர்.

ஈ. *வோர்லினஸ்* (Worldlines). கிறிஸ்தவரல்லாதோர் வேதாகமத்தின் தேவனைக் காட்டிலும் பலவகையான தெய்வங்களை தங்களுக்கு தேர்வு செய்து கொள்கின்றனர். சிலர் பணத்தை சம்பாதிப்பதை தங்கள் வாழ்வின் முதன்மையாக நினைக்கின்றனர். சிலர் மிகவும் பிரபலமாக வேண்டும் என்பதற்காக, வேறுசிலர் தங்கள் குடும்பத்தை மட்டும் மேன்மைப் படுத்த வேண்டும் என்பதற்காக, மற்றும் பலர் உலகின் எல்லாவகை

இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக வாழ்கின்றனர்.

மனிதனுடைய பாவ இருதயத்திலிருந்து வெளி வரும் விக்கிரகங்களுக்கு முடிவே இல்லை. ஆனால் உண்மையான கிறிஸ்தவன் தேவனை முதன்மையாக வைத்து, அவரில் மட்டும் விசுவாசம் வைக்கிறான்.

**95-க்கான கேள்விகள்:**

1. இந்த கேள்வியில் விக்கிரக ........................................................................................ நாம் படிக்கிறோம்.
2. விக்கிரக ஆராதனை என்றால் என்ன? ........................................................................................................ ........................................................................................................................................................
3. விக்கிரக ஆராதனை என்பது சிலைகளை செய்து வழிபடும் ஒரே வகையை மட்டும் குறிக்கிறது. சரியா, தவறா? ......................
4. விக்கிரக ஆராதனையின் இரு முக்கிய பிரிவுகள் என்ன? அ........................................................................., ஆ.........................................................................................................
5. புறஜாதியார் விக்கிரகங்களை செய்யும்போது, உண்மையான தேவனையே அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கின்றனர். சரியா, தவறா? ......................
6. 1கொரி 10:19,20-ன்படி விக்கிரக ஆராதனைக்குப் பின் உள்ள தெய்வங்கள் ............................. ஆகும்.
7. ஏத்தீயீஸ்ட், கடவுள் மற்றும் மத நம்பிக்கை அற்றவர்கள், அதுபோல கம்யூனிஸ்ட் கடவுள் நம்பிக்கையற்றவர்களாக, தங்களுக்கென்று எந்தவிதமான மதத்தையும் உடையவர்கள் அல்ல. சரியா, தவறா? ....................., விளக்கம்: ..........................................................................................................................
8. பின்வருவதை பொருத்துக:

| | |
|---|---|
| ஹுமனிசம் | - கடவுள் இல்லை என்னும் போதனை |
| பான்தீயிசம் | - கடவுளின் இடத்தில் மனிதனை வைத்தல் |
| ஏத்தீயிசம் | - கடவுளுக்கு இணையாக மற்ற காரியங்களை வாழ்வில் முதன்மையாக்குதல் |
| வோர்லினஸ் | - எல்லாம் கடவுள் என்ற போதனை |

9. மனிதனுக்கு தேவையான யாவற்றுக்கும் தேவன் மீது நம்பிக்கை வைக்காமல் உலக அரசாங்கத்தை மட்டும் சார்திருத்தல் விக்கிரக ஆராதனை ஆகும். சரியா, தவறா? ...................
10. 1யோவா 5:21-ஐ எழுதுக:

**96. இரண்டாவது கற்பனையில் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்?**

தேவன் தமது திருவசனத்தில் கட்டளையிட்டிருப்பதற்கு மாறாக நாம் எந்தவிதத்திலும் ஆராதிக்கவோ அல்லது தேவனை சுரூபமாக்கி வணங்கவோ கூடாது.

***

மெய்யான தேவன் ஒருவரை மட்டுமே நாம் வணங்க வேண்டும் என்பதை முதலாம் கற்பனை நமக்கு சொல்கிறது. தேவனை ஆராதிப்பதில் நமக்குள்ள கடமை அல்லது உண்மை தேவனை நாம் எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதை இரண்டாம் கற்பனை நமக்கு சொல்கிறது. இப்படியாக, இவ்விரண்டு கற்பனைகளிலும் இரு நல்லொழுக்க கடமைகள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்விரண்டு கற்பனைகளையும் ரோமன் கத்தோலிக்கர் மற்றும் லூத்தரன்கள் போல ஒன்றாக்குவது மிகவும் பெரிய தவறாகும்.

இரண்டாம் மற்றும் நான்காம் கற்பனைகள், தேவனுடைய பார்வையில் அவற்றுக்குள்ள முக்கியத்துவத்தை விளக்கும் வண்ணம், எல்லா கற்பனைகளிலும் பெரியவைகளாக இருக்கிறது.

தேவன் “எரிச்சலுள்ள கர்த்தராக” இருக்கிறார். அவர் தன்னுடைய சொந்த மகிமை மற்றும் மேன்மையைக் குறித்து மிகவும் வைராக்கியமுள்ளவராக இருக்கிறார். பாவிகளான மனிதர்கள் தேவனைக் குறித்து சரியாக சிந்திக்க முடியாதென்பதால் அவர்கள் தேவனை ஆராதிக்க எடுக்கும் முயற்சி தேவனை கனவீனம் செய்வதில் முடியும். மனிதன் தேவனை ஆராதிப்பதில் படங்கள் மற்றும் படைப்புகளை பயன்படுத்துவது உதவி செய்வதுபோல இருப்பினும், இவைகள் தேவனுடைய மகிமையை கனவீனம் செய்வதால், தேவன் அதை வெறுக்கிறார். “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் (இருதயத்திலிருந்து) உண்மையோடும் (அவர் கூறும் நெறிமுறைகளில்) தொழுது கொள்ள வேண்டும்” என்று யோவான் 4:24 கூறுகிறது.

வேதத்தில் தேவன் கூறாத முறைகளில் செய்யப்படும் அனைத்து ஆராதனைகளையும் இந்த கட்டளை கண்டனப்படுத்துகிறது. இந்த கற்பனை மனிதனால் எப்படி உடைக்கப்படுகிறது என்பதை நாம் காணலாம்.

இரண்டு மனிதர்கள் தேவனை ஆராதிக்க விரும்பினார். இருவருமே காணிக்கை கொண்டுவந்தனர். ஆனால் தேவன் ஆபேலின் ஆராதனையை அங்கீகரித்தார், காயீனுடையதை அங்கீகரிக்கவில்லை (ஆதி 4:3,4). காயீன் தன்னுடைய சொந்த வழிமுறையின்படி தேவனை வழிபட நினைத்தான், அவனால் முடியாமற் போயிற்று.


நாதாப் மற்றும் அபியூ “அந்நிய அக்கினையைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்தபோது,” (தவறான பலியை கொண்டுவந்தபோது) தேவன் அவர்களை கொன்றார் (எண் 3:4). சவுல் இராஜா

தவறான பலியை தேவனுக்கு செலுத்தியதால் தேவனால் புறக்கணிக்கப்பட்டார் (1சாமு 13:9,13).

ஜனங்கள் தேவனை ஆராதிப்பதற்கு “உதவியாக” தங்கத்தாலான கன்றுக் குட்டியை நிறுவிய ஆரோன் மற்றும் யெரொபெயாமும் இரண்டாவது கற்பனையை மீறினார்கள் (யாத் 32:1-5 1இராஜ 12:25-33). யெரொபெயாமும் தேவனை ஆராதிக்க பிறவழிகளையும், சொந்தமாக தானே ஆசாரியர்களையும், தானாகவே தனிப்பட்ட ஆராதனை வீடுகளையும், தானே சொந்தமாக பண்டிகை நாட்களையும் ஏற்படுத்தினான். தேவனுடைய வார்த்தைக்கு தன்னை ஒப்புக்கொடுக்காமல், “தன் மனதிலே தானே நியமித்துக் கொண்ட” (1இரா 12:33) வழிமுறைகளை ஏற்படுத்தினான்.

இன்றைய நாட்களில், ஆராதனையைக் குறித்த காரியத்தில், “தேவனுடைய வார்த்தையால் தடைசெய்யப்படாத எதையும் ஆராதனையில் பயன்படுத்தலாம்” என்னும் தவறான அபிப்பிராயம் பிரபலமாக காணப்படுகிறது. ஆகவேதான் இன்றைய ரோமன் கத்தோலிக்கர், லூத்தரன் மற்றும் புராட்டஸ்டன்டுகள் ஆராதனையில், “பலிபீடம், மெழுகுதிரிகள், சிலுவைச் சின்னங்கள், வெள்ளிக்கிழமை உபவாசம்” மற்றும் போதகருக்கு விசேஷித்த ஆடைகள், புனித தண்ணீர், கிறிஸ்துமஸ் மரம் போன்றவைகளை ஆராதனையில் பயன்படுத்துகின்றனர்.

இருப்பினும் தேவனை ஆராதிப்பதற்கான உண்மையான அடிப்படை ஒழுங்கு, வேதத்தால் கட்டளையிடப்பட்டவைகள் சரியானவை, வேதத்தால் கட்டளையிடப்படாதவைகள் தவறானவைகள் ஆகும். மற்ற அனைத்து வழிகளும் ஆராதனையை பரிசுத்த குலைச்சலாக்குகிறது. பின்வரும் மூன்று விளக்கப்படங்கள் ஆராதனையைக் குறித்த மூன்று கண்ணோட்டங்களை விளக்குகிறது:




காயீன், ஆரோன், யெரொபெயாம், கண்டிப்பற்றவர்கள்

ரோமன் கத்தோலிக்கம், லுத்தரன், (fundamentalists) எழுத்தின்படி வியாக்கியாணம் செய்பவர்கள்

சீர்திருத்த (Reformed), பிரஸ்பிடீரியன்

**96-க்கான கேள்விகள்:**

1. முதலாவது கற்பனை ........................................................................................................ வணங்க வேண்டும் என்பதையும். இரண்டாம் கற்பனை ........................................................................................... சொல்கிறது.
2. முதல் இரண்டு கற்பனைகளை ஒன்றாக்குவதை நினைப்பவர்கள் விக்கிரக ஆராதனையை மட்டும் கவனிக்கின்றனர், ஆனால் கலப்படமற்ற ஆராதனையின் அவசியத்தை உணர்வதில்லை. சரியா, தவறா? .....................
3. தேவன் தமது மகிமை மற்றும் மேன்மையைக் குறித்து மிகவும் வைராக்கியமுள்ளவர், ஜனங்கள் அவரை தாங்கள் நினைக்கும் எந்த வழியிலும் வழிபடலாம். சரியா, தவறா? ...................
4. பாவியான மனிதர்களால் தேவனை சரியாக அறிந்து ஆராதிக்க முடியாது. சரியா, தவறா? ................
5. தேவனைப்போல உருவத்தை மனிதனால் ஒருபோதும் உருவாக்க முடியாது ஏன்? ................................ .................................................................................................................................... (வசனக் குறிப்பு)
6. தேவனை தங்கள் சொந்த யோசனைப்படி ஆராதிக்க முயற்சித்து, தண்டிக்கப்பட்ட மனிதர்கள் சிலரை வேதத்திலிருந்து குறிப்பிடுக: ..........................................................................................................
7. பல திருச்சபைகள் தங்கள் ஆராதனையில் தவறான ஒழுங்குமுறைகளைக் கொண்டுள்ளனர். அவைகள் யாவை? ......................................................................................................................................
8. வேதத்தின்படி தேவனை ஆராதிப்பதற்கான உண்மையான அடிப்படை ஒழுங்கு என்ன? ....................... ........................................................................................................................................ ........................................................................................................................................
9. ஆரதானையைப் பற்றிய மூன்றுவித கருத்துகளின் விளக்கப்படம் வரைக:
10. உபாகமம் 12:32-ஐ எழுதுக:

### 97. எந்தவொரு உருவத்தையும் நாம் உருவாக்க இயலாதா?

கடவுளை எந்தவிதத்திலும் உருவகப் படுத்த முடியாது; சிருஷ்டிப்புகளைப் பொருத்த வரையில், அவைகள் உருவகப்படுத்தப் பட்டாலும்; அவைகள் உருவாக்கப்படுதலையும் அல்லது அவைகள் போன்றவற்றை வைத்திருப்பதையும், அவைகளால் தேவனுக்கு பணி செய்வதையும் கர்த்தர் தடைசெய்துள்ளார்.

***

தேவனுடைய சாயல் உருவகப்படுத்தப்படுதல் கூடாது என்பதை கேள்வி 97 சொல்வதோடு, மற்ற எந்தவொன்றின் உருவமும் தேவனை ஆராதிப்பதற்காகப் பயன்படுத்த கூடாது என்பதையும் நமக்குச் சொல்கிறது.

உருவம் (image) என்பது எந்தவொரு மனிதன் அல்லது சிருஷ்டிப்பை குறிக்கும் ஒன்றாகும். படங்கள், சிலைகள் மற்றும் வண்ணப்படங்கள் யாவும் உருவங்கள் ஆகும். ஓவியம் சரியான செயலா என்பது இங்கே கேள்வி அல்ல. ஓவியக்கலை தேவனால் கொடுக்கப்பட்டதென்றும், மனிதனால் முக்கியமாக கிறிஸ்தவர்களால் அது வளர்க்கப்பட வேண்டும் என்று நாம் நம்புகிறோம்.

இருப்பினும் கலையினால் ஆன பொருட்கள் தேவனை ஆராதிப்பதற்கான உதவி பொருட்களாக பயன்படுத்தப்பட கூடாது. இதற்கான காரணம், ஆராதனை தேவனை மட்டுமே நோக்கி இருக்க வேண்டும், இந்த தேவன் ஆவியாக இருக்கிறார். அவருக்கு இயல்பான சரீரம் இல்லை. ஆகவே அவரை உருவகப்படுத்தவோ அல்லது மற்ற ஒருபொருளால் குறிப்பிடவோ கூடாது. அவர் கண்களால் காணப்பட முடியாதவர் (1தீமோ 6:16), அவர் எங்கும் இருப்பவர் (எரே 23:24; 1இரா 8:27). தேவனை வரைவதற்கான முயற்சி அவரை இழிவுபடுத்துவதும், குறைத்து மதிப்பிடும்படி ஒன்றை தெரிவு செய்வதுமாகும். பொய்யான படங்களினால் தேவனை ஆராதனை செய்ய முடியாது. மேலும், கடவுளை மனதில் உருவகப்படுத்திப் பார்ப்பதும் இந்தக் கற்பனையை மீறுவதாகும். வேதாகமம் தேவனைக் குறித்து கூறும்போது மனித உறுப்புகளை பயன்படுத்தினாலும், தேவன் எப்படி இருப்பார் என்று உருவகப்படுத்தி பார்க்கும்படி தூண்டப்படும் சோதனையை நாம் எப்போதும் எதிர்க்க வேண்டும். (இப்படி கடவுளை மனித உருப்புகளை பயன்படுத்தி பேசுவது ஆன்த்ரோபோமார்.்பிசம் ஆகும். உதாரணமாக, தேவனுடைய கண்கள், கரங்கள், காதுகள் மற்றும் வாய் போன்றவை.)

தேவனை ஆராதிப்பதில் உருவங்கள் பயன்படுத்தப்படுவது தவறு என்றால், பழைய ஏற்பாட்டு ஆராதனைகளில் வழிபாட்டுப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது ஏன்? மகா பரிசுத்த ஸ்தலத்தில் கிருபாசனத்தின் மீது இரண்டு தங்கத்தாலான தூதர்கள் இருப்பது (யாத் 25:18-20) ஆசப்புகூடார திரைச்சீலைகளில் தூதர்கள் தையல்கலையால் வரையப்பட்டிருப்பது (யாத் 26:1,31), மேலும் பழைய ஏற்பாட்டில் தேவன் கட்டளையிட்ட தூணில் பொறிக்கப்பட்ட வெண்கல சர்ப்பம் (எண்ணா 21:8,9) போன்றவைகளை நீங்கள் நினைக்கலாம்.

இந்த பிரச்சனைக்கான பதில் இருவகையானது. முதலாவது, வழிபாட்டில் பயன்படுத்துமாறு அனுமதிக்கப்பட்ட பொருட்கள் சரியானவைகள், காரணம் அவைகள் தேவனால் கூறப்பட்டவைகள். எவைகளை தேவன் கட்டளையிடுகிறாரோ அவைகள் சரியானவைகளே. இரண்டாவது, எந்தவொரு உருவத்தையும் தம்மைக் குறிக்கும் நிலையில் அனுமதிக்கவில்லை. இவ்விரண்டு அடிப்படை ஒழுங்கும் நமக்கும் பொருந்தும்: 1)எவைகளைத் தேவன் கட்டளையிட்டுள்ளாரோ, அவைகள் சரியானவைகள் என்பதோடு அவசியமானவைகளாகவும் இருக்கிறது, மேலும், 2)பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய தேவனை ஒருபோதும் நாம் உருவப்படுத்த முயற்சி செய்யக் கூடாது.

தேவனுடைய கற்பனையை மீறுவதற்கான தண்டனை மீறுபவர்களுக்கு மட்டுமல்ல, மாறாக அவர்களின் பிள்ளைகள் மற்றும் மூன்றாம் நான்காம் தலைமுறையினருக்கும் தொடரும். அப்படியானால், பின் தலைமுறையினரும் பெற்றோர் சென்ற தவறான பாதையிலேயே நடத்தப்பட்டு, கர்த்தருடைய கற்பனையை மீறியதற்கான கொடுமையான பின்விளைவுகளை அனுபவிப்பார்கள்.

**97-க்கான கேள்விகள்:**

1. எந்தவொரு சிருஷ்டியின் படத்தையும் வரைய கேள்வி 97 தடைசெய்கிறது. சரியா, தவறா? ............
2. தேவனைக் குறிப்பிட எந்தவொரு படத்தையோ அல்லது சுரூபத்தையோ செய்யக்கூடாது. காரணம், 1தீமோ அவர் ............................................................................ என்கிறது, யோவா 4:24 அவர் ..................... ..................................................................... என்கிறது, எரேமி 23:24 அவரை ................................................................ என்கிறது.
3. தேவனை ஆராதிக்க பயன்படுத்தப்படும் ஒரு சுரூபமோ அல்லது படமோ... அ)தேவனை குறைத்து மதிப்பிடுகிறது, ஆ)தேவனை மகிமைப்படுத்துகிறது, இ)தேவனை தவறாக குறிப்பிடுகிறது, ஈ)ஒரு பொய். எது? ............
4. வசனங்களில் தேவனை ஆராதிப்பதில் சுரூபங்கள் பயன்படுத்துவதற்கு எதிரான வசனங்கள் என்ன? யாத் 32:8; உபா 4:15,16; 16:22; சங் 54:2; 2இரா 18:4; ஏசா 53:1; ஆபகூ 2:18,19; அப் 17:29.
5. நாம் ஜெபிக்கும்போது தேவன் எப்படியிருப்பார் என்று கற்பனை செய்ய வேண்டும். சரியா, தவறா? ..................
6. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் எந்தவொரு சொரூபம் அல்லது படத்தை செய்வதற்கான கட்டளையும் இல்லை. சரியா, தவறா? .................
7. கீழ்ப்படிகிறவர்களுக்கு இரண்டாவது கற்பனை கொடுக்கும் உத்திரவாதம் என்ன? .................................. ...........................................................................................................................................................
8. எண்ணாகமம் 21:8,9-ல் கர்த்தர் ஜனங்கள் பார்க்கும்படி மோசேயை ஒரு ..................................................

................. செய்யும்படி கட்டளையிட்டார். 2இராஜ 18:4-ல், ஜனங்கள் ........................................................ செய்ததால் அதை நொறுக்கும்படி எசேக்கியாவிற்கு கட்டளையிட்டார்.

9. கற்பனையை மீறுகிறவர்களுக்கு இரண்டாவது கற்பனையின் எச்சரிப்பு என்ன? ........................................ ........................................................................................................................................................

10. ஏசாயா 40:18, 25-ஐ எழுதுக:

**98. ஆலயத்தில் ஜனங்களுக்கு புத்தகங்களைப்போல படங்கள் ஏற்றுக்கொள்ளப்பட கூடாதா?**

இல்லை, ஊமையான விக்கிரகங்களினால் அல்ல, கர்த்தருடைய வார்த்தையின் ஜீவனுள்ள பிரசங்கத்தினால் மட்டும் தமது ஜனங்கள் போதிக்க வைக்கும் தேவனைப் பார்க்கிலும் நாம் ஞானவான்கள் அல்ல.

***

தேவனை ஆராதிப்பதில் படங்கள் மற்றும் சொரூபங்கள் பயன்படுத்த முடியாது என்பதற்கான காரணத்தை இரண்டாவது கற்பனையை சார்ந்த இந்த கடைசி கேள்வியில் நாம் படிக்கிறோம். கேட்டகிசம் எழுதப்பட்ட போது முதல் இன்றுவரை ரோமன் கத்தோலிக்க ஆலயத்தில் சொரூபங்கள் பொருக்க இயலாத நிலையில் பயன்படுத்தப்படுவதால் இந்தக் கேள்வி கேட்டகிசத்தில் இடம் பெறுகிறது. ஆரம்பகால பிஷப்புகளில் ஒருவரான கிரிகரி என்பவர், படங்கள் படிக்கத் தெரியாதவர்களுக்கான “படுக்க வைக்கப்பட்ட புத்தகங்கள்” என்றார். வேதத்தைப் படிக்க முடியாத, லத்தீன் மொழி ஆராதனையை புரியாத ஒருவருக்கு இயேசுவைக் குறித்து போதிக்கும் என்ற அர்த்தத்தில் இவர் சொன்னார். ஆகவே, ரோமன் கத்தோலிக்க சபை தனது அங்கத்தினர்களுக்கு போதனை செய்ய வேதாகமத்தைக் காட்டிலும் படங்கள், சிலைகள் மற்றும் நினைவுச் சின்னங்களை அதிகமாக பயன்படுத்துகிறது.

சீர்திருத்த சான்றோர்கள் வேதத்திலிருந்து இவை எல்லாம் தவறு என்று அறிந்தனர். கிறிஸ்துவை ஜனங்களுக்கு கற்றுக்கொடுக்க கிறிஸ்துவைக் குறித்து வேதத்திலிருந்து ஜனங்களுக்கு கற்றுக்கொடுத்து, ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே வேதத்தை வாசிக்க கற்றுக் கொடுக்க வேண்டும். படங்களைப் பயன்படுத்தி ஜனங்களுக்கு கற்றுக் கொடுப்பது தேவனைவிட ஞானமாக இருக்க முயற்சி செய்கிறார்கள் என்று அர்த்தமாகும்.

கிறிஸ்துவைக் குறித்த போதனை ஜனங்களுக்கு போதகரால் பிரசங்கிக்கப்பட வேண்டும், ஆனால் ஓவியரால் ஓவியமாக்கப்பட கூடாது என்று தேவன் கட்டளையிட்டுள்ளார்! படங்கள் மௌனமான விக்கிரகங்கள். பிரசங்கியார் கர்த்தருடைய வார்த்தையை வார்த்தைகள் மற்றும் சத்தத்தால் அறிவிக்கின்றனர்.

மத சம்மந்தப்பட்ட படங்கள் எப்போதாகிலும் ஏதாகிலும் நோக்கதிற்காக பயன்படுத்தப்பட்டதா என்று நாம் ஒருவேளை நாம் கேட்கலாம்? வேதத்தின் சத்தியங்களை விளக்குவதற்கு உதவியாக உருவாக்கப்படும் விளக்கப்பட ஓவியங்களைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, பாலஸ்தீன தேசத்தை விளக்க நிலஇயல் விளக்கப்படம் பயன்படுத்துவது. வேதத்தின் பல காரியங்களை சரியாக அறிய வேதாகம காலத்தின் பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களை நாம் அறிய வேண்டும். உதாரணமாக, விளக்கையே பார்த்திராத ஒரு காட்டுவாசிக்கு விளக்கு படத்தைக் காட்டாமல் அதை எப்படி புரிந்து கொள்வார்? ஆகவே படங்கள் மற்றும் விளக்க வரைபடங்கள் மற்றும் ஓவியக்கலையை சரியாகப் பயன்படுத்துவதற்கான எடுத்துக்காட்டாகும்.

இயேசு கிறிஸ்துவின் படம் இன்னும்மொரு பிரச்சனையான விஷயம். புராட்டஸ்டன்டு மற்றும் ரிபார்ம்டு கிறிஸ்தவர்கள் இதைக் குறித்து ஒன்றும் கண்டு கொள்ளாவிட்டாலும், அவைகள் எப்போதும் பாவமானவைகளே. இயேசுவின் படத்தை முதல்பக்க அட்டையில் அச்சிடப்பட்ட ஒரு புராட்டஸ்டன்டு துண்டு வெளியீடு, அப்படத்தை மனிபர்ஸில் வைக்கவும், வேலை செய்யும் இடத்தில் கண்பார்க்கும் இடத்தில் வைத்து அந்நாளின் வேலைகளைச் செய்யும்படியும் கேட்டிருந்தது. இது ரோமன் கத்தோலிக்க வகையைச் சார்ந்த தெளிவான விக்கிரக ஆராதனையாகும்.

கிறிஸ்து ஏன் படமாக்கப்படக் கூடாது, காரணம் அவர் தேவன், தேவன் படமாக்கப்பட முடியாது. இதை மறுக்க இயேசு முழுமையான மனிதன் என்று சொல்லும்போது, அவருடைய மனுஷீகம் அவருடைய தெய்வீகத்திலிருந்து பிரிக்கப்பட முடியாது என்று நாம் பதிலளிக்கிறோம். ஆகவே கிறிஸ்துவின் மனிதசாயல் என்று வரையப்படும் படங்கள் ஓவியரின் கைத்திறனின் ஒரு பகுதியாகவும், கிறிஸ்துவின் சாயல்களைப் பிரிக்க எடுத்த முயற்சியாகவும், முடிவில் அது பொய்யான கிறிஸ்துவாக -விக்கிரகமாக உருப்பெருகிறது. ஆகவே இயேசுவின் உருவப் படங்கள் என்பது இரண்டாவது கற்பனையை மீறுவதற்கு சமமானதாகும், ஆகவே நம்முடைய திருச்சபை மற்றும் குடும்பங்களில் இது காணப்படக் கூடாது.

**98-க்கான கேள்விகள்:**

1. கேட்டகிசத்தில் இந்த கேள்வி இடம்பெறுவதற்கான காரணம் என்ன? .......................................................... ........................................................................................................................................................

2. இயேசுவின் படங்கள் “படுக்க வைக்கப்பட்ட புத்தகங்கள்” என்று கிரிகரி கூறுவதன் அர்த்தம் என்ன? ........................................................................................................................................................

.............................................................................................................................................................

3. படிக்காத அல்லது படிப்பறிவு இல்லாதவர்கள் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள... அ)படங்களாலான மத புத்தகத்தைப் பார்க்க, ஆ)வேதத்தை வாசிக்க ஆரம்பிக்க, இ)மத சினிமாக்களை பார்க்க, ஈ)வேதாகம பிரசங்கத்தை கேட்க... வேண்டும். எது? ........
4. கர்த்தருடைய வார்த்தையின் "ஜீவனுள்ள பிரசங்கம்" என்பது... அ)பிரசங்கியார் அவ்வப்போது சத்தம் போட்டு, மேஜையைத் தட்டுவது, ஆ)திருவசனத்தின் சத்தியங்களை அறிவித்தல், இ)சிலுவை நாடகத்தில் பங்குபெறுவது... ஆகும். எது? .........
5. பழங்கால இஸ்ரவேலர் வாழ்வை புரிந்து கொள்வதற்கு உதவும் ஓவியங்களையும் நாம் புறக்கணிக்க வேண்டும். சரியா, தவறா? .................
6. செங்கடல், பாலஸ்தீன தேசப்படம், ஆசரிப்பு கூடார படம் போன்றவைகளும் இரண்டாவது கற்பனையால் தடைசெய்யப்படுகிறது. சரியா, தவறா? ................., விளக்கம்: .......................................................................
.............................................................................................................................................................
7. ரோமன் கத்தோலிக்கர்கள் மட்டுமே இயேசுவின் படங்கள் மற்றும் சிலைகளை பயன்படுத்தி இரண்டாவது கற்பனையை மீறுகிறார்கள். சரியா, தவறா? ................. விளக்கம்: ...............................................................
.............................................................................................................................................................
8. கிறிஸ்துவின் படத்தைப் பயன்படுத்துவது தவறானது, காரணம் (சரியானதை குறிப்பிடுக)
   ......... கிறிஸ்து உண்மையான மனிதன் அல்ல
   ......... இயேசு எப்படியிருந்தார் என்பது நமக்குத் தெரியாது
   ......... இயேசு தேவன் ஆவார்
   ......... இது இயேசுவின் மனித மற்றும் தெய்வீக சாயல்களைப் பிரிக்கிறது.
9. கிறிஸ்துவின் படங்கள் ஆலயத்தில் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது, ஆனால் அவைகள் நமது வீடுகளில் அலங்காரத்திற்காக பயன்படுத்தபடலாம். சரியா, தவறா? ................., விளக்கம்: .........
.............................................................................................................................................................
10. ரோமர் 10:14-ஐ எழுதுக:

**99. மூன்றாவது கற்பனையில் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்?**

சாபமிடுதல், அல்லது தவறாக ஆணையிட்டு கொடுத்தல், மேலும் கடவுள் மீது சத்தியம் செய்தல் போன்றவற்றால் தேவனுடைய நாமத்தை தவறாக பயன்படுத்தவோ அல்லது வீணிலோ வழங்கவோ கூடாது; நம்முடைய வசதிக்காகவோ அல்லது பிறர் செய்யும்போது அமைதலாக இருப்பதினால் பிறரின் இழிவான பாவத்தில் நாம் பங்கடையக் கூடாது; தேவன் நம்மால் சரியாக அறிக்கை செய்யப்பட்டு, ஆராதிக்கப்படும்படியாகவும், நம்முடைய வார்த்தை மற்றும் செயல்களில் அவர் மகிமைப்படும்படியாகவும் தேவனுடைய நாமத்தை நாம் பயத்தோடும் நடுக்கத்தோடுமேயன்றி வேறெவ்விதத்திலும் பயன்படுத்தக் கூடாது என்பதாகும்.

***

மூன்றாவது கற்பனையை 99 முதல் 102 வரை உள்ள கேள்விகள் விளக்குகிறது. "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடமாட்டார்."

இந்த கற்பனை தேவனுடைய நாமத்திற்கான நம்முடைய கடமை என்ன என்பதைச் சொல்கிறது. தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குவது நம்முடைய நாட்களில் பரவலாக காணப்படும் பாவமாகும். அறிவற்ற மற்றும் முரட்டுத்தனமாக ஜனங்கள் தெய்வநிந்தனையான வார்த்தைகளைப் பயன்படுத்துவதோடு, பெரிய அதிகாரிகள், கலைநிகழ்ச்சி நடத்துவோர் மற்றும் பெரிய அந்தஸ்திலுள்ளவர்களின் உதடுகளிலும் இந்த தவறை நாம் கேட்கிறோம் அல்லது செய்தி தாள்களில் படிக்கிறோம்.

தேவனுடைய "நாமம்" என்றால் என்ன?

தேவனுடைய நாமம் அவருடைய தனித்தன்மையை(ஆளுமையை)-க் குறிக்கிறது. தேவன் தம்மைக் குறித்து படங்களினால் அல்ல, பெயரால் (தன்னுடைய எல்லாப் பெயரால்) தன்னை வெளிப்படுத்துகிறார். ஆதாம் மிருகங்களின் குணாதிசயம் மற்றும் அடிப்படை இயல்பின்படி பெயரிட்டான். பழைய ஏற்பாட்டில் மனிதர்கள் அவர்களுடைய குணாதிசயம் அல்லது கொடுக்கப்பட்ட செயலின் அடிப்படையில் பெயரிடப்பட்டார்கள், ஆக அவர்களின் பெயர்கள் அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தியது. ஏவாள் என்றால் "ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்" என்றும், நோவா என்பதற்கு, "ஓய்வு" என்றும், ஆபிரகாம் என்றால், "திரளான கூட்டத்தின் தந்தை" என்றும், நாபால் என்றால், "வெள்ளம்" என்றும், எலிசா என்றால் "கர்த்தரே இரட்சிப்பு" என்றும்... அர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டு மனிதர்களின் பெயர்கள் அர்த்தம் நிறைந்ததாக இருந்தது என்றால், தேவனுடைய நாமங்களும் அளவற்ற அர்த்தங்களை உடையதாகும். தேவனுடைய நாமம் முழுவதும் அர்த்தம் நிறைந்த ஒன்றாக இருப்பதினால், அவைகளை கவனக்குறைவாகவும், பக்தியற்ற நிலையில் பயன்படுத்துவது பெரிய பாவமாகும். தேவன் தன்னை பல பெயர்களினாலும், பதவிகளினாலும் வெளிப்படுத்துவது அவர் தன்னைக் குறித்து முழுமையாக வெளிப்படுத்துவதைக் குறிக்கும்.

ஒரு கொடியானது தனது நாட்டை வெளிப்படுத்துகிறது, ஒரு புகைப்படம் நண்பர் அல்லது உறவினர் என்ற முறையை வெளிப்படுத்துகிறது, அதுபோல தேவன் யார் என்பதை அவருடைய நாமங்கள் வெளிப்படுத்துகிறது. ஒரு தேசக்கொடியை மிதிப்பதோ அல்லது ஒருவரின் புகைப்படத்தில் எச்சில் உமிழ்வதோ அது குறிப்பிடும் நபரை அல்லது நாட்டை அவமதிப்பதாகும்; தேவனுடைய நாமத்தையும் கனவீனமாகவோ அல்லது கறுத்தற்றோ பயன்படுத்துதல் தேவனையே தூஷிப்பதாகும் (லேவி 24:11,15)

தேவனுடைய நாம் இருவழிகளில் புரிந்து கொள்ளப்பட வேண்டும்: அவைகள் கூறுவது...

1. இயற்கையில் பொதுவாகக் காணப்படும் தேவனுடைய சுய வெளிப்பாடு: “எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!” எல்லாப் படைப்புகளும், தேவனால் உண்டானவைகளும் தேவனுடைய நாமம் அல்லது தனித்தன்மையை விளக்கி, அவரை நாம் ஆராதித்து சேவை செய்ய நம்மை அழைக்கிறது.

2. வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட பெயர்கள் மற்றும் தலைப்புகளினாலான பிரத்தியேகமான தேவனுடைய சுயவெளிப்பாடு:

அ. வேதத்தில் பொதுவாக நாம் காணும் நாமங்களான கர்த்தர், எகோவா, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி போன்றவைகள் தேவனுடைய (Proper Names) தகுதியை வெளிப்படுத்தும் நாமங்கள் ஆகும்.

ஆ. தேவனுடைய தனி இயல்பு மற்றும் குணாதிசயங்களை வெளிப்படுத்தும் நாமங்களான சர்வ வல்லமையுள்ளவர், உன்னதமானவர், கருணையின் பிதா, இஸ்ரவேலின் பரிசுத்தர், சேனைகளின் கர்த்தர், நித்தியமானவர், கன்மலை போன்றவைகள் தேவனுடைய பண்புகளை எடுத்துரைக்கும் நாமங்கள் ஆகும்.

மூன்றாவது கற்பனையில் இடம்பெற்றுள்ள “நாமம்” என்பது முன் சொல்லப்பட்டுள்ள இந்த நாமங்களைக் குறிப்பதோடு, இயற்கையில் தேவன் தன்னை வெளிப்படுத்தியுள்ளவைகளுக்கும் பொருந்தும்.

தேவனுடைய நாமங்களை மனிதன் தனது இருதயத்தில் அன்புடன் பற்றிக் கொண்டு, பக்தியுடன் பயன்படுத்துவதற்காகப் படைக்கப்பட்டான்; ஆனால் கேட்டகிசம் போதிப்பதுபோல, பாவியான மனிதன் தேவனையும், அவருடைய நாமத்தையும் வெறுத்து, அவற்றை பலவழிகளில் இழிவு படுத்துகிறான். கேள்வி 99-ன்படி, மனிதன் தேவனுடைய நாமத்தை இழிவு படுத்தும் முக்கியமான முறைகள் பின்வருமாறு:

1. சபித்தல்: ஏதாகிலும் ஒன்றின் மீதோ அல்லது ஒருவரின் மீதோ சாபத்தைக் கூறுதல் அல்லது சாபத்தைக் கூறும்படி தேவனிடம் கேட்டல் என்பதாகும். அடிக்கடி ஜனங்கள் பிறருக்கு நரகாக்கினை தண்டனையை தவறாக சாபமிடுகின்றனர்; ஆனால் இத்தண்டனையை கொடுக்க தேவன் ஒருவருக்கு மட்டுமே உரிமை உண்டு. தேவனுடைய அதிகாரத்திற்கு வெளியே சபித்தல் என்பது தேவனுடைய நாமத்தை தூஷிப்பதாகும்.

2. பொய்யாக ஆணையிடுதல் அல்லது பொய்சாட்சி கூறுதல். உண்மையை மட்டும் சொல்வேன் என்று தேவனுடைய நாமத்தில் சபதம் எடுத்துக் கொண்டு, பின்னர் தேவனுடைய நாமத்தில் பொய் சொல்வது. இது தேவனை பொய்யராக்குவதற்கும், அவருடைய பரிசுத்த நாமத்தை தவறாக பயன்படுத்துவதற்கும் சமம்.

3. தேவையற்ற சபதம் எடுத்தல். சபதம், அல்லது தேவனுடைய நாமத்தில் பேசுவது என்பது, மிகவும் பரிசுத்தமான மற்றும் மிகவும் மரியாதைக்குரிய சமயச் சடங்களில் மட்டுமே பொருத்தமாகும். சாதாரணமான பேச்சுகளிலும் தேவனுடைய நாமத்தை தேவையில்லாமல் பயன்படுத்துதல் தேவனைக் கனவீனப்படுத்துவதற்குச் சமமாகும். உதாரணமாக, “கடவுள் சத்தியமாக...”, “பைபிள் மீது சத்தியமா” என்பது போன்ற உச்சரிப்புகள் இந்த பாவத்திற்கு எடுத்துக்காட்டாகும். எல்லாவகையான தவறான சத்தியம் செய்தலை மத்தேயு 5:34-37-ல் இயேசு கண்டித்துள்ளார்.

4. தேவனுடைய நாமத்தை இழிவு செய்யும் மற்றவரின் செயலை கண்டும் காணாததுபோல் இருப்பது. இந்த கற்பனையை மீறுகிறவர்களை நாம் எதிர்க்காவிட்டால், நாமும் குற்றவாளிகள் ஆவோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம், கேட்டகிசம் போதிப்பதுபோல தேவனுடைய நாமத்தை இழிவு படுத்தும் எல்லா செயல்களையும் வெறுப்பதோடு, தேவநாமம் தூஷிக்கும் செயலில் ஈடுபடுகிறவர்களை எச்சரிக்க தயங்காதவர்களாகவும் இருக்க வேண்டும்.

**99-க்கான கேள்விகள்:**

1. மூன்றாவது கற்பனை, நாம் தேவனாகிய ........................................................................................................ வழங்கக் கூடாது என்பதைப் பற்றியதாகும், இதை கேட்டகிசத்தின் கேள்விகள் .................. விளக்குகிறது.
2. இந்த பதிலின் முதல் பகுதி கர்த்தருடைய நாமத்தை நாம் எப்படி பயன்படுத்த வேண்டும் என்றும், இரண்டாவது பகுதி எப்படி பயன்படுத்தக் கூடாது என்பதையும் நமக்கு விளக்குகிறது. சரியா, தவறா? ..................
3. தேவனுடைய “நாமம்” என்பது... அ)அவருடைய தனித்தன்மை (ஆளுமை), ஆ)திருவசனம் மற்றும் இயற்கையில் அவருடைய சுய வெளிப்பாடு, இ)அவருடைய எல்லா பெயர்களும், தகுதிப் பெயர்களும், ஈ)உன்னுடைய தேவனாகிய கர்த்தர்” -ஐ மட்டும் குறிக்கிறது. எது? ..........
4. பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய நாமங்கள் அர்த்தமுள்ளவைகளாக இருந்தது, மனிதர்களின் பெயர்கள்

அப்படி அர்த்தமுள்ளதாக ஒருபோதும் இருக்கவில்லை. சரியா, தவறா? .................

5. தேவனுடைய நாமங்கள் இரண்டு காரியங்களை குறிக்கிறது. அவைகள்... அ)............................................ ..............................................................................., ஆ)........................................................................................................................
6. தேவனுடைய (Proper Names) தகுதியை வெளிப்படுத்தும் நாமங்கள் சிலவற்றை எழுது: ..............................................................................................................................................................
7. கேட்டகிசம் கூறுவதுபோல தேவனுடைய நாமத்தை நாம் பயன்படுத்தும் போது "...நம்முடைய வார்த்தை மற்றும் ........................... அவர் ...................................................... தேவனுடைய நாமத்தை நாம் ....................................................................................................... பயன்படுத்தக் கூடாது"
8. "கடவுள் சத்தியமாக...", "பைபிள் மீது சத்தியமா" என்பது போன்ற உச்சரிப்புகளை தேவன் தண்டிப்பார். சரியா, தவறா? ....................
9. இந்த பதிலில் "கண்டும் காணாமல் இருப்பது" (Connivance) என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? ...........................................................................................................................................
10. லேவியராகமம் 19:12-ஐ எழுதுக:

**100. சபித்தல் மற்றும் சாட்சியாக சபதம் செய்தல் ஆகியவற்றால் தேவனுடைய நாமத்தை இழிவு படுத்துவோரை முடிந்த அளவுக்கு அதை அவர்கள் செய்யாமல் இருக்கும்படி தடைசெய்யாதவர்களுக்கு விரோதமாகவும் தேவனுடைய கோபம் பற்றியெறியுமா?**

உண்மையிலேயே ஆம்! அவருடைய நாமத்திற்கு இழிவு வருமாறு செய்யப்படும் பாவம் மிகவும் பெரிதானதும் தேவனை அதிகமாக கோபமூட்டுவதாகவும் இருக்கிறது; அதோடு இப்பாவத்திற்கு மரணமே தண்டனை என்றும் கட்டளையிட்டுள்ளார்.

***

மூன்றாவது கற்பனையை உடைக்கும் மற்றவர்களினிமித்தம் நமக்குள்ள கடமை என்ன என்பதை இக் கேள்வி விளக்குகிறது. "மற்றவர்கள் செய்யும் துச்சமான பாவத்தில் பங்கெடுத்தல்" என்னும் பாவத்திற்கு எதிரான எச்சரிப்பை கொடுக்கும் முந்தைய கேள்வியோடு, கூடுதலான விளக்கத்தை இந்த கேள்வி தருகிறது.

இந்த மூன்றாம் கற்பனையைக் காக்க தேவ நாமம் இழிவு படுத்தப்படாமல் நமது வாயை மூடி பாதுகாப்பது மட்டும் போதாது, மற்றவர்கள் இழிவு செய்யும்போது நமது வாயைத் திறந்து தேவனுடைய நாமத்திற்காக வழக்காடுகிறவர்களாகவும் நாம் இருக்க வேண்டும் என்பதை நாம் அறியும்போது இது சற்று அச்சமாகவும் உள்ளது. இது மூன்றாவது கற்பனையின் ஆக்கமுறையான முயற்சியாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் உலகத்திற்கு "கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கும்" தீர்க்கதரிசிகளாக இருக்கிறோம் (கேள்விகள் 31,32-ஐ பார்க்கவும்). ஒரு தீர்க்கதரிசியால் அமைதலாக இருக்க முடியாது, அப்படியிருந்தும் தீர்க்கதரிசியாக இருக்க முடியாது. அமைதியான தீர்க்கதரிசிகள் என்று எவரும் கிடையாது!

மற்றவர்கள் தேவனுடைய நாமத்தை சகதிக்குள் இழுத்து, பரிசுத்தமான காரியங்களை பயபக்தியின்றி பேசும்போது அவர்களுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்க நாம் வெட்கப்பட்டால், நாம் கிறிஸ்துவை மறுதலித்து, அதே பாவத்தில் பங்குள்ளவர்களாகிறோம்.

சபித்தல், கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குதல், சிரிப்புக்காக அசுத்தமானவைகளைப் பேசுதல் யாவும் தேவனுடைய நாமத்திற்கு விரோதமான பாவங்கள் ஆகும். அதோடு, வேதத்தில் உள்ளவர்களைப் பற்றி சிரிப்புக்காக விளையாட்டாக பேசுவதை கிறிஸ்தவர்கள் கேட்பது, அதையே மீண்டும் சொல்வது போன்றவைகள் தேவனுக்கு விரோதமான பாவமாகும். மற்றவர்கள் இதை செய்யும்படி ஊக்கப்படுத்தாமல், அப்படி பேசுகிறவர்களை கண்டிக்க வேண்டும்.

இப்போது நடைமுறையான கேள்வி: மற்றவர்களிடம் காணப்படும் இந்தப் பாவத்தை "தலையிட்டு தடுத்து நிறுத்துவது" எப்படி? பதில் சொல்வதற்கு இது சற்று கடினமான கேள்வி. இருப்பினும், மற்றவர்கள் தேவனுடைய நாமத்தை இழிவு செய்யுமாறு செய்யும் எந்தக் காரியத்திற்கும் ஏதாகிலும் ஒருவழியில் நம்முடைய எதிர்ப்பைத் தெரியப்படுத்த வேண்டும். சிரிப்புக்காக அசுத்தமாக பேசப்படும் இடத்தில் நாமும் நின்று கொண்டு சிரித்துக் கொண்டிருந்தால் நாமும் குற்றமுடையவர்களாகிறோம். அதே நேரத்தில், இழிவாக பேசும் நபருக்கு நாம் எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம் என்பதை நாம் வெளிப்படுத்தியும் தொடர்ந்து அந்த நபர் நம்மை கோபப்படுத்துவதற்காக அப்படியே பேசினால், தேவன் இந்த பாவத்தை வெறுக்கிறார் ஆகவே தண்டிப்பார் என்பதை சொல்லிவிட்டு அந்த நபரை கருத்தில் கொள்ளாமல் விட்டு விலகவேண்டும்.

கேட்டகிசம் நமக்கு ஞாபகப்படுத்துவதுபோல, தேவனுடைய நாமத்திற்கு விரோதமாக பேசுவதைப் பார்க்கிலும் பெரிய ஒரு பாவம் இல்லை; பழைய ஏற்பாட்டில் இந்த பாவத்திற்கு மரண தண்டனை தரப்பட்டது. தேவனுடைய நாமத்தை இழிவு படுத்துமாறு செயல்படும் மற்றவர்களை கண்டிக்காமல் அமைதலாக இருப்பவர்களும், அவர்கள் மனந்திருந்தாத நிலையில், நித்திய மரண தண்டனைக்கு பாத்திரராகிறார்கள்.

**100-க்கான கேள்விகள்:**

1. இந்த கேள்வி 100-ல் நமக்கு சொல்லப்படுவது ..........................................................................................

..................................................................................................................................................................

2. இந்த கேள்வி 100, கேள்வி 99-உடன் எவ்விதத்தில் தொடர்பை ஏற்படுத்துகிறது? .................................
..................................................................................................................................................................
3. மற்றவர்கள் கர்த்தருடைய நாமத்தை மாசுபடுத்தும் போது நம்மால் அமைதலாக இருக்க முடியாது, காரணம் நாம் ..................................................................................................................................
4. நம்முடைய தேவனை நம்மிடம் நிந்திக்க அவர்களுக்கு உரிமை உண்டு என்றால், அதே நம்முடைய தேவனின் நாம மகிமைக்காக வாதாட நமக்கு அதிக உரிமை உண்டு. சரியா, தவறா? .......................
5. பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் எப்படி செயல்படுவீர்கள்?
   அ. உங்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளி இழிவான சொற்களை பயன்படுத்தும்போது: ..........................
   ..................................................................................................................................................................
   ஆ. நீங்கள் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய ஒருவர், ஆண்டவருடைய நாமத்தை வீணிலே வழங்கி உங்களை கோபப்படுத்த விரும்பும்போது: ............................................................................................
   ..................................................................................................................................................................
6. இஸ்ரவேலர்கள் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதைக் கேட்கும்போது, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று பழைய ஏற்பாட்டில் கூறினார்? (லேவி 5:1, நீதி 29:24-ஐ பார்க்க) ................................
   ..................................................................................................................................................................
7. மற்றவர்களிடம் காணப்படும் இந்த பாவத்திற்கு விரோதமாக நாம் பேசி, நமது கடமையை செய்ய முடியாதபடி நம்மை தடுப்பது என்ன? (நீதி 29:25-ஐ பார்க்க) ..............................................................
   ..................................................................................................................................................................
8. பழைய ஏற்பாட்டில் தேவதூஷணத்திற்கான தண்டனை என்ன? (லேவி 24:15,16) ......................................
   ..................................................................................................................................................................
9. தேவதூஷணம் மற்றும் இழிவான பேச்சுக்கு எதிரான சட்டங்களை அரசாங்கம் வகுக்க வேண்டுமா? ..................., விளக்கம்: ..............................................................................................................
10. எபேசியர் 5:4,11. எழுதுக

### 101. தேவனுடைய நாமத்தில் பயபக்தியுடன் சத்தியம் செய்யலாமா?

ஆம், நீதிபதி கேட்கும்போதும், மேலும் அவசியப்படும்போதும் தேவனுடைய மகிமை மற்றும் நம்முடைய அயலகத்தாரின் நன்மைக்காக, உண்மை மற்றும் விசுவாசத்தை பாதுகாக்கவும், அதன் முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் வாக்குறுதி/சத்தியம் செய்தல் திருவசனத்தை அடித்தளமாகக் கொண்டிருப்பதால், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களால் இது சரியாகப் பயன்படுத்தப்பட்டது.

***

மூன்றாவது கற்பனைக்கு கீழ்ப்படிந்த நிலையில், நியாயமாகவும், சரியாகவும் சத்தியம் செய்தல் பற்றி, கேள்விகள் 101 மற்றும் 102 நமக்கு போதிக்கிறது. ஆணையிட்டுக் கொடுத்தல் / சத்தியம் செய்தல் எப்போது நியாயமானதாகிறது என்பதை கேள்வி 101-ம், சத்தியம் செய்தலின் தன்மை என்ன என்பதை கேள்வி 102-ம் நமக்கு கூறுகிறது.

திருச்சபை சீர்திருத்த நாட்களில், “சத்தியம் பண்ண வேண்டாம்”- என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை சிலர் வியாக்கியாணம் செய்யும்போது, எல்லாவிதமான சத்தியம் செய்தலும் தடைசெய்யப்பட்டுள்ளது என்று கூறினார்கள். இன்றும் சில திருச்சபைகளில் இதை போதிக்கின்றனர். ஆனால் கிறிஸ்து எல்லா வகையான சத்தியபிரமாணம் செய்தலையும் தடை செய்யவில்லை, இதை மற்ற வசனங்கள் நிரூபிக்கும். சில சமய சடங்கு நேரங்களில் சத்திய பிரமாணம் அல்லது ஆணையிட்டுக் கொடுக்க வேண்டியதின் அவசியத்தை பழைய ஏற்பாட்டில் நாம் காணலாம் (உபா 10:20); கிறிஸ்துவும் பழைய ஏற்பாட்டை அழித்துப்போடும்படி அல்ல, அவற்றை நிறைவேற்றி மேன்மைப்படுத்தவே வந்தேன் என்று கூறினார். மேலும், பிரதான ஆசாரியன் இயேசுவை ஆணையிட்டுக் கொடுக்கும்படி கட்டளையிட்டபோது, அவரும் ஆணையிட்டு கொடுத்தார் (மத் 26:63,64-ஐ பார்க்க).

கேள்வி 99 மற்றும் அடுத்த கேள்வியில் நாம் பார்ப்பது போல, ஆணையிட்டுக் கொடுத்தல் என்பது ஆண்டவருடைய பெயரால் பேசி ஒரு உண்மைக்கு சாட்சியாக இருப்பது அல்லது ஒரு வாக்குறுதி கொடுப்பது ஆகும். ஆணையிட்டுக் கொடுத்தும் துணிகரமாக பொய் பேசும் ஒருவர் மீது சாபத்தை வரவழைக்க தேவனுடைய நாமம் பயன்படுத்தப்படுகிறது. சத்தியம் செய்தல் என்பது, தேவனை சாட்சியாகவும், நீதிபதியாகவும் வைக்கும் ஒரு முக்கியமான சமய சம்மந்தப்பட்ட செயலாகும்.

இந்த கேள்வியில் நாம் கற்பது:

1. *வாக்குப்பண்ணி கொடுப்பதற்கான சரியான தருணங்கள்*:

அ. “நீதிபதி கேட்கும்போதும்” சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட காரியத்தின் உண்மை நிலையினை அறிவதற்காக சமூக அதிகாரிகள் வாக்கு செய்து கொடுத்தலின் கீழ் பேசுமாறு கேட்பர் (யாத் 22:10,11). இன்னும் சில நேரங்களில் உண்மை மற்றும் நேர்மைத் தன்மையை உறுதி செய்வதற்காக ஒருவரை வாக்குகொடுக்கும்படி கேட்கப்படுவர் (எஸ்ரா 10:5). ஒரு நீதிபதி கேட்கும்போது சத்தியம் பண்ண மறுப்பது

பாவமாகும்.

ஆ.“மேலும் அவசியப்படும்போது” வாக்குறுதியின் கீழ் பேசுவதற்கான மற்றுமொரு நியாயமான இடம், சாட்சிகளிடமிருந்து உண்மையைப் பெறவேண்டிய சபை சங்கமாகும். ஒருவருடைய பேச்சில் தேவனுடைய நாமத்தை உதவிக்காக இழுத்து பேசும் எந்த தருணமும் மரியாதைக்குரியதும், புனிதமானதுமாகும். அப்போஸ்தலனாகிய பவுலும் தனது சில புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் தேவனுடைய நாமத்தில் சத்தியம் செய்துள்ளார். இதற்கான காரணம், தான் எழுதும் காரியங்கள் தேவன் முன்பாக சத்தியமானவைகளே என்பதை வாசிப்போர் அறியும்படியாகவே ஆகும். (ரோம 1:9; 9:1; 2கொரி 1:23; 11:31; 12:19; கலா 1:20; பிலி 1:8; 1தெச 2:5; 1தீமோ 2:7- பார்க்கவும்).

2. *வாக்குப் பண்ணிக் கொடுப்பதின் நோக்கம்*:

சில முக்கியமான தருணங்களில் சத்தியபிரமாணம் செய்தல் கட்டளையிடப்பட்டிருப்பதின் நோக்கம் “தேவனுடைய மகிமை மற்றும் நம்முடைய அயலகத்தாரின் நன்மைக்காக, உண்மை மற்றும் விசுவாசத்தை பாதுகாக்கவும், அதன் முன்னேற்றத்திற்காகவும்” ஆகும். ஒரு உண்மை கண்டறியும் சட்டவியல் நீதிமன்றத்தில், ஜனங்கள் தங்களுடைய அதிகாரிக்கு முன்பு வாய்மையை வெளிப்படுத்துவதற்கான வாக்கு கொடுப்பது அவசியமாகிறது. உண்மையை பேசும்படி வாக்குறுதி கொடுப்பதற்கான காரணம் தேவனுடைய கோபத்திற்கு ஒருவர் பயப்படுவதை வெளிப்படுத்தவே ஆகும். கிறிஸ்தவ சமுதாயம் உண்மை பேசும் ஜனங்கள் மற்றும் தாங்கள் பேசும் வார்த்தைகளுக்கு உண்மையாக இருப்போரையே சார்ந்துள்ளது. உண்மையை உறுதி செய்தவதற்காக தேவன் ஏற்படுத்திய ஒழுங்கே வாக்கு கொடுப்பது ஆகும்.

ஜியார்ஜ் வாசிங்டன் தனது நாட்டின் முன்னேற்றத்திற்கு வேதாகம வாக்குறுதிகளின் அவசியத்தை ஏற்றுக் கொண்டபோது, “நீதி மன்றங்களில் உண்மையை கண்டுபிடிப்பதற்கு உதவும் கருவியான சத்தியபிரமாணம் செய்தல் போன்ற சமய கடமையுணர்வு கைவிடப்பட்டால் நமது சொத்து, புகழ் மற்றும் ஜீவன் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு எங்கே?” என்று கூறினார். அதாவது, தேவனிடம் வாக்கு செய்து கொடுப்பதால் தேவனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் போது மட்டுமே தனது நாடு நிலைத்திருக்க முடியும் என்றார்.

இன்றைய நீதி மன்றங்கள் மற்றும் சமூக அதிகாரிகள் இந்த தெய்வீக வாக்குறுதிகளை இன்று எந்த அளவிற்கு அக்கறையுடன் எடுக்கிறார்கள்? இதற்கு பின்விளைவுகள் உண்டா?

**101-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 101 மற்றும் 102 நமக்கு விளக்குவது என்ன? ..............................................................................
...................................................................................................................................
2. சத்தியம் செய்தல் நியாயமானது அல்ல என்று சிலர் நினைப்பது ஏன்? ...................................................
...................................................................................................................................
3. பழைய ஏற்பாட்டு காலமாகிய அன்று சத்தியம் செய்து கொடுத்தல் நியாயமானது என்பதற்கான எடுத்துகாட்டு: ...................................................................................................................
4. புதிய ஏற்பாட்டு காலமாகிய இன்றும் சத்தியம் செய்து கொடுத்தல் நியாயமானது என்பதற்கான எடுத்துகாட்டு: ...................................................................................................................
5. “மத்தேயு 5:35-ல்” சத்தியம் பண்ணவேண்டாம்” என்று கூறுவதின் அர்த்தம் என்ன? .............................
...................................................................................................................................
6. தேவனுடைய நாமத்தில் சத்தியம் செய்து கொடுத்தல் எந்த தருணங்களில் நியாயமானது?
அ. ........................................................................................ ஆ. ........................................................................
7. வாக்கு பண்ணிக்கொடுத்தல் ... அ)ஒரு உண்மைக்கு சாட்சியாக, ஆ)மேன்மையான வாக்குறுதி, இ) நம்முடைய பேச்சுக்கு மேலும் அர்த்தம் சேர்த்தல்... ஆகும். எது? .........
8. பின்வருவனவற்றில் சத்தியம் செய்து கொடுப்பதற்கான சரியான தருணங்களை குறிப்பிடுக:
......... நண்பர்களோடு சிரிப்பாக பேசும்போது, ......... நீதிமன்றத்தில் ஒருவர் இருக்கும்போது, ......... தேர்வு செய்யப்பட்ட அதிகாரி பதவியேற்கும்போது, .........சபை சங்கத்திடம் ஒரு அங்கத்தினர் அழைக்கப்படும்போது, .........இராணுவத்தில் ஒருவர் பொறுப்பேற்கும்போது
9. வாக்குப் பண்ணிக் கொடுப்பதின நோக்கம் என்ன என்று நமது கேட்டகிசம் கூறுகிறது?
...................................................................................................................................
10. உபாகமம் 10:20-ஐ எழுதுக:

**102. பரிசுத்தவான்கள் மற்றும் வேறெந்த ஜீவராசிகளின் பேரிலும் நாம் சத்தியம் செய்யலாமா?**

இல்லை, நியாயமாக வாக்கு செய்துகொடுத்தல் தேவனை கூப்பிடுதல் ஆகும், அதாவது, இருதயத்தை ஆராய்ந்து, உண்மைக்கு சாட்சியாகவும், நான் பொய்யாக சத்தியம் செய்தால் என்னை தண்டிக்கவும் அவர் ஒருவரால் மட்டுமே முடியும் என்பதால், இந்த கனம் வேறெந்த சிருஷ்டிக்கும் கொடுக்கப்பட முடியாது.

***

இந்த கேள்வியில் நாம் குறிப்பாக வாக்குப் பண்ணிக் கொடுத்தலின் தன்மை மற்றும் எப்படி இது சரியாக எடுக்கப்பட வேண்டும் என்பது பற்றி படிக்கிறோம்.

“பரிசுத்தவான்கள் மற்றும் வேறெந்த ஜீவராசிகளின் பேரிலும் நாம் சத்தியம் செய்யலாமா?” என்று இந்த கேள்வி கேட்கிறது. பெரிய பரிசுத்தவான்களின் பெயரால், அவர்களின் பரிசுத்தம் மற்றும் தேவனிடம் அவர்களுக்குள்ள நெருக்கத்தினிமித்தம், சத்தியம் செய்யப்படுவதை ரோமன் கத்தோலிக்க சபை அனுமதிக்கிறது. பரிசுத்தவான்களின் பெயரால் சத்தியம் செய்தலை ஐயர்லாந்தைச் சார்ந்த ரோமன் கத்தோலிக்கர்கள் செய்வதை நாம் கேட்கலாம்.

இருப்பினும் பின்வரும் காரணங்களுக்காக மட்டும் தேவனுடைய நாமத்தில் சத்தியம் செய்ய வேண்டும்.

1. எல்லா உண்மைகளின் ஆக்கியோனும், நீதிபதியும் தேவன் ஒருவரே ஆவார்.

2. இருதயங்களை ஆராய்ந்து, நாம் உண்மையாகவே சத்தியத்தைப் பேசுகிறோமா என்பதை தேவன் ஒருவரே அறிவார். சாதாரண சிருஷ்டி இதைச் செய்ய முடியாது. சத்தியம் செய்யும்போது, தாவீதோடு சேர்ந்து நாமும், “என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்” (சங் 139:4) என்று சொல்ல வேண்டும்.

3. பொய்யரையும், வாக்குறுதியை மீறுகிறவர்களையும் தேவன் மட்டுமே நித்திய தண்டனையினால் வாதிக்க முடியும். மனிதன் தன்னைக் குறித்து பொய்யாக பேசும்போது, பிறரால் கண்டுபிடிக்க முடியாமல் கூட போகலாம், ஆனால் தேவன் சகலத்தையும் அறிந்தவராக, எல்லாருக்கும் சரியான நீதியைத் தருகிறார். எல்லா பொய்யுக்கும் எதிரான தேவனுடைய கோபத்திற்கு நாம் பயப்பட வேண்டும்.

4. உண்மை பேசுகிறவர்களை தேவன் மட்டுமே தனது நன்மையால் ஆசீர்வதிக்க முடியும். அவருடைய பரிசுத்த நாமத்தால் நாம் உண்மையாக வாக்குறுதி எடுக்கும்போது அவருடைய நன்மையான ஈவுகளை நாம் எதிர்பார்க்கலாம்.

5. அவருடைய நாமத்தில் மனிதர்கள் உண்மை பேச ஆணையிட்டுக் கொடுக்கும்போது தேவனுக்கு மட்டுமே மகிமை கொடுக்கப்பட வேண்டும்.

ஆகவே, ஆணையிட்டு கொடுப்பதற்கு தேவனுடைய நாமத்தை மட்டுமே தேடவேண்டும்.

ஆணையிட்டு கொடுத்தலுக்கு மிகவும் நெருங்கிய தொடர்புடையவை பொருத்தனைகள் ஆகும். பொருத்தனை என்பது வாக்குபண்ணுவதுபோலவே விசேஷித்த தருணத்தில் திட்டமாக எடுக்கும் உறுதிமொழி ஆகும். இவைகளுக்கு இடையேயான வித்தியாசம்: ஆணையிட்டு கொடுத்தல் என்பது தேவனுடைய நாமத்தில் மனிதருக்கு ஏற்படுத்தும் ஒரு உறுதிமொழி; பொருத்தனை என்பதோ, வழக்கமாக தேவனிடமிருந்து நன்மைகளை பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையோடு, நேரடியாக தேவனிடம் மனமுவந்து நன்றிகடன் செலுத்துவது குறித்து ஏற்படுத்தும் உறுதிமொழி ஆகும் (ஆதி 28:20-22; எண் 21:2; 1சாமு 1:11; 2சாமு 15:8).

பொருத்தனை என்பது தேவனிடமிருந்து பெற்ற நன்மைக்காக (எண் 21:1-3), அவருக்கு அர்பணிப்பு அல்லது பற்றை வெளிப்படுத்துவதற்காக, தேவனுக்கு ஒன்றை செய்வது (ஆதி 28:20) அல்லது செய்யாமலிருப்பது (சங் 132:2) குறித்ததாகும். பொருத்தனை செய்வது அல்லது செய்யாதிருப்பது பாவமல்ல, ஆனால் செய்தால் -உபா 23:23-ன்படி, அந்த பொருத்தனை ஆணையிட்டுக் கொடுப்பதற்கு இணையாக கட்டுப்படுத்தும் கட்டளையாக மாறுகிறது (உபா 23:21). இந்த பொருத்தனைகள், “தேவனுக்கு கொடுக்கப்படும்” காணிக்கை குறித்து யூதர்களின் பொருத்தனை போல பாவமாகவும் இருக்கலாம் (மாற் 7:11). பவுலின் பொருத்தனை (அப் 18:18; 21:23), ஒரு கடவுள் பக்தியான யூதன் உண்மையாக செய்கிற, தற்காலிகமான நசரேய விரத பொருத்தனை ஆகும். நாமும் திருச்சபையின் முழு அங்கத்தினராக மாறும்போது, திருமணத்தில் இணையும்போது, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது, சபை பொறுப்புகளில் மனிதர்கள் அமர்த்தப்படும்போது தேவனிடம் பொருத்தனை செய்கிறோம். மேலும், திருவிருந்தில் நாம் பங்குபெறும்போது இந்த பொருத்தனைக்கு உட்படுகிறோம் என்பதாகும்.

எல்லா ஆணையிட்டுக் கொடுத்தல் மற்றும் பொருத்தனைகளையும் நிறைவேற்ற பாவம் கூட செய்யலாமா? இல்லை, பொருத்தனையை நிறைவேற்ற தவறான ஒன்றை செய்வது பாவமாகும். ஒரு பொருத்தனையை நிறைவேற்ற தவறு செய்வதுதான் வழி என்றால் அந்த வாக்குறுதியை உடைக்க தயங்கினால் நாம் மற்றுமொரு பாவம் செய்கிறோம் என்பதாகும். ஏரோது இராஜா தனது மாற்றாந்தாயின் மகளுக்கு கொடுத்த வாக்குறிதியை உடைக்காமல் யோவான் ஸ்நானகனைக் கொலைசெய்தான் (மத் 14:6-9). நாபால் மற்றும் அவனுடைய உடைமைகளை எல்லாம் அழிக்கும்படி செய்த பாவமான வாக்குறுதியை தாவீது உடைத்தான் (1சாமு 25:22,32-34). ரோமன் கத்தோலிக்கரை திருமணம் செய்யும் புராட்டஸ்டன்டு, தமது குழந்தைகளை ரோமன் கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்ப்பதாக பொருத்தனை செய்வதால் பாவம் செய்கிறார், அதை தொடர்ந்து நிறைவேற்றும்போது மேலும் பாவத்தை செய்கிறவராகிறார்.

வாக்குகொடுப்பதையோ அல்லது பொருத்தனை செய்வதையோ ஒருபோதும் சாதாரணமாக கருதக் கூடாது என்பதை இது நமக்கு போதிக்கிறது. நாம் துன்மார்க்கமாக சத்தியம் செய்தால் தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறோம் என்பதாகும். நாம் சரியாக பொருத்தனை செய்கிறோம் எனில், தேவனுடைய சமூகத்தில் நம்முடைய பொருத்தனை மற்றும் வார்த்தைகளைக் காப்பாற்றும்படி கட்டுப்பட்டுள்ளோம் என்பதாகும். உதாரணமாக, திருமணத்தில் செய்யும் வாக்குறுதியை மரணம் மட்டுமே அந்த உறவை

உடைக்க முடியும்.

வாக்கு பண்ணிக் கொடுக்கும்போது மட்டுமே மனிதர்கள் உண்மையைப் பேச வேண்டுமா? நிச்சயமாக இல்லை. நாம் உண்மையை எப்போதும் பேசவேண்டும். ஆனால் மனிதர்கள் பொய் பேசும் மனப்பாங்கை உடையவர்களானதால், இந்த பாவ உலகில் வாக்குறுதி கொடுத்தல் அவசியமாகிறது. இந்த வாக்குறுதி செய்தல் பரலோகத்தில் இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**102-க்கான கேள்விகள்:**

1. இந்த கேள்வியில், சர்வவல்லமையுள்ள தேவனை நமது சாட்சியாக அழைக்கும் வாக்குப் பண்ணிக் கொடுத்தலின் தன்மையைப் பற்றி இந்த கேள்வியில் படிக்கிறோம். சரியா, தவறா? ..................
2. “வானத்தின் மீது சத்தியமாக...”, “பரிசுத்த மரியாள் சத்தியமாக...” என்னும் உச்சரிப்புகள் பாவமான வாக்குறுதிகளாகும். சரியா, தவறா? ..................
3. வாக்குறுதிகள் தேவனுடைய நாமத்தில் கொடுக்க வேண்டியதின் ஐந்து காரணங்கள் என்ன?
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
   உ
4. வாக்குப்பண்ணிக் கொடுத்தல் மற்றும் பொருத்தனை ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? ..........................................................................................................................................
5. பொருத்தனை செய்வதற்கான சில தருணங்களை குறிப்பிடுக: ......................................................................
   ..........................................................................................................................................
6. சபையில் அங்கமாகுதல் மற்றும் திருமணம் ஆகியவை சம்மந்தப்பட்ட பொருத்தனைகளில் இவைகளைக் குறித்து ஜனங்களுக்கு போதுமான அளவு புரிந்து கொள்ளுதல் வராத நிலையில், இவைகளுக்குள் ஜனங்கள் வற்புறுத்தி தள்ளப்படக் கூடாது. சரியா, தவறா? ………………, விளக்கம்:
   ..........................................................................................................................................
7. வாக்குப் பண்ணி கொடுத்தலின் கீழ் தரப்படும் உறுதிமொழி எல்லா நிலைகளிலும் காக்கப்பட வேண்டும். சரியா? தவறா?.......................... விளக்கம்..........................................................................................
8. பின்வருவதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| இருதங்களை ஆராயும் ஒருவர் | - | நாபால் |
| சபையில் அங்கமாகுதல் மற்றும் திருமணம் | - | மத் 14 |
| ஏரோது ஆணையிட்டு வாக்குகொடுத்தல் | - | வாக்குறுதிக்காக தவறுகூட செய்தல் |
| தாவீதின் வாக்குறுதி | - | சங்கீ 139:4 |
| நியாயமற்ற வாக்குறுதிகள் | - | தேவனிடம் செய்யும் வாக்குறுதிகள் |

9. வாக்குறுதி கொடுக்கும்போது மட்டுமே நாம் உண்மையைப் பேச வேண்டும். சரியா, தவறா? .................
10. 2கொரி 1:23-ஐ எழுதுக:

**103. நான்காவது கற்பனையில் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்?**

முதலாவது, சுவிசேஷத்தின் ஊழியம் மற்றும் பள்ளிகள் தொடர்ந்து செயல்படுத்துமாறு கர்த்தர் விரும்புகிறார், ஆகவே நான், முக்கியமாக ஓய்வுநாளில், கர்த்தருடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளவும், பரிசுத்த சாக்ரமந்துகளை உட்கொள்ளவும், வெளிப்படையாக தேவனை ஆராதிக்கவும், கிறிஸ்தவ தர்மங்கள் செய்யவும் ஊக்கமாக சபைக்கு வருகிறேன். இரண்டாவதாக, நான் என்னுடைய ஜீவகாலம் முழுவதும் என்னுடைய தீய செயல்களிலிருந்து ஓய்வு பெற்று, தேவன் தமது ஆவியினால் எனக்குள் கிரியை செய்து, நித்திய ஓய்வுநாளை இந்த ஜீவனிலே ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும்.

***

நான்காவது கற்பனையை விளக்க கேட்டகிசம் ஒரே ஒரு கேள்வியை அர்ப்பணித்துள்ளது. நான்காவது கற்பனையே பத்துக் கற்பனைகளிலும் பெரியது, ஆனால் இதற்கு ஒரே கேள்வி என்பது வித்தியாசமாக இருக்கலாம். மூன்றாவது கற்பனையை விளக்க நான்கு கேள்விகளை கேட்டகிசம் பயன்படுத்தியது. கேட்டகிசத்தில் ஒரே ஒரு கேள்வியினால் விளக்கப் பெற்ற மற்ற கற்பனைகள் எவைகள்?

ஓய்வுநாளைக் குறித்த கற்பனை மிகவும் முக்கியமானது, ஆகவே இதற்கு கவனமான விளக்கம் தேவை. இந்தக் கற்பனையின் முதலும், முக்கியமுமான கருத்து என்னவெனில், “ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக” இந்தக் கற்பனையின் இரண்டாவது பகுதி, எப்படி இந்த ஓய்வுநாள் பரிசுத்தமாக ஆசரிப்பது என்பது பற்றியும், நாம் ஏன் இந்த ஓய்வுநாளை கடைப்பிடிக்க வேண்டும் என்பது பற்றி கடைசிப் பகுதியும் விளக்குகிறது. கேட்டகிசத்தின் கேள்வி 103, முதலாவது, ஓய்வுநாள் எப்படி அனுசரிக்கப்பட வேண்டும் என்றும், இரண்டாவது, ஓய்வுநாளின் ஆவிக்குரிய அர்த்தம் என்பதை குறித்தும் நமக்குச்

சொல்கிறது.

"ஓய்வு" என்றால் "இளைப்பாறுதல்" என்பதாகும். பழைய ஏற்பாட்டில் பலவகையான ஓய்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் தமது படைப்பின் கிரியைகளை ஆறுநாட்களில் முடித்தபின் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (ஆதி 2:2,3). அடுத்து ஆண்டவர், ஓய்வுநாளில் யாருக்கும் கொடுக்கப்படாது என்பதால் (யாத் 16:22) இஸ்ரவேலர்களை ஓய்வுநாளுக்கு முந்திய தினத்தில் தங்களுக்கு இரண்டு மடங்கு மன்னாவைச் சேகரிக்க வேண்டும் என்று கூறுவதை யாத்திராகமம் 16-ல் நாம் வாசிக்கிறோம். இப்படியாக, தேவன் சீனாய் மலையில் கற்பனைகளைக் கொடுப்பதற்கு முன்னரே ஓய்வுநாள் அனுசரிக்கப்பட்டு வந்தது (யாத் 20).

நான்காம் கற்பனை வாராந்திர ஓய்வுநாள் குறித்து பேசுகிறது, இது பழைய ஏற்பாட்டில் ஏழாம் நாளாகவும், காலப்போக்கில் ஒவ்வொரு வருடமும் வாரத்தின் மற்றொரு நாள் ஓய்வுநாளாகவும் இருந்தது. மேலும் அந்தநாட்களில் ஓய்வுவருஷம் என்கின்ற ஒன்றும் இருந்தது, ஒவ்வொரு ஏழாம் வருடமும் (லேவி 25:1-7;20-22) நிலம் வேலை செய்யப்படாமலும் இருந்தது. ஏழு ஓய்வு வருஷங்களுக்குப் பின்வரும் ஐம்பதாவது வருஷம் யூபிலி வருஷம் என்றும் அழைக்கப்பட்டது (லேவி 25:8-12) -இது ஓய்வின் வருடமாகவும், அடிமைகளை விடுவித்து, கடன்களை தள்ளுபடி செய்யும் வருடமுமாகும்.

இந்த "ஓய்வு" என்னும் சிந்தனை கூறும் அர்த்தம் என்ன? முதலாவது தேவனுடைய ஓய்வையும், இரண்டாவது, நம்முடைய ஓய்வையும் இது குறிக்கிறது.

முதலாவது, தேவன் தமது படைப்பின் கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தார், கிறிஸ்துவும் தனது மீட்பின் கிரியைகளை முடித்து மரணத்திலிருந்து உயிர்த்தபோது ஓய்ந்திருந்தார். ஆக வாராந்திர ஓய்வுநாள் இவ்விரு உன்னதமான செயல்களையும், தேவனுடைய ஓய்வையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

இரண்டாவது, நம்முடைய பாவ கிரியைகளிலிருந்து, இயேசு கிறிஸ்துவுக்குள் நாம் ஓய்ந்திருப்பதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. எபிரே 4:1,3,9-ன்படி உண்மையான விசுவாசிகளுக்கு பரலோகமே முடிவான ஓய்வாக இருப்பதை, கேட்டகிசம் முக்கியப்படுத்திக் கூறுகிறது. நம்முடைய இந்த ஓய்வு கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தது முதல் ஆரம்பமாயிற்று. வாராந்திர ஓய்வுநாள் (வாரத்தின் முதல்நாள்) நாம் தேவனுடைய சிருஷ்டிப்பு மற்றும் கிறிஸ்துவின் நித்திய இரட்சிப்பின் இளைப்பாறுதலுக்குள் நுழைய ஆரம்பிக்கும்படி அவரால் மீட்கப்பட்ட பிள்ளைகள் என்பதையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

இப்படியாக நான்காவது கற்பனை திருச்சபை பூமியில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை ஒழுங்காக இருக்கிறது. வாராந்திர ஓய்வுநாள் நினைவுபடுத்தப்பட்டு கடைப்பிடிக்கப்பட வேண்டும். புதிய ஏற்பாட்டு திருச்சபை வாரத்தின் ஏழாம் நாளைக் கடைப்பிடிக்காமல், மரணத்திலிருந்து உயிர்த்த கிறிஸ்து பாவத்தின் சாபத்திலிருந்து தமது ஓய்வுக்குள் சென்ற வாரத்தின் முதல் நாளைக் கடைப்பிடிக்கிறது. ஆரம்பகால கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின், வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையில் ஆராதித்தார்கள் (அப் 20:7; 1கொரி 16:2). சனிக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கும் ஏழாம்நாள் வருகையாளர்கள் (Seventh Day Adventists) தவறு செய்கிறார்கள். இது கிறிஸ்து இன்னும் அவர்களுக்காக மரித்து, வாரத்தின் முதல்நாளில் எழுந்திருக்கவில்லை என்று அர்த்தம் தருகிறது!

ஓய்வுநாளை நாம் எப்படி அனுசரிப்பது? முதலாவது, இது ஞாயிற்று கிழமை காலையில் செலவிடப்படும் இரண்டு மணிநேரங்கள் என்றல்ல, மாறாக இது நாம் பரிசுத்தமாக அனுசரிக்க வேண்டிய நாள்! வாரம் முழுவதும் நாம் செய்துவந்த நம்முடைய வாராந்திர வேலைகளிலிருந்து ஓய்ந்திருக்க வேண்டிய நாள். தேவனை ஆராதிக்கவும், நாம் ஓய்ந்திருப்பதுமேயன்றி வேறெந்த செயலையும் நாம் செய்யக் கூடாது.

சபையின் அனைத்து கூட்டங்களிலும் மகிழ்ச்சியாக பங்குபெற்று, எஞ்சியுள்ள நேரத்தையும் நமது ஆத்துமாவின் ஈடேற்றத்திற்காக செலவிட வேண்டும்: உதாரணமாக, கிறிஸ்தவ பத்திரிக்கைகள் வாசிப்பது, கிறிஸ்தவ செய்திகளைக் கேட்பது, ஐக்கியத்திற்காக மற்ற கிறிஸ்தவர்களை, முக்கியமாக வயதான அல்லது வியாதியுற்றவர்களை, சந்திப்பது. இந்தநாளில் அதிகபட்சம் இந்த உலகம் நமக்கு மூடப்பட்டதாகவும், மறக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும்! ஏசாயா 58:13,14-ஐ வாசிக்க: ஓய்வுநாள் நாம் அவருக்குள் "மகிழ்ச்சி"-யின் நாள், இதில் நம்முடைய சொந்த பேச்சு மற்றும் செயல்களை புறம்பே தள்ள வேண்டும்.

இந்த கற்பனையை வேண்டுமென்றே மீறுகிறவர்கள், பரலோக இளைப்பாறுதலுக்குள் செல்லாமல், நரகத்தின் ஆக்கினையால் நித்தியமாக கட்டப்படுவார்கள்! ஓய்வுநாளை மீறுவதை கர்த்தர் வெறுக்கிறார்!

**103-க்கான கேள்விகள்:**

1. ஓய்வுநாள் குறித்த கட்டளை தேவன் கொடுத்த எந்த கற்பலகையில் இடம் பெறுகிறது? ..............................................................................................................................
2. நான்காவது கற்பனையின் மூன்று பகுதிகள்? அ. ........................................................................................ ஆ. ......................................................................, இ.......................................................................................
3. "வேலைக்காரன், வேலைக்காரி, மிருக ஜீவன் மற்றும் அந்நியன்" போன்ற பதங்கள் நம்முடைய இன்றைய வாழ்வில் குறிப்பிடுவது என்ன? .......................................................................................................... ..................................................................................................................................................
4. ஓய்வுநாள் குறித்த கற்பனை, சீனாய் மலையில் மோசேயிடம் கற்பனைகளைக் கொடுத்தபோது

தான் முதலாவதாக கொடுக்கப்பட்டது. சரியா, தவறா? .................

5. நான்காவது கற்பனையை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இல்லை, இருப்பினும் வாரத்தில் ஒருநாள் ஓய்ந்திருப்பது நல்லதே. சரியா, தவறா? .................
6. தேவனுடைய இருவிதமான உன்னதமான “ஓய்வு” என்பது யாது? அ. .......................................................... ஆ....................................................................................
7. எதிலிருந்து கிறிஸ்தவன் ஓய்ந்திருக்கிறான்? ........................................................................................ எபிரேயர் 4 எதை பரலோகம் என்றழைக்கிறது? ..........................................................................................
8. நமது இரட்சகரை நாம் நேசித்து, பரலோகத்தை நாம் எதிர்நோக்கினால், ஓய்வுநாளில் எதுபோன்ற செயல்களை நாம் செய்வோம்? ..........................................................................................................................
9. கேட்டகிசத்தின்படி, ஓய்வுநாளில் நாம் பங்குபெற வேண்டிய இருமுக்கிய இடங்கள் எவை? ...........................................................................................................................................................
10. ஏசாயா 56:2-ஐ எழுதுக:

**104. ஐந்தாவது கற்பனையில் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்?**

என்னுடைய தகப்பன், தாய் மற்றும் என்மீது அதிகாரம் உள்ள அனைவருக்கும் எல்லாவிதமான மதிப்பு, அன்பு மற்றும் பற்றுருதியையும் காட்டுவேன்; அவர்களின் கரங்கள் மூலம் நம்மை ஆளுவது தேவனுடைய சித்தம் என்பதால், அவர்களின் நற்போதனை மற்றும் சீர்படுத்துதலுக்கு சீரான கீழ்ப்படிதலுடன் என்னை கீழ்ப்படுத்தி, அவர்களின் குறைகளையும் பொறுமையுடன் சகிப்பேன்.

***

பொதுவான ரிபார்ம்டு புரிந்து கொள்ளுதலின்படி (கேள்வி 93), கர்த்தருடைய பயத்தில், பிறருக்கு நாம் செய்ய வேண்டிய கடமையைக் குறித்த தேவனுடைய கற்பனையின் இரண்டாவது அட்டவணை இந்த ஐந்தாம் கற்பனையிலிருந்து ஆரம்பிக்கிறது. இரண்டாவது அட்டவணையின் ஆறு கற்பனைகள் பின்வருமாறு தலைப்பிடப்படலாம்:

5வது - நியாயமான அதிகாரத்தில் உள்ள அனைவருக்குமான நமது கடமை.

6வது - நமக்கு அடுத்தவருடைய ஜீவனுக்கான நமது கடமை.

7வது - நமக்கு அடுத்தவருடைய திருமணத்தினிமித்தம் நமது கடமை.

8வது - நமக்கு அடுத்தவருடைய உடைமை சம்மந்தமான நமது கடமை.

9வது - நமக்கு அடுத்தவருடைய பெயர் சம்மந்தமான நமது கடமை.

10வது - தெய்வீக செயலால் வருவதை மதிக்கும் நிலையில் நமது கடமை.

பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை கனம் செய்து, நீடித்த மற்றும் மகிழ்ச்சியுமான ஜீவனை எதிர்பார்க்கும்படி ஐந்தாவது கற்பனை சொல்கிறது. கேட்டகிசம் இதை, “என்மீது அதிகாரமுள்ள அனைவருக்கும்” என்று சரியாக விரிவு செய்து கூறுகிறது.

இந்தக் கற்பனையின்கீழ், மனிதர்கள் மத்தியில் தேவன் பலவகையான அதிகாரங்களை ஏற்படுத்தியிருக்கும் உண்மை வெளிப்படுகிறது. எல்லா மனிதர்களும் ஏதாகிலும் ஒரு அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டிருக்கின்றனர். மற்றவர்களின் அதிகாரத்திலிருந்து தப்பிக்க நினைப்பது தேவனுக்கு எதிரானதாகும். இருப்பினும் இன்றைய நாட்களில், சிறியவர் முதல் பெரியவர் வரை, ஆயிரக்கணக்கானோர் செய்ய விரும்புவது இதுவே. அவர்கள் சொல்வது, “எங்களுக்கு சுதந்திரம் வேண்டும்” என்பதே.

தேவன் கட்டளையிட்டிருப்பதின்படி, நாம் நம்மை கீழ்ப்படுத்த வேண்டிய பலவகையான அதிகாரங்களை நாம் காணலாம்.

1. *வீடு*: நம்மீதான அதிகாரம் வீட்டில் ஆரம்பிக்கிறது. தேவன் பெற்றோர்களை பிள்ளைகளின் மீது அதிகாரம் உடையவராக வைக்கிறார். எல்லாப் பிள்ளைகளும், தங்களுடைய பெற்றோர்களுக்கு “மதிப்பு, அன்பு மற்றும் பற்றுருதியையும்” காட்ட வேண்டும். அவருடைய இந்தக் கற்பனையில் புதிய ஏற்பாட்டு வியாக்கியாணத்தை எபேசியர் 6:1-3 தருகிறது. கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளுக்கான ஆசீர்வாதம் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தம் இப்போதும் பலிக்கிறது! கீழ்ப்படியாத பிள்ளைகள், மனம்திரும்பாத நிலையில், பாவமான வாழ்வுக்கும் முடிவில் நரகத்திற்கும் தங்களை ஆயத்தம் செய்கிறார்கள்.

2. *பள்ளிக்கூடம்*: பள்ளி ஆசிரியை பெற்றோர்களின் ஸ்தானத்தில் பிள்ளைகளின் முறையான படிப்பு குறித்த காரியங்களில் பெற்றோரைப் போல செயல்படுகின்றனர். பிள்ளைகள் ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும், இல்லையெனில் பெற்றோர்களிடமிருந்து தண்டனையை எதிர்பார்க்க வேண்டும்! பிள்ளைகள் தேவனால் அரசாங்கத்திடம் ஒப்புக் கொடுக்காமல் பெற்றோரிடம் தரப்பட்டதால், பெற்றோர்களே பள்ளிக்கூடத்தை இயக்கி ஆள வேண்டும். கம்யூனிச கொள்கைப்படி, பிள்ளைகளை நாடு / அரசாங்கம் உடமையாக்குகிறது, பெற்றோர்கள் அல்ல மாறாக பள்ளிக்கூடம் நாட்டிற்கு கீழ்ப்படிய வேண்டும். நமது நாட்டிலும் கம்யூனிசத்திற்கு நெருக்கமாக வரும் செயல்கள் காணப்படுகிறதா?

3. *திருச்சபை*: சபைப் பொறுப்பில் உள்ளவர்களின் அதிகாரத்தின் கீழ் தேவன் விசுவாசிகளை வைக்கிறார்! கிறிஸ்து அவர்களுக்குப் பின் நின்று, அவர்கள் மூலம் நம்மை ஆளுவதால் நாம் சபையை நடத்துபவர்களுக்கு

(எபி 13:17) கீழ்ப்படிய வேண்டும்.

4. *மக்கள் ஆட்சி*: போலீஸ், நீதிபதி, ஆளுநர், ஜனாதிபதி மற்றும் சட்டமன்ற பிரதிநிதி போன்ற அரசியல் அதிகாரிகள் -- (அவிசுவாசிகள் நினைப்பது போல) மக்களிடமிருந்து அல்ல, தேவனிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். இதுபோன்ற அதிகாரிகள் கிறிஸ்தவர்களாக இல்லாதிருப்பினும் கிறிஸ்தவர்கள் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். நம்முடைய அரசின் தலைவர்களை மதிக்கவும், அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டியதின் அவசியத்தை ரோமர் 13:1-7 தெளிவாக நமக்கு போதிக்கிறது, காரணம் தேவன் அவர்களை அதிகாரத்தில் வைத்திருக்கிறார், அவர்கள் "தேவ ஊழியர்களாகவும்" இருக்கிறார்கள் (13:4).

5. *வேலை கொடுப்பவர்*: நாம் மற்றவர்களுக்கு வேலை செய்யும்படி ஒத்துக் கொள்ளும்போது, நாம் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது கட்டாயம். வேலையாட்கள் தங்களுக்கு வேலைகொடுத்தவருக்கு எதிராக வேலை நிறுத்தம் மற்றும் கலகத்தில் ஈடுபடுவது தேவனுக்கு எதிராக சண்டையிடுவதாகும் (1பேது 2:18-ஐப் பார்க்க).

6. *முதியோர்கள்*: லேவிய 19:32 சொல்கிறது: நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்." முதியோர்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். இது எவ்வளவாக இன்றைய நாட்களில் குறைந்துள்ளது!

இப்படி உயர்ந்தவர்களை மதித்து, அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதற்கான முக்கிய காரணம் அவர்கள் நம்மைவிட பெலசாலிகள் அல்லது ஞானவான்கள் என்பதால் அல்ல, மாறாக தேவன் அவர்களை நமக்கு மேலாக வைத்துள்ளார் என்பதாகும். சபையின் மூப்பர், நகரின் சாலையில், போக்குவரத்து அதிகாரிக்கு கீழ்ப்படிய வேண்டும், அதுபோல, போக்குவரத்து அதிகாரி சபையில் தேவனுடைய சட்டங்களை கையாளும் சபை மூப்பருக்கு கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய ஆளுகைக்கு பலவழிகளில் நாம் கீழ்ப்பட்டிருக்கிறோம்.

ஆளுகை செய்கிறவர்களும் "குறைவுள்ளவர்கள்", பூரணமானவர்கள் யாருமில்லை என்பதை கேட்டகிசம் குறிப்பிடுகிறது. ஆனால் அவர்களின் குறைவுகள் நாம் அவர்களை அவமதிப்பதற்கும், அவர்களுக்கு கீழ்ப்படியாததற்கும் காரணங்களாக எடுக்கக் கூடாது.

அவர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியதற்கு மிக முக்கியமான ஒரு தகுதியும், தடையும் உண்டு. என்னவெனில், ஒரு தனிநபர் அல்ல கூட்டத்தார் நம்மை கீழ்படியும்படி கேட்பது தேவனுடைய சித்தத்திற்கு எதிரானதாக இருப்பின் அதற்கு நாம் கீழ்ப்படியக் கூடாது. இராஜாவின் கட்டளைகளுக்கு தானியேல் கீழ்படியவில்லை, சனகரிப் சங்கத்தினர் அப்போஸ்தலர்களை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கூடாது என்றபோது அதற்கு கீழ்ப்படிய மறுத்தனர். இதுபோன்ற நேரங்களில் நமக்கு சிறைவாசம் மற்றும் மரணமேயானாலும், பேதுருவைப் போல, "மனுஷருக்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியம்" என்று சொல்ல வேண்டும் (அப் 5:29; 4:17-20). சமுதாயத்தில் தேவன் வைத்துள்ள அதிகாரத்திற்கு கீழ்படியும் சிறியோர் பெரியோர் மீது தேவனுடைய ஆசீர்வாதங்கள் தங்கும்.

**104-க்கான கேள்விகள்:**

1. பொதுவான ரிபார்ம்டு புரிந்து கொள்ளுதலின்படி, இந்த ........................ கற்பனை, ..................................... ................................................................................... குறித்த தேவனுடைய கற்பனையின் இரண்டாவது அட்டவணையைச் சார்ந்தது ஆகும்.
2. ஐந்தாவது கற்பனை என்னவெனில்: ........................................................................................................ ..........................................................................................................................................
3. பெற்றோர்களின் அதிகாரத்தையன்றி வேறொன்றையும் இந்த கற்பனை குறிப்பிடவில்லை. சரியா, தவறா? .................. விளக்கம்: ................................................................................................................ ..........................................................................................................................................
4. எல்லா அதிகாரங்களும் தேவனிடமிருந்து வருகிறது, ஆனால் கிறிஸ்தவரல்லாத அதிகாரிகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை. சரியா, தவறா? ...................., விளக்கம்: ..........................................................................................................................................
5. நாம் கீழ்ப்படியும்படி தேவனுடைய ஆளுகை வெளிப்படும் சமுதாயத்தின் ஐந்து வகையான அம்சங்கள் யாவை? ...................................................................................................................................
6. நம்மை உடைமையாக்கியுள்ள அரசுக்கு பள்ளி ஆசிரியர்கள் கீழ்ப்படிவதால், சிறுவர்கள் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். சரியா, தவறா? ..................
7. நமக்கு மேலுள்ளவர்களின், எந்தவகையான "குறைவுகளை" நாம் பொறுமையுடன் சகிக்க வேண்டும்? ..........................................................................................................................................
8. பின்வருதைப் பொருத்துக:

| | |
|---|---|
| லேவி 19:32 | - மக்கள் அரசு |
| பள்ளி ஆசிரியர்கள் | - சபைத் தலைவர்கள் |
| ரோம 13:1-7 | - பெற்றோர்கள் |
| எபிரே 13:17 | - முதியவர்கள் |
| "தனிநபர் அற்ற" | - எண் ஒன்பது |

பிறரின் பெயர் - அரசு மக்களை உடைமையாக பெற்றிருத்தல்

9. நமக்கு மேலானவர்களுக்கு கீழ்படியும் காரியத்தில் நமக்குள்ள கட்டுப்பாடு என்ன? ..............................
..........................................................................................................................................................

10. எபேசி 6:1,2-ஐ எழுதுக:

**105. ஆறாவது கற்பனையில் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார்?**

என்னுடைய சிந்தனை, வார்த்தை, தோரனை, மேலும் என் செயல்களினாலும் பிறரை திட்டி, வெறுப்பேற்றி, அவமதித்து அல்லது, நானாகவோ அல்லது மற்றவரின் மூலமாகவோ கொலை செய்யாமல், பழிவாங்கும் ஆசையை புறம்பே தள்ளுவேன்; மேலும், நான் எனக்கே தீங்கு செய்யாமல், எந்தவிதமான விபத்துக்குள்ளும் நானே விரும்பி செல்ல மாட்டேன். நீதிபதி தண்டிக்கும் அதிகாரத்தை உடையவராக இருப்பதினால் எக்காரணத்திற்காகவும் கொலை செய்யவுமாட்டேன் என்பதை குறித்ததாகும்.

***

தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஆறாவது கற்பனை பிறருடைய ஜீவனுக்கான நம்முடைய மரியாதையை வேண்டுகிறது. இது பல வார்த்தைகளில் கொலை செய்வதை தடைசெய்வதைக் காட்டிலும், இன்னும் சற்று அதிகமாகச் சென்று, நமக்கு அருகில் உள்ளவரை அதிகமாக நேசிக்கவும், "முடிந்த அளவுக்கு அவரைக் காயப்படாமல் பாதுகாக்கவும்", மேலும், "நம்முடைய எதிரிகளுக்கும் நன்மை செய்வதையும்" குறிக்கிறது (கேள்வி 107). நாம் கேள்வி 92-ல் பார்த்தது போல, கர்த்தருடைய கற்பனைகள் ஆக்கமுறை மற்றும் எதிர்ப்புமுறையான பயன்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. அவைகள் குறிப்பிட்ட சில தீய மனப்பான்மை மற்றும் செயல்களை தடைசெய்வதோடு, அதற்கு நேரெதிரான மனப்போக்கு மற்றும் செயல்களை (தேவனுக்கு கீழ்ப்படிந்த பதில்களை) வேண்டுகிறது.

ஆறாவது கற்பனை தடைசெய்வது என்ன என்பதை கேள்வி 105 விளக்குகிறது; கொலைக்கான அடிப்படை மூலதனம் என்ன என்பதை கேள்வி 106 விளக்குகிறது; ஆறாவது கற்பனை என்ன செய்யவேண்டுமென்கிறது என்பதை கேள்வி 107 நமக்கு போதிக்கிறது.

கொலை செய்வதை தடைசெய்தல் சம்மந்தமாக கேள்வி 105-ல் மூன்று காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (சிலர் விளக்குவதுபோல இது மிருகங்களை கொலை செய்வதைக் குறிக்காமல், மனித உயிர்களை எடுப்பதையே இது குறிக்கிறது.)

1. பிறருக்கு எதிராக, எக்காரணத்தை முன்னிட்டும் பழிவாங்கும், மற்றும் எவ்விதமான தீங்கு விளைவிக்கும் எண்ணத்தையும் தேவன் தடைசெய்கிறார். மேலும் மற்றவருக்கு எதிராக பகைமையை வெளிப்படுத்தும் சொற்கள் மற்றும் பாவனைகளையும் தடைசெய்கிறார். எல்லாவற்றிலும் மோசம், நாசமாகவோ அல்லது மற்றவரின் மூலமாகவோ உண்மையிலேயே (செயலால்) ஒருவரின் உயிரை எடுப்பது. உதாரணமாக ஏத்தியனாகிய உரியாவை தாவீது, போர் முகத்திலே நிறுத்தி கொலைசெய்யப்படும்படி செய்து, கொலைக் குற்றத்திற்கு ஆளானான் (2சாமு 11:14-17,26,27).

"பழிவாங்கும் விருப்பமே" அதிகபட்சம் கொலைசெய்வதற்கான நோக்கமாகிறது. ஆனால் நாமோ, கர்த்தருக்குப் பயந்தவர்களாகவும், பரிசுத்த ஆவியானவர் நமது சிந்தைகளில் செயல்படுகிறவராக, நமக்குத் தீமை செய்தவர்களையும் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை நம்மைவிட்டு அகற்றினவர்களாக இருக்க வேண்டும். நமக்கு அருகில் உள்ளவர்களும் தேவனுடைய சாயலை சுமக்கின்றவர்களாக இருப்பதால் அவர்களின் ஜீவனும் மேன்மையாகக் கருதப்பட வேண்டும் (ஆதி 9:6).

2. நம்முடைய ஜீவனும், நம்முடையதாக இல்லாமல் தேவனுடையதாக இருப்பதால், தீமையினின்று காக்கப்பட வேண்டும். விரும்பியே தன்னைத்தான் கொலை செய்தலின் சில வகைகள் யாவை? முதலாவது, தற்கொலை செய்தல் என்ற பாவம் (சவுல் இராஜா, அகிதோப்பேல் மற்றும் யூதாஸ்). ஒரு உண்மையான கிறிஸ்தவன் இந்தப் பாவத்தைச் செய்ய முடியுமா? இது விவாதத்திற்குரிய கேள்வி. மேலும் தன்னைத்தான் அழிக்கும் சில வலிமை குறைந்த செயல்களும் உண்டு, அவைகள்: மரணம் சம்பவிப்பதற்கேதுவான (ஜல்லிக்கட்டு போன்ற) விளையாட்டுகளில் கலந்து கொள்ளுதல், வாகனத்தை வேகமாக ஓட்டுதல், தீப்பற்றக் கூடிய பொருட்களை கவனக்குறைவாக கையாளுதல் போன்றவைகள் ஆகும். சில நேரங்களில் நமது வேலையினிமித்தம் சரீரத்தின் பெலனையும் கருத்தில் கொள்ளாமல் அளவுக்கு மீறு பணிசெய்தல். சுகாதாரமான உணவு உண்டு, போதிய ஓய்வு எடுக்கத் தவறக் கூடாது, மேலும் நமது சரீரத்திற்கு தீங்கு தரும் புகையிலை மற்றும் போதை வஸ்துகளை எந்த விதத்திலும் உட்கொள்ளக் கூடாது (3யோவா 2).

3. மற்றவர்களை கொலை செய்யவேண்டும் என்ற மனப்பான்மை எல்லோரும் பெற்றிருப்பதால், கொலையாளிகளுக்கு, "மரண தண்டனை"- என்னும் முக்கியமான தண்டனையை தேவன் ஏற்படுத்தியுள்ளார். தீவிரமாகத் திட்டமிட்டு செய்யப்பட்ட கொலை என்னும் குற்றத்திற்கு ஆளாகிறவருக்கு, நீதிபதிகள் தேவனுடைய வார்த்தையின்படி, மரணதண்டனை தரவேண்டும். இந்த கடமை ஆதி 9:5,6-ல் குறிப்பிடப் பட்டுள்ளது. மீண்டும் ரோம 13:4-ல் அறிவுறுத்தப் பட்டுள்ளது. மரண தண்டனை என்பது தேவனுடைய தண்டனை, இதை இல்லாமற் செய்ய வேண்டும் என்று போராடுகிறவர்கள், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக சண்டையிட்டு, தேவனையே கனவீனம் செய்கின்றார்கள் என்பதாகும்.

கொலைசெய்தல் அத்தனைப் பெரிய குற்றம் ஏன்? காரணம், ஏற்கனவே குறிப்பிட்டது போல, மனிதன்

தேவனுடைய சாயலாகப் படைக்கப் பட்டவன். ஒரு மனிதனை அழிப்பது என்பது தேவனுடைய சாயலையே அழிப்பதாகும், இது தேவனுக்கு எதிரான தாக்குதல். தேவன் ஒருவரே மனிதனுக்கு ஜீவனைக் கொடுக்கிறார், ஆகவே அவர் மட்டுமே அதை எடுக்க முடியும். கொலை செய்வது மிகக் கொடிய பாவம் ஆகும்.

**105-க்கான கேள்விகள்:**

1. ஆறாவது கற்பனை ...................................................................................................... வேண்டுகிறது.
2. "கொலை செய்யாதிருப்பாயாக" என்பது மற்றவரின் உயிரை நாம் எடுக்கக் கூடாது என்பதை மட்டும் அர்த்தப்படுத்துகிறது. சரியா, தவறா? ...................
3. காயப்படுத்திக் கொலை செய்வதற்கேற்ற நினைவுகளுக்கான காரணம் என்ன? ....................................... ......................................................................................................................................................
4. சிந்தனை, ......................................................................................................................, ஆகிய நான்கு வழிகளில் கொலை வெறி வெளிப்படுத்தப்படுகிறது.
5. நாம் நம்மை கொலை செய்து கொள்ளும் ஐந்து வழிகளைக் குறிப்பிடுக: அ. ....................................... ......................................................................................, ஆ. ......................................................................... இ. ......................................................................................, ஈ ......................................................................... உ. ......................................................................................
6. புகைப்பிடிப்பது பாவமா? ......................, விளக்கம்: ....................................................................................... ......................................................................................................................................................
7. "இரண்டு தவறுகள் சேர்ந்து ஒரு சரியை உண்டாக்குவதில்லை", ஆகவே மரண தண்டனை தவறு என்று சில கிறிஸ்தவர்கள் சொல்கிறார்கள். உங்கள் கருத்து: ...................................................................... ......................................................................................................................................................
8. ஒருவர் நன்றாகத் திட்டமிட்டு, வேண்டுமென்றே மற்றொருவரைக் குறித்து பொய்யாகக் கூறி, காயப்படுத்தும்போது, "எல்லாப் பழிவாங்கும் எண்ணத்தையும் புறம்பாக்குவது" எப்படி? .......................... ......................................................................................................................................................
9. மனிதனுடைய ஜீவன் மிகுந்த விலையேறப்பெற்றது ஏன்? ............................................................................
10. ஆதியாகமம் 9:6-ஐ எழுதுக:

**106. இந்தக் கற்பனை கொலைசெய்வதை குறித்து மட்டும் பேசுகிறதா?**

இல்லை, கொலையைத் தடுப்பதோடு, இதற்கு மூலகாரணமான பொறாமை, வெறுப்பு, கோபம் மற்றும் பழிவாங்கும் விருப்பம் போன்றவைகளையும் தேவன் வெறுக்கிறார், இவைகள் யாவும் அவருடைய பார்வையில் மறைவான கொலைகள் ஆகும்.

***

ஒவ்வொரு வருடமும், ஆயிரக்கனக்கானோர் மற்றவர்களால் கொலை செய்யப்படுகிறார்கள். கொலை செய்யப்படுவோரின் எண்ணிக்கை, மக்கள் தொகைப் பெருக்கத்தைக் காட்டிலும் அதிகமாக உயர்ந்து கொண்டே இருக்கிறது. இருப்பினும் 1967 முதல் 1977-வரை எந்தவொரு கொலையாளியும் மரணதண்டனைக்கு உட்படுத்தப்படவில்லை. அமெரிக்க நாட்டின் உச்சநீதி மன்றம் மரணதண்டனையை முற்றிலும் நீக்கியுள்ளது.

சட்டவிரோதமான இந்த கொலையின் பின்னணி என்ன? துப்பாக்கி, கத்தி, விஷம் போன்ற மற்ற கொலைக் கருவிகளுக்குப் பின்பு மனிதனின் செயல்பாடு இருக்கிறது; இந்த செயலுக்குப் பின் கொலை செய்வதற்கான விருப்பமும் நோக்கமும் இருக்கிறது. கொலைசெய்யும் விருப்பத்திற்குப் பின் பொறாமை, வெறுப்பு, கோபம் மற்றும் பழிவாங்கும் விருப்பம் மற்றும் பல நோக்கங்கள் இருக்கிறது. அதிகபட்சம் வழிப்பறி கொள்ளை போன்ற பல சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவரின் அடையாளம் கண்டுபிடிக்கப்படாதபடிக்கு, ஏமாற்றப்பட்டவர் கொலை செய்யப்படுகிறார். கொலை விசாரணையில், குற்றம் சுமத்தப்பட்டவர், தீமைக்குள்ளானவரைக் கொலை செய்வதற்கான காரணம் என்ன என்பதை மட்டுமே கண்டுபிடிக்க முயற்சிக்கிறது.

பகைமையே கொலைக்கு அடிப்படைக் காரணம் என்றும், இந்த பகை நம் எல்லாருடைய இருதயத்திலும் இருக்கிறது என்றும் வேதம் கூறுகிறது. நாம் எல்லாருமே கொலை செய்யக் கூடியவர்களே, ஆகவே நாம் "ஆபத்தானவர்கள்" என்று அழைக்கப்படலாம்.

ஒருவன் தன் அயலானை பகைப்பது, ஆவிக்குரிய கொலை செய்கிறான் என்று நம் ஆண்டவர் விளக்கினார்! இயேசு மத்தேயு 5:22-ல், "தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்... மூடனே என்று (பகைமையின் மொழி) சொல்கிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்" என்றார். அப்போஸ்தலனாகிய யோவானும், "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது" (1யோவா 3:15) என்று போதித்தார்.

ஆறாவது கற்பனையான கொலை செய்யாதிருப்பாயாக என்பதின் ஆவிக்குரிய வியாக்கியாணத்தின்படி, கர்த்தருடைய பார்வையில், நாம் நினைப்பதற்கு மேலாக, ஆறாவது கற்பனையை நமது வாழ்வில் முழுவதும்

உடைக்கும் குற்றத்தையுடையவர்களாக இருக்கிறோம். தேவன் முதலாவது இருதயத்தை ஆராய்கிறார், ஒவ்வொரு மனிதனின் இருதயத்தில் இருக்கும் பகை மற்றும் கொலை நோக்கங்களை பார்க்கிறார். நம்முடைய சமுதாயத்தில் கொலைகள் அரிதாக காணப்பட்டாலும், ஆவிக்குரிய மற்றும் மறைமுகமான கொலைகள் அடிக்கடி செய்யப்படுகிறது. ரோமர் 3:15,16-ன்படி, “அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது; நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது” என்பது நமக்கும் பொருந்துகிறது.

பகைப்பது எப்போதுமே தவறானதா? இதைக் குறித்து நாம் குழப்பமடையக் கூடாது. ஆம், தேவன் தீமையை வெறுப்பதால் நாமும் தீமையை வெறுக்க வேண்டும். தீயவர்களை வெறுப்பதையும், அவர்களைத் தேவன் அழிக்க வேண்டும் என்பதற்கான ஜெபமும் கர்த்தருடைய வார்த்தையில் இருக்கிறது (சங்கீ 5:10; 35:1-8; 59:10; 69:24-28; 139:20,21; எரே 11:20 மற்றும் 15:15 பார்க்கவும்). இதற்கான விளக்கம், தீமைசெய்கிறவர்களின் மனமாற்றத்தை நாம் விரும்பும் போது, அவர்களின் தீய செயல்களை நாம் வெறுக்க வேண்டும். ஆனாலும், தீயவர்களின் மனமாற்றத்திற்கு மேலாக, தேவன் மகிமைப்படுவதே நம்முடைய பிரதானமான ஆவலாக இருக்க வேண்டும்; ஒரே வேளை தேவனுடைய மகிமைக்காக தீயவர்கள் அழிக்கப்படுவாதாக இருப்பினும், அதற்காக ஜெபிக்க வேண்டும். ஒருவர் நமக்கு எதிரியாக இருப்பதற்காக அவரை நாம் பகைக்காமல்; நாம் தேவனுடைய எதிரிகளை, அவர்களின் செயல்கள் தேவனுக்கு எதிராக இருப்பதால் மட்டுமே நாம் பகைக்க வேண்டும். நாம் குற்றவாளிகளாக காணப்படாதபடிக்கு, மற்றவர்களை அநியாயமாக நியாயம் தீர்க்காதிருக்க கவனமாக இருக்க வேண்டும்.

தேவனுடைய கிருபையினால் ஆகும் புதிய பிறப்பால் மட்டும், இருதயத்தின் இருட்டு மற்றும் பாவமான வெறுப்பிலிருந்து நாம் விடுவிக்கப்பட முடியும். நம்முடைய அயலானை நேசிக்கவும், கிறிஸ்துவின் ஒளியில் நிலைத்திருக்கவும் தேவன் உதவும்படி தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் (1யோவ 2:10)

**106-க்கான கேள்விகள்:**

1. ஒரு செடிக்கு வேர் மூலகாரணமாக இருப்பது போல, ..................................................... செய்யப்படுவதற்கு பகைமை அவசியம்.
2. இந்தக் கேள்வியின்படி, கொலைக்கான நான்கு அடிப்படைக் காரணங்கள் யாவை? .............................. ..............................................................................................................................................
3. பகைமையும், வெறுப்பும் மறைமுகமான கொலைகள் என்றால், உண்மையாக ஒருவரை கொலை செய்வது பெரிய பாவம் அல்ல. சரியா, தவறா? ..................
4. யாக்கோபு 1:14,15-ன்படி பாவத்திற்கான வளர்ச்சிப்படிகள் என்ன? .................................................. ..............................................................................................................................................
5. தேவனுக்கு வெளிப்புறமாகக் கீழ்ப்படிந்தால் போதும் என்பது... அ)வேதாகமம், ஆ)வேதத்திற்கு எதிரான... போதனை ஆகும். எது? ........, விளக்கம்: ....................................................................................
6. எந்தவொரு காரணத்திற்காகவும் எவரையும் வெறுப்பது வேதாகம போதனை அல்ல. சரியா, தவறா? .................., விளக்கம்: ..............................................................................................................
7. ஆறாவது கற்பனையின்படி, மனிதருக்கு தேவன் கொடுப்பதுபோல, யார் கொலைக் குற்றவாளி ஆவார்? ..............................................................................................................................................
8. மறைமுகமாக கொலைக் குற்றம் புரிந்தவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட வேண்டுமா? .................., விளக்கம்: ..............................................................................................................
9. யார் முதல் கொலையாளி? (யோவா 8:44-ஐப் பார்க்க) யாரை, எப்படி கொலை செய்தான்? ..............................................................................................................................................
10. 1யோவா 3:15-ஐ எழுதுக

**107. ஆனால் நாம் நம்முடைய அயலானை கொலை செய்யக்கூடாது என்பது ஒன்று மட்டும் தானா தேவையானது?**

இல்லை; பொறாமை, பகை மற்றும் கோபத்தை கண்டனப்படுத்துவதில், நாம் நம்மில் அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூர்ந்து, அவருக்கு பொறுமை, சமாதானம், தாழ்மை, தயவு மற்றும் இரக்கத்தை காண்பித்து, முடிந்த அளவுக்கு அவர் வேதனைபடாதபடிக்கு காத்து; நம்முடைய எதிரிகளுக்கும் கூட நன்மை செய்ய வேண்டும்.

***

இந்த கேள்வி ஆறாவது கற்பனையின் ஆக்கஎ்வமான வேண்டுதல் -அதாவது, மற்றவர்களின் ஜீவனை ஆபத்திலிருந்து காப்பாற்றி, பாதுகாக்கும் செயலைக் முக்கியப்படுத்திக் காண்பிக்கிறது.

நமக்குப் “பிறன்” யார்? இது நமக்கு பக்கத்து வீட்டில் இருக்கும் ஒருவர், அல்லது நம்மை விரும்பி, நம்முடன் நட்புடன் பழக விரும்பும் ஒருவர் என்பது மட்டுமல்ல. நம்முடைய வாழ்வின் பாதையில், நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ குறுக்கிடும் எந்த நபராகவும் இருக்கலாம். இதைத்தான்

லூக்கா 10:29-37-ல் உள்ள நல்ல சமாரியன் உவமையில் உள்ள நமது ஆண்டவரின் போதனை.

நமக்கு அண்டையில் உள்ளவர் மீது அலட்சியமாகவோ அல்லது அக்கறையற்றோ இருக்க முடியாது. ஒன்று தேவன் நிமித்தம் அவரை நேசிப்போம் அல்லது பாவத்தினிமித்தம் அவரை வெறுப்போம். நமக்கருகில் இருப்பவர் மீது நாம் காண்பிக்க வேண்டிய எட்டுவிதமான நற்பண்புகளை இந்த பதிலில் நாம் காணலாம்.

நமக்கு இரக்கம் காட்டும் ஒருவர் மீது இரக்கம் காட்டுவது கடினமானது அல்ல, ஆனால் ஆறாவது கற்பனை அதிலும் மேலானதை நாம் செய்யும்படி வேண்டுகிறது. நாம் நம்முடைய எதிரிகளுக்கும் அன்பு, பொறுமை, சமாதானம், தாழ்மை, தயவு மற்றும் இரக்கத்தை காண்பிக்க வேண்டும்! கிறிஸ்துவின் அன்பு நமது இருதயத்தை நிறப்பாத வரை இது சாத்தியமல்ல.

எல்லா மனிதர் மீதும் கிறிஸ்தவ அன்பை நாம் காண்பிப்பது எப்படி? மற்றவர்களுக்கு முதலாவது தேவைப்படுவது, அவர்களுடைய ஆத்துமாவிற்கு இரட்சிப்பு ஆகும். எனவே அவர்களுக்கு ஆவிக்குரிய பாதிப்பு வராதபடிக்கு அவர்களுக்கு சுவிசேஷம் கொடுப்பதைக் குறித்து அக்கறை காட்டவேண்டும். இது இல்லாத நிலையில், அவர் நித்திய அக்கினி என்னும் நரகத்தில் மாண்டு அழிவார். இரண்டாவது, கிறிஸ்தவர் மற்றும் கிறிஸ்தவரல்லாத அனைவரிடமும், அவர்கள் விரும்பாவிட்டாலும், ஒரே உண்மையைப் பேச வேண்டும். நாம் அவர்களை அவமதிக்கிறோம் அல்லது அவர்கள் மீது இரக்கம் காண்பிக்கவில்லை என்று அவர்கள் நினைத்தாலும் அவர்களுக்கு நாம் நன்மை செய்கிறோம். மூன்றாவது, நமக்கருகில் உள்ளவர்களுக்கு வரும் எந்தவிதமான கஷ்ட்டங்களிலும், நமக்கு ஆபத்து வருவதுபோலக் காணப்பட்டாலும் உதவி செய்யத் தயங்கக் கூடாது. நான்காவது, வியாதி மற்றும் ஆபத்துக்களிலிருந்து ஜீவனை எப்படி காப்பது என்பது குறித்து படிக்க வேண்டும். இன்று மனித ஜீவனுக்குப் தீங்கு தரும் கொடுமையான பல குற்றங்களை பலர், மருத்துவர்களும் கூட, ஊக்குவிக்கின்றனர். கருக்கலைப்பு மற்றும் கருணைக் கொலைகள் (Abortion and Euthanasia) இந்தக் குற்றங்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். இந்த வார்த்தைகளுக்கான விளக்கத்தை சொல் அகராதியில் பார்த்தால், ஏன் இவைகள் ஆறாவது கற்பனையில் கண்டனப்படுத்தப்படுகிறது என்பது விளங்கும். கர்த்தருக்குப் பயந்த கிறிஸ்தவர்களாக நாம், மிகவும் சிறிய, மிகவும் வயதான, மிகவும் வியாதியுற்ற ஜீவன்களுக்கு எதிராக வளரும் கொலைகளுக்கு எதிராக நமது குரல்களை உயர்த்த வேண்டும்.

நம்முடைய எதிரிகளுக்கும் நாம் நன்மை செய்ய முயற்சிக்க வேண்டும். தீமைக்குத் தீமை செய்யக் கூடாது என்று வேதம் கூறுகிறது (மத் 5:44-47; ரோம 12:17-21). நமது சிந்தை மற்றும் இருதயங்களில் வேலை செய்யும் தேவனுடைய கிருபையால் மட்டுமே இதுபோல் நாம் வாழ உதவ முடியும்! இப்போது எழும்பும் மற்றுமொரு கேள்வி, நம்மைப் பாதுகாப்பதற்காக எதிரியுடன் சண்டையிடுவது தவறா? நியாயமில்லாமல் நம்மைத் தாக்கும் ஒருவருக்கு எதிராக போராடும் போராட்டத்தில், அவரைக் காயபடுத்தி அல்லது கொலை செய்வது தவறா? சிலர் இல்லை என்றும், இது வேதாகம காரியம் இல்லை என்றும் சொல்கின்றனர். தங்களுடைய வாதத்திற்காக இயேசுவின் வார்த்தைகளையும் மேற்கோள் காட்டுகின்றனர் (மத் 5:39-42).

ஆனால், மற்றொரு மனிதன் நம்முடைய ஜீவனை எடுக்க செய்யும் முயற்சியில், அவரை எதிர்க்க பெலன் இருந்தும் அமைதலாக இருப்பது தவறு ஆகும். மற்றவர்களின் ஜீவனைப் பாதுகாக்க நாம் எடுக்கும் முயற்சிகளை விட நமது ஜீவனை பாதுகாக்க எந்தவிதத்திலும் தளரக் கூடாது. தற்பாதுகாப்பு வேதாகம முயற்சியாகும் (1சாமு 19:10; சங் 82:4; நீதி 24:11,12; அப் 23:17-22). மத்தேயு 5:39-42-ல் இயேசு தடைசெய்வது தனிப்பட்ட அவமதிப்புக்காக பழிவாங்குதல் ஆகும். பொல்லாத மனிதர்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்க நாம் எடுக்கும் முயற்சியை அவர் தடை செய்யவில்லை.

**107-க்கான கேள்விகள்:**

1. நாம் நம்மில் அன்பு கூருவதுபோல பிறனிலும் அன்பு கூற, அந்தப் பிறன் யார்? ....................................
   ........................................................................................................................................................
2. மற்றவர்களை வெறுக்கவோ அல்லது நேசிக்கவோ செய்யாமல் அக்கறையற்று இருக்க முடியும். சரியா, தவறா? ................., விளக்கம்: ..........................................................................................
3. நமக்கு அருகில் உள்ளவர்கள் மீது நாம் காண்பிக்க வேண்டிய நற்பண்புகளை குறிப்பிடுக: ........................................................................................................................................................
4. மற்றவர்களின் வாழ்வில் நமது அன்பைக் காண்பிக்கும் நான்கு முக்கிய வழிகள் என்ன?
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
5. மற்றவர்களின் ஜீவனைப் பாதுகாப்பதற்காக நம்முடைய சொந்த ஜீவனையும் பார்க்க கூடாது என்று ஆறாவது கற்பனை கூறுகிறதா? .................. (யோவா 15:23-ஐ பார்க்க)
6. பிறரை நேசிக்க வேண்டும் என்பது, அவர் நம்மை தாக்கி கொலையே செய்தாலும், அவரை நாம் காயப்படுத்தக் கூடாது. சரியா, தவறா? ................, விளக்கம்: ..........................................................
   ........................................................................................................................................
7. “தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்”- (மத் 5:39)என்று இயேசு சொல்வதின் அர்த்தம்

என்ன?...............................................................................................................................................

8. ஆறாவது கற்பனை நாம் செய்ய வேண்டும் என்று சொல்வது... அ)நரகத்தைக் குறித்து மற்றவரை எச்சரிக்க வேண்டும். ஆ)காயப்பட்ட ஒருவருக்கு முதலுதவி செய்ய வேண்டும். இ)எதிரேப் படைவீரர்களோடு சண்டையிடுவதற்கு ஒத்துக் கொள்ளக் கூடாது, ஈ)குத்துச் சண்டை மற்றும் காளைமாடு அடக்குதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும், உ)தேவைப்படுவோருக்கு நமது கண்கள், சிறுநீரகம் மற்றும் இருதயத்தையும் தானம் செய்ய வேண்டும். எதை? ...........
9. உன்னதமான அன்பை, எதிரிகளுக்காகவும், வெளிப்படுத்தியது யார் (ரோம 5:6-8)? ................. ................., அவர் நமக்காக என்ன செய்தார்? .........................................................................................................
10. ரோமர் 12:20,21-ஐ எழுதவும்:

**108. ஏழாவது கற்பனை நமக்குப் போதிப்பது என்ன?**

எல்லாவகையான கற்பு நெறி தவறுதலும் தேவனால் சபிக்கப்பட்டவை ஆகும், ஆகவே நமது முழு இருதயத்தோடும் அதை வெறுத்து, பரிசுத்த திருமண உறவு மற்றும் தனி வாழ்விலும் கன்னியமாகவும், கற்புடனும் வாழவேண்டும்.

***

“விபச்சாரம் செய்யாதிருப்பாயாக”- என்ற ஏழாவது கற்பனையை, கேள்விகள் 108 மற்றும் 109 விளக்குகிறது. இந்த தேவனுடைய கற்பனை நம்மை, நம்முடைய மற்றும் பிறருடைய திருமணத்தை கனப்படுத்தும்படி, வேண்டுகிறது. தவறான உடலுறவின் அசுத்தம் மற்றும் சாபத்தைக் குறித்து கேள்வி 108 விளக்குகிறது, விபச்சாரம் ஏன் மிகவும் தீமையானது மற்றும் எப்படி இது தவிர்க்கப்படலாம் என்பதை கேள்வி 109 விளக்குகிறது.

தேவன் நம்மை ஆணும் பெண்ணுமாக படைத்து (ஆதி 1:27), வயதுக்கு வந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான திருமண ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளார். உடலுற ஆசை தவறு இல்லை, ஆனால் இது கட்டுப்படுத்தப்பட்டு திருமண உறவில் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். திருமண உறவுக்குள்ளான உடலுறவு பரிசுத்தமானதும், நல்லதும், அவசியமானதுமாகும். திருமணத்தில் தேவன் இணைத்த ஆதாம் மற்றும் ஏவாளிடமும், அவர்கள் “ஒரே சரீரமாக” இருக்கும்படி கூறினார் (ஆதி 2:24). இது கணவன் மற்றும் மனைவி தங்களின் அன்பு, மதநம்பிக்கை மற்றும், நோக்கத்தில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. உடலுறவு என்ற செயல் அவர்கள் இருவரின் ஒன்றித்த தன்மையின் வெளிப்பாடாகவும், கிறிஸ்து தமது சபையாகிய மணவாட்டியோடு இசைந்திருப்பதின் அடையாளமாகவும் இருக்கிறது.

விபச்சாரம் என்பது ஒன்றாக இருக்கும் கணவன் அல்லது மனைவி வெளியில் உள்ள ஒருவருடன் “ஒன்றாகி” திருமண ஒப்பந்தத்தை உடைப்பதாகும். விபச்சாரம் குடும்பத்தை அழிக்கிறது: பெற்றோர்கள் மட்டுமல்ல, குழந்தைகளும் ஆவிக்குரிய நிலையில் காயப்படுத்தப் படுகிறார்கள். விபச்சாரம் ஆவிக்குரிய விவாகரத்து ஆகும், பலநேரங்களில் இது உண்மையான விவாகரத்துக்கு நேராக நடத்துகிறது. விபச்சாரம் என்பது தன்னுடைய அல்லது மற்றவருடைய திருமண மகிழ்ச்சியை தாக்குவது ஆகும், அதிலும் மோசமானது, இது தேவன் ஏற்படுத்தியுள்ள திருமண நியமனத்திற்கு எதிரான மற்றும் தேவனுக்கும் எதிரான தாக்குதலாகவும் இருக்கிறது.

ஆகவே, “எல்லாவகையான கற்பு நெறி தவறுதலும் தேவனால் சபிக்கப்பட்டவை”; தேவனை நாம் மகிமைப்படுத்த வேண்டுமானால், “நமது முழு இருதயத்தோடும் அதை வெறுக்க வேண்டும்” கற்பு என்பது உடலுறவின் சுத்தத்தைக் குறிக்கிறது; நம்முடைய உடலுறவு சுத்தத்தை திருமணத்திற்கு முன்பும், திருமணத்திற்கு பின்னரும் கட்டாயம் பாதுகாக்க வேண்டும். பழைய ஏற்பாட்டின் உடலுறவு பாவங்களான விபச்சாரம், வேசித்தனம் (திருமணமாகாதவர்களுக்கு இடையேயான உடலுறவு), பணத்திற்கு உடலுறவு கொள்ளுதல், கற்பழிப்பு, முறைதவறிய புணர்ச்சி (நெறுங்கிய உறவினர்களுக்கிடையேயான உடலுறவு) போன்றவைகளுக்கு மரணமே தண்டனையாக இருந்தது (லேவி 18:29; 20:10-18; மற்றும் உபா 22:21-27). இந்த உடலுறவு சம்மந்தப்பட்ட பாவங்கள் இன்றும் கர்த்தருடைய பார்வையில் குறைவாக சபிக்கப்படாதிருப்பதால், நம்முடைய சமூக சட்டங்கள் இந்தக் குற்றங்களை அதே மரண தண்டனையினால் தண்டிக்க வேண்டும்.

**திருமணத்தின் நோக்கம் மற்றும் சுத்தமான உடலுறவின் செயல்கள் என்னவெனில்:**

1. கிறிஸ்து மற்றும் தமது சபைக்கு இடையேயான திருமணத்தை அடையாளம் காண்பிக்க (எபேசி 5:23,30,31). திருமணம் என்பது தேவனோடு ஒன்றாக்கப்படுவதற்கு இணையாக இருப்பதாலேயே, ஒரு கிறிஸ்தவன் மற்றுமொரு கிறிஸ்தவரை மட்டுமே திருமணம் முடிக்க வேண்டும் (1கொரி 7:39).

2. குழந்தைகளைப் பெற்றெடுப்பது: தேவன் ஆணையும், பெண்ணையும் உருவாக்கி, அவர்களிடம், “பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்” என்று சொன்னார் (ஆதி 1:28; 9:1). “குழந்தை பிறப்புத் தடைசாதனங்கள்” திருமணமான தம்பதியினருக்கு மிகவும் ஆபத்தானவைகள். அவர்கள் தனக்காக பிள்ளைகளைப் பெற்றெடுப்பது தேவனுடைய நோக்கம். தேவன் தமது ஜனங்களை குழந்தைகளால் ஆசீர்வதிக்கிறார் (சங் 127:3)!

3. ஆண்களையும், பெண்களையும் அதிகமாக முழுமையாக்க: ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமணம்

மகிழ்ச்சியையும், நிறைவையும் தருகிறது. ஆதாமுக்கு ஒரு “துணை” அவசியப்பட்டது, ஆகவே ஏவாள் அவனுக்கு கொடுக்கப்பட்டாள் (ஆதி 2:18). மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல. வாழ்வு என்னும் பாதையில், கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் யாவரும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

இன்றைய உலகம், ஏன் சில திருச்சபைகளும், திருமணம் காலம் கடந்த அல்லது நடைமுறைக்கு ஒத்துவராத (out of fashion) ஒன்று என்றும், திருமணத்திற்கு வெளியேயான உடலுறவு தவறில்லை என்கின்றன. இந்தப் “புதிய ஒழுக்கப்பண்பு”, பழைய சோதோம் கோமாராவின் தீயஒழுக்கமாகும், இதைச் செய்கிறவர்கள் தங்களுடைய வாழ்க்கை, மற்றும் அவர்களின் குடும்பங்களையும் அழித்து, சமுதாயத்தை இடித்துத் தள்ளுகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தக் காரியத்தைச் செய்த நகரங்களை சபித்ததுபோல, மனம்திருந்தாத நிலையில் தேவன் இவர்களை சபிக்கிறார் என்பதாகும்.

**108-க்கான கேள்விகள்:**

1. சட்டவிரோதமான உடலுறவைக் குறித்து கேள்வி 108 கூறுவதென்ன? ..........................................................
   ..........................................................................................................................................................
2. பரிசுத்த நியமனமாக திருமணத்தை பாவிக்க வேண்டும், காரணம் இது ......................... ஏற்படுத்தப்பட்டது.
3. ஆண் மற்றும் பெண்ணுக்கு வரும் உடலுறவு விருப்பம் தவறானது, இது திருமணத்தில் வெளிப்படுத்தப்படலாம். சரியா, தவறா? ..................., விளக்கம்: ...................................................................
   ..........................................................................................................................................................
4. விபச்சாரம்... அ)மற்றவரின் திருமணத்திற்கு எதிரான தாக்குதல், ஆ)தன்னுடைய சொந்த திருமணத்திற்கு எதிரான தாக்குதல், இ)திருமணமான ஒருவரால் மட்டும் செய்யப்படுகிறது, ஈ)இரண்டு நபர்களை மட்டும் உள்ளடக்கியது, உ)தேவனுக்கே எதிரான தாக்குதல்... ஆகும். எது? ............
5. விபச்சாரம் .............................. விவாகரத்து ஆகும், இது ................................. விவாகரத்தாகலாம்.
6. மத்தேயு 5:32 மற்றும் 19:9-ன்படி ஒரு கணவன் அல்லது மனைவியின் விவாகரத்துக்கு அடிப்படை என்ன? .....................................................................................................
7. ஒரு கணவன் அல்லது மனைவி விபச்சாரம் செய்யும்போது, விவாகரத்து செய்யப்பட வேண்டும். சரியா, தவறா? ..................., விளக்கம்:.........................................................................................................................
8. விபச்சாரம் என்றால் என்ன? அது ஏன் அத்தனை பெரிய தீமை? ..................................................................
   ..........................................................................................................................................................
9. திருமணத்திற்கான தேவனுடைய நோக்கங்கள் என்ன?
   அ.
   ஆ.
   இ.
10. எபிரேயர் 13:4-ஐ எழுதுக

### 109. இந்தக் கற்பனையில் விபச்சாரம் போன்ற கீழ்த்தரமான பாவங்கள் தவிர மற்ற பல பாவங்களையும் தடை செய்கிறாரா?

நம்முடைய சரீரம் மற்றும் ஆத்துமா பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருப்பதால், இவ்விரண்டையும் மாசின்றி சுத்தமாகக் காப்பது அவருடைய சித்தமாகும்; ஆகவே எல்லா வகையான கற்பற்ற செயல்கள், தோரனைகள், வார்த்தைகள், சிந்தனைகள், ஆசைகள் மற்றும் இவைகளைச் சார்ந்த எதையும் தேவன் தடை செய்கிறார்.

***

தேவனுடைய எல்லாக் கற்பனைகளைப் போலவும், இந்த ஏழாவது கற்பனையும் முதலாவது இருதய சுத்தத்தை வேண்டுகிறது. மத்தேயு 5:28-ல், “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று”-என்று நமது ஆண்டவர் விளக்கியது போல விபச்சாரம் மற்றும் உடலுறவு பாவங்கள் முதலாவது இருதயத்தில் உருவாகிறது. இப்படியாக, திருமணம் முடித்தவர் அல்லது முடிக்காதவர், ஆணோ அல்லது பெண்ணோ ஆகிய எவராலும் செய்யப்படும் உடலுறவு மீறுதலின் பாவத்தை ஏழாவது கற்பனை தடைசெய்கிறது.

இந்த காரியத்தில் யாரும் அப்பாவி என்பதற்கே இடமில்லை என்பதை நாம் அறிய வேண்டும். செய்கைகளினால் இல்லை என்றாலும், மனதளவில் விருப்பம் கொண்டு, இந்தக் கற்பனையை நாம் உடைத்திருக்கிறோம். மேலும், பரிசுத்த ஆவியானவரின் பெலம் இல்லாத நிலையில், இருதயத்தை சுத்தமாக பாதுகாப்பது இயலாது என்பதை நினைவு படுத்தப்படுகிறோம், அதோடு நம்முடைய துன்மார்க்கமும் மகாப் பெரியது. சங்கீ 51:10 மற்றும் 119:9-ஆகிய இரு வசனங்களுமே நம்முடைய ஜெபமாக இருக்க வேண்டும்.

இன்பத்தைத் தரும் என்று நாம் நினைக்கும் உடலுறவு பாவங்கள், நமக்கும், தேவனுக்கும் மற்றும் நம்முடைய அயலகத்தாருக்கும் எதிரான பாவங்கள் ஆகும். 1கொரி 6:13-20-ன்படி, வேசித்தனம் ஒருவருடைய

சொந்த சரீரத்திற்கெதிரான பாவம் (வ 18) என்று போதிக்கிறது. நம்முடைய சரீரங்களும் நமக்கு அல்ல, நம்மை மீட்ட தேவனுக்குச் சொந்தமானவைகள் (வ 13,15). மேலும், நம்முடைய சரீரங்களில் குடியிருக்கும்படி பரிசுத்த ஆவியைக் கொடுத்துள்ளார் (வ 19), ஆகவே உடலுறவு பாவங்கள் பரிசுத்த ஆவியின் ஆலயத்தை பரிசுத்த குலைச்சலாக்குவதாகும். ஆவிக்குரிய நிலையில் நாம் கிறிஸ்துவுக்கு மணமுடிக்கப்பட்டவர்கள் (வ 17), ஆகவே விபச்சாரம் மற்றும் வேசித்தனம் செய்வது, நமது ஆவிக்குரிய மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவுடன் நமக்குள்ள ஆவிக்குரிய திருமணத்தை உடைப்பதாகும்!

உடலுறவுக்கான சோதனைகள் எல்லா திசைகளிலிருந்தும் நம்மீது எரியப்படும் இந்த துன்மார்க்க உலகில், இந்த பாவங்களுக்கான நமது தீய எண்ணங்களும் மிகவும் உறுதியாக இருக்கும்போது, நம்முடைய ஆத்துமா மற்றும் சரீரத்தை நாம் கற்புடன் பாதுகாப்பது எப்படி?

உடலுறவுறவுக்கேதுவான பாவ நினைவுகளை உருவாக்கும் மனிதர்கள் அல்ல எந்தவொரு காரியத்தையும் நாம் புறக்கணிக்க வேண்டும். அசுத்தமான வார்த்தைகள், கதைகள், படங்கள், புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகளை நாம் புறம்பே தள்ள வேண்டும். மாம்ச இச்சை நினைவுகளைத் தூண்டக்கூடிய ஆடைகளை நாம் அணியக் கூடாது. கபடற்ற நிலையில் கிறிஸ்தவர்கள் பார்க்க முடியாத அளவுக்கு இருக்கும் நாகரீகமற்ற படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க கூடாது. நடனம் மற்றும் சரீரங்கள் தொடும் நிலையில் உள்ள நிகழ்ச்சிகள் பலநேரங்களில் உடலுறவு பாவத்திற்குள் நடத்துகிறது. “சோதனைகளுக்கு உட்படப் பண்ணாதிரும்” என்று ஜெபிக்கும் கிறிஸ்தவர்கள் (அனைவரும்) வாலிபர்கள், சோதனைகளை புறக்கணிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்போது அவர்கள் தங்களின் கற்பை பாதுகாக்கும்படி தேவன் உதவி செய்வார், அப்போது திருமணத்தில் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ தங்களைச் சுத்தமாகக் கொடுக்க முடியும்.

உடலுறவுப் பாவங்களுக்கு மன்னிப்பு உண்டு, இருப்பினும் இதனால் ஏற்ப்பட்ட கற்புகுலைந்த தழும்பு ஒருபோதும் நீக்கப்படுவதில்லை!

**109-க்கான கேள்விகள்:**

1. மத்தேயு ...................ல் உள்ள, ..................................................வின் போதனைப்படி, இந்த ஏழாவது கற்பனை முதலாவது ....................................................... வேண்டுகிறது.
2. இந்தக் கற்பனை விபச்சாரத்தை மட்டுமல்ல, மற்ற எல்லா வகையான உடலுறவுப் பாவங்களையும் தடைசெய்கிறது. சரியா, தவறா?......................
3. ஒரு கிறிஸ்தவன் தீவிரமாக ஜெபிக்கிறவனாக இருப்பானென்றால், தனது இருதயத்தை உடலுறவுப் பாவங்களின்று முழுவதும் சுத்தமாகக் காக்க முடியும். சரியா, தவறா? ......................, விளக்கம்: ..............................................................................................................................................
4. யோபு தன்னுடைய இருதயத்தில் தீய விருப்பங்கள் வராதபடிக்கு என்ன செய்தார் (யோபு 31:1)? ..............................................................................................................................................
   இந்த நாட்களில் நாம் இதை எப்படி செய்வது? .......................................................................................
   ..............................................................................................................................................
5. உடலுறவு பாவங்கள் விரோதமானவைகள் ஏன்?
   அ.கிறிஸ்துவுக்கு: ..............................................................................................................................
   ஆ.பரிசுத்த ஆவியானவருக்கு: ..............................................................................................................
6. கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ திருமணம் ஆகாத ஒரு கிறிஸ்தவனும், ......................க்கு திருமணம் முடிக்கப்பட்டவர் ஆவர்.
7. இலகுவாகக் கற்பைக் குலைக்கும் சிந்தனைகளைத் தரும் சிலவற்றை குறிப்பிடுக: ............................
   ..............................................................................................................................................
   ..............................................................................................................................................
8. நடனமாடுவதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? ..........................................................................
   ..............................................................................................................................................
9. உங்களின் எதிர்கால கணவர் அல்லது மனைவி உடலுறவால் கறைப்படாதவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறீரா? ................, உங்களின் எதிர்கால துணை நீங்கள் சுத்தமானவராக இருக்க வேண்டும் என்று விரும்புவாரா? ................
10. எபேசியர் 5:3,4-ஐ எழுதுக:

**110. எட்டாவது கற்பனையில் தேவன் தடைசெய்வது என்ன?**

நீதிபதியால் தண்டனைக்குட்படுத்தப்படும் களவு மற்றும் கொள்ளையை தேவன் தடை செய்வது மட்டுமல்லாமல், எல்லாவிதமான துன்மர்க்கமான தந்திரங்கள் மற்றும் சூழ்ச்சிகள், நியாயமற்ற எடை, அளவு, பங்கீடு, பொருள், பணம், வட்டி அல்லது தேவனால் தடை செய்யப்பட்டுள்ள எதையும் பயன்படுத்தி, பிறரை ஏமாற்றியோ அல்லது கட்டாயப்படுத்தியோ அவர்களின் பொருட்களை அபகரிக்க நினைப்பதையும் தேவன் களவாகவேப் பார்க்கிறார்; அதோடு எல்லா வகையான பொருளாசை மற்றும் தேவனுடைய கொடைகளை தவறாகப் பயன்படுத்தி பாழாக்குவதும் உள்ளடங்கும்.

***

“களவு செய்யாதிருப்பாயாக”, என்ற எட்டாவது கற்பனை, நாம் பிறருடைய உடமைகளை மதிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறது. தனியொருவரின் உடைமையுரிமை ஒரு தெய்வீக உரிமை என்ற உண்மை இந்தக் கற்பனைக்குப் பின் இருக்கிறது. ஒருவருக்குச் சொந்தமான உடமையை மற்றொருவர் “ஏமாற்றியோ அல்லது கட்டாயப்படுத்தியோ” எடுக்க உரிமையில்லை.

எல்லா உடமைகளும் -- இந்த முழு உலகமும் -- முதலாவது படைப்பின் கர்த்தருக்குச் சொந்தம் ஆகும்: “பூமியும், அதின் நிறைவும் கர்த்தருடையது” (சங்கீ 24:1). தேவனாகிய கர்த்தர் தமது உடமையை மனிதர்களுக்கு கொடுக்கிறார், சட்டப்பூர்வமாக சொத்துக்களை உடைய ஒவ்வொருவரும், அவற்றை தேவனுக்காகப் பயன்படுத்த கடைமைப்பட்டுள்ளனர்.

தேவனுடைய ஆளுகையின் கீழ், தனிப்பட்ட சொத்தைப் பெற்றிருக்கும் உரிமை, “முதலாளித்துவம்” என்னும் பொருளாதார அமைப்பின் அஸ்திபாரம் ஆகும். மனிதனுடைய சமுதாய வாழ்வுக்கு சுதந்திரமும், தனிப்பட்ட உடமையும் அவசியம் என்று கர்த்தருடைய வார்த்தை கட்டளையிடுகிறது. ரிபார்ம்டு மற்றும் ப்யூரிட்டன் வம்சாவழியில் வந்த, திருவசன ஒழுக்க நெறி போதனைகளில் தேர்ச்சி பெற்ற மனிதர்களால் அமெரிக்க ஐக்கிய நாடு உருவாக்கப்பட்டது. இவர்களே அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியலமைப்பின் சட்டதிட்டங்கள் மற்றும் அடிப்படை கொள்கைகளான தனிநபர் உடமை சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், மற்றும் நேர்மையான பணம் (சரியான மதிப்புடனான பணம்) ஆகியவற்றை உருவாக்கினார்கள்.

தேவனற்ற மனிதர்கள் இந்த எட்டாவது கற்பனையை மீறும் வகையில், முதலாளித்துவத்திற்கு உட்டபட்ட தனிமனித உடமைகள் மற்றும் சுதந்திர அமைப்பை, “ஏழைகளுக்கு உதவுதல்” என்ற பெயரால் அபகரித்து, சுதந்திரமற்ற மற்றொரு சமுதாய அமைப்பை ஏற்படுத்தி, அரசே அடுத்தவர்களின் நிலம், சொத்து, தொழில் போன்றவற்றை அபகரிக்கும் முறையை உருவாக்கினர். இந்த தேவனற்ற அரசமைப்பே (Socialism or Communism or Welfare State) பொதுவுடைமைக் கொள்ளை அல்லது நாட்டு நலன் என்பதாகும். நாட்டின் அடிப்படை அசியலமைப்புக்கு எதிரானதும், எட்டாவது கற்பனையை மீறுகின்ற இந்த அரசியலமைப்பு நடைமுறைக்கு கொண்டுவர வரலாற்றில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான முடிவு, ஏற்கனவே பல நாடுகளில் காணப்பட்டது போல, திருச்சபை கொடுமைப் படுத்தப்படுவதும், தேவனற்ற கொடுங்கோல் அதிகாரிகளிடம் மக்கள் கொத்தடிமைகள் ஆக்கப்படுவதுமேயாகும்.

பணக்காரர்களிடமிருந்து திருடி, “ஏழைகளுக்கு உதவுதல்” என்பதை சித்தரிக்கும் ராபின் ஹுட் கதை இதற்கான மற்றுமொரு எடுத்துக்காட்டு ஆகும். ஆனால் கர்த்தருடைய கற்பனை மீறப்படும்போது, சாத்தானைத் தவிர வேறு எவரும் உதவப்படவில்லை.

பணம் சம்பாதிக்க, பொருட்களை வாங்க, உங்கள் சொத்துக்கள் மற்றும் உடைமைகளை உங்களுடையதாகவே வைத்துக்கொள்ள, அவற்றை உங்களுக்காகவும், மற்றவர்களுக்கு உதவுவதற்காகவும் தேவனே கொடுத்த உரிமையை நீங்கள் பெற்றுள்ளீர்கள். உங்களின் அயலகத்தாரும் அதே உரிமையை தேவனிடம் பெற்றுள்ளார். உங்களின் உரிமையைப் பாதுகாக்கவும், அதிகாரத்தைப் பயன்படுத்தி உடமையை பறிமுதல் செய்யாதிருக்கவும், வரம்புக்கு மீறிய வரி விதிக்காதிருப்பதும், அரசின் நிபந்தனைகளால் நீங்கள் நியாயமாக செய்ய வேண்டிய வேலைகளை தடை செய்வது போன்றவற்றில் அரசு பாதுகாப்பளித்து அதன் கடமையாகும். ஆகாப் இராஜா, நாபோத்தின் திராட்சை தோட்டத்தை அபகரித்து தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தான் (1இரா 21), ரெகொபெயாம் மக்கள் மீது வரம்புக்கு அதிகமாக வரிவிதித்து பாவம் செய்தான் (1இரா 12:3,4,14,16).

உங்களுடைய உடைமை மற்றும் செல்வத்தைப் பாதுகாப்பதற்கான உங்களுடைய உரிமையானது தேவனுக்குரிய உங்களின் கடமையால் கட்டுப்படுத்தப்படுகிறது. சொத்துக்களை சம்பாதிக்க தேவன் தரும் பெலன் நமக்காக மட்டுமல்ல, அது தேவனுக்காகவும் ஆகும். நம்முடைய சரீரமும் ஆத்துமாவும் நமக்குச் சொந்தமானதாக இல்லாமல், நமது உண்மையுள்ள இரட்சகருக்கு சொந்தமானதாக இருக்கும்போது, நம்முடைய உடமை மற்றும் பணத்தை நமக்கு மட்டும் சொந்தம் என்று சொல்லாதிருப்போமாக. நாம் எப்போதும் தேவனுடைய உடமைகளை கண்காணித்து பராமரிப்பவர்கள் ஆவோம். நம்முடைய அடுத்த கேள்வி இதற்கு விரிவான விளக்கத்தைத் தரும்.

எட்டாவது கற்பனை மீறப்படும் பலவழிகளை இந்த கேள்வி நமக்கு போதித்தது. உண்மையிலே, நாம் நினைப்பதைக் காட்டிலும் திருடர்கள் என்ற குற்றத்தை உடையவர்களாக இருக்கிறோம். மற்றவர்களுடையதை திருடும் ஆறுவகையான ஏமாற்று வழிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது: நியாயமற்ற எடை, அளவு, பங்கீடு, பொருள், பணம், வட்டி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. எடை, அளவு, பங்கீடு போன்றவை தொழில் சார்ந்த நேர்மைக்கு தொடர்புடையது. நியாயமற்ற பணம், அதாவது கள்ளநோட்டு மற்றும் கணக்கு காட்டப்படாத கருப்பு பணம் ஆகியவற்றை குறிக்கிறது. “வட்டி”, அளவுக்கு மீறிய வட்டிப் பணம் வசூலித்தல் மற்றும் தேவையில் உள்ள கிறிஸ்தவ சகோதரனிடம் வட்டி வாங்குதல் (லேவி 25:35,36). மற்றவர்களுடன் நாம் நேர்மையாகவும், நீதியாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்பது குறித்த பல கருத்துக்களை நீதிமொழிகள் புத்தகம் கூருகிறது. “கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம்” (நீதி 11:1;20:10). “வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம்; கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான்” (13:11;14:23). பொய்யான விளம்பரங்கள் (தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாளில் பலவருகிறது), திருடப்பட்டவைகளை வாங்குதல் (நீதி 29:24),

ஒருவரின் கடனைத் திரும்ப தராமலிருப்பது, கூலியைக் கொடுக்காமல் இருப்பது (லேவி 19:13; யாக் 5:4), லாட்டரி சீட்டு மற்றும் சூதாட்டம் போன்றவற்றால் பணம் சம்பாதிப்பது (நீதி 13:11; 16:8; 2தெச 3:10-12) ஆகியவைகள் வெவ்வேறுவகையான ஏமாற்று வழிகள் ஆகும்.

நமது பொருட்களை "தவறாகப் பயன்படுத்தி பாழாக்குவதும்", எப்படி எட்டாவது கற்பனையை மீறும் பாவமாகும்? காரணம், இது தேவனிடமிருந்தும், நம்மிடமிருந்தும் திருடுவதாகும். நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும், தேவனுடைய மகிமைக்காக பயன்படுத்தும்படி கொடுக்கப்பட்டவைகள் ஆகும். இந்த கொடைகளை வீணாக்குவது என்பது நம்மையும், தேவனையும் கொள்ளையிடுவதாகும். ஐயாயிரம் ஜனங்கள் பசியமர்த்தப்பட்ட பின்பு எஞ்சியுள்ள உணவை நமது ஆண்டவரும் பத்திரமாக சேர்த்து வைத்தாரே (யோவா 6:12)!

தேவனுக்குக் கீழ் சுதந்திரமாக உள்ள மக்களின் பொருளாதார செழிப்புக்கு இந்த எட்டாவது கற்பனை எத்தனை அவசியம் என்பதை நாம் அறிய முடியும்!

**110-க்கான கேள்விகள்:**

1. "உடைமை" மற்றும் "சுதந்திரம்" -குறித்து எட்டாவது கற்பனை போதிப்பது என்ன? ............................ ........................................................................................................................................................ ........................................................................................................................................................
2. "சொத்துக்களின் உரிமையைக் காட்டிலும் மனித உரிமையே மிகவும் முக்கியம்" என்ற போராட்ட வாசம் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? .............................................................................................. ........................................................................................................................................................
3. எல்லா சொத்துக்களும், உண்மையாகவே... அ)அரசுக்கு, ஆ)வேலையாட்களுக்கு, இ)தேவனுக்கு, ஈ)அதைப் பெற்றுக்கொள்ள வலிமையுடையவர்களுக்கு... சொந்தம். எது? ..........
4. ஆரம்ப சபையின் "பொதுநலக் கொள்கை"-யை எப்படி மதிப்பிடுவீர்கள்? .................................................. ........................................................................................................................................................
5. இந்தியாவில் உள்ள அனைவருமே, வேதாகம முதலாளித்துவத்தைக் கடைப்பிடிக்கின்றனர். சரியா, தவறா? ..................
6. பின்வருவதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| தனிப்பட்ட உடைமை | - | "ஏழைக்கு உதவு" |
| எல்லா சொத்தும் நாட்டுக்கு சொந்தம | - | முதலாளித்துவ நாடு |
| ராபின் ஹுட | - | பொதுநலக் கொள்கை |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | - | எல்லாவற்றுக்கும் சொந்தக்காரர் |
| நாபோத் | - | மனிதனுக்கான தேவ சித்தம் |
| சங்கீதம் | - | தனிப்பட்டவரின் தோட்டம் |

7. மற்றவரை ஏமாற்ற பணம் பயன்படுத்தப்படும் இரு வழிகள் யாவை? அ...................................................... ஆ .............................................
8. லாட்டரி சீட்டும் ஒருவகையான சூதாட்டம் ஏன்? .........................................................................................
9. தேவையிலுள்ள கிறிஸ்தவ சகோதரனுக்கு வட்டிக்கு கொடுப்பது சரியா? ................., விளக்கம்: ........................................................................................................................................................
10. 1கொரி 6:10-ஐ எழுதுக:

**111. இந்தக் கற்பனையில் உங்களை செய்யுமாறு தேவன் கட்டளையிடுவது என்ன?**

எனக்கு மற்றவர்கள் என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறேனோ, அதேபோல மற்றவர்களின் நன்மைகள் மேம்படவும், ஏழைகளுக்கு அவர்களின் தேவையில் உதவும்படியும், உண்மையாக பாடுபடுவேன் என்பதாகும்.

***

எட்டாவது கற்பைனை எதைச் செய்ய தடைசெய்கிறது என்பதை கேள்வி 110 சொல்கிறது; இந்தக் கேள்வி, இந்தக் கற்பனை எதைச் செய்ய வேண்டுமென்று, அல்லது இதன் ஆக்கப்பூர்வமான பகுதியை நமக்கு சொல்கிறது.

மற்றவர்களை ஏமாற்றாமலும், திருடாமலுமிருப்பதில் நாம் கவனமாக இருப்பதோடு; மற்றவர்களின் நன்மைக்காக, பொருளாதாரத்தில் அவருக்கு உதவ நமக்கு பெலன் இருக்கும்போது, அவர்களுக்கு மனமுவந்து உதவக் கருத்துள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும். இந்த பதில் இயேசு மத்தேயு 7:12-ல் கூறியபடி, "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறார்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்ற "பொன்னான விதி" தெளிவாகக் குறிக்கிறது. அதற்காக நம்முடைய எல்லாப் பணத்தையும், நம்மைச் சுற்றிலும் உள்ள அநேகர், நம்முடையதை தங்களுக்கு தரவேண்டும் என்று விரும்பினாலும், உடனே அவர்களுக்கு கொடுத்துவிட வேண்டும் என்பதல்ல. மாறாக, மற்றவர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ளும் எல்லாவற்றிலும் நியாயம் மற்றும் நேர்மையைக் கையாள வேண்டும், அதை

மற்றவர்களிடமும் நாம் எதிர்பார்க்க வேண்டும். உண்மையான தேவை என்ற ஒன்று வரும்போது, பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஏழைகளுக்கும் நம்முடைய பணம் மற்றும் பொருளை சந்தோஷத்துடன் கொடுத்து உதவ வேண்டும்.

தர்மம் செய்வதை சரியாக்குவதும், சாத்தியமாக்குவதுமான இரு முக்கியமான காரியங்கள்:

1. முதலாவது நாம் நம்முடைய சொந்த உடமைகளை பெற்றிருக்க வேண்டும். திராணியுள்ள ஒவ்வொரு மனிதனும் வேலை செய்ய வேண்டும், இல்லையெனில் சாப்பிடக் கூடாது என்று வேதம் கட்டளையிடுகிறது (2தெச 3:10). திராணியுள்ள சரீரத்தை உடைய ஒவ்வொருவரும் கட்டாயம் வேலை செய்ய வேண்டும்; சோம்பேறியான ஜனங்களுக்கு அரசு பொதுப்பணத்தை எடுத்து மாணியமாக கொடுத்து, அவர்களை வேலை செய்யாமல் செய்யும் அரசின் செயல்பாடு துன்மார்க்கமானது ஆகும். ஒவ்வொரு வாலிபரும் வாழ்வுக்காக ஏதாகிலும் ஒரு வேலைக்கு தன்னை ஆயத்தம் செய்வது தேவனுக்கு முன்பாக அவருக்கு உள்ள கடமை ஆகும். நாம் வாழவும், தேவனுடைய இராஜ்ஜியத்தின் பொருளாதார தேவையைச் சந்திக்கவும் நாம் நம்மை ஆயத்தம் செய்யும்படி நாம் தேவனுக்கு கடன்பட்டுள்ளோம்.

2. நாம் சம்பாதிக்கும் பணம், நம்முடைய எல்லா உடமைகளும் -- நம்முடைய ஜீவனும் -- தேவனுக்குச் சொந்தமேயன்றி, நம்முடையது அல்ல. நாம் அவருடைய அருட்கொடைகளின் மீது கண்காணிகளாக, நம்முடைய பணத்தை சிறப்பாக கையாண்டு, தேவன் பயன்படுத்துவது போல நாம் பயன்படுத்த வேண்டும். நம்முடைய திறமை, நமக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகள், நமது உடமைகள் மற்றும் பணமான தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பயன்படுத்துவதில் நாம் தேவனுக்கு முன் கடமைப்பட்டவர்கள் என்பதையே தாலந்து குறித்த உவமை மற்றும் பல திருவசனங்கள் நமக்குப் போதிக்கிறது. பணக்காரனாக இருப்பது பாவமல்ல, ஆனால் கஞ்சத்தனமான ஏழையாக இருப்பது எப்படி பாவமோ, அதேபோல கஞ்சத்தனமான பணக்காரனாக இருப்பது பாவம். பேராசையுடன் இருப்பதும், தேவனுடைய அருட்கொடைகளை ஆடம்பரமாக (தவறான காரியங்களுக்காக பணத்தை) செலவு செய்வதும் பாவமாகும்.

ஏழைக்கு இரங்குதல் மற்றும் சபையில் காணிக்கை செலுத்துதலின் மூலம் நம்முடைய வருமானத்தில் எந்த பங்கை நேரிடையாக தேவனுக்குச் செலுத்துவது? கொடுத்தல் என்பதில், பழைய ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட வேதாகம கொள்கை தசமபாகம், அதாவது ஒருவரின் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு ஆகும். கொடுக்கும் இந்த கொள்கைளை புதிய ஏற்பாடு புறக்கணிக்கவில்லை. (மத் 23:23-ஐப் பார்க்கவும்). தங்களுடைய தசமபாகத்தை தாங்களே வைத்துக் கொள்ளாதவர்களுக்கு மேலான ஆசீர்வாதங்களைத் தேவன் வாக்குப் பண்ணியுள்ளார் (மல்கி 3:10). அதே நேரத்தில், தசமபாகத்தை முறைப்படி கொடுக்காதவர்கள் தேவனையே வஞ்சிக்கிறவர்கள் என்று அழைக்கப் படுகின்றனர் (மல் 3:8), அவர்கள் அவருடைய சாபத்தை எதிர்பார்க்கலாம்! தேவன் நம்மை ஆசீர்வதிக்க, நம்முடைய வருமானத்தில் ஒரு பகுதியைத் தேவனுக்காக கொடுக்க வேண்டும் என்று 1கொரி 16:2 குறிப்பிடவில்லையா? தேவனுக்கு சேவை செய்யும்படியான புதிய ஏற்பாட்டின் கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் செய்யப்பட்டவைகளை விட குறைவானதா அல்லது மேலானதா?

“உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்” (2கொரி 9:7)!

**111-க்கான கேள்விகள்:**

1. எட்டாவது கற்பனை சார்பாக, கேள்வி 111 சொல்வது என்ன? “எனக்கு .................................................. ................................................................................, அதேபோல மற்றவர்களின் நன்மைகள் மேம்படவும், ................................................................................................., உண்மையாக பாடுபடுவேன் என்பதாகும்.
2. நம்முடைய சொந்த தொழிலைப் பார்த்துக் கொண்டு, மற்றவர்களை ஏமாற்றாதிருப்பதே, இந்த எட்டாவது கற்பனையைக் கடைப்பிடிக்க போதுமானது? சரியா, தவறா? ..............
3. கேள்வி 111-ல் எந்த வசனம் குறிப்பிடப்பட்டுள்ளது? ...................
4. நாம் “பொன்னான விதி”-யைக் கடைப்பிடிப்பது என்றால், நம்முடையது எல்லாவற்றையும், யார் கேட்டாலும் அப்படியே கொடுத்துவிடுவதாகும். சரியா, தவறா? ................................................................ விளக்கம்: ..........................................................................................................................................
5. இரங்கி உதவுதல் மற்றும் பொருளாதார உதவியைப் பெற தகுதியானவர் என்று யாரைக் கூறுவீர்கள்? ..........................................................................................................................
6. 1கொரி 6:10-ன்படி, செல்வந்தனாக இருக்கும் ஒருவன் கிறிஸ்தவனல்ல. சரியா, தவறா? ..................., விளக்கம்: ..................................................................................................................................
7. வேலை செய்வதைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது? ........................................................................ ..........................................................................................................................................
8. தேவனுடைய கண்காணிகள் என்பதின் அர்த்தம் என்ன? ........................................................................ ..........................................................................................................................................
9. தசமபாகம் என்பது, .................................................. ஆகும். மல்கியா 3:8-ன்படி, தசமபாகத்தை முறைப்படி கொடுக்காதவர்கள் ............................................................... என்று அழைக்கப்படுகின்றனர் (மல் 3:8). தசமபாகம் கொடுப்பவர்களுக்கு தேவன் ....................................... வாக்கு செய்துள்ளார்.
10. எபேசியர் 4:28-ஐ எழுதவும்:

**112. ஒன்பதாவது கற்பனை செய்யும்படி கட்டளையிடுவது என்ன?**

எவருக்கும் எதிராக பொய்சாட்சி சொல்லாமல், எவருடைய வார்த்தையையும் மாற்றிக் கூறாமல், புறம்கூறாமல் அல்லது அவதூறாகப் பேசாமல், காரியத்தை ஆராயாமல் பிறரை கண்டனம் செய்பவரோடு சேராமல்; தேவனுடைய கடுமையான கோபத்தினிமித்தம், எல்லாவகைப் பொய் மற்றும் ஏமாற்றுக்களை சாத்தானின் கிரியைகளென நான் புறக்கணிப்பேன்; நீதி மற்றும் தீர்ப்பு காரியங்களிலும், நான் நேசிக்கும் எல்லா காரியங்களிலும், நேர்மையாகப் பேசி உண்மையை அறிக்கை செய்வேன்; என்னால் முடிந்த அளவுக்கு எனக்கடுத்தவர்களின் பெயரின் நற்பெயரை பாதுகாத்து மேன்மைப் படுத்துவேன்.

***

மற்றவர்களின் நன்மதிப்பு மற்றும் உண்மையை நாம் மதிக்க வேண்டும் என்று ஒன்பதாம் கற்பனை வேண்டுகிறது. ஒருவருடைய மானம் மற்றும் மரியாதை அவர்களின் மேன்மையான உரிமையாகும்; அப்படியிருக்க அவருக்கு விரோதமாக பொய்யானவற்றைப் பேசுவது, மேலும் அவருடைய நற்பெயர் பாதிக்கப்படும் வகையில் உண்மைக்குப் புறம்பாக பேசுவது மகாப் பெரிய பாவமாகும்.

ஒன்பதாவது கற்பனையை விளக்க இந்த ஒரே கேள்வி மட்டும் ஒதுக்கப் பட்டிருந்தாலும், இக்கற்பனையின் ஆக்கப்பூர்வமான மற்றும் எதிர்மறையான பகுதிகள் இந்தக் கேள்வியில் விளக்கப் பட்டுள்ளது.

எல்லா உண்மைக்கும் ஊற்றும் காரணருமாக தேவன் இருக்கிறார் என்ற உண்மையினிமித்தம் உண்மையை மட்டுமே நாம் பேச வேண்டும் என்பதை இந்தக் கற்பனை முக்கியப்படுத்திக் காண்பிக்கிறது. உபாகமம் 6:4-ல், “இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” என்று வாசிக்கிறோம். “நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்” (யோவா 14:6) என்று இயேசு சொன்னார், மேலும் 1யோவான் 5:6: “ஆவியானவர் சத்தியமாக இருக்கிறார்” என்கிறது, அதோடு 1யோவான் 5:20-ம், “நாம்... அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.” என்று கூறுகிறது.

ஒருவர் சத்தியத்தை அறிந்து, சத்தியத்தை பேசவேண்டுமானால், அவர் கர்த்தரை அறிந்தவராகவும், கிறிஸ்தவனாகவும் இருக்க வேண்டும்! எல்லா அவிசுவாசிகளும் சத்தியமான கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களாக இருந்து சத்தியத்திற்கு, எல்லா சத்தியத்திற்கும் எதிரானவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, ஜென்ம சுபாவமான மனிதனைக் குறித்து பவுல் கூறும் போது, “அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள்; அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது” (ரோமர் 3:13) என்றும், வசனம் 4-ல், “தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்று சொல்வோமாக” என்றார். சங்கீதம் 58:3-ஐயும் பார்க்கவும். அவிசுவாசிகள் பலவற்றைப் படித்தவர்களாகவும், கல்விமான்களாக இருப்பினும், அவர்களின் எல்லா அறிவும், “பொய்க்குப் பிதாவான” சாத்தானுக்கு ஊழியம் செய்யும்படி பயன்படுத்தப்படுகிறது. முதன் முதல் பொய்யனும், மோசமான பொய்யனும் சாத்தான் ஆவான், ஆகவே அவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகள் அனைவரும் அவனுடைய செயல்களையே பின்பற்றுகிறார்கள். இயற்கையாக எல்லா மனிதர்களும், உண்மையை விரும்பாதவர்களாகவும், கிறிஸ்துவின் நாமத்தினால் உண்மையைப் பேசாதவர்களாகவும் இருந்து இந்த ஒன்பதாவது கற்பைனையை உடைக்கிறவர்களாக இருக்கின்றனர்.

மற்றவர்களைப் பற்றிய காரியத்தில் இந்த கற்பனை எந்தெந்த வழிகளில் உடைக்கப்படுகிறது என்பதை இப்போது நாம் பார்ப்போம்.

1.“*பொய் சாட்சி கூறுதல்.*” இது பொய் சொல்வதையும், பொய்யான கதை கூறுவதையும், உண்மையை திரித்துக் கூறுவதால் தவறான அபிப்பிராயம் உண்டாவதையும் குறக்கிறது. முக்கியமாக, நீதிமன்றத்தில் உண்மை சொல்வதாக வாக்குறுதி எடுத்தும் பொய் சொல்வது என்பது துணிகரமான பாவமாகும். இந்த வகைப்பொய் சத்தியத்தை மீறுதல் என்பதாகும்.

2.“*மற்றவர்களின் வார்த்தைகளைப் பொருள் மாற்றிக் கூறுதல*” இது மற்றொருவருடைய வார்த்தைகளை திரித்தோ அல்லது பொருள் மாற்றிக் கூறுவதால் தவறான அர்த்தத்தை உண்டாக்குவதைக் குறிக்கிறது. இது பலநேரங்களில் முழுமையான செய்தி அல்லது உண்மையை வெளிப்படுத்தாமல், அறைகுறையானவற்றை அதிகாரப்பூர்வமாக கூறும் பத்திரிக்கையாளர்களால் சரியான உண்மை பொய்யாக்கப்படுகிறது. இது சம்மந்தப்பட்ட அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது.

3.“*புறம்கூறுதல் மற்றும் அவதூறாகப் பேசுதல்*”. (உண்மையான செய்திகளைக் கூறியும்) ஒருவரின் முதுகுக்குப்பின்னால், பாதிப்பை உண்டாக்கும் நிலையில் தீமையானவற்றைப் பேசி, காயப்படுத்துவதைக் குறிக்கிறது. அவதூறு பேசுதல் என்றால், ஒரு காரியம் உண்மை இல்லை என்பதை நாம் அறிந்தும் மற்றவரைக்குறித்து தவறாகப் பேசுதல் ஆகும்.

4.“*ஒருவரைக் கண்டனம் செய்வதில் முன்பின் ஆராயாமல் சேர்ந்து கொள்வது.*” இது நாம் மற்றவர்களின் சொற்பொழிவைக் கேட்பதை குறிக்கிறது. பொய் சொல்வதால் மட்டுமல்ல, போதுமான ஆதாரங்கள் இன்றி ஒரு பொய்யை நம்புவதாலும் இந்த கற்பனை மீறப்படுகிறது. மற்றவர்களைக் குறித்து வதந்தி மற்றும் ஆதாரமற்றவைகளைப் பேசுவதைக் குறித்து நாம் எச்சரிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கேள்விக்குரியானவற்றை நம்மிடம் ஒருவர் பேசும்போதும், அவர் புறங்கூறுதல் என்ற தவறை செய்கிறார் என்று எச்சரிக்க வேண்டும். ஒருவரின் தீய காரியங்களை நாம் அறிய வரும்போது, முதலாவது அந்த

நபரிடம் நேரிடையாக விசாரித்து, அவரின் மனமாற்றத்திற்காக முயற்சி செய்யாத நிலையில், அதைக் குறித்து பிறரிடம் பேசக்கூடாது. அவர் மனம் திரும்பிய பின்னர், அத்தீங்கை நாம் மறக்க வேண்டுமேயன்றி, மீண்டும் பேசக்கூடாது. சிலர் தவறானவற்றை அனைவரும் அறியும் வண்ணம் எழுதவும், பேசவும் செய்கின்றனர். இவர்களின் செயல் அனைவரும் அறியும் நிலையில் செய்யப்பட்டதால், அனைவரும் அறியும் நிலையில் இவர்கள் சரிசெய்யப்படவும் வேண்டும்.

ஜனங்கள் பொய்கள் பேசக் காரணம் என்ன? இதற்கு பல காரணங்கள் உண்டு, உதாரணமாக, விளையாட்டுக்காக, பிறரை மகிழச் செய்ய, ஒருவருடைய குற்றத்தை மறைத்து இக்கட்டான நிலையை அகற்ற (ஒருவனாலும் தேவன் ஏமாற்றப்படுவதில்லை), அல்லது மற்றவரைக் குறித்த வெறுப்பு அல்லது பொறாமை, அல்லது நியாயமற்ற வியாபாரத்தில் ஒன்றை சம்பாதிப்பதற்காக போன்றவைகள் ஆகும். எந்த காரணமாக இருந்தாலும், தேவனுக்கு முன்பாக பொய் சாட்சி சொல்வதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை. “சிறிய வெள்ளைப் பொய்” அல்லது “பாதி உண்மை” அல்லது “தீங்கற்ற பொய்” போன்றவைகளும் சத்தியத்தின் தேவனால் தடைசெய்யப்பட்டுள்ளது. வேண்டுமென்றே திட்டமிட்டு தரப்படும் தவறான கருத்து அல்லது எண்ணம் முழு பொய்யாகும்!

சத்தியத்தின் தேவன் நமது இரட்சகரும், நியாயாதிபதியுமாக இருப்பதால், நம்முடைய எல்லா வார்த்தை மற்றும் செயல்களினால் உண்மையை நாம் நேசித்து, மற்றவரின் நற்பெயரை நேசித்து, எல்லாவகையான பொய் மற்றும் ஏமாற்றுக்களை நாம் வெறுக்க வேண்டும். பொய்களை நேசிக்கிறவன் முடிவில் அக்கினி கடலில் இறங்க வேண்டும் (வெளி 22:15), காரணம் இது சாத்தானின் வேலையாகும்!

**112-க்கான கேள்விகள்:**

1. மற்றவர்களைக் குறித்த காரியத்தில், ஒன்பதாவது கற்பனை நாம் என்ன செய்ய வேண்டும் என்கிறது?
   ..............................................................................................................................................
   ..............................................................................................................................................
2. நாம் உண்மையை மட்டுமே பேச வேண்டும் என்பதற்கான காரணம் என்ன? ..........................................
   .............................................................................................. வசன ஆதாரம்: .......................................................
3. கிறிஸ்தவர்கள் மற்றும் அவிசுவாசிகளும் தங்கள் இருதயத்தில் சத்தியத்திற்கு ஒருமாதிரியான மதிப்பையே வைத்திருக்கின்றனர். சரியா, தவறா? ......................, விளக்குக: ......................................................
   ..............................................................................................................................................
4. மகாத்மா காந்தி பொய் சொன்னதே இல்லை என்பது ஒரு பொய்? ................., விளக்குக: .................
   ..............................................................................................................................................
5. “பொய் சாட்சி கூறுதல்” மிகவும் துன்மார்க்கமானது, முக்கியமாக எந்த சூழ்நிலையில்?
   ..............................................................................................................................................
6. “வதந்தி பேசுதல்” என்றால் என்ன? .................................................................................................
   “அவதூறு பேசுதல்”? ...........................................................................................................
   “புறங்கூறுதல்”? ..................................................................................................................
7. “தீங்கற்ற பொய்” என்ற உச்சரிப்பின் அர்த்தம் என்ன? ...........................................................
   ..............................................................................................................................................
8. ஒரு ஜீவனைப் பாதுகாக்கவும், தேவனுக்கு ஊழியம் செய்யவும் சில முக்கியமான சூழ்நிலைகளில் பொய் சொல்வது தவறு அல்ல. சரியா, தவறா? ......................, (ஆதி 20:2,9-12; 27:19; யாத் 1:17-20; யோசு 2:4-6 பார்க்க: விளக்கம் தருக: ..........................................................................................
   ..............................................................................................................................................
9. மற்றவரைக் குறித்த தவறான வதந்தியை உங்களிடம் சொல்லும் உங்களின் உயிர் தோழனிடம் நீங்கள் கூறுவது என்ன? ..........................................................................................................
10. எபேசியர் 4:25-ஐ எழுதுக:

**113. பத்தாவது கற்பனை எதைச் செய்யும்படி சொல்கிறது?**

தேவனுடைய கற்பனைகளுக்கு எதிரான எந்தவொரு விருப்பமும், எண்ணமும் ஒருபோதும் நம்முடைய இருதயத்தில் வராமல், நம்முடைய முழு இருதயத்தோடும் பாவத்தை தொடர்ந்து வெறுத்து, எல்லா நீதியிலும் சந்தோஷம் கொள்வோமாக.

***

பத்தாவது கற்பனைக்கு கேட்டகிசம் தரும் பதில் நான் எதிர்பார்த்தது போல் இல்லையே என்பது போன்ற உணர்வு ஏதாகிலும் வருகிறதா? இந்தக் கற்பனையில் கூறப்பட்டுள்ள எதையுமே கேட்டகிசத்தின் பதில் குறிப்பிடவில்லை என்பதைக் கவனிக்க முடிகிறதா? கற்பனையில் வரும், “பிறனுடைய வீட்டை, மனைவி, வேலைக்காரன், எருது” போன்ற எதுவுமே குறிப்பிடப் படவில்லை. மாறாக, நியாயப்பிரமாணத்தின் எல்லாக் கற்பனைகளைப் பொறுத்து நம்முடைய இருதயத்தின் மனப்பான்மை என்ன என்பதை கூறுகிறது.

“நீ இச்சியாதிருப்பாயாக” என்ற கற்பனை நேரிடையாக நம்முடைய இருதயம் மற்றும் விருப்பங்களுடன்

பேசுகிறது. தேவனுக்கான நமது எல்லா கீழ்ப்படிதலும் இருதயத்திலிருந்து புறப்படுகிறது. முதல் ஒன்பது கற்பனைகளை வாசிக்கும் ஒருவர், இந்தக் கற்பனைகள் யாவும் வெளிப்படையான கீழ்ப்படிதல் அல்லது புறம்பான செயல்பாடுகளைக் குறிக்கிறது என்னும் அபிப்பிராயத்தைப் பெறக்கூடும். ஆனால் அப்படியல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் கண்டு பிடித்தது போல (ரோம 7:7), எல்லாக் கற்பனைக்குமான ஆவிக்குரிய மற்றும் இருதயப்பூர்வமான நமது கீழ்ப்படிதலையே பத்தாவது கற்பனை குறிப்பிடுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனது மலைப்பிரசங்கத்தில் இந்த சத்தியத்தை முக்கியப்படுத்தி கூறியுள்ளார் (மத் 5:20-48), ஆக இந்த கற்பனைகள் நமது தேவன் மற்றும் பிறருக்கான நமது இருதயச் சுத்தம் மற்றும் இருதயப்பூர்வமான அன்பை வேண்டுகிறது. ஜென்ம சுபாவமான மனிதன் அல்லது புதுப்பிக்கப்படாத மனிதன் -- இயேசுவின் காலத்தில் இருந்த பரிசேயர்கள் தங்களின் வெளிப்படையான கீழ்ப்படிதலைக் குறித்து பெருமையாக இருந்தார்கள், ஆனால் இயேசுவின் உள்ளான இருதயம் குறித்த போதனையை வெறுத்தார்கள். ஜென்ம சுபாவமுள்ள மனிதனோ, மற்ற கற்பனைகளை வெளிப்படையாகக் கடைப்பிடிக்க கவனமாக இருந்தாலும், பத்தாவது கற்பனை மற்றும் இருதயத்தின் இச்சை ஆகியவற்றை அலட்சியம் செய்ய விரும்புகிறான்.

இப்படியாக பத்தாவது கற்பனை இருதயத்தின் இச்சையை கண்டித்து, மற்றவர்களுக்கு விரோதமாக அவர்களின் நற்பெயர், வீடு, மற்றும் அவருடைய உடைமைகள் ஆகியவற்றுக்கு எதிரான பல புறம்பான பாவங்களை எச்சரிக்கிறது. “மனுஷன் முகத்தைப் பார்க்கிறான்: கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்” (1சாமு 16:7). ரோமர் 7:14-ல், “மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்.” என்கிறது. பாவம், முதலாவது இருதயத்தின் விருப்பங்களில் உருவாகி, இரண்டாவது, புறம்பான கிரியைகளில் வெளிப்படுகிறது.

பத்தாவது கற்பனை நாம் தேவனுக்கு ஆவிக்குரிய கீழ்ப்படிதலினாலான வாழ்க்கை வாழ வேண்டும் என்றும், நமது வாழ்வில் தேவனுடைய கிரியைகளைக் குறித்த மனநிறைவுடனும் வாழ கட்டளையிடுகிறது. நாம் எதை பெற்றிருக்கும்படி தேவன் விரும்புகிறாரோ, அதை நமக்கு தருகிறார்; தேவனுக்குக் கீழ்ப்படிந்த நிலையில் நியாயமாக நாம் பெற்றுக் கொள்வது எதுவோ, அவைகளை மட்டுமே நாம் விரும்ப வேண்டும். நமது வாழ்வுக்கான தேவனுடைய சித்தத்திற்கு எதிரான எதையும் நாம் விரும்பக் கூடாது; மாறாக, நமது முழு இருதயத்தோடும் பாவத்தை வெறுத்து, எல்லா நீதியிலும் பிரியப்பட வேண்டும்.

இந்தக் கற்பனை எந்த சூழ்நிலையிலும் ஆசை கொள்வதை தடை செய்கிறதா? ஆசை என்கிற வார்த்தை விருப்பம் என்ற அர்த்தத்தைக் கொடுக்கும்போது இல்லை. நாம் தொடர்ந்து பொருட்களை விரும்புகிறவர்களாக இருக்க வேண்டும். ஆனால் மற்றவர்களின் பொருள் மீது கொள்ளும் நமது ஆசை நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அவர் நமக்கு என்ன விலைக்கு விற்க விரும்புகிறாரோ, அதே விலைக்கு வாங்க நமக்கும் விருப்பம் இருக்க வேண்டும். அவருடைய மனைவியை விரும்புவது என்பது ஏழாவது கற்பனையை மீறுவதாக இருப்பதால் எல்லா சூழ்நிலையிலும் அது பாவமாகும். ஆக இந்தக் கற்பனையில் உள்ள “இச்சை” என்ற வார்த்தை தேவனுக்கு கீழ்ப்படியாத நிலையிலான தீய மற்றும் சட்டத்துக்குப் புறம்பான ஆசை ஆகும்.

நாம் ஏன் இந்தக் கற்பனையை கடைப்பிடித்து, தேவனுக்கு முன்பாக, எவற்றின் மீதும் இச்சை கொள்ளாமல், போதுமென்ற மனதுடனான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் என்பது குறித்து சுருக்கமாக பார்க்கலாம்.

1. தேவன் எதைத் நமக்குத் தருகிறாரோ அவற்றில் திருப்தி காண வேண்டும், ஏனெனில் அவர் சுதந்திரமாகவும் மேலான அதிகாரத்தையும் உடையவர், நமது நன்மைக்காக நாம் எதைப் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அதை நமக்குத் தருகிறார். அவர் ஒருவர் மட்டுமே நமது வாழ்வின் மேலான எ_மானன் ஆவார்.

2. தேவன் தமது நன்மைகளை நமக்குத் தருவதில் சகல ஞானமும், அளவற்ற சிறப்பும் உடையவர். கிறிஸ்துவில் நமக்குண்டான அவருடைய அன்பு பூரணமானது. நம்முடைய ஆவிக்குரிய நன்மை மற்றும் அவருக்கு மகிமை சேர்க்கும் எதையும் நமக்கு அவர் தராமல் இல்லை. தேவன் நமக்குரிய வஷயத்தில் நேர்மையற்றவர் என்று நினைப்பது தவறானதும், அவிசுவாசமும் ஆகும். நாம் எதையுமே பெறத் தகுதியற்றவர்கள், நாம் பெற்றிருக்கும் எல்லாம் தேவனுடைய விலையேறப்பெற்ற கிருபையால் பெற்றவைகளே.

3. தேவனுடைய ஈவுகளில் மனநிறைவுடன் இருப்பது நம்மை சமாதானம் மற்றும் சந்தோஷத்தோடு நன்றியுடன் துதி செலுத்தும் வாழ்வு வாழும்படி செய்கிறது. மனநிறைவடையாதவனோ மகிழ்ச்சியற்றவனாக, தான் விரும்புவதை அடைவதற்காக கர்த்தருடைய கற்பனைகளை மீறும்படி தூண்டப்படுகிறான். தேவனையும், அவருடைய இரட்சிப்பையும் பெற்ற நாம் எல்லாம் உடையவர்களாகவும், குறைவற்றவர்களாகவும் இருக்கிறோம்.

“போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் . . . உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.” (1தீமோ 6:6,8) என்றும், “நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே” (எபி 13:5) என்றும் வேதம் சொல்கிறது.

பேராசையா அல்லது போதுமென்ற மனதா எது உங்கள் இருதயத்தை தூண்டுகிறது?

**113-க்கான கேள்விகள்:**

1. பத்தாவது கற்பனையில் உள்ள கருத்துக்களை கவனாமக இந்த கேட்டகிசம் விளக்குகிறது? சரியா, தவறா? .....................
2. இந்த பத்தாவது கற்பனை ... அ)மற்ற கற்பனைகளோடு தொடர்பற்றது, ஆ)இரண்டாவது கற்பனை அட்டவணையைக் காட்டிலும் முதலாவது கற்பனை அட்டவணையோடு ஒத்து போகிறது, இ)முழு பத்து கற்பனைகளைக் குறித்தும் நமது இருதயத்தின் சார்புநிலையைக் குறிக்கிறது? எது?..........
3. பத்தாவது கற்பனை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும்... அ)புறம்பான, ஆ)உள்ளும், புறமுமான, இ) உள்ளான ... கீழ்ப்படிதலைக் குறிக்கிறது. எது?..........
4. தேவனுடைய நியாயப்பிரமாணங்கள் நமது இருதயப்பூர்வமான அன்பு மற்றும் கீழ்ப்படிதலை வேண்டுகிறது என்பதை வலியுறுத்திய இரு வேதாகம பிரசங்கியார் யார்? ..........................................
5. ஜென்ம சுபாவமான மனிதனோ கற்பனைகளுக்கு புறம்பாக கீழ்ப்படிய வேண்டியதின் அவசியத்தையும் உணராதிருக்கிறான். சரியா, தவறா? ...................
6. மற்றவரின் உடைமைகள் மீது ஆசை/விருப்பம் கொள்வது எப்போதுமே பாவம். சரியா, தவறா? ...................., விளக்கம்: ..........................................................................................................................................
7. மனிதன் தனது இருதயத்தின் சிறிய யோசனைகளையும் கட்டுப்படுத்த கடமைப் பட்டுள்ளானா? ........................., அவன் அதை செய்ய முடியுமா? ......................, விளக்கம்: ................................................ ..........................................................................................................................................................
8. பத்தாவது கற்பனைக்கு ஜனங்கள் கீழ்ப்படிய வேண்டியதை சமூகம் அரசாங்கம் கட்டாயப்படுத்த வேண்டும். சரியா, தவறா? ....................., விளக்கம்: ..............................................................................
9. பணஆசை தவறு என்பதற்கும், போதுமென்ற தெய்வீக மனதே சரி என்பதற்கான மூன்று காரணங்கள் யாவை: அ. ..........................................................................................., ஆ.............................................................., இ.......................................................................................................
10. பிலிப்பியர் 4:11-ஐ எழுதுக:

**114. மனமாற்றமடைந்து தேவனிடம் வந்தவர்களால் இந்தக் கற்பனைகளைப் பூரணமாகக் கடைப்பிடிக்க முடியுமா?**

முடியாது, இந்த உலக வாழ்வில், மகாப் பெரிய பரிசுத்தவான்களும், இந்தக் கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதில் சிறிய ஆரம்பத்தையே உடையவர்களாக இருக்கின்றனர்; இருப்பினும் அவர்கள் மனப்பூர்வமான விருப்பத்துடன், சில கற்பனைகளின்படி மட்டும் அல்ல, எல்லா தேவனுடைய கற்பனைகளின் படியும் வாழும்படி முயற்சி செய்கின்றார்கள்.

***

தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்து முடிவான இரண்டு கருத்துக்களை இந்த 114 மற்றும் 115 ஆகிய கேள்விகளில் நாம் காணலாம். நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியும் கிறிஸ்தவ கீழ்ப்படிதலின் தன்மையைக் குறித்து கேள்வி 114 விளக்குகிறது.

மறுபிறப்பை அடையாத ஜென்ம சுபாவமான மனிதன் தேவனுடைய பரிசுத்த சித்தத்திற்கு சிறிதளவும் கீழ்ப்படிய முடியாது. இரட்சிக்கப்படாத மனிதனுடைய சிந்தை, "தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது" என்று ரோமர் 8:7 சொல்கிறது. ஆனால் மனமாற்றமடைந்து தேவனிடம் வந்தவர்களால் இந்தக் கற்பனைகளைப் பூரணமாகக் கடைப்பிடிக்க முடியுமா, என்பதே கேள்வி.

தேவனுக்குப் பூரணமாக கீழ்ப்படிவதற்கு அவசியமானது தேவனுக்கான இருதயப்பூர்வமான அன்பு மற்றும் பாவத்தை இருதயப்பூர்வமாக வெறுக்கும் விருப்பமும் ஆகும் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம் (4,5,113 கேள்விகளைப் பார்க்கவும்). மறுபடியும் புதுப்பிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்தவான் பழைய சாயலான பாவம் என்னும் "பழைய மனிதனை"-ப் பெற்றிருப்பதால், தேவனுக்கு பரிபூரணமாக கீழ்ப்படிய முடியாது. சொல்லப்போனால், கேள்வி 60 விளக்குவதுபோல: நாம் இப்போதும் எல்லாவகையான தீமைகளை செய்வதற்கேதுவானவர்களாகவே இருக்கிறோம்.

ஆகவே, "இந்த உலக வாழ்வில், மகாப் பெரிய பரிசுத்தவான்களும், இந்தக் கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதில் சிறிய ஆரம்பத்தையே உடையவர்களாக இருக்கின்றனர்." அப்போஸ்தலர்கள் போன்று அதிகமாக பரிசுத்தமாக்கப்பட்ட கிறிஸ்தவர்களும், பூரணமற்ற நிலையில், பாவத்தை உடையவர்களாகவே இருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, நோவாவின் குடிமயக்கம், யோபு தனது ஜென்மநாளை சபித்தல் (3:1,2), தாவீதின் விபச்சாரம் மற்றும் கொலை (2சாமு 11), பேதுரு தனது ஆண்டவரை மறுதலித்த வெட்கக்கேடான காரியம் (லூக் 22:54-62) மேலும் உள்ளாக இருக்கும் பாவத்தைக் குறித்த பவுலின் அறிக்கை (ரோம 22:54-62) போன்றவற்றை வேதம் கூறுகிறது.

அதிக தெய்வ பக்தியுள்ள கிறிஸ்தவர்களும் தங்கள் இருதயங்களில் பாவத்தை உடையவர்களாகவும், பலவகையான பாவ செயல்களைச் செய்கிறவர்களாகவும் இருப்பினும் (1யோ 1:8), அவர்கள் பாவிகள்

என்று அல்ல, பரிசுத்தவான்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். மறுபிறப்பை அடைந்த கிறிஸ்தவர்களின் உள்ளத்தில், பரிசுத்த ஆவியானவர் இருப்பதால், அவர்கள் தேவனுக்கு உண்மையாகவும், உடனடியாகவும் கீழ்ப்படிதலைத் தருகின்றனர். கிறிஸ்தவ கீழ்ப்படிதலைக் குறித்த இரண்டு உண்மைகளை நாம் கவனிப்போம்:

*1. இது மனப்பூர்வமான நோக்கத்துடன் கூடியதாக இருக்கிறது*: சிந்தனை, வார்த்தை மற்றும் செயல்களில் பரிசுத்தம் இருக்க ஆழமும், உண்மையுமான வாஞ்சை இருக்கும். பரிசேயர்கள் வெளிப்படையாக நீதி நிறைவேற்றப்படுதலின் திருப்தி கண்டார்கள், ஆனால் உண்மையான விசுவாசியோ நீதியைக் குறித்து இருதயத்தின் ஆழத்தில் பெரும் பசியை உடையவராக இருப்பார், உதாரணமாக, "தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" (சங் 42:1) என்றார் தாவீது. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி 3:14) என்று பவுல் கூறினார். உண்மையான கிறிஸ்தவர்கள், பந்தயத்தில் ஓடுகிறவர்கள் எப்படி பந்தய எல்லையை அடையும் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருப்பார்களோ, அதுபோல அவர்கள் தங்களுடைய உன்னத ஆண்டவரும், மீட்பருமானவருக்குக் கீழ்ப்படிய எதையும் புறம்பே தள்ள எப்போதும் ஆயத்தமாக இருப்பார்கள்.

*2. இது ஒரு முழுமையான கீழ்ப்படிதலாக இருக்கும்:* அதாவது, ஒரு உண்மையான விசுவாசி தேவனுடைய கற்பனை மற்றும் போதனைகளில் தனக்கு எது பொருந்துமோ அதை மட்டும் தெரிந்து எடுத்து அதை மட்டும் கடைப்பிடிக்கிறவாராக இருக்கமாட்டார். மாறாக, தேவனுடைய வார்த்தைகளில் எதையும் நீக்காமல் எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிய வாஞ்சை உடையவராக இருப்பார். தேவன் செய்யும்படி விரும்பும் அனைத்தையும் செய்கிறவராக இருப்பார், காரணம் அது தேவன் செய்யும்படி விரும்புவதால் ஆகும். நம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிவிட்டு, நாம் தேவனை நேசிக்கிறவர்கள் ஆனதால், தேவனுடைய எல்லா வார்த்தைகளையும் நாம் மதிக்க வேண்டும். கிறிஸ்தவ கீழ்படிதல், குறைவுள்ள ஒன்றாக இருப்பினும், அது முழுமையான கீழ்ப்படிதல் ஆகவேண்டும்.

இந்த கேள்வியின் தொடர்ச்சியாக, இன்றைய நாட்களில் பல கிறிஸ்தவர்களால் நம்பப்படும், "Perfectionism - முழுமையாக குற்றமற்றிருத்தல்" அல்லது "Entire Sanctification - முழுமையாக பரிசுத்தமாக்கப்படுதல்" அல்லது "the second work of grace - கிருபையின் இரண்டாவது வேலை", என்னும் தவறான போதனைக் குறித்து நாம் அறியவேண்டும். இந்த போதனை சபை சீர்திருத்தத்தின் போது, முதலாவது ஆரம்பகால அனபேப்டிஸ்ட் (Anabaptist) கூட்டத்தார், பின்னர் மெத்தடிஸ்ட் சபைகளின் ஸ்தாபகரான ஜான் வெஸ்லி அவர்களால் போதிக்கப்பட்டது, அதன்பிறகு பெந்தேகோஸ்தே திருச்சபைகள் இந்த "Perfectionism - முழுமையாக குற்றமற்றிருத்தல்"-ஐ போதிக்கிறது. ஒரு கிறிஸ்தவன் தனது ஆத்துமாவில் முழுமையாகப் பரிசுத்தமாக்கப்பட்டு, பாவமே செய்யாமல் இருக்க முடியும் என்கின்றனர், அதற்கு ஆதாரமாக மத் 5:8; பிலி 3:15; 1யோவா 3:6,9; 5:18 போன்ற வசனங்களைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, ஒரு இவான்ஜலிக்கல் ஐக்கிய ப்ரதரன் சபை போதகர் தனது கடிதத்தில் எழுதும்போது..."தேவன் தமது தெய்வீக கிருபையால் மீட்டார். மூன்று வருடங்களுக்குப் பின்னர், வெஸ்லி போதித்த பரிசுத்த அனுபவத்திற்குள்ளாக தேவன் என்னை நடத்தினார் . . . ஆகஸ்ட் 6, 1949- அன்று, பரிசுத்த இருதயம் என்னும் வரத்தை எனக்கு கொடுத்தார் . . . கிட்டத்தட்ட ஒரு மணி நேரம், இந்த ஆத்தும மறுரூப அனுபவத்தை அனுபவிக்க சாலையின் ஓரத்தில் வண்டியை நிறுத்தினேன்." மேலும் தனது அனுபவத்தை, பின்வருமாறு விளக்கினார்: "திடீரென தேவன் பரிசுத்த ஆவியை என்மீது பொழிந்தருளினார், உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அலை அலையாக எனக்குள் கடந்து சென்றது. உடனடியாக எனது கண்கள் முழுவதும் கண்ணீரால் நிறைந்திருந்தது."

இதுபோன்ற சாட்சிகளைக் குறித்து நாம் என்ன சொல்வது?

1. கிறிஸ்தவர்கள் சில நேரங்களில் அடையும் உணர்வுகளினாலான அனுபவங்கள், அவர்களின் இருதயங்களிலிருந்து பாவம் அழிக்கப்பட்டு, முழுமையாக நீக்கப்பட்டாயிற்று என்பதை உறுதி செய்யாது.

2. மகாப் பெரிய பரிசுத்தவான்களும் பழைய பாவமனிதனை உடையவர்களாகவே இருந்ததை திருவசனம் விளக்குகிறது (முன்பு உள்ள எடுத்துக்காட்டுகளை கவனிக்கவும்).

3. 1யோவான் 1:8-ன்படி எவர்கள் தங்களிடம் பாவம் இல்லை என்கிறார்களோ அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள் (அப்போஸ்தலர் தன்னையும் சேர்த்தே சொல்கிறார்!): அனுதின ஆகாரத்துக்காக ஜெபிப்பதுபோல அனுதின பாவ மன்னிப்புக்காகவும் ஜெபிக்கும்படி இயேசு போதித்தார் (மத் 6:11,12). முழுமையும் குற்றமற்றிருத்தலை போதிப்பவர் பாவத்தைக் குறித்த சரியான புரிந்து கொள்ளுதலை உடையவராக இருப்பதில்லை. முக்கியமாக, பேராசை மற்றும் ஆவிக்குரிய பெருமைக்கான மிகவும் சிறிய எண்ணத்தையும் எச்சரிக்கும் பத்தாவது கற்பனையை மறந்துவிடுகின்றனர்!

4. முழுமையும் குற்றமற்ற நிலையை போதிப்பதற்காக அவர்கள் பயன்படுத்தும் வசனங்கள் பாவமற்ற பரிபூரணத்தைக் குறிப்பது இல்லை, மாறாக, அந்த வசனங்கள், நாம் கிறிஸ்துவுக்குள் அடையும் பூரணம் மற்றும் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சரீரம் மற்றும் ஆத்துமாவை பரிபூரணமாக சுத்திகரிக்கும் செயலைப் போதிக்கிறது. 1யோவான் 3:9 மற்றும் 5:18 போன்றவைகள், ஒரு தேவனுடைய பிள்ளை பாவம் செய்து, அதில் மகிழ்ச்சி கொள்வதில்லை என்கிறது, - மாறாக அவர் பாவமான செயலை எப்போதும் செய்வதில்லை என்று போதிக்கவில்லை (1யோவான் 2:1 போதிப்பதைக் கவனிக்கவும்).

கிறிஸ்தவ விசுவாசி ஒரு பரிசுத்தவான்; தேவனையும், அவருடைய சித்தத்தையும் அவன் நேசிக்கிறான்,

அனுதினமும் இன்னும் அதிக பரிசுத்தம் மற்றும் கீழ்ப்படிதலை அடைய தேவனுடைய கிருபையை அவன் தேடுகிறான். ஆனால், அவன் தனது சொந்த பரிசுத்தத்திலேயே நின்றுவிடுவது கிடையாது; மாறாக தேவனுக்கு முன்பு அவனுடைய நீதிக்கான வேண்டுதல் தனது மீட்பரும், இரட்சகருமான கிறிஸ்துவின் நீதியே ஆகும். அவனுடைய இடைவிடாத புலம்பல், "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோமர் 7:24) என்பதே!

**114-க்கான கேள்விகள்:**

1. .............................................................................................................................. கருத்துக்களை 114 மற்றும் 115 ஆகிய கேள்விகள் கூறுகிறது.
2. தேவனுடைய கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியதின் தன்மையை இந்த கேள்வி 114 விளக்குகிறது. சரியா, தவறா? ....................
3. தேவனுக்குப் பூரணமாக கீழ்ப்படிவதற்கு அவசியமானது .................................................................... மற்றும் .............................................................................................................. ஆகும்
4. பழைய ஏற்பாட்டின் பல பரிசுத்தவான்கள் தங்கள் இருதயம் பூரணமாக்கப்படுவதை அடைந்தனர். சரியா, தவறா? ....................
5. மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள்... அ) பரிசுத்தவான்கள், அவர்கள் மறுபடியும் பாவம் செய்வதில்லை, ஆ)பாவிகள், அவர்கள் பாவத்தை நேசிக்கிறவர்கள், இ)பரிசுத்தவான்கள், அவர்கள் பரிசுத்தத்தை வாஞ்சிக்கிறவர்கள்... என்று அழைக்கப்படுகின்றனர். எது? .......................................
6. பரிசுத்தமாக்கப்படுதல் என்பது... (சரியான பதிலை கோடிட்டு காட்டுக)
   அ. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் நீதிமான்கள் என்று அழைக்கப்படுவது.
   ஆ. கிறிஸ்தவர்கள் தொடர்ச்சியாக அதிக பரிசுத்தவான்களாக மாற்றப்படுவது.
   இ. கிறிஸ்தவர்கள் பூரணமான கீழ்ப்படிதலை அடைய பரிசுத்த ஆவியின் உதவியை நாடுதல்.
   ஈ. கிறிஸ்தவர்கள் தங்கள் மரணத்திற்கு முன் பூரணத்தை அடைகின்றனர்.
   உ. "கிருபையின் இரண்டாவது வேலை"-யை கிறிஸ்தவர்கள் பெறுவதால் பூரணமடைதல்.
7. தேவனுடைய கற்பனைகள் மற்றும் சுவிசேஷத்தை நேசிப்பதாகக் கூறும் கிறிஸ்தவ விசுவாசிகள், திறந்த மனதுடைய அல்லது கட்டுபாடற்ற சபைகளில் தொடர்ந்து அங்கமாக இருப்பது, அவர்கள் தேவனுடைய கற்பனைகளை மனப்பூர்வமான நோக்கத்துடன் கடைப்படிக்காதிருப்பதைக் குறிக்கிறது. சரியா, தவறா? ....................
8. "Perfectionism - முழுமையாக குற்றமற்றிருத்தல்"- என்றால் என்ன? ..........................................................
   ..............................................................................................................................................................
9. பாவமற்ற பரிபூரணம் குறித்த போதனை திருவசனத்தைச் சாராதது என்பதற்கு இரண்டு காரணங்களைத் தருக: அ. .........................................................................................................................................,
   ஆ. ......................................................................................................................................................
10. 1யோவான் 2:4,5-ஐ எழுதுக:

**115. பத்துக் கற்பனைகளை, இந்த உலக வாழ்வில் எவராலும் முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாது என்றாலும், தேவன் அவைகளை நம்மீது கண்டிப்புடன் சுமத்துவது ஏன்?**

முதலாவது, நாம் வாழும் காலமெல்லாம் நம்முடைய பாவசாயலைக் குறித்து அதிகமாக அறியவும், அதனால் அதிக மனோவாஞ்சையுடன் பாவமன்னிப்பையும், கிறிஸ்துவில் நீதியையும் தேடும்படியாகவும்; இரண்டாவது, பரிசுத்த ஆவியானவரின் கிருபைக்காக இடைவிடாது தளரா ஊக்கத்துடன் தேவனிடம் கேட்பதால், இந்த வாழ்வுக்குப் பின் நாம் பரிபூரணமடைவதற்கான இலக்கை அடையும்படி இன்னும் அதிகமதிகமாக தேவனுடைய சாயலில் புதுப்பிக்கப்படுவதற்கும் ஆகும்.

***

தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்த விளக்கத்தை (கேள்வி 92 முதல் ஆரம்பித்து) முடிவு செய்யும் இந்த கேள்வி கிறிஸ்தவ அனுபவத்தில் நியாயப்பிரமாணத்தின் இருவித செயல்களைக் குறித்து போதிக்கிறது.

அவிசுவாசி, பாவம் குறித்த குற்றவுணர்வடைவதற்கு, முதலாவது தேவனுடைய கற்பனைகள் வற்புறுத்துவது என்ன என்பதைக் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். "பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது" (ரோம 3:20). பின்னர் நியாயப்பிரமாணம் குற்றவுணர்வடைந்த பாவியை மீட்புக்காக கிறிஸ்துவிடம் நடத்துகிறது (கலா 3:24).

பாவிக்கு எது உண்மையாக உள்ளதோ, அதுவே பரிசுத்தவானுக்கும் உண்மையாகப் பொருந்தும். நியாயப்பிரமாணம் நமது பாவத்தை குறித்து எப்போதும் நமக்குப் போதித்து, மன்னிப்புக்காக எப்போதும் கிறிஸ்துவிடம் நம்மை நடத்துகிறது. நியாயப்பிரமாணத்தின் முதல் நோக்கம், நாம் செய்யும்படி தேவன் கட்டளையிடும் பரிசுத்தமான காரியங்களை நமக்கு போதித்து, தேவனை பூரணமாக மகிமைப்படுத்தும் காரியத்தில் எந்த அளவிற்கு நாம் குறைவுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை நமக்கு காட்டுவதாகும்.

நாம் இரட்சிக்கப்படுதவற்கான உபகரணமாக தேவன் நியாயப்பிரமாணத்தை வைக்கவில்லை, அதாவது நியாயப்பிரமாணத்திற்கான மனித கீழ்படிதலை இரட்சிப்பை சம்பாதிக்க வழியாக வைக்கவில்லை. மாறாக, தேவனுக்கு முன்பாக நாம் எத்தனை அழுக்கும், கறைப்பட்ட, பாவிகளாக, தினமும் ஆவிக்குரிய சுத்திகரிப்பின் அவசியத்தை உடையவர்களாக இருக்கிறோம் என்பதை காண்பிக்கும் முகம்காட்டும் கண்ணாடியாக நியாயப்பிரமாணம் இருக்கிறது. இந்த சுத்திகரிப்பு (கண்ணாடி) நியாயப்பிரமாணத்திலிருந்து வருவதில்லை, மாறாக சிலுவையின் இரத்தத்தின் மூலம் கிறிஸ்து மற்றும் அவருடைய ஆவியினால் நமக்கு வருகிறது. “ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அனுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லது” (1தீமோ 1:8) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்.

1. சிந்தனை, வார்த்தை மற்றும் செயல்களில் உள்ள நம்முடைய பாவத்தைக் குறித்து அதிகமதிகமாக நாம் கற்பது நியாயப்பிரமாணத்தின் முதலாவது பயன்பாடு ஆகும். திருவசனத்தை அனுதினமும் தியாணிக்கும்போது, நாம் என்ன தவறு செய்கிறோம் என்பதை கண்டுபிடிப்பது மட்டுமல்லாமல், நாம் கிறிஸ்துவுக்கு செய்யும் பணியில் செய்ய வேண்டியதை செய்யாதிருக்கும் பாவம் என்ன என்பதையும் கற்றுக் கொள்கிறோம். நியாயப்பிரமாணம் பாவத்தைக் குறித்த குற்றவுணர்வை நமக்குக் கொடுத்து, நீதிக்காக கிறிஸ்துவிடம் நம்மை நடத்துகிறது.

2. விசுவாசியின் வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்தின் இரண்டாவது பயன்பாடு ஆக்கப்பூர்வமானது ஆகும். அதாவது, நமது இருதயம் மற்றும் வாழ்வில் நாம் எப்படி பூரணமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை நமக்கு காண்பிக்கிறது. கிறிஸ்தவனின் இலக்கு, அவனுடைய தலையாகிய இயேசு கிறிஸ்துவைப் போல மாறுவதாகும். மீண்டும், தேவன் தமது ஜனங்களை மீட்பதின் நோக்கம், “அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக” (ரோம 8:29) மாற்றுவதாகும் என்று பவுல் கூறுகிறார். ஆகவே, பவுலுடன் சேர்ந்து நாமும், “நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்” என்று சொல்வோமா. இந்த உலக வாழ்வில் நாம் முழுமையான பரிபூரணத்தை அடைய முடியாது என்றாலும், நமது இலக்கு பரிபூரணத்தை அடைவதாகவும், இந்த வாழ்விலே அதைத் தொடர்வதாகவும் இருக்க வேண்டும். இருதயம் மற்றும் வாழ்வின் பூரணத்தை நாம் எப்படி அடைவது? “பரிசுத்த ஆவியானவரின் கிருபைக்காக இடைவிடாது தளரா ஊக்கத்துடன் தேவனிடம் வேண்டுவதால்” ஆகும் என்று கேட்டகிசம் பதில் தருகிறது. கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மை பரிசுத்தமாக்குகிறவர்: தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கேதுவாக வாழ்வதற்கான பெலன் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து மட்டுமே வருகிறது (ரோம 8:4).

இப்படியாக, நியாயப்பிரமாணம் நமது கிறிஸ்தவ அனுபவத்தில் இருவித பயன்பாடுகளை உடையதாக இருப்பதை நாம் காணமுடியும்: அ)எதிர்மறையாக, நியாயப்பிரமாணம் நமது பாவம் மற்றும் குறைகளை நமக்கு காட்டுகிறது, மேலும், ஆ)ஆக்கப்பூர்வமாக, இது பரிபூரணமடைவதின் இலக்கு என்ன என்பதை நமக்கு காண்பிக்கிறது, அதாவது, அளவற்ற நீதியை உடைய ஆண்டவர் தமது கிருபையால் நம்மை தம்மைப் போல பரிசுத்தமாக வைக்கப் போவதாகும் (1பேது 1:15,16).

தேவனுடைய நியாயப்பிரமாணத்தினால் நாம் தொடர்ந்து நினைவு படுத்தப்படுவது அவசியம். இந்த நியாயப்பிரமாணத்தை நாம் இளமையில் இருக்கும்போதே கற்றுக் கொண்டு, சபையாருக்கும் தொடர்ந்து வாசித்துக் காட்ட வேண்டும். “உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பாக்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்” (சங்கீ 119:18) என்பது நம்முடைய அனுதின ஜெபமாக இருக்க வேண்டும். இந்த நியாயப்பிரமாணம் நம்மீது கட்டாயமாக சுமத்தப்பட்டுள்ளது!

**115-க்கான கேள்விகள்:**

1. கேள்வி 115 நமக்கு சொல்வது ..............................................................................................................................
   ..............................................................................................................................
2. “Dispensationalism - காலங்களைப் பிரித்தல்” என்றழைக்கப்படும் இன்றைய நவீன உபதேசத்தின்படி, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல மாறாக கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 6:14) என்கின்றனர். இது சரியா, தவறா? .................., இந்த வசனத்தை விளக்குக: ..............................................................................................................................
   ..............................................................................................................................
3. நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது நம்மால் இயலாது என்பதால் நாம் அவைகளுக்கு பூரணமாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் கட்டளையிடுவதில்லை. சரியா, தவறா? ...................., விளக்கம்:
   ..............................................................................................................................
4. கிறிஸ்தவ வாழ்வில் நியாயப்பிரமாணம் இருவகையான பயன்பாட்டை உடையதாக இருக்கிறது:
   அ.
   ஆ.
5. நியாயப்பிரமாணம், யாக்கோபு 1:23-ல் ......................................-யுடன் ஒப்பிடப்பட்டுள்ளது, அதாவது நியாயப்பிரமாணம்... அ)பாவத்தை வெளிப்படுத்துகிறது, ஆ)பாவத்தை சுத்திகரிக்கிறது. எது? ........
6. நியாயப்பிரமாணத்தை தவறாகப் பயன்படுத்துவது என்பது என்ன? ..............................................................

..........................................................................................................................................................................

7. பின்வருவதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| தேவனுடைய நியாயப்பிரமாணம் | - | நியாயப்பிரமாணம் இல்லை, கிருபை மட்டுமே |
| காலத்தைப் பிரித்துப் பார்ப்பவர் | - | ஆவிக்குரிய பெலனை நமக்குத் தருகிறது |
| பவுலின் விருப்பம் | - | பூரணத்தை அடைவதற்கான இலக்கு |
| பரிசுத்த ஆவியானவர் | - | கட்டாயமாக நம்மீது சுமத்தப்பட்டுள்ளது |
| இந்த வாழ்வுக்குப் பின்னர் | - | கிறிஸ்துவைப் போல மாறும்படியாக |

8. செய்யத்தவறும் பாவங்கள் எவைகள்? ..........................................................................................................................

9. பொதுவான ஆராதனைகளில் இந்தப் பத்துக் கற்பனைகள் வாசிக்கப்பட வேண்டும். சரியா, தவறா? ..................., விளக்கம்: ..........................................................................................................................

10. சங்கீதம் 119:4,5-ஐ எழுதுக:

## 116. கிறிஸ்தவர்களுக்கு ஜெபம் அவசியம் ஏன்?

காரணம், இது நாம் செய்யும்படி தேவன் கட்டளையிடும் நன்றியுடைமையின் மேன்மையான பகுதியாகும்; தேவனுடைய கிருபை மற்றும் பரிசுத்த ஆவியானவருக்காக மனோவாஞ்சையுடனும், இடைவிடாமலும் அவரிடம் கேட்டு, அவைகளுக்காக அவருக்கு நன்றி சொல்பவர்களுக்கு, தேவன் அவைகளைத் தருகிறார்.

***

நன்றியுணர்வினால் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு சேவை செய்வது எப்படி என்பதைக் கூறும் நியாயப்பிரமாணத்தை கவனமாக விளக்கி, ஜெபம் பற்றிய பாடத்தை விளக்கி கேட்டகிசம் முடிவு பெறுகிறது. ஜெபம், நாம் செய்யும்படி தேவன் கட்டளையிடும் நன்றியுடைமையின் மேன்மையான பகுதி என்று கேட்டகிசம் விளக்கிறது. நியாயப்பிரமாணம் மற்றும் நமது ஜெபம் ஆகிய இரண்டும் சேர்ந்து நமது வாழ்வை நன்றியுடையதாகவும், பரிசுத்த மாக்கப்பட்டதாகவும் மாற்றுகிறது. ஜெபம் மற்றும் நியாயப்பிரமாணத்தினால் நாம் நீதிமானாக்கப்படுவதில்லை, ஆனால் நாம் ஜெபிக்கவும், கீழ்படியவும் தக்கதாக நீதிமானாகவும், மனமாற்றப்பட்டும் இருக்கிறோம். நியாயப்பிரமாணத்திற்கான நமது கீழ்ப்படிதல் ஜெபத்துடன் கூடிய கீழ்ப்படிதலாக இருக்க வேண்டும், தேவனிடம் நமது ஜெபமும் அவருடைய நியாயப்பிரமாணம் மற்றும் அவருடைய சித்தத்திற்கும் கீழ்ப்படிய தேவைப்படும் கிருபைக்காவும் இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ ஜெபத்தைக் குறித்த முக்கியமான முன்னுரையை கேள்விகள் 116 மற்றும் 117 நமக்கு தருகிறது; கேட்டகிசத்தின் எஞ்சியுள்ள பகுதி, தேவனை மகிமைப்படுத்தும் ஜெபத்துக்கு எடுத்துக்காட்டான “கர்த்தருடைய ஜெபத்திற்கு” விளக்கத்தைத் தருகிறது.

ஜெபத்தின் அவசியத்தைக் குறித்து கேள்வி 116-ம், ஜெபத்தின் தன்மையைக் குறித்து கேள்வி 117-ம் நமக்கு கூறுகிறது.

இந்தக் கேள்வியைப் பொறுத்த நிலையில் இரு அடிப்படை காரணங்களுக்காக கிறிஸ்தவனுக்கு ஜெபம் அவசியம்:

1. இது நன்றியுடைமையின் மேன்மையான பகுதியாகும். தேவனுக்கு நாம் நன்றி கூறும் அடிப்படையான வழி. தேவனுக்குரிய நமது நன்றியுடைமையை, நாம் தேவனுக்கு முன்பாகவும், மனிதர் முன்பாகவும் பரிசுத்தமான மற்றும் அன்புடன் கூடிய வாழ்வு வாழ்கிறோம் என்பது உண்மையாக இருப்பினும், தனிப்பட்ட நிலையில் நாம் தேவனுக்கு நன்றியுணர்வு உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை நாம் ஜெபிப்பதின் மூலம் தெரியப்படுத்துகிறோம். நமது இருதயத்தில் உள்ளவைகளை அவரிடம் சொல்ல, அதை அவர் கேட்க முதலாவது விரும்புகிறார். தேவனிடமிருந்து சுகத்தைப் பெற்ற குஷ்ட்டரோகி, “உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினான்” (லூக் 17:15,16) என்று வாசிக்கிறோம். “என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி” (சங் 103:1) என்று சங்கீதக்காரன் கூறினார். உண்மையான கிறிஸ்தவன் மட்டுமே தேவனிடம் ஜெபிக்க முடியும், ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் ஜெபம் செய்கிறான். ஜெபிக்காத கிறிஸ்தவன் கிறிஸ்தவனே இல்லை. தேவன் தமது ஜனங்களை ஜெபிக்கும்படி கட்டளையிடுகிறார், “என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று” (சங் 27:8) என்று நாம் ஜெபிக்கும்படி பரிசுத்த ஆவியானவரும் நமக்குள் கிரியை செய்கிறார். மிகுந்த மரியாதை காட்டும் ஜெபம் நாம் தேவனுக்கு தரும் உயர்ந்த கனமாகும்.

2. தேவன் தமது கிருபை மற்றும் பரிசுத்த ஆவியைத் தருவதற்கான உபகரணம் ஜெபம் ஆகும். தேவன் தமது கிருபையை நமக்கு தருவதற்காக வாக்கு கொடுத்துள்ளார், ஆனால் நாம் அதற்காக மன்றாடாத நிலையில் கொடுக்க மாட்டார். நமது தேவைகளை நாம் அறிவதைக் காட்டிலும், தேவன் அதிகமாக அறிவார் (மத் 6:8) --இருப்பினும் அத்தேவைகளை சந்திக்குப்படி தேவனிடம் நாம் ஜெபிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார். தேவன் தமது கிருபையை ஜனங்களுக்கு கொடுப்பதற்கு முன்பாக, அவர்கள் அதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை விளக்க இரண்டு உவமைகளைப் இயேசு போதித்தார். நாம் தொடர்ந்து தேவனிடம் கெஞ்சும்போது, அவர் தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தருகிறார் என்பதை

லூக்கா 11:5-13-ன், “விடாப்பிடியாக கெஞ்சும் நண்பன்” போதிக்கிறது. அதேபோல, தான் விரும்பியதை விடாப்பிடியாக மன்றாடி பெற்றுக் கொண்டதை, லூக்கா 18:1-8-ன் “விடாப்பிடியாக கெஞ்சும் விதவை” போதிக்கிறது. “தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?”(வச 7). இது நமக்கு புதிரான காரியமாக இருக்கலாம், இருப்பினும் நாம் தொடர்ந்து கேட்டு, தொடர்ந்து தேடி, தொடர்ந்து தட்டும்படி தேவன் கட்டளையிட்டுள்ளார், அதன் பின்னர் நாம் விரும்புவதை தேவன் தருகிறார் (லூக் 11:9,10).

ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு வேளையிலும் நமக்குத் தேவையானது என்ன? கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவை. அவர் நமக்கு தேவன் தந்த மகா உன்னதமான பரிசு ஆவார். இவர் தம்முடன் தேவனுடைய கிருபை, ஈவு முதலான அனைத்து தேவ ஆசீர்வாதங்களையும் நமக்கு உரிமையாக்குகிறார். தேவன் தம்முடைய ஆவியையும், கிருபையையும் தரும்படியாக தினமும் நாம் கெஞ்ச வேண்டும். உங்களுடைய உணவு மற்றும் சுவாசக் காற்று போல ஜெபமும் உங்களுடைய வாழ்வின் அவசியமான பகுதியாக இருக்கிறதா?

**116-க்கான கேள்விகள்:**

1. நாம் நீதிமானாக்கபடுதல், பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் நமது நன்றியுடைமையுடன் எவ்வாறு தொடர்புடையதாக இருக்கிறது?
   அ.
   ஆ.
   இ.
2. தேவனிடம் நமது ஜெபம் அவருடைய ........................................................................................கீழ்ப்படிய தேவைப்படும் ................................ இருக்க வேண்டும்.
3. கேள்விகள் 116 மற்றும் 117, கிறிஸ்தவ ஜெபத்தைக் குறித்த .............................. நமக்கு தருகிறது. மேலும் ............................................................ குறித்து கேள்வி 116-ம், ....................................................... குறித்து கேள்வி 117-ம் நமக்கு கூறுகிறது.
4. கிறிஸ்தவர்களுக்கு ஜெபம் அவசியம் என்பதற்கான இரு காரணங்கள்: அ. ................................................ ஆ..................................................................
5. நாம் நல்ல, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதை தேவன் கண்டால் அதுவே நாம் நன்றியுள்ள வாழ்வு வாழ்கிறோம் என்பதற்கு போதுமானது. சரியா, தவறா? ..................., விளக்கம்: ........................................ ..........................................................................................................................................................
6. ஜெபமற்ற கிறிஸ்தவன்... அ)ஒரு நேர் எதிரானது, ஆ)ஒரு துக்கமான மனிதன், இ)வாய்ப்பே இல்லாத ஒன்று, ஈ)இன்று எல்லாம் பொதுவானதே, எது?.........
7. லூக்கா 11:8-ன், “விடாப்பிடியாக கெஞ்சுதல்” என்பது எதைக் குறிக்கிறது? ............................................. ..........................................................................................................................................................
8. பரிசுத்த ஆவியானவர்... அ)ஜெபிக்கும்படி நமக்கு உதவுகிறார், ஆ)நமது ஜெபத்திற்கான அடிப்படை ஆதாரம், இ)உண்மையான ஜெபத்தில் எப்போதும் இருப்பது இல்லை, ஈ)நமது ஜெபத்திற்கான சிறந்த பதில்... எது?........
9. நாம் கேட்பதைக் காட்டிலும் அதிகமாக தேவன் கொடுக்க விரும்பினாலும், அவருடைய ஆவி மற்றும் கிருபையை நாம் கேட்காத நிலையில் அவர் நமக்குத் தருவது கிடையாது. சரியா, தவறா? ....................
10. உபாகமம் 4:29-ஐ எழுதுக:

**117. தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, அவரால் கேட்கப்படும் ஜெபத்திற்கு சொந்தமானது என்ன?**

முதலாவது, அவரிடம் நாம் கேட்கும்படி நமக்கு கட்டளையிட்ட அனைத்துக்காகவும், நம்முடைய முழு இருதயத்தோடும், தமது வார்த்தையில் தன்னை வெளிப்படுத்தியுள்ள, ஒரே மெய்தேவனை நோக்கி நாம் கூப்பிட வேண்டும்; இரண்டாவது, அவருடைய தெய்வீக மாட்சிமைக்கு முன்பாக நாம் நம்மைத் தாழ்த்தும்படி, நமது தேவை மற்றும் இழிநிலையைக் குறித்த முழுமையாக நாம் அறிந்திருக்க வேண்டும்; மூன்றாவது, அவர் தமது வார்த்தையில் நமக்கு வாக்கு செய்திருப்பது போல, நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்துவினிமித்தம், நமது எல்லா தகுதியற்ற நிலைகளையும் புறம்பே தள்ளி, அவர் நமது ஜெபத்தைக் கேட்பார் என்பதில் உறுதி கொள்ள வேண்டும்.

***

ஜெபம் போன்ற தோற்றமே இதற்கு இல்லை என்று நீங்கள் சொல்லும் வண்ணம் எதையாகிலும் கேட்டதுண்டா? கடந்த நாட்களில், எப்போதாகிலும் நீங்கள் செய்தது சரியான ஜெபமேயில்லை என்று இப்போது எதையாகிலும் உணர்கிறீர்களா? ஒருவேளை கடந்த காலத்தில் நாம் செய்த சில ஜெபங்களைக் குறித்து நாம் வெட்கப்படும் நிலையிலிருக்கலாம்.

அறிவுத்திறமற்ற இயந்திரம் போல ஜெபம் இருக்கக் கூடாது; அதாவது, இது இருதயத்திலிருந்து

வருவதாகவும், இருதயத்தின் உண்மையான விருப்பமாகவும் இருக்க வேண்டும். அதே நேரத்தில், நமது ஜெபம் இருதயத்திலிருந்து வெளிப்படும்போது, அது தேவனுடைய சித்தம் வெளிப்படுத்தப் பட்டுள்ள திருவசனத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். தேவன் நமக்கு எதைக் கூறியுள்ளாரோ அதையே வெளிப்படுத்தும் நிலையில் ஜெபம் இருக்க வேண்டும்: "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1யோவா 5:14).

ஜெபம் என்பது ஆவிக்குரிய ஒரு கலை, திருவசனத்தை முறையாகக் கற்று, அவருடைய வசனத்தைப் பயன்படுத்தி தேவனிடம் தொடர்ந்து பேசுவதால் ஜெபம் பூரணப்படுத்தப்படுகிறது. ஜெபம் குறித்து அப்போஸ்தலர்கள் போதிக்கப்பட அவசியப்பட்டது, அதுபோல அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் அவசியம் (லூக் 11:1; ரோ 8:26,27). திருசவசனத்தின் படி எதற்காக ஜெபிக்க வேண்டும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் நமக்கு போதிக்க வேண்டும்.

உண்மையான ஜெபத்தின் தன்மை இந்த கேள்வியில் விளக்கப்பட்டுள்ளது. தேவன் கேட்டு பதில் செய்வதற்கு, ஒரு ஜெபம் உண்மையானதாக இருக்க வேண்டுமெனில் அதற்கு மூன்று காரியங்கள் அவசியம்.

1. ஜெபமானது முழு இருதயத்தோடும் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திரியேக தேவனிடம் செய்யும் ஒன்றாக இருக்க வேண்டும். திருவசனத்தில் உள்ள தேவனை அங்கீகரிக்காமல் அல்லது திரியேக தேவனுடைய நாமத்தை அறிக்கை செய்யாத ஜெபம் பொய்யான ஜெபமாகும். அதனால் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கும் அனைத்து யூதர்கள் மற்றும் நவீன போக்கையுடைவர்களின் ஜெபம் பொய்யானதாகும். மரியாள் அல்லது மற்ற "பரிசுத்தவான்களின்" பெயரால் ஏறெடுக்கும் ஜெபம் பொய்யானதாகும். பரிசுத்த ஆவியானவரின் கிருபையால், குமாரன் மூலம், பிதாவிடம் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். தேவனிடம் செய்யும் ஜெபம், விசுவாசம் மற்றும் உண்மையாக முழு இருதயத்தோடமைந்ததாக இருக்க வேண்டும். இருமனமுள்ள நிலையிலிருப்பதை தேவன் வெறுக்கிறார் (யாக் 1:6,7). அவரிடம் நாம் கேட்கும்படி எவைகளை எல்லாம் கட்டளையிட்டுள்ளாரோ அவைகளை நாம் கேட்க வேண்டும் என்று இங்கே நாம் நினைவு படுத்தப் படுகிறோம். இந்த சொற்றொடரின் முழு விளக்கத்தை, "கர்த்தருடைய ஜெபம்;" (கேள்வி 118-ஐ பார்க்க) குறித்த கலந்துரையாடலின்போது பெறலாம்.

2. தாழ்மை மற்றும் செய்த தவறுக்காக மனவருத்தம் தெரிவிப்பதாக ஜெபம் இருக்க வேண்டும். சுய நீதி தோற்றம் அல்லது சுய நம்பிக்கை மற்றும் பெருமையுடன் ஜெபிப்பது ஜெபத்தின் அடிப்படை தன்மையையே அவமதிப்பதாகும். தேவனுடைய மாட்சிமைக்கு முன்பு நான் பாவியான மனிதன், தகுதியற்ற நான் தேவனிடமிருந்து எந்த நன்மையையும் பெற இயலாது, ஆகவே தேவனுடைய இரக்கதையே முற்றிலும் சார்ந்து இருக்கிறேன் என்பதை வெளிப்படுத்துவதே ஜெபம். பரிசேயன் மற்றும் ஆயக்காரனுடைய ஜெபத்தைக் குறித்த எடுத்துகாட்டு (லூக் 18:9-14) சுய நீதிநிறைந்த மற்றும் சுயத்தை சபிக்கும் ஜெபத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

3. ஜெபம் கிறிஸ்துவின் தகுதி மற்றும் சிறப்புத்தன்மையின் மீது தனது அடித்தளத்தைப் பெற்றிருக்க வேண்டும். தேவனுக்கும், மனிதனுக்கும் இடையேயான மத்தியஸ்தர் இயேசு கிறிஸ்து ஒருவரே. பிதாவிடம் நமக்காக எப்போதும் பரிந்து பேசும்படி ஜீவிக்கும் பிரதான ஆசாரியன் அவரே (எபி 7:25). அவரின்றி ஒருவரும் பிதாவிடம் வந்து சேர முடியாது (யோவா 14:6). அப்படியானால் ஒவ்வொரு ஜெபத்திலும், "இயேசுவின் நாமத்தில்" என்பதை சேர்க்க வேண்டும் என்று அர்த்தமா? அப்படியில்லை. மாறாக, நமது எல்லா ஜெபங்களிலும், நம்மை மீட்டு பிதாவிடம் கொண்டுவரும் நமது பிரதான ஆசாரியராகிய இயேசுவின் மூலமாக தேவன் நமக்கு செவிகொடுக்கிறார் என்பதை அறிந்திருப்பதாகும்.

ஒவ்வொரு உண்மையான ஜெபத்திற்கும் இந்த மூன்று சிறப்பம்சங்களும் முக்கியம். ஒரு ஜெபத்தில், பணிந்து கொள்ளுதல், அறிக்கை செய்தல், நன்றி கூறுதல் மற்றும் மன்றாடுதல் போன்ற பல பகுதிகள் உண்டு; ஒரு ஜெபத்தின் உள்ளடக்கம் எதுவாக இருந்தாலும், அது சிறியதோ அல்லது பெரியதோ, அது தாழ்மையான இருதயத்திலிருந்து ஒரே மத்தியஸ்தரும், பிதாவிடம் நமக்காக எப்போதும் பரிந்து பேசுகிறவருமான இயேசு கிறிஸ்துவின் மூலம் உன்னத தேவனிடம் ஏறெடுக்கப்பட வேண்டும்.

பல நேரங்களில் நமது "ஜெபத்தை" சொல்கிறோம், ஆனால் எத்தனை முறை உண்மையாக ஜெபிக்கிறோம்.

**117-க்கான கேள்விகள்:**

1. எல்லா ஜெபங்களும் நல்லவைகளே, எதைக் குறித்தும் அதிகமாக கவனிக்க வேண்டியதில்லை. சரியா, தவறா? ..................., விளக்கம்: ..........................................................................................................................................
2. தேவனால் அங்கீகரிக்கப்படும் ஜெபம்... அ)இருதயப்பூர்வமானதாக, ஆ)நல்ல இலக்கணத்துடன், இ)திருவசனத்திலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தத்தை மையமாக, ஈ)எப்போதும், "இயேசுவின் நாமத்தில்" என்று முடிய வேண்டும். எது?..........
3. நீதிமொழிகள் 15:8,26,29-ன்படி, மீட்கப்படாத அல்லது மாய்மாலக்காரனுடைய ஜெபத்திற்கான தேவனுடைய

நியாயத்தீர்ப்பு என்ன? ....................................................................................................................................

4. தேவனை மகிமைப் படுத்தும் ஜெபத்தின் மூன்று நிபந்தனைகள் என்ன?
   அ.
   ஆ.
   இ.
5. பின்வரும் ஜெபங்களைக் குறித்த உங்கள் கருத்து என்ன?
   அ. "கர்த்தாவே, எனக்கு புதிய வீடு தாரும், புது கோட்சூட்/பட்டுப்புடவை தாரும், நான் வேலைக்கே போகாதபடிக்கு கோடி ரூபாய் தாரும், ஆமென்": ..................................................................................................
   ...........................................................................................................................................................
   ஆ. "ஆண்டவரே, நான் சுசிலாவைப் போல அழுக்காகவும், மோசமாகவும் இல்லாததல் உமக்கு நன்றி, நான் எப்போதும் மற்றவர்களுக்கு நல்லவளாகவே இருப்பேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்": ...........................................................................................................................................................
   இ. "கடவுளே!, உண்மையான கடவுள் என்று ஒருவர் இருந்தால் இந்த யுத்தத்தில் நான் சாகாமல் பிழைக்க வேண்டும், ஆமென்": ....................................................................................................................
   ...........................................................................................................................................................
6. பின்வருவதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| அறிக்கை மற்றும் துதி | - | உண்மையான ஜெபத்திற்கு உரியவர் |
| தேவன் | - | ஜெபத்தின் பங்கு |
| தாழ்மை | - | ஜெபத்தின் உட்பொருள் |

7. உண்மையான ஜெபம் ஒரு மத்தியஸ்தரும், ................................ நமக்காக எப்போதும் .......................... ................................................. மூலம் ..................................... ஏறெடுக்கப்பட வேண்டும்.
8. நிரப்புக: இந்த கேள்வியில் வரும், அ."முழு இருதயம்": ..........................................................................
   ஆ. "நமது தேவை மற்றும் இழிநிலையை அறிதல்": ..........................................................................
   இ."தெய்வீக மாட்சிமை": ...................................................................................................... ஆகும்.
9. ஜெபத்தின் நான்கு முக்கிய பகுதிகள் என்ன? .........................................................................................
10. யோவான் 14:13,14-ஐ எழுதுக:

**118. தேவனிடம் நாம் என்ன கேட்க வேண்டும் என்று அவர் நம்மிடம் கட்டளையிட்டுள்ளார்?**

இயேசு கிறிஸ்துவே நமக்கு போதித்ததும், அவரே ஜெபத்தில் உள்ளடக்கியதுமான, நமது ஆத்துமா மற்றும் சரீரத்திற்குத் தேவையான அனைத்தையும் ஆகும்.

***

"தேவனிடம் நாம் என்ன கேட்க வேண்டும் என்று அவர் நம்மிடம் கட்டளையிட்டுள்ளார்?" என்னும் இந்தக் கேள்வி 117-ன் முதற்பகுதியில் சொல்லப்பட்டதற்கான விளக்கத்தை தரும்: "அவரிடம் என்ன கேட்கவேண்டும் என்று கட்டளையிட்டுள்ள எல்லாவற்றிற்காகவும்" அவரை நோக்கி கூப்பிடுகிறோம். அவரிடம் என்ன கேட்க வேண்டும் என்று கூறுகிறாரோ அவற்றை மட்டும் நாம் கேட்க வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். தேவனுடைய பரிசுத்த சித்தத்திற்கு எதிரான எதையும் நாம் கேட்க முடியாது. "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக் 4:3) என்று, தன்னலமான காரணங்களுக்காக ஜெபிப்பவர்களை பரிசுத்த யாக்கோபு கடிந்து கொண்டார். ஒரு கிறிஸ்தவன் உறுதியான விசுவாசத்துடன் ஜெபித்தால், தான் ஜெபத்தில் கேட்பதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சிலர் கூறுகிறார்கள். இது உண்மை அல்ல. அவருடைய சித்தத்தின்படி நாம் ஜெபித்தால், அவர் நமக்கு செவி கொடுத்து பதில் தருகிறார் (1யோ 5:14).

நமது அனுதின ஜெபத்தில் நாம் எதைக் கேட்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகின்றார் என்பதை சார்ந்த, ஜெபத்தின் உட்பொருளை இந்த கேள்வி சொல்கிறது. ஜெபம் என்பது நாம் நம்முடைய தேவைகளை மட்டும் ஆண்டவரிடம் கேட்பது என்றில்லாமல், (அதோடு தேவனை துதித்து, அவருக்கு நன்றி சொல்லி, நமது பாவங்களையும் அறிக்கை செய்ய வேண்டும்), இது தேவனால் நமக்கு கட்டளையிடப்பட்டதும், ஜெபத்தின் முக்கியமான பகுதியுமாகும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

இந்தக் கேள்வி, நாம் நம்முடைய ஆத்துமா மற்றும் சரீரத்திற்குரிய தேவைகளுக்காக ஜெபிப்பதை கட்டுப்படுத்துவதை கவனிக்கவும். ஆனால், ஜெபத்தில் நம்முடைய தனிப்பட்ட தேவைகளைப் பார்க்கிலும் மிகவும் முக்கியமானது தேவனுடைய மகிமை ஆகும். "கர்த்தருடைய ஜெபம்" போதிப்பது போல, முதலாவது, தேவன் தம்மை மகிமைப்படுத்தி, அவருடைய இராஜ்ஜியத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்க வேண்டும், பின்னர், இரண்டாவது, நமது தனிப்பட்ட தேவைகளைக் கேட்க வேண்டும். அவைகள் பின்வருமாறு:

1. ***ஆவிக்குரிய தேவைகள்:*** நமது அடிப்படையான ஆவிக்குரிய தேவை என்னவெனில், தேவனுடைய சித்தத்தை நாம் செய்யவும், தேவன் நம்முடைய வாழ்வில் செய்யும் காரியங்களுடன் மனரம்மியமாக

இருப்பதற்கு அவசியமான தேவ கிருபையாகும். பொதுவாக நம்முடைய சரீரம் மற்றும் இவ்வுலகத்துக்குரிய நமது தேவைகளை மிகவும் முக்கியமானதாக நினைக்கிறோம். ஆனால், அது உண்மையல்ல. சரீரம் சுகமாக்கப்படுவதும், இவ்வுலகத்தின் இன்பங்களும் முதன்மையானவைகள் அல்ல, மாறாக தேவனுடைய இராஜ்ஜியம் மற்றும் அவருடைய நீதியுமே ஆகும். இதுவே இயேசு போதித்த மேலான சத்தியம். நம்முடைய உலகப்பிரகாரமான சந்தோஷம் மற்றும் வளமையைக் குறித்து மிகவும் கருத்துள்ளவர்களாக இருப்பது, உலகத்தின் வாழ்வைக் குறித்து மட்டும் கருத்துடன் இருந்து, தேவனுடைய உறவைக் குறித்து கவனமற்றிருக்கும் "புறஜாதியார்"-ஆன (மத் 6:32,33) அவிசுவாசிகளுக்கு இணையாகும். நம்முடைய ஆவிக்குரிய தேவைகள் என்பது, அனுதின பாவங்களுக்கான மன்னிப்பு, பரிசுத்த ஆவியின் புதிதாக்குதல், கிறிஸ்துவில் நிலைத்திருத்தல், மற்றும் கிறிஸ்தவ நன்றியுணர்வினால் வெளிப்படும் கனிகள் (முக்கியமாக நாம் துன்பம் மற்றும் கஷ்டத்திலும் இருக்கும்போதும்) போன்றவைகளை உள்ளடக்கியது ஆகும்.

2. *சரீரப்பிரகாரமான தேவைகள்.* இவைகள் எப்போதும் குறைவாக மதிப்பிடக் கூடியதும், இரண்டாம் நிலையில் உள்ளதுமாக இருக்கின்றன. நம்முடைய சரீரத்தின் தேவைகளான, சுகம், உணவு, உடை, உடைமை மற்றும் சமாதானமான வாழ்க்கை (நீதி 30:8; யாக் 5:15) போன்றவற்றிற்கான விண்ணப்பம் கர்த்தருடைய ஜெபத்திலே உண்டு, அதை கேள்வி 125-ல் பார்க்கலாம். சரீரத்திற்கான தேவைகளுக்காக ஜெபிக்கும்போதும், தேவனிடம் அதிகாரத்துடன் கேட்காமல், "உமக்குச் சித்தமானால்" என்னும் வார்த்தைகள் சேர்த்து ஜெபிக்க வேண்டும். இதையே நம்முடைய ஆண்டவரும் செய்தார் (மத் 26:39; லூக் 22:24). அதே நேரத்தில், அவருடைய கிருபை மற்றும் பரிசுத்த ஆவியானவருக்காக நாம் ஜெபிக்கும்போது, "உமக்குச் சித்தமானால்" என்று ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை. காரணம் நமது இரட்சிப்புக்காக இவைகளை கொடுப்பதே எப்போதும் தேவனுடைய சித்தமாக இருக்கிறது.

"சோர்ந்து போகாமல் எப்போதும் ஜெபிக்க வேண்டும்" என்று இயேசு மனிதர்களிடம் கூறினார் (லூக் 18:1). உங்களுடைய தேவனிடம் நீங்கள் ஜெபிப்பதில் இன்னும் அதிகமதிகமாக வாழும்போது, உங்களுடைய சுகம், படிப்பு, திருமணம், குடும்பம், மற்றவர்களுடன் உள்ள உறவுகள், உங்களின் வேலை, எல்லாவகையான பிரச்சனைகள் (சிறிதோ அல்லது பெரிதோ)- எல்லாவற்றையும் குறித்து தேவன் கருத்துள்ளவராக இருக்கிறார் என்பதை அறிய வேண்டும்.

**118-க்கான கேள்விகள்:**

1. உண்மையான ஜெபத்தின் உட்பொருள் என்ன என்பதை இந்த கேள்வி 118 விளக்குகிறது. சரியா, தவறா? ......................
2. யாக்கோபு...............- ன்படி, நம்முடைய சுய விருப்பங்களை நிறைவேற்றும்படி செய்யப்படும் ஜெபத்தை தேவன் எப்படி கருதுவார்? ......................
3. நம்முடைய ஜெபத்தின் உட்பொருள், நம்முடைய ................................ மற்றும் .......................... தேவைகளையும் உள்ளடக்கியதே.
4. நம்முடைய சொந்த தேவைகளைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது ....................................................... இது ........................................................................................................ போதிக்கப்பட்டுள்ளது.
5. எல்லா நேரத்திலும் உங்களுக்கு தேவைப்படும் ஆவிக்குரிய தேவை என்ன? .......................................... ..........................................................................................................................................................
6. உங்களின் சரீரப்பிரகாரமான தேவைகள் என்ன? .................................................................................... ..........................................................................................................................................................
7. நம்முடைய சரீரப்பிரகாரமான தேவைகளைக் காட்டிலும், ஆவிக்குரிய தேவைகளை தேவன் எப்போதுமே தருகின்றார். சரியா, தவறா? ....................., விளக்குக: ........................................................................ ..........................................................................................................................................................
8. ஒருவரின் வியாதிக்காக நாம் ஜெபிக்கும்போது, தேவன் அவருக்கு சுகம் தரவில்லை என்னும் போது, நமக்கு விசுவாசம் இல்லை என்று அர்த்தம். சரியா, தவறா? ......................
9. எந்த வகையான தேவைகளை பின்வரும் வசனங்கள் குறிப்பிடுகிறது?
   மத் 6:33.....................................யாக் 5:14.....................................2கொரி 12:9.......................................................
   நீதி 30:8......................................எபேசி 1:17..................................2இராஜா 20:5....................................................
10. பிலிப்பியர் 4:6-ஐ எழுதுக:

**119. கர்த்தருடைய ஜெபம் என்ன?**

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக;உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.

***

"கர்த்தருடைய ஜெபம் என்ன?", நமக்கு முன்பு உள்ள இந்த ஜெபம், இயேசு கிறிஸ்துவே பயன்படுத்தவில்லை (அதாவது இது ஜெபத்தை அப்படியே), தமது சீஷர்கள் பயன்படுத்தும்படியாக கிறிஸ்து போதித்ததால் இது "சீஷர்களின் ஜெபம்" என்று சரியாக அழைக்கப்படலாம். நம்முடைய ஆண்டவருடைய ஜெபங்கள் மத் 11:25-27; யோவான் 17; லூக்கா 22:41-45; 23:34,46 ஆகிய பகுதிகளில் நாம் காணலாம். "கர்த்தருடைய ஜெபம்" என்ற இந்த ஜெபத்தை கிறிஸ்து ஏன் பயன்படுத்தி இருக்கக் கூடாது, காரணம், இதில் உள்ள ஐந்தாவது விண்ணப்பம் பாவ மன்னிப்பைக் குறித்ததாகவும், கிறிஸ்து பாவங்களை மன்னிக்க வேண்டியவராக இருப்பதால் ஆகும்.

ஆனால், இந்த ஜெபம் நமது ஜெபங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அல்லது எடுத்துக்காட்டாக கிறிஸ்துவால் நமக்குப் போதிக்கப்பட்ட ஒன்று ஆகும். "நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாகும்" (மத் 6:9). இந்த ஒரு ஜெபம் மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டிய ஒன்று என்று அர்த்தமல்ல. புதிய ஏற்பாட்டில் உள்ள மற்ற பகுதிகள் அப்போஸ்தலர்கள் மற்ற ஜெபங்களையும் செய்தார்கள் என்பதை நமக்கு அறிவிக்கிறது. லூக்கா 11:1-4-கிலும், இதே ஜெபம் ஒருசில மாற்றங்களோடு இருப்பதையும் காணலாம். இது மத்தேயு 6:9-13-ல் உள்ள ஜெபம் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு ஜெபமாகவும், அதே ஜெபம் தவறான வழியில் பயன்படுத்தப்படலாம் என்பதையும் காண்பிக்கிறது. சிலர் இந்த ஜெபத்தில் உள்ள ஆவிக்குரிய அர்த்தத்தை உணராமல், மூட நம்பிக்கையோடு பலமுறை ஒப்பிப்பது போன்றவைகள் "கர்த்தருடைய ஜெபத்தை" தவறாக பயன்படுத்தி, வீண்வார்த்தைகளால் அலப்புகிற ஜெபம் ஆகும் (6,7).

எல்லா ஜெபத்திற்கும் இந்த ஜெபம் எடுத்துக்காட்டாக விளங்குவதற்கான சில முக்கியமான சிறப்பம்சங்களை நாம் கவனிக்கலாம்:

1. *இது இரட்சிக்கப்பட்ட ஜனங்களுக்கு மட்டுமான ஜெபம்.* "எங்கள் பிதாவே"- என்னும் வார்த்தைகள் கிறிஸ்துவின் மூலமாக தேவனை தங்களுடைய பிதாவாக அறியும் தேவனுடைய பிள்ளைகளால் மட்டுமே பயன்படுத்த முடியும். உலகப்பிரகாரமான கூட்டங்களில் இந்த ஜெபத்தை பயன்படுத்தவது முறையாகாது. பாவிகள் ஜெபிக்கும் ஒரே ஜெபம் பாவமன்னிப்பு மற்றும் மீட்பைக் குறித்தது ஆகும்.

2. *இது சுருக்கமாக இருப்பினும், முழுமையானது.* இது சில வினாடிகளில், ஒரு சிறு பிள்ளையால் கூட ஜெபித்துவிடக் கூடியதாக இருப்பினும், ஒரு உண்மையான ஜெபத்திற்கு தேவையான எல்லாவிதமான சிறப்புகளும் இதில் உண்டு. அப்படியானால், எல்லா ஜெபங்களும் இந்த அளவுக்கு சிறியதாக இருக்க வேண்டும் என்று அர்த்தம் அல்ல, (2நாளாகமம் 6:12-42-ல் உள்ள ஜெபம் இதைக் காட்டிலும் ஏழு மடங்கு பெரிதானது ஆகும்), அதே நேரத்தில் மிகவும் பெரிய ஜெபங்கள் அதிக பலன் தரக்கூடியவை என்றும் எடுத்துக் கொள்ளக் கூடாது. மேலும், பல வண்ண வார்த்தை ஜலாங்களால் தேவன் கவரப்படுவதுமில்லை; நாம் நேர்மையுடனும், மனம் திறந்த நிலையில் அவருடன் நேரிடையாக நாம் பேச விரும்புகிறார்.

3. *இதன் வரிசைப்பாடு சிறப்பானது.* இதன் ஆரம்ப வரிகள் தேவனை நோக்கியதாகவும், பின்னுள்ள மூன்று விண்ணப்பங்கள் தேவனுடைய மகிமை மற்றும் வரப்போகும் அவருடைய இராஜ்ஜியத்தையும் மேன்மைப்படுத்துவதாகவும் இருக்கிறது. பின்னர் வரும் மூன்று விண்ணப்பங்கள், தேவனுடைய பிள்ளைகளான நமது தேவைகளைக் குறிப்பதாக இருக்கிறது. இதன் முடிவுரை தேவனைத் துதிக்கும் துதிப்பாடல் மற்றும் புனிதமான ஆமென் என்ற வார்த்தையுடன் முடிகிறது. இது மனிதனை மையமாக வைக்காமல், தேவனை மையமாகக் கொண்டதாகும்.

4. *இது மற்றவர்களுக்கான வேண்டுதலையும் உள்ளடக்கியதே.* இது பன்மையில் இருப்பதைக் கவனிக்கவும். இதில் வரும், "எங்களுடைய, நாங்கள், எங்களை", போன்ற பிரதிப் பெயர்சொற்கள் நாம் நமக்காக மட்டும் ஜெபிக்காமல், மற்ற கிறிஸ்தவர்களின் தேவைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும் என்பதை குறிக்கிறது.

ஜெபத்தைக் குறித்த மற்ற வேதாகம சட்டங்களையும் இங்கே குறிப்பிட வேண்டும்:

அ. நமது ஜெபங்கள் எப்போதும் தேவனை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும், அதாவது, அவைகள் தேவனுடைய நாம மகிமையையே நோக்கி இருக்க வேண்டும். அவர் மற்றும் அவருடைய இராஜ்ஜியம் மட்டுமே முதன்மையானதாகவும், நமக்காக நாம் ஜெபிப்பதும் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்கானதாக மட்டும் இருக்க வேண்டும்.

ஆ. நம்முடைய ஜெபங்கள் விசுவாசத்தில் இருக்க வேண்டும். விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருக்கவோ, அல்லது அவரிடமிருந்து பதிலைப் பெறவோ முடியாது (மத் 21:21,22; எபி 11:6).

இ. நமது ஜெபங்கள் நன்கு வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்: நம்முடைய ஜெபங்கள் கருத்தாழமற்றவைகளாக இல்லாமல், திட்டவட்டமாக, சீரான நிலையில் --மக்கள், பொருட்கள் மற்றும் காரியங்களை தேவனிடம் தெளிவாகப் பேச வேண்டும் (1தீமோ 2:1,2). உதாரணமாக, மிஷனரிகளின் பெயர்களைச் சொல்லி ஜெபிக்கலாம், நண்பர்களின் பெயர்களைச் சொல்லி அவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்கலாம்.

ஈ. நமது ஜெபத்தின் மொழிநடை மரியாதையுள்ளதாக இருக்க வேண்டும். கொச்சையான வார்த்தைகள் மற்றும் ஒழுங்கற்ற மொழி இராஜாதி இராஜாவிடம் வருவது கிடையாது. தேவன் நமது மகத்தான மரியாதைக்கு உரியவர் என்பதை ஒருபோதும் நாம் மறக்கக் கூடாது. அதற்காக நடைமுறையில் இல்லாத இலக்கியமான வார்த்தைகளைப் பயன்படுத்திதான் ஜெபிக்க வேண்டும் என்று இல்லை, ஆனால் அவைகளை பயன்படுத்துவது கனமுள்ளதாக இருப்பதாக நீங்கள் உணர்ந்தால் அவைகளை தாழ்மையாகப்

பயன்படுத்தலாம்.

உ. ஜெபங்கள் மனதிலிருந்து பொங்கிவருகிறதாகவும், வழக்கமாக செய்யப்படுவதாகவும் இருக்க வேண்டும். அதாவது, ஜெபிப்பதற்கென்று தினமும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும் (தானியேல் தினமும் மூன்று முறை தவறாமல் ஜெபித்தார் - தானி 6:13). அதே நேரத்தில், தாவீது போல, எதிர்பாராத தருணங்களிலும் அவரது தேவைகளிலும் தேவனிடம் ஜெபிக்க வேண்டும் (சங் 38:22; 69:1). நம்முடைய பரலோக பிதாவிடம் ஜெபிப்பதற்கு எப்போதும் நமது எண்ணங்கள் ஆயத்த நிலையில் இருக்கவும் வேண்டும். “இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்” (1தெச 5:17).

**119-க்கான கேள்விகள்:**

1. கர்த்தருடைய ஜெபம் ஒரு சிறந்த .................................................. ஆகும். இருப்பினும், இயேசு இந்த ஜெபத்தை ஏறெடுக்கவில்லை, காரணம்... ..........................................................................................................
2. இந்த ஜெபம் எந்த நோக்கத்தை நிறைவு செய்யும்படியாக ஏற்படுத்தப் பட்டுள்ளது? ............................. ...................................................................................... எப்படி இது தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது? ..........................................................................................................................................
3. திருச்சபை சாராதா கூட்டங்களிலும், “கர்த்தருடைய ஜெபத்தை” ஏறெடுக்கலாம். சரியா, தவறா? ..................., விளக்கம்: ..........................................................................................................................
4. கர்த்தருடைய ஜெபத்தின் மற்றுமொரு பகுதி எங்கேயுள்ளது? .......................................................................
5. “கர்த்தருடைய ஜெபத்தின்” முக்கியமான நான்கு சிறப்பு அம்சங்கள் யாவை? ...................................... ..........................................................................................................................................
6. தேவனை மையமாகக் கொண்ட ஜெபம் என்றால் என்ன? ............................................................................. ..........................................................................................................................................
7. உண்மையான ஜெபம் எப்போதும்.... அ)சுருக்கமான, ஆ)கருத்துடன், இ)மனிதனை மையமாக, ஈ) வார்த்தை வர்ணனையில்... இருக்கும். எது? ...........
8. பின்வருவதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| வீணாக அலப்புதல் | - | ஐந்தாவது விண்ணப்பம் |
| சாலொமோன் | - | அவசரமாக செய்யப்பட்ட விண்ணப்பம் |
| பாவ மன்னிப்பு | - | நீண்ட ஜெபம் |
| “ஆண்டவரே, எனக்கு உதவும்” | - | கருத்தாழமற்ற வார்த்தைகள் |

9. பின்வருவதற்கான விளக்கம் தருக:
   அ.வரையறுக்கப்பட்ட ஜெபம்:..........................................................................................................................
   ஆ. வழக்கமான ஜெபம்: ..................................................................................................................................
   இ. எதிர்பாராத நிலையில் தேவைப்படும் ஜெபம்: ..........................................................................................
10. மத்தேயு 6:6-ஐ எழுதுக:

**120. தேவனை நாம், “எங்கள் பிதாவே” என்று நாம் அழைக்கும்படி கிறிஸ்து கட்டளையிட்டது ஏன்?**

நம்முடைய ஜெபத்திற்கு அடித்தளமான குழந்தை போன்ற பயபக்தியையும், தேவன் மீது நம்பிக்கையையும் நம்முடைய ஜெபத்தின் ஆரம்பத்திலேயே நமக்குள் எழுப்பவும், கிறிஸ்துவின் மூலம் தேவன் நம்முடைய பிதாவானதால், பூமிக்கடுத்தவைகளை நம்முடைய பெற்றோர் தர மறுத்தாலும், விசுவாசத்தினால் அவரிடம் கேட்பவைகளை அவர் மறுப்பதில்லை என்பதாலும் ஆகும்.

***

கர்த்தருடைய ஜெபத்திற்கான விளக்கத்தை, கேள்வி 120 முதல் கேட்டகிசம் விளக்குகிறது. இந்த ஜெபத்தின் மூன்று பிரிவுகள்: 1)முகவுரை, 2)ஆறு விண்ணப்பங்கள், மற்றும் 3)முடிவு துதிப்பாடல்.

“பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே” என்ற முகவுரைக்கான விளக்கத்தை கேள்விகள் 120 மற்றும் 121 தருகிறது.

தேவனிடம் நாம் பேசும்போது அவரை சரியாக குறிப்பிட வேண்டும் என்பது மிகவும் முக்கியம் ஆகும். கிறிஸ்தவ மதத்தில் மட்டுமே, தேவன் “பிதா/அப்பா” என்று அழைக்கப்படுகின்றார். இந்தப் பெயர் குறிப்பீடு மிகவும் முக்கியமான ஒன்று ஆகும். காரணம் நாம் பிதாவே என்று கூறும்போது, சர்வவல்லமையுள்ள தேவனுடன் நமக்குள்ள உறவு பரிசுத்த ஆவியானவரால் எழுப்பப்படுகிறது. தேவன் நீதிபரராகவும், துன்மார்க்கரை தண்டிக்கிறவராகவும் இருக்கிறார், அவர் சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகரும், மனித ஞானத்தால் ஆராயப்பட முடியாத தேவனுமாயிருக்கிறார். ஆகவே அவருடைய மேன்மை மற்றும் மகத்துவத்திற்கு இணையாக அவருக்கு கனத்தை கொடுக்கவேண்டும் என்பதுதான் உண்மை. ஆனால், இத்தனை மகத்துவமான தேவன் நாம் அவரைக் குறித்து அறியவும், தகப்பனிடம் பேசுவது போல அவருடன் பேசவும் விரும்புவது எத்தனை விலையேறப்பெற்றது!

பழைய ஏற்பாட்டில் மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டிலும் தேவன் தம்மை தமது ஜனங்களுக்கு தகப்பனாகவே அறிமுகப்படுத்தினார். “இஸ்ரவேலுக்கு நான் பிதாவாக இருக்கிறேன்” (எரே 31:9); “தேவரீர் எங்கள்

பிதாவாயிருக்கிறீர்" (ஏசா 63:16). சங் 103:13 மற்றும் 1நாளா 29:10-ஐயும் பார்க்கவும். தேவனைக் குறித்த, பழைய ஏற்பாட்டில் இல்லாத, ஒரு கருத்தை புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து வெளிப்படுத்தினார் என்னும் நவீன சிந்தனையாளர்களின் கருத்து தவறானது என்பதை இது காண்பிக்கிறது.

தேவன் எல்லா மனிதர்களின் பிதாவா? நவீன சிந்தனையாளர்கள், "ஆம்" என்று சொல்கின்றனர். ஆனால், வேதம் சொல்கிறது, நாம் நமது இயற்சாயலின்படி நமது "பிதாவாகிய சாத்தானுடையவர்கள்" (யோவா 8:44). கிறிஸ்துவில் உள்ளவர்களுக்கு மட்டுமே தேவன் பிதாவாக இருக்கிறார் (யோவா 1:12). இப்படியாக, கிறிஸ்தவர்கள் மட்டுமே இந்த ஜெபத்தை செய்து, ஜீவனுள்ள தேவனை பிதா என்றழைக்க முடியும்.

நாம் ஜெபிக்கும்போது தேவன் நம்மீது கொண்டுள்ள தந்தைநிலையின் மகத்துவத்தை குறித்து யோசிக்கவும்.

1. இந்த உலகங்கள் உருவாக்குமுன்னே, அவர் நம்மைத் தெரிந்து கொண்டதால், தேவன் நம்முடைய பிதாவாக இருக்கிறார் (எபே 1:5), ஏனெனில், கிறிஸ்துவின் மரணத்தினால் நம்மை அவர் மீட்டார் (கலா 4:5), ஏனெனில், தமது ஆவியினால் நம்மை புதுப்பித்தார் (கலா 4:6), மேலும், நம்மை பரலோக குடும்பத்திற்குள் இணைத்துக் கொண்டார் (கலா 4:4-5). நாம் அவருடைய பிள்ளைகளாக, தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பரலோக மகிமையின் ஐசுவரியத்திற்கு கிறிஸ்துவுடனே நாமும் உடன் சுதந்திரருமாக இருக்கிறோம் (ரோமர் 8:17).

2. நாம் ஜெபிக்கும்போது, தேவனிடம் நேரிடையாகப் பேச வேண்டும். ஜெபம் எப்போதும் தனிப்பட்ட உறையாடலாக இருக்க வேண்டும். மற்றவர்கள் எழுதிய ஜெபத்தை வாசிப்பது ஆபத்தானது ஆகும். இது தவறாக இருக்க வேண்டிய அவசியமில்லை, இருப்பினும், நம்முடைய பூமிக்குரிய தகப்பனிடம் நாம் பேசுவதற்கு, மற்றவரின் வார்த்தைகளைப் பயன்படுத்தினால், அவர் எப்படி உணர்வார்?

3. நாம் தேவனை தகப்பனாக நேசித்து உயர்வாய் மதிக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் (பூமிக்குரிய) பெற்றோரை மதிக்க வேண்டும் (ஐந்தாவது கற்பனை), அப்படியானால் எத்தனை அதிகமாக பரலோகத்தின் பிதாவை நேசித்து மதிக்க வேண்டும்.

4. தேவன் நம்மைப் பாதுகாத்து, நம் தேவைகளை சந்திக்கும்படி நாம் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும். நமது இவ்வுலகப் பெற்றோர்கள் பெரும் தியாகங்கள் செய்து நமது தேவைகளைச் சந்தித்து நம்மைப் பாதுகாக்கின்றனர். நம்முடைய பரலோகத்தின் பிதாவானவர், "விசுவாத்தினால் அவரிடம் கேட்கும்போது", எவ்வளவாய் தமக்கு அன்பான பிள்ளைகளின் தேவைகளைச் சந்தித்து பாதுகாக்கிறார். பூலோகத்தின் நமது பெற்றோர்கள் நமக்கு நன்மையான ஈவுகளைக் கொடுப்பதைக் காட்டிலும், பரலோகத்தின் தேவனானவர் எவ்வளவு அதிகமாக நமது தேவைகளைச் சந்திக்கிறார் என்பதையே மத் 7:9-11 மற்றும் லூக்கா 11:11-13 ஆகியவற்றைக் குறித்து நமது கேட்டகிச ஆசிரியர்கள் நினைவிற் கொண்டிருந்தனர்.

"பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே" என்ற முகவுரை திரியேக தேவனின் முதலாம் நபரை மட்டும் குறிக்கிறதா, அல்லது திரியேக தெய்வத்துவத்தின் மூன்று நபர்களையும் குறிக்கிறதா? இங்கே குறிப்பிடப்படும் "பிதா" என்ற பதம் திரியேக தேவனின் முழுமையுமே குறிக்கிறது (அப்போஸ்தல விசுவாசம் போல) என்று ரிபார்ம்டு வேதவல்லுநர்கள் நினைக்கின்றனர். நாம் தேவனிடம் ஜெபிக்கிறோம், இந்த தேவன் பரிசுத்த ஆவியானவரின் செயலால் கிறிஸ்துவின் மூலம் நமது பிதாவாகிறார் (கலா 4:6). இந்த கேட்டகிசமும் இதையே வலியுறுத்துகிறது: "கிறிஸ்துவின் மூலமாக (திரியேக) தேவன் நமது பிதாவானார்".

கெட்டழிந்த பிள்ளைகளான நாம், எந்த விதத்திலும், தேவனிடம் திரும்பி வந்து, "என் பிதாவே" என்று அழைப்பது எத்தனை ஆசீர்வாதமான ஒன்று.

**120-க்கான கேள்விகள்:**

1. "கர்த்தருடைய ஜெபத்தில்" உள்ள பிரிவுகள் என்ன? ............................................................................................................................................................ முதலாவது பகுதியை எழுதுக: ................... ..............................................................................................................
2. அவிசுவாசிகளுடன் தேவனுக்குள்ள உறவு என்ன? ................................................................. அவர்கள், "எங்கள் பிதாவே" என்று அழைக்க முடியுமா? ...................., விளக்கம்: ................................................ ..............................................................................................................
3. "தேவனின் தந்தைநிலை", என்னும் சத்தியம் இயேசுவால் புதிதாக வெளிப்படுத்தப்பட்டதாகும். சரியா, தவறா? ..................., விளக்கம்: .............................................................................................................. ..............................................................................................................
4. "தேவனுடைய உலகளாவிய தந்தைநிலை மற்றும் மனிதனின் உலகளாவிய சகோரதநிலையை", போதித்தது யார்? ..............................................................................., இது உண்மையா? ......................................
5. ஒருவன் தேவனுடைய பிள்ளையாக எப்படி மாறுகிறான். ...................................................................... ..............................................................................................................
6. ஜெபத்தில் நாம் நேரிடையாக தேவனோடு பேசுகிறோம் என்பதால், மற்றவர்களின் ஜெபத்தைப் பயன்படுத்துவது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். சரியா, தவறா? .................
7. தேவனுக்கு, "குழந்தை போன்ற பயபக்தி" என்பது... அ)நாம் ஜெபிப்தற்கே பயப்படுவது, ஆ)நாம்

தண்டிக்கப்படுவோம் என்பது குறித்து பயப்படுவது, இ)உன்னதமான தேவனை நாம் மதிப்பது. எது?......

8. மத்தேயு 7:9-11-ல் பூமிக்குரிய பெற்றோர்கள் எவைகளைத் தருகின்றார்கள்: .............................................., தேவனோ, தம்மிடம் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு ..............................................................கொடுக்கிறார்
9. பரலோகத்தின் பிதா யார்? திரியேக தெய்தவத்துவத்தின் முதல் நபர், அல்லது திரியேக தேவன்? ....................................., உங்களுடைய வேதாகம குறிப்பு: .....................................
10. லூக்கா 11:13-ஐ எழுதுக:

**121. "பரலோகத்திலிருக்கும்" என்ற குறிப்பு இணைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன?**

தேவனுடைய பரலோக மகத்துவத்தைக் குறித்து பூலோக எண்ணம் கொள்ளாதபடிக்கும், மற்றும் அவருடைய சர்வ வல்லமையினிமித்தம் நமது ஆத்துமா மற்றும் சரீரத்திற்குத் தேவையான யாவற்றையும் எதிர்பார்க்கலாம் என்பதாகும்.

***

ஆரம்ப முகவுரையின் இரண்டாம் பகுதி, "பரலோகத்தில் இருக்கும்" என்பதாகும். இதன் அர்த்தம், தேவனுடைய பரலோக மகத்துவத்தைக் குறித்து பூலோக எண்ணம் கொள்ளாதபடிக்கும், மற்றும் அவருடைய சர்வ வல்லமையினிமித்தம் நமது ஆத்துமா மற்றும் சரீரத்திற்குத் தேவையான யாவற்றையும் எதிர்பார்க்கலாம் என்பதாகும்."

தேவனைக்குறித்த இந்த முகவுரையின் இரு பகுதியும் கவனமாக ஒன்றையொன்று சமமாக்குகிறது. ஒருவகையில் அவர் நமது பிதாவாக இருக்கிறார், மற்றொன்றில் அவர் பரலோகத்தில் இருக்கும் பிதாவாக இருக்கிறார் என்பதாகும். அவர் பூலோக தந்தை இல்லை, மற்றும் அவர் எப்போதும் தேவன் என்பதையும் மறக்க கூடாது. நமது ஜெபங்களில், தேவனைக் குறித்து எந்தவிதமான மனுஷீக எண்ணமும் கொள்ளக் கூடாது. சில நேரங்களில், நம்முடைய வகுப்புத் தோழன் மற்றும் சக மனிதரிடம் பேசுவதற்கேதுவான மனபோக்குக்கு உட்பட்டு, அவருடன் மிகவும் சாதாரணமாக சமமான நிலையில் பேசுகிறவர்களாகிறோம். உண்மையில் அவர் நம்முடைய பிதாவாக இருக்கும் அதே நேரத்தில், அவர் மகத்துவமுள்ள தேவனாகவும் எப்போதும் இருக்கிறார்.

தேவனைக் குறித்த இந்த ஆவிக்குரிய சிந்தனையின் சமநிலையை, ஆபிரகாமின் சம்பவம் ஒன்றில் காணலாம். "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ" (ஆதி 18:18) என்று தேவன் கூறி, தமது பிள்ளையான ஆபிரகாமுக்கு தனது தந்தை குணாதியசத்தை வெளிப்படுத்தினார்; மேலும், ஆபிரகாமை கர்த்தர் "சிநேகிதன்" (யாக் 2:23) என்று அழைத்தார். இருப்பினும், தேவனின் சர்வ வல்லமையையும், முடிவற்ற மகிமையையும் உணர்ந்தவராக, "அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்திரமாக: இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்" (ஆதி 18:27) என்றார்.

நாம் ஜெபிக்கும்போது தேவனைக் குறித்த ஏதாகிலும் ஒரு உருவத்தை நமது நினைவில் கொள்ள வேண்டுமா? கண்களை மூடி ஜெபிக்கும்போது, மங்களான நிலையில் ஒரு மனிதனின் உருவத்தை காண்கிறீர்களா? நாம் இந்த பூமிக்குரியவர்களாக இருப்பதால், இதுபோன்ற நினைவுகளை பெறுவது இயற்கையானதே. ஆனால், இது தவறானது. நமது இரட்சகரை நாம் பூமிக்குரிய பரிமாணங்களில் ஒருபோதும் பார்க்க கூடாது என்று திருவசனம் நமக்குப் போதிக்கிறது: "நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2கொரி 5:16). பரலோகத்திலிருக்கும் கிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு, "அவரை நீங்கள் காணமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூருகிறீர்கள்" (1பேது 1:8) என்றார். பரலோகப் பிதா மற்றும் கிறிஸ்துவைக் குறித்த பூமிக்கடுத்த நினைவுகளைக் கொள்ளும் மனப்போக்கை நாம் புறம்பே அகற்ற வேண்டும்.

"கர்த்தருடைய ஜெபம்", இரண்டு முறை பரலோகத்தைக் குறித்து பேசுகிறது. பரலோகம் எங்கே இருக்கிறது? வேதாகமம் மூன்றுவிதமான வானங்கள் (பரலோகங்கள்) இருக்கின்றது என்று கூறுகிறது (2கொரி 12:2). முதலாவது, பூமிக்கு மேலே, மேகங்கள் உளாவுகின்ற பறந்த வெளி முதல் பரலோக ஆகாயம் ஆகும் (சங்கீ 104:12). கிரகணங்கள் மற்றும் நட்சத்திரங்கள் இருக்கும் ஆகாய விரிவு இரண்டாவது பரலோகம் ஆகும் (ஆதி 1:14; சங் 33:6). தேவனுடைய மகிமை, மற்றும் கிறிஸ்துவின் மகிமையான சரீரம், அவருடைய தூதர்கள் மற்றும் பரிசுத்தவான்கள் இருக்கும் இடம் மூன்றாவது பரலோகம் ஆகும் (சங் 103:19; 1இராஜ 8:27). தேவன் எங்கும் நிறைந்தவர், நரகத்திலும் கூட (சங்கீ 139:8), ஆனால் அவருடைய மகிமை பிரசன்னமாக இருக்கும் இடம் பரலோகம் என்று அழைக்கப்படுகிறது.

தேவனாகவும், பரலோகத்திலும் இருக்கின்ற நிலையில் நமது பிதாவானவர் நம்முடைய சரீரம் மற்றும் ஆத்துமாவிற்குத் தேவையான அனைத்தையும் தமது குமாரனாகிய இயேசுவின் மூலம் தர முடியும்; அவர் அப்படி செய்வதை முழு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். அவரால் கூடாதது ஒன்றுமில்லை!

**121-க்கான கேள்விகள்:**

1. இந்த ஜெபத்தின் முகவுரை வரியில் பயபக்தி மற்றும் நம்பிக்கை, தெய்வீக பயம் மற்றும் விசுவாசம்

ஆகியற்றுக்கிடையேயான சமநிலையை வெளிப்படுத்துகிறது. சரியா, தவறா?..................

2. தேவனைக் குறித்த, “உலக பிரகாரமான எண்ணம்” என்றால் என்ன? ......................................................
.................................................................................................................................................................
3. “அட நம்ம ஆண்டவர்தான்” என்னும் சொற்றொடர் மீது உங்கள் கருத்தென்ன? ......................................
.................................................................................................................................................................
4. ஆபிரகாம் தேவனுடைய ..................................-ஆக இருந்தும், தேவனிடம் அவர் பேசும்போது, “..........
......................................................................................................................... என்றார்”
5. நம்முடைய ஜெபங்களில் கிறிஸ்துவைக் குறித்து பூலோக எண்ணம் கொள்ளக் கூடாது என்பதற்கான புதிய ஏற்பாட்டு வசனக் குறிப்பை எழுதுக. ..................................
6. ஒருவரைக் குறித்த ஒரு தோற்றத்தையே மனதில் கொள்ளாமல் அவரிடம் பேசுவது என்பது... அ)இலகுவானது, ஆ)கடினமானது, இ)முடியாதது... எது?..........
7. “பரலோகம் / வானம்” என்பதை வேதாகமம் எவ்வகைகளில் பயன்படுத்துகிறது? குறிப்பு தருக:
   அ.
   ஆ.
   இ.
8. நம்முடைய பரலோகப்பிதா சர்வ வல்லமையுள்ளவராக இருப்பதால், நாம் தைரியமாக எவைகளை அவரிடமிருந்து எதிர்பார்க்கலாம்? ..............................................................................................................
9. எவ்விதத்தில் தேவன், பூமியிலோ அல்லது நரகத்திலோ இல்லாமல், பரலோகத்தில் இருக்கிறார்?
.................................................................................................................................................................
10. வெளிப் 5:13-ஐ எழுதவும்:

**122. முதலாவது விண்ணப்பம் என்ன?**

“உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக,” அதாவது: முதலாவது, உம்மை அறிந்து, உம்முடைய வல்லமை, மேன்மை, நீதி, தயவு மற்றும் சத்தியம் வெளிப்படும் உம்முடைய எல்லா கிரியைகளிலும் உம்மை பரிசுத்தப்படுத்தி, பெரிதாகக் கனப்படுத்தி, துதிக்க எங்களுக்கு உதவி தாரும்; மேலும், உம்முடைய நாமம் தூஷிக்கப்படாமல், எங்கள் நிமித்தம் கனப்படுத்தப்பட்டு புகழப்பட நாங்கள் எங்களின் முழு வாழ்வு, நினைவுகள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளை நல்வழிப்படுத்த உதவி செய்யும் என்பதாகும்.

***

இப்போது நாம் கர்த்தருடைய ஜெபத்தில் உள்ள ஆறு விண்ணப்பங்களை படிக்க ஆரம்பிக்கிறோம். இந்த ஆறு விண்ணப்பம், அல்லது வேண்டுதல்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்படுகிறது.

அ. முதல் மூன்று விண்ணப்பங்கள் அவருடைய நாமம், அவருடைய இராஜ்ஜியம், அவருடைய சித்தம் சம்மந்தப்பட்ட, தேவனைக் குறித்ததாக இருக்கிறது.

ஆ. இரண்டாவது மூன்று விண்ணப்பங்கள், நம்முடைய சரீரத்தின் தேவைகள், பாவமன்னிப்பு மற்றும் ஆவிக்குரிய பாதுகாப்பைக் குறித்ததாக இருக்கிறது.

நம்முடைய ஜெபங்கள் மற்றும் விருப்பங்களிலும் தேவனே முதலாவதாகவும், நாமோ இரண்டாவதாகவும் இருக்க வேண்டும். இதுவே வேதாகம கிறிஸ்தவத்தின் எப்போதுமான ஒழுங்காக இருக்கிறது.

முதலாவது விண்ணப்பம், “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக”, அதாவது, “உம்முடைய நாமத்தை பரிசுத்தமானதற்கு ஏதுவாக்கும்.” அப்படியானால் என்ன? முதலாவது, தேவனுடைய நாமம் எதைக் குறிக்கிறது என்பதை தெளிவாக அறிய வேண்டும். மூன்றாவது கற்பனைக்கான கேள்வி 99-ஐ தொடர்பு படுத்தி பார்க்கவும். அங்கே, தேவனுடைய நாமம் அவருடைய ஆள்தத்துவத்தைக் குறிப்பிடுகிறது என்று நாம் பார்த்தோம். திருவசனத்தில், தேவன் தம்மை அழைப்பதற்கு, “ஆண்டவர்”, “கர்த்தர்”, “பிதா,” “குமாரன்,” “இயேசு”, “கிறிஸ்து”, “பரிசுத்த ஆவியானவர்” போன்ற பல பெயர்களைப் பயன்படுத்துகிறார். தேவன் தமது ஆள்த்தத்துவத்தை, தமது படைப்பின் கிரியைகள் மற்றும் அவைகளை பாதுகாக்கும் செயல்களிலும் வெளிப்படுத்துகிறார்: “எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!” (சங் 8:1). இப்படியாக கர்த்தருடைய நாமம் அவருக்கே உரியதாகவும், அவருடைய கிரியைகள் மற்றும் அவருடைய வார்த்தையிலும் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இப்போது தேவன் தம்மில்தானே பூரண பரிசுத்தம் மற்றும் மகிமை உடையவராக இருக்கிறார். இதில் எந்தவொரு படைப்பும் அவருடைய மகிமையில் கொஞ்சம் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியாது. ஆகவே, தேவன் தாம் ஏற்கனவே பரிசுத்தமாக இருப்பதற்கு மேலாக இன்னும் பரிசுத்தமாக வேண்டும் என்பதற்கான ஜெபம் அல்லவே!

மற்றபடி, இந்த விண்ணப்பத்தை நாம் ஜெபத்தில் ஏறெடுக்கும்போது, தேவனுடைய பரிசுத்தம் அவருடைய எல்லா படைப்பினாலும், முக்கியமாக நம்மால், ஏற்றுக்கொள்ளப்பட்டு கனப்படுத்தப்பட வேண்டும் என்று விண்ணப்பிக்கிறோம். தேவனுடைய நாமம் --தன்னையே-- பரிசுத்தப்படுத்தப்பட்டு, கனப்படுத்தப்படுவதை கேட்டகிசம் இருவழிகளில் பேசுகிறது:

1. *தேவனுடைய உண்மையான அறிவினால்:* தேவனை சரியாக மகிமைப்படுத்தி ஆராதிக்க, முதலாவது

நாம் அவரை சரியாக அறிய வேண்டும். முதலாவது, தேவனைக் குறித்து திருவசனத்திலிருந்து படிக்கிறோம். அடுத்து, திருசவனத்தின் சத்தியத்தின் மூலம் இயற்கையை நாம் பார்க்கும்போது, தேவனைக் குறித்து இன்னும் அதிகமாக அறிகிறோம்: “வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது” (சங் 19:1).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து நாம் மறுபிறப்பை அடையாத நிலையில் தேவனை நாம் அறிந்து அவரை மகிமைப் படுத்துவது கூடாத காரியம். தேவனைக் குறித்து நாம் அறியும்போது, தேவன் எல்லையற்ற “வல்லமை, மேன்மை, நீதி, தயவு மற்றும் சத்தியம்” உடையவராக இருக்கிறதை நாம் காண்கிறோம். ஜெபத்தின் மேன்மையான நோக்கம் என்னவெனில், தேவனை அவருடைய மகிமை மற்றும் மகத்துவத்திற்காக துதித்து, அவருடைய நாமத்தை இன்னும் அதிகமாக அறிந்து, அவருடைய நாமத்தை புனிதப்படுத்துவதற்காக ஜெபிப்பதாகும்.

2. *தேவனுக்கென்று புனிதமாக்கப்பட்ட வாழ்க்கையினால்:* தேவனுடைய மகிமையை வெளிப்படுத்த நமது வார்த்தைகள் மட்டும் முக்கியமல்ல, ஆனால் அவருடைய நாமம் மகிமைப்படுவதற்கேதுவாக நமது வாழ்வும் இருக்க வேண்டும். சாட்சியுள்ள ஜீவியம் இல்லாமல் வெளிப்படும் வார்த்தைகள் அர்த்தமற்றவைகளாகவும், மாய்மாலமாகவும் இருக்கிறது, காரணம், அவைகள் நேர்மையான இருதயத்திலிருந்து வரவில்லை. கவனிக்கவும், நம்முடைய “சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்கள்” ஒன்று தேவனுடைய நாமத்தை கனப்படுத்துகிறது அல்லது கனவீனப்படுத்தி தூஷிக்கும்படி செய்கிறது. தேவனுடைய மகிமையைக் குறித்த காரியத்தில் நாம் ஒருபோதும் நடுநிலைப்பட்டவர்கள் அல்லவே. “ஆகையால், நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.” (1கொரி 10:31).

நாம் “முழு வாழ்வையும் நல்வழிப்படுத்துவது” எப்படி? அனுதினமும் திருவசனத்தை கற்க முறையாக வாசிப்பதாலும், சபை ஆராதனைகளில் பங்கு கொள்வதாலும்; எல்லா நிலைகளிலும் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதாலும், மற்றவர்களுக்கும் சுவிசேஷத்தைக் கொடுப்பதில் கருத்துள்ளவர்களாக இருப்பதாலும் ஆகும். கடைசியானது, ஆனால் கனவீனமானது அல்ல என்ற நிலையில், தினமும் இந்த விண்ணப்பத்திற்காக தேவனிடம் ஜெபிக்க வேண்டும்.

பரலோகத்தில், பரிசுத்தவான்களும், தேவதூதர்களும், “பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்” என்று தேவனை ஓயாமல் துதித்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே நம்முடைய இருதயங்களும், வாழ்வும் எப்போதும் தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு அர்பணிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

**122-க்கான கேள்விகள்:**

1. கர்த்தருடைய ஜெபம் ............. விண்ணப்பங்களை உடையதாக இருக்கிறது. அவைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது? அ........................................................, ஆ...............................................................................
2. தேவனுடைய “நாமும்”,... அ)அவர் சர்வவல்லவர் என்ற பெயரை, ஆ)அவருடைய மகாப் பெரிய கிரியைகளை, இ)அவருடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளில் வெளிப்படுத்தியுள்ள அவருடைய ஆள்த்தத்துவத்தைக் .... குறிக்கிறது. எது?...........
3. தேவனுடைய நாமத்தை பரிசுத்த மாக்குதல் என்பது,... அ)உண்டாக்குதல்; ஆ)ஆண்டவருடைய நாமத்தை பரிசுத்தமாகக் காத்தல்... என்பதாகும். எது?.........
4. நம்முடைய சொந்த பரிசுத்த வார்த்தைகள் மற்றும் செயல்களினால் தேவனுடைய பரிசுத்தத்தைக் கூட்ட முடியும். சரியா, தவறா? ...................., விளக்கம்: ...............................................................................
5. ஆத்துமாக்களை இரட்சிப்புக்கேதுவாக நடத்துவதைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது, தேவனுடைய நாமத்தின் பரிசுத்தத்தை தேடுவதேயாகும். சரியா, தவறா? ......................
6. தேவனுடைய நாமம் பரிசுத்தமாக்கும்படிக்கு நாம் வேண்டும் இரு அடிப்படை வழிகள் என்ன? அ......................................................................, ஆ.............................................................................
7. பின்வரும் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய மகிமைகள் என்ன?
   சங் 36:5......................................................................................................................................
   சங் 11:9:137 ..............................................................................................................................
   ரோமர் 1:20 .................................................................................................................................
   சங்கீ 104:24 ...............................................................................................................................
   நாரம் 1:3......................................................................................................................................
   1யோவ 4:8 ...................................................................................................................................
8. தேவனை மகிமைப்படுத்துவதற்கு ஒருவர் முதலாவது எந்த பெரிய நன்மையை அனுபவித்திருக்க வேண்டும்? ..........................................................................................................................
9. தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக, நமது வாழ்வை நல்வழிப்படுத்துவதற்கான சில வழிகளை எழுதுக:
   அ.
   ஆ.
   இ.

10. சங்கீதம் 151:1-ஐ எழுதுக:

**123. இரண்டாவது விண்ணப்பம் என்ன?**

"உம்முடைய இரஜ்ஜியம் வருவதாக", அதாவது: உம்முடைய வார்த்தை மற்றும் ஆவியினால் எங்களை ஆளுகை செய்வீராக, அதனால் நாங்கள் எங்களையே இன்னும் அதிகமதிகமாக ஒப்புக் கொடுக்கவும்; உமது திருச்சபையை பாதுகாத்து பெருகச் செய்யும்; நீர் ஒருவரே எல்லாவற்றுக்கும் எல்லாமுமாயிருக்கவும், உம்முடைய இராஜ்ஜியம் வரும்வரை, உம்முடைய பரிசுத்த வார்த்தைகளுக்கு எதிராக வரும் எல்லா துன்மார்க்க உபாயங்களையும், உமக்கு எதிராக தன்னில்தானே உயர்த்தும் எல்லா வல்லமைகளையும், சாத்தானுடைய செயல்களையும் அழிப்பீராக என்பதாகும்.

***

மாதிரி ஜெபத்தில் வரும், "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக," என்ற இரண்டாவது விண்ணப்பம், மிகவும் முக்கியமான சத்தியங்கள் அடங்கியதாக இருக்கிறது, அவைகளை சரியாக அறிய முயன்று, அவைகளுக்காக தினமும் ஜெபிக்க வேண்டும்.

நாம் ஜெபிக்க வேண்டிய தேவனுடைய இராஜ்ஜியம் என்பது என்ன?

தேவனுடைய இராஜ்ஜியம் என்பது தேவன் தமது படைப்பின் மீது செய்யும் ஆளுகை ஆகும். தனது பிரஜைகள் மீது ஆட்சி செய்யும்படி உரிமையும், அதிகாரமும் உடைய ஒருவரே இராஜா ஆவார். எல்லாவற்றின் மீதும் ஆட்சி செய்வதற்கான அதிகாரத்தை தேவன் ஒருவர் மட்டுமே உடையவராக இருக்கிறார். ஆகவே, "கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது" (சங் 103:19). ஆனால் தீய தேவதூதர்களின் கலகம் மற்றும் மனிதன் பாவத்தில் விழுந்ததாலும், தேவனுடைய இராஜ்ஜியம் அவருக்கு எதிராக சாத்தானின் ஆளுகையின் கீழ் மாற்றப்பட்டது. ஆகவே, மனிதர்கள் மனவிருப்பத்துடன் தேவனிடம் திரும்பி, தேவனை தம் மீது ஆளுகை செய்யும்படி வேண்டுகிற மற்றுமொரு இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினார். இது கிருபையின் இராஜ்ஜியம், இது பரலோக இராஜ்ஜியம் அல்லது தேவனுடைய இராஜ்ஜியம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த தேவனுடைய இராஜ்ஜியம், கர்த்தர் இராஜாவாக ஏற்படுத்திய இயேசு கிறிஸ்துவின் ஆள்த்தத்துவம் மற்றும் கிரியைகளினாலானதாகும். கிறிஸ்துவாகிய இராஜா, தமது மீட்பின் கிரியையால், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் இருதயத்தில் இந்த இராஜ்ஜியத்தை உருவாக்கும் பணியிலிருக்கிறார். "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக" என்று நாம் ஜெபிக்கும்போது, கிறிஸ்து தமது ஆளுகையை விரிவு படுத்தவும், அதனால் அது முழுமையடைந்து, சாத்தானின் இராஜ்ஜியத்திற்கும் மேலாக தமது இராஜ்ஜியம் என்றும் வெற்றிகரமாக இருக்கும்படி தேவனிடம் விண்ணப்பிக்கிறோம் என்பதாகும்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் தொடர்பாக கேட்டகிசம் மூன்று காரியங்களை பேசுகிறது:

1. *தேவனுடைய இராஜ்ஜியத்தின் தன்மை:* எங்கெல்லாம் தேவனுடைய ஆளுகைக்கு கிறிஸ்துவுக்குள் உட்படும்படி தன்னார்வ அர்ப்பணிப்பு காணப்படுகிறதோ அங்கெல்லாம் தேவனுடைய இராஜ்ஜியம் காணப்படுகிறது. இது மனிதனுடைய இருதயத்தை அடிப்படையாக உட்படுத்தும் ஆவிக்குரிய இராஜ்ஜியமாகும். நம்முடைய ஆண்டவர் பிலாத்துவிடம், அவருடைய "இராஜ்ஜியம் இவ்வுலகத்துக்குரியது அல்ல" (யோவா 18:36) என்றார், அதாவது, இவ்வுலகத்தின் இராஜ்ஜியங்களைப் போல வலுக்கட்டாயமாகவும், அதிகாரத்தைப் பயன்படுத்தியும் மக்களைக் கீழ்ப்படியச் செய்வதாக இருக்காது; ஆனால், இது சத்தியத்திற்கான அன்பை உடையதாக இருக்கும் (வ 37). கிறிஸ்துவின் ஆவி மற்றும் வார்த்தைக்கு நாம் நம்மை கீழ்படியச் செய்யும் நிலையில் நாம் இந்த இராஜ்ஜியத்துக்குள் இருக்கிறோம், அந்த இராஜ்ஜியமும் நமக்குள் இருக்கிறது (ரோ 14:17).

திருச்சபை மற்றும் இராஜ்ஜியம் இவ்விரண்டுமே ஒன்றுதானா? கேட்டகிசம் இங்கே திருச்சபையை இராஜ்ஜியம் என்று கூறுகிறது. நாம் திருச்சபையை கண்களால் காணக்கூடாத உலகளாவிய கண்ணோட்டத்தில் காணும்போது இது உண்மையே. தேவனுடைய இராஜ்ஜியம் ஸ்தல சபையை உள்ளடக்கியதாக இருப்பினும், ஒழுங்கான அமைப்பைப் பெற்ற பல திருச்சபைகளை உள்ளடக்குவதற்கும் மேலாக, எந்த மனிதர்கள், மனித முயற்சிகள் மற்றும் நிறுவனங்கள் தேவனுடைய ஆளுகையை அங்கீகரிக்கின்றதாக இருக்கிறதோ அவைகள் அனைத்துமே இந்த இராஜ்ஜியத்திற்கு உட்பட்டதாகும். இப்படியாக, சமுதாய ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ காப்பகங்கள், கிறிஸ்தவ பள்ளிகள், கிறிஸ்தவ மருத்துவமனைகள், மற்ற பல கிறிஸ்தவ நிறுவனங்கள் மற்றும் செயல்கள் யாவும் இராஜ்ஜியத்தின் பணிகள் ஆகும். கிறிஸ்துவினுடைய ஜீவன் மற்றும் வார்த்தையைப் பெற்ற தேவனுடைய ஜனங்கள் வாழ்வில் எல்லாமுமான: விவசாயம், மருத்துவம், பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற அனைத்தையும் இராஜ்ஜியத்தின் பணிகளாக மாற்ற வேண்டும் (கொலோ 3:23,24).

இந்த உலகத்தில் உள்ள கர்த்தருடைய இராஜ்ஜியத்தில் மாய்மாலக்காரர்களும், பொய்யான கிறிஸ்தவர்களும் அடங்குவார்கள் என்பதை கவனிக்க வேண்டும். கிறிஸ்துவின் ஊழியர்கள் என்று சொல்லும் அனைவரும் அவருடைய உண்மையான ஊழியர்கள் அல்ல என்பதை கிறிஸ்து பல உவமைகள் வழியாக போதித்தார். அவர்கள் இந்த இராஜ்ஜியத்திலிருந்து புறம்பே தள்ளப்பட்டு எரிக்கப்படுவார்கள் (மத் 13:30,41,49; 25:1,14).

2. *தேவனுடைய இராஜ்ஜியத்தின் எதிரிகள்:* தேவனுடைய இராஜ்ஜியம் பாதுகாக்கப்பட்டு வளரவேண்டும்

என்பதற்காக ஜெபிக்கும் நாம், இராஜ்ஜியத்திற்கு எதிரான யாவும் அழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் ஜெபிக்க வேண்டும். கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின் எதிரிகள் யார்? முதலாவது, தனக்குச் சொந்தமான இருளின் இராஜ்ஜியத்தை உருவாக்கியுள்ள சாத்தான் (மத் 4:8,9; யோவ 12:31; எபே 2:2). இந்த இரு இராஜ்ஜியங்களுக்குமிடையே கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு, "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே 6:12). தேவனுடைய ஜனங்களை கெடுத்து, சீரழிக்கும்படியாக சாத்தான் இந்த இராஜ்ஜியத்துக்குள் கள்ள உபதேசங்கள் மற்றும் பாவமான காரியங்களை கொண்டுவர முயற்சி செய்கிறான். கிறிஸ்தவர்களின் மத்தியிலிருக்கும் சண்டையும் கசப்பும் எதிரியின் தாக்குதல்களாகும் (சங் 83:2,3; 1யோவ 3:10; 4:11). இராஜ்ஜியத்திற்கு வெளியில் இருக்கும் நமது எதிரிகள் துன்பங்களினால் நம்மை அழிக்கப் பார்க்கிறார்கள் (1பேது 4:12-14). தேவன் நமக்கு கொடுத்துள்ள ஆவிக்குரிய போராயுதங்களைப் பயன்படுத்தி இந்த எல்லா எதிரிகளுக்கும் எதிராக நாம் ஜெபித்து யுத்தம் செய்கிறவர்களாக இருக்க வேண்டும் --2கொரி 10:4,5 மற்றும் எபே 6:13-18-ஐ பார்க்கவும்.

3. *தேவனுடைய இராஜ்ஜியத்தின் இலக்கு:* இந்த உலகத்தில் உள்ள கிருபையின் இராஜ்ஜியம், தேவனுடைய இராஜ்ஜியத்தில் தற்காலிகமாக இருக்கும் ஒரு பகுதியாகும். கிறிஸ்து மீண்டும் வரும்போது இராஜ்ஜியத்தின் முழுமையும் வருகிறதாக இருக்கும். பின்னர் இராஜ்ஜியம் மகிமையான இராஜ்ஜியமாக மாறும். அப்போது, தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரின் இருதயமும் பரிசுத்தமாக்கப்பட்டு கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்பட்டதாகும். அதன் பிறகு கிறிஸ்துவே இந்த இராஜ்ஜியத்தை பிதாவிடம் திருப்புவார்: "அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்ஜியத்தை ஒப்புக் கொடுப்பார்." (1பொரி 15:24). அப்போது, கிறிஸ்துவின் எதிரிகளும், இயேசு உண்மையும், மகா வல்லமையும் உடைய ஒரே இராஜா என்பதை அறிக்கை செய்யும்படி பணிவார்கள். (கிறிஸ்து மீண்டும் வந்து எருசலேமில் தமது ஆயிரம் வருட அரசாட்சியை ஸ்தாபித்து பூமிக்குரிய ஆட்சியை ஆரம்பிக்கும்போது முழு இராஜ்ஜியமும் முடியவடையும் என்னும் ப்ரி-மில்லெனிய போதனையை நாம் ஏற்றுக் கொள்வதில்லை! மேலும் விளக்கத்திற்கு கேள்வி 52-ஐப் பார்க்கவும்.)

நம்முடைய இருதயம் மற்றும் வாழ்க்கையில் தேவனுடைய இராஜ்ஜியம் மகாப் பெரிய வல்லமையோடு பிரவேசிக்க வேண்டும் என்று தினமும் ஜெபிக்க வேண்டும். திருச்சபைகள் அதிகமாக வேதத்தைச் சார்ந்ததாகவும், பரிசுத்தத்திலும் வளரும்படி ஜெபிக்க வேண்டும். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மீட்கப்பட்டு இராஜ்ஜியத்திற்குள் வரும்படி வெளி ஊழியங்கள் வளர ஜெபிக்க வேண்டும். சமூக அரசுத் துறைகளால் கிறிஸ்துவினுடைய சட்டங்கள் அதிகமதிமாக ஏற்றுக் கொள்ளப்படும்படி ஜெபிக்க வேண்டும். கிருபையின் இராஜ்ஜியம் விரைவில் நித்திய மகிமையின் இராஜ்ஜியமாக ஜெபிக்க வேண்டும்.

**123-க்கான கேள்விகள்:**

1. தேவனுடைய இராஜ்ஜியம் என்பது அவர் தமது படைப்பின் மீது செய்யும் ஆளுகை ஆகும். சரியா, தவறா? ....................
2. கிறிஸ்து தமது சிலுவை ....................................-ன் தமது இராஜ்ஜியத்தை நிறுவினார்.
3. இராஜாவாக கிறிஸ்து இந்த இராஜ்ஜியத்தை .....................................-லிருந்து, தமது .................... மற்றும் ஆவியின் மூலம், தமது ஜனங்களின் ..................................... ஆளுகிறார்.
4. கண்களால் காணப்படும் சபையிலிருந்து தேவனுடைய இராஜ்ஜியம் எப்படி மாறுபடுகிறது? ..........................................................................................................................................
5. தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து கேட்டகிசம் போதிக்கும் மூன்று தன்மைகள் என்ன? அ......................................................................................., ஆ......................................................................................., இ.......................................................................................
6. இந்த உலகில் உள்ள தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே அங்கமாக இருப்பார்கள். சரியா, தவறா? ..................., விளக்கம்: ....................................................... ..........................................................................................................................................
7. தேவனுடைய இராஜ்ஜியத்திற்குரிய எதிரிகள் யார்? 1.இராஜ்ஜியத்திற்கு உள்: ..............................................., 2.இராஜ்ஜியத்திற்கு வெளியே: ..........................................................................................................
8. எபேசியர் 6:13-18-ன்படி நம்முடைய ஆவிக்குரிய எதிரிகளை எந்த ஆவிக்குரிய ஆயுதம் கொண்டு எதிர்க்க வேண்டும்.
   அ.) நமது கச்சை?....................................................., ஆ.)மார்க்கவசம்? .........................................................,
   இ.)பாதரட்சை ................................................................, ஈ.)கேடகம்? ......................................................
9. 1கொரி 15:24-25-ன்படி, கிறிஸ்து இராஜாவாக ஆட்சி செய்து, தமது எதிரிகளை மேற் கொள்கிறார், பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு / எதிரி என்ன? ..........................................................................
10. எபிரேயர் 12:28-ஐ எழுதுக:

**124. மூன்றாவது விண்ணப்பம் என்ன?**

"உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக", அதாவது: நாங்களும் மற்றும் எல்லா மனிதர்களும் தங்களுடைய சுய சித்தத்தை கைவிட்டு, நன்மையை மட்டுமே தரும் உமது சித்தத்திற்கு மறுப்பில்லாமல் கீழ்ப்படியவும்; பரலோகத்தில் உள்ள தூதர்கள் போல ஒவ்வொருவரும் முழு விருப்பத்துடனும், நேர்மையாகவும் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும்.

***

மாதிரி ஜெபத்தில் உள்ள மூன்றாவது விண்ணப்பமான, "உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்பதற்கு வந்திருக்கிறோம். இந்த முதல் மூன்று விண்ணப்பங்களும் தேவனுடைய மகிமையைக் குறித்தவைகள் என்பதை மறக்க கூடாது. இந்த மூன்று விண்ணப்பங்களிலும் ஒரு தொடர் முன்னேற்றம் காணப்படும். மனிதர்களின் இருதயங்களில் தேவனுடைய இராஜ்ஜியம் வருவதால் தேவனுடைய நாமம் மகிமைப்படுத்தப்படுகிறது, அவருடைய சித்தம் செய்யப்படுவதால் அவருடைய இராஜ்ஜியம் மனிதருடைய இருதயங்களுக்கு வருகிறது. அவருடைய நாமம், இராஜ்ஜியம் மற்றும் சித்தம் ஆகிய மூன்றும் சேர்ந்தே செல்கிறது, அவைகள் பிரிக்கப்பட முடியாது.

இந்த விண்ணப்பத்தையும், இந்த கேட்டகிசத்தின் கேள்வியையும் புரிந்து கொள்ள, முதலாவது, தேவனுடைய சித்தம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேவனுடைய சித்தத்தை வேதம் இருவழிகளில் பேசுவதை நாம் காண வேண்டும். அப்படியானால் அவருக்கு இரண்டு சித்தங்கள் உண்டு என்று அல்ல. தேவன் ஒருவரே, இருப்பினும், தீர்மானிக்கப்பட்ட (decree) தேவனுடைய சித்தம் மற்றும் கட்டளையிடப்பட்ட தேவனுடைய சித்தம் ஆகிய இவ்விரண்டுக்கும் இடையேயான வித்தியாசத்தை நாம் காணவேண்டும். அல்லது, நாம் அவைகளை, தேவனுடைய இரகசியமான சித்தம் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட சித்தம் என்று அழைக்கலாம். (உபா 29:29-ஐப் பார்க்கவும்.) தேவனுடைய இரகசியமான சித்தம் அல்லது உறுதி செய்யப்பட்ட சித்தமானது எல்லாவற்றுக்குமான தேவனுடைய திட்டத்தைக் குறிக்கிறது. தேவனுடைய இந்த சித்தம் அல்லது திட்டம் என்பது, ஏற்கனவே தேவன் தாம் படைப்பின் கிரியைகளை ஆரம்பிக்கும் முன்னரே தீர்மானிக்கப்பட்டவைகள் ஆகும். இந்த சித்தமானது பரலோகத்திலும், பூமியிலும், நரகத்திலும் எப்போதும் பூரணமாக நிறைவேற்றப்படுகிறது! கர்த்தர் சொல்கிறார், "என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று" (ஏசா 46:10). "அவர் சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவன் யார்?" (ரோம 9:19). மேலும், தானி 4:35-ஐப் பார்த்து, கேள்விகள் 26,27 மற்றும் 28-ஐ மீண்டும் வாசிக்கவும்.

தேவன் தீர்மானித்தவைகள் நடைபெறவேண்டும் என்று ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை, காரணம், அவைகள் ஒருபோதும் தோற்றுப்போவதுமில்லை; ஆனால் அவருடைய கட்டளைகள், அருளுரைகள் மற்றும் போதனைகள் விசுவாசிகளான நாமும் மற்றும் அனைத்து மனிதர்களும் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படும்படி ஜெபிக்க வேண்டும். தேவனுடைய பரிசுத்த கற்பனைகளின்படி நமது வாழ்வு இருக்கும்படியாக எப்போதும் மிகக் கருத்துடன் நாம் இருக்க வேண்டும்; மேலும் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிய தேவன் கிருபை தரும்படி ஜெபிக்க வேண்டும். தேவனுடைய இரசிய சித்தமானது நம்மிடம் தாழ்மையான பணிந்து கொள்ளுதலை கட்டளையிடுகிறது; வெளிப்படுத்தப்பட்ட சித்தமோ நம்மிடம் கீழ்ப்படிதலைக் கட்டளையிடுகிறது. இந்த மூன்றாவது விண்ணப்பத்தில் தேவனுடைய முன்குறித்தல் போன்ற இரகசிய சித்தத்தைக் குறிக்காமல், அவருடைய கட்டளை என்னும் சித்தத்தைக் குறிக்கிறது.

இந்த கேள்வியில் கூறப்பட்டுள்ள மூன்று முக்கியமான குறிப்புகளைக் கவனிக்கவும்:

1. *நாம் நம்முடைய சுய சித்தத்தை கைவிட வேண்டும்.* நாம் நமது சுயத்தில் செயல்படும்போது, நமது நோக்கம், நமது விருப்பம் மற்றும் நமது தீர்மானங்கள் எப்போதும் தவறானதாகவும், தீமையானதாகவும் இருக்கிறது. வீழ்ந்த நிலையில் உள்ள, பாவியான மனிதன் தேவனுடைய சித்தம் குறித்த அறிவு இல்லாத நிலையில் ஒருபோதும் நல்லவற்றை தானாக செய்ய முடியாது. தேவனுடைய வார்த்தை செய்யும்படி கட்டளையிடுவதே, "நல்லது", மற்றவை யாவும் தீமையானதே. நம்முடைய சுய சித்தத்தை கைவிடுவது என்பது, இயற்கையாகவே நம்முடைய சித்தமானது சீர்குலைந்ததாக இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு, முழுமையாக தேவனுடைய சித்தத்திற்கு அர்பணிக்க தேவனிடம் கிருபைக்காக மன்றாடுவதைக் குறிக்கும்.

2. *தேவனுடைய சித்தத்தை நாம் செய்ய வேண்டும்.* தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவது என்பது கிறிஸ்தவராகிய நமக்குரிய அழைப்பும், செய்ய வேண்டிய பணியுமாகும். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" (மத் 12:50) என்று இயேசு சொன்னார். தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு விருப்பமில்லாத எவரும் நித்தியமான பரலோக இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியாது (மத் 7:21). நாம் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கேயன்றி வேறெதற்காகவும் படைக்கப்படவில்லை. நாம் தேவனுக்கு கீழ்ப்படியும்போது

நாம் உண்மையாகவே வாழ்ந்து மகிழ்ச்சியை அனுபவிக்கிறோம். "என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்வதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவா 4:34) என்று இயேசு கூறினார்.

3. *தேவனுடைய சித்தம் எப்படி செய்யப்பட வேண்டும்?* பரலோகத்தில் பூரணமாக கீழ்ப்படிதல் இருப்பது போல், பூமிலேயும் கீழ்ப்படிதல் இருக்க வேண்டும். தம்முடைய தரத்தை அவர் ஒருபோதும் குறைத்தது இல்லை.

அ. "மறுப்பு" அல்லது "முறுமுறுப்பு" இல்லாமல், தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். இது இலகுவானதாகக் காணலாம், ஆனால் கீழ்ப்படியாமல் போவதற்கான சோதனை பலமாக இருக்கும்போது கீழ்ப்படிவது மிகவும் கடினமாக இருக்கும். சில நேரங்களில் தேவனுடைய சித்தத்தை மறந்து, நம்முடைய சுய காரியங்களைச் செய்வது நன்மை தருவதாக இருக்கும் என்று நாம் நினைக்கலாம். இது சாத்தானுடைய மென்மையான பேச்சாக, நம்மை பாவம் மற்றும் துக்கத்திற்குள் கொண்டுவரும். "தேவனுடைய சித்தம்", மட்டுமே, எப்போதும் நமக்கு நன்மையைக் கொண்டுவரும்.

ஆ. நம்முடைய "அழைப்பு மற்றும் பணியில்" தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்பட வேண்டும். இது சில முக்கியமான நேரங்களில் மட்டுமல்ல, எல்லா நேரங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். வாழ்க்கை பல சிறு சிறு காரியங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது; இந்தப் பொதுவான காரியங்களைச் செய்யும்போது, சிந்தனை, வார்த்தை மற்றும் செயல்களில் தேவனுடைய கற்பனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும். முதலாவது, நமது "பொறுப்புகள்" (வேலைகள் மற்றும் செயல்கள்) ஆரம்பிக்கும் முன் சரியானதாக இருக்க வேண்டும்.

இ. பரலோகத்தில் உள்ள தூதர்கள் மற்றும் பரிசுத்தவான்கள் கீழ்ப்படிவதுபோல தேவனுடைய சித்தத்திற்கு "விருப்பத்துடனும், உண்மையுடனும்" கீழ்ப்படிய வேண்டும். பரலோகக் கீழ்ப்படிதல், பரலோகத்தில் உள்ள தேவதூதர்கள் மற்றும் பரிசுத்தவான்கள் கீழ்ப்படிவது...

1) விருப்பத்துடன் -- எந்தவிதமான முறுமுறுப்பும் இல்லாமல்
2) உண்மையாக -- எந்தவிதமான மாற்றங்கள் இல்லாமல்
3) உடனடியாக -- காலம் தாழ்த்தாமல்
4) எப்போதும் -- தடைகள் ஏதும் இல்லாமல் .... ஆகும்.

சில கடினமான நேரங்களில் தேவனுடைய சித்தத்தை எப்படி கண்டுபிடிக்கிறீர்கள்? உதாரணமாக, எந்த பொருளை வாங்க வேண்டும்? திருமணத்திற்காக யாரை தேர்வு செய்ய வேண்டும்? எந்த கல்லூரிக்குப் போக வேண்டும்? என்றவைகளில். எந்த காரியத்தை செய்வது என்பதை தெரிவு செய்வதற்கு திருவசனத்தின் பொதுவான கண்ணோட்டத்தில் தீர்மானிக்க வேண்டிய பல காரியங்களை நமது வாழ்வில் சந்திக்கிறோம். சில காரியங்கள் பெரிய வித்தியாசம் இல்லாத ஒன்றாக, எதை செய்யும்படி தேர்வு செய்தாலும் இரண்டுமே தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டதாகவும் இருக்கலாம். நாம் சாப்பிடுவதும், குடிப்பதும் கூட, அது சாதாரண சோறு அல்லது பிரியாணி எதுவானாலும், தேவனுடைய மகிமைக்கேதுவாக இருக்க வேண்டும். நாம் தீர்மானம் செய்யும் எந்தவொரு காரியமும் தேவனுடய கற்பனைகளுக்கு எதிரானதாக இருக்குமெனில் அது ஏற்கனவே தவறானதாகும்.

தேவனுடைய சித்தத்தைக் கண்டுபிடிக்க திருவசனம் ஒன்று மட்டுமே அடிப்படை ஆதாரமாக இருக்க வேண்டும், அதை தவிர்த்து வேதாகமம் சாரா "வெளிப்பாடுகளான", சொப்பணம், தரிசனம் மற்றும் அந்நியபாஷை வெளிப்பாடு போன்றவைகளை நாம் சாரக் கூடாது. இன்றைய நாட்களில் இவைகளைச் செய்வதற்கு பலர் உண்டு. அவர்கள் ஆபத்தான தவறுகளில் இருக்கிறார்கள்.

ஆகவே, எல்லாக் காரியங்களிலும் நாம், "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று" (லூக் 22:24) சொல்வோம்.

**124-க்கான கேள்விகள்:**

1. கர்த்தருடைய ஜெபத்தில் உள்ள முதல் மூன்று விண்ணப்பங்களும் தொடரும் வளர்ச்சியில் உள்ளது என்று எதைக் கூறுகிறோம்? ..........................................................................................
..................................................................................................................................
2. தேவனுடைய "சித்தம்" என்று வேதம் எதை அர்த்தப்படுத்துகிறது? விளக்கம்: ..................................................
3. தேவன் இரண்டுவிதமான சித்தங்களை உடையவராக இருக்கிறார்? சரியா, தவறா? ................., விளக்கம்:
..................................................................................................................................
4. தேவன் தமது நித்தியமான தீர்மானங்களை நிறைவேற்றுவதையே மூன்றாவது விண்ணப்பம் குறிக்கிறது. சரியா, தவறா? ....................
5. தேவனுடைய கற்பனையின் சித்தம் பூமியில் ஒருபோதும் பூரணமாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. சரியா, தவறா? .................., விளக்கம்: ..........................................................................................
6. கேள்வி 124 சொல்லும் மூன்று காரியங்கள் என்ன?

அ.

ஆ.

இ.

7. தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்முடைய சொந்த சித்தத்தை முதலாவது கைவிட வேண்டும் ஏன்? ..................................................................................................................................................................
8. நம்முடைய “பொறுப்புகள் மற்றும் .........................................,” தேவனுடைய சித்தத்திற்கு பூரணமாகக் கீழ்ப்படியவது என்பது நாம்...
   அ.
   ஆ.
   இ.
   ஈ.
   கீழ்ப்படிகிறோம் என்பதாகும்.
9. பின்வருதற்கிடையே தேவனுடைய சித்தத்தை நாம் எப்படி அறியலாம்?
   அ. பொய் சொல்வது அல்லது சொல்லாமலிருப்பதில்: .............................................................................
   ஆ. மற்றவருடைய கொஞ்சப் பணத்தை பயன்படுத்தி தேவைப்படும் சாப்பாடு அல்லது சிகரெட் வாங்குவதில்: ..................................................................................................................................
   இ. பிரியாணி அல்லது பொங்கல் வாங்குவதில்: ..................................................................................
   ஈ. பெந்தேகோஸ்தே சபை அல்லது ரிபார்ம்டு சபையில் சேர்வதில்: ..................................................
10. ரோமர் 12:2-ஐ எழுதுக:

**125. நான்காவது விண்ணப்பம் என்ன?**

“அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்குத்தாரும்”, அதாவது: எங்களுடைய எல்லாவித சரீரப்பிரகாரமான தேவைகளையும் தருவதற்கு விருப்பமுள்ளவராக இருப்பீராக, அதனால் எல்லா நன்மைக்கும் ஊற்றானவர் நீரே என்பதை நாங்கள் அங்கீகரிக்கும்படியாகவும், உம்முடைய ஆசீர்வாதமின்றி எங்களுடைய முயற்சி மற்றும் உழைப்போ அல்லது உம்முடைய ஈவுகளும் எங்களுக்கு பலன் தருவதில்லை; அதனால் எங்கள் நம்பிக்கையை வேறெந்த சிருஷ்டியின் மீதும் வைக்காமல் உம்மீது மட்டும் வைக்க உதவும் என்பதாகும்.

***

கர்த்தருடைய ஜெபத்தில் உள்ள கடைசி மூன்று விண்ணப்பங்களும் கர்த்தருடைய பிள்ளைகளின் பூமிக்குரிய தேவைகளைக் குறித்ததாகும். இந்த நான்காவது விண்ணப்பம் நம்முடைய பொருளாதாரம் சம்மந்தப்பட்டதாகவும், கடைசி இரண்டும் நம்முடைய ஆவிக்குரிய தேவையைக் குறித்ததாகவும் இருக்கிறது.

“அன்றன்றுள்ள அப்பம்” என்பது “நம்முடைய எல்லாவகையான சரீரப்பிரகாரமான தேவைகள்” என்று கேட்டகிசம் சரியாக குறிப்பிடுகிறது. சிலர் இதை, கிறிஸ்து சரீரப்பிரகாரமான அப்பத்தைக் குறிக்காமல் ஆவிக்குரிய அப்பத்தைக் குறிக்கின்றார், ஆகவே, பூமிக்குரிய காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கின்றனர். இருப்பினும் நமது ஆண்டவர் ஆவிக்குரிய காரணங்களுக்காகவும், சரீரப்பிரகாரமான தேவைகளுக்காகவும் நம்மை ஜெபிக்க வேண்டுகிறார். சரீரம் மற்றும் ஆவி ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு இல்லாததுபோல இரண்டையும் பிரிப்பது தவறானது. நம்முடைய சரீரம் ஒவ்வொரு நாளும் போஷிக்கப்படாத நிலையில், நாம் எந்தவிதத்திலும் இந்த பூமியில் நம்மை ஆவிக்குரிய பணியில் ஈடுபடுத்த முடியாது, காரணம் நாம் மரித்து போவோம்.

இந்த காரணத்தினால்தான் இந்த விண்ணப்பம் மற்ற அவ்விரு விண்ணப்பங்களுக்கும் முன்பு இடம் பெறுகிறது. ஆவிக்குரிய தேவைகள்தான் முதலில் இடம்பெற வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதால், விண்ணப்பங்களின் இந்த வரிசைப்பாடு தவறாக தெரியலாம். இருப்பினும், முக்கியத்துவம் என்பதின் அடிப்படையில் இல்லாமல், நேரத்தின் அடிப்படையில் சரீரம் முதலாவதாக வருகிறது. ஆனாலும், பொருளாதார தேவைகளுக்கான நம்முடைய கருத்து மற்றும் ஜெபங்கள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தவும், அவருடைய இராஜ்ஜியத்தைத் தேடவும், அவருடைய சித்தத்தைச் செய்வதையே எல்லாவற்றிலும் முதன்மைப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

“அன்றன்றுள்ள அப்பம்”, என்ற சொல்லின் உட்கருத்து என்ன? உணவு, உடை, சுகம், தங்குமிடம், வேலை மற்றும் அறுவடை போன்ற எல்லா சரீரத்தின் தேவைகள் ஆகும். இவைகள் யாவும் பூமியில் மனிதனுடைய ஜீவனுக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. “அப்பம்” என்பது, மிகவும் விலையுயர்ந்ததைப் பற்றியல்ல, மாறாக அடிப்படைத் தேவை. நமக்குத் தேவைப்படாத காரியங்களுக்காக ஜெபிக்கும் பேராசை ஜெபங்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், இதை பவுல், “உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால், அது போதுமென்றிருக்கக் கடவோம்” (1தீமோ 6:8) என்கிறார். நீதி 30:8,9-ஐயும் பார்க்கவும். இங்கே இயேசு, “அன்னறன்றுள்ள” என்ற வார்த்தையைப் பயன்படுத்தி, எதிர்காலத்திற்கென்று அளவுக்கு அதிகமான பொருளை சேர்த்து வைக்கவேண்டாம் என்பதை ஞாபகப்படுத்துகிறார் (எதிர்காலத்தில் மிக நீண்ட காலத்திற்கு நாம் வாழாதிருக்கலாம்), ஆனால் அளவுக்கதிகமானவற்றுக்காக இல்லாமல் அனுதின தேவைக்காக அவரை நோக்குவோமாக. அனுதின ஜெபம் எதிர்காலத்தைக் குறித்த கவலையை வராது காக்கும்.

கேள்வி 125-ஐப் பொருத்தவரை, தேவன் தமது தயவால் ஜெபமே செய்யாத மனிதர்களுக்கும் (மத் 5:44), விலங்குகளுக்கும் -- அவைகளால் ஜெபிக்க முடியாது (சங் 47:9), தேவைகளைக் கொடுத்தாலும்,

நாம் நம்முடைய பூமிக்குரிய தேவைகளுக்காக ஜெபிக்கும்படி அவர் கட்டளையிடுவதற்கு மூன்று காரணங்கள் உண்டு:

1. எல்லா நன்மைக்கும் ஊற்றானவர் அவரே என்பதை நாம் அங்கீகரிக்கும்படியாக. இயற்கைக்குப் பின்னால் தேவன் இருக்கிறார், "இயற்கை அன்னை" நம்மை போஷித்து, நமது தேவைகளைத் தருகிறாள் என்று நினைக்காமல், தேவன் தமது அருட்கொடையால் அனைத்தையும் செய்கிறார் (கேள்வி 27-ஐப் பார்க்க) என்பதை தினமும் நாம் நமக்கு ஞாபகப்படுத்த வேண்டும். எத்தனைமுறை இயற்கையை நாம், "இது" என்று கூறுகிறோம். பொதுவாக நாம், "மழை பெய்கிறது", "குளிர் அடிக்கிறது", "இந்த வருஷம் நல்ல வருஷம்" என்கிறோம், ஆனால் உண்மை என்னவெனில், தேவனல்லவோ இவைகளையெல்லாம் நமக்குத் தருவது. எல்லாவகையான பொருளாதார ஆசீர்வாதங்களும் இயற்கையிலிருந்து அல்ல, மாறாக கர்த்தருடைய கரத்திலிருந்து வருவதாகவே, வேதாகம எழுத்தாளர்கள் குறிப்பிட்டனர். தேவன் கொடுக்கும் நன்மைகளைப் பயன்படுத்திக் கொண்டே, அவரை அங்கீகரிக்காமல் இருக்கும் மனிதனின் நன்றிகெட்ட நிலை எத்தனை பெரியது!

2. அவருடைய நன்மைகளோடு நாம் அவருடைய ஆசீர்வாதங்களைத் தேடும்படியாகவும். தேவனிடமிருந்து பொருளாதார நன்மைகளைப் பெற்றும், அவருடைய ஆசீர்வாதங்கள் மற்றும் கிருபையைப் பெறாதிருப்பது, நமக்கு சாபங்களாகவே வருகிறது. "துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்" (நீதி 3:33. மேலும் சங்கீ 37:16; 73:7,18; 78:29,30; யாக் 5:5-ஐப் பார்க்கவும். தேவன் நமது தேவைகளைக் கொடுப்பதற்கு நாம் கருத்தாகவும், உழைக்கிறவர்களாகவும் இருப்பதைக் காட்ட விரும்புகிறார். தேவனிடமிருந்து தேவைகளைப் பெற்றால் மட்டும் போதுமென்று இருக்காமல், பெற்றவைகளை தேவன் நமக்கு சுத்திகரித்து தரும்படியாகவும் நாம் கேட்க வேண்டும், அதோடு நம்முடைய பெலன், சுகம் போன்றவைகள் நம்முடைய சுயவிருப்பங்களை பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்தாமல், அவருக்கு பணி செய்வதற்காகப் பயன்படுத்த வேண்டும். ஆகவே, ஒவ்வொருமுறை உணவு உண்பதற்கு முன்னும், பின்னரும் ஜெபம் செய்ய வேண்டும். சரீரத்திற்கான உணவோடு நம்முடைய ஆவிக்கும் உணவாக கர்த்தருடைய வேதத்தை வாசிக்க வேண்டும். இது உங்களுடைய வீட்டின் செயல்பாடாக இருக்கிறதா?

3. நம்முடைய விசுவாசத்தை தேவன்மீது மட்டுமே வைக்கவும். நாம் இயற்கையாகவே சிருஷ்டிகரின் மீது விசுவாசம் வைக்காமல், சிருஷ்டிப்பின் மீது விசுவாசம் வைக்கும்படி தூண்டப் படுகிறோம். சரீரத்தில் வாழ்வதற்கு நமக்கு உணவு, உடை, தண்ணீர், காற்று போன்றவைகள் அவசியம்தான். ஆனால், சரீரத்தில் வாழ்வதுதான் மிகவும் முக்கியமானது என்றல்ல. இவைகள் விரைவிலோ அல்லது காலம் சென்றோ நமது உடலுக்கு சேராமல், நாம் மரிக்கலாம். ஆனால், நம்முடைய நீதி மற்றும் இரட்சிப்புக்காக நாம் தேவனுடைய குமாரனில் விசுவாசம் வைப்போமானால் நாம் ஒருபோதும் மரிப்பதில்லை (யோவா 6:49,50). நமக்கு அவசியமான உணவே, நமக்கு (பொய்யான கடவுளான) விக்கிரகமாகிவிடக் கூடாது (கேள்வி 95-ஐ பார்க்க).

"தெய்வீக சுகம்" குறித்து ஒரு குறிப்பு சொல்லப்பட வேண்டும். இது விசுவாசம் மற்றும் ஜெபத்தின் மூலம், இயற்கைக்கு மாறாக தெய்வீக வல்லமை இடைபடுவதால் சரீரம் சுகப்படுவதைக் குறிக்கிறது. சுகமாக்க முடியாத வியாதிகளிலிருந்து, மருத்துவ உதவியின்றி, மருந்து மற்றும் மருத்துவர் உதவியின்றி, உடலிலுள்ள எலும்பே எல்லாவற்றையும் செய்யும்படி, சுகத்தை தேவனிடம் எதிர்பார்ப்பதற்கு நமக்கு உரிமை உண்டா அல்லது நியாயமா? இன்றைய நாட்களில், "தெய்வீக சுகமளிப்பவர்கள" என்று சிலர், மனிதர்களின் வியாதியை அற்புதமாக சுகமாக்கத்தக்கதாக தங்களிடம் தேவனுடைய வல்லமை இருப்பதாக கூறி மக்களை நம்பச் செய்து வருகிறார்கள். இந்த "தெய்வீக சுகமாக்குதலை" நாம் எப்படி கருதுவது?

அ. எந்தவொரு, அல்லது எல்லாவிதமான சுகத்திற்கும் நாம் தேவனையே நோக்கிப் பார்க்க வேண்டும். தேவனிடம் ஜெபிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட பிரச்சனைக்கு மருத்துவரின் உதவியை நாடுவதே பாவமாகும். (2நாளா 16:12,13; யாக் 5:13).

ஆ. நாம் உடனடியாக (அல்லது எப்போதுமே) சுகம் பெறாமல் இருப்பது தேவனுடைய சித்தமாக இருக்கலாம். தேவனுடைய உன்னதமான திட்டங்களுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும் (2தீமோ 4:20; 2கொரி 12:7).

இ. நம்முடைய சரீரத்தின் தேவைகளுக்கு தேவன் மருந்து மற்றும் மருத்துவரைப் பயன்படுத்துகிறார். இதுபோன்றவைகளை நாம் அற்பமாக எண்ணாமல், அவைகளுக்காக தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் (1தீமோ 5:23).

ஈ. மருந்துகளைப் பயன்படுத்துவதில் நாம் ஞானமாக இருக்க வேண்டும். சில மருந்துகள் நமது உடலுக்கு ஆபத்தை விளைவிக்கும், மருத்துவர் சிலரும் அதிக மாத்திரைகளை தங்களிடம் வரும் நோயாளிக்கு கொடுக்கின்றனர். எந்தவொரு மருத்துவரிலும் கடவுளுக்கிணையாக நம்பிக்கை வைக்க வேண்டாம் (மாற் 5:26).

உ. இன்றைய நாட்களில் தங்களை சுகமளிக்கும் வரம்பெற்றவர்கள் என்று அறிமுகப் படுத்துபவர்களிலும் நம்ப வேண்டாம், காரணம் அவர்கள் இன்று நமக்கான புதிய ஏற்பாட்டின் ஊழியத்தில் பங்குள்ளவர்கள்

அல்ல. அவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகள் (எபே 4:11,12).

**125-க்கான கேள்விகள்:**

1. நான்காவது விண்ணப்பம் இரண்டாவது பகுதி விண்ணப்பங்களின் முதலானதும், அது .................... ........................................................................................................ குறித்ததாக இருக்கிறது.
2. சிலர் இந்த விண்ணப்பத்தை எந்தவகையான "அப்பத்தை" சார்ந்தது என்று நினைக்கிறார்கள்? ........................................................................................................................................................
3. நாம் ...................................., சரீரத்தின் தேவைகள் முதன்மையானது, இருப்பினும் நாம் .................................. ஆவிக்குரிய தேவைகள் மிகவும் முக்கியமானது ஆகும்.
4. "அப்பம்" என்ற வார்த்தையின் உட்கருத்து என்ன? ..................................................................................... ........................................................................................................................................................
5. "அன்றன்றுள்ள" என்ற வார்த்தை நம்முடைய சரீரத்தின் தேவைகள் என்று எதை நமக்குப் போதிக்கிறது? ........................................................................................................................................................
6. ஜெபிக்காத அல்லது ஜெபிக்க முடியாத மனிதர்கள் மற்றும் மிருகங்களின் தேவைகளை சந்திப்பது யார்? ..............................................
7. நம்முடைய சரீரத்தின் தேவைகளுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள்:
   அ. ..................................................................................................................................................
   ஆ. ..................................................................................................................................................
   இ ..................................................................................................................................................
8. பின்வருவதைப் பொருத்துக:

| | | |
|---|---|---|
| "இயற்கை அன்னை" | - | நம்முடைய உணவோடு |
| கிருபையுடனான நன்மை | - | தற்காலிக உணவு |
| ஆவிக்குரிய உணவு | - | ஜீவ அப்பம் |
| சரீரப்பிரகாரமான | - | ஒரு பொய்யான கடவுள் |
| ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து | - | தேவனுடைய சாபம் இல்லாமல் |
| அன்றன்றுள்ள அப்பம் | - | அளவிற்கு மிஞ்சிய ஒன்று அல்ல |

9. பின்வரும் நிலைகளில், (ஆவிக்குரிய நிலையில்) நீங்கள் என்ன செய்வீர்கள்?
   அ. உங்களுடைய விரலை காயப்படுத்திவிட்டீர்கள்? ...........................................................................
   ஆ. உங்கள் கால்களை உடைத்துக் கொண்டீர்கள்? ...........................................................................
   இ. தலைவலி வரும்போது? ..........................................................................................................
   ஈ. சுகமாக்க முடியாத புற்றுநோய் வரும்போது? ..........................................................................
10. நீதிமொழிகள் 30:8,9-ஐ எழுதுக:

**126. ஐந்தாவது விண்ணப்பம் என்ன?**

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்", அதாவது: இழிநிலையிலிருக்கும் பாவிகளான எங்களின் பலவகையான மீறுதல்களையும், எங்களோடு எப்போதும் ஒட்டியிருக்கும் தீமைகளையும் எங்கள் மீது சுமத்தாதிரும்; இதற்கான கிருபையை நாங்கள் உம்மிலே காண்பது போல, மற்றவர்களை இருதயப்பூர்வமாக மன்னிப்பது எங்களுடைய முழு நோக்கமாயிருக்கிறது என்பதாகும்.

***

மாதிரி ஜெபத்தில் உள்ள ஐந்தாவது விண்ணப்பமான, "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்", என்பது மிகவும் எளிதாக தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. உதாரணமாக, இது பணம் சம்மந்தப்பட்ட கடன்களைக் குறிக்கிறதா? கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தும், நாம் ஏற்கனவே மன்னிப்பு கேட்டிருககும் போதும், நாம் ஏன் தொடர்ந்து பாவமன்னிப்பு கேட்க வேண்டும்? நாம் மற்றவர்களை மன்னிக்கவில்லை என்றால் கடவுள் நம்மை மன்னிக்க மாட்டாரா? நாம் மற்றவர்களை மன்னிப்பதால், அவர் நம்மை மன்னிக்கிறார் என்றால், நாம் அவருடைய மன்னிப்பை பெற தகுதியாகிறோமே? ஐந்தாவது விண்ணப்பத்தைச் சார்ந்த சில கேள்விகள் இவைகளே. பின்வரும் குறிப்புகளை நாம் படிப்பபோம்:

1. *தேவனுடைய மன்னிப்பு.* "கடன்கள்", இங்கே பணத்தை குறிக்கவில்லை, மாறாக, பாவங்கள், லூக்கா 11:4 விளக்குவது போல, "எங்களுடைய பாவங்களை எங்களுக்கு மன்னியும்." நம்முடைய பாவங்கள் கடன்கள் என்றழைக்கப்படுகிறது, காரணம் இவைகள் தேவனுக்கு நாம் அவருடைய கற்பனைகள் கட்டளையிடும் பூரண அன்பு மற்று கீழ்ப்படிதலில் நாம் தவறியவற்றைக் குறிக்கிறது. தேவனுக்கு நாம் கீழ்ப்படிய கடன்பட்டிருக்கிறோம், அவற்றில் நாம் தவறும்போது தேவனிடம் தண்டனைக்கான கடனை பெறுகிறவர்களாக இருக்கிறோம். இதை கேட்டகிசம் பல இடங்களில் குறிப்பிடுகிறது (உதாரணமாக கேள்விகள் 12 மற்றும் 16). நாம் இந்தக் கடனை முழுமையாக தேவனுக்குச் செலுத்த முடியாது, ஆகவே

தான் தேவன் தமது மகாப் பெரிய கிருபையினால், நமக்குப்பதிலாக பூரண அன்பு மற்றும் தண்டனை என்ற கடனை செலுத்தி, அதனால் நம் மன்னிக்கப்படும்படியாக தமது ஒரே குமாரனை பூமிக்கு அனுப்பினார். கிறிஸ்துவின் இரத்தத்தினிமித்தமே (தியாக மரணத்தினிமித்தமே) நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது, வேறே எந்த காரணத்தினாலும் அல்ல என்பதை இந்த கேள்வி மீண்டும் தெளிவுபடுத்துகிறது. தேவனுக்கு முன்பாக பாவமன்னிப்பை நாமாக சம்பாதிக்க ஒருபோதும் முடியாது.

எந்த பாவங்களை தேவன் இலவசமாக மன்னிக்கிறார்? “நம்முடைய பலவகையான பாவங்களை” (நம்முடைய நினைவு, வார்த்தை மற்றும் செயல்களினால் செய்யும் நடைமுறைப் பாவங்கள்) மற்றும் நம்முடன் எப்போதும் ஒட்டியிருக்கும் தீய மற்றும் சீர்குலைந்த தன்மையையுமாகும். பாவத்தைக் குறித்து நாம் பேசும்போது (தீமை செய்தல்) செய்யும் பாவங்கள் (sins of commission) மற்றும் செய்யத் தவறுவதினால் வரும் பாவங்கள் (sins of omission - நன்மை செய்யத் தவறுதல்), தனிப்பட்ட பாவங்கள், பலர் அறிய செய்யப்பட்ட பாவங்கள், அறிந்து செய்த பாவங்கள், அறியாமல் செய்த பாவங்கள் (கவனமில்லாமல்), தேவனுக்கு மட்டும் எதிரான பாவங்கள், நமக்கு எதிரான பாவங்கள், பிறருக்கு எதிரான பாவங்கள் என்று கூறலாம்.

2. *மன்னிப்புக்குரிய நிபந்தனைகள்.* கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய எல்லா (கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால) பாவங்களையும் கழுவியிருக்க, நாம் ஏன் தொடர்ந்து மன்னிப்பு கேட்க வேண்டும்? தேவனுடைய கிருபையினால் ஒருமுறை நாம் நீதிமானாக்கப்படுதல் என்பது, தேவனோடு நமக்குள்ள கணக்கை நித்தியமாக கொடுத்து தீர்க்கிறது என்பது உண்மையே (ரோம 5:1; 8:33). இருப்பினும், நம்முடைய அனுதின பாவங்கள் தண்டனைக்குரியவைகளாக இருப்பதினால், நல்லொழுக்கத்தை அறியும் படைப்பாகிய நாம் அவைகளை அங்கீகரிக்கும்படியாகும். கிறிஸ்துவுக்குள் நாம் நீதிமானாக்கப்பட்டிருப்பதின் உறுதிப்பாடு, தனிப்பட்ட மனமாற்றம் மற்றும் பாவத்தை அறிக்கை தொடர்ந்து செய்வதையே சார்ந்துள்ளது. பாவ அறிக்கையையும், பாவ மன்னிப்பின் உறுதிப்பாட்டையும் ஒன்றோடொன்று சேர்ந்தே செல்லும்படி நியமித்துள்ளார் (சங் 32:3-5; 1யோவா 1:9).

இந்த விண்ணப்பம் நாம் மற்றவர்களின் கடன்களை நாம் மன்னிப்பதையும் குறிக்கிறது. மறுபடியும், இது மற்றவர்கள் நமக்கு பணம் தருவதில் தவறியதை அல்ல, மாறாக அவர்கள் நமக்கு எதிராக செய்த பாவங்களை குறிக்கிறது. மற்றவர்கள் நமக்கு விரோதமாக செய்த எந்தவொரு பாவத்தையும் முழுமனதுடன் நாம் மன்னிக்க வேண்டும். நம்முடைய இருதயத்திலிருக்கும் கிறிஸ்துவின் கிருபையே மற்றவர்களின் பாவங்களை மன்னிப்பதற்கு காரணமாகிறது. இதே கிருபை மட்டுமே நாம் தேவனிடம் மன்னிப்பை கேட்கும்படி செய்கிறது. இந்த வசனம், “எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல” என்றுள்ளது. இதற்கு இயேசு மத் 6:14,15-ல் மேலும் விளக்கம் தருகிறார்: “மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.” மற்றவர்களை மன்னிப்பதற்கு மறுப்பது இருதயத்தில் கிறிஸ்துவின் கிருபை குறைவாக இருப்பதற்கான அடையாளமாகும். மற்றவர்களின் பாவத்தை மன்னிப்பது என்பது, அவர்களுக்கு எதிராக அவைகளை எப்போதும் வைத்திருப்பது அல்ல. நமக்கு அவர்களால் ஏற்பட்ட காயங்களை நம்மால் மறக்க முடியவில்லை என்றாலும், அவைகளை நினைக்கவோ அல்லது பேசவோ முயற்சி செய்யக் கூடாது. நாம் யாருடைய பாவத்தை மன்னித்தோமோ, அவர்களிடம் நாம் மன்னித்து விட்டோம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

நமக்கு எதிராக செய்த ஒவ்வொரு பாவத்தையும் நாம் மன்னிக்க வேண்டுமா? சிலர் இப்படி நினைக்கிறார்கள். இருப்பினும்,” எவர்கள் தங்களின் பாவத்தை உணர்ந்து, மனம் வருந்துகிறார்களோ அவர்களுடைய பாவத்தையே என்று, லூக்கா 17:3 மற்றும் 4 தெளிவாக விளக்குகிறது; “உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்து கொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக”. இருப்பினும், நாம் இதுபோன்ற தாழ்மையான வேண்டுகோளை எதிர்பார்க்கும் முன்பு, தவறு செய்தவரிடம் பேசி, அன்பின் வழியில் அவரைக் “கடிந்து கொள்ள” வேண்டும். குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து பேச நாம் மறுப்போமானால், தவறு செய்தவர் நம்மிடம் வந்து மன்னிப்பு கேட்பதை நாம் எதிர்பார்க்க நமக்கு உரிமை இல்லை. எவர்கள் தங்கள் பாவங்கள் அறிவிக்கப்பட்ட போதும் மனம் திரும்பவில்லையோ, அவர்களை நாம் மன்னிக்க வேண்டிய அவசியமும் இல்லை, காரணம் நிச்சயமாக அவர்கள் தேவனாலும் மன்னிக்கப்படுவது கிடையாது. “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” (1யோவ 1:9).

மேலும் நமக்கு எதிராக செயல்படுவர்கள் தங்கள் தவறை உணர்ந்து மனம் திரும்ப, அவர்களுடைய இருதயத்தில் தேவன் தமது கிருபையை செயல்படுத்தும்படி நாம் ஜெபிக்க வேண்டும் (மத் 5:44). நமக்கு விரோதமாக பாவம் செய்தவர்களுக்கு எதிராக தீமை செய்யாதீர்கள், மாறாக நாம் அவர்களை உண்மையாகவே மன்னிக்க ஆயத்தமாக இருக்கிறோம் என்பதைக் காட்டுங்கள்.

**126-க்கான கேள்விகள்.**

1. இந்த விண்ணப்பத்தைச் சார்ந்த மற்ற வசனங்களை அறியாத ஒருவர் இந்த விண்ணப்பத்தை மிகவும் சுலபமாக தவறாக புரிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது? சரியா, தவறா? ..................

2. இந்த விண்ணப்பத்தில், “கடன்” என்பது தரும் அர்த்தம் என்ன? தேவனுடன் நமக்குள்ள உறவில் இது எதைக் குறிக்கிறது? ..................................................................................................................................
3. இந்த விண்ணப்பம் எல்லா பாவங்களையும் குறிக்கிறதா?................, தேவனிடம் நாம் அறிக்கை செய்ய வேண்டிய பாவங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக: ..........................................................................................
4. நம்முடைய மன்னிப்புக்கான அடித்தளம் அல்லது தகுதி... அ)நம்முடைய மனமாற்றம், ஆ)நம்முடைய ஜெபம், இ)நமக்கு கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் நீதி, ஈ)நாம் மற்றவர்களை மன்னிப்பது... ஆகும். எது?...............................................................................
5. “நம்முடன் எப்போதும் ஒட்டியிருக்கும் தீமை” என்பது எதைக் குறிக்கிறது? ..............................................
6. கிறிஸ்து நம்முடைய எல்லா பாவத்திற்காகவும் கடன் செலுத்திய போதும், நாம் தினமும் பாவ மன்னிப்பு கேட்கும்படி தேவன் கட்டளையிடுவது ஏன்? ..........................................................................................
7. தேவன் நம்மை மன்னிக்க வேண்டுமானால், முதலாவது நாம் .................................................... மன்னிக்க வேண்டும், மற்றவர்கள் நமக்கு விரோதமாக ஏற்படுத்திய மோசமான காயத்தை நாம் மன்னிப்பதற்குக் காரணம் நமது இருதயத்தில் உள்ள .................................................. காரணம். மனவருந்துபவரின் பாவத்தை மன்னிக்க நாம் விரும்பவில்லை என்றால் நம்முடைய பாவங்களை தேவன் ...................................
8. நமக்கு எதிராக செயல்படுவர்கள் தங்கள் தவறை உணர்ந்து மனம் திரும்ப, அவர்களுடைய இருதயத்தில் தேவன் தமது ........................................................ நாம் .................................... வேண்டும்.
9. மனவருத்தத்திற்கான அறிகுறியே காண்பிக்காத நமது எதிரிகளுக்காக... அ) மன்னிக்க வேண்டும், ஆ)மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. எது?..................................................................................
10. சங்கீதம் 51:1-ஐ எழுதுக:

**127. ஆறாவது விண்ணப்பம் என்ன?**

“எங்களை சோதனைக் குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்”, அதாவது: எங்களின் மகா எதிரியான சாத்தான், உலகம் மற்றும் மாமிசம் போன்றவைகள் எங்களுக்கு விரோதமாக எப்போதும் செய்யும் சோதனைகளுக்கு எதிராக நிற்க எங்களுக்கு பெலன் இல்லை, இவைகளுக்கு எதிராக உறுதியாக நிற்கவும், இந்த ஆவிக்குரிய யுத்தத்தில் தோற்றுப்போகாமல், முழுவெற்றியும் முடிவில் எங்களுடையதாக மாறும்படிக்கு உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களை பாதுகாத்து பெலப்படுத்தும் என்பதாகும்.

***

கர்த்தருடைய ஜெபத்தின் இந்த ஆறாவதும் மற்றும் முடிவுமான விண்ணப்பம் நாம் பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான விண்ணப்பமாகும். ஐந்தாவது விண்ணப்பத்தில் நாம் ஏற்கனவே செய்த பாவங்களுக்காக மன்னிப்பு கேட்கிறோம், இந்த ஆறாவது விண்ணப்பத்திலோ, இனிமேல் பாவம் செய்யாதபடிக்கு நம்மை பாதுகாக்கும்படி நாம் கேட்கிறோம். இந்த விண்ணப்பமும் பல வசனங்களின் வெளிசத்தில் ஞானமாக விளக்கப்பட வேண்டும், இல்லை எனில், இது போதிப்பது குறித்த தவறான கருத்தையே பெறுவோம்.

முதலாவது, “சோதனை” என்பதற்கான சரியான அர்த்தத்தை நாம் அறிய வேண்டும். வேதாகமம் இந்த வார்த்தையை இருவழிகளில் பயன்படுத்துகிறது:

1. சோதனை என்பது சிலநேரங்களில் சிட்சை, ஆய்வு போன்றவற்றைக் குறிக்கிறது. மனிதர்களுக்கு இதுபோன்ற சோதனைகளை நிச்சயமாகவே தேவன் கொடுக்கிறார். ஆகவே, தேவன் ஆதாம் ஏவாளை சோதித்தார்; ஆபிரகாமைச் சோதித்தார் (ஆதி 22:1); யோபுவை சோதித்தார் (1:12;2:6); இப்படியாக இயேசு பிலிப்புவை சோதித்தார் (யோவான் 6:5,6).

2. சோதனை என்பது பாவம் செய்வதற்கேதுவாகத் தூண்டப்படுதல் அல்லது வசீகரிக்கப்படுதலைக் குறிக்கிறது. இந்தவிதமான சோதனைகளால் மனிதனை தேவன் சோதிப்பது இல்லை. சாத்தான், தீயவர்கள் மற்றும் தீயகாரியங்கள் மட்டுமே நம்மை பாவம் செய்வதற்கேதுவாக தூண்டுகிறது.

பரிசுத்த யாக்கோபு தமது நிருபத்தின் முதல் அதிகாரத்தில் இவ்விரு சோதனைகளைக் குறித்து பேசுகிறார். “நீங்கள் பலவிதமான சோதனை (சிட்சை)-களில் அகப்படும்போது, ... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்” (வ 2-3) என்கிறார்; அதே நேரத்தில், “தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல” (வ 13), எவனையும் அவர் பாவம் செய்வதற்கேதுவாக சோதிப்பது இல்லை. சிட்சைகள் தேவனால் அனுப்பப்படுகிறவைகள், ஆனால் ஒருபோதும் நம்மை பாவம் செய்யும்படி தூண்டுவதும், சோதிப்பதும் கிடையாது. ஒரே சூழ்நிலை பாவம் செய்வதற்கான சோதனையாகவும், பாவம் செய்யாதபடிக்கு தேவனிடமிருந்து வரும் சோதனையுமாக செயல்படுகிறது.

இந்த விண்ணப்பத்தில் இரண்டாவது வகை சோதனையையே கிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இந்த விண்ணபத்தை முழு கருத்தாக நாம் எடுத்தால் இது நன்கு விளங்கும். நம்மை பாவம் செய்யும்படி தூண்டுகிற, “பொல்லாதவனிடமிருந்து” நம்மை பாதுகாக்கும்படியாக நாம் தேவனிடம் கேட்க வேண்டும். ஒரு கிரேக்க வல்லுநர், இதை மொழிபெயர்க்கும் போது, “பொல்லாங்கனால் அல்லது தீயவனால் நாங்கள்

சோதனைகளுக்கு உட்பிரவேசிக்கப் பண்ணாதிரும்" என்றார். இங்கே தீமையினின்று, எங்களை இரட்சித்துக் கொள்ளும். ("தீமை" என்பது, தீயவனாகிய சாத்தானிடமிருந்து என்று அறிய வேண்டும்)

சாத்தான் நம்மை பாவம் செய்யும்படி தூண்டும் முயற்சியினால் நமக்கு வரும் போராட்டத்தில் உள்ள இருமுக்கியமான காரியங்கள் என்ன என்பதை இந்த கேள்வி விளக்குகிறது:

1. *தேவனுடைய பாதுகாப்பு நமக்குத் தேவை ஏன்?*

அ. நம்முடைய ஆவிக்குரிய எதிரிகளுக்கு எதிராக ஒரு நிமிடம் கூட நம்மால் எதிர்த்து நிற்க முடியாத அளவிற்கு நாம் முழுவதும் பெலவீனராக இருக்கிறோம், நாம் நம்முடைய தன்னம்பிக்கையைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், தேவனுடைய கிருபையின்றி, சண்டை செய்ய எந்தவொரு கிறிஸ்தவனிடமும் சுய பெலன் கிடையாது.

ஆ. நம்மை எப்போதும் பாவம் செய்யத்தக்கதாக நமக்கு சோதனைகளைத் தருவது, பிசாசு, உலகம் மற்றும் நம்முடைய மாமிசம் என்ற பொல்லாத திரித்துவம் ஆகும். நம்முடைய மாமிசம் மற்றும் உலகத்திற்கு பின்னால் சாத்தான் இருந்து சோதனையை மிகவும் பலப்படுத்துகிறான். சாத்தான் ஆதாம் ஏவாளை சோதித்தான்; யோபுவை சோதித்தான்; இஸ்ரவேல் ஜனங்களை இலக்கமிட தூண்டினான் (1நாளா 21:1); கிறிஸ்து (மத் 4) மற்றும் பேதுருவையும் தாக்கினான் (லூக் 22:31); மேலும் கர்ச்சிக்கும் சிங்கம் போல யாரை விழுங்கலாம் என்று பூமியில் வகைதேடி சுற்றி வருகிறான் (1பேது 5:8). நம்முடைய ஆவிக்குரிய இந்த எதிரியோடு நமக்குள்ள மகா யுத்தத்தில் எந்தவிதமான முன்னறிவிப்போ, தகவலோ, ஓய்வு நேரமோ கிடையாது. அவைகள் நம்மை தொடர்ந்து தாக்குகின்றன. ஆகவே நாம் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் செய்ய வேண்டும் (மத் 26:41).

2. *தேவன் வாக்குசெய்யும் உதவி.*

தேவன் தமது வலிமையான பரிசுத்த ஆவியானவர், வார்த்தை மற்றும் கிருபையினால் நம்முடன் இடைபடாத நிலையில் நாம் பாவத்திற்குள்ளாக நடத்தப்படும் சந்தர்ப்பம் மற்றும் சூழ்நிலைகளிலே நாம் காணப்படுவோம். பொல்லாதவனிடமிருந்தும், அவனுடைய எல்லா சக்திகளிடமிருந்தும் நாம் பாதுகாக்கப்பட ஜெபிக்க வேண்டும் என்று கிறிஸ்துவால் போதிக்கப்படுவதால், அதற்கான ஜெபத்திற்குரிய பதிலையும் நாம் உறுதியாக எதிர்பார்க்கலாம். "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபி 13:5) என்று கர்த்தர் வாக்கு செய்துள்ளார். உலகத்திலிருக்கும் சாத்தானைவிட நமக்குள் இருப்பவர் (கிறிஸ்துவின் ஆவியானவர்) பெரியவராகையால் (1யோவ 4:4), அவரில் நம்பிக்கை வைக்கும் கிறிஸ்தவன் சோதனைகளுக்கு பணியமாட்டான்; மேலும், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1யோவா 5:18). நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் வல்லமையால் நம்முடைய ஆவிக்குரிய எதிரிகளை மேற்கொள்ள முடியும் என்பதை நாம் எதிர்நோக்கலாம். இதையே யோசேப்பு (ஆதி 39:10-12); யோபு (42:12); மற்றும் அப்போஸ்தலர்கள் (ரோம 8:37) செய்தனர்.

இந்த விண்ணப்பத்தை தினமும் செய்தால், நாம் மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமான கிறிஸ்தவ போர்ச்சேவகராகவும், பாவமற்ற வாழ்வு வாழ்கிறவர்களாகவும் இருப்போம் என்று அர்த்தமல்ல. ஆபிரகாம், யோபு, தாவீது மற்றும் பேதுரு போன்றவர்களைப் போல் சாத்தானால் முழுமையாக சோதனைக்குட்படுத்தப்பட தேவனால் அனுமதிக்கப்படுவோம், அதில் சில நேரத்தில் பாவத்திலும் நாம் விழ நேரிடலாம், ஏன் பேதுருவைப் போல் நமது இரட்சகரை மறுதலிக்கவும் செய்யலாம். ஆனாலும், நாம் உண்மையாக மனம்வருந்தி, தேவனிடம் திரும்புவதற்கேதுவான கிருபையை தேவன் நமக்குத் தருவார். வாழ்வின் சில நேரங்களில், ஒருசில சோதனைகளில் நாம் தோற்றாலும், கிறிஸ்துவுக்குள்ளான நமது மரணத்தில் முழு வெற்றியும் நம்முடையதாக இருக்கும். நாம் ஜெபிப்பதையே செயல்படுத்த தவறுவதற்கான ஒரே முக்கிய காரணம், நாம் சோதனையிலிருந்து விலகி ஓடுவதில்லை.

தேவனுக்கு எதிரான நிலையில் உள்ள துன்மார்க்கமான காரியங்களுக்கு நம்மை ஈடுபடுத்திக் கொண்டே, இந்த விண்ணப்பத்தையும் ஏறெடுப்பது என்பது வெறும் கேலிகூத்தானதாகவே இருக்கும். இதுபோன்ற சூழ்நிலைகளில் தேவன் நமது விண்ணப்திற்கு செவி கொடுக்க நாம் எதிர்பார்க்க கூடாது.

உங்களுடைய வாழ்விலும் காணப்படும் சோதனைகளுக்கேதுவான காரியங்கள் எவைகள்?

**127-க்கான கேள்விகள்:**

1. சோதனை என்ற வார்த்தையை வேதாகமம் பயன்படுத்தும் இரு வழிகள் என்ன? அ. ..........................., ஆ. ...................................................................................................
2. நமது விசுவாசம் சோதிக்கப்பட தேவன் அனுமதிக்கிறார், ஆனால் நாம் பாவம் செய்யும்படி அவர் நம்மை தூண்டுவது இல்லை. சரியா, தவறா? ....................
3. தேவன் நம்மை "சிட்சிக்கிறார்", காரணம்... அ)நம்முடைய பெலவீனத்தை வெளிப்படுத்த, ஆ)நாம் விழும்படியாக, இ)தம்முடைய கிருபையை நமக்குக் காட்டும்படியாக, ஈ)மற்ற ஆவிக்குரிய பாடங்களை நமக்கு காட்டும்படி... ஆகும். எது?.......................................................................................................
4. சோதனைகள்... அ)சில, ஆ)அனைத்து, இ)பெலவீனமான, ஈ)உறுதியான... கிறிஸ்தவர்களுக்கு வருகின்றது. எது?..........................................................................................................

5. இந்த விண்ணப்பத்தை தினமும் செய்தால், நாம் மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமான கிறிஸ்தவ போர்ச்சேவகராகவும், பாவமற்ற வாழ்வும் வாழ முடியும். சரியா, தவறா?..................
6. தேவனுக்கு விரோதமாக நம்மைப் பாவம் செய்யத்தூண்டும் பொல்லாத திரியேகம் என்ன? ..........................................................................................................................................................................
7. .............................. கர்ச்சிக்கும் ............................ போல யாரை விழுங்கலாம் என்று பூமியில் வகைதேடி சுற்றி வருகிறான் (1பேது 5:8). அவன், ........................ தடைசெய்யப்பட்ட கனியை புசிக்கச் செய்தான்; ........................... இஸ்ரவேலை இலக்கமிட தூண்டினான், மற்றும் ............................ மறுதலிக்கச் செய்தான்.
8. நம்முடைய சிட்சை அல்லது பரிசோதனைகளில் தேவனுடைய கிருபை நமக்குப் போதுமென்பதை எந்த வசனங்கள் போதிக்கிறது? லூக் 5:2; 2கொரி 12:9; கலா 4:10; பிலி 4:13; 2தெச 1:12; 1தீமோ 1:14; 3 யோவா 13. கோடிட்டு காட்டுக.
9. துன்மார்க்கமான சோதனைகளுக்குத் தன்னைத்தானே உட்படுத்திக் கொள்ளும் ஒருவன் இந்த விண்ணப்பத்தை உண்மையாக செய்ய முடியாது. சரியா, தவறா?.......................
10. 1தெச 5:23-ஐ எழுதுக:

**128. இந்த ஜெபத்தை எப்படி நிறைவு செய்வீர்கள்?**

“ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே”, அதாவது: நீர் எங்களின் இராஜாவாக, எல்லாவற்றின் மீதும் வல்லமையுள்ளவராக, எல்லா நன்மைகளையும் எங்களுக்குக் கொடுக்க உமக்கு விருப்பமாகவும், உம்மால் முடியும் என்பதால், எங்களுடைய நாமமல்ல, உம்முடைய நாமம் மகிமைக்காக இவைகளை உம்மிடம் கேட்கிறோம் என்பதாகும்.

***

பூரணமான இந்த ஜெபத்தின் முடிவு அறிக்கை (doxology -டாக்ஸாலஜி ) துதிப்பாடல் ஆகும். இந்த வார்த்தை டாக்ஸாலஜியா என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்து, “துதி அல்லது மகிமையை பாடுதல்” என்பதைக் குறிக்கிறது. நமது ஆராதனையில் பாடப்படும், “ஒன்றாக ஆட்சி செய்கிற, திரியேக தேவனாகிய...” என்ற பாமாலையும் டாக்ஸாலஜி அல்லது துதிப்பாடல் என்று அழைக்கப்படுகிறது.

இன்றைய நவீன வேதாகம மொழிபெயர்ப்புகளான அமெரிக்கன் ஸ்டான்டர்டு வெர்சன், ரிவைஸ்டு ஸ்டான்டர்டு வெர்சன், த நியூ இன்டர்நேஷனல் வெர்சன், த கேத்தலிக் பைபிள் போன்ற சில மொழி பெயர்ப்புகள், இந்த முடிவு துதிப்பாடல் மற்றும் ஆமென் என்ற வார்த்தையையும் உள்ளடக்காமல் இருப்பது உங்களுக்கு வியப்பைத் தரலாம். மொழிபெயர்ப்பாளர்கள் இதற்குத் தரும் காரணங்கள்: 1)பழைமையான கையெழுத்துப் பிரதிகளிலும், 2) லூக்கா 11:4-ல் இருக்கும் இந்த கர்த்தருடைய ஜெபத்திலும் இந்த துதிப்பாடல் இடம் பெறவில்லை என்பதாகும்.

நாமோ இந்த துதிப்பாடலை உள்ளடக்கிய கெயெழுத்துப் பிரதியை ஏற்றுக் கொண்டு, ஹைடெல்பெர்க் கேட்டகிசத்தையும் பின்பற்றுகிறோம்.

இந்த துதிப்பாடல் 1நாளாகமம் 29:11-ல் உள்ள தாவீதின் ஜெபத்தின் ஒருபகுதியாக இருக்கிறது, “கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்”, அதனால், நம்முடைய ஆண்டவரும் இந்த முடிவு துதிப்பாடலை உறுதியாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். தாவீதின் இந்த துதிப்பாடலிலும் “ராஜ்ஜியம், வல்லமை, மகிமை” என்ற அதே வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

இந்த துதிப்பாடலே முழு கர்த்தருடைய ஜெபம் மற்றும் எல்லா உண்மையான ஜெபங்களுக்கு அடித்தளமாக இருக்கிறது. ஆங்கில மொழிபெயர்ப்பில் இந்த துதிப்பாடல் “for” என்று ஆரம்பித்து, இந்த ஜெபத்திற்கான காரணம் அல்லது ஆதாரத்தை விளக்குகிறது. தேவனிடம் நாம் ஏறெடுக்கும் ஜெபங்கள் தேவனால் பதிலளிக்கப்படும் என்று நமது இரட்சகர் நமக்குப் போதிக்கிறார், காரணம்:

1. “*இராஜ்ஜியம் உம்முடையது*”, நமது பிதாவாகிய ஆண்டவர் பரலோகத்தின் தேவனாக, எல்லாவற்றின் மீதும் இராஜாவாகவும் இருக்கின்றார்; இவர் கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தையும் கொடுத்துள்ளார் (மத் 28:18). (தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்த கலந்துரையாடலுக்கு கேள்வி 123-ப் பார்க்கவும்.) தேவன் படைப்பின் கர்த்தர், மீட்பர், எல்லாம் தருபவர் மற்றும் நீதிபதியாக இருப்பதால், இராஜாவாகிய அவர் தமது நாமம் மற்றும் இராஜ்ஜியத்தின் மேன்மைக்காக எல்லா விண்ணப்பங்களுக்கு பதில் செய்ய அதிகாரத்தை உடையவராக இருக்கின்றார். அவரே சர்வ அதிகாரமும் உடைய ஆண்டவராகவும், நீதி, சத்தியம் மற்றும் அன்பினால் ஆட்சி செய்கிறவராகவும் இருக்கிறார்; ஆகவே நாம் அவரிடம் ஜெபம் செய்கிறோம்

2. “*வல்லமை உம்முடையது*” தேவன் நமக்கு செவி கொடுப்பது என்பது நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதினால் மட்டுமல்ல, அதோடு நம்முடைய உண்மையான ஜெபங்களுக்கு பதில் செய்ய வல்லமையுடையவராகவும் இருக்கிறார். எல்லா வல்லமையும் தேவனுக்கே உரியது. தம்முடைய பரிசுத்த சித்தம் நிறைவேறும்படி காரியங்கள் நடைபெறும்படி செய்ய அவருக்கு வல்லமையுண்டு. அவரையோ அல்லது அவருடைய கரத்தின் செயலையோ எந்தவொரு வல்லமையும் தடை செய்ய முடியாது. நாம்

ஜெபிக்கும்போது இந்த சத்தியங்களால் நமது இருதயம் உறுதியான நம்பிக்கையுடன் நிறைந்திருக்க வேண்டும். நாம் எந்தவொரு பெலவீனமான அல்லது ஜீவனற்ற கடவுளிடம் பேசாமல், தமது இராஜ்ஜியத்தின் மேன்மைக்காக எல்லா விண்ணப்பங்களுக்கும் செவிகொடுக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனிடம் பேசுகிறோம். இந்த முடிவு துதிப்பாடலில் வரும், "வல்லமை" என்பதற்கான கிரேக்க வார்த்தை "டைனமிஸ் (dynamis)" என்று சக்தியைக் குறிக்கும். (இன்றைய "டைனமைட் -வெடிபொருள்" இந்த வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது ஆகும்.) அகில உலகத்தின் சகல வல்லமைகளைக் காட்டிலும் அதிக வல்லமையை தேவன் உடையவராக இருக்கின்றார்! மிகவும் மனக்கடினமும், கொடூரமுமான இருதயமுள்ளவரையும் தமது வார்த்தையை விசுவாசிக்கச் செய்யமுடியும்!

3. "*மகிமை உம்முடையது.*" தேவன் எல்லாவற்றின் மீதும் இராஜாவாகவும், அவரே எல்லா வல்லமையும், அதிகாரத்தையும் உடையவராகையால், அவரே எல்லா மகிமையின் தேவனாகவும் இருப்பார். தேவன் மகிமையானவர் என்று நாம் கூறும்போது, தேவன் தமது திரியேகத்தில் பரிபூரணமானவராக இருக்கின்றார் என்பதை அறிக்கை செய்கிறோம். என்றென்றும் நாம் அவருடைய சமூகத்தில் தெய்வீக ஆச்சரியத்துடனும், பயபக்தியுடனும் நிற்கத்தக்கதாக அவர் தமது வல்லமை, அன்பு, நீதி, இரக்கம் போன்ற எல்லா உயர்பண்புகளினாலும் மகிமையின் கர்த்தராக இருக்கின்றார். நம்முடைய ஜெபங்களில், எல்லாவற்றுக்கும் மேலாக தேவனுடைய பரிசுத்த நாமம் மகிமைப் படுவதைக் குறித்து கருத்துள்ளவர்களாக இருக்கின்றோம்.

இந்த முடிவு துதிப்பாடலின் கடைசி வார்த்தையான, "என்றென்றைக்கும்" என்பது, அவருடைய இராஜ்ஜியம், வல்லமை மற்றும் மகிமை ஆகிய மூன்றும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் உண்மையை விளக்குகிறது. காரணம் தேவன் நித்தியமானவராகவும், அவருடைய உண்மை என்றென்றும் நிலைத்திருக்கிறதுமாயிருக்கிறது (சங் 89:2; 146:10). தேவன் நித்தியமானவராகையில் அவர் நம்முடைய நேரங்களால் கட்டுப்படுத்தப்படுகிறவர் அல்ல, மேலும், நாம் அவரிடம் கேட்பதற்கு முன்னரே நம்முடைய ஜெபங்களுக்கு பதில் செய்ய ஆயத்தமாக இருக்கின்றார்! (ஏசா 65:24).

**128-க்கான கேள்விகள்:**

1. "Doxology -துதிப்பாடல்" என்றால் என்ன? ..............................................., இந்த வார்த்தை எந்த கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது? ...............................................
2. கர்த்தருடைய ஜெபத்தின் கடைசி அறிக்கை... அ)ஒரு விண்ணப்பம், ஆ) ஒரு பரிந்துரை, இ)துதியின் அறிக்கை, ஈ) உண்மையான ஜெபத்திற்கான அடிப்படை... எது?..........
3. வேதத்தின் இன்றைய நவீன மொழிபெயர்ப்புகளை வாசிப்பவர்கள், இந்த ஜெபத்தைக் குறித்த எந்த காரியத்தை அறிவர்? ............................................... ஏன்? ...............................................
4. இந்த துதிப்பாடலுக்கான பழைய ஏற்பாட்டு ஆதாரம் என்ன? அது எந்த சூழ்நிலையில் கூறப்பட்டவை? ...............................................
5. இந்த துதிப்பாடலின் செய்தி ஜெபத்திற்கான அடிப்படை அல்லது ஆதாரம் இல்லை. சரியா, தவறா?......................., விளக்கம்: ...............................................
6. எந்த மூன்று காரணங்களுக்காக தேவன் தமது கிறிஸ்துவின் மூலம் உண்மையான ஜெபங்களுக்குப் பதில் தருகிறார்? அ. ..............................................., ஆ..............................................., இ...............................................
7. இந்த மாதிரி ஜெபத்தில் தேவன் தம்மை நம்முடைய ....................வும், எல்லா படைப்புகளின் மேலும் .........................வும் இருப்பதை வெளிப்படுத்துவதால், நம்முடைய ஜெபங்களுக்கு அவர் செவிகொடுப்பார் என்பதைக் குறித்து உறுதியாக இருக்கலாம்.
8. வல்லமை என்பதற்கான கிரேக்க வார்த்தை ............................, அதன் அர்த்தம் ......................................, மனிதர்களால் உருவாக்கப்படும் எல்லா வெடிகுண்டுகளைப் பார்க்கிலும் தேவன் மேலான ........................ உடையவர் ஆவார்.
9. "என்றென்றைக்கும்", என்ற வார்த்தை விளக்குவது என்ன? ...............................................
10. சங்கீதம் 115:1-ஐ எழுதுக:

**129. "ஆமென்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?**

நான் ஜெபத்தில் கேட்ட காரியங்கள் அவருக்கானவைகளாய் இருக்க நான் விரும்புவதால், என்னுடைய இருதயத்தில் நான் யோசிப்பதைப் பார்க்கிலும் அதிக உறுதியாக என்னுடைய ஜெபம் தேவனால் கேட்கப்பட்டது என்றும், அதனால் அது உண்மையாகவும், உறுதியாகவும், அப்படியே ஆகக்கடவது என்பதாகும்.

***

இப்போது நாம் இந்த கர்த்தருடைய ஜெபத்தின் கடைசி வார்த்தையும், முக்கியத்துவம் நிறைந்ததுமான "ஆமென்" என்ற வார்த்தைக்கு வருகிறோம். இந்த ஆமென் என்ற வார்த்தையில் உள்ள "ஆ....வை" சுருக்கமாகவோ, அல்லது நீட்டியோ, அல்லது வேறு எந்தவிதத்தில் சொன்னாலும், இது கூறும் செய்தி

ஒன்றே! இந்த வார்த்தை, "உறுதிப்பாடு, உத்திரவாதம், நிலைத்தன்மை, அப்படியே ஆகட்டும், இதுவாகும்", என்பது போன்ற அர்த்தங்களைத் தருகிறது.

"ஆமென்", என்பது எபிரேய வார்த்தை, இது அப்படியே வார்த்தை மாறாமல், கிரேக்க புதிய ஏற்பாட்டிலும், ஆங்கிலம் மற்றும் தமிழிலும் இடம் பெற்றுள்ளது. பழைய ஏற்பாட்டில், "ஆமென்" என்ற வார்த்தை ஒருவர் ஒரு சத்தியம் அல்லது சட்டத்திற்கான தனது மனப்பூர்வமான உடன்பாட்டைக் குறிப்பதற்காக உரைக்கப்படும் ஒன்றாக இருந்தது (எண்ண 5:25; உபாக 27:15...). புதிய ஏற்பாட்டில், இந்த வார்த்தை ஆசி கூறுதல் (ரோம 1:25), துதி (ரோம 11:36), ஆசீர்வாதம் (ரோம 15:33; 16:24) மற்றும் ஜெபம் கூறியதற்குப் பின்னர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு கருத்தை அறிமுகப்படுத்தும்போது, "ஆமென்" என்ற வார்த்தையை இரட்சகர் அடிக்கடி பயன்படுத்தினார். இப்படி இது பயன்படுத்தப்பட்டுள்ள இடத்தில், "மெய்யாகவே"(மத் 5:18,26) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கிறிஸ்து இந்த வார்த்தையை தொடர்ந்து இரண்டு முறை பயன்படுத்தி தான் கூறும் ஒரு காரியத்தின் முக்கியத்துவம் மற்றும் உண்மையின் மாறாத்தன்மையை வெளிப்படுத்தினார். "***மெய்யாகவே, மெய்யாகவே***, நான் உனக்குச் சொல்கிறேன்..." (யோவா 10:1) என்ற சொற்றொடர், அப்படியே ஆமென், ஆமென் என்பதாகும். இது யோவான் எழுதிய சுவிசேஷத்தில் மட்டும் மொத்தம் 25 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டின் எந்தவொரு பிரசங்கியாரும் "ஆமென்" என்பதை இந்த வகையில் பயன்படுத்தவில்லை, இது கிறிஸ்து அதிகாரம் உடையவராக பிரசங்கித்தார் என்பதை விளக்குகிறது. அவரே சத்தியமானவர், தேவனுடைய ஆமெனாக (யோவா 14:6; வெளி 3:14), உண்மையும், சத்தியமுமான சாட்சியாவார்.

"ஆமென்" என்பது உறுதிப்பாடு மற்றும் உண்மை ஆகும். "ஆகவே இது உண்மையாகவும், உறுதியாகவும் இருப்பதாக" என்ற அர்த்தத்தை கேட்டகிசம் சுருக்கிக் கூறுகிறது. நமது ஜெபங்கள் "ஆமென்" என்ற வார்த்தையுடன் முடிவதால், இதன் அர்த்தமான உண்மை மற்றும் உறுதிப்பாடு இரண்டுவிதமான பயன்பாடுகளை உடையதாக இருக்கிறது. கேள்வி 129-ன்படி, இவ்விரண்டும் பின்வருவதை உள்ளடக்குகிறது:

1. "*ஆமென்*" என்பது, தேவன் நம்முடைய ஜெபத்தை நிச்சயமாகக் கேட்டு, பதில் செய்வார் என்பதற்கு தேவன் நமக்கு தரும் உறுதிப்பாடு ஆகும். அவர் தமது வார்த்தையில், அவருடைய சித்தத்தின்படி மகாபிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாம் ஜெபிக்கும் ஜெபங்களுக்கு அவர் செவிகொடுப்பார் என்பதற்கான வாக்குறுதியை கொடுத்துள்ளார். "எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் (நிச்சயமாகவும், உடைக்கமுடியாததாகவும்) என்றும் இருக்கிறதே" (2கொரி 1:20). கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு கொடுத்த உடன்படிக்கையின் வாக்குறுதிகளை விசுவாசத்தினால் ஜெபத்தின் மூலம் நாம் கேட்கும்போது அவர் அவைகளை உடைக்க முடியாது. "ஆமென்" என்ற வார்த்தையின் மூலம் தேவன் நமக்கு வாக்கு செய்தவைகளை தரும்படி ஜீவனுள்ள தேவனை நினைவு படுத்துவதற்கேதுவாக இது இருப்பதால், இந்த வார்த்தையைப் பயன்படுத்தும்போது மிகவும் கருத்துடனும், கவனமாகவும் இருக்க வேண்டும். "ஆகவே அப்படியே உண்மையும், உறுதியுமாயிருப்பதாக." நமது ஜெபங்களுக்கான உறுதிப்பாடு "நம்முடைய உணர்வுகள் மற்றும் விருப்பங்களின் அடிப்படையில்" இல்லாமல், தேவனுடைய உடைக்கமுடியாத வாக்குத்ததங்களைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

2. "*ஆமென்*" என்பது, நாம் உண்மையான, இருதயப்பூர்வமான ஜெபத்தை செய்தோம் என்பதற்கான வாக்குறுதியை தேவனிடம் கொடுப்பதாகும். மாய்மாலக்காரர்களைப் போலவும், கவனக்குறைவாகவும் ஜெபிக்க துணியாதிருப்போம். நம்முடைய ஜெபங்கள் நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். இந்த சிறிய வார்த்தையைப் பயன்படுத்துவதின் மூலம், நம்முடைய ஜெபங்களில் தேவனை மட்டுமே மகிமைப்படுத்துவோம் என்பதற்கான நமது விருப்பத்தை வெளிப்படுத்துகிறோம் என்றும், திருவசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய பரிசுத்த சித்தத்தின்படியும் நாம் ஜெபிக்கிறோம் என்பதுமாகும். இது சொல்வது, "என்னுடைய நினைவுகள் மற்றும் உள்ளத்தின் ஆழத்தை அறிந்திருக்கும் பிதாவே, என்னுடைய ஜெபம் கருத்தானது என்பதையும், ஆகவே உம்முடைய காரியங்களை நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன் என்பதாகும்".

ஆக, ஆமென் என்பது, வேதத்தின்படியான நமது ஜெபங்கள் கிறிஸ்துவின் தகுதியினிமித்தம் பதில்செய்யப்படுவதற்கு தகுதியானவைகள் என்பதை வெளிப்படுத்தும் நிலையில் தேவனுக்கும், நமக்கும் அடையாளமாகவும், அச்சாரமாகவும் அமைகிறது.

அவிசுவாசிகள் நினைப்பது போல, நமது ஜெபங்கள் ஒருபோதும் நேரத்தை வீணடிப்பவை அல்ல; மாறாக, அவைகள் தேவன் நம்மை இரட்சித்து, தம்முடைய இராஜ்ஜியத்தைக் கட்டி, புதிய வானம் மற்றும் புதிய பூமியைக் கொண்டுவருவதற்கான தமது நித்தியமான திட்டத்தில் ஒருபகுதியாக தேவனால் பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய இருதயங்களின் ஆழத்தில் செய்யப்படும் இரகசியமான ஜெபங்களும், தேவனுடைய சிங்காசனத்திற்கு ஏறி, தேவனுக்கு சுகந்த வாசனையாயிருக்கும்படி பொற்கலங்களில் சேகரிக்கப்படுகிறது (வெளி 5:8).

இந்த கேள்வியோடு, நாம் கர்த்தருடைய ஜெபத்தை மட்டுமல்ல, இந்த முழு கேட்டகிசத்தையும் நிறைவுக்கு கொண்டுவருகிறோம். இந்த கேட்டகிசத்தை "ஆமென்" என்று முடிப்பது எத்தனை பொருத்தமான

ஒன்றாக இருக்கிறது, இதனால் நாம் இதுவரை படித்தவைகள் உண்மையும் உறுதியாய் நிலைத்திருப்பவைகளும் என்பதை அறியலாம். இப்போதும், நம்முடைய பாவத்தைக் குறித்து கற்றல், நம்முடைய இரட்சிப்பைக் குறித்து கற்றல் மற்றும் நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட மீட்பருக்கான நம்முடைய பணியைக் கற்றல் என்ற மூவகை ஆறுதலுக்காக இருதயப்பூர்வமான "ஆமென்" சொல்வோமாக.

இந்த சிறிய புத்தகத்தின் மகத்துவமான மற்றும் நித்தியமான சத்தியங்கள், வாழ்விலும், மரணத்திலும் மற்றும் என்றென்றும் உங்களுக்கு விலையேறப்பெற்றதாக இருப்பதாக. உங்கள் திருச்சபையின் விசுவாசமும் இந்த ஹைடெல்பெர்க் கேட்டகிசத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்பதாக.

**129-க்கான கேள்விகள்:**

1. "ஆமென்" என்ற வார்த்தை... அ)ஒரு வகையில், ஆ)பலவகையில்... உச்சரிக்கப்படலாம். எது?........., இதன் அர்த்தம்: ....................................................................................................................................
2. "ஆமென்" என்பது எபிரேய வார்த்தையில் ஆங்கில/தமிழ் மொழிபெயர்ப்பாகும். சரியா, தவறா?......................., விளக்கம்: ........................................................................................................................................................
3. பழைய ஏற்பாட்டில், "ஆமென்" என்ற வார்த்தை, உபா 27:15- கூறுவதுபோல, ஜெபத்திற்குப் பின்னர் பயன்படுத்தப்பட்டது. சரியா, தவறா?........................, விளக்கம்:
   .........................................................................
   ........................................................................................................................................................
4. புதிய ஏற்பாட்டில், ஒரு காரியத்தின் ............................................................................-யும் வெளிப்படுத்த "ஆமென்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது.
5. ........................................................... புத்தகத்தில், நமது ஆண்டவர், "................................................................. நான் உனக்குச் சொல்லுகிறேன்" என்று அடிக்கடி சொன்னார். இந்த வார்த்தை ............ முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
6. எந்தவகையில் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, "ஆமென்" ஆவார்?.....................
   ..................................................................................
7. நம்முடைய ஜெபத்தின் "ஆமென்" கூறும் இருவகை அர்த்தங்கள் என்ன?
   அ.
   ஆ.
8. "ஆமென்" என்பது... சரியான விடையை குறிப்பிடுக:
   அ. உண்மையான ஜெபத்தை கேட்பதாக தேவன் வாக்கு செய்துள்ளார்..........
   ஆ. ஆகவே அப்படியே உண்மையும், உறுதியுமாக இருப்பதாக ...........
   இ. என்னுடைய உணர்வுகள் ஜெபத்தை உண்மையும், உறுதியுமாக்குகின்றன ...........
   ஈ. தேவனுடைய நாமம் மகிமைக்காக நான் உண்மையாக ஜெபித்துள்ளேன்........
   உ. மெய்யாகவே..........
   ஊ. உம்முடைய காரியங்களை நான் உண்மையாகவே விரும்புகிறேன்...........
9. இந்த கேட்டகிசம் எத்தனை முக்கியமானதாக இருக்க வேண்டும்?
   அ. உங்களுக்கு? ........................................................................................................................................
   ஆ. உங்கள் சபைக்கு? ...................................................................................................................................
10. 2கொரி 1:20-ஐ எழுதுக:

# சொற்களஞ்சியம் / அருஞ்சொல் அகராதி
## (A GLOSSARY OF THEOLOGICAL TERMS)

(குறிப்பு: இந்த அருஞ்சொல் அகராதியில், ** -என்ற குறிப்புடன் வரும் விளக்கங்கள், Dr.Alexander De Jong-ஆல் எழுதப்பட்ட "What I Confess" (published by Baker Book House, Grand Rapids, Michigan) என்ற புத்தகத்திலிருந்து, சிறிய மாற்றங்களோடு தரப்பட்டவைகள் ஆகும்.

A

Adiaphora (ஆடையபோரா): கிறிஸ்தவ வாழ்வில் வரும் குறிப்பிட்ட சில செயல்கள், அவைகள் தனக்குத்தானே பாவமாகவோ அல்லது நீதியாகவோ வகைப்படுத்தப்படாமல் இருப்பினும், சூழ்நிலைகளுக்கேற்ப அது நியாயமானதாகவோ அல்லது அநியாயமானதாகவோ மாறுவதாகும்.

Adoption (அடாப்சன்) - புத்திரசுவிகாரம் பெறுதல்: தேவனுடைய அன்பின் செயலால், மீட்கப்பட்ட பாவிகள் அவருடைய குடும்பத்திற்குள் இணைக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகள் என்ற நிலையில் புத்திர சுவிகாரத்திற்குரிய சகல உரிமைகளையும் பெறுதலைக் குறிக்கிறது.

Apocrypha (அப்போக்ரைபா) - தள்ளுபடியாகமம்: பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட புத்தகங்களும், கி.பி 1548-ல் ரோமன் கத்தோலிக்க மதத்தால் இவைகள் வெளிப்படுத்தப்பட்ட வேதத்தின் ஒருபகுதியாக அங்கீகரிக்கப்பட்டவைகளும் ஆகும். இவைகள் பரிசுத்த ஆவியாகிய தேவனால் வெளிப்படுத்தப்படாதவைகளாக இருப்பதால், பரிசுத்த வேதாகமத்தில் இணைக்கப்படக் கூடாது.**காலத்தில் எழுதப்பட்ட புத்தகங்களும், கி.பி 1548-ல் ரோமன் கத்தோலிக்க மதத்தால் இவைகள் வெளிப்படுத்தப்பட்ட வேதத்தின் ஒருபகுதியாக அங்கீகரிக்கப்பட்டவைகளும் ஆகும். இவைகள் பரிசுத்த ஆவியாகிய தேவனால் வெளிப்படுத்தப்படாதவைகளாக இருப்பதால், பரிசுத்த வேதாகமத்தில் இணைக்கப்படக் கூடாது.**

Apostasy (அப்போஸ்டசி) - விசுவாச துரோகம் அல்லது பின்மாற்றம்: ஒரு தனிப்பட்ட நபராகவோ, அல்லது சபையாகவோ, அல்லது தேசமாகவோ வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்திலிருந்து வார்த்தை மற்றும் செயல்களால் பின்வாங்கிப் போவதாகும்.

Arminianism: ஆர்மீனியனிசம்: தேவனுடைய செயல்கள் மனிதனுடைய சுயவிருப்பத்தைச் சார்ந்தது மற்றும் அதனால் கட்டுப்படுத்தப்படக் கூடியது என்ற போதனையைக் குறிக்கும். இந்த போதனைக்குறிய பெயர், கி.பி 1609-ல் மரித்த, ஜேக்கோபஸ் ஆர்மீனியஸ் என்ற டச்சு வேத வல்லுநரின் பெயரிலிருந்து வருவதாகும். ஆர்மீனியக் கோட்பாடுகள் மெத்தடிஸ்ட் திருச்சபைகளின் ஸ்தாபகர் ஜான் வெஸ்லியால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், இன்றைய (Fundamentalists) எழுத்தின்படி வியாக்கியாணம் செய்யும் திருச்சபைகளில் பிரசித்தி பெற்றதுமாகும்.

Assurance (அஸ்ஸூரன்ஸ்) - பூரண நிச்சயம்: ஒரு விசுவாசி தான் கிருபையினால் இரட்சிக்கப்பட்டு, கிருபையில் வளர்வதற்கான காரியங்களை சரியாக பயன்படுத்தி, தன் இருதயத்தில் பரிசுத்த ஆவியின் சாட்சியைப் பெற்ற நிலையில் பரலோக பாக்கியத்தை நிச்சயமாக அடைவேன் என்பதற்கான உறுதியான நம்பிக்கை ஆகும்.

Atonement (அட்டோன்மென்ட்) - ஒப்புரவாக்குவதற்கேதுவான பரிகாரம்: பாவிகளுடைய மன்னிப்புக்கு அவசியமான இயேசு கிறிஸ்துவின் தியாக மரணத்தின் மூலம் தேவனுடைய நீதி பூர்த்தி செய்யப்படுதல் என்பதாகும். கிறிஸ்துவின் ஒரேபலியியினாலே அகற்றப்படும் பாவத்தின் குற்றத்தை பழைய ஏற்பாட்டு முறையான இரத்தத்தாலான பலி சடங்கிற்கு முன்னடையாளமாக இருந்தது.**

**C**

Calvinism (கால்வினிசம்) -- கால்வினிய சித்தாந்தம்: தேவனுடைய சர்வ ஆளுகை மற்றும் மனிதன் தன்னுடைய வாழ்வின் அனைத்துமான ஜீவன், விசுவாசம் மற்றும் இரட்சிப்பு ஆகிய அனைத்திற்குமே தேவனையே முற்றிலும் சார்ந்து வாழ்கிறான் என்ற சத்தியத்தை குறிக்கும். இது வேதாகம கிறிஸ்தவத்துடன் ஒன்றித்ததாகவும், இதன் அடிப்படை கூற்றுக்கள் ஜெனிவா சீர்திருத்த சான்றோன் ஜான் கால்வின் (1564-ல் கர்த்தரிடம் சென்றார்) அவர்களின் எழுத்துக்களிலிருந்து வெளிப்பட்டதாகும். இது ஆர்மீனியனிஸத்திற்கு எதிரான நிலையை உடையதாகும்.**

Canon of Scripture -- அதிகாரப்பூர்வமான திருவசனம்: பரிசுத்த ஆவியாகிய தேவனால் வெளிப்படுத்தப்பட்டவைகள் என்று ஏற்றுக்கொள்ளப்படும் பரிசுத்த வேதாகமத்தின் 66 புத்தகங்கள் ஆகும். இவைகளுக்கு ஆரம்பகால திருச்சபையின் அப்போஸ்தலர்களால் அங்கீகாரம் தரப்பட்டிருந்தது.**

Catholic Church -- கத்தோலிக்க திருச்சபை: அனைத்து திருச்சபை அமைப்புகளிலிமிருந்தும் வேறுபடும் தேவனுடைய உலகளாவிய (universal or world-wide) சபை என்பதாகும். இதனுடைய "ரோமன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படும்போது, இது ரோமா நாட்டின் வாட்டிக்கன் நகரத்தில் வசிக்கும் போப்பின் ஆளுகைக்கு உட்பட்ட திருச்சபை அமைப்பைக் குறிக்கும்.

Congregation (காங்கிரிகேசன்) -- கிறிஸ்துவை அறிக்கை செய்யும் மனமாறிய பாவிகள், ஒரே விசுவாசத்தை உடையவர்களாக ஆராதனை செய்யும் நோக்கத்திற்காக கூடும் அமைப்பைக் குறிக்கிறது.**

Conscience (கான்சியன்ஸ்) -- மனசாட்சி: ஒருவர் செய்யும் செயல் அவருடைய நன்னடத்தைக்கு ஏற்புடையதாக இருக்கும்போது அதை செய்வதற்கான ஒப்புதலையும், அதே செயல் அவருடைய நன்னடத்தைக்கு ஏற்புடையதாக இல்லாதிருக்கும்போது அதை செய்வதற்கான ஒப்புதலை அவருக்குள் கொடுக்காதிருக்கும் மனப்பாங்கு ஆகும்.

Conversion (கன்வெர்சன்) -- மனமாற்றம்: மறுஜென்ம முழுக்கின் பிரதிபலிப்பாக, பாவியாகிய ஒருவர் தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி விசுவாசத்துடன் தேவனிடம் திரும்புதல் ஆகும்.

Covenant of Grace - கிருபையின் உடன்படிக்கை: மனம்திரும்புதல் மற்றும் விசுவாசத்தின் கீழ்ப்படிதலின் வழியாக தேவன் தாம் வாக்கு செய்துள்ள தமது நித்திய மீட்பை விசுவாசிகள் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளுக்காக ஏற்படுத்தும் கிருபையினாலான ஏற்பாடு ஆகும்.

Creation (க்ரியேசன்) - சிருஷ்டிப்பு/படைப்பு: தேவன் தம்முடைய நாம மகிமை மற்றும் புகழ்ச்சிக்காக, தமது திருச்சித்தத்தின்படி சகலமும் நல்லதாக இருக்கத்தக்கதாக படைத்த சிருஷ்டிப்பின் ஆறு நாட்களின் செயல்களைக் குறிக்கும்.**

D

Diety of Christ: கிறிஸ்துவின் தெய்வீகம்: நாசரேத் ஊரைச் சேர்ந்தவரும், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாவற்றையும் சரீரப்பிரகாரமாக தனக்குள் பெற்றிருந்தவருமாகிய, இயேசுவே ஒரே மெய்தேவனாக இருந்தவரும், இருக்கிறவரும் ஆகும்.

Depravity Total -- முழு சீர்குலைவு, : இரட்சிக்கப்படாத பாவியாகிய ஒருவர், தனது ஆள்த்தத்துவத்தின் அனைத்துப் பகுதியும் பாவத்தால் களங்கம் அடைந்ததாகவும், தேவனைப் பிரியப்படுத்தும் எதையும் யோசிக்கவோ அல்லது செயல்படுத்தவோ இயலாத நிலையில் இருக்கிறான் என்ற உண்மையை அறிவிப்பதாகும். இந்த சீர்கெட்ட தன்மை ஆதாமிலிருந்து மரபுரிமையாகப் பெறப்பட்டதாகும்.**

Divine Decrees - தெய்வீக தீர்மானங்கள்/கட்டளைகள்: நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் தேவனுடைய நித்திய நோக்கத்தின்படி, அவருடைய முன்குறிப்பின்படியே நடைபெறுவதாகும். மேலும் தேவனுடைய எல்லாத் தெய்வீக தீர்மானங்களும் தேவனுடைய ஆலோசனையின் சித்தத்தினால் மட்டுமே உண்டானவைகள் ஆகும்.

**E**

Election - தெரிந்தெடுப்பு: நித்திய மீட்பிற்காக சிலரை தேவன் நிபந்தனையின்றி தமது ஆளுகையின்படி தெரிந்தெடுப்பது ஆகும்.

Eschatology (எஸ்கட்டாலஜி) -- கடைசி காரியங்கள்/காலங்கள்: கடைசி காரியங்களைக் குறித்த வேதாகம போதனைகளைக் குறித்ததாகும். இந்த போதனை மரணத்திற்குப் பின் மனிதனின் நிலை என்ன, கிறிஸ்துவின் வருகை, இரண்டாவது வருகையை அறிவிக்கும் அடையாளங்கள், உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு மற்றும் நித்திய ஜீவனைக் குறித்தவைகளை உள்ளடக்கியது ஆகும்.

Exaltation of Christ - கிறிஸ்துவின் உயர்வு: இப்போது இயேசு கிறிஸ்து வாழும் ஜீவன், அவர் தாம் நிறைவேற்றின பரிபூரணமான வேலைக்காக தேவன் பரிசளிக்கப்பட்டதாகும். இது அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தது, பரலோகத்திற்குள் ஏறிச்சென்றது, பிதாவினுடைய வலது பரிசத்தில் அமர்வது மற்றும் காலத்தின் முடிவில் மீண்டும் வருவது ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

Excommunication (எக்ஸ்கம்யூனிகேசன்) -- சபையிலிருந்து நீக்கப்படல்: கிறிஸ்தவ சபையில் இருந்தும் மனம்திரும்பாத ஒருவர், தனது பாவத்திலிருந்து மனம்திரும்பி மீண்டும் வரும்வரை, திருச்சபையின் ஐக்கியத்திலிருந்து கவனமாக நீக்குதல் என்ற கிறிஸ்தவ ஒழுங்கு நடவடிக்கையின் கடைசி செயல் ஆகும்.

F

Faith, Historical - (வரலாற்றுப்பூர்வமான), விசுவாசம்: இரட்சிப்புக்காக தேவன் மற்றும் கிறிஸ்துவில் தனிப்பட்ட நம்பிக்கை வைக்காமல், வேதாகம சத்தியங்களை வரலாற்றின் தகவல்களாக மட்டும் ஏற்றுக் கொள்ளும் மனநிலை ஆகும்.

Faith, Temporary - (தற்காலிகமான), விசுவாசம்: உண்மையான விசுவாசத்தைப் போல தோற்றமளிக்கும், ஆனால் மறுபடியும் பிறந்த ஜீவனிலிருந்து தோன்றாததாகவும், பாவம் மற்றும் உபத்திரவ நேரங்களில் உறுதியில்லாமல் காய்ந்து விழும் தன்மையுடையதாகவும் இருக்கும்.

Faith, True - (உண்மையான), விசுவாசம்: ஹைடெல்பெர்க் கேட்டகிசம் கேள்வி 21-ஐப் பார்க்கவும்.

Fall of Man - மனிதனின் வீழ்ச்சி: தடைசெய்யப்பட்டிருந்த கனியை ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் சாப்பிட்டதால், பரிபூரணம் மற்றும் மகிழ்ச்சி என்ற நிலையிலிருந்து பாவம் மற்றும் கடுந்துயரமான மரணத்திற்குள் மனித இனம் அமிழ்ந்ததைக் குறிக்கிறது.

Five Points of Calvinism: கால்வினிய சித்தாந்தத்தின் ஐந்து போதனைகள்: ஜேக்கோபஸ் ஆர்மீனியஸின் போதனைகள் தவறென்று நிரூபிக்கும் நிலையில் கி.பி 1618-1619-ல் எழுதப்பட்ட ஒன்றோடொன்று தொடர்புடைய ஐந்து வேதாகம சத்தியங்களைக் குறிக்கிறது. அவைகள்... (1) நிபந்தனையற்ற தெரிந்தெடுப்பு; (2) வரையறுக்கப்பட்ட அல்லது உறுதியான பரிகாரம்; (3) முழுச் சீர்குலைவு; (4) தடைசெய்யப்படமுடியாத கிருபை; (5) பரிசுத்தவான்களின் விடாமுயற்சி.**

Foreordination -- முன்குறிக்கப்படுதல் (1பேது 1:20): அதினதின் காலத்தில் நடைபெறும் அனைத்தும் தேவனுடைய நித்தியமான தீர்மானத்தால் வரையறுக்கப்படுதல்.

Forgiveness of Sins - பாவமன்னிப்பு: பாவியினுடைய குற்றவுணர்வு மீண்டும் அவர்மீது சுமத்தப்படாமலும், தன்னுடைய பாவங்களுக்கான அபாராதம் செலுத்துவதிலிருந்து விடுதலை பெறும்படியாகவும் உள்ள தேவனுடைய செயல் ஆகும். இது மன்னிப்பு என்றும் அழைக்கப்படும்.

**G**

Glorification -- மகிமையடைதல்: தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் இரட்சிப்பின் முடிவான நிலை; அதாவது, அவர்கள் தங்கள் மரணத்தின்போது பரலோகத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டு புதிய சரீரத்தைப் பெற்றும், பின்னர் கிறிஸ்து மீண்டும் வரும்போது புதிய உலகத்தில் பங்கடைவதுமாகும்.

Good Works -- நற்காரியங்கள்: தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படியும், தேவனுடைய மகிமைக்காக அற்ப்பணிக்கப்பட்டதுமாக, உண்மையான விசுவாசத்திலிருந்து புறப்படும் மனித செயல்கள் ஆகும்.

Gospel -- சுவிசேஷம்/நற்செய்தி: பாவிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் செயலால் தேவன் தரும் இரட்சிப்பின் நற்செய்தி ஆகும்.

Grace of God -- தேவனுடைய கிருபை: பாவத்தினிமித்தம் தேவனுடைய கோபம் மற்றும் தண்டனையை மட்டுமே பெறவேண்டியவர்களுக்கு, தகுதியில்லாத நிலையிலும் தேவன் தரும் தெய்வீக தயவு மற்றும் நன்மை ஆகும். மனிதனுடைய இரட்சிப்பு முழுவதும் தேவனுடைய கிருபையால் மட்டுமே ஆகும்.**

**H**

Heaven -- பரலோகம்: வேதத்தில் பின்வரும் இடங்களை இது குறிக்கிறது... (1)விண்ணுலகம் (ஆதி 1:1); (2)தேவனுடைய பிரசன்னமும், மகிமையும் அதிகரிக்கப்பட்டுள்ள இடம்; (3)இரட்சிக்கப்பட்டவர்களின் எதிர்கால வீடு (2கொரி 5:1).

Hell -- நரகம்: சாத்தான் மற்றும் அவனுடைய தூதர்கள் நித்தியமாக தண்டிக்கப்படும்படி உறுவாக்கப்பட்ட இடம், இதில் இரட்சிக்கப்படாத பாவிகள் அனைவரும் தேவனுடைய சமூகத்திலிருந்து தள்ளப்பட்டு ஆக்கினைக்குட்படுத்தப்படுவார்கள்.

Heresy (ஹெரெசி) -- துர்உபதேசம்: திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை போதனை மற்றும் விசுவாசப் பிரமாணங்களுக்கு எதிரான வேத ஆதாரமற்ற போதனை ஆகும். இது எதிர்க்கப்படாவிட்டால், கர்த்தருடைய சத்தியத்திற்கான அந்த திருச்சபையின் சாட்சி அதனால் அழிக்கப்படும்.

Hope -- நம்பிக்கை: கிறிஸ்து மீண்டும் வரும்போது மீண்டும் உருவாக்கப்படும் புதிய வானம் மற்றும் புதிய பூமியில் ஒருவிசுவாசிக்கு கொடுக்கப்படும் முடிவான மகிமை மற்றும் சந்தோஷத்திற்காக ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதைக் குறிக்கும். இது தேவனுடைய மாறிடாத வாக்குத்தத்தங்களின் உறுதிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும்.

Humiliation of Christ -- கிறிஸ்துவின் தாழ்ச்சி: தேவனுடைய நியமத்தின்படி கிறிஸ்து தனது பிறப்பின்போது எடுத்துக்கொண்ட நிலையாகும். இந்த நிலையில், கிறிஸ்து தேவனுடைய கோபம், வாழ்வின் இழிநிலைகள் மற்றும் இந்த வாழ்விலிருந்து புறம்பாக்கப் படுவதற்கானதையும் தனது மரணம் மற்றும் அடக்கத்தில் அனுபவித்தார். இந்த நிலைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவுக்கு அவர் தனது மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தபோது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

**I**

Incarnation -- மனிதஅவதாரம்: பாவிகளுக்கு இரட்சிப்பை சம்பாதிக்கும்படி குமாரனாகிய கடவுள் தனக்கு முழு மனித தன்மை, ஆத்துமா மற்றும் சரீரத்தை எடுத்துக்கொள்ளுதல் ஆகும்.

Independence of God -- தேவனுடைய தன்னிறைவு: தேவன் எதன்மீதும் அல்லது எதன்மீதும் சார்ந்திராமல் எல்லாவற்றிலும் தன்குத்தானே பூரணமாக இருக்கும் தேவனுடைய பரிபூரண நிலையைக் குறிக்கிறது.

Infallibility of Scripture -- திருவசனத்தின் பிழையாத்தன்மை: பரிசுத்த ஆவியாகிய தேவனால் வேதாகமம் வெளிப்படுத்தப் பட்டுள்ளதாகையால், இது எந்தவிதமான தவறும் இல்லாமல், முழு நம்பிக்கைக்குரியதாகும்.**

Infinity of God -- தேவனுடைய எல்லையற்ற நிலை: தேவனுடைய பரிபூரணத்தினிமித்தம் நேரம், இடம் போன்றவைகளுக்கு உட்படாமலும், எவற்றாலும் கட்டுப் படுத்தப்படாத நிலையும் ஆகும்.

Immanence of God -- தேவனுடைய எங்கும் நிறைந்த நிலை: தேவனுடைய பரிபூரணத்தினிமித்தம், அவர் படைக்கப்பட்ட உலகத்தில் எங்கும் பிரசன்னராக இருப்பது ஆகும். இது அவருடைய சர்வவியாபி நிலை என்றும் அழைக்கப்படுகிறது.

Imputation -- குற்றப்பொறுப்பை சுமத்தல்: ஒருவரின் செயல்களை மற்றொருவரின் கணக்கில் சேர்த்தல் அல்லது மற்றவரின் பொறுப்பாக மாற்றும் ஒரு நீதிபதியின் செயல் ஆகும். எவைகள் மற்றவரின் கணக்கில் சேர்த்தோ அல்லது மற்றவரின் பொறுப்பாக மாற்றப்பட்டதோ அதனிமித்தம் ஒருவர் குற்றவாளி அல்லவென்றோ அல்லது தண்டனைக்குரியவர் என்றோ அறிவிக்கப்படுவதற்கான அடிப்படையாக மாறுகிறது. வேதாகமம் மூன்றுவிதமான குற்றப்பொறுப்பு சுமத்தப்படுதலைக் குறித்து பேசுகிறது: (1)ஆதாமின் பாவம் முழு மனித இனத்தின் மீதும் கடத்தப்படுதல்; (2)தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பாவம் கிறிஸ்துவின் மீது சுமத்தப்படுதல்; (3)விசுவாசிக்கும் பாவிகளுக்கு கிறிஸ்துவின் நீதி கொடுக்கப்படுதல்.

Iniquity -- பாவச்செயல்: தகாத முறை, நீதியற்ற நிலை மற்றும் துன்மார்க்கத்தை உள்ளடக்கிய பாவத்திற்கான வார்த்தை.

Inspiration of the Bible -- வேதாகமத்தின் வெளிப்பாடு/அருளப்பட்டவிதம்: பரிசுத்த ஆவியாகிய கடவுள், எழுதப்பட வேண்டும் என்று தேவன் நிர்ணயித்தவைகளை மட்டும் எழுதும்படியாக, வேத புத்தகத்தின் எழுத்தாளர்களை முழுவதும் ஆட்கொண்ட செயலைக் குறிக்கிறது.

Intercession of Christ -- கிறிஸ்துவின் பரிந்துபேசுதல்: பரலோகத்தில் மேன்மைப் படுத்தப்பட்ட இரட்சகர், தமது உண்மையான ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளுக்காகவும், தமது பிதாவின் சமூகத்தில் எப்போதும் மன்றாடும் செயலைக் குறிக்கிறது.

**J**

Justification -- நீதிமானாக மாற்றப்படுதல்: நீதிபரராகிய தேவன் பாவிகளாகிய நம்முடைய பாவங்களை கிருபையாக மன்னித்து, நாம் பூரணமான நீதிமான்கள் என்று அறிவிக்கும் செயலைக் குறிக்கிறது. இந்த அறிவிப்பு கிறிஸ்துவின் பூரணமான நீதியானது விசுவாசிகளுக்கு கொடுக்கப்படுவதின் அடிப்படையில் அமைகிறது. இந்த ஆசீர்வாதம் விசுவாசத்தின் வழியில் மட்டுமே பெறப்படுகிறது.

**K**

Keys of the Kingdom -- பரலோகராஜ்ஜியத்தின் திறவுகோள்கள்: திருச்சபையின் தலையும், இராஜாவுமாகிய கிறிஸ்து, தமது திருச்சபையால் நியாயமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பொறுப்பு அலுவலர்களுக்கு திருச்சபை நிர்வாகம் மற்றும் ஒழுக்கப்பயிற்சிக்காக தரப்படும் அதிகாரம் ஆகும்.

Kingdom of God -- தேவனுடைய இராஜ்ஜியம்: மறுபிறப்படைந்த பாவியின் இருதயத்தில் ஏற்படுத்தப்படுவதும், ஏற்றுக்கொள்ளப்படுவதுமான தேவனுடைய ஆளுகை ஆகும். இந்த ஆளுகையின் ஒருபகுதி இப்போதும், இதன் முழுமையானது கிறிஸ்து மீண்டும் வரும்போதும் நிறைவேற்றப்படும்.

**L**

Legalism -- சட்டத்தை மட்டும் அனுசரித்தல்: தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதன் மூலம் தேவனோடு ஒப்புரவாக முடியும் என்ற நம்பிக்கை ஆகும். தங்களுடைய கீழ்ப்படிதல் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நினைத்த பரிசேயர்களின் வாழ்வில் இந்த தவறான நம்பிக்கை காணப்பட்டது.

Liberty, Christian - (கிறிஸ்தவ), சுதந்திரம்: தேவனுடைய கோபம், பாவத்தின் வலிமை மற்றும் குற்றவுணர்வு, நியாப்பிரமாணத்தின் சாபம், சாத்தானின் அடிமைத்தனம், மற்றும் மனிதனுடைய வீணான கோட்பாடுகள் மற்றும் மூடப்பழக்கவழக்கங்களிலிருந்து மீட்கப்பட்ட பாவிகளுக்கு கொடுக்கப்படும் சுதந்திரம் ஆகும்.**

Longsuffering of God -- தேவனுடைய பொறுமை: தேவன் தமது பரிபூரணத்திலும், மனிதனுடைய தொடர்ந்து நீளும் கீழ்ப்படியாமையை பொறுமையோடு சகித்தல் ஆகும்.**

**M**

Means of Grace -- கிறிஸ்து தமது இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை ஒரு பாவியின் வாழ்வில் கொண்டு வரப் பயன்படுத்தும் வழிமுறைகள். தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் வாழ்வில், முக்கியமாக திருவசனம், சாக்ரமந்துகள், மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலம் கிறிஸ்து தமது வேலையின் ஆசீர்வாதங்களை வலிமையாக ஈடுபடுத்துகிறார்.

Mediator -- நேருக்கு நேர் எதிரான இரு நபர்களுக்கு இடையே மத்தியஸ்தம் செய்பவர். புண்படுத்தும் பாவிக்கும், புண்படுத்தப்பட்ட தேவனுக்கும் இடையே மத்தியஸ்தர் கிறிஸ்து ஒருவரே.

Merit -- செய்யப்படும் செயலுக்கான ஊதியம்/சம்பாதித்த ஒன்று: சம்பாதித்த ஒன்று என்பது, மனித வேலையால் சம்பாதிக்க முடியாத கிருபைக்கு எதிர் நிலையில் இருக்கின்றது. கிறிஸ்து இரட்சிப்பை சம்பாதித்தார், அதை எவர்களுக்கு தர விரும்புகிறாரோ அவர்களுக்குத் தருகிறார்.

Messiah -- மேசியா: "அபிஷேகிக்கப்பட்டவர்" என்று அர்த்தம் தரும் எபிரேய வார்த்தை. அபிஷேகிக்கப்பட்ட நபர் குறிக்கப்பட்ட ஒரு வேலையை செய்து முடிக்கும்படி நியமிக்கப்படுவர். கிறிஸ்து என்பது இதே அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தை ஆகும். பூரணமான தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் இராஜாவாக கிறிஸ்து அபிஷேகிக்கப்பட்டவராக இருந்தார்.

Millennium -- ஆயிரவருட அரசாட்சி: வெளி 20:1-10-ல் கூறப்பட்டுள்ள ஆயிரம் வருட காலம். இந்த காலக்கட்டத்தில் சாத்தான் கட்டப்பட்டவனாகவும், கிறிஸ்து ஆளுகிறவராகவும் இருக்கிறார். இந்த ஆயிரவருடகாலம் என்பது, ஆவிக்குரியவிதத்தில், கிறிஸ்து பரலோகத்திற்குள் எடுக்கப்பட்ட நாள் முதல், அவர் மீண்டும் வரும்வரை என்று விசுவாசிக்கிறோம்.

Miracle -- அற்புதம்: தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் பரிசுத்த ஆவியின் மூலமாக, தமது இரட்சிப்பின் செயலைக் குறிப்பதற்காக, இயற்கை உலக நியதிகளுக்கு எதிராக தான் நேரடியாகச் செய்யும் செயலைக் குறிக்கிறது.

**N**

Natures of Christ -- கிறிஸ்துவின் இயற்பண்புகள்: இயேசு கிறிஸ்து பூரணமான மனிதனாகவும், தேவனாகவும் இருந்த இரகசியம். மனித அவதாரத்தின் விளைவாக நம்முடைய ஆண்டவர் இருவித இயற்பண்புகளை உடையவராக இருப்பினும், அவர் ஒரே ஆள்த்தத்துவமுள்ளவராக --திரியேகத்தின் இரண்டாம் நபராகவும் இருக்கிறார்.

**O**

Obedience of Christ -- கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்: பாவத்தின் குற்றம் மற்றும் தேவனுடைய நியாயப்பிரமாணம் கட்டளையிடும் தண்டனையையும் இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொண்ட செயலைக் குறிக்கிறது. இச்செயல் கிறிஸ்துவின் எதிர்ப்பு தெரிவிக்கா கீழ்ப்படிதல் என்று அழைக்கப்படுகிறது. தேவனுடைய நியாயப்பிரமாணம் கட்டளையிடும் அனைத்தையும் கிறிஸ்து பூரணமாக நிறைவேற்றினார். இச்செயல் கிறிஸ்துவின் உற்சாகமான கீழ்ப்படிதல் என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இவ்விருவகை கீழ்ப்படிதலே பாவமன்னிப்பு மற்றும் அவருடைய இரட்சிப்பின் ஆசீர்வாதங்களுக்கு அடித்தளமாக அமைகிறது.

Original Guilt -- முதலாவதான குற்றம்: ஆதாமுடைய முதல் பாவமும், பின்னர் மனுக்குலத்தில் அங்கமான அனைவருக்கும் தேவனால் கடத்தப்பட்ட பாவமும் தண்டிக்கப்படுவதற்கான காரியமாகும்.

Original Sin -- முதலாவதான பாவம்: உலகத்தின் எல்லா பாவம் மற்றும் இழிநிலையும் வருவதற்கு மூலகாரணமான ஆதாமின் முதல் பாவமாகும்.

**P**

Perfectionism -- குற்றமற்றநிலை: ஒரு கிறிஸ்தவன் இந்த உலகவாழ்வில் ஒருபாவமும் செய்யாத நிலைக்கு உயர முடியும் என்கிற போதனையைக் குறிக்கிறது.

Perseverance of the Saints -- பரிசுத்தவான்களுக்கான பாதுகாப்பு/விடாமுயற்சி: தேவனுடைய நிலையான கிருபையினால், மறுபிறப்படைந்த ஒருவன் விசுவாசம் மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றில் காக்கப்படுவதால், அவன் தன் இரட்சிப்பிலிருந்து முழுமையாகவோ அல்லது முடிவாகவோ விழுந்து போவதில்லை என்னும் வேதாகம போதனையாகும்.

Predestination -- முன்குறிக்கப்படுதல்: தூதர்கள் மற்றும் மனிதர்களின் மத்தியில் உள்ள ஒவ்வொருவரின் முடிவும் தேவனுடைய நித்திய திட்டதின்படி தீர்மானிக்கப்பட்டிருத்தல்.

Propitiation -- கிருபாதாரபலி: தேவனுடைய நீதி மற்றும் பரிசுத்தத்தை முழுமையாக இயேசு கிறிஸ்து நிறைவேற்றியதால் தேவ கோபம் மற்றும் வெறுப்பு நீக்கப்படுதல் ஆகும். நம்முடைய பாவங்களுக்கான கிருபாதாரபலி கிறிஸ்துவே!

Providence -- தெய்வீகசெயல்: படைப்பின் முழு ஒழுங்கைப் பாதுகாத்து, அவைகளுக்கு குறிக்கப்பட்ட முடிவுக்கு ஏதுவாக அவைகளை ஆளுகை செய்யும்படி எங்கும் நிறைந்திருக்கும் தேவனுடைய செயல் ஆகும்.

**R**

Reconciliation -- ஒப்புரவாகுதல்: இதன் மூல அர்த்தம் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவது. கிறிஸ்துவின் பூரணமான செயலினிமித்தம், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தங்களின் உடைந்த மற்றும் அந்நியராக இருந்த உறவு நிலையிலிருந்து தேவனோடு நண்பராகவும், துணைவராகவும் மாற்றப்படும் நிலையை அடைவதைக் குறிக்கிறது.

Redemption -- மீட்பு: பரிகாரம் செலுத்தப்படுவதினால் பாவிகள் தங்கள் பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்கப்படும் தேவனுடைய செயலைக் குறிக்கிறது.

Regeneration -- புத்துயிர்பெறுதல்: ஆவிக்குரிய நிலையில் மரித்திருக்கும் பாவியாகிய ஒருவர் பரிசுத்த ஆவியாகிய கடவுளின் செயலால் உயிர்மீட்சியடைதல். இது மறுபிறப்பு என்றும் அழைக்கப்படுகிறது.

Reprobation -- புறக்கணிக்கப்படல்: தேவன் தம்முடைய மேலான சித்தத்தின்படி சிலர் இரட்சிப்புக்காக தெரிந்து கொள்ளப்படாமல், அவர்கள் தங்களின் பாவத்திற்கு நியாயமாக வரும் தண்டனைக்கு உட்படுத்தப்படும் தேவனால் புறக்கணிக்கப்படும் செயலைக் குறிக்கிறது.

Revelation -- வெளிப்பாடு: மனிதர்களுக்கு தேவன் தமது சத்தியத்தை வெளிப்படுத்தும் அவருடைய செயலைக் குறிக்கிறது.

Revelation, General -- பொதுவான வெளிப்பாடு: படைக்கப்பட்ட உலகத்தின் தோற்றம், மனிதனுடைய வரலாறு, மற்றும் மனிதனின் சொந்த மனசாட்சி போன்றவற்றின் மூலம் தேவன் தமது சத்தியங்களை மனிதனுக்கு பொதுவாக வெளிப்படுத்தும் செயல் ஆகும்.

Revelation, Special -- திருவசனத்திலும், அதன் மூலமாகவும் தேவன் சிலருக்கு தமது சத்தியங்களை வெளிப்படுத்தும் அவருடைய செயலைக் குறிக்கிறது.

Righteousness -- நீதி: செய்யப்படும் ஒரு செயல் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு சரியானதாக ஒத்திருப்பது.

Righteousness of God -- தேவனுடைய நீதி: பரிசுத்தராகிய தேவன் தமது பரிபூரணத்தினிமித்தம் தம்முடைய நியாயப்பிரமாணத்திற்கு இணங்க செயல்படுவது. இது தேவனுடைய நீதி என்றும் அழைக்கப்படுகிறது, இதனால் நல்லோரை கனப்படுத்தியும், தீயோரை தண்டிக்கவும் செய்கிறார்.

**S**

Sacrament -- சாக்ரமந்து: உண்மையான விசுவாசம் மற்றும் நேர்மையில் தேவனிடம் சேரும் விசுவாசிகளுக்கு, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபை மற்றும் உடன்படிக்கையின் கிருபையின்

ஆசீர்வாதங்கள் கண்களால் காணப்படும் நிலையில், உறுதிப்படுத்தி, உரியதாக்குவதை விளக்கும்படி, கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த மதச் சடங்கு ஆகும். பழைய ஏற்பாட்டின் விருத்தசேதனம் மற்றும் பஸ்கா ஆகியவற்றுக்கு பதிலாக புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

Salvation -- இரட்சிப்பு: பாவத்தின் குற்றவுணர்வு, வலிமை மற்றும் தண்டனையிலிருந்து மனிதன் மீட்கப்படுதல்; மேலும் கிறிஸ்துவின் செயலால் பாவிகளுக்கான தேவனுடைய கிருபையான தயவு மற்றும் பாவிகளுக்குள் பரிசுத்த ஆவியானவரின் செயலால் அவர்கள் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்படுவதையும் குறிக்கிறது.

Sanctification -- பரிசுத்தமாக்கப்படுதல்: மீட்கப்பட்ட பாவி தேவனுடைய செயலால் அவன் பாவத்திற்கு அதிகமதிகமாக மரித்து, நீதிக்கென்று பிழைக்கும்படி தேவனுடைய வழியில் புதிய சாயலை பெற்றுக் கொள்வதாகும்.

Satisfaction of Christ -- கிறிஸ்து பூர்த்தி செய்தல்: தேவனுடைய நியாயப்பிரமாணம் மீறப்பட்டதனால் வரும் தண்டனையிலிருந்து மீட்கப்பட தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொருவருக்காகவும், தேவனுடைய நீதி கட்டளையிடுவதை செய்யும்படியாக கிறிஸ்து தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தல். இது (Vicarious or Substitutionary Atonement) வேறொருவருக்குப்பதிலாக அல்லது மாற்றாள் மூலம் செய்யப்படும் ஒப்புரவு பரிகாரம் என்றும் அழைக்கப்படுகிறது. (Obedience of Christ) கிறிஸ்துவின் கீழ்ப்படிதலையும் பார்க்கவும்.

Sovereignty of God -- தேவன் தம்முடைய சித்தத்தின் ஆலோசனைப்படி தமது மகிமைக்காக தான் படைத்த அகில உலகத்தில் உள்ளவைகளின் மீதும் முழு அதிகாரத்தையும் உடையவராக இருக்கும் அவருடைய பரிபூரணத்தைக் குறிக்கிறது.

**T**

Temptation -- சாத்தான், பாவ உலகம் அல்லது மனிதனுடைய பாவ சுபாவம் ஆகியவற்றால் ஒருவர் வசீகரிக்கப்பட்டு, சோதிக்கபடும் நபர் நன்மையாக தோன்றுவதுபோல் உள்ள ஒருபாவத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தல் ஆகும்.

Transgression -- மீறுதல்: தேவனுடைய நியாயப்பிரமாணம் நியமித்துள்ள எல்லைக்கோட்டிற்கு மேலே கடந்து செய்யும் செயலான பாவத்தைக் குறிக்கும் வார்த்தை ஆகும்.

Trinity -- திரியேகம்: ஒரே மெய்தேவனானவர் பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியனவர் என்னும் மூன்று வேறுபட்ட ஆள்த்தத்துவமுள்ள நபராக இருந்து, மூவரும் ஒரே சாரத்தையும், ஒரே மகிமையையும் உடையவர்களாக இருப்பது.

Truth -- சத்தியம்: தேவனுடைய இயற்பண்பு மற்றும் வெளிப்பாட்டுடன் இசைந்திருக்கும் ஒன்று.

**W**

Wrath of God -- தேவ கோபம்: பாவத்தின் மீதான தேவனுடைய பூரண நீதியுள்ள கோபம், மற்றும் குற்றம் செய்த பாவிகள் மீது அவர் இடும் நியாயமான தண்டனையையுமாகும்.

**(Copies of this book may be obtained from)**
இந்த புத்தகத்தின் பிரதிகளைப் பெற அணுக வேண்டிய முகவரி:

**PROTESTANT REFORMED CHRISTIAN FELLOWSHIP**
320, S.G. Street, Gandhi Nagar, Vellore
TN., INDIA 632 006.
jypaulraj@yahoo.com
jypaulraj@gmail.com